④ Nove & Dec 1983

# தமிழரசு

JL
121lm N83
N83.11
35345



வண்ணச் சுடரில் மின்னும் பேஷனில்
20%
10%



மைய அரசின் மாண்புமிகு நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு பூட்டா சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை சென்னையில் 24-9-83ல் சந்தித்தார்.



மைய அரசின் வறட்சி வாரணப் பணி மதிப் ட்டுக் குழு அண்மையில் மிழகத்துக்கு வருகை புரிந்தது. குழுவின் தலைவர் திரு பி. சி. சராவ், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 8-10-83ல் சந்தித்தார்.





# கிராம மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்!

**- மாண்புமிகு முதல்வர்**

கதர் என்பது கையால் நூற்று கையால் நெய்யப்படுகிற வெறும் துணி அல்ல. 'கதர் ஒரு தத்துவம்; கதர் ஒரு இயக்கம்' என்று காந்தியடிகள் கூறினார். கிராம மக்களுக்கு வாழ்வு அளிப்பது மட்டுமின்றி தற்சார்பு அடிப்படையில் கிராமங்களை அமைத்திடுவதே கதர் இயக்கத்தின் குறிக்கோள் ஆகும்

தேசிய விடுதலைப் போரின் சின்னமாகக் கதரும் கிராமக் கைத்தொழில் பொருட்களும் விளங்கின. விடுதலை பெற்ற பிறகு நம்நாட்டின் கிராமப்புற மேம்பாட்டுக்கும் தற்சார்புத் தன்மைக்கும், உழைக்கும் கரங்களின் மேன்மைக்கும் கதர்-கிராமக் கைத்தொழில்கள் சின்னமாக இருக்கின்றன.

தமிழ்நாட்டில் கதர் இயக்கத்திற்கு வித்திட்டவர் தந்தை பெரியார். அவர் தமது முதுகில் கதர் மூட்டையைச் சுமந்து விற்ற நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டின் தேசிய இயக்க சரித்திரத்தில் ஒளிமிக்க வரிகளாக இடம் பெற்றுள்ளன.

கிராமங்களை மேம்படுத்துவதாலும், மனிதனுடைய உழைக்கும் ஆற்றலுக்கு முதலிடம் தருவதாலும், சுரண்டலற்ற பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும் காந்தீயப் பொருளாதாரக் கொள்கையை வாய்ப்புக் கிடைக்கிற இடங்களில் எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள்.

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்களின் வழியில் அயராது நடைபோடும் இன்றைய தமிழக அரசும் கதர் மற்றும் கிராமத் தொழிலுக்கு முதன்மையான இடம் கொடுத்து ஊக்குவித்து வருகிறது. கதர்-கிராமத் தொழில்கள் துறைக்குத்தாய்க்குலப் பிரதிநிதியாக ஒருவரைப் பொறுப்பேற்கச் செய்து அவரிடம் தனிப் பொறுப்பில் கதர்த் துறையை அளித்திருப்பதன் வாயிலாக இந்த அமைச்சரவை கதர்த்தத்துவத்துக்குத் தரும் முக்கியத் தன்மையை அனைவரும் உணரலாம். தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம் இந்தியாவிலேயே பலவகைகளில் முன்னணியில் நிற்பது தமிழக மக்களுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

கதருக்கும், கிராமக் கைத்தொழில்களுக்கும், அரசு தரும் ஊக்கத்தின் காரணமாகப்பல்லாயிரம்பேர் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள். இத்துறையில் உழைப்பவர்கள் ஒழுங்காக ஊதியம் பெறவும், உற்பத்தியாகிற பொருள்கள் மக்களுக்கு நல்ல முறையில் கிடைக்கச் செய்திடவும் தமிழக அரசின் கதர்த் துறை பெருமுயற்சி எடுத்து வெற்றி அடைந்து வருகிறது.

கதர், கிராமக் கைத்தொழில் பொருள்கள் மக்களின் சிறந்த ஆதரவையும் வரவேற்பையும் பெற்றிடவும், அதன் வாயிலாகக் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் வருவாயும் பெருகிடவும் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், உலக உத்தமர் காந்தியடிகள் ஆகிய சான்றோரின் பிறந்த நாட்களையொட்டியும், பக்ரீத், தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களிலும் தமிழக அரசு சிறப்புத் தள்ளுபடி வழங்கி வருகிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமிழக மக்கள் இதுவரை அளித்து வந்ததைக் காட்டிலும் அதிக அளவில் கதர்-கிராமக் கைத்தொழில் பொருள்களை வாங்கி ஆதரித்து இத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இலட்சக்கணக்கான நமது கிராம உடன்பிறப்புக்களின் வாழ்வில் ஒளியேற்ற முன்வர வேண்டுமென, தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஐப்பசி 15
மலர் : 14 இதழ் : 9
1-11-1983



# வயிற்றுக்கு உணவு
# அறிவுக்குப் படிப்பு
# வாழ்க்கைக்கு வேலை

மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தின விழாவில் பேசுகின்ற வாய்ப்புப் பெற்றிருக்கும் நான் முதலில் என் இதயதெய்வம் பேரறிஞர் அண்ணாவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகர காவல்துறை ஆணையர் திரு. ஸ்ரீபால் அவர்கள் இன்று காலையில் விழாவுக்குத் தலைமைவகித்து பேசிய பேச்சுக் களைக் கேட்டேன். அவரது தொலைக்காட்சி பேச்சுக்களையும் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால் பதினைந்து, இருபது நிமிடங்களில், மகாத்மாகாந்தி பிறந்ததிலிருந்து, அவர் இறுதிக் காலம் வரை நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் கூறி, எடுத்துக் காட்டாகப் பேசினார். அவர் எப்படிப் பணியைச் செய்கிறாரோ அதேபோல அவர் பேச்சும் செம்மையாகவும் அழகாகவும் கட்டுக்கோப்பாகவும் இருந்தது. நாமெல்லாம் ஏன் பேசவேண்டும் என்று எண்ணித் திகைத்துப் போனேன்.

மகாத்மா என்றால் ஒரு தத்துவம் என்று கருத வேண்டும். வேறு எதையும் புகுத்தக் கூடாது. நாம் தெரிந்து கொண்டதை, மக்களுக்குச் சொல்ல, மறந்ததை நினைவுபடுத்திக் கொள்ள, எதிர்காலத் திட்டங்களை வகுத்துக் கொள்ள, அந்தக் காந்தியத் தத்துவம் பயன் படவேண்டும். இதை விடுத்து வேறு எதையும் புகுத்தக் கூடாது என்பது என் ஆசை.

## மாண்புமிகு முதல்வர்

மகாத்மா காந்தியை இங்கே புகழ்ந்து பேசும் போது, பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவது போல அந்தப் பாராட்டு நிலையில் முதல்வராக இங்கே உட்கார்ந்து இருக்கும் என்னையும் பாராட்டினார்கள்.

இன்றைய தினம் 67 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கிறோம். இந்த குழந்தைகள் 5, 6 வயதில் இன்று இருக்கிறார்கள் சத்துணவு பெறுகிறார்கள் என்று சொல்லும்போது இன்னும் 15 ஆண்டுகள் ஆன பிறகு அவர்களுக்கு அப்போது 21 வயது ஆகும்.

மக்களுக்குச் செய்ய வேண்டியதை யாராக இருந்தாலும் அதைச் செய்துதான் தீரவேண்டும். அது காலத்தின் கட்டளை. யாராக இருந்தாலும் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்.

பின்னால் யார் யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பதைப் பற்றி நாங்கள் சிந்திக்கத் தயாராக இல்லை. அது மக்கள் தீர்ப்பு. அவர்கள் யார் வர வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள்தான் வருவார்கள். அந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் அந்தப் பிரச்சினைக்கு நாம் இன்றே வழி வகுத்தாக வேண்டும். பின்னால் வருபவர்களுக்கு பாரத்தை வைத்து விட்டுப் போக நாங்கள் விரும்பவில்லை. எதிர்கால வாழ்க்கைக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அந்த அடிப்படையில் தொழிற் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தப் போகிறோம். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 4 நாட்கள் படிப்பையும் 2 நாட்கள் தொழிற் பயிற்சியையும் பெற வேண்டும். ஒரு நாள் விடுமுறை. அப்படி வேலையைக் கற்றுக் கொள்ளும்போது அந்தப் பயிற்சிச் சான்றிதழைக் காட்டி வேலை வாய்ப்புப் பெறலாம்.






**கொத்தமங்கலம் விசு குழுவினரின் காந்திமகான் கதாகாலட்சேபம்.**

பயிற்சி பெற்றவர்களின் புள்ளிவிவரம் மாணவர்கள் பயிற்சி பெறும் அந்தத் தொழிற்சாலைகளிலும் அரசிடமும் இருக்க வேண்டும். ஒரே தொழிலாக இல்லாமல் பல தொழில்களை அவர்கள் விரும்பிச் செய்யும் தொழிலுக்குச் சொந்தக்காரர்களாக அவர்களை ஆக்க வேண்டும். இதை கிராமப் பொருளாதாரத் திட்டத்தோடு இணைக்க வேண்டும். இதற்கு நான்தான் ரூ. 1000 கோடி தேவை என்று கூறினேன். இது ஒரு ஆண்டுக்கு மட்டும்!

கிராமத்தில் வேலை இல்லை என்ற நிலை இல்லாமல், மக்கள் வாழ்க்கைக்கு அன்றாடம் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் உயரும். இப்படித் திட்டத்தில் இல்லாத சமுதாயப்பணிகளைச் செயல்படுத்துவது நமது மாநிலம் தான். சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த போது அந்தத் திட்டத்திற்கு எங்கே பணம் என்று கேட்டார்கள்.

பட்ஜெட்டில் அடையாளப் பணமாகப் போட்டீர்களே எப்படி நடக்கும், என்று கேட்டார்கள். இன்று அந்தத் திட்டம் நடக்கிறது. இன்னும் நடக்கும். தொழிற்கல்வி கற்றுக் கொடுக்கவும் நாங்கள் முயற்சிகள் எடுத்து வருகிறோம். அவர்கள் வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை உத்தரவாதம் வேண்டும். இந்த வகையில் தொழிற்கல்வி பற்றி இரண்டு மூன்று தொழில் உரிமையாளர்களிடம்

**காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் நலிந்தோர்க்குக் கடன் உதவி வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர்.**





கலைஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு

பேசினேன். தாராளமாக உதவி செய்கிறோம் என்று அவர்கள் கூறியுள்ளனர். இதைப்போல, தமிழகம் முவதும் சொல்ல வேண்டும்.

**நாளைக்கு எனக்கு வேலை உண்டா என்ற கேள்வி எதிர்காலத்தில் எழக்கூடாது. வேலை உண்டு என்ற நம்பிக்கை வந்தால்தான் எந்த மனிதனுக்கும் பணம் சேர்க்கும் ஆசை வராது. அந்தப் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்.**

அதுதான் மகாத்மா காந்தியின் தத்துவம். அதுதான் கிராமப் பொருளாதார அரசு. நாகரிகம் வளர வளர சமுதாயத்தில் வேண்டாத பழக்கங்கள் வளர்வதைப் பார்க்கிறோம். அதை நீக்க காந்திய தத்துவத்தை அறிய வேண்டும். அதற்காகத்தான் இந்த விழா நடக்கிறது. அமைச்சர் இராம வீரப்பனிடம் ஒன்றைச் சொன்னேன். காந்தி பிறந்த நாள் விழாவில் பட்டிமன்றம், விவாதம் இருக்க வேண்டும். அறிஞர் பெருமக்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்; அவர்கள் வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது நடந்து இருக்கிறது. அதைப் பார்த்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்.

காலையில் பேசியவர் காந்தி படத்தைப் பற்றிப் பேசினார்.

காந்தியுடன் மற்றவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளையும் இணைத்து அதைச்செய்திப் படமாக வெளியிடவேண்டும் என்றார்கள்.

காந்தி படத்தில் பெரிய அநியாயம் நடந்திருக்கிறது.

காந்தியடிகள் சுடப்படும்போது "O God!" என்று கூறியதாக காட்சி உள்ளது. ஆனால் காந்தியடிகள் "ஹே ராம்" என்று தான் சொல்லியிருக்கிறார்.

ஆன்மீகத்தில் தனக்கு இருந்த நம்பிக்கையில் ராமா என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்தப் படத்திற்கு 8 பரிசுகள் கொடுத்திருக்கிறார்கள்.

யார் கொடுத்தார்கள்? அமெரிக்கர்கள். நாமாக இருந்தால் யோசிப்போம். அந்த ஒலியை மாற்றிப் பரிசு கொடுத்திருப்போம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் இது மக்கள் கவனிக்க வேண்டிய விஷயம்.

மக்கள் படித்து அறியும்போதுதான் உண்மைகள் தெரிகின்றன.

ஆகவேதான் அண்ணாவைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யவேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் முடிவு எடுத்திருக்கிறது.

மது விலக்கைத் தளர்த்தியதால் 150 கோடி ரூபாய் வரி வருகிறது.

இந்தப் பணம் முன்பு தனி முதலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்தது. எத்தனை கோடி 150-160 கோடி அவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது.

இந்த வருடம் 200 கோடி வரும் என்று நினைக்கிறேன்.

**ஒரே நாளில் மாற்றமா!**

இதை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தி வருகிறோம்.

முன்பு இந்தப் பணம் தனிப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது.

மக்கள் குடிக்க வேண்டாம் என்று முடிவு செய்தால் எங்களுக்கு அந்தப்பணம் தேவையில்லை.

மக்கள் குடிக்க மாட்டோம் என்று முடிவினை எடுத்துக் கொள்ளத் தலைவர்கள் எல்லாம் உதவி செய்ய வேண்டும். இங்கேயுள்ள நீங்களும் மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

ஒரு நாட்டில் மாற்றத்தை ஒரே நாளில் கொண்டு வரமுடியாது. மனம் மாற, சூழ்நிலை உருவாக வேண்டும்.

அதற்காக காந்திய தத்துவத்தையும் அண்ணாவின் தத்துவத்தையும் மக்களுக்கு நாம் சொல்லியாக வேண்டும். அப்படிச் சொல்லும் நிலையில் இந்த விழாவை வாய்ப்பாக நாம் பயன்படுத்திக் கொள்கிறோம்.

**[சென்னை கலைவாணர் அரங்கில் 8-10-83ல் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....]**



# தொழிற் பயிற்சியுடன் கல்வி தரும் திட்டம் தொடர்ந்தால் நன்மை பல கிட்டும்

## மாண்புமிகு முதல்வர்

**தலைமைச் செயலகத்தில், 5-10-83 அன்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர், அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்த சில முக்கிய கருத்துகளாவன :**

தமிழ்நாட்டில் பத்து வயது வரையில் உள்ள 66 இலட்சம் குழந்தைகளுக்கு இப்போது சத்துணவு போடுகிறோம். பதினைந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்குவது பற்றிப் பரிசீலித்து வருகிறோம்.

இவர்கள் அனைவரும் படித்து முடித்து இன்னும் 15 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களில் 50 இலட்சம் பேர் வரை வேலை வேண்டும் என்று அரசிடம் கேட்பார்களே, அப்போது என்ன செய்ய முடியும்? எந்த வேலைக்கு அவர்களைத் தயார் பண்ணியிருக்கிறோம்? எப்படிச் சமாளிப்பது? ஊட்டச் சத்துடன் இப்போது படிக்கும் போதே ஏதாவது ஒரு தொழிலையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**தொழிற்கல்வி**

பள்ளியில் நான்கு நாட்கள் பாடம் படிப்பது, இரண்டு நாள் பக்கத்துத் தொழிற்சாலையில் தொழிற் பயிற்சி பெறுவது, ஒரு நாள் விடுமுறை என்று இருக்க வேண்டும். அதற்கான வேலை வாய்ப்புக்களை நாடு முழுவதும் தயார் செய்ய வேண்டும். விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுக்க மாணவருக்கு உரிமை இருக்க வேண்டும். ஆசிரியரும் அந்தத் தொழிற் கல்வியைக் கற்றுக் கொடுக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும். இப்போது நாம் திட்டமிடும்போது எல்லாம் எத்தனைக் கட்டடங்கள், எத்தனை அறைகள் இந்தப் பணத்தில் கட்டலாம் என்றுதான் திட்டமிடுகிறோம். எப்படிப்பட்ட கல்வி, எத்தனைப் பேருக்குத் தேவை என்று திட்டமிடுவது இல்லை.

தொழிற் பயிற்சியுடன் இணைந்த கல்வியின் மூலம் யாரும் சிபாரிசு இல்லாமல் வேலைக்குப் போக வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

**சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல்:**

சிவகாசி, திருமங்கலம் போன்ற இடங்களில் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் திருப்பூர் பகுதிகளில் பனியன் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் சிறுவர், சிறுமியர் கூலி வேலைக்குச் செல்வது தடுக்கப்படுமா என்று முதலமைச்சரிடம் கேட்கப்பட்டது.

சிறு குழந்தைகள் இப்படிச் செய்வதைத் தடுக்கச்சட்டம் கொண்டுவரத் திட்டம் இருக்கிறது. சிறுவர், சிறுமியருக்குப் பதிலாக அந்த இடத்தில் பெரியவர்களைத்தான் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில் ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறோம். பெரியவர்களுக்கு நியாயமான கூலி, சட்டப்பூர்வமான சலுகைகளை வழங்கவும் வர இருக்கும் சட்டத்தில் வகை செய்யப்படும்.

# வளர்ச்சிப் பாதையில் புதுநடை போடும் தமிழகம்!

**தலைமைச் செயலர்**


## திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப.

**தலைமைச் செயலகத்தில், 7-10-83 அன்று நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்த கருத்துகளாவன :**


தமிழகத்தில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக 83 தொழில்களுக்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருந்தோம். இதில் 29 தொழில்களுக்கு மத்திய அரசு அனுமதி தந்துவிட்டது.

பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்குவதற்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுக் காலமாக அந்த மானியத் தொகையைப்





பெறுவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது. ரூ. 16.40 கோடி மானியமாகத் தரப்பட்டுள்ளது. 82-83-ஆம் ஆண்டில் மட்டும் ரூ. 4.70 கோடி மானியமாகக் கிடைத்து இருக்கிறது. இதனால் 2,500 தொழில்கள் பயனடைந்துள்ளன.



சிப்காட் மூலமாக 130 தொழில்களுக்கு ரூ. 20 கோடி கடன் வழங்க அனுமதித்துள்ளது. இதில் ரூ. 13 கோடி வழங்கப்பட்டு விட்டது. வரியற்ற வர்த்தகத் தொழிற்பேட்டைக்கு மத்திய அரசு அனுமதி தந்துள்ளது.

இந்தத் தொழிற்பேட்டை மீனம்பாக்கம் அருகே அமைய உள்ளது. இந்தத் தொழிற்பேட்டையில் ஏற்றுமதி செய்யக்கூடிய எலக்ட்ரானிக் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் அமையும்.

1984ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு 1985 ஆம் ஆண்டில் இது முழுவதுமாக இயங்கும். நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. தமிழகத்தில் தோல் பதனிடுவது மற்றும் தோல் சம்பந்தப்பட்ட தொழில்கள் அதிகமாக உள்ளதால், இவை இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமையகம் சென்னையில் அமைக்கப்படும்.

**குழந்தைத் தொழிலாளர்கள் :**

சிவகாசி பகுதியில் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளது பற்றி அந்தப் பகுதியில் உள்ளவர்களிடம் விசாரித்தோம். அந்தக் குழந்தைத் தொழிலாளர்கட்கு 'பீஸ்ரேட்' (உற்பத்திக்கு ஏற்ற கூலி) அளித்து வருகிறார்கள். சராசரி ஒரு குழந்தை ரூ. 7 அளவுக்கு தினசரி வருமானம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாத்தூர், சிவகாசி, வெம்பக்கோட்டை ஆகிய ஒன்றியங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சுமார் 40 ஆயிரம் பேர் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் குழந்தைகள் நலனுக்காக 'யூனிசெப்' அமைப்பு ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ரூ. 35 இலட்சம் தர முன்வந்துள்ளது. ஏற்கெனவே இந்தக் குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வியைப் போதிக்கும் மையங்களை வைத்து இருக்கிறோம்.

'யூனிசெப்' தரும் நிதி உதவியைக் கொண்டு அந்தக் குழந்தைகளுக்குக் குளிக்குமிடம், மருந்துவ வசதிகள் போன்றவற்றை அமைக்க வேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டு இருக்கிறோம். மேலும் இந்தப் பகுதிகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிச் சமூக நலத்துறை ஆய்வு நடத்தி வருகிறது.

குழந்தைத் தொழிலாளர் சட்டத்தை மீறும் தொழிற்சாலை அதிபர்களுக்குத் தண்டனையை அதிகமாக்கும் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது.

**வறட்சி நிபுணர் குழு :**

டெல்லியில் இருந்து 2-வது வறட்சி நிபுணர் குழு சென்னைக்கு வந்திருக்கிறது. இந்தக் குழு மதுரை, ஸ்ரீ வில்லிபுத்தூர், திருநெல்வேலி, நான்குநேரி மற்றும் குமரி மாவட்டத்தில் சில வட்டங்களுக்குச் சென்றிருக்கிறது. இந்தப் பகுதிகளில் இன்னும் கொஞ்சம் வறட்சி இருப்பதாகத் தெரிகிறது. அந்த இடங்களில் குழாய்க் கிணறுகளைப் போடவேண்டி இருப்பதால் அதற்காக இன்னும் கொஞ்சம் பணம் தரவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம்.

தமிழகத்தில் குடிநீர் வசதிக்காக ரூ. 41 கோடி செலவிட்டு இருக்கிறோம். சென்னை நகருக்கு ரூ. 10.36 கோடி செலவிடப்பட்டு இருக்கிறது. வறட்சிக்குச் சுமார் ரூ. 100 கோடியைத் தமிழக அரசு செலவிட்டு இருக்கிறது. ரூ. 68.36 கோடிக்கு மத்திய அரசு அனுமதி தந்து இருக்கிறது. மேலும் பணம் தரும்படி மத்திய அரசிடம் கேட்டு இருக்கிறோம்.

— பி.வி.ஜி.



# நாள்தோறும் நல்ல குடிநீர்



கடந்த மூன்று ஆண்டுகளாகப் பருவமழை தொடர்ந்து பொய்த்ததன் காரணமாக நகருக்குக் குடிநீர் பெறப்படும் நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழலேரி ஆகியவற்றின் நீர்ப்பிடிப்பு குறைந்து கொண்டே வந்து 1-1-83 அன்று மொத்தக் கொள்ளளவில் 20 சதவீதத்திற்கும் குறைவாகத் தண்ணீர் இருந்தது. நிலைமையை அவ்வப்பொழுது பரிசீலனை செய்ய தலைமைச் செயலர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அக்குழு மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனை பெற்று வாரம் ஒரு தடவை கூடி முடிவெடுக்கிறது.

நீர்த் தேக்கங்களில் உள்ள சிறிதளவு நீரை மிக சிக்கனமாகவும் செம்மையாகவும் உபயோகிக்க வேண்டியிருந்தது. முதலில் பூண்டி, சோழவரம் இவற்றில் உள்ள நீர் புழலேரிக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் மூன்று நீர்த் தேக்கங்களிலும் தண்ணீர் ஆவியாவது மிகவும் குறைக்கப்பட்டது.

அடுத்த பருவ மழை வரும் வரை நிலைமையைச் சமாளிக்க வேண்டி 21-2-'83 முதல் நகருக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கும் முறை அமல் படுத்தப்பட்டது.

ஒன்று விட்டு ஒரு நாள் நகருக்குக் குழாய் மூலம் 45 மில்லியன் காலன்கள் குடிநீர் வழங்கப்பட்டது. இதில் சுமார் 30 மில்லியன் காலன்கள் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி பகுதிகளில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்தும் 15 மில்லியன் காலன்கள் புழலேரியிலிருந்தும் வழங்கப்பட்டது.

தாமரைப் பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் நில நீர்ப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் நீரின் அளவை அதிகப்படுத்தி அதை நகருக்கு வழங்க 37 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, மின்சாரப் பம்புகள் பொருத்தப்பட்டன. இக்கிணறுகளுக்குத் தடையின்றி மின்சாரம் கிடைக்க டீசல் ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டன. இதற்கான செலவு ரூ. 100 இலட்சம்.

சென்னை நகரின் தென் பகுதியிலுள்ள மக்களுக்கு நீர்வழங்க திருவான்மியூருக்குத் தெற்கேயுள்ள கடலோர நில நீர்ப்பகுதிகளில் நான்கு ஆழ்துளைக் கிணறுகள்



**மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**

**திரு எஸ். இராகவானந்தம்**

அமைத்து பம்புகள் பொருத்தி சுமார் 7 கிலோ மீட்டர் இரும்புக் குழாய்கள் பதித்து இந்திரா நகருக்கு நீரைக்கொண்டு வந்து 31-8-83 முதல் தென் சென்னை மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 90 இலட்சம்.

நகரெங்கும் மொத்தம் 11,951 குழாய்க் கிணறுகள் ரூ. 70 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, மக்கள் குடிப்பதற்கும், சமைப்பதற்கும் அல்லாத மற்ற தேவைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கப்பட்டது.

நகரில் குழாய்க் கிணறுகளில் தண்ணீர் கிடைக்காத அதாவது நிலத்தடி நீர் ஆழத்தில் உள்ள மேற்கு, தென் மேற்குப் பகுதிகளில் 1,201 ஆழ்துளைக் கிணறுகள்



ரூ. 175 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு இந்தியா-மார்க் - ⅡⅠ பம்புகள் பொருத்தப்பட்டன.

கடற்கரை ஓரத்தில் 25 புதிய திறந்த கிணறுகள் தோண்டப்பட்டு திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள வசதி குறைந்த மக்களுக்கு நீர் வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 1.5 இலட்சம்.

நகரெங்கும் 2,870 நீர்த் தொட்டிகள் ரூ. 175 இலட்சம் செலவில் நிறுவப்பட்டன. இவை லாரிகள் மூலம் நிரப்பப்பட்டு மக்களுக்குத் தினந்தோறும் நீர் வழங்கப்பட்டது. முக்கியமாக வசதி குறைந்த மக்கள் வாழும் பகுதிகளுக்கும், மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு மையங்களுக்கும் குறித்த காலத்தில் தவறாது வழங்கப்பட்டது.

நகரெங்கும் அமைக்கப்பட்ட நீர்த் தொட்டிகளைத் தினமும் நிரப்ப 280 லாரிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. மேலும் நடுத்தர வர்க்கத்தினர் வாழும் பகுதிகளில் நீர் வழங்க 100 டிராக்டர் டிரெய்லர்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. இதற்கான செலவு ரூ. 274.80 இலட்சம். செயற்கை மழை பெய்ய ரூ. 27 இலட்சம் செலவில் அமெரிக்க நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு செயல்பட வைக்கப்பட்டது. இதன் பயனாகவும் இவ்வாண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் வழக்கத்தைவிட அதிகமாக மழை பெய்ததாலும் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் அளவு ஓரளவு உயர்ந்துள்ளது. 4-10-'83 அன்று மொத்தக் கொள்ளளவு 1,241 மில்லியன் கன அடியாகும். மேலும் நகரிலும், நில நீர்ப்பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டமும் உயர ஆரம்பித்துள்ளது. எனவே 12-10-'83 முதல் நகருக்குத் தினசரி நீர் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்துள்ளார்கள். 12-10-83 முதல் நகருக்கு நாளொன்றுக்கு 45 மில்லியன் காலன் நீர் வழங்கப்படும்.

நிலைமையைச் சமாளிக்க அரசு எடுத்த முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு தந்த சென்னை நகர மக்களுக்கு டாக்டர் புரட்சித் தலைவர் அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

## நில வளம் நீர் வளம் பாதுகாப்போம்!

தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுவின் 17-வது கூட்டம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் 28-9-83 அன்று நடந்தது.

கூட்டத்தில் வேளாண்மைத்துறைஆணையர் மற்றும் செயலர், வேளாண்மைத்துறை இயக்குநர், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியாளர்) தலைமை வனப் பாதுகாவலர் முதலிய உயர் அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், முற்போக்கு விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

நில மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றியும் அவை செயல்படுத்தப்படும் வழிமுறைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:

மாவட்ட அளவில் மண்வளம் மற்றும் நீர் நில வளங்களைப் பாதுகாத்து பயனுள்ள வகையில் உபயோகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், முற்போக்கு விவசாயிகள், அரசு அலுவலர்கள் கொண்ட குழுக்கள் எல்லாமாவட்டங்களிலும் அமைத்துச் செயல்பட வேண்டும்.

பெய்கின்ற மழை நீரை ஆங்காங்கு சிறு குட்டைகளில் தேக்கி மண் அரிமானத்தைத் தடுத்து நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கும் திட்டங்கள் விரிவாகச்செயல்படுத்துவதுபற்றி விவாதிக்கப்பட்டது. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள முன்னோடித் திட்டத்தைப் பார்வையிடும் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்து, நம் நிலைக்கு ஏற்றவாறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

மானாவாரி நிலங்களில் மண்வளம், நீர் வளம் ஆகியவற்றைப் பாதுகாத்து உற்பத்தித் திறனைப் பெருக்க வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைத்துறை மற்றும் கால்நடை வளத்துறை ஆகிய துறைகள் நெருங்கி ஒருங்கிணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டது. மானாவாரி நிலங்களில் மழை நீரைச் சேகரித்துப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தக் கோடையில் டிராக்டர் கொண்டு ஆழ உழுவதற்குத் திட்டம் தயாரிக்க அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அந்நிலங்களில் மரம் வளர்த்தல், காடு வளர்த்தல் போன்ற பணிகளையும் தீவிரப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. மானாவாரிப் பகுதிகளில் ஒவ்வொரு விவசாயிக்கும் பண்ணைத் திட்டம் தயாரித்து விவசாயிகளுக்குப் பரிந்துரைகள் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

மானாவாரிப் பகுதிகளில் பணிபுரியும் அலுவலர்கள் வேளாண்மை மக்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க வேண்டும். இப்பணியில் ஈடுபட்டுள்ளோருக்குப் புதிய விஞ்ஞான வழி முறைகளைத் தெரிந்து கொள்வதற்காகக் குடுமியான் மலைப் பண்ணையில் தொடர்ந்து நல்ல பயிற்சி அளிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. நவீன விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.



---

# மழலையர் நல்வாழ்வுக்கு மகத்தான திட்டங்கள்

## வளரும் தமிழகம்

குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாதவரே குழலிசையும், யாழிசையும் இனிதென்று கூறுவர் என்பது திருவள்ளுவரின் வாக்கு. வருங்காலச் சமுதாயமும், நாட்டின் எதிர்காலமும் தற்போதுள்ள குழந்தைகளின் வளமான வளர்ச்சியைப் பொறுத்ததே. ஆகவே, எதிர்காலத்தில் குடிமக்களாகும் நமது குழந்தைகளின் வாழ்வை ஒளிமயமாக்குவதில் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களின் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு கடும் அக்கறை கொண்டுள்ளது. அதற்காகப் பலவிதத் திட்டங்களைத் தீட்டி அவற்றை முனைந்து செயல்படுத்தி வருகின்றது.



மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**டாக்டர் எச். வி. ஹண்டே**

குழந்தைக்கான பராமரிப்பு குழந்தைகள் தாய்மாரின் கருவிலிருக்கும்போதே ஆரம்பமாகின்றது. ஆகவே, குழந்தை நலத் திட்டங்கள் ஒருங்கிணைந்த தாய் சேய் நலத் திட்டமாகவே செயல்படுத்தப்படுகின்றன. கருவுற்ற தாய்மார்களுக்கு 'டெட்டனஸ்' தடுப்பூசி போடப்படுகின்றது. அவர்கள் இரத்த சோகையால் பீடிக்கப்படாமலிருப்பதற்காக, இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. பொருளாதார ரீதியில் அடித்தளத்திலுள்ள கருவுற்ற தாய்மார்களுக்குச் சத்துணவும் வழங்கப்படுகின்றது.

குழந்தைகள் பிறந்த 60 நாட்களுக்குப் பின் அவர்களைத் தாக்கும் பல பிணிகள் வராதவாறு அவர்களுக்குத் தடுப்பு ஊசி போட வேண்டியது மிகவும் அவசியம். தொண்டை அடைப்பு நோய், கக்குவான் இருமல், இசிவு நோய், காச நோய், இளம்பிள்ளைவாதம், தட்டம்மை, டைபாய்டு காய்ச்சல் முதலான நோய்களிலிருந்து பாதுகாக்க அவர்களுக்கு முறைப்படி குறித்த காலங்களில் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. இந்தத்தடுப்பூசித்திட்டம் கிராமப்புறங்களில் தமிழ்நாட்டிலுள்ள 422 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமும், 5,000-க்கு மேற்பட்ட கிளைச் சுகாதார நிலையங்கள் மூலமும் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றது.

ஏழைக் குழந்தைகள் வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவின் காரணமாகக் கண்பார்வை இழக்க நேரிடுகின்றது. இதைத் தடுக்க அவர்களுக்கு வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து கொடுக்கப்படுகின்றது. அவர்கள் இரத்த சோகையால் வாடாமலிருப்பதற்காக இரும்புச் சத்து மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன.

குழந்தைகளைப் பாதிக்கும் நோய்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட்டால் மட்டும் போதாது, அவர்கள் குறிப்பாக ஏழைக்குழந்தைகள் உடல் வளமுடன் வளர ஏதுசெய்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டு 6 மாதம் முதல் 2வயதுவரை உள்ள குழந்தைகளுக்குத் தனிப்பட்ட முறையில் தயார் செய்யப்பட்ட சத்துணவு, உலக வங்கியின் உதவியோடு 6 மாவட்டங்களில் அளிக்கப்படுகின்றது. 'டென்மார்க்' அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் 'டேனிடா' திட்டத்தின் கீழும், சேலம் மாவட்டத்திலுள்ள கொளத்தூர் வட்டாரத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மைலம் வட்டாரத்திலும் இத்தகைய திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. நகர்ப்புறங்களில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச் சத்துணவு பெறுகின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நமது நாட்டில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத குழந்தை நலத் திட்டம் தமிழ்நாட்டில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களால் செயலாக்கப்படுகின்றது. இதுதான் முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் எந்தவித வேறுபாடுமின்றி 2 வயது முதல் 10 வயது வரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும், பள்ளிகளில் மதிய நேரத்தில் சத்துணவு, ஆண்டு முழுவதும் அளிக்கப்படுகின்றது. இதன்மூலம், குழந்தைகளின் உடல் வளம் பெறுவதுடன், அவர்கள் கல்வியில் அதிக நாட்டம் கொண்டு, பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்கும் வழி ஏற்பட்டுள்ளது. இந்தத்திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு தனது நிதியிலிருந்து ஆண்டுதோறும் ரூபாய் 150 கோடிக்கு மேல் செலவிடுகிறது என்பதே இத்திட்டத்தின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு.



முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர்கள் தங்களது வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் மூன்று மாத இடைவெளிக்கொரு முறை சென்று குழந்தைகளை மருத்துவப் பரிசோதனை செய்கின்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுக்கப்பட்டுள்ள மருத்துவப் பரிசோதனை அட்டையில், குழந்தைகளின் எடை போன்ற மருத்துவப் பரிசோதனையின் தகவல்களைக் குறிக்கின்றனர். குழந்தைகளுக்கு ஏதாவது நோய் இருப்பது கண்டுபிடிக்கப்படின் அவற்றை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

1982-ஆம் ஆண்டு நவம்பர் முதல் குழந்தைகளின் பற்களைப் பாதுகாக்க முதலமைச்சரின் சத்துணவு மையங்களின் மூலம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் 30 கிராம் எடையுள்ள பற்பொடிப் பொட்டலங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இந்த இலவசப் பற்பொடித் திட்டத்தால் தமிழ்நாடு அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2.6 கோடி செலவு ஏற்படுகின்றது.

கிராம மக்களுக்கு அடிப்படை நல்வாழ்வு வசதிகளைச் செய்து தரும் திட்டத்தின் ஒரு அம்சமாகப் பள்ளி நலத் திட்டம், நல்வாழ்வுத் துறையினால் நிறைவேற்றப்படுகிறது. தொடர்ந்து பள்ளி செல்லும் குழந்தைகளின் நலனைப் பாதுகாத்து மேம்படுத்துவது இத்திட்டம். குறிப்பாக 6 முதல் 11 வயதுக் குழந்தைகளுக்கென்று ஆரம்பப்பள்ளி அளவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ், பள்ளிக் குழந்தைகளின் உடல்நலப் பரிசோதனை, சிகிச்சை தொடர்ந்து கவனிப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் 1982-83 ஆண்டில் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்ட பள்ளிக் குழந்தைகளின் விவரம்:

| | | |
|---|---|---|
| கிராமப் பகுதி | ... | 3,76,438 |
| நகரப் பகுதி | ... | 2,13,978 |
| ஆக மொத்தம் | ... | 5,90,416 |

ஆசிரியர்களுக்கு நல்வாழ்வுப் பழக்கங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவை குறித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கல்வி விளக்கம் அளிக்கின்றனர்.

குழந்தைகள் வயிற்றோட்டத்தின் காரணமாகப் பெரும்பாலும் இறக்கின்றன. இதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அவர்கள் வயிற்றோட்டம் காரணமாக இழக்கும் நீர்ச்சத்தை ஈடுசெய்ய உடனடி நடவடிக்கை அவசியம். அவர்களுக்கு அத்தகைய நீர்ச்சத்தைக் கொடுக்க ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலம் வாய்மூலம் உட்கொள்ளும் நீர்ச்சத்துப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை உட்கொண்டபின் குழந்தைகளை உடனடியாக மருத்துவமனைக்கு மேற்கொண்டும் சிகிச்சை செய்ய எடுத்துச் செல்ல வேண்டும். குழந்தைகளுக்குக் குடல்புழுக்களால் ஏற்படும் நோய்களைத் தடுக்க, குடல் புழுக்களை அகற்றுவதற்கான சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுவருகின்றன.

உலகச் சுகாதார நிறுவனத்தின் கி.பி. 2000 ஆண்டில் எல்லோருக்கும் நல்வாழ்வு என்ற குறிக்கோளை நமது நாடு ஏற்றுள்ளது. இதன் முக்கிய பகுதிகளில் குழந்தை நலமும் ஒன்று. இதன்படி குழந்தைகளின் இறப்பு விகிதம் 1,000 பிறப்புகளுக்கு கி.பி. 2,000 ஆண்டுக்குள் 60ஆகக் குறைய வேண்டும். மேற்சொன்ன பல திட்டங்களை அமலாக்குவதால் தமிழ்நாட்டில் 1971-ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 111.6 ஆக இருந்த சிசு மரண விகிதம் 1981-ல் 81.2 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. குழந்தை நலத் திட்டங்களை மேலும் தீவிரமாகச் செயல்படுத்துவதன்மூலம் கி.பி. 2,000-க்கு முன்னரே இதை 60 ஆகக் குறைத்துவிடலாமென்று திடமாக நம்புகிறேன்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக அமல் செய்யப்படும் குடும்ப நலத் திட்டம் நமது சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது அனைவரும் அறிந்ததே. இத்திட்டத்தின் கீழ், சிறு குடும்ப நெறியைக் கடைப்பிடித்தல் அவசியம் என்று அறிவுறுத்தப்படுகின்றது. இச்சிறு குடும்ப நெறியைத் தாமாக முன்வந்து மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமாயின் தங்களுக்குப் பிறக்கும் ஓரிரு குழந்தைகள் நலமுடன் வாழ வழிவகைகள் உள்ளன என்ற நம்பிக்கை ஏற்படவேண்டும். நாம் தற்போது நிறைவேற்றும் குழந்தை நலத் திட்டங்கள் இத்தகைய நம்பிக்கையை ஊட்டுவதுடன் குழந்தைகளையும் நலமுடன், வளமுடன் வாழ வழிவகை செய்கின்றது. இதன் மூலம் குடும்ப நலத்திட்டம் வெற்றி பெற சிறந்த வாய்ப்புள்ளது. ஆகவேதான் தாய் சேய் நலத்திட்டம், குடும்ப நலத்திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகவே நிறைவேற்றப்படுகின்றது.

மழலைச் செல்வங்கள், உடலும் மனமும் செம்மையுடன் வளர மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆரின். குழந்தை நலத் திட்டங்கள் செவ்வனே செயல்பட அனைவரும் முழு மனதுடன் வேறுபாடின்றி ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டி, நன்றி கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்:

*(சென்னை வானொலியில் 2-10-83 அன்று 'வளரும் தமிழகம்' என்னும் நிகழ்ச்சியில் ஒலிபரப்பான உரை)*







# உலகம் போற்றும் உத்தமர்

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா 8-10-83 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழா தொடக்கத்தில் கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் ''காந்தியடிகளின் வாழ்க்கையை விவரிக்கும் வில்லுப் பாட்டுகளையும் அரசு ஆற்றிவரும் அரும் பணிகள்-சத்துணவுத் திட்டம் பற்றியும் மனதைத் தொடும்படி நகைச்சுவையுடன் நடத்தினர். அனைவரையும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., வரவேற்றார்.

திருக்குறளார் திரு வீ. முனுசாமி விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில்,

''காந்தியடிகள் ஒழுக்கமும் பண்பும்-சீல குணநலனும் கொண்டவராய் வாழ்ந்து காட்டினார். காந்தியடிகள் இந்தியாவுக்கு சுதந்திரத்தை-விடுதலையை வாங்கித் தந்த மகான். அப்படிப்பட்ட சுதந்திர இந்தியாவில் நாம் வாழ உரிமையுள்ளவர்கள் தானா என்பதை, ஒவ்வொரு இந்தியனும் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும். நம்மால் இந்த நாட்டிற்கு என்ன நன்மை செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சிந்தித்து உணரவேண்டும். நமக்காக மட்டும் வாழாமல் நாட்டிற்காக வாழ்ந்து, 'கடுகு' அளவாவது காந்தியடிகள் காட்டிய வழிப்படி நடக்க முயலவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

சென்னை நகர காவல்துறை ஆணையர் திரு ஸ்ரீபால், ஐ.பி.எஸ்., தலைமை வகித்தார்.

''காந்தியடிகளின் விழாவைத் தமிழக அரசே நடத்துவது மிகவும் பொருத்தமானது. பாராட்டத்தக்கது. நலிவுற்ற மக்கள் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவர் காந்தியடிகள். தன்னுடைய உழைப்பால் உயர்ந்து உலகப் புகழை எய்தினார். அகிம்சையையும் சத்தியத்தையும் தனது வாழ்நாளில் கடைப்பிடித்து வந்தவர் காந்தியடிகள். 'மகாத்மா காந்தியடிகள் இன்று மறைந்து போனாலும் அவர் மறையாதவராய் நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்' என்றார், பண்டிதநேருஜி. காந்தியடிகள் காட்டிய வழிப்படி நடப்போம் என்று ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்வோம்'' என்று குறிப்பிட்டார்.

'சமத்துவம்' என்னும் தலைப்பில் டாக்டர் சு. பாலச்சந்தர், 'ஆன்மீகம்' என்னும் தலைப்பில் பேராசிரியர் திரு சோ. சத்தியசீலன், 'சமதர்மம்' என்னும் தலைப்பில் திரு த. இராமலிங்கம், 'விடுதலை' என்னும் தலைப்பில் திரு இரா. கிருஷ்ணமூர்த்தி, 'அரசியல்' என்னும் தலைப்பில் செல்வி டி.எஸ்.பிரேமா, 'பண்பாடு' என்னும் தலைப்பில் செல்வி செ. பிரமிளா ஆகியோர் கருத்தரங்கில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திருஆர். கே.கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

மாலையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கவிஞர் கொத்தமங்கலம் சுப்புவின் மகன் திரு கொத்தமங்கலம் விசுவின் காந்தி மகான் கதை வில்லுப்பாட்டு நடந்தது. பின்பு செய்தி-சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத்துறைச்



செயலர் திரு ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார்.

விழாவுக்கு மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது உரையில், ''காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தோம் என்பதில் நாமெல்லாம் பெருமை கொள்கிறோம்-தமிழக அரசு நடத்தும் இந்த விழா, அனைத்து மதத்தினரும் பங்கேற்கும் விழாவாகக்கொண்டாடுவதன் மூலம் உண்மையான தேசிய விழாவாக-சர்வமத விழாவாக-உலக விழாவாக மதிக்கப்படுகிறது' என்று பாராட்டினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

"வீரத்தால், ஆற்றலால்-அறிவால் சிலர் நமது நினைவில் மட்டுமே நிற்கிறார்கள். ஆனால் புத்தர், நபிகள் நாயகம், ஏசுநாதர், வள்ளுவர் போன்றவர்கள் மக்கள் இதயத்தில் இடம் பெற்றவர்களாகிவிட்டனர். சில பேர் பிறந்ததால்தான் சில நாட்கள் பெருமை பெறுகின்றன. அந்த வரிசையில் காந்தியடிகள் பிறந்ததால்தான் அக்டோபர் இரண்டாம் நாள் பெருமை பெற்றது. மனிதத்தன்மை, பண்புக்கு மதிப்பு அளித்தவர்கள் யார் யாரோ அவர்களைத்தான் உலக மக்கள் தங்கள் இதயத்திலே இடம் ஒதுக்கி வைத்துப் போற்றுகிறார்கள். அப்படிப்பட்ட தலைவர் வரிசையில் காந்தியடிகளும் ஒருவர்.

''காந்தியடிகளின் சிறப்புகளை நூல்கள் வாயிலாகத் தெரிந்து கொண்ட மேலை நாட்டவர்களுக்கு இன்றைக்கு அட்டன்பரோ எடுத்துள்ள 'காந்தி' திரைப்படம் மூலம் மேலும் காந்தியடிகளின் வரலாறு தெளிவுபடுத்தப்பட்டு வருகிறது. காந்தி வரலாற்றை விளக்கும் ''காந்தி'' திரைப்படம் மேல்நாட்டு மக்களிடையே புதியதொரு உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை உலக அமைதி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற என்னால் காணமுடிந்தது. மக்களின் உள்ளத்தை ஈர்த்த தன்மையால் காந்தியின் பெருமையை இன்றைக்கு உலகம் முழுவதும் புகழுகிறது.

''நலிவுற்றுக் கிடந்த இந்திய நாட்டை எப்படி எல்லாம் காந்தியடிகள் உயர்த்திக்







காட்டினார் என்று பாரதியார் பாராட்டியுள்ளார். இந்தியாவின் 'அறிவு காந்தி' இந்தியாவின் 'இதயம்' காந்தி.

''என்னுடைய வாழ்க்கைதான் மக்களுக்கு நான் தெரிவிக்கும் செய்தி'' என்றார்.



ஏழை, எளிய மக்கள வாழ்வு மலரப் பாடுபட்டவர் காந்தி, உண்மைத் தீரராக-சிறந்த பண்பாளராக-விடா முயற்சியாளராக - அன்புள்ளம் கொண்டவராக -அஞ்சாநெஞ்சம் கொண்டவராக காந்தி வாழ்நாளில் இருந்தார். அப்படிப்பட்ட உத்தமர் வழியைப் பின்பற்ற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், நீதிபதி டாக்டர் மு.மு. இஸ்மாயில், உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ். சாமிக்கண்ணு, மறைதிரு ஆர். அருளப்பா, தவத்திரு ஊரன் அடிகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு, திரு டி. செங்கல்வராயன், திருமதி இளம்பிறை மணிமாறன், திருமதி நிர்மலா சுரேஷ் ஆகியோர் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். அத்துடன், 300 முஸ்லிம் விதவைப் பெண்களுக்கு முதியோர் உதவித்தொகை, ஆதிதிராவிடர்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும், நலிந்தோருக்கும் தொழிற்கருவிகள், கடன் உதவிகள் ஆகியவற்றையும் வழங்கினார்.


சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. சுந்தரமூர்த்தி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

திரு எஸ். வி. சகஸ்ரநாமம் தயாரித்த திரு வி. எஸ். ராகவன் குழுவினரின் 'பதச்சோறு' என்னும் நாடகம் நடைபெற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**ஜி. ஆனந்தன்**







# விரிந்த கடற்பரப்பிலே வளர்ந்து வரும் துறைமுகம்

தூத்துக்குடி என்றாலே, இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தியாகி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பெயர்தான் நினைவுக்கு வரும்

தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின சார்பில் துறைமுகப் பகுதி பாரதிநகர், மதுரை சோமு கலையரங்கில் 1.10.83 அன்று பல்வேறு வகையான தொடக்க விழாக்கள் நடைபெற்றன.

தூத்துக்குடி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய திருநாளாக அது விளங்கியது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. விழாவிற்கு வந்திருந்தோரை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் துணைத் தலைவர் திரு எஸ். கே. காந்திமதிநாதன் வரவேற்றார்.





# ஏற்றுமதி-பரிசளிப்பு

என்ஜினியரிங் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தின் தென் மண்டலப் பிரிவின் சார்பில், சென்னை சோழா ஓட்டலில் 10.10.83 அன்று 1981-82 ஆம் ஆண்டில் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''வெளிநாடுகளுக்கு என்ஜினியரிங் பொருள்களை ஏற்றுமதி செய்து பரிசு பெற்றவர்களை வாழ்த்துகின்றேன். தொழில் வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்து வருகின்றது. தென் மண்டலத்தைப் பொறுத்தவரையில் 1982 83இல் ஏறத்தாழ ரூ. 126 கோடிக்கு ஏற்றுமதி ஆகி உள்ளது. தென் மாநிலத்தில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. தமிழகம் ஏறத்தாழ ரூ.48 கோடிக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

### ஏற்றுமதியில் முதலிடம்

''தென்மண்டலத்தில் சிறு தொழில் பொருள்களை ரூ. 10 கோடிக்கு மேல் ஏற்றுமதி செய்துள்ளோம். அதில் 80 சதவிகிதம் ரூ.8 கோடி) தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்து முதலிடத்தைப் பெற்றுள்ளது. கைத்தறித் துணிகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதில் 4-ல் ஒரு பங்கு தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

''தமிழகத்தில் 1977-லிருந்து 5 இடங்களில் தொழிற் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு முதல் தவணையாக ரூ.10 கோடி செலவிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற் பேட்டை துவங்க அரசு முடிவு செய்துள்ளது.

''தமிழ்நாட்டில் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான ஒரு பரிசுத் திட்டத்தை அரசு ஏற்படுத்தும். அடுத்த ஆண்டிலிருந்து எஸ்.எஸ்.ஐ. பெரிய தொழில், நடுத்தரத் தொழில் அதிபர்களுக்கு முதல் அமைச்சர் பரிசு வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும்''.

### இணைப்புப் பாலம்


சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கியும் இக்கழகத்தின் துணைத் தலைவருக்குப் பாராட்டு வழங்கியும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.



ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''வரதராஜனுக்கு இங்கே பாராட்டு விழா நடக்கிறது. அவருடைய நேர்மையான பேச்சுக்காகத்தான் நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கினேன். பதவி நம்மைத் தேடி வர வேண்டும். பதவியைத் தேடி நாம் போகக்கூடாது. இவரால் பதவிக்குப் பெருமை கிடைக்கிறது.

''நுழைவு வரியில் சிக்கல்கள் உள்ளது என்று வர்த்தகர்கள் கூறினார்கள். நுழைவு வரியினால் ரூ.300 கோடியை இழந்தாலும் பரவாயில்லை என்று நிறுத்தி வைத்துள்ளோம். இதற்கான ஆக்க பூர்வமான யோசனையை வர்த்தகர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். வரியை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்குக் கிடையாது. தொழிலாளர்களிடையேயும், முதலாளிகளிடையேயும் இணைப்புப் பாலமாக நாங்கள் இருப்போம்.







''நான் வெளிநாடு சென்றிருந்தபோது ஹாங்காங்கில் கைத்தறித் துணிகளைப் பார்த்தேன். கைத்தறித் துணிக்குப் பதிலாக, இந்தியாவிலிருந்து செங்கல்லை வைத்து அனுப்பிவிட்டார்கள் என்று ஹாங்காங்கில் இருந்தவர்கள் சொல்லி வருத்தப்பட்டார்கள். இப்படி இருந்தால் அவர்கள் நம்மை எப்படி நம்புவார்கள்? ஒருவர் செய்த தவறுக்கு எல்லோருக்கும் கெட்ட பெயர் ஏற்பட்டு விடுகிறது. அப்படித் தவறு செய்பவர்கள்மீது இந்தக் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசும் அத்தகையவர்களுக்கு எந்த உதவியும் செய்யாது.

### தரம் வேண்டும்

''நாம் தயாரிக்கும் பொருள் தரமிக்கதாக இருக்க வேண்டும். அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே சுங்கத் தீர்வை அற்ற விற்பனை நிலையம் அமைக்க 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. தற்பொழுது விரிவாக்கம் செய்ய 500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. வேறு எந்தக் காரியத்திற்கும் இந்த நிலத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும் தெரிவித்துள்ளேன்.

''கம்ப்யூட்டர் போன்ற மின் அணுத் துறையில் நல்ல வாய்ப்பு இருப்பதைத் தொழில் அதிபர்கள் தக்கபடி பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்குத் தேவையான அனைத்து உதவிகளை அரசு செய்யும்.




''கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியும் என்று முன்னர் நான் கூறிய போது சிலர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று இந்தத் திட்டத்திற்கு மைய அரசின் அனுமதி கிடைக்கக்கூடிய நிலையில் உள்ளது என்று தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டத்தினால் தமிழ்நாட்டில் மின்சாரப்பற்றாக்குறை தீரும் என்றும் நம்புகிறேன்.''

என்ஜினியரிங் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு டி.ஏ.எஸ்.பாலகோபால் சிறப்புரையாற்றினார். தென்மண்டல என்ஜினியரிங் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு பி.கே.சீனுவாஸ் வரவேற்புரையாற்றினார்.

தென்மண்டல இன்ஜினியரிங் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு எம்.என்.கே.மேனன் நன்றி கூறினார்.


**— அ. மருதவிநாயகம்**



இந்தியாவில் உள்ள பெரிய துறைமுகங்களில் 19.2மில்லியன் டன்னாக இருந்த சரக்குப் போக்குவரத்து இப்போது சற்றேறக் குறைய 80 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.



ஆசியாவிலேயே மிகப் பெரிய நீர்த் தடுப்பு அணைகள் அமைந்தது தூத்துக்குடி என்று "கின்னஸ்புக்" இல் இடம் பெற்றுள்ளது.



அடுத்து, மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.விஜய பாஸ்கரரெட்டி அவர்கள் பயணிகள் துறை, கூடுதல் சேமிப்புக் கிடங்குகள், கூடுதல் கப்பல்தளம், நான்காவது கட்டப் பணியாளர் குடியிருப்பு, மத்திய தொழிற் பாதுகாப்புப் படை அலுவலர்கள் விடுதி ஆகியவைகளைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:


''தேசத்தின் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு பார்க்கும் போது, சேதுசமுத்திரத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டது. தூத்துக்குடி துறைமுகம் இயற்கைத் துறைமுகமல்ல என்றாலும் வல்லுநர்களின் திறமையில் இன்று நவீன துறைமுகமாக மாறியுள்ளது''.

''இந்தத் துறைமுகத்திற்கு இரண்டு கப்பல் தளங்கள்வேண்டுமெனவும், ஆயில்ஜெட்டி, நிலக்கரி ஜெட்டி போன்றவைகள் தேவையென்றும் வற்புறுத்தப் பட்டது. அந்தக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்''.

''துறைமுகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தளத்திற்கு அண்ணா, காமராசர் பெயரிட வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிசீலித்து அரசு ஆவன செய்யும். தொழில் அதிபர்கள் நல்ல தொழில்களைச் செய்து இந்த நகரத்தைத் தொழில் நகரமாக ஆக்க வேண்டும்''

விழா இறுதியில் தலைமைப் பொறியாளர் திரு கோபாலன் நன்றி கூறினார்.

—அ. மருது



# பத்தாவது முத்து

தென் இந்திய வரலாற்றிலே தனி முத்திரை பெற்றுள்ளது ''தூத்துக்குடி'' துறைமுகம்.

தூத்துக்குடியின் கடலோரம் அமைதி வாய்ந்து திகழும் அழகே அழகு. பழங்காலத்தில், ஆழமான கடற்பரப்பிலே, உயர்ந்த முத்துக்களையும் சங்குகளையும் சங்குக் குளிப்பின் மூலம் வெளிக் கொணர்ந்த பெருமை தூத்துக்குடியைச் சாரும். ஆழ்கடல் துறைமுகம் அமைவதற்கு இயற்கை வசதி பெற்றது.

இந்தியத்துறைமுகங்கள் என்ற மகுடத்தில், பத்தாவது நல்முத்தாகத் தூத்துக்குடி துறைமுகம் பளிச்சிடுகின்றது. அமைதியே உருவான கடற்பரப்பு, கிழக்கிலுள்ள அண்டை நாடான ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பு ஆகியவை தூத்துக்குடியை எல்லாக் காலநிலைக்கும் உகந்த துறைமுகமாக இயற்கையான பாதுகாப்பை அளிக்கின்றன.

1963ல் இதற்கான பணி தொடங்கப் பட்டது. முற்றிலும் இந்தியப் பொறியியல் வல்லுநர்களால் வடிவமைத்து உருவாக்கப் பட்டது இத்துறைமுகமாகும். இதற்கான பணிகளைத் தொடங்கியதும் 4 பெர்த்துகளும் பண்டங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான கட்டடங்களும் உருவாகத் தொடங்கின.

1975 டிசம்பரில் இரண்டு கப்பல் தளங்களும், 1976 டிசம்பரில் மேலும் இரண்டு கப்பல் தளங்களும் அமைந்துவிட்டன.

தேசபக்தர் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் அவர்கள் இந்தியாவிற்கும் ஸ்ரீ லங்காவுக்கும் இடையே சுதேசிக் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கி வரலாற்றில் நிலைத்த புகழ் பெற்றவர். அவரது நினைவைப் போற்றும் வகையில், முதல் கப்பல் துறைக்கு ''வ. உ. சிதம்பரனார்'' என்று பெயரிடப்பட்டது.

பெரிய துறைமுகத்தையும் அதன் சிறந்த வசதிகளையும், ஏற்கெனவே இருந்த சிறிய துறைமுகத்தையும் இணைத்து 1979 ஏப்ரலில் துறைமுக டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 72.22 கோடி.

பெரிய துறைமுகம் அமைக்கப்பட்டதால், துறைமுக வசதியை நம்பியுள்ள ஸ்பிக் தூத்துக்குடி அனல்மின்நிலையம், தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ், இண்டஸ்ட்ரியல் கெமிகல்ஸ் போன்ற நிறுவனங்கள் வளர்ச்சி பெற வாய்ப்பும் வசதியும் அதிகரித்தன. இதன் விளைவாகக் கப்பல் போக்குவரத்தின் அளவு, நாளுக்கு நாள் பெருகியது.

### தூத்துக்குடி துறைமுகத்தின் சிறப்பு

# பெரிய துறைமுகங்களின் வளர்ச்சி

இந்தியா 6,000கிலோ மீட்டர் நீளமுள்ள மிகப் பெரிய கடற்கரையைக் கொண்டது. அதில் பல்வேறு வகையான துறைமுகங்களும் இயற்கைத் துறைமுகங்களும் உள்ளன. தற்போதுள்ள 200 துறைமுகங்களை 2 வகைகளாகப் பிரிக்கலாம். பெரியதுறைமுகம், சிறிய — நடுத்தரத் துறைமுகம். பெரிய துறைமுகங்களின் வளர்ச்சி மற்றும் பராமரிப்புப் பணிகளை மத்திய அரசு நேரிடையாகவே கவனிக்கிறது. சிறிய மற்றும் நடுத்தரத் துறைமுகங்களின் வளர்ச்சி மற்றும் பொறுப்புகளை அந்தந்த மாநிலங்களே கவனிக்கின்றன.

10 மிகப்பெரிய துறைமுகங்கள் தற்போது இயங்கி வருகின்றன. அவை பம்பாய், கல்கத்தா, ஹால்தியா, கொச்சின், சென்னை, மர்மகோவா, புதுமங்களூர், பாராதீப், தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டினம். 11-வது மிகப் பெரிய ''நவ சேவா'' துறைமுகம் தற்போது உருவாகி இருக்கிறது. இந்திய சுதந்திரத்தின் போது 5 பெரிய துறைமுகங்கள் இருந்தன. அவை பம்பாய், கல்கத்தா, கொச்சின், சென்னை மற்றும் விசாகப்பட்டினம் ஆகும்.

மிகப் பெரிய 10 துறைமுகங்களில் 5 கிழக்குக் கடற்கரையோரத்தில் உள்ளன. அவை கல்கத்தா ஹால்தியா, சென்னை, பாராதீப், தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டினம். இதர 5 துறைமுகங்கள் மேற்குக் கடற்கரையோரத்தில் உள்ளன. பெரிய துறைமுகங்களில் 1947-48-ஆம் ஆண்டு சரக்குப் போக்குவரத்து 16 மில்லியன் டன்னாக இருந்தது. ஆனால் 1982-83-ல் இது 96 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. இந்த முக்கியத்துறையில் இதுவரை 1,400 கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பெரிய துறைமுகங்களின் வளர்ச்சிக்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (நவ சேவா துறைமுகம் உட்பட) 52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. துறைமுக வசதிகளில் மேம்பாடு மற்றும் நவீனமயம், கூடுதல் திறன் கொண்ட கட்டடம் கட்டுதல், பொது சரக்குப் போக்குவரத்து மற்றும் கன்டெய்னர்களைப் பெரிய அளவில் பயன்படுத்த இத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கல்கத்தா, பம்பாய் போன்ற துறைமுகங்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல புதிய திட்டங்களுக்குக் கூடுதல் நிதியும் மற்றும் சில துறைமுகங்களில்தொடர்ந்து நடைபெற்றுவரும் திட்டங்களுக்கு மேலும் சில வசதிகளை வழங்கும் பொருட்டும் 52 கோடி ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீட்டை மதிப்பீடு செய்து 603 கோடி ரூபாயாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

பம்பாய் துறைமுகத்தின் குறுக்கே கட்டப்படவிருக்கும் புதிய நவ சேவா துறைமுகம் தனது கட்டுமானப் பணியைத் துவக்க மத்திய அரசின் ஒப்புதலைப் பெறவுள்ளது. நடப்பாண்டில் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் ஏற்று நடத்தும் மிகப் பெரிய திட்டமாகும் இது. 185 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி உட்பட இத்துறைமுகத்திற்கு 506 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆறாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட எல்லா பெரிய திட்டங்களும் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கூடுதல் திறன் வசதி நவீனமயம் இழுவைக் கப்பல்களின் மேம்பாடு குறித்த சில திட்டங்களின் விவரம் வருமாறு:

1. கண்ட்லா, மர்மகோவா, புது மங்களூர், சென்னை, தூத்துக்குடி, விசாகப்பட்டினம் மற்றும் பாராதீப் ஆகிய துறைமுகங்களில் கூடுதல் பொது சரக்குப் போக்குவரத்துக் கட்டுமானப் பிரிவு கட்டுதல்.

2. சென்னையில் ஒரு கன்டெய்னர் டெர்மினல் கட்டுதல்.

3. கொச்சின், கண்ட்லா, மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களில் கூடுதல் வசதி ஏற்படுத்தித் தருதல்.

4. கொச்சின் மற்றும் பாராதீப் துறைமுகங்கள் உரங்களைக் கையாளும் வசதிகளைச் செய்து தருதல்.

5. பம்பாய், சென்னை மற்றும் கொச்சின் ஆகிய துறைமுகங்களில் கன்டெய்னர் கருவி பயன்படுத்தல். சென்னையில் முழு அளவிலான கன்டெய்னர் பயன்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றுதல்.

6. ஹூக்ளி கழிமுகத்தில் இழுவைக் கப்பல்களை அபிவிருத்தி செய்தல் (ரூ. 40.50 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது).




புதிய திட்டங்களுக்கு ரூ. 313 கோடி அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. இது தவிர துறைமுகங்கள் ரூ. 15 கோடி வரை அனுமதி அளித்துள்ளன. தற்போதுள்ள துறைமுக வளர்ச்சித் திட்டங்களால், ஆறாவது திட்ட காலம் ஆரம்பிக்கும் சமயத்தில் 101 மில்லியன் டன்னிலிருந்து 131 மில்லியன் டன்னாக திறன் உயர்ந்துள்ளது. தற்போது துறைமுகத்தின் திறன் 30 சதவீதம் உயர்ந்துள்ளது.

1982-83 காலங்களில் பெரிய துறைமுகங்களின் திட்டச் செலவு ரூ. 121 கோடி. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ. 119.31 கோடியாகும். 1983-84 ஆண்டில் ரூ. 164.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நவசேவா திட்டத்திற்கான செலவு இதில் அடங்கவில்லை. 1982-83ஆண்டில்சரக்குப்போக்குவரத்து மற்றும் துறைமுகத்தின் வளர்ச்சி மேன்மையாக இருந்தது. கப்பல் துறையில் தேக்கம் இருந்தபோதிலும், 1982-83ஆம் ஆண்டில் 96 மில்லியன் டன் சரக்கு கையாளப்பட்டது. ஆனால் 1981-82-ஆம் ஆண்டில் 88 மில்லியன் டன் மட்டுமே சரக்கு கையாளப்பட்டது.


சென்னைத் துறைமுகம் 9 சதவீதம், கல்கத்தாவிலுள்ள ஹால்டியா பிரிவு 12 சதவீதம், தூத்துக்குடி 20 சதவீதம் மற்றும் பம்பாய், கண்ட்லா, மங்களூர் ஆகியவை 20 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவின் கன்டெய்னர் போக்குவரத்து சீராக உயர்ந்து வருகிறது. 1975-76ம் ஆண்டில் இந்திய துறைமுகங்களில் 4,353 கன்டெய்னர்கள் கையாளப்பட்டன. 1982-83 மற்றும் 1981-82 ஆண்டுகளில் 2 இலட்சம் கன்டெய்னர்கள் கையாளப்பட்டன. பம்பாய் துறைமுகத்தில் மட்டும் 1.30 இலட்சம் கன்டெய்னர்கள் கையாளப்பட்டன.

நாட்டிலுள்ள எல்லாத் துறைமுகங்களைக் காட்டிலும் பம்பாய் துறைமுகம் தலைசிறந்து விளங்குகிறது. 1982-83-ல் இத்துறைமுகம் 24.85 மில்லியன் டன் சரக்கைக் கையாண்டது. இது 1981-82ல் 19.63மில்லியன் டன் சரக்கைக் கையாண்டது. எல்லா பெரிய துறைமுகங்களிலும் மொத்தத்தில் 24 மில்லியன் டன் சரக்குக்கு மேலாகக் கையாளப்பட்டது.

கிழக்குக்கடற்கரையோரமுள்ள துறைமுகங்களில் சென்னைத் துறைமுகம் முன்னணியில் உள்ளது. இது 1982-83-ல் 12.4 மில்லியன் டன் சரக்கைக் கையாண்டது. ஆனால்1981-82ல் கையாண்ட சரக்கு11.4மில்லியன் டன் மட்டுமே. 19,000 கன்டெய்னர்கள் கையாண்ட இத்துறைமுகம், அதற்கு முந்தைய ஆண்டு 15,000 கன்டெய்னர்களை மட்டுமே கையாண்டது.

## தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் வியத்தகு சாதனைகள்



- 24.9.1983-இல் தமிழக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக, ஸ்டோன்வல் ஜாக்சன் என்ற லாஷ் கப்பல் 14 படகுகள் மூலம் அரிசியை இங்கு இறக்கியது.
- 22.8.1983-இல் 'பாரத்சீமா' என்ற முதலாவது பயணிகள் கப்பல் இத்துறைமுகத்துக்கு வந்தது.
- 1981ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து துறைமுகத்தில், சரக்கை ஏற்றி இறக்கும் தொழிலாளர்களுக்கு மூன்று ஷிப்டு வேலை அமலுக்குக் கொண்டுவரப் பட்டது.
- 1983 மார்ச் முதல் தேதி ஊக்கத் திட்டமாக, இவ்வளவு வேலைக்கு இவ்வளவு கூலி என்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்வேறு பணிகளுக்கான ஊதிய அளவும் நிர்ணயிக்கப்பட்டது.
- 1982-83-இல் எட்டுக் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தேயிலைப் பெட்டிகள் இத்துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- 1983 மார்ச்சு மாதம் துறைமுகத்தில் கையாளப்பட்ட சரக்கின் அளவு 4 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். இத்துறைமுகத்தில் ஒரு மாதத்தில் கையாளப்பட்ட மிக உயர்ந்த அளவு இதுவாகும்.



தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு கே.ஏ. சுந்தரம் இ.ஆ.ப., தலைமை தாங்கினார்.

திரு. டி.எஸ். சிவப்பிரகாசம் எம்.பி., பேசுகையில் ,''மீன்பிடி துறைமுகமாக இருந்த இந்தத் துறைமுகம் இவ்வளவு வளர்ச்சி பெற்றது குறித்து மிக்க மகிழ்ச்சி




யடைகின்றேன். கல்கத்தா-கன்னியாகுமரி நெடுஞ்சாலையைத் தூத்துக்குடி வழியாக அமைக்க வேண்டும்'' என்றார்.

திரு.எம். அருணாசலம் எம்.பி. பேசுகையில், ''இந்நிகழ்ச்சி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. பல அறிஞர்கள் இம் மண்ணில் தோன்றியுள்ளார்கள். வருங் காலத்தில் மிகச் சிறந்த நகரமாகத் திகழப்போகிறது'' என்றார்.

திரு ஆலடி அருணா எம்.பி. பேசுகையில், ''ஐந்து ஆக்கப் பணிகளுக்கான கால்கோள்விழா சிறப்புடன் நடைபெறுவது குறித்துமகிழ்ச்சியடை கின்றேன். இந்தியாவில் துறைமுகங்கள் 4 மடங்குவளர்ச்சிஅடைந்துள்ளன. ஆனால் தூத்துக்குடி மட்டும் ஒரு மடங்குதான் வளர்ச்சியடைந்துள்ளது. அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது தூத்துக்குடி வளர்ச்சித் திட்டத்திற்கு நட்டம் வந்தால் மாநில அரசு பொறுப்பு ஏற்கும் என்று சொல்லி இத்திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்தார்'' என்றார்.

## தூத்துக்குடி துறைமுகம்




மைய தொழிற் பாதுகாப்புப் படை தென்மாநிலத் தலைமை அலுவலர் உரையாற்றுகையில்,

''இந்தியா முழுவதும் தொழிற் பாதுகாப்பு யூனிட், நூறு உள்ளது. தென் மாநிலத்தில் முப்பது யூனிட் உள்ளது. மேலும் பத்து யூனிட்டுகள் ஆரம்பிக்க உள்ளன. எங்களுக்கு விடுதி கட்டிக்கொடுத்ததற்கு மகிழ்ச்சி'' என்றார்.

திரு. கே. டி. கோசல்ராம் எம்.பி.பேசுகையில்,''தூத்துக்குடி வளர்ச்சிக்கு வீரபாகுபிள்ளை, ரங்கசாமி நாடார் முதலியோர் பணியாற்றினார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது. சேது சமுத்திரத் திட்டமும், தூத்துக்குடித் திட்டமும் இரட்டைச் சகோதரர்போன்றதிட்டமாகும். சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், நமது நாட்டிற்குப் பாதுகாப்பாக இருக்கும். புதிதாக அமையவிருக்கும் இரண்டு பெர்த்துகளுக்கு காமராசர், அண்ணா பெயரிட வேண்டும்'' என்றார்.






## சூரிய சக்தியில் இயங்கும் முதல் துணி ஆலை

அகமதாபாத்தில் உள்ள துணி ஆலை ஒன்று வெற்றிகரமாக சூரிய சக்தியைப் பயன்படுத்தி இயங்குகிறது. எரிபொருளும் இதனால் மிச்சமடைகிறது.

அகமதாபாத்தில் உள்ள ஜகாங்கீர் துணி ஆலை, தேசிய துணி ஆலை கார்ப்பரேஷனின் கிளை நிறுவனமாகும்.

இங்கு உற்பத்தியாகும் துணியினை வெளுக்க 6 ஆயிரம் லிட்டர் தண்ணீரைச் சுட வைக்க வேண்டியுள்ளது. அதேபோல வெளுத்த துணியினையும், நூலையும், உலர வைக்க வேண்டியுள்ளது. இதற்காகவே முறையே ஆண்டொன்றுக்கு 378 டன் நிலக்கரியும், நாளொன்றுக்கு 38 லிட்டர் எரி எண்ணெய்யும் செலவாகியது.

இதனை மிச்சப்படுத்த 1981ஆம் ஆண்டு மே மாதத்தில் சூரிய -சுடுநீர் தொகுப்பு துவக்கி வைக்கப்பட்டது. இந்திய அரசின் எரிசக்தி அமைச்சக, கூடுதல் எரிசக்தி ஆதாரங்களுக்கான குழு இந்தத் தொகுப்பை அமைத்துத் தந்தது. இதற்கான தொழில் நுணுக்கத்தை மத்திய உப்பு மற்றும் கடல்நீர் இரசாயன ஆய்வு நிறுவனம் அகமதாபாத் துணி ஆலைகள் ஆய்வு நிறுவனத்தின் உதவியோடு உருவாக்கியது. ஜகாங்கீர் ஆலையின் கூரையில் 100 கண்ணாடித் தகடுகள் சூரிய சக்தியைச் சேகரிக்கப் பொருத்தப்பட்டன. இதற்கான செலவை நான்கு முதல் ஐந்து ஆண்டுகளில் திரும்பப் பெற்றுவிடலாம்.

இந்த முயற்சி வென்றதை ஒட்டி ஜகாங்கீர் துணி ஆலை, இப்பொழுது சூரிய சக்தியினால் இயங்கும் குறைந்த சக்தி நீராவி தயாரிப்பு ஆலை ஒன்றை இன்னும் ஒரு சில மாதங்களில் நிறுவ உள்ளது.

நாட்டிலேயே சூரிய சக்தியைப் பயன்படுத்தி, எரிபொருளை மிச்சம் பிடிக்கும் அமைப்புகளில் ஜகாங்கீர் துணி ஆலை முதலாவதாகும்.



# பெருகிவரும் தொழிலால் வளர்ந்து வரும் கோவை

**பெ. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோவை.

இனிமைத் தமிழ் கொஞ்சும், இசைத்தமிழ் கூட்டி நிற்கும், வனஞ்சூழ் மலையும் கொண்டு, பசுமை துஞ்சும் வேளாண் நிலையும் கொண்டு, பக்திக்கும், கலைக்கும் தனிச் சிறப்புங்கொண்டு, எழிலரசி மலையைத் தொட்டு, பண்டைத் தமிழ் சூழ் நிலமாய் விளங்கும் மலையாளம் தொட்டு தியாகத்தையும், அன்பையும், உழைப்பையும் ஒரு சேரக் கொண்டிங்கு, பண்டைத் தமிழர் பழம் பெருமை சாற்றுகின்ற வரலாற்றுச் சிறப்பினையும் கொண்டு விளங்கும் பெருமைக்குரிய மாவட்டம் கோவை.

இங்கு வாழுகின்ற பெருமையை 30 இலட்சம் மக்கள் பெற்றிருக்கின்றார்கள். இம்மாவட்ட மண்ணின் பரப்பு 7,434.62 சதுர கிலோ மீட்டராகும். 21 ஊராட்சி ஒன்றியங்கள், 7 வட்டங்கள், 3 கோட்டங்கள், வளர்ச்சியையும், வருவாயையும், ஊட்டியும், உருவாக்கியும், திகழ்கின்ற பெருமை இம்மாவட்டத்திற்குண்டு.

நீர்வளம் தர, சோலையாறு, ஆழியாறு, பரம்பிக்குளம், திருமூர்த்தி, அமராவதி என அணைகளுமுண்டு. இயற்கையெழில் கொஞ்சும் வால்பாறை, ஆனைமலை, சிறுவாணி, ஆகிய மலை வளமுமுண்டு. உள்ளம் மகிழ்ந்திருக்க பக்திச் சுவையூட்டும், பூண்டி, பேரூர், மருதமலை, அவிநாசி, திருமூர்த்தி, திருமுருகன் பூண்டி, சச்சனாரி, மேட்டுப்பாளையம் ஆகிய சிறப்புமுண்டு. அருவிகள் குதித்து வரும் பஞ்சருவி, சிங்குபதி அருவி ஆகிய அருவிகளும் உளமார மகிழ்தற்குண்டு.

கொங்குநாடு எனப் புகழ் வாய்ந்த ஒருகாலைச் சிறந்து நின்ற கோவை மண்ணில் வாழுகின்ற மக்களுக்கு வளமான திட்டங்களைத் தமிழக அரசு எடுத்து சாதனைகள் புரிவதை அறியாதார் யார் உளர்?

குளுமை கொஞ்சும் கோவை, தொழில் வளர்ச்சியில் மேன்மை எய்தி நிற்பதை உலகுணரும். வளர்ந்த தொழில்கள், வளரும் தொழில்கள் கணக்கிலடங்கா, உடுமலை வட்டத்தில் தீப்பெட்டி தொழிலும், நூற்பாலைகளும், வால்பாறை வட்டத்தில் தேயிலை வளர்ப்பு, வார்ப்புத் தொழில்களும், பொள்ளாச்சி வட்டத்தில் தென்னைப் பொருள்கள் தயாரிப்பு, மரப்பொருள்கள் தயாரிப்பு, கயிறுகள் தயாரிப்பு தொழில்கள், கோவை வட்டத்தில் நூற்பாலைகள், பம்ப்செட் உற்பத்தித் தொழிற்சாலைகள், மாவரைக்கும் கருவிகள் தயாரிப்புத் தொழில்கள், எலெக்ட்ரானிக் கருவிகள் தயாரிப்புத் தொழில்களும், மேட்டுப்பாளையம் வட்டத்தில் நூற்பாலைத் தொழிற்சாலைகளுக்கான பொருள்கள் தயாரிப்பு, மரப்பட்டைகளிலிருந்து இரசாயனப் பொருள்கள் தயாரிப்பு ஆகிய தொழிற்சாலைகளும், மதுக்கரையில் சிமெண்ட் தயாரிப்பு தொழிற்சாலையும் சூலூர் போர் விமானப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்சாலையும், திருப்பூர் வட்டத்தில் பனியன் தொழிற்சாலைகளும் பெருகி இந்தியத் துணைக் கண்டத்திலேயே அரியானா, பஞ்சாப் மாநிலங்களே ஆச்சரியப்படுகின்ற வகையில் தொழில் வளர்ச்சியில் உயர்வு பெற்றுத் திகழ்கிறது.

அன்னூர், பெரியநாயக்கன் பாளையம், அவிநாசி போன்ற பகுதிகளில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் வளர்க்கப்பட்டு, 5,000 குடும்பத்தினர் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

இம்மாவட்டத்தில் வாழுகின்ற மக்களில் 12 இலட்சம் பேர் வேளாண் தொழிலும், 6 இலட்சம் பேர் தொழிற்சாலைகளிலும் 3 இலட்சம் பேர் வேறு பல தொழில்களிலும் ஈடுபட்டு அயராது உழைத்துப் பொருளாதார மேம்பாட்டினைப் பெற்றுத் திகழ்கிறார்கள்.

கோவை மாவட்டத்திலுள்ள 136 மிகப்பெரிய தொழிற்சாலைகளில் 86 தொழிற்சாலைகள் நூற்பாலைகளாகும். இதோடு 4,000க்கும் மேற்பட்ட பம்ப்செட் தயாரிப்புத் தொழிற்சாலைகளும், பல்வேறு கருவிகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளும், 10,000-க்கும் மேற்பட்ட பனியன் தொழிற்சாலைகளும் உள்ளன. 5,000க்கும் மேற்பட்ட சிறுதொழிற்கூடங்களும், 1,500 கைவினைஞர் தொழில்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்பெருந்தொழிற் சாலைகளை உருவாக்குதற்கு ஏறத்தாழ ரூ.75 ஆயிரம் இலட்சம் மூலதனமாகப் போடப்பட்டு, உற்பத்தி பெருக்கமும், வேலைவாய்ப்புப் பெருக்கமும் உயர்ந்து நிற்கின்றன. சிறு தொழில்களில் மட்டும் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

புதிய தொழில்களைப் பாங்குற உருவாக்க மாவட்டத் தொழில் மையம் ஒன்று உருவாக்கப்பட்டு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே சாதனைகளை உருவாக்கும் உன்னத நிலையைப் பெற்றுத் திகழ்கிறது. இம்மாவட்டம் தொழில்கள் பல தொடங்க, சிறுதொழில்வளர்ச்சிக் கழகமும், சிறுதொழில் முதலீட்டுக் கழகமும் பாங்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.


சிறுதொழில் முதலீட்டுக் கழகம் கடந்த 3 ஆண்டுகளில் ரூ. 350 இலட்சம் தொழில் தொடங்க கடனாக வழங்கியுள்ளது. மாவட்டத் தொழில் மையம் கிராமப்புறங்களில் தொழில் முனைபவர்களைக் கண்டெடுக்க ஊக்குவிப்பு முகாம்களை நடத்தி 2,000க்கும் மேற்பட்ட புதிய தொழில் முனைவர்களைக் கண்டெடுத்து. 4,500-க்கும் மேற்பட்ட புதிய தொழில்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு நடப்பு ஆண்டில் இதுகாறும் 500 தொழில்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. புதிய தொழில்களைத் துவக்குவதற்கு நடப்பு ஆண்டில் 140 இலட்ச ரூபாய் மாவட்டத் தொழில் மையம் மூலம் கடன் அளிக்கப்பட்டிருக்கிறது. 1,250 பேருக்குத் தொழில் தொடங்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி என்கிற வகையில் நடப்பு ஆண்டில் 2,738 பேருக்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது. நூல் நூற்பு, நெசவு, தீப்பெட்டி தயாரிப்பு குறித்த பயிற்சிகள் 850 பேருக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.


கோவை மாவட்டத்திலுள்ள 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி பெற்ற 2,000 பேருக்குத் தொழில் தொடங்கி கடன் வசதியும் செய்து தரப்பட இருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளில் மாவட்டத் தொழில் மையமும், சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும், 10,000-க்கும் மேற்பட்ட தொழில்கள் துவங்குவதற்கு ரூ. 60 கோடி அளவிற்கு நிதி வசதியை உருவாக்கித் தந்திருக்கிறது.

கோவை மாவட்டத்தில் ஒரு பக்கத்தில் வேளாண் வளர்ச்சியும், மறுபக்கத்தில் தொழில் வளர்ச்சியும் ஒரு சேர வளர்ந்து வருகின்ற மாட்சி இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். கடந்த 3 ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 10 கோடி செலவில் பலபணிகளும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 3 கோடி செலவில் பலபணிகளும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 4.5 கோடி செலவில் பல வளர்ச்சிப் பணிகளும், பல்வேறு துறைகளினுடைய சார்பில் ரூ.18 கோடி செலவில் பல வளர்ச்சிப் பணிகளும் ஆற்றப்பட்டு வளர்ச்சியின் உச்சியில் உயர்ந்து நிற்கிறது. உழைப்பால் உயர்ந்து பொருளாதார மேம்பாட்டை வெகுவாகப் பெற்றுத் திகழ்கின்ற மாவட்டம் இது.



அன்னூர், அவிநாசி பகுதிகளில் தொழில் மேம்பாட்டை உருவாக்க தொழிலில் பிற்பட்ட பகுதியாகத் தமிழக அரசு அறிவித்து பல புதிய தொழில்களை உருவாக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது. அரசின் திட்டங்களாலும், தொழில் வளர்ச்சிகளாலும் இம்மாவட்டம் உயர் நிலையை அடைவதற்கு உழைக்கும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பும், தொழில் அமைதியின் மாண்பும், ஒத்ததாக அமைந்திருக்கிறது.

இனிமை பொங்கும் கால நிலைக்கேற்ப, இனிய வளம் பூத்துக்குலுங்கும் இம்மாவட்டம் புதுத்தொழில்கள் பல பெருகி புத்தொளி பெற்று புகழ்க் கொடி நாட்டுமென்பதில் நாம் பெருமை கொள்வோம். படித்தவர்கள், பாட்டாளிகள், பட்டதாரிகள், அரசு வழங்கும் சலுகைகளை வழிகாட்டுதலை, ஒரு சேரப் பெற்று நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் பெரும் உதவியோடும், மாவட்டத் தொழில் மையம் வழிகாட்டுதலோடும், மேலும் பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு முன் வர வேண்டும். இதன் மூலம் மேலும் வேலைவாய்ப்பு பெருகி, வறுமையகன்று, வளம் பெருக வழிகோலும். பெருகி வரும் தொழிலால், உலகில் பெருமை கொள்ளும், புகழும் கொள்ளும், உற்பத்தியில் பொருளும் பெருகும், பொருளாதார ஏற்றத்தில் மேன்மை கொள்ளும் நற்றமிழ்ச் சொல்லால் விளங்கும் கோவை என்றால் மகிழ்ச்சிக்குரியதாகும்.



# திருநெல்வேலி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சிகளில் இத்திட்டத்தை அமல்படுத்த அரசு அனுமதி வழங்கி, அதற்காக ரூ. 45 இலட்சத்தையும் ஒதுக்கீடு செய்துள்ளது. அதனைச் செயல்படுத்துவதற்கு வேண்டி, வேலை மதிப்பீட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. சங்கரன் கோவில் மற்றும் புளியங்குடி நகராட்சிகளுக்கும்இத்திட்டம்விரிவு படுத்தப்பட்டுள்ளது. நகராட்சிகளுக்காக ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிப்படைத் தேவைகளாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், ஆதிதிராவிடர் காலனிகளுக்குப் பாதை அமைத்தல், பள்ளிக்கூடம் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற 124 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதில் 103 வேலைகள் ரூ. 45.97 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்குத் திருநெல்வேலி மாவட்டத்திற்கு 1983-84-ஆம் ஆண்டிற்கு ரூ. 281.95 இலட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. ஒரு வட்டாரத்திற்கு ரூ. 8 இலட்சம் என்பதில் இதுவரை ரூ. 2.86 இலட்சம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 1488 ஆதிதிராவிடர் குடும்பங்கள் உட்பட மொத்தமாக 3987 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டத்திற்கு 1983-84-ஆம் ஆண்டிற்கு ரூ. 274.73 இலட்சம் மதிப்பீட்டில் 2797 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரை ரூ.127.16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1216 கைப் பம்புகளும், 2672 ஆழ்குழாய்க் கிணறுகளும், 826 விசைப்பம்புகளும் நல்ல நிலையில் இயங்கி, கிராம மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. பழுதடைந்துள்ள 9 விசைப்பம்புகளைச் செப்பனிட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சமுதாய வளர்ச்சித் திட்டம்.**

இத்திட்டத்திற்கென ரூ. 15 இலட்சம்1983-84-ஆம்ஆண்டுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் ரூ. 2 இலட்சம் செலவில் 245 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரை 123 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 72.89 இலட்சத்தில் 510 கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதில் 9 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 161 வேலைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

## திட்ட அமலில் நிலையான முன்னேற்றம்

எரிசக்தி துறையில் குறைகள், விவசாயத் துறையில் உணவு உற்பத்திக் குறைவு, கட்டுமானப் பணிகளில் தவறுகள் மற்றும் சில குறிப்பிட்ட தொழிற்சாலைத் திட்டங்களில் பண விரயம் ஆகியவற்றையும் மீறி, திட்டங்கள் சரிவர அமல் நடத்தப்படுகின்றன என்று மாண்புமிகு திட்ட அமைச்சர் திரு எஸ்.பி. சவான் அவர்கள் தெரிவித்தார். தன்னுடைய அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களிடங்கிய ஆலோசனைக்குழு கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார்.

ஆறாவது திட்ட இலக்குகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் எட்டும் வகையில் மத்திய-மாநில அமல் நடத்தும் மற்றும் கண்காணிப்பு இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

பொதுத்துறை நிறுவனங்கள் ரூ. 615 கோடி பெருமளவில் மார்க்கெட் கடன்கள் ரூ. 400 கோடி, சிறு சேமிப்பில் முன்னேற்றம் ரூ. 40 கோடி, அதிகரித்துள்ள அந்நிய உதவி ரூ. 290 கோடி கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் வள சேகரிப்பு ரூ. 1953 கோடி மற்றும் புதிய நடவடிக்கைகள் ரூ. 528 கோடி ஆகியவற்றின் மூலம் மத்திய அரசின் நிதிவளங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

மாநிலங்களைப் பொறுத்தவரை, மார்க்கெட் கடன்கள் ரூ. 122 கோடி, சிறு சேமிப்பு ரூ. 55 கோடி, வைப்பு நிதி ரூ. 18 கோடி, நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்கள் ரூ. 47 கோடி மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளில் கூடுதல் வள சேகரிப்பு ரூ. 609 கோடி ஆகியவை கூடுதல் நிதி வளத்திற்கு உதவியுள்ளன என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.



# எண்ணம் கவரும் வண்ணப் பொம்மைகள்!

*கண்ணைக் கவரும் வண்ண பொம்மைகள்!*

*வகைவகையான வடிவமைப்புள்ள துணிகள்!*

*எல்லாவற்றையும் வாங்க வேண்டும் போல் இருக்கிறது..!*

ஆம். சென்னை தேனாம்பேட்டை, எல்டாம்ஸ் சாலையில் உள்ள சி.பி. கலை மையத்தில் 24.9.'83 அன்று கைவினைக் கலைப் பொருள் விற்பனைக் கண்காட்சி மூன்று நாட்கள் நடந்தது.

இந்தக் கண்காட்சியில், மண்காகித பொம்மைகள், பனை ஓலைப் பொருட்கள், மகளிர், குழந்தைகளுக்கான ஆடைகள், புட்டிகளில் அடைக்கப்பட்ட பழரசங்கள் எல்லாம் கண்களைக் கவர்ந்தன.

சமூகநலத்துறை இயக்ககமும், மாநில சமூகநல வாரியமும் இணைந்து முதல் முறையாக ஏற்பாடு செய்துள்ள கைவினைப் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் விற்பனைக் கண்காட்சியை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் துவக்கிவைத்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

"தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள சமூகநலத் துறையின் மகளிர் நல மற்றும் சமூக சேவை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கலைநுட்பம் மிக்க பொருட்களை விற்பனை செய்யவும், அப்பொருள்களுக்கு உள்நாட்டில் ஒரு நிலையான சந்தையை ஏற்படுத்தவும் இத்தகைய கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அழகான பொம்மைகள், கைக்குட்டைகள், டவல்கள், அழகிய வேலைப்பாடுகள் கொண்ட மேசை விரிப்புகள், திரைச் சீலைகள், ஜாம், ஜெல்லி, அப்பளம், வடாம் போன்ற பல்வேறு விதமான பொருட்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

"தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ள இக் கண்காட்சியில் 34 மகளிர் நல அமைப்புகளால் உருவாக்கப்பட்ட கலைநுட்பம் மிக்க பொருட்கள் இடம் பெற்றுள்ளன.


"திக்கற்ற மற்றும் ஊனமுற்ற மகளிருக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் இத்தகைய நடவடிக்கைகளைச் சமூகநலத் துறை மேற்கொள்கிறது.

"இதுபோன்ற பொருட்காட்சி வேறு நகரங்களிலும் நடைபெறும். கிராமப்புறங்களிலும் விற்பனை நிலையங்கள் திறக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பெண்களின் திறமைக்கு ஏற்ப கைவினைப்பொருள் தயாரிக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. கைவினைப் பொருள்கள் விற்பனைக்குச் சுமார் ரூ 3.50 இலட்சம் செலவில் விற்பனைக் கூடம் சென்னையில் கட்டப்படும்".

நிகழ்ச்சியில் சமூக நலத்துறை தனிச் செயலர் செல்வி எம்.எஸ். ரமேஷ், சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு வாரியத் தனி அலுவலர் திருமதி லாதிகா படால்கர், சமூக நல 'வாரியத் தலைவர் திருமதி தாரா செரியன் எம்.எல்.சி., சமூக நலத்துறை உதவி இயக்குநர் திரு ரங்கநாதன், பார்வையற்ற பெண்கள் மறுவாழ்வு இல்லக் கண்காணிப்பாளர் திருமதி சகுணா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

—பி.வி.ஜி.

# வாழ்வில் ஒளியேற்றும் தீப்பெட்டி



நமது வீடுகளில் தீப்பெட்டி இல்லையென்றால் என்னவாகும் என்று கற்பனை செய்துகூடப் பார்க்க இயலாது. வசதியுள்ளவர்கள் அடுப்பு பற்ற வைப்பதற்கு 'லைட்டர்களை'ப் பயன்படுத்துவர். ஆனால், நம்மில் பெரும்பாலானோர் தீப்பெட்டி இல்லையெனில் இருளில் அவதியுற வேண்டியதுதான்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தீப்பெட்டி உற்பத்தி செய்யும்தொழிலில்ஈடுபட்டிருப்பதால் இதற்குப் பஞ்சமில்லை. பண்டல்கள் கணக்கில் தீப்பெட்டிகளை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு சிறுதொழில் நிறுவனமாகச் செயல்படுகிறது.

கூட்டுறவுச்சங்கம் மூலம் இத்தொழிலில்முறைப்படுத்துவதற்கு முன்னர், தீப்பெட்டி உற்பத்தியாளர்களிடையே ஆரோக்கியமற்ற போட்டி மற்றும் ஒழுங்கில்லாத உற்பத்தி நிலவி வந்தது. சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கம், தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பல பணிகளுக்கு நிதி உதவி வழங்கியது. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவித் தொகை மூலம் கிடங்குகள் கட்டப்பட்டன. குச்சிகள், தீப்பெட்டியின் இருபுறமும் தடவப்படும் மருந்து மற்றும் தீப்பெட்டிகளை மழை, ஈரக்காற்று ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க இக்கிடங்குகள் பயன்படுகின்றன.

சாத்தூரிலுள்ள மேட்டமலை சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் 95 உறுப்பினர்கள் உள்ளனர். 82 தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றிலும் 20 பேர் பணிபுரிகின்றனர். ஆக, இந்தச் சிறுதொழில் நிறுவனம் 1640 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கிறது. மூலப் பொருட்களை வாங்கி, தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதற்கு முன், கிடங்குகளில் இருப்பு வைத்தல் மற்றும் தயாரான தீப்பெட்டிகளை மார்க்கெட்டுக்கு அனுப்புவது ஆகிய பணிகளைச் சங்கம் செய்து வருகிறது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர் மூலப் பொருட்களை டார்பாய் கூடாரம் மற்றும் வாடகைக் கிடங்குகளில் வைத்திருந்ததால் வாடகை, கூலிச் சேதாரம் என அதிகத் தொகை செலவானது. 1982ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிடங்குகளைக் கட்டுவதற்கு உதவித் தொகையாக ரூ. 3.3 இலட்சம் வழங்கப்பட்டது. குச்சிகள், தீப்பெட்டியின் இருபுறமும் தடவப்படும் மருந்து மற்றும் தயாரான தீப்பெட்டிகள் ஆகியவற்றைப் பாதுகாக்க இக்கிடங்குகள் பயன்படுத்தப்பட்டன. ரூ. 65,000 மதிப்புற்ற 1,30,000 தீப்பெட்டிப் பண்டல்களை இச்சங்கம் சராசரியாக உற்பத்தி செய்கின்றது. இவை கேரளாவிலுள்ள ஏஜெண்டுகளுக்கு விற்கப்பட்டு, நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

இச்சங்கம், ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ரூ. 30,000 இலாபம் ஈட்டுகின்றது. ஐந்து இலட்சம் மூலப் பொருட்களையும் 1.8 இலட்சம் தீப்பெட்டி பண்டல்களையும் ஒரே சமயத்தில் வைக்க முடியும்.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிக்கு வழங்கப்படும் முன்னர், டார்பாய் கூடாரம் மற்றும் வாடகைக் கிடங்குகளில் 3 இலட்சம் பொருட்களையும் மற்றும் ஒரு இலட்சம் தீப்பெட்டிப் பண்டல்களையும் மட்டுமே இருப்பு வைக்க முடியும். இதன் விளைவாக, 2 சதவீத சேதாரமும் கிடங்கிற்கு வாடகையாக மாதத்திற்கு ரூ. 3000ம் செலவாகியது. பக்கா கிடங்குகளினால் உற்பத்தி மற்றும் விற்பனை உயர்ந்துள்ளது.


தீப்பெட்டி தொழிற்சாலையொன்றைப் பார்வையிட்டதில் பல சுவையான தகவல்கள் கிடைத்தன.

தீப்பெட்டி செய்யும் தொழிலில் சீனுவாசன் குடும்பத்தினர் பரம்பரையாக ஈடுபட்டு வருகின்றனர். பெட்டிகளைத் தயாரித்தல், லேபில்களை ஒட்டுதல், குச்சிகளைத் தயார் செய்தல், மற்றும் தீப்பெட்டி பண்டல்களை உடனடியாகப் பதன்படுத்த தயார் நிலையில் வைத்தல், ஆகியவற்றை மிக விரைவாகச் செய்யும் திறன் படைத்தது இக்குடும்பம். எக்சைஸ் பட்டியை ஒட்டுவது ஒரு திறமை வாய்ந்த கலை. ஐந்து குரோஸ் எக்சைஸ் பட்டிகளை ஒட்டினால் ஒரு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 8 ஊதியம் கிடைக்கும். பெட்டிகளில் குச்சிகளை வைப்பதும் ஒரு சிக்கலான பணியாகும்.

ஒரு பெட்டியில் 62 குச்சிகளை 50வரிசைகளில் வைக்க வேண்டும் 30 பெட்டிகளில் குச்சிகளை அடைத்தால் ரூ. 17 ஊதியம் கிடைக்கும். சீனுவாசன் குடும்பத்தினரைப் போல, கோபாலசாமியும் அவரது மனைவி சீதாலட்சுமியும் கடந்த 15 ஆண்டுகளாகத் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆறு அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் மாதத்திற்கு 200 தீப்பெட்டி பண்டல்களை உற்பத்தி செய்ய முடியும். 60 டஜன் தீப்பெட்டிகள் கொண்டது ஒரு பண்டல். தேவைப்பட்ட சமயத்தில் மூலப் பொருட்கள் வாங்க இச்சங்கம் உதவி புரிகிறது.

மேட்டமலைச் சங்கத்தைப் போல, மதுரையிலும், இராமநாதபுரத்திலும் நூற்றுக்கணக்கான சங்கங்கள் உள்ளன. தீப்பெட்டித் தொழில் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கின்றது. நலிந்த வகுப்பினரது தேவையைப் பூர்த்தி செய்வதோடு, நமது சமயலறை அடுப்புகளை எரிய வைக்கவும் இச்சிறிய தீப்பெட்டி ஒரு முக்கிய அத்தியாவசியப் பொருளாகத் திகழ்கிறது.

கோணிப் பைகள்





# எரிசக்தி சேமிப்புக்கு ஐந்து அம்சத் திட்டம்

## மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி

எதிர் காலத்தில் எரி சக்திப் பிரச்சினை என்பது நாம் நினைப்பதைக் காட்டிலும் மிகவும் தீவிரமானதாக இருக்கும். எனவே இவ்விஷயத்தில் உலகம் மிகவும் மெத்தனமாக இருப்பது முறையல்ல. எதிர்காலத்தில், சர்வதேச ஒத்துழைப்புக்கு எரி சக்திதான் முக்கியத் துறையாக இருக்கக்கூடும். எரிசக்தி சேமிப்பு மற்றும் பாதுகாப்புக்கான 5 அம்சத்திட்டங்களாவன:

1.காடுகளிலிருந்து கிடைக்கும் விறகுகள், சுள்ளிகள் போன்றவற்றைப் போட்டு எரிப்பதன்மூலம் கிடைக்கக்கூடிய எரிவிசை உற்பத்தியில், புதிதாக நவீன ஆய்வுகளையும் உத்திகளையும் பயன்படுத்துதல்;

2. ஹைடிரஜனை எரிசக்தியாகப் பயன்படுத்துவதற்கு, தண்ணீரிலிருந்து ஹைடிரஜனைப் பிரித்து எடுப்பதற்காக ஒளிக் கதிர் வீச்சு முறையை உருவாக்குதல்;

3. போக்குவரத்து சாதனங்கள் பெரும்பாலும் பெட்ரோல் எண்ணெயையே நம்பி இருப்பதைக் குறைப்பதற்காக, 'பாட்டரிகள்' போன்ற புதிய விசை சேமிப்புச் சாதனங்களை வடிவமைத்தல்;

4. மின் உற்பத்திச் செலவைத் தற்போது உள்ளதைவிட 10 முதல் 100 மடங்கு குறைக்கும் வகையில் சூரிய விசையிலிருந்து நேரடியாக மின் விசையைத் தயாரிப்பதற்கான ஒளி மின் சாதனங்களைத் தயாரித்தல்;

5. பல்வேறு வகையான விசைத் தேவைகளையும் சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த விசை உற்பத்தித் திட்டங்களை ஏற்படுத்துதல் ஆகியவையாகும்.

பெட்ரோல் உபயோகம் குறையவேண்டும். நமது விசைத் தேவைகளை முதலில் பெட்ரோல் அடிப்படையிலிருந்து நிலக்கரி அடிப்படைக்கு மாற்றவேண்டும். பின்பே அதனை இதர வகையான விசை ஆதாரங்களுக்கு மாற்றுவது பற்றிப் பரிசீலிக்கவேண்டும். இத்தகைய மாற்றத்தைநாம் 25 முதல் 50 ஆண்டுகளுக்குள் அடைந்தாக வேண்டும்.


பெட்ரோல் எண்ணெய், மற்றும் சீக்கிரம் தீர்ந்துவிடக்கூடிய இதர வகையான எரிசக்தி ஆதாரங்களையே நம்பி இருப்பதைத்தொழில் வள நாடுகளில் குறைத்துக்கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் அவை தங்களது பொருளாதாரத் திட்டங்களை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும்.

அதேபோல, பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளும் தங்களது ஏற்றுமதி வருமானத்தை, சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்யவேண்டும். உலக நாடுகள் நீண்ட கால நோக்கத்துடனும் செயல்பட வேண்டும். குறுகிய ஆதாயங்களைக் கணக்கிட்டுக்கொண்டு செயல்படுவது சரியல்ல வளரும் நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கணக்கில்கொண்டு அதன் அடிப்படையில் சராசரி நபர் வாரி விசை அளவை அதிகரிக்க வேண்டியது உடனடி அவசியமாகும்.

''எரிசக்தி வளர்ச்சியும், மக்களின் வாழ்க்கைத் தரமும்'' என்பதே இந்த மாநாட்டின் முக்கிய கருப்பொருளாக அமைக்கப்பட்டுள்ளது. ஒருநாடு அதிக அளவுக்கு விசையைப் பயன்படுத்தினால் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரமும் அதே அளவுக்கு உயர்வானதாக இருக்கும் என்று கூறிவிட முடியாது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிக விசையை, வட அமெரிக்கா பயன்படுத்துகிறது; ஆனால் இந்த இரண்டின் வாழ்க்கைத்தரமும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது.

இந்த உலகில் வாழும் மக்களாகிய நாம், இந்த உலகிற்கு வந்திருக்கும் நல்ல விருந்தாளிகளைப்போல நடந்துகொள்ளவேண்டும். இந்த உலகின் இயற்கை வளங்களை அதிகமாக அழித்துவிடக்கூடாது, அளவோடு அமைந்துள்ள இயற்கையின் நளினமான சமநிலை சீர்குலைந்துவிடாதபடி நடந்துகொள்ளவேண்

# ஜப்பான் செல்லும் தமிழ்நாட்டுப் பிரம்புப் பொருட்கள்



திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலத்திற்கு அருகில் விஸ்வநாதபுரம் உள்ளது. அருகில் உள்ள மலைகளில் கிடைக்கும் பிரம்பு மூங்கிலைப் பயன்படுத்தி பிரம்பு, மூங்கில் பொருள்கள் செய்வதன் மூலம் இங்குள்ள மக்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

விஸ்வநாதபுரத்தில் தயாரிக்கப்பட்ட பொருள் தமிழ்நாடு, கேரளம் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டன. 1971 ஆம் ஆண்டுவரை இந்தத் தொழிலாளர்கள், குறைந்த வருமானத்தில் வாழ்க்கையோடு போராடி வந்தார்கள்.



தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைச் சீர்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு சிலர் ஒன்று சேர்ந்து பிரம்பு மற்றும் மூங்கில் தொழிலாளர் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கினார்கள். இன்று உறுப்பினர்களின் எண்ணிக்கை 110. ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 13 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. 1982-83 ஆம் ஆண்டில் மட்டும் சங்கத்தின் இலாபம் 37 ஆயிரம் ரூபாய் ஆகும். தொழிலாளர்களுக்கு 2.5 சதவித போனசும் வழங்கப்பட்டது.

தொடக்கத்தில் சங்கத்திற்கு நிரந்தரமான கொட்டகையோ, வேலை செய்வதற்கான பணி இடமோ இல்லை. மூங்கில், பிரம்பு முதலியனவும் வெட்ட வெளியிலேதான் இருப்பு வைக்கப்பட்டன. மூங்கில் பிரம்பு முதலியவற்றைச் சங்கத்தின் சேமிப்பு இடங்களுக்குக் கொண்டுவர, போக்குவரத்துக்காக 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆண்டொன்றுக்குச் செலவிடப்பட்டது.

1982-83ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் லாரி ஒன்று வாங்க ஒரு இலட்சம் ரூபாயும், பணியிடம் மற்றும் சேமிப்புக் கிடங்கு கட்ட 30 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது. கனரா வங்கியும் இதற்குச் சமமான தொகையை வழங்கியது. இவற்றைப் பயன்படுத்தி, பணியிடக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. லாரி ஒன்றும் வாங்கப்பட்டது. இதனால் போக்குவரத்தில் மட்டும் 20 ஆயிரம் ரூபாய் மிச்சமாகி உள்ளது. புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டடப் பொருள்களைப் பாதுகாக்கவும் தொழிலாளர்கள் வேலையைச் சிறப்பாகச் செய்யவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

வண்ணம் சேர்க்கப்பட்ட, கலைத்திறன் உள்ள விஸ்வநாதபுரம் பிரம்பு மற்றும் மூங்கில் பொருள்கள் ஜப்பான் மற்றும் அமெரிக்காவில் ஆர்வத்தைத் தூண்டிவிட்டுள்ளன.

30 தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 50 நாற்காலி மற்றும் சோபாக்களைத் தயாரிக்கிறார்கள். இதன் மூலம் ஒரு தொழிலாளிக்கு நாளொன்றுக்கு 20 முதல் 25 ரூபாய் வரை கிடைக்கிறது.

கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளில் விஸ்வநாதபுரம் தன்னுடைய பிரம்பு, மூங்கில் பொருள்களால் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

---

டும். எந்த விதத்திலும் இயற்கையைப் பாதிக்காமல், அதன் இன்பங்களை நாம் அனுபவிக்க வேண்டும். எதிர்கால சந்ததிகளுக்குத் தேவையான இயற்கை வளங்கள் தாமே மீண்டும் உருவாக இடமளிக்கவேண்டும். விஞ்ஞான வளர்ச்சி என்பதைப் பொருளாதார பின்னிலையிலிருந்து விடுபடும் ஒரு சாதனமாகவே இந்தியா கருதுகிறது. இந்தியாவின் அணுவிசைத் திட்டம், பொருளாதாரம் வளர்ச்சிக் கண்ணோட்டத்துடன் கூடிய அத்யாவசியத் தேவையே தவிர, இராணுவ நோக்கம் உடையது அல்ல.

இந்தியாவின் அணுவிசைத் திட்டமானது இந்திய விவசாயத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்திய மருத்துவத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தியாவின் விசைத் தேவைகளைச் சமாளிக்கும் நோக்கத்துடன் கூடியது. அணுவிசை ஆயுதங்களை நாங்கள் எதிர்க்கிறோம். எங்களிடம் எந்தவிதமான அணு ஆயுதமும் இல்லை.

நமது கிராமப்புற பிரச்சினைகள் விஞ்ஞானிகளையும், தொழில் நுட்ப நிபுணர்களின் கவனத்தையும் ஏன் கவருவதில்லை என்றே புரியவில்லை. தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்யாமல், வேலைப் பளுவைக் குறைக்கக்கூடிய உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய நவீன தொழில் நுட்பம் நமக்குத் தேவை. அத்தகைய தொழில் நுட்பம் உள்ளூரில் கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துவதாக இருக்கவேண்டும்.

பெட்ரோல் உற்பத்தியில் இந்தியா 1990 ஆம் ஆண்டு வாக்கில் தன்னிறைவை எட்டிவிடும். நம் நாட்டில் பெட்ரோல் உற்பத்தி கடந்த இரண்டு ஆண்டுகளில் 1 கோடியே 5 இலட்சம் டன்களிலிருந்து, 2 கோடியே 10 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

[உலக எரிசக்தி மாநாட்டின், 12-வது மாநாட்டைத் துவக்கி வைத்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை 19-9-83]



# நோய் நாடி நோய் முதல் நாடி...

சென்னை மாநகராட்சி கடந்த இரண்டு ஆண்டுகளாக மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவச பல்வகை நோய்க் கண்டுபிடிப்பு இயக்க முகாம்களை சென்னை மத்திய அரிமா சங்க ஒத்துழைப்புடனும், அரசு மருத்துவர்களின் உதவியுடனும் நடத்தி வருகிறது.

1981ஆம் ஆண்டு இம்முகாம் தொடங்கப்பட்டது. கடந்த 1981-82ஆம் ஆண்டு 31 முகாம்களும் 1982-83ல் 34 முகாம்களும் நடைபெற்றன. இவற்றின் மூலம் 1981-82ல் 42,000 மாணவ மாணவிகளும், 1982-83ல் 40,000 மாணவ், மாணவிகளும் பயன் அடைந்துள்ளனர். மேலும் வைட்டமின் மாத்திரைகளும், டானிக்குகளும் பலவீனமான பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டன.

1982-83ஆம் ஆண்டில், வட சென்னையிலுள்ள ஒரு தனியார் மருத்துவ மனையில் காது, மூக்கு, தொண்டை சம்பந்தமாக முகாம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் 150 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தொண்டையில் 'டான்சில்' அறுவைச்சிகிச்சைவெற்றிகரமாகச் செய்யப்பட்டது. மேலும் இருதயநோய் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் வி. பஞ்சமூர்த்தி சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 8 மாணவிகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. மேலும் காச நோய் அறுவைச் சிகிச்சை 4 மாணவர்களுக்கு வெற்றிகரமாகச் செய்யப்பட்டது. பள்ளிப் பிள்ளைகளிடையே 760 மாணவர்களுக்குத் தொழுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சென்னை பொது மருத்துவ மனையில் பணிபுரியும் இருதய நோய் அறுவைச் சிகிச்சை நிபுணர் டார்டர் வி. பஞ்சமூர்த்தி தலைமையில் மருத்துவர் குழு சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும், சிறந்த மருத்துவ சிகிச்சை பெற வசதியில்லாத ஏழை, எளிய மாணவர்களுக்காக மருத்துவ முகாம்களை நடத்தி வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஆண்டு இந்த இலவசச் சிகிச்சை முகாம் காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாளன்று காலையில், நேரு ஸ்டேடியத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

துவக்க விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும், வரவேற்ற சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு தி.ச.சிவப்பிரகாசம் இ.ஆ.ப. குறிப்பிட்டார் "இத்தகைய முகாம்கள் வெற்றிபெறுவதற்கு மாநகராட்சிப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் பெரும் பங்கு உள்ளது."

அடுத்து, மருத்துவக் குழுவின் தலைவர் டாக்டர் திரு.வ.பஞ்சமூர்த்தி-முந்திய முகாம்களில் பள்ளிப் பிள்ளைகளிடம் காணப்பட்ட பல்வகை நோய்கள் குறித்தும் அவற்றை நீக்குவதற்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்தும் சிலைடுகளின் வாயிலாக விளக்கிக் காட்டினார்.

முகாமை துவக்கி வைத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்



# மதுரை மாநகரில் குடிநீர் கிடைத்திட....

கே. பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்

பருவமழை தவறினாலும், கடும் வறட்சி ஏற்பட்டாலும் இயற்கையின் மீது பழிபோடாமல் மக்களின் அன்றாடத் தேவையைக் காலதாமதமின்றி தமிழக அரசு செய்து வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகக் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் கடும் வறட்சி ஏற்பட்டதால், மதுரை போன்ற நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்கள் குடிநீர் கிடைக்காமல் அவதிப்படக் கூடாது என்பதற்காகத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. அதன் விளைவுதான் மதுரை மாநகருக்கு மணலூர் குடிநீர்த் திட்டம்.

**மதுரைக்கு, மேலக்கால்-கோச்சடை ஆகிய நீர் நிலையங்களில் இருந்து நாள்தோறும் 100 இலட்சம் காலன் குடிநீர் 'விநியோகிக்கப்படுகிறது! மதுரை மக்களின் தேவைக்கு இது போதுமானதாக இல்லாததால் குடிநீர் விநியோகத்தைக் கூடுதலாக்க மதுரையின் கீழ்ப்பகுதியில் உள்ள மணலூரில் ராட்சதக் கிணறு தோண்டி குடிநீர் கொண்டு வரத் திட்டமிடப்பட்டது.**

இத்திட்டத்தின் தொடக்க விழா மதுரை மேங்காட்டுப் பொட்டலில் வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி மேயர் திரு. எம். பட்டுராசன் தலைமையில் 18-9-83ஆம் நாள் நடைபெற்றது.

இத்திட்டத்தைத் தொடங்கி வைத்து உரைநிகழ்த்திய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது—

''மதுரைநகர் குடிநீர் மேம்பாட்டுக்காக 19,500 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும் 500 குழாய்க் கிணறுகள் தோண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணத்தைப் பற்றிக் கவலைப்படாது திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்பாகச் செயல்படுங்கள் என்று தமிழக முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம்.

மணலூரில் இருந்து தினமும் 10 இலட்சம் காலன் குடிநீர் கொண்டுவரும் திட்டம் இன்று பூர்த்தியாகி இருக்கிறது. அடுத்து திருப்புவனத்தில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் அடுத்த மாதம் (அக்டோபர்) 16ஆம் தேதி பூர்த்தியாகி விழா நடைபெறவுள்ளது.

திருப்புவனம் திட்டத்தில் இருந்து தினமும் 6 முதல் 9 இலட்சம் காலன் குடிநீர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ரூ. 1 கோடி 20 இலட்சம் செலவில் 3 கிணறுகள் தோண்ட திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கிணறுகளிலிருந்து 10 இலட்சம் காலன் குடிநீர் கிடைக்கும். இது தவிர மேலக்காலுக்கும் கோச்சடைக்கும் இடையே ரூ. 120 இலட்சம் செலவில் 5 ஊடுருவல் கிணறு தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மதுரை நகரின் வடபகுதியில் 152 ஆழ்குழாய்க் கிணறுகளும் தென் பகுதியில் 101 ஆழ்குழாய்க் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன.

மதுரை நகரில் 71ஆம் ஆண்டில் 5.5 இலட்சம் மக்கள் இருந்தார்கள். ஆனால் தற்போது 12 ஆண்டுகளில் மக்கள் தொகை 8.5 இலட்சமாகப் பெருகியுள்ளது. இந்த வேகத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போனால் எவ்வளவு திட்டங்களை நிறைவேற்றினாலும் குடிநீர் பற்றாக்குறை [illegible] கொண்டேதான் இருக்கும். ஆகவே வேகத்தைக் குறைக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

மணலூர் திட்டத் தொடக்க விழாவில் மதுரை மாவட்டஆட்சித் தலைவர் திரு. கு. ஆறுமுகம்பிள்ளை இ. ஆ. ப., மதுரை மாநகராட்சியின் ஆணையர் திரு. மா. இராமு, இ. ஆ. ப. மாநகராட்சி உறுப்பினர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னாள் துணை மேயர் திரு. சோ. நவநீத கிருஷ்ணன் நன்றி கூறினார்.



# திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகள்

மதுரை மாவட்டம் இராஜாக்காப்பட்டி என்னும் ஊரில், திருமலை நாயக்கர் காலத்தைச் சார்ந்த செப்பேடு ஒன்று தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்துறை, திருமலை நாயக்கரால் வெளியிடப்பட்ட செப்பேடுகள் அனைத்தையும் ஒரு நூலாகத் தொகுத்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது. அது தொடர்பாகத் திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகளைத் திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. அந்தப் பணியின் போது, இத்துறையால் நடத்தப்பெற்ற கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியில் பங்கு பெற்று, பயிற்சி அடைந்த உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. பழனியப்பன் அவர்களும், இத்துறைக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் திரு. கோபால்சாமி அவர்களும் இச்செப்பேட்டினைக் கண்டுபிடித்துள்ளனர்.

இராஜாக்கப்பட்டியைச் சேர்ந்த திரு. வி. பொன்னையன் அவர்கள் தந்த தகவலின் பேரில், இவர்கள் இச் செப்பேட்டினைச் சென்றுபார்த்தனர். கி. பி. 1667 ஐச் சார்ந்த இச் செப்பேடு திரு. கொண்டக் கருப்பத் தேவர், திரு. வெள்ளையத் தேவர் ஆகியோரிடம் இருக்கிறது. இது சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் எலி பிடிப்பவர்கள் சிலரால் பூமிக் கடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

நீள் சதுர வடிவமான இச் செப்புப் பட்டையம் கைப்பிடியுடன் காணப்படுகிறது. திருவத் தேவன், பெயத்தேவன் ஆகியோரது குடும்பத்தாரால் கோவலன் கணவாய்க்கருகில் தண்ணீர்ப் பந்தல் ஒன்று நிறுவப்பட்டு அதனைப் பராமரிக்க திருமலை நாயக்க மன்னர் புன்செய் நிலத்தினைக் கொடையாக அளித்ததை இச்செப்பேடு குறிக்கிறது. தங்களால் ஏற்படுத்தப்பட்ட தண்ணீர்ப் பந்தலுக்கு அரச மானியம் வேண்டுமென்று. அவர்கள் அரசன் முன்பாகத் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்த மலர்களைப் பரிசாக அளித்து, விண்ணப்பம் செய்ததாகச் செப்பேடு விவரிப்பது மிக அழகாக உள்ளது.

கொடையளிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. அவை அனைத்தும் இன்றும் அதே பெயரில் அங்கு வழங்கப் பெறுவது அறிந்து மகிழத் தக்கது. கோவலன் கணவாய் என்று குறிக்கப் பெறும் வழி சிலப்பதிகாரக் கதையை நினைவூட்டுகிறது.

துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி.ஹண்டே அவர்கள் தெரிவித்தார்:

''கடந்த 5, 6 ஆண்டுகளாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு நாட்டில் பல நல்ல காரியங்கள் முனைப்புடன் செயலாற்றப்பட்டு வருகின்றன. அதிலும் மாணவ, மாணவியரின் நல்வாழ்விற்காக-குறிப்பாக மாநராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ,மாணவியரின் நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

மாநகராட்சி மாணவ, மாணவியரை பரிசோதித்து அவர்களுக்கு என்ன வியாதி ஏற்பட்டிருக்கிறது என்பதை முன் கூட்டியே அறிந்து, அதனை நிவர்த்தி செய்யச்சிகிச்சைமுகாம்கள் நடத்தப்படுகின்றன. மருத்துவக் குழுவினர், ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று, மாணவர்களைப் பரிசோதிக்கின்றனர். ஏறக்குறைய 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் இத்தகைய சிகிச்சையினால் பயன்பெற்றிருக்கிறார்கள். 22 இடங்களில் முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

எல்லோரின் ஒத்துழைப்பால் தான் இந்தப் பணிகள் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். இதில் 100க்கு 90 சதவீதம் ஆசிரிய, ஆசிரியைப் பெருமக்களின் தொண்டுதான்!

இத்தகைய சிகிச்சை முகாம்களில், அகில இந்தியாவிலேயே நாம் நடத்திய அளவுக்கு எந்த மாநிலமும் நடத்தவில்லை என்று கூறலாம். நான் பல மாநிலங்களில் நடைபெற்ற பரிசோதனை முகாம்களில் விசாரித்துப்பார்த்து இந்த உண்மையைக் கண்டேன்.

1980ல் திருச்சியில்தான் இந்த முகாம், முதன் முதலில் துவக்கப்பட்டது. 5 இலட்சம் குழந்தைகள் அந்த ஆண்டில் பரிசோதனை செய்யப்பட்டனர். பின்னர் பிற மாவட்டங்களிலும் பரிசோதனை செய்ய ஆசைப்பட்டதன் விளைவாக 25 இலட்சம் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டனர். 1982ல் 46 லட்சத்துக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் பரிசோதனை செய்யப்பட்டனர். மாணவ, மாணவியருக்கு மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

''கல்வித்துறையும்நல்வாழ்வுத் துறையும் இணைந்து இந்தப் பணியைச் செய்து வருகின்றன. நமது முதல்வர் அவர்கள் ஒரு துறை ஆற்றும்பணிகுறித்து மற்ற துறைகளும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கொண்டிருக்கிறார். இந்த உண்மையை நாம் உணர்ந்து பாடுபட்டால் மாபெரும் சாதனைகளை எளிதில் நிறைவேற்றமுடியும் என நம்புகிறேன்''

அடுத்து, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன், தமது உரையில் தெரிவித்ததாவது:

''கற்பனை வளமும் செயல் திறனும் ஒருங்கிணைந்த திட்டம் இது. ஆசிரியர்கள் குழந்தைகளின் பெற்றோர்களைப் போல் பொறுப்புடன் பணியாற்றி வருகிறார்கள். இன்னும் 10 ஆண்டுகளில் பள்ளி மாணவ, மாணவியரின் நோயை அறவே அகற்றிவிடலாம் என்பது மட்டுமல்ல; மற்ற மாநிலத்துக் குழந்தைகள் போல நமது குழந்தைகளையும் வலுவுள்ளவர்களாகக் கொண்டு வரமுடியும்.''

# புதுக்கோட்டை மாவட்டத்தில்

**கு**டும்ப நல அறுவைச் சிகிச்சையில் புதுக்கோட்டை மாவட்டம் தமிழகத்திலேயே ஓர் ஆண்டிற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டத்தை முன்னதாக நிறைவேற்றி முதலிடம் பெற்றுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் 12,500 பட்டாக்கள் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கியுள்ளது.

650 நபர்களுக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டாக்களும் 350 நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பட்டாக்களும், 30 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், 350 நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 15,000/- மானியத்துடன் ரூ. 45,000 கடனாகவும் மற்றும் முதியோர் உதவித் தொகை, முன்னாள் இராணுவ வீரர்களின் குடும்பத்தினர்களுக்கான உதவிகள் ஆகியவற்றையும் 2.10.83 அன்று நச்சாந்துபட்டியில் நடைபெற்ற அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. வழங்கினார்.

மருத்துவத்துறைச் செயலர் திரு ஆர்.சண்முகம் இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''குழந்தைகள்தான் நாட்டின் சொத்து. பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள நாடுகளில் கூட, குழந்தைகளின் நல்வாழ்வுக்குப் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. உலக சுகாதார நிறுவனங்களும் திட்டங்களை நிறைவேற்றிவருகின்றன. பிறக்கும் 1000 குழந்தைகளில் 81 குழந்தைகள் ஒரு வயதைத் தாண்டுவதற்குள் இறந்து விடுகின்றன. இந்தக் குறையை நாம் நிச்சயம் மாற்ற முடியும். குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்''

தலைமை ஏற்றிருந்த தமிழக அரசு தலைமைச் செயலர் திரு .சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்:

''நாட்டிலே மிக முக்கியமானவை உணவு, உடை, தங்குமிடம் ஆகியவை. இவற்றிற்கு அடுத்தபடியாக நல்வாழ்வு இடம் பெறுகிறது. நோய் இன்றி வாழ்வதற்கு என்னென்ன வழிவகைகள் உள்ளனவோ, அவற்றைச் செய்வது மிக அவசியம். அந்த வகையில் நமது நாட்டில் பல்வகையான பணிகள் நடைபெற்று வருகின்றன.

''இதுமாதிரி இயக்கங்கள் மக்களின் மத்தியில் ஆதரவைப் பெற வேண்டும். அப்போதுதான் நாம் செய்துவரும் மற்ற வேலைகள் சிறப்படையும்.

''பொதுவாக நகரங்களில் எல்லா வசதிகளும் உண்டு. ஆனால் கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகள் கிடையாது. கிராமப்புறங்களில் கூட இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தினால் அது சிறந்த சமூக நலப்பணியாகத் திகழும்.

''நகரத்தில் இருப்பவர்களில் பலர், வசதிக் குறைவின் காரணமாக, அல்ல-கவனக்குறைவின் காரணமாக - நோய்கள் குறித்து அசட்டையாக இருந்துவிடுகிறார்கள். குழந்தைக்குப் பல் வலிக்கிறது என்றால் ஒத்தடம் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி விடுகிறார்கள் பெற்றோர்கள். அது, பின்னர் - பெரும் விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. இது போன்ற குறைகள் ஏற்படாது தடுப்பதற்கு இத்தகைய முகாம்கள் பயன்படுகின்றன.

''மேலை நாட்டில் இதுபோன்ற முகாம்கள் சாதாரணமாக நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தையின் உடல்நலம் குறித்தும் விவரமான தகவல்கள்-பிறந்ததிலிருந்து என்னென்ன நோய் வந்தன -எவ்வகைச் சிகிச்சைகள் தரப்பட்டன என்ற விவரங்கள் ஆகியவை உடல் நல அட்டையில் பதியப்பட்டு ஒரு பிரதி மருத்துவமனையில் வைக்கப்பட்டு, மற்றொரு பிரதி பெற்றோர்களிடம் வழங்கப்படுகிறது. இதுபோன்ற முன்னேற்றமான நிலை நமது தமிழ்நாட்டிலும் வரவேண்டும் என்பதுதான் இந்த அரசின்நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற நாம் அனைவரும் பாடுபடவேண்டும். நோக்கம் ஒருநாள் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை''

மாநகராட்சி கல்வி அலுவலர் திரு. ஓ.சு.கனகசபை, நன்றி கூறுகையில்,


''மருத்துவர்கள் எத்தகைய சிகிச்சைக்கு ஆளாக்கினாலும் அதற்காக வருந்தாமல்- மருத்துவரை நாடிச் செல்வது நோயாளியின் குணம். இதைத்தான் குலசேகர ஆழ்வார்,

'வாளால் அறுத்துச் சுடினும்
மருத்துவன்பால்
மாளாத காதல்நோயாளன்
போல்...

என்று குறிப்பிட்டுள்ளார்.

''இந்த முகாமின் வெற்றிக்குப் பாடுபடும் மருத்துவர்கள் அனைவருக்கும் நன்றிதெரிவிப்பது நமது கடன். 6000 ஆசிரியர்களின் சார்பாகவும்-2 லட்சத்து 10 ஆயிரம் மாணவ, மாணவியரின் சார்பாகவும் நன்றி கூறிக்கொள்கிறேன்.''

நிகழ்ச்சித் தொகுப்பு:
**தமிழ்ப்பித்தன்**



## தூத்துக்குடியில் சிறுதொழில் சேவை மையம்

**சி**று தொழில் பிரிவுகளைத் துவக்கத் தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனை வழங்குவதற்காக, நாட்டில பின்தங்கிய பகுதிகளில் 12 சிறு தொழில் சேவை மையக் கிளைகளைத் துவக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் தூத்துக்குடியிலும், அசாமில் திபு மற்றும் தேஜ்பூரிலும், மேகாலயத்தில் டுராவிலும், ஆந்திரப்பிரதேசத்தில் விசாகப்பட்டினத்திலும், மத்தியப்பிரதேசத்தில் போபாலிலும், நாகா — அவேலியில் சில்வாசாவிலும், ஒரிசாவில் கோரபுட்டிலும், அந்தமான்-நிகோபாரில் போர்ட்பிளேயரிலும், மேற்கு வங்கத்தில் பிரூலியிலும் இந்த மையங்கள் துவக்கப்படும்.

நிலையத்தாரின் அரிய ஓலைச் சுவடிகளும் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. மொத்தத்தில் இந்தக் கண்காட்சி, மூர்த்தி சிறியது என்றாலும், கீர்த்தி பெரியது என்பதை எடுத்துக் காட்டியது.

**விவேகானந்தா கல்லூரியில்...**

பள்ளி, கல்லூரி மாண வர்கள் இணைந்து நடத்திய கண் காட்சியை, சென்னை விவே கானந்தா கல்லூரியில் காண முடிந்தது.

ஒலி எப்படி நம்மைப் பாதிக் கிறது என்பதை 'ஸ்லைடுகள்' மூலம் போட்டுக் காட்டி, அதைத் தவிர்க்கும் வழிவகையையும் கூறு கிறார் ஒரு மாணவர்.

அதோ! அந்த அரங்கில் நம்மைக் கவர்வது எது? இரவு வந்தால் மின் விளக்குகள் தானே எரிகின்றன. பகல் வந்ததும் அந்த விளக்குகள் தானே அணைந்து விடுகின்றன!

இங்கேயும் இன்சாட்-1பி மாதிரி வடிவம் வைக்கப்பட்டி ருந்தது.

சாதாரண தண்ணீரில் விளைந்த கருவேப்பிலைச் செடியையும், இளநீரில் வளர்ந்த கருவேப் பிலைச் செடியையும் பார்க் கிறோம். இளநீரில் வளர்ந்த செடி தளதளவென்றிருக்கிறது!

விலங்கியல் துறைப் பகுதியில் பல்வேறு பாம்புகள் (உயிருள் ளவைதான்) கண்ணாடிப் பெட் டிக்குள் வைக்கப்பட்டிருக்கின் றன. தாவரவியல் பகுதியில் நாம் பார்க்காத தாவரங்களைப் பார்க்கிறோம்.

இவை மட்டுமா? மாணவரால் உருவாக்கப்பட்ட கைக்கடியாரம் மற்றும் எலக்ட்ரானிக் கடியாரம் ஆகியவை நம்மை வெகுவாகக் கவருகின்றன.

சூரிய அடுப்பு, சைக்கிள் ஃபெடலினால் சுழலச் செய்து பானை செய்தல் போன்றவை யும் காண்போர் கருத்தைக் கவர்ந்தன.

**மருத்துவக் கல்லூரியில்...**

இருதய அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது.!

எல்லார் கண்களும் அங்கேயே குத்திட்டு நிற்கின்றன!

எதையும் தாங்கும் இதயம் என்பார்களே, பாவம்! அந்த இதயம் எல்லாவற்றையும் தாங் கிக் கொள்கிறது - அப்போது தானே அது பிழைத்துக் கொள் ளும்!

—எல்லாவற்றையும் வீடியோ வில் பார்த்து மருத்துவத்தின் விந்தையை எண்ணி வியக்கி றோம்.

சென்னை மருத்துவக் கல் லூரியில் நடந்த மருத்துவம் மற்றும் கால்நடைக் கண்காட்சி மற்ற எல்லா அறிவியல் கண் காட்சிகளுக்கும் மகுடமாக விளங்கியது என்றால் அது மிகை யல்ல.

மருத்துவத்தின் பல அம் சங்களை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சி மருத்துவ வளர்ச்சி பற்றி மக்களிடையே விழிப் புணர்ச்சி ஏற்படுத்தவும், சுகா தாரத்தைப் பற்றி அறிவுறுத்த வும் முயலுகிறது. இரத்த ஓட்டம், நரம்பு இயக்கம் போன்ற உடலியக்கங்களையும், உடல் கூற்றினையும் தெளிவாக விளக்கு கிறது. பல்வேறு நோய்களை ஏற்படுத்தும் பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிர்களின் உரு வத்தை வடிவமைப்பாகவும், நுண்நோக்கியின் உதவியுடனும் தெளிவுபடுத்துகிறது.

பல்வேறு நோய்களால் பாதிக் கப்பட்ட உடல் உறுப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இறந்த மனித உடலிலிருந்து இந்த உறுப்புகள் காட்டப்படு கின்றன.

அதோ! அந்த அறையிலிருந்து இன்னிசை காற்றில் மிதந்து வருகிறதே!

போய்ப் பார்க்கிறோம். ஒரே இருட்டு..பயங்கர இசையுடன் எலும்புக் கூடு ஒன்று நடனம் ஆடிக் கொண்டிருந்தது! தைரிய மாக உற்றுப் பார்க்கிறோம். மூன்று எலும்புக் கூடுகள் பின் னால் இருக்கின்றன. ஒன்று பிடில் வாசிக்கிறது. நடுவில் ஒன்று உட்கார்ந்து கொண்டு 'ட்ரம்'! வாசிக்கிறது. பக்கத்தில் ஒன்று கித்தார் வாசிக்கிறது. அந்த நேரத்தில் பார்க்கின்றபோது எப்படிப்பட்டவர்களுக்கும் சற்று பயம் ஏற்படுவது உண்மைதான்!

சிறு நீரக இயல்துறையில், செயற்கைச் சிறுநீரகக் கருவி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதன் பயன்களை ஒருவர் விளக்கிக் கூறினார். பால்வினை நோய்ப் பிரிவிலும் பயனுள்ள பல செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம். இதே போல, தோல் நோய், புற்று நோய், வயிற்றுப்புண் இவை பற்றி யெல்லாம் விளக்கமாகத் தெரிந்து கொள்கிறோம். கண்கள் பற்றியும், முடநீக்கு இயல்—எலும்பு முறிவு பற்றியும், எவ் வளவோ தகவல்களை அறிந்து கொள்கிறோம்.


மயக்க மருந்து தருவது எப்படி? இதைத் தெரிந்து கொண்டு யாரும் மயக்கமடைய வில்லை!

இங்கே ஒரு குட்டி அறுவைச் சிகிச்சை அரங்கமும் உள்ளது.

அதோ! அங்கே உள்ள கண் ணாடிப் பீரோவுக்குள் வரிசை யாக வைக்கப்பட்டிருப்பது என்ன? புத்தகங்களா? பொம்மை களா? இல்லை. இல்லை. மனித மண்டை ஓடுகள்!

இந்தக் கண்காட்சியில், கால் நடைத் துறையின் பல்வேறு பணிகளையும் பார்க்க முடிந்தது.

மொத்தத்தில், அரும்பாடு பட்டு உருவாக்கியுள்ள இந்தக் கண்காட்சிக்கு எவ்வளவு கொடுத் தாலும் தகும்!





## சிக்கனம்

சின்னஞ் சிறிய வயதிலே
சேர்த்து வைக்கப் பழகுவோம்
பின்னால் நன்மை சேர்த்திடும்
பெருமை வழியில் ஒழுகுவோம்!
அப்பா கொடுக்கும் காசிலே
ஐந்தோ பத்தோ சேர்த்திடு
எப்போ துன்பம் நேருதோ
எடுத்துத் துயரைப் போக்கிடு!
வரவுக் கேற்ற செலவினை
வகுத்து நாமும் செய்யணும்
உறவும் ஊரும் நம்மையே
உயர்த்தி நாளும் பேசணும்!
செலவு தன்னைக் குறைத்திட
சிந்தை உறுதி பூணுவோம்
வளமை வாழ்வில் அமையவே
வசதி கோடி காணுவோம்!

—கே. எஸ். நாகராஜன்




குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் என்று ராஜவட்டக் குடைகள் பற்றிக் கூறப்படுகிறது. கோடை-மழை எப்பருவத்திலும் பாதுகாப்பளிக்கும் குடை மனித னுக்குத் தோழன்.

**இதன் பூர்வீகக்கதை தெரியுமா?**

ஆதி காலத்தில் மனிதன் நிழல் தேடி மரத்தை வேரோடு பிடுங் கித் தலைக்குமேல் பிடித்திருந் தான். கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்த கண்ணன் திருவிளையாடல் தெரிந்ததே. இப்படிக் கற்பனைக் கதைகள் பல.

பாரசீகத்தில் தான் முதன் முத லில் குடை கண்டுபிடிக்கப்பட்ட தாம். அரபுநாடுகள் சித்திரங் களில், குடை பிரதான மாக இருப்பதைக் காணலாம். கிரேக்க நாட்டில் கோட்டைகள் மீது குடைச்சித்திரம் தீட்டிக் காணப்பட்டது.

டெல்லி சுல்தான் குதிரைமீது அமர்ந்திருக்க அவர் தலைக்கு மேல் ஆலவட்டக் குடை இருந்த தாக 1335-ல் ஒரு யாத்ரீகர் எழுதியுள்ளார்.

இங்கிலாந்தில் முதன்முதலாகக் குடையைப் புகுத்தியவர் ஜோன்ஸ் ஹான்வே என்பவர். 1750-ல் இதை அவர் கொண்டு வந்தார்.

''சேம்பர்லின்''குடை சரித்திர பிரசித்தம் பெற்றது. அவரது தேசத்துரோகத்தைப்போல.

இத்தாலியில் தான் முதன் முதல் குடைகள் கண்டுபிடிக்கப் பட்டதாகவும் கூறுகிறார்கள்.

ச. புஷ்பலதா
இளங்கலை-தாவரயியல்
முதலாமாண்டு,
அ.வீ.வா நினைவு ஸ்ரீ புஷ்பம்
கல்லூரி, பூண்டி

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

**மனிதனுக்குப் பொருத்த பீங்கான் எலும்பு**

உடலில் உள்ள உறுப்புகள் சேதம் அடைந்தால் அதற்குப் பதிலாகப் பொருத்த செயற்கை உறுப்புகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. உண்மையான உறுப்புகள் ஏற்றுக்கொள்ளும் பொருட் களால் இவைகள் தயாரிக்கப்படுகின்றன. இப்போது முதன்முறையாக பீங்காணிலும் கண்ணாடியிலும் எலும்பு தயாரிக்கப்பட்டு உள்ளது.

எலும்பின் உடைந்த பகுதியில் இதைப் பொருத்தி விட்டால் முறிந்த எலும்பு வளரும் வரை இது பாதுகாப்பாக இருக் கும். இந்தப் புதிய செயற்கை எலும்பை வாயில் உடைந்த எலும்புக்குப் பொருத்தி சோதனை செய்து பார்க்கப்பட்டது. இதில் போதிய வெற்றி கிடைத்தது.

## கலை அரங்கம் கட்ட முதல்வர் நன்கொடை

சென்னைப் பல்கலைக்கழக 125-வது ஆண்டு விழாவை யொட்டிப் பல்கலைக்கழகமும், மருத்துவக் கல்லூரியும் இணைந்து நடத்திய கண்காட் சியை, மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 2.10.83 அன்று பார்வையிட் டார். சுமார் இரண்டரை மணி நேரம் இருந்து கண்காட்சியின் பல்வேறு பிரிவுகளை அவர் பார்த்தார்.

முதல்வர் அவர்களுடன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும் கண்காட்சிக்கு வந்தார். இவர் களைக் கல்லூரி 'டீன்' டாக்டர் ஆறுமுகம், டாக்டர் செந்தில் நாதன், டாக்டர்சதாசிவம், மருத் துவக்கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் ஆகியோர் வரவேற்றுக் கண்காட்சியைச் சுற்றிக் காட்டினர்.

சென்னை மருத்துவக் கல்லூரியில், கலை அரங்கு ஒன்று கட்ட திட்டமிட்டிருப் பதாகவும், இதற்கு 70 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்றும் டாக்டர் ஆறுமுகம் மூலம் தெரிந்து கொண்ட முதல்வர் அவர்கள், தமது சொந்தப் பொறுப்பில் இதற்காக ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார்.

# சென்னைப் பல்கலைக் கழகத்தில்

## சைவ-சித்தாந்த-வைணவ நெறித்துறைகள்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வைணவத்துறை, சைவசித்தாந்தத்துறைகளின் அறக் கட்டளைகளுக்கு நிதி வழ்ங்கும் விழா சென்னை மயிலாப்பூர் ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 17.9.83 அன்று இனிதே நடைபெற்றது.

சென்னைப் பல்கலைக் க்ழகத்தில் சைவ-சித்தாந்த வ்வைணவ நெறித்துறைகளை அமைப்பதற்காகத் திரட்டப்பட்ட அறக் கட்டளை நிதியாக ரூ. 28,00,108யை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியும், சைவ சித்தாந்த, வைணவநெறித்துறை ஆராய்ச்சிக் கழகங்களின் தலைவருமான மாண்புமிகு நீதிபதி திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்களிடம் அளித்தார்.

துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்கள் பேசுகையில், ''சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரைவில் ஜைன, இஸ்லாமிய மதப் பிரிவுகள் தொடங்கப்படும்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் பங்கேற்ற மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள்பேசுகையில்குறிப்பிட்டார்:

''பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய மதப் பிரிவு தொடங்க ரூ. 20 இலட்சமும், சமண (ஜைன) மதப் பிரிவு தொடங்க ரூ 15 இலட்சமும் கொடுத்து விட்டார்கள். சைவ சித்தாந்த வைணவப் பிரிவு தொடங்க தலா ரூ. 20 இலட்சம் வேண்டும். ஆனால் தலா ரூ. 15 இலட்சம்தான்கொடுத்திருக்கிறார்கள். இதற்கு யார், யார் நன்கொடை தருவதாகச் சொல்லியிருக்கிறார்களோ அவர்களிடம் வாங்குங்கள். மீதியை அறநிலையத்துறை தந்துவிடும்.

''நம்நாட்டுக் கருத்துக்கள் தான் மேல் நாட்டுக்குப் போய், அங்கிருந்து அறிவியல் கருத்துக்களாக நம்நாட்டுக்கு வந்துள்ளன. நாட்டு மக்களை இணைத்துச் செல்ல, ஒழுங்குபடுத்த, வழிநடத்த மொழியும், சமயமும் இணைந்து செல்ல வேண்டும் என்பதுதான் நம் முன்னோர்கள் நமக்குக் காட்டிய வழி.

''அறிவியல் அடிப்படையில் சமயம் உள்ளதே தவிர, மூட நம்பிக்கையின் அடிப்படையில் சமயம் உருவானது அல்ல, தமிழையும் சமயத்தையும் பிரிக்க முடியாது. இரண்டும் மனித சமுதாயத்தின் இரு கண்கள்.

''பஞ்சபூதத்தைக் கண்டுபிடித்து அதற்கு கோவிலும் வைத்திருக்கிறார்கள். ஆனால் 6வது ஒரு பொருள் உண்டு. அதைக் கண்டு பிடிக்கத்தான் பல்கலைக்கழகத்தில் மதப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

''இந்தப் பிரிவுக்கான அடிப்படையை வகுத்துக் கொடுத்த கோகுலகிருஷ்ணன், மற்றும் நீதிபதிகளைப் பாராட்டுகிறேன்.''

சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அவர்கள் பேசுகையில், விஞ்ஞானம் இல்லாமல் சமயம் இல்லை. சமயம் இல்லாமல் விஞ்ஞானம் இல்லை என்பது ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகள் கண்ட உண்மை என்றும், அத்தகைய சிறப்பு மிகுந்த சமயத்துறை ஆராய்ச்சிக்குத்துறைகள் அமைப்பது பாராட்டத்தக்க முயற்சி என்றும் குறிப்பிட்டார்.

மாங்காடு காமாட்சியம்மன் கோவில் சார்பில் பரம்பரை தர்மகர்த்தா திரு மணலி ராமகிருஷ்ண முதலியார் சைவ சித்தாந்த ஆராய்ச்சித்துறை அமைப்பதற்காக ரூ. 6 இலட்சம் வழங்கினார். திரு எம்.ஏ.முத்தையா செட்டியார் ரூ. 5 இலட்சம் வழங்கியிருப்பதாகவும் மற்றும் திரு ஹரிகோபால் அகர்வால், ஏவி.எம். நிறுவனம், எம்.ஏ.சி.அறக்கட்டளை சார்பிலும் இதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது. தருமபுரம் ஆதீனத்தின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.


வைணவ நெறித்துறை அமைப்புக்கு திரு பி.வி.வி.எஸ்.மணி ரூ. 2 இலட்சமும், திரு ஜி.கே. சுந்தரம் ரூ. 1 இலட்சமும் வழங்கியிருப்பதாகவும் மற்றும் திரு ஹரிதாஸ் புருஷோத்தம் தாஸ், வி.எம். பெருமானார் செட்டி, திரு ஜி.கே. ஷெட்டி, திரு இராம. சுப்பிரமணிய ராஜா ஆகியோரும் டி.வி.எஸ். நிறுவனமும் நிதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சைவ சித்தாந்த, வைணவ ஆராய்ச்சித் துறை அமைப்புச்செயலாளர் திரு கருப்பையா ஆரம்பத்தில் வரவேற்றார். வைணவ நெறித் துறையின் செயலாளர் திரு என்.சி. ராகவாச்சாரி நன்றி கூறினார்.

---

மாணவர் பக்கம்

# விந்தை மிகு விஞ்ஞானக் கண்காட்சிகள்



பள்ளி மாணவன் கண்டுபிடித்த கடியாரம்!

இளநீரால் நன்றாக வளரும் கருவேப்பிலைச் செடி!

இசையுடன் அசைந்தாடும் எலும்புக் கூடுகள்!

இவை எல்லாம் எங்கே பார்க்கலாம்?

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு விழா வினையொட்டி, சென்னை மாநிலக் கல்லூரி - சென்னை விவேகானந்தா கல்லூரி-சென்னை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் நடந்த அறிவியல் கண்காட்சிகளில் இதுபோன்ற எத்தனையோ அற்புதங்களையெல்லாம் காண முடிந்தது.

### மாநிலக் கல்லூரியில்...

முதன் முதலில் சென்னைப் பல்கலைக் கழகமாகக் கருதப் பட்டது எது தெரியுமா?

இப்போதுள்ள சென்னை மாநிலக் கல்லூரிதான்! இதற்கு அப்போதிருந்த பெயரே அதாவது 1840-ல் The School of Madras University என்பதாகும். இப்போதுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்துக்குத் தாயாக விளங்கும் மாநிலக் கல்லூரியில், மாணவமணிகள் - ஆசிரியர்கள் ஒத்துழைப்புடன் உருவான அறிவியல் கண்காட்சி அனைவரையும் கவரத்தக்க வகையிலே அமைந்திருந்தது.

இந்தக் கண்காட்சி, 1. அறிவியல் 2. தொழில்நுட்பம் 3. புத்தகங்கள் என மூன்று பிரிவுகளாக அமைக்கப்பட்டிருந்தது.


**பி. வி. கிரி**

அறிவியல் பிரிவில், 'கல்லும் கவிபாடும்' பகுதியில் பலவிதமான கற்களைக் கண்டு வியக்கிறோம். விண்வெளி அறிவியல் பகுதி, மாணவர்களின் திறமைக்குச் சரியான சான்று. 'இன்சாட் 1பி'ஐ வடிவமைத்துக் காட்டியிருக்கிறார்கள். புவியியல் துறை மாணவர்கள், சூரிய மண்டலத்தையே தரைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்! விலங்கியல் துறை மாணவர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு குட்டி அருங்காட்சியகத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். பல விதமான பாம்புகள், எறும்புத் தின்னி, ஆமை, முதலை எல்லாம் 'பாடம்' பண்ணி வைக்கப்பட்டிருக்கின்றன. மனிதக் குரங்கு, ஆமை, புலி, சிறுத்தை இவற்றின் எலும்புக் கூடுகள் கண்ணாடிப்பெட்டிக்குள்! இவையல்லாமல் நெருப்புக்கோழி, யானைக்கால், திமிங்கலத்தின் முள்ளெலும்பு ஆகியவற்றையும் பார்க்கிறோம்.

சுற்றுப்புறச் சூழல் கெடுவதைக் காட்டும் மாதிரி வடிவமும், தண்ணீரில் நுண்கிருமிகள் இருப்பதைக் கண்டறியும் காட்சியும் நம்மைக் கவர்கின்றன.

தொழில் நுட்பப்பிரிவில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொண்டுள்ளன. தொழில் துறை, மீன்துறை, தமிழ்நாடு கனிமப் பொருள், பீங்கான் தொழில் நிறுவனம் போன்றவை தத்தம் தொழில் முன்னேற்றங்களைத் தெள்ளத் தெளிவாய்க் காட்டுகின்றன. இவையன்றி தொலைக்காட்சிப் பெட்டிகள், டேப் ரிகார்டர்கள், தமிழ்க் கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் பொருள்கள், போக்குவரவுச் சாதனங்களுக்கு உதவும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள் போன்றவை காட்சியில் நம்மைக் கவர்கின்றன.

புத்தகப் பிரிவில், பல்வேறு பதிப்பகத்தாரின் பயனுள்ள நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. தள்ளுபடி விலையில் விற்பனையும் நடக்கின்றது. சித்தமருத்துவ நூல் ஆராய்ச்சி



வனவிலங்கு வார விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்க்கு, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 7.10.83 அன்று, ராஜபாளையத்தில் பரிசு வழங்குதல்.

கூடாது; குறைந்து வருவதைப் பெருக்க வேண்டும்' என்பதற்காகவே இந்த விழா நடத்தப்படுகிறது.

துவக்க விழாவின் நிறைவு உரை நிகழ்த்தினார் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''மரங்களைப் பாதுகாத்தால்தான் வனங்கள் பாதுகாக்கப்படும்; மரங்களும் வனங்களும் பாதுகாக்கப்பட்டால்தான் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் பாதுகாக்கப்படும்; சுற்றுப்புறச்சூழ்நிலை பாதுகாக்கப்பட்டால்தான், மனிதனின் நல்வாழ்வு பாதுகாக்கப்படும். அந்த வகையில் தான் இந்த வனவிலங்கு வார விழா கொண்டாடப்படுகிறது.

**''எறும்பு சேமிக்கிறது; எலி சுரண்டுகிறது; எறும்பைப் பார்த்து நாம் சேமிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். எலியைப் பார்த்து நாம் சுரண்டுவதை விட்டுவிட வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா. ஆகவே, எல்லா உயிர்களும் நமக்கு ஒவ்வோர் வகையில் எடுத்துக்காட்டாக அமைவதை உணரவேண்டும். மிருகங்களிடம் நாம் அன்பு காட்டினால், அவை நம்மிடம் அன்பு காட்டும். இதை உணராமல், அவை கொடியவை என நாம் முடிவு கட்டுவது தவறு.**

''குரங்கு இனத்தில், அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட சிங்கவால் குரங்குகளைப் போல் நீலகிரி மலைக்காடுகளில் ஒரு புது வகைக் குரங்கினம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. கொன்றாலொழிய அதை லேசில் பிடிக்க முடியாது. அவ்வளவு வேகம். சுட்டாவது அதைக் கொடுங்கள், ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்று டில்லியிலிருந்து கேட்டார்கள். அந்த நூதன இனக் குரங்கை அப்படிக் கொன்று தரமுடியாது என்று தெரிவித்துவிட்டோம்.

**''ஆனைமலைப் பகுதி வனவளம் வேறெங்கும் காணமுடியாத சிறப்புடையதாகும். அங்கு 27 வகை விலங்குகள் இருக்கின்றன. 38 வகைப் பறவைகள் உள்ளன. பலவகைக் காடுகளே அங்கு இருக்கின்றன. 900 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்த வனப் பகுதியைத் தேசியப் பூங்காவாக மாற்றி வனவிலங்குகள்-பறவைகள் சரணாலயம் அமைக்கத் தமிழக அரசு முயன்று வருகிறது. அப்படி அந்தப் பகுதியைத் தேசிய வனப்பகுதி ஆக்கி விட்டால், அங்கே யாரும் நுழையமுடியாது, இதனால் மாநில அரசுக்கு ஏற்படும் இழப்புக்கு மத்திய அரசு நிருவாகம் தேவையான நிதி உதவியைச் செய்ய வேண்டும்.**

**''நீலகிரியில் எந்த ஒரு மரத்தையும் பத்தாண்டுக்காலத்திற்கு வெட்டக்கூடாது என்று மத்திய அரசு நிருவாகம் சொல்கிறது. அப்படிச் செய்தால் அங்கே மரத்தையே மூலதனமான வைத்து நடத்தப்படும் தொழிற்சாலைகள் பாதிக்கப்படும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள். அதோடு மாநில அரசுக்கும் பேரிழப்பு ஏற்படும். இதற்கெல்லாம் அவர்கள் உதவ வேண்டும்.**

''கடந்த ஆறாண்டுக் காலமாக வனங்களைப் பாதுகாப்பதில் அரசு பெரிதும் கவனம் செலுத்தி வருகிறது. விறகுக்குக்கூட மரங்களை வெட்டக் கூடாது என்று கூறியிருக்கிறோம்.

''கடல் ஆமை வளர்ப்புத் திட்டத்தையும் நாம் தான் வெற்றிகரமாகச்செயல்படுத்தி வருகிறோம். 94 ஆயிரம் கடல் ஆமைகளை வளர்த்து அதன் மூலம் கிடைத்த 77 ஆயிரம் முட்டைகளால் உருவான குஞ்சுகளைக் கடலில் விட்டிருக்கிறோம். அவைகளை மனிதர்களிடத்திலிருந்து பாதுகாப்பதே பெரும்பாடாக இருக்கிறது.

''இன்றைய நமது முதல்வர் அவர்களைப் போல-அரசைப்போல வன விலங்குகளைக் காக்கிற, வனங்களைப் பாதுகாக்கிற முதல்வரை-அரசை இந்த மாநிலம் மட்டுமல்ல; வேறு எந்த மாநிலமும் இதற்கு முன் கண்டிருக்க முடியாது.

பின்னர் வனவிலங்குகள் குறித்த புகைப் படப் போட்டியிலே வெற்றி பெற்றவர்களுக்கும், ஓவியப் போட்டியிலே வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும், பணிக்காலத்தில் தீரச் செயல் புரிந்த வனத்துறை அலுவலர்-பணியாளர்களுக்கும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் பரிசுகளும் நற்சான்றுகளும் வழங்கப்பட்டன.

திரு ஜான்ஜோசப் இ.வ.ப.நன்றி கூறினார்.

வனவிலங்கு வார விழாத் துவக்க நாள் நிகழ்ச்சிகளின் முடிவாக 'வெண்ணிற ஆடை' நிர்மலா குழுவினரின் வாசவதத்தை நடன நாடகம் நடைபெற்றது.

**செய்தியாளர் சுற்றுலா**

**வனவிலங்கு வார விழாவையொட்டி, பத்திரிகையாளர் சுற்றுப் பயணம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்திருந்தது.**

**அரசின் வனப் பராமரிப்பு, வன விலங்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை நேரிலேயே சென்று காணும் குறிக்கோளின் அடிப்படையில் அமைந்த இந்தச் சுற்றுலாவில் பல்வேறு பத்திரிகைகளையும் வானொலி, தொலைக்காட்சி நிலயத்தையும் சேர்ந்த 15 செய்தியாளர்கள்-புகைப்பட நிபுணர்கள் பங்கேற்றார்கள்.**

**நெல்லை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில உள்ள வனப் பகுதிகளை அந்த நான்கு நாள் சுற்றுப் பயணத்தின் போது அவர்கள் நல்லவிதமாகக் கண்டு களித்தனர்.**

*4.10.'83 அன்று நெல்லைத்துரித வண்டி மூலம் சுற்றுப்பயணம் தொடங்கிய பத்திரிகையாளர்கள் மறுநாள் திருநெல்வேலியிலிருந்து திருவள்ளுவர் சொகுசுப் பேருந்து மூலம் தங்கள் பயணத்தைத் தொடர அரசு உதவியிருந்தது. செய்தித்துறையின் கூடுதல் மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.நீலகண்டபிள்ளை தலைமையில் பயணம் கிளம்பிய பத்திரிகையாளர்களை வனத்துறை அலுவலர் திரு.ஏ. சச்சிதானந்தம் வழி நடத்தினார்.*

*திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில் வழியில் உள்ள கீரிப்பாறை ரப்பர் தோட்டம், கன்னியாகுமரி, களக்காடு, முண்டந்துறை, குற்றாலம் ஆகிய ஊர்களுக்குச் சென்று ரப்பர் தோட்டம், வனவிலங்குச்சரணாலயங்கள், இயற்கையெழில் கொஞ்சும் இடங்கள் ஆகியவற்றை அவர்கள் கண்டு களித்தனர். 7.10'83 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்து சேர்ந்த செய்தியாளர்கள், அன்று மாலை ராஜபாளையத்தில் பி.ஏ. சின்னைய ராஜா நினைவு உயர்நிலைப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற வனவிலங்கு வார நிறைவு விழாவில் கலந்து கொண்டார்கள்.*

*அப் பள்ளியின் முன் வளாகத்தில் கன்று ஒன்றினை நட்டு மரம் நடுவிழா நேர்த்தியை மக்களுக்கு உணர்த்திவிட்டு, வனவிலங்குகள் குறித்த புகைப்பட ஓவியக் கண்காட்சியை மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார்.*

*மண்டபம் மக்கட் கடலால் நிரம்பி வழிய, விழா தொடங்கியது. வனத்துறைத் தலைவர் திரு. த.அச்சையா இ.வ.ப. வரவேற்புரையாற்றினார்.*



தொடர்ந்து, ராஜூக்கள் கல்லூரி முதல்வர் திரு ஜி. வெங்கடேசன், சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வி. பாலகிருஷ்ணன், ராஜபாளையம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. தனுஷ்கோடி, ஸ்ரீ வில்லிபுத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. தாமரைக்கனி, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.கே.பெருமாள், சாத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு பொ. அன்பழகன், முகவை மாவட்ட ஆட்சித் தலைவரும் மாவட்ட வனவிலங்கு நலச் சங்கத் தலைவருமான திரு எம். எஸ். சீனிவாசன் இ. ஆ. ப., முகவை மாவட்ட வனவிலங்கு நலச்சங்கப் புரவலவர் திரு எஸ்.எஸ். இராமச்சந்திர ராஜா ஆகியோர் உரையாற்றினார்கள்.

*தங்கள் தொகுதிகளிலே இருக்கின்ற வனப்பகுதிகளைக் காப்பதிலும், வன விலங்குகளை வளர்ப்பதிலும் அரசு காட்டிவரும் அக்கறை குறித்தே அனைவரின் பேச்சும் அமைந்திருந்தது. இனி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சிலர் தமது உரையிலே குறிப்பிட்டார்கள்.*

*பின்னர், விழாத்தலைமையேற்ற மாண்புமிகு செய்தி அறநிலையம் ,சுற்றுலா மற்றும் வனத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அவர் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:*

*''நம்முடைய தயவால் மிருகங்கள் வாழ்வதில்லை. அவற்றின் உதவியாலேதான் நாம் வாழ்கிறோம். காடுகள் இல்லாவிட்டால் மழை இல்லை. மழை இல்லையேல் மனித சமுதாயம் இல்லை.*

*''இந்தப் பகுதி வனவளம் நிறைந்த பகுதியாகும். ஆனால், மரங்களை வெட்டி வீழ்த்தி விலையாக்குவதும், யானைகளைச் சுட்டுக்கொன்று தந்தங்களை எடுத்துப்போய் காசாக்குவதும் இந்தப் பகுதியில் அடிக்கடி நடப்பதாக நமக்குத் தகவல் வருகிறது. இது,வனத்துறை அதிகாரிகளுக்குத் தெரியாது நடக்கிறதா தெரிந்தே நடக்கிறதா என்று கேட்கிறார்கள். அது எப்படியானாலும் சரி; இந்த வகையில் தவறு செய்பவர்கள்*



# வன விலங்கு வார விழா

"அகிம்சை நெறியே ஆக்கந்தருவதாகும்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறி, அந்தக் கருத்தினை நிலைநிறுத்திட அரும்பாடுபட்டு உயிர்நீத்த மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் அக்டோபர் 2.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடிய வடலூர் இராம லிங்க அடிகளாரின் பிறந்த நாள் அக்டோபர் 5.

நாடு பாராட்டும் அந்த நல்லவர்கள் இருவரையும் நினைவுகூரும் பொருட்டோ என்னவோ வனவிலங்கு வாரவிழா, ஒவ்வோராண்டும் அக்டோபர் திங்கள் முதல் வாரத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு முதல்வர் செய்தி**

'வனவிலங்கு வார விழா'வையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் விடுத்திருந்த செய்தி இங்கே நாமெல்லாம் நினைவில் வைக்கத்தக்கதாகும்.

**''வனச் செல்வங்கள், வன விலங்குகள், பறவையினங்கள் இவையெல்லாம் நமது சமுதாயச் சித்திரத்திற்கு அழகும் பொலிவும், உயிர்ப்பும் ஊட்டும் சின்னங்கள் ஆகும்.**

**''அவற்றைக் காத்திட வேண்டியது நம்முடைய இரக்க சிந்தையின் பாற்பட்டது மட்டுமல்ல; மனிதகுல வாழ்வுக்கும், இயற்கைக்கும் இருக்கிற சமச்சீர் நிலையைக் காப்பது என்கிற கடமையாகவும் கொள்ளத்தக்கது...**

**''வாழு-வாழ விடு' என்கிற தத்துவத்தை நமது சகமனிதர்கள் மத்தியில் செயல்படுத்துவதோடு, வன விலங்குகளுக்கும் அந்த வாழ்க்கைத் தத்துவம் பொருந்தக் கூடியதாக நமது செயல் வகைகள் அமைந்திட வேண்டும்.''**

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது வனவிலங்கு வார விழாச் செய்தியிலே குறிப்பிட்டிருந்தார்.

**விழாத் தொடக்கம்**

முறைப்படியான வனவிலங்கு வார விழாத்தொடக்கக்கூட்டம் சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்திலே (3.10.'83) கொண்டாடப்பட்டது.

'காக்கை குருவி எங்கள் சாதி-நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று பாடிய நூற்றாண்டு விழா நாயகன் மகாகவி பாரதி 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்று சொல்லிச் சென்றதை வலியுறுத்துகிற வகையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அமைந்தது.

மாண்புமிகு செய்தி-அறநிலைய -சுற்றுலா மற்றும் வனவளத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வனவிலங்கு வார விழாத்தொடக்கமாக, வண்ணமிகு கண்காட்சியொன்றினைக் கலைவாணர் அரங்கத்திலே மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

பறவையினங்கள், வனவிலங்குகள் போன்றவற்றின் புகைப்படங்கள் மட்டுமல்ல; ஆரம்பப் பள்ளி முதல், கல்லூரி வரையுள்ள 83 மாணவ மாணவிகள் கலந்து கொண்ட வனவிலங்குகள் குறித்த ஓவியப் போட்டிக்காக வரையப்பட்ட வசீகரம் மிக்க வண்ண ஓவியங்களும் அந்தக் கண்காட்சியிலே இடம் பெற்றிருந்தன.

கண்காட்சித் திறப்பிற்கு முன்னதாக-மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், கலைவாணர் அரங்கத்தின் முன்புறப் புல்வெளியில் செடியொன்றை நட்டுவைத்து மரம்நடு விழாவிற்குச் சிறப்புச் செய்தார்.

இவ்விழாவில்—

சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு ஸ்ரீபால், இ.பா.க., திருமதி சௌந்தரா கைலாசம், வனத்துறை ஆணையர்-செயலர் திரு எஸ்.ஏ. சுப்பிரமணி ஐ.ஏ.எஸ். ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினர்.

வனத்துறைத் தலைவர் திரு.த.அச்சையா இ.வ.ப., அவர்கள் வரவேற்புரையோடு விழா தொடங்கியது:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

''வனங்களைப் பாதுகாப்பதிலும் வன விலங்குகளைக் காப்பதிலும் இந்தியாவிலேயே முன்மாதிரியான மாநிலமாகத் தமிழகத்தை ஆக்கிட மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் எடுத்து வரும் முயற்சிகள் - மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மகத்தானவை.

**"அரசினாலோ, சட்டத்தினாலோ, அதிகாரிகளாலோ மட்டுமே வனத்துறை வனவளத்தைப் பாதுகாத்துவிட முடியாது; மக்களும் அது தங்கள் பொறுப்புணர்ச்சி எனக் கருதிச் செயல்பட்டால் தான் முடியும்.**

''தமிழகத்தில் இன்றைக்கு வனத்துறையின் வளர்ச்சி மாண்புமிகு முதல்வர் அவர்களின் மனத்தை சார்க்கும் வகையிலே, நாட்டு மக்களெல்லாம் நல்லவிதத்திலே, திருப்திப்படும் முறையிலே இருக்கிறதென்றால்-அதற்கெல்லாம் காரணம் [illegible] களின் கருத்துணர்ந்து செயல்படுத்தும் ஆற்றல் மிக்க தளபதியாக இந்தத் துறையின் அமைச்சர், அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்கள் விளங்குவதே காரணம்.''

வனத்துறை ஆணையர்-செயலர் திருஎஸ்.ஏ.சுப்பிரமணி ஐ.ஏ.எஸ்.,பேசும்போது குறிப்பிட்டார். ''உயிரினங்களுக்கு எல்லா வகையிலும் நாம் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் வனவிலங்கு வார விழா கொண்டாடப்படுகிறது. உயிரினங்களுக்கு இன்னல் தருபவர்களைத் தடுப்பதோடு, அவற்றைப் பாதுகாப்பதிலும் எங்கள் துறை கவனம் செலுத்தி வருகிறது."

திருமதி. சௌந்தரா கைலாசம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''அகிம்சை என்பது கொல்லாமை மாத்திரம் அல்ல; காந்தியார் வழியிலே பார்த்தால் ஊறு செய்யாமையும் ஆகும். ரசிகமணி டி.கே.சி. அவர்களிடம் ஒரு வெளிநாட்டவர், ''நீங்கள் மரங்களை நேசிப்பதுண்டா?" என்று கேட்டார். அதற்கு ரசிகமணி ''நாங்கள் மரங்களை நேசிப்பதில்லை; பூசிக்கிறோம்'' என்றார். அந்த அளவுக்கு வனவளம் போற்றும் நாடு இது.


—அவரையடுத்து, காவல்துறை ஆணையர் திரு ஸ்ரீபால் இ.கா.ப., அவர்கள் பேசியதாவது:

''வனவிலங்குகளின் உருவங்களை வைத்தே நரி, எருமை, கழுதை என்று கூறி விடுகிறோம். மனிதர்களிலும் நரிபோல, கழுதைபோல, எருமைபோல, பலர் இருக்கிறோம். ஆனால் உருவத்தால் நாமெல்லாம் மனிதர்களாகவே இருக்கிறோம். மிருகங்களை மனிதர்களுக்கு உதாரணம் காட்டுவதுண்டே தவிர, மனிதனை எந்த மிருகத்துக்கும் உதாரணம் காட்டுவதில்லை.

''பழந்தமிழ் இலக்கியங்களில் எல்லாம் வனங்களும் வனவிலங்குகளும் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பதை நாம் காணலாம். நம் வாழ்வுக்கு வனங்களும், மிருகங்களும் பெரிதும் உதவுகின்றன. இருப்பதை அழிக்கக்



கண்காட்சியில் வனத்துறை அமைச்சருடன் பத்திரிகை நிருபர்கள்.






# தமிழரசு

16-11-1983 75காசு

2014 ருத்ரோத்காரி - ஐப்பசி 30

இருந்தாலும் அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

''சென்னைப் பத்திரிகையாளர்கள் வனவிலங்குச் சரணாலயங்களுக்கெல்லாம் சுற்றுலா போய்விட்டு இங்கே வந்திருக்கிறார்கள். கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் வனப் பகுதிகள் இந்த அரசால் எவ்வளவு அக்கறையோடு பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்களெல்லாம் நேரில் கண்டறிந்து வந்திருக்கிறார்கள். அவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு, வனவிலங்குகளைக் காப்பதிலும் வனங்களைப் பாதுகாப்பதிலும் எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கிறது என்பதை நாட்டு மக்களுக்குப் பயனுள்ள விதத்தில் எடுத்துச் சொல்லுங்கள். இன்னும் என்னவெல்லாம் செய்யலாம் என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்.

''பாலைவனத்தைச் சோலைவனமாக்குவதில் மற்ற நாட்டு மக்களெல்லாம் முயலும் போது, இங்குள்ள சிலர் சோலைகளையெல்லாம் பாலையாக்கும் முயற்சியில் ஈடுபடும் நிலை நீங்கவேண்டும். பச்சைமரத்தை வெட்டுவது, உங்கள் குழந்தையை வெட்டுவதற்குச் சமம். காட்டை அழித்தால் நாட்டை அழிப்பதாகப் பொருள். ஆகவே, காட்டைஅழிப்பதன் மூலம் நாட்டை அழிக்காதீர்கள்.

''கீரிப்பாறையில், மிக விரைவிலேயே அரசு மூலம் ரப்பர் தோட்டக் கழகம் அமைக்கப்படவிருக்கிறது. அதற்கான ஆக்க பூர்வமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள காடுகளை இணைத்து, ஐந்நூறு சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் மேகமலை வனவிலங்குச் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஒன்று அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மன்னார் வளைகுடா பகுதியில் தேசிய கடற்பூங்கா ஒன்று அமைக்கின்ற திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையெல்லாம் வனத்துறை அமைச்சர் என்ற முறையிலே - செய்தித்துறை அமைச்சர் என்ற முறையிலே இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்".

திரு.ஜே.வில்சன் இ.வ.ப. நன்றி கூற வனவிலங்கு வார நிறைவு விழா இனிது முடிந்தது.

பின்னர் வனவிலங்கு வாரச் சுற்றுலா மேற்கொண்ட பத்திரிகையாளர்களை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விழா முடிந்தபின், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு ஐசரிவேலன் குழுவினரின் நாடகம் நடைபெற்றது.

8.10.'83 வெள்ளியன்று காலை 9 மணி அளவில் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்றடைந்த சென்னைப் பத்திரிகையாளர்களைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா. தாமரைக்கனி மகிழ்ந்து வரவேற்றார். அந்த வட்டாரத்திலுள்ள செண்பகத்தோப்பு வனப்பகுதிகளுக்கு அனைவரையும் அழைத்துச் சென்ற அவர், தனது தொகுதியின் அனைத்துத்துறை மேம்பாடுகள் பற்றி விளக்கினார்.

அதன் பிறகு மதுரை, திருச்சி வழியாகச் சென்னைவந்தடைந்தனர் செய்தியாளர்கள்.

அவர்கள் சென்ற மாவட்டங்களிலெல்லாம் நெல்லை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு) திரு தீனதயாளன், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு) திரு பஷீர், இராமநாதபுர மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு வீராசாமி ஆகியோர் உடனிருந்து உதவினர். அவர்கள் சென்ற வனப்பகுதிகளிலெல்லாம் வனச்சரக அலுவலர்களான திரு வி.ஆர். சித்திரப்பூ, திரு எம். ஞானமுத்து, திரு டி.கே.ஹெர்பார்ட், திரு ஜி. ரங்கசாமி ஆகியோர் தங்கள் பொறுப்பின் கீழுள்ள வனப்பகுதிகள் பற்றிய வினாக்களுக்கெல்லாம் தக்க விளக்கமளித்து உதவி உபசரித்தார்கள்.

**நிகழ்ச்சித் தொகுப்பு: இல. இராசேந்திரன்**

**அடுத்த இதழ் முதல்**


வனவிலங்கு வாரச் சுற்றுலா பற்றிய சிறப்புக் கட்டுரைகள்



முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயத்தில் உள்ள பிளா (சாம்பர்) மான்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் டாக்டர் விருது பெற்றதைப் பாராட்டி நடைபெற்ற விழாவில் (30.10.'83) மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் உரையாற்றுகிறார்.

சென்னைக்கு வருகை புரிந்த பேராசிரியர் டி. பி. சட்டோபாத்யாயா தலைமையில் அமைந்த ஆசிரியர்கள் பற்றிய தேசியக் குழுவினர்-மாண்புமிகு முதல்வர் அவர்களை 13.10.'83ல் சந்தித்தனர்.

மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை, மாண்புமிகு மேற்கு வங்க நிதியமைச்சர் திரு அசோக் மித்ரா சந்தித்தார். (27.10.'83)

# குழந்தைகள் தினம்

நாடுபோற்றும் குழந்தை தினமே
நேரு மகானின் பிறந்த நாளாம்!
நீடு வாழும் நிகரில் தலைவன்
நெஞ்சம் நினைத்துப் போற்றும் நன்னாள்.

அன்னை பாரத அடிமை விலங்கினை
அகற்றிட உழைத்த அண்ணல் காந்தியின்
தன்னல மில்லாத தனிப்பெருந் தொண்டன்
தத்துவம் சொன்ன பாரத ரத்னம்

கொஞ்சும் மழலை உதிர்க்கும் சொல்லோன்!
குழந்தை உள்ளம் கொண்ட நல்லோன்
பஞ்ச சீலக் கொள்கை தந்தோன்
பாரதந் தன்னை ஓங்கச் செய்தோன்!

உழவுந் தொழிலும் உன்னதம் பெறவே
உயர்ந்த திட்டம் வகுத்த சீலன்!
எழில்மிகு பசுமைப் புரட்சி கண்டோன்
ஏற்றம் பெறவே இனிது உழைத்தோன்!

அரித்த கவலை அகத்தே தாக்க
ஆருயிர் நீத்த அமரர் நேரு
சிரித்த முகத்தை நினைக்கும் நெஞ்சம்
சேவையை எண்ணிப் போற்றும் உவந்தே!

—கவிஞர் அ. காசி



## மனைவிக்குச் சிறப்பிடம் தந்த நேரு

நூலாசிரியர்கள் தமது நூலை ஆசிரியர் அல்லது நண்பர் இப்படி எவருக்காவது காணிக்கையாக்குவது உண்டு. பண்டித ஜவகர்லால் நேரு-தமது சுயசரிதையை மறைந்த தமது மனைவி கமலா நேருவுக்கே காணிக்கை யாக்கியிருக்கிறார். பெண்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற கொள்கையை அவர் 1936-ஆம் ஆண்டிலேயே கடைப்பிடித்திருக்கிறார் என்பதை இந்தக் 'காணிக்கையின்' வாயிலாக அறிய முடிகிறது.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — ஐப்பசி 30
மலர் : 14 இதழ் : 10
16-11-1983

## கலையின் பெருமை

ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையும் நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி கலையாகும். இந்திய நாகரிகம் உயிரோட்டமும் பொலிவும் ததும்பிய காலத்தில் அது அழகும் பொருளும் கலைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின. அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.



# இலங்கைத் தமிழர்களின் இன்னல் போக்குவோம்!

கடந்த சூலைத் திங்கள் முதல் தொடர்ந்து, இலங்கை வாழ் தமிழர்களான ஈழத்தமிழர்கள், இந்தியப் பரம்பரை வழி வந்த தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் ஆகியோர்க்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு, சூறையாடுதல், துயரிழைத்தல் போன்ற கொடுஞ் செயல்களை அறிந்து இப்பேரவை மிக்க அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறது.

மேற்கண்ட கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்துவரும் சிங்கள இன வெறியர்களையும், அவர்களுக்கு உடந்தையாக நின்று அட்டூழியங்கள் பலவற்றையும் நடத்தி வரும் இலங்கை இராணுவத்தினர் - காவல் துறையினர் ஆகியோரையும், அவர்களுக்கு ஆதரவு அளித்துவரும் அதிபர் ஜெயவர்த்தனே தலைமையிலுள்ள அரசையும் இப்பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கையில் நாகரிகமற்ற, காட்டுமிராண்டித்தனமான, சனநாயகப் பண்பற்ற, மனிதாபிமானமற்ற முறையில் நடைபெற்றுவரும் கொடுமைகளை எதிர்த்து, எதிர்ப்புக் குரல் கொடுக்கும் வகையில், சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டுக் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொது வேலை நிறுத்தம் - கடையடைப்புச் செய்தும் அமைதி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டும், கோரிக்கைகள் எழுப்பியும் தங்கள் உள்ள உணர்வை ஒருமித்த முறையில் எழுப்பிய பொதுமக்களுக்கும், பல்வேறு துறையினர்க்கும், அனைத்து அரசியல் கட்சியினர்க்கும், எல்லா அமைப்பினர்க்கும் இப்பேரவை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கைவாழ் தமிழர்களின் துயர்களை எல்லாவகைகளிலும் துடைக்கவும், தமிழக மக்களின் ஒருமித்த உணர்வுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் ஆதரவோடு எடுத்த நடவடிக்கைகளை இப்பேரவை பாராட்டி வரவேற்பதோடு, தமிழக மக்களின் உணர்வை ஏற்று, இலங்கைவாழ் தமிழரின் ஆதரவையும், மதிப்பையும் பெற்று, ஆக்க நிறைவான இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க முன்வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும், இப்பொழுது ஏற்பட்டுள்ள இக்கட்டான கட்டத்தில், தங்களுக்கு நிலையான வாழ்வுரிமையையும், பாதுகாப்பையும் இந்திய அரசின் முயற்சியாலும், செல்வாக்காலும், நியாயவுணர்வாலும், நடவடிக்கையாலும் மட்டுமே பெறமுடியும் என்று தெளிவாகவும், திண்மையாகவும் கருதுவதால், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காலத்தாழ்வுக்கு இடமேற்படாமல், உடனடியாகத் தீவிரமான, செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இப்பேரவை கேட்டுக் கொள்வதோடு இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு, தொடர்ந்து இன்னல் ஏற்படாதவாறு பேச்சு வார்த்தையை விரைவுபடுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் இப்பேரவை வற்புறுத்துகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இனம்-மொழி - வரலாறு - நாகரிகம் - பண்பாடு - உறவு-தொடர்பு போன்றவற்றில் நீண்ட நெடுங்காலமாகவே பிணைப்பு இருந்து வருவதாலும் அண்டை நாட்டினரும், அகில உலக நாட்டினரும் கவலைப்படுவதற்குரிய தன்மையில் இலங்கையில் சிறுபான்மையோரின் அடிப்படை மனித்வுரிமைகளுக்கு அழிவு ஏற்படுத்தப்பட்டு வருவதாலும், இந்திய மக்கள்-இந்தியத் தூதுவரகம் - இந்திய வங்கிகள்-இந்தியச் சுற்றுலாப் பயணிகள் கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதாலும், இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டியது நியாயமான செயலாகும் என்பதை இப்பேரவை இந்திய அரசுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

உலகநாடுகளில் வாழும் சிறுபான்மையோரின் நலங்காக்கும் பொறுப்பையும் அவர்களுக்கு நிலையான வாழ்வளிக்கும் பொறுப்பையும், அடிப்படையுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் அவை, இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினையை நிலையாகத் தீர்க்கும் பொருட்டு, உடனடியாகத் தன் முழுச்செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, நியாயத்தை நிலைநாட்ட முன் வரவேண்டும் என்று இப்பேரவை வற்புறுத்துகிறது; ஐக்கியநாடுகள் அவையில் முக்கியமான வகையில் அங்கம் பெற்றுள்ள இந்திய அரசு இதனை வலியுறுத்துமாறு இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் ஆயுதவலிவாலும், அடக்குமுறைகளாலும், வன்முறைச் செயல்களாலும் தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுக்கு, ஆயுதங்கள் வழங்க அமெரிக்க அரசு ஆயத்தம் செய்து வருவதையும், திருகோணமலைப் பகுதியை நிலையான கப்பற்படைத்தளமாக ஆக்கிக் கொள்ள முயலுவதையும் அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு வென் பெர்ஜேர் இலங்கை அரசுடன் இரகசியப் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதையும் கண்டு இப்பேரவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு, இலங்கைவாழ் தமிழர்க்கு வாழ்வளிக்கவேண்டிய வல்லரசான அமெரிக்கா வாழ்வளிக்க முன்வராமல், தமிழினத்தின் அழிவுக்குக் காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆயுதம் வழங்குவது - கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நலங்கருதித் தமிழக அரசாலும், இந்திய அரசாலும் அனுப்பி வைக்கப்பெறும் உணவுப் பொருள், உடைகள், உடைமைகள், மருந்துகள் போன்றவைகள் உரியவர்க்குப் போய்ச் சேர வைப்பதற்கு இந்திய அரசு ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ, அல்லது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமோ, அல்லது இந்திய தூதுவராலயத்தின் மூலமோ தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

உரிமை வேட்கையோடு அறப்போர் நடத்தும் இலங்கைவாழ் தமிழர்களின் குடியுரிமை - வாக்குரிமை - தொழிலுரிமை - வாழ்வுரிமை போன்றவற்றை அடியோடு பறிக்கும் வகையில் இலங்கை அரசால் கொண்டு வந்து சட்டமாக்கப்பட்டுள்ள காட்டுமிராண்டி சட்டத்தை இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, அதனைப் பின்பெறச் செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

இலங்கையிலுள்ள தமிழர் தலைவர்கள் நிபந்தனையற்ற முறையில் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு, தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் ஒளிவுமறைவில்லாமல் வெளியிட வாய்ப்பளித்து, நல்லுறவு அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தி, இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையில் தீர்வுகாண, இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயல வேண்டும் என்று இப்பேரவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது.

இலங்கை வன்முறைக் கொடுமைகளுக்கு ஆளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்று அவதிப்படுவோர்க்கும், சொத்துக்களை இழந்து தவிப்போர்க்கும் இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும் என்று இப்பேரவை வற்புறுத்துவதோடு அதற்கான உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்மக்களின் உள்ளக் குமுறலையும், எண்ணங்களையும், கோரிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்து வைக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில், தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தமிழக ஆட்சியில் அமர்ந்துள்ள அமைச்சரவையின் உறுப்பினரான மாண்புமிகு மின்துறை அமைச்சரை இந்தியக்குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த, இந்தியப் பேரரசையும், அனைத்து நாடுகளும் அறியும் வண்ணம் ஐந்து கோடித் தமிழ் மக்களின் உணர்வை, ஐக்கியநாடுகள் அவையில் வெளிப்படுத்திய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும், இப்பேரவை பாராட்டுகிறது.

நிலையான வாழ்வுரிமைகளுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் அறவழியில் அறப்போர் நடத்திடும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு இப்பேரவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வெற்றிபெற வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகளை இந்தியப் பேரரசின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கான எல்லாவித முயற்சிகளையும், முறைப்படி மேற்கொள்ளுமாறு, இப்பேரவை தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

**[25.10.83 அன்று தமிழகச் சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சார்பில், அவை முன்னவர் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம்]**

## மக்கள் குரலுக்கு மதிப்பளித்த ஜனநாயகவாதி

"இந்தியத் துணைக்கண்டத்தை ஒன்றாக இணைத்து அதன் வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஓயாது உழைத்துக்கொண்டு இருந்த ஈடு இணையற்ற மகத்தான சக்தி நேரு.

மக்களின் குரலுக்கு மதிப்பு அளித்து, மக்கள் ஆட்சியின் மாண்பினை விளக்கிக் கொண்டு இருந்த ஜனநாயகவாதி அவர்.

—எம். ஜி. இராமச்சந்திரன்

மே (1964)

உலகப்பேரொளி—பக். 338.



# பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்...



## டாக்டர் கா. காளிமுத்து

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

கண்மூடிக் கண் திறப்பதற்குள் கணக்கின்றிக் குழந்தைகள் உலகெங்கும் பிறந்துவிடுகின்றன! ஒரு நாளைக்கு ஒரு வேளை கஞ்சிகூட குடிக்க முடியாமல் பலகோடிமக்கள் வாழும்போது, புத்தம் புதிய வாய்களும், வயிறுகளும் அந்த ஒரு வேளைக் கஞ்சியிலும் பங்கு கேட்டு வந்துவிடுகின்றன! அதனால் உலகெங்கும் பசி என்னும் பிணி காலங்காலமாகத்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பிணியை அறவே அகற்ற வேண்டும் என்பதற்காகவே, இன்று உலக உணவுநாளைக் கொண்டாடுகின்றோம். ஐக்கிய நாடுகள் அவையின் ஓர் அங்கமான உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப, இன்று 3-வது உலக உணவு நாள் விழாவைச் சிறப்பாக நடத்தி வருகின்றோம்.

பசியைப் 'பிணி' என்று சொன்னவனே தமிழன்தான்.



''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என்று அந்தப் பிணி போக்கும் வழி வகையை வள்ளுவரின் குறள் காட்டுகின்றது. ''மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.

இத்தகைய கருத்துக்களின் தாயகமான தமிழகம் முன்னணியில் இருக்க வேண்டுமென்று அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

விழா நடத்திவிட்டால் மட்டும் போதுமா? விழாவின் இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டாமா? தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் தேவையான ஊட்டச்சத்து மிகுந்த உணவை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு அரும்பாடுபட்டு வருகிறது. வரலாறு காணாத வறட்சி அடுத்து அடுத்து தோன்றி தமிழக வேளாண்மையைச் சீர் குலைத்துவிட்டது! ஆயினும் வறட்சியை வென்று வாகை சூடுவோம் என்ற இலட்சியத்துடன், புரட்சித் தலைவர் அரசு, வறட்சிநிவாரணப் பணிகளைப் போர்க்காலப் பணிகளைப் போல் செய்து வந்தது. இச்செயலைக் கண்டு இயற்கை அன்னையும் கருணை மழை பொழிந்திருக்கிறாள். இனியும் பொழிவாள் என்ற நம்பிக்கையுடன் வேளாண்மைப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

நடப்பு ஆண்டில் 60 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி, 24 இலட்சம் மெட்ரிக் டன் சிறு தானியங்கள், 5 இலட்சம் டன் பயறுவகைகள் ஆக மொத்தம் 89 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து, அதை எய்திட முனைப்பாகச் செயலாற்றி வருகிறோம்.

உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிக்கு இடையூறாக இருக்கும் பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த வேளாண்மைத்துறை அரும்பாடுபட்டு வருகிறது. இந்த ஆண்டில் 36 இலட்சம் எக்டேரில் பூச்சிகளையும், 12 இலட்சம் எக்டேரில் நோய்களையும் கட்டுப்படுத்தி ஆவன செய்யப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து மிகுந்த காய்கறிகள், கனிகள் ஆகியவற்றின் உற்பத்தியைப்பெருக்க தோட்டக் கலைத்துறை முயன்று வருகிறது.

தாவர எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, இந்த ஆண்டில் 12 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கடலை, 60 ஆயிரம் மெட்ரிக் டன் எள், 60 ஆயிரம் மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய எண்ணெய் வித்துக்கள்துறை தீவிரமாகச் செயலாற்றி வருகிறது.

சிறு மற்றும் குறு உழவர்கள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய ரகங்கள், இரசாயன உரங்கள், பூச்சி, பூஞ்சான மருந்துகள் அடங்கிய 'மினிகிட்' எனப்படும் இடுபொருள் அடங்கிய சிறுபைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. நெல்லில் இதுவரை 2 இலட்சத்து 40 ஆயிரம் மினி கிட்டுகளும், சிறு தானியங்களில் 19 ஆயிரம் மினி கிட்டுகளும், பயறு வகைகளில் 18 ஆயிரம் மினி கிட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வழங்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் மூலம் நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 3 இலட்சத்து 60 ஆயிரம் சிறு மற்றும் குறு உழவர் குடும்பங்கள் பயனடையும்.

வறட்சித் துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் விதைகள் வழங்க ரூபாய் 50 இலட்சமும், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் வழங்க ரூபாய் 24 இலட்சமும் இரசாயன உரங்கள் வழங்க ரூபாய் 360 இலட்சமும் எண்ணெய் வித்து விதைகள் வழங்க ரூபாய் 30 இலட்சமும் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை மாவட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக ரூபாய் ஏழரை கோடி செலவில் 5,000 வடிமுனைக் குழாய்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 2171 வடிமுனைக் குழாய்கள் வெற்றிகரமாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பணி தொடர்கிறது.





[உலக உணவு நாளையொட்டி மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் 16-10-1983 அன்று ஆற்றிய உரை]

நிலத்தடி நீரை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் கசிவு நீர்குட்டைகள்தோண்ட ரூபாய் 144 இலட்சம் ஒதுக்கப்பட்டது. ரூபாய் 147 இலட்சம் செலவில் 287 கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 19 இலட்சம் மனித நாட்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 548 மெட்ரிக் டன் கோதுமை கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

விளைந்த தானியங்களைச் சேமித்து வைத்து நல்ல விலை விற்கும் நேரத்தில் விற்று இலாபம் பெறுவதற்காக 89 ஊரகக் கிடங்குகளை ரூபாய் 4 கோடி செலவில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மக்களிடையே கலப்பு உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தி, அவர்கள் ஊட்டச்சத்து மிகுந்த உணவு உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்த உழவர் பயிற்சி நிலையங்களில் மகளிர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

விளைந்த தானியத்தை பூச்சிகள், எலிகள் போன்றவற்றின் தாக்குதலில் இருந்து காப்பது எப்படி என்ற பயிற்சியும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

மக்களுக்கு எவ்வளவோ சிக்கல்கள் இருந்தாலும், உணவுச் சிக்கல்கள்தான் தலையானதாக உள்ளது. எனவே, உணவுப் பொருளைப் பாதுகாத்தல், சிக்கனமாகப் பயன்படுத்துதல், சத்துள்ள உணவு வகைகள் எவை எவை என்பதை அறிதல், கிடைக்கின்ற உணவைப் பகுத்துண்டு வாழ்தல் ஆகிய அனைத்தையும் நாம் கடமையாக ஏற்கவேண்டும் என்று தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

மூன்றாவது உலக உணவு நாளின் கருப்பொருள் 'உணவுப் பாதுகாப்பு' அதன் கொள்கை 'உணவுக்கு முதலிடம்' இதை நிறைவேற்றும் வகையில் 'ஒவ்வொரு பயிரிலும் அதிக மகசூல்' ஒவ்வொரு ஏக்கரிலும் அதிக உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தை இந்நாளில் ஏற்போம் என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்.



# கீரிப்பாறை ரப்பர் தோட்டம்

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்குப் புறப்பட்டோமானால், ஏறத்தாழ ஐம்பதாவது கிலோமீட்டரில் சற்றே ஒதுப்புறமாக அடர்ந்து காணப்படுவதுதான் கீரிப்பாறை ரப்பர் தோட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தின் கிழக்கு ரப்பர்வட்டத்தில் ஒன்றான இப்பகுதி 486.60 எக்டேரில் அமைந்திருக்கிறது.

உடம்பாலும், இலைகளாலும் ஒதியமரம் போல் இருந்தாலும்- உயரத்தால் அசோகமரம் போல் வளர்ந்து நிற்கும் ரப்பர் மரங்கள் எப்படிப் பார்த்தாலும் வரிசையுறத் தெரியும் படைவீரர் அணிவகுப்பை நினைவுபடுத்துவதாக இருந்தன. பூமியில் வெயில் விழாதபடி குடைபிடிக்கும் மரங்களின் அடர்த்தி ஊட்டி குளிர்ச்சியை நினைவுபடுத்துவது மட்டுமல்ல; அவ்வப்போது மழைக்கு அழைப்பு விடுவதாகவும் இருந்தது.

தமிழகத்திலேயே கன்னியாகுமரி மாவட்டம்தான் மண் வளத்தாலும், தட்ப வெப்ப நிலையாலும் ரப்பர் மரம் பயிரிடமிகவும் ஏற்றதாக இருக்கின்றது.

## தோட்ட இலக்கு

1956ல், இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது குமரிமாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைக்கப் பட்டது. அப்போது, வெட்டுமரக் காடுகளும் 15 ஆயிரம் ஏக்கர் ரப்பர் தோட்டங்களும் தனியார் நிர்வாகத்தின்கீழிருந்தன. மேலும் ரப்பர் பயிரிடத்தக்க ஒதுக்கக் காடுகள் இம்மாவட்டத்தில் இருந்ததை மாற்றி, 1200 எக்டேர் பரப்பளவில் ஆறாண்டுக் காலத்தில் 34 இலட்சம் ரூபாய் செலவில் ரப்பர்தோட்டம் உருவாக்கும் திட்டத்தை வனத்துறை தயாரித்தது. அதன் அடிப்படையிலே 1960ல் தொடங்கப்பட்ட பணிகள் 1965ல் முடிக்கப்பட்டன. 1200 எக்டேர் ரப்பர் தோட்ட இலக்கு எட்டப்பட்டது.

ரப்பர் தோட்டம் தரும் பலன் பயன்மிக்கதாக இருக்கவே, 1979 - 80 வரையில் அப்படி ரப்பர் தோட்டம், உருவாக்கும் பணி மென்மேலும் விரிவாக்கப் பட்டது.

அதன் பின்னாலே-இயற்கைக் காடுகளை அழிக்கக்கூடாதென அரசு உத்தரவிட்டதன் காரணமாக, அந்த வகைப்பணி நிறுத்தி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றுவரை ஏராளமான எக்டேர் பரப்பளவில் ரப்பர் மரக்காடு விரிந்து பரவியிருக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள காடுகள் கிழக்கு வட்டமென்றும் மேற்கு வட்டமென்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

## குமரி ரப்பர் வட்டம்

கீரிப்பாறை 486.60 எக்டேர், பரலியார் 463.40 எக்டேர், மணலோடை 535 எக்டேர், கலிகேசம் 434.80 எக்டேர் ஆகியவை கிழக்குவட்டத்தில் அடங்கும்.


மைலார் 697.10 எக்டேர், சித்தார் 646.60 எக்டேர், குதியார் 496.80 எக்டேர், கல்லார் 595.90 எக்டேர், மருதம்பாறை 429.50 எக்டேர் ஆகியவை மேற்கு வட்டத்தில் அடங்கும்.

இவ்விரண்டின் மொத்தப் பரப்பளவு 4785.70 எக்டேர் ஆகும். இதில் பலவகைகளிலும் மொத்தம் 2658 பேர் பணிபுரிகின்றனர்.

இவற்றில்-கல்லார் பிரிவைத் தவிர, மற்றெல்லா இடங்களிலும் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது.

வளர்ந்துவரும் நாகரிக உலகில் ரப்பருக்கான தேவைகள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. தொழிலியல், பொறியியல் மற்றும் வீட்டு உபயோகத்திற்கும் பலவகைகளிலே ரப்பர் பயன்பட்டு வரும் காலமிது.

**இல. இராசேந்திரன்**



டயர் ,ட்யூப், ஒயர், கேபிள், காலணி, கருத்தடைச் சாதனம் எனப் பல பொருட்கள் உருவாக்கப்பட ரப்பர் இன்றியமையாததாக இருக்கின்றது. இதற்காக மட்டுமல்லாமல், ரப்பர் பயிரிடல் இலாபகரமானதாகவும் இருப்பதால் ரப்பர் தொழில் மிகுந்த ஊக்கத்தோடு வளர்ச்சி பெற்று வருகிறது.

## தொழிற்சாலை

இத்தகைய பொருட்களைத் தயாரிப்பதற்கு முக்கியத் தேவையாக இருப்பவை ரப்பர் தாள்கள் (Rubber Sheets) இதனைத் தயாரிப்பதற்கெனக் குமரி மாவட்டத்தில் கீரிப்பாறையில் ஒன்றும், குலசேகரத்திற்குப் பக்கத்திலுள்ள பெருஞ்சாணியில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு தொழிற்சாலைகளிலும், 1545 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்களின் உதவியால் ஆண்டு தோறும் 128.72 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 7வகை ரப்பர் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன.

ரப்பர் மரக்கன்றுகள், நடப்பட்ட ஏழாம் ஆண்டிலிருந்து பலன் கொடுக்கத் தொடங்குகின்றன. 14ஆம் ஆண்டுக்குப் பிறகு பரிபூரண பலனை அளிக்கின்றன. எக்டேருக்கு 1250 முதல் இரண்டாயிரம் கிலோகிராம் வரை அவற்றின் மூலம் ரப்பர் கிடைக்கும். ஒரு ஏக்கரில் ரப்பர் தோட்டம் உருவாக்குவதென்றால் சுமார் 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்.

ரப்பர் தயாரிப்பில் கேரளத்திற்கு முதலிடம் என்றால்-இந்தியாவிலேயே தமிழகத்திற்கு இரண்டாவது இடம்.

கீரிப்பாறை ரப்பர் தோட்டத்தின் நடுவே அமைந்துள்ள 'தமிழ்நாடு அரசு ரப்பர் தொழிற்சாலை'யைப் பார்வையிடச் செல்கிறோம். மாவட்ட வனப்பாதுகாவலர் திரு.வி.ஆர்.சித்திரப்பூ, கீரிப்பாறை வனப்பாதுகாவலர் திரு, எம்.ஞானமுத்து இருவரும் அன்போடு வரவேற்று அழைத்துச் செல்கின்றனர். நம்மோடு வரும் செய்தியாளர்கள், வானொலி-தொலைக்காட்சிப் பிரிவினரெல்லாம் கேட்கும் வினாக்களுக்கு இருவரும் மாறி மாறி விடையளிக்கின்றனர்.

கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலை 1965ஆம் ஆண்டில் 35 இலட்ச ரூபாய் திட்டத்தில் அமைக்கப்பட்டதாகும். விரைவில் இதேபோல் மயிலார் வட்டத்திலும் ஒன்று அமையவிருக்கிறது.

## புதுமை ஆலயம்

'தொழிற்சாலை ஓர் புதுமை

### வடஆர்க்காடு மாவட்டத்தில்

வடஆர்க்காடு மாவட்டம் வாலாஜா ஒன்றியத்தைச் சேர்ந்த இராணிப்பேட்டை பாரி கம்பெனியிலும், சிப்காட் பகுதியிலும் 20.9.'83ம் தேதி அன்று சேமிப்புத் திட்டம் சம்பந்தமான ஊதிய சேமிப்புத் திட்டத்தில் விளம்பரம் செய்து கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்குவதற்காக 63 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

லெப்ராஸ்கோபிக் முகாமில் 82 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. 20,000 தைல மரங்கள் நடப்பட்டன. முசிறியில் காட்டு நலப் பணித் திட்டத்தின்கீழ், அரசு கலைக் கல்லூரி மாணவிகளால் 1000 செடிகள் நடப்பட்டன.

## சாமானியரின் பெருமை

**சாமானிய மக்களின் நலம்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலி கொடுக்க முடியாது.**

—பண்டித நேரு

ஆலயம். அங்கே தொழிலே வழி படும் தெய்வம்' என்று எழுதி வைக்கப்பட்டுள்ளதைப் பார்க்கி றோம். சுற்றிலும் ரப்பர் தயாரிப் போர் உழைப்பில் அதன் உண்மை தெரிகிறது.

தொழிற்சாலையில் பணிபுரி யும் எல்லோருக்குமே இலவசக் குடியிருப்புகள் தரப்பட்டுள்ளன. மின் வசதி, தண்ணீர் வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி, முதல் வரின் சத்துணவுத் திட்டம் பரி மளிக்கும் குழந்தைகள் காப்பகம் எல்லாம் இங்குண்டு.

''இந்தப் பகுதிக்குக் கீரிப் பாறை என்று பெயர் வரக் கார ணம் உண்டா?''

''சிறப்பாக ஒன்றுமில்லை; இந்த மலைப்பகுதி கீரியின் முதுகு போல் அமைந்திருப்பதால் இப் படிப் பெயர் வந்திருக்கலாம்; கீரிப்பாறை மலைமேல் முருகன் கோயில் ஒன்றுண்டு; அது மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.''

''பருவமழை தவறி, தமிழக மெங்கும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதே, அப்போது இங்கும் பாதிப்பு ஏற்பட்டதுண்டா?''

''இல்லை. மலைமேல் மசுபதி அணை என்று ஒன்றிருக்கிறது. அதில் எப்போதுமே தண்ணீர் இருக்கும். இந்த வட்டாரம் முழு மைக்கும் அங்கிருந்துதான் குறை வில்லாமல் தண்ணீர் கிடைக்கி றது.''

### ஏற்றுமதி விவரம்

இந்தத் தொழிற்சாலையிலே பணிபுரிவோரின் வேலை நேரம் காலை 8 மணிமுதல், மாலை 4.30 வரை. ஆனால், ரப்பர் பாலை டின்களில் அடைக்கும் பிரிவில் மட்டும் மூன்று பணிநேர முறை இருக்கிறது. அங்கே சுவீ டன் நாட்டுத் தயாரிப்பான ஓர் இயந்திரம் நிமிடத்திற்கு 1800 சுழற்சிகள் இயங்கி, அம்மோனியா வாயுவின் உதவியால் ரப்பர்பால் உறைந்துவிடாதபடி பிரித்தெடுத் துப் பக்குவப்படுத்துகிறது.

இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ரப்பர் தாள்கள் ஏற்றுமதி செய் யப்படுகிறதென்றாலும், அவை களை விட பெரும் பெரும் டின் களில் அடைக்கப்படும் ரப்பர் பாலே அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தப் பகுதியில் தனியார்வீடு களிலும் ரப்பர் மரங்கள் உள்ளன. 'சிரட்டை'(கொட்டாங்கச்சி)யை மரத்தில் கட்டி, கீறிவிட்ட மரத் திலிருந்து ரப்பர்பால் எடுத்துத் தருகிற ஒருவர், ஒருநாளைக்கு அதன் மூலம் ரூ. 16முதல் 20 வரை பெறமுடியும் என்கிறார் கள். நாள் ஒன்றுக்கு 6 அல்லது 7 டன் திரவ ரப்பர் இங்கே உற்பத்தி செய்யப்படுகிறது.

### எண்ணெய் எடுக்கலாம்

நாற்பதாண்டுக்காலம் வரை ஆயுள் பலமுள்ளவை ரப்பர் மரங் கள். எளிதில் நோய்ப்படுவ தில்லை. விழுந்துவிட்ட ரப்பர் மரங்கள் பிளைவுட் பலகைகளுக் காகவும், தீக்குச்சி செய்வதற்காக வும் பயன்படுத்தப்படுகின்றன. பூத்துக் காய்க்கும் தன்மையுள்ள இம் மரங்களின் கொட்டைகள், இயந்திரங்களுக்கு இடப்படும் மசகெண்ணெய் எடுக்க உதவுகின் றன.

7.10.83 அன்றுராஜபாளையத் தில் நடைபெற்ற வனவிலங்கு வார நிறைவு விழாவில், மாண்பு மிகு செய்தி, அறநிலையத்துறை சுற்றுலா மற்றும் வனத்துறை அமைச்சர் திரு.இராம.வீரப்பன் அவர்கள் பங்கேற்றார். அப் போது அவர் ரப்பர்தோட்டங் கள் பற்றிப் பின்வருமாறு தம் உரையில் குறிப்பிட்டார்:

**''தமிழ்நாடு அரசு விரைவில் ரப்பர் தோட்டக் கழகமொன்றை அமைக்கவிருக்கிறது. அரசின் வனத்துறைப் பகுதியில் உள்ள ரப்பர் தோட்டம் மற்றும் தொழிற் சாலைகள் இக்கழகத்தின் கீழ் செயல்படும. இது பற்றி அறி வித்து ஏழு மாதங்களாகின்றன. இக் கழகம் அமைவதற்கான சட்ட பூர்வப் பணிகள் முடிவடையும் தரு வாயில் உள்ளன."**





# குழந்தைப் பருவத்திலே
## ஜவகர்லால் நேரு

என் குழந்தைப் பருவம் இவ் வாறு அடைபட்ட வாழ்க்கை யாக இருந்தது; சிறப்பான நிகழ்ச்சி ஏதுமில்லை. அண்ணன் மார்கள் (பெரியப்பா மக்கள்) பேசுவதை நான் காது கொடுத் துக் கேட்பது வழக்கம். அவர் களுடைய பேச்சு எப்போதுமே சரியாக விளங்காது. அவர்கள் பெரும்பாலும் ஆங்கிலேயரும் யூரேசியரும் ( EURASIANS ) இந்தியரை அடக்கி ஆள்வதை யும், அவமதிப்பதையும், அதை இந்தியர் பொறுத்துக்கொண்டு வாளா இருக்காமல் எதிர்த்து நிற்கவேண்டும் என்பதையும் பற்றிப் பேசுவார்கள். ஆளுபவ ருக்கும் ஆளப்படுபவருக்கு மிடையே அடிக்கடி சச்சரவு ஏற் படுவதைப் பற்றியும் பேசு வார்கள். ஆங்கிலேயன் ஒருவன் இந்தியனைக் கொலை செய்து விட்டால்கூட அவனைக் குற்ற வாளியல்ல என்று தீர்ப்பளிப்பர் ஆங்கில 'ஜூரிகள்'. ரயில் வண் டிகளில் வெள்ளையருக்கெனத் தனிப்பெட்டிகள் ஒதுக்கப்பட் டன. வண்டியே கொள்ள முடி யாத அளவுக்குக் கூட்டம் இருந்த போதிலும் இந்தியர் யாரும் அப் பெட்டிகளில் ஏறமுடியாது. தனிப் பெட்டிகள் காலியாகவே இருந்தாலும், அவைகளில் இந்திய ருக்கு இடம் கிடையாது. ஆனால் ஒதுக்கப்படாத பெட்டிகளில் ஆங்கிலேயரும் ஏறிக்கொள்ள லாம். அப்படி ஒருவர் ஏறிக் கொண்டால் அந்தப் பெட்டியில் இந்தியர் யாரும் ஏறக்கூடாது. பூங்காக்களிலும் பிற பொது இடங்களிலும் வெள்ளையருக் கெனத் தனிப் பெஞ்சுகளும் நாற்காலிகளும் ஒதுக்கப்பட்டன. இவ்வாறாக ஒழுங்கு தவறிநடந்த அந்நிய ஆட்சியாளர்களை நான் அறவே வெறுத்தேன். இந்திய ரிடம் ஆங்கிலேயர் உதைபட்ட போதெல்லாம் நான்மகிழ்ந்தேன். என் அண்ணன்மார்களில் ஒரு வரோ அல்லது அவர்களுடைய நண்பர்களில் ஒருவரோ ஆங்கி லேயரை நேருக்கு நேர் எதிர்க் கும் சூழ்நிலைகள் அடிக்கடி ஏற் பட்டதுண்டு. அப்போதெல் லாம் நாங்கள் ஆத்திரமடைந் தோம். என் அண்ணன்மார்களில் ஒருவர் குடும்பத்திலேயே வலிமை மிக்கவர். அவருக்கு ஆங்கிலேய ருடனோ அல்லது அவர்களிலும் கொடியவர்களான யூரேசிய ருடனோ சண்டை போடுவதென் றால் வெகு பிரியம். இத்தகைய சண்டைகள், குறிப்பாக ரெயில் பிரயாணங்களில் அடிக்கடி நிகழ்ந்தன.

அந்நியரின் ஆட்சியையும் அவர் களின் தவறான போக்கையும் நான் எவ்வளவுதான் வெறுத்த போதிலும் தனிப்பட்ட ஆங்கி லேயரை நான் வெறுக்கவில்லை என்னை ஆங்கிலத் தாதியர்தாம் வளர்த்து வந்தனர். என் தந்தை யாரைக் காணச் சிற்சில சமயங் களில் ஆங்கில நண்பர்களும் வீட்டுக்கு வந்தனர். எனக்கு ஆங்கிலேயர்பால் நல்ல எண்ணம் இருந்ததேயொழிய, வெறுப்பு உணர்ச்சி தோன்றவில்லை.

மாலை நேரங்களில் என் தந்தையாரைக் காணப் பல நண்பர்கள் வருவது வழக்கம். நாள் முழுவதும் உழைத்துக் களைத்த தந்தையார் அப்போது சிரித்து மகிழ்ந்து இளைப்பாறு வார்; அவருடைய கலகலப்பான சிரிப்பொலி வீடு முழுவதும் எதிரொலிக்கும். அவருடைய சிரிப்பொலி அலகாபாத்தில் பெயர் பெற்றுவிட்டது. அவரும் அவருடைய நண்பர்களும் என்ன பேசுவார்கள் என்பதை அறிய, நான் திரைமறைவில் நின்று கொண்டு எட்டிப் பார்ப்பேன். என்னை அவர் பார்த்துவிட்டால் என்னை இழுத்துத் தன் மடிமேல் கொஞ்ச நேரம் உட்கார வைத் துக் கொள்வார். தந்தையார் ஒருநாள் செஞ்சாராயம் குடித் துக் கொண்டிருந்ததைக் கண்டு விட்டேன். விஸ்கியை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். அவரும் அவருடைய நண்பர் களும் அதைக் குடித்ததை அடிக் கடி பார்த்தும் இருக்கிறேன். ஆனால் அப்புதிய செந்நிறப் பானத்தை அதற்குமுன் பார்த் ததே கிடையாது. அதைக்கண்டு பயந்து போனேன். அப்பா இரத்தத்தைக் குடிக்கிறார்என்று சொல்லத் தாயாரிடம் ஓடினேன்.

எனக்கு என் அப்பாவின்பேரில் தனி ஈடுபாடுண்டு. அவரைப் பெரிதும் மதித்தேன். நான்



சர்ச்சிலுடன் நேரு

விழாக்கள் விரும்பத்தகாத வயது முதிர்ச்சியை அறிவுறுத்தும் நாட்களாகத் தோன்றக்கூடிய காலமும் வரும் என்பதை அப்போது நான் அறியவில்லை.

சில சமயம் உறவினர் திருமணங்களில் கலந்து கொள்ள வேண்டி, தொலைவிலுள்ள பட்டணங்களுக்கு எங்கள் குடும்பமே செல்வதுண்டு. அப்போதெல்லாம் குழந்தைகளாகிய எங்களுக்கு ஒரே குதூகலந்தான். திருமண விழாக்களென்றால் எங்களுக்கு விடுதலை நாட்கள். வழக்கமான கட்டுப்பாடுகளெல்லாம் தளர்த்தப்படும். நாங்கள் எங்கள் மனம்போல் நடந்து கொள்ளலாம். எனவே திருமண நாட்கள் எங்களுக்கு இன்ப நாட்களாக இருந்ததில் வியப்பொன்றும் இல்லை. ஆங்காங்கிருந்து வந்த பல குடும்பங்களும் திருமண வீட்டில் இறங்குவதால், அங்குக் கூட்டம் மிகுதியாக இருக்கும். குழந்தைகளும், சிறுவர்-சிறுமிகளும் பலர் இருப்பர். எனவே எனக்குத் தனிமையைப் பற்றிய கவலை அப்போது இராது. நாங்கள் ஆசை தீர விளையாடுவோம்; குறும்பு செய்வோம். குறும்பு அளவை மீறும்போது பெரியவர்களின் திட்டும் கிடைக்கும். அதையும் வாங்கித்தோளில் போட்டுக் கொண்டு விளையாடுவோம்.

இந்தியர், ஏழைகளாயினும்சரி பணக்காரர்களாயினும் சரி, திருமணங்களில் வீண் செலவும் ஆடம்பரச் சடங்குகளும் செய்கின்றனர். அவையனைத்தும் கண்டிக்கத் தக்கவை. வீண் செலவு என்பது மட்டுமின்றி, அச்சடங்குகள் யாவும் மட்டமானவை. அவைகளில் அழகியல்போ, கலைப்பண்போ எதுவும் இருக்காது. இதற்கு விதிவிலக்குகளும் உண்டு என்று சொல்லத் தேவையில்லை. இந்தக் கண்டனத்திற்கெல்லாம் உண்மையில் ஆளாகக் கூடியவர் நடுத்தர வகுப்பினரே. ஏழைகளும் தங்கள் சக்திக்கு மீறிய கடன்களை வாங்கி ஆடம்பரச் செலவு செய்கின்றனர். ஆனால், சிலர் சொல்வதுபோல் இத்தகைய சமூகப் பழக்க வழக்கங்களே அவர்களுடைய ஏழ்மைக்குக் காரணமாகும் என்பது முட்டாள்தனமாகும். ஏழைகளின் வாழ்க்கை இருள்சூழ்ந்தது; எந்திர வாழ்க்கை; சலிப்புத் தட்டக்கூடியது. உழைப்பு என்னும் பாலைவனத்திலே உழன்று கிடக்கும் அவர்களுக்கு எப்போதாவது நடைபெறும் திருமண விழாவின் ஆட்டமும் பாட்டும் இன்பம் அளிக்கும் சோலையாக விளங்குகின்றன. இம்மாற்றமும் இல்லையென்றால் அவர்கள் வாழ்க்கை என்றுமே வறண்ட பாலைவனந்தான். இந்த ஆறுதலும் அவர்களுக்கு இல்லையென்றால் அதைவிடக் கொடுமையானது வேறெதுவுமே இருக்க



தாகூருடன் நேரு

முடியாது. திருமணநாள் போன்ற ஒரு சில சமயங்களில்தானே அவர்களுடைய துன்ப வாழ்க்கையிலே சிரிப்பொலி என்னும் இன்ப நிழலைக் காண முடியும்! வறுமைக் கடலிலே மூழ்கித் தத்தளிக்கும் ஏழைகளின் சிறு கேளிக்கையைக் கண்டா, 'வீண்செலவை ஒழித்துக் கட்ட வேண்டும்', 'ஆடம்பரத்தைக் குறைக்க வேண்டும்' என்று வீரப் பேச்சுப் பேச வேண்டும்? அப்படிப்பேசி அவர்களுடைய வாழ்க்கையை இப்போது இருப்பதிலும் துன்பம் மிகுந்ததாக ஆக்கிவிடக்கூடாது.

நடுத்தர வகுப்பினருக்கும் அப்படியே. திருமண விழாக்கள் வீண் ஆடம்பர மிக்கது எனினும் அவை தூர உறவினரும் பழைய நண்பர்களும் நீண்ட காலத்திற்குப் பின்பாவது மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பளிக்கின்றன. இந்தியா பெரிய நாடு. நண்பர்கள் ஒருவரையொருவர் சந்திப்பது அரிது. அதுவும் பல நண்பர்கள் ஒன்றாக ஒரே சமயத்தில் சந்திப்பது அதனினும் அரிது. எனவே உற்றாரும் உறவினரும் நண்பர்களும் ஒரே சமயத்தில் ஒன்றுசேர வாய்ப்பளிக்கும் திருமணங்கள் பெருவிழாக்களாகத் திகழ்கின்றன. திருமண விழாக்களுக்குப் போட்டியாக இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் அரசியல் கூட்டம், மகாநாடு, அல்லது காங்கிரஸ், சமூகக் கூட்டுறவு என்ற முறையில்கூட இது திருமணங்களைவிடப் பல வகையிலும் சிறந்ததாக விளங்குகின்றது.



பெர்னாட்ஷாவுடன் நேரு

காஷ்மீரிகள் இந்தியாவிலுள்ள வேறு பலரைப்போல், குறிப்பாக வடஇந்தியரைப்போல், பெண்கள் திரைமறைவில் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டு முறையாகிய பர்தா என்னும் பழக்கத்தை என்றுமே பின்பற்றியது கிடையாது. அவர்கள் இந்தியச் சமவெளிகளில் குடியேறியபோது, அங்கு இப்பழக்கம் நிலவி வருவதைக் கண்டனர். அவர்கள் இப்பழக்கத்தை விரும்பவில்லையெனினும், இது சமூக நிலையின் இன்றியமையாத அடையாளமாகக் கருதப்பட்டதால், வேறு வழியின்றி இதைத் தழுவினர். எனினும் இப்பழக்கத்தைத் தீவிரமாகப் பின்பற்றவில்லை. காஷ்மீரிகள் அல்லாத பிறரோடு பழகும்போது இப்பழக்கத்தைப் பின்பற்றினரே அல்லாமல் தங்களுக்குள் வழக்கம்போல் ஆண்களும் பெண்களும் சுதந்தரமாகவே பழகி வந்தனர். எந்தக் காஷ்மீரியும் எந்தக் காஷ்மீரி வீட்டுக்கும் சுதந்தரமாகப் போகலாம், வரலாம். எத்தகைய சமூகத் தடையும் கிடையாது. காஷ்மீரிகளின் விருந்துகளிலும் விழாக்களிலும் (பெரும்பாலும் பெண்கள் எல்லோரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்த போதிலும்) ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாகக் கலந்து கொள்வர். அதே போன்றுதான் பையன்களும் பெண்களும் எனினும் அவர்களுக்கு இக்கால மேனாட்டுச் சுதந்தரம் கிடையாது.

இப்படியாகக் கழிந்தது என் குழந்தைப் பருவம். சில சமயம் குடும்பச் சண்டைகள் நடந்தன. பெரிய குடும்பத்தில் எப்போதாவது குடும்பச் சண்டைகள் ஏற்படுவது இயற்கையே. இச்சண்டைகள் வழக்கத்திற்கு மாறாகப் பெரிய சண்டைகளாக மாற நேர்ந்தால், அவை என் தந்தையாரின் காதுக்கு எட்டிவிடும். அப்போது அவர் சினங்கொள்வார். இவை யாவும் பெண்களின் மடமையால்தான் நிகழ்கின்றன என்று எண்ணுவார். என்ன நடந்தது என்பது எனக்குச் சரியாக விளங்காது. ஆனால் சண்டை பிடித்தவர்கள் நடந்து கொண்ட முறையிலிருந்து ஏதோ தவறு நேர்ந்துள்ளது என்று மட்டும் தோன்றும். இச்சண்டைகளைக் கண்டு வருந்தினேன். இவைகளில் என் தந்தையார் தலையிட நேர்ந்தால் எல்லோரும் நடுங்குவர்.

அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. எனக்குச் சுமார் ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். அலகாபாத்திலிருந்த குதிரைப் படையைச் சேர்ந்த குதிரை வீரர் ஒருவரோடு ஒவ்வொரு நாளும் நான் குதிரைச் சவாரி செய்வது வழக்கம். ஒருநாள் நான் வழியில் விழுந்துவிட்டேன். என் அழகிய குதிரை தனியாக வீடு திரும்பியது. டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்த என் தந்தையார், குதிரை மட்டும் தனியாக வீடு திரும்பியதைக் கண்டு திகைத்தார். அவரும் மற்றவர்களும் என்னைத் தேடிக் கண்டுபிடிக்க ஓர் ஊர்வலமாகவே கிளம்பி விட்டனர். வழியிலே என்னைக் கண்டனர். தீரச் செயலைப் புரிந்த வீரனை வரவேற்க வருவதுபோன்று!

(ஜெயா அருணாசலம் மொழி பெயர்த்த ஜவகர்லால் நேரு சுய சரிதை' என்னும் நூலிலிருந்து.)

பார்த்தவர்கள் எல்லோரிடையிலும் அவர் மிகுந்த வலிமையும் ஊக்கமும் உடையவராகத் தோன்றினார். நானும் பெரியவனாக வளரும்போது அப்பாவைப் போலவே இருக்க வேண்டும் என்று எண்ணினேன். நான் எவ்வளவுக்கெவ்வளவு அவரை மதித்தேனோ, நேசித்தேனோ அவ்வளவுக்கவ்வளவு அவரைக் கண்டு அஞ்சினேன். அவர் பணியாட்கள் பேரிலும் மற்றவர்கள் பேரிலும் எரிந்து விழுவதைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவரைக் கண்டு அஞ்சி நடுங்கினேன். அவருடைய சினம் பொல்லாதது. இவ்வளவு காலமாகியும் அந்த மாதிரிச் சினத்தை நான் இதுவரையில் கண்டதில்லை. ஆனால், நல்ல வேளையாக அவருக்கு வேடிக்கையியல்பும் தளராத மனத்திட்பமும் இருந்ததால், அவர் தன் சினத்தை அடக்கிக் கொள்ள முடிந்தது. வயது முதிர முதிர, சினத்தை அடக்கும் ஆற்றலும் மிகுந்து வந்தது. முன்போல் கடுஞ்சினம் கொள்ளும் பழக்கமும் மறைந்து போயிற்று.

அவருடைய கோபத்துக்கு நான் ஒரு சமயம் ஆளாக நேர்ந்தது. அப்போது எனக்கு ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும். அவருடைய அலுவலக மேஜையின் மேல் இரண்டு பௌண்டன் பேனாக்கள் இருக்கக் கண்டேன். அவைகளின் பேரில் எனக்கு ஆசை பிறந்துவிட்டது. தந்தையாருக்கு இரண்டு பேனாக்களும் தேவையாக இருக்காது என்று எண்ணி ஒரு பேனாவை எடுத்துக் கொண்டேன். பின்னர் பேனாவைக் காணவில்லையென்று தேடினார்கள். அச்சத்தால் நான் உண்மையைச் சொல்லவில்லை. கடைசியில் பேனாவைக் கண்டு பிடித்து விட்டார்கள். என் குற்றம் வெளியாகிவிட்டது. தந்தைக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது. கடுஞ் சினத்தில், நான் குழந்தையென்பதையும் பாராமல், என்னை நையப் புடைத்துவிட்டார். வலியையும் அவமானத்தையும் தாங்க முடியாமல் நான் அன்னையிடம் ஓடினேன். பல நாட்கள் வரையில் வலியிருந்தது. களிம்புகளையும் மருந்துகளையும் பூசி வலியைப் போக்கினர்.

அவர் எனக்கு இவ்வளவு கொடிய தண்டனை கொடுத்துங் கூட நான் அவரை நோகவில்லை. அது சற்று அதிகம் எனினும் அதை என் குற்றத்திற்கேற்ற தண்டனையாகவே கருதினேன். தந்தையிடமிருந்த அன்பும் ஈடுபாடும் குறையவில்லை. வெளியிலும் அச்சம் மிகுந்தது. தாயாரிடம் அப்படியில்லை. அவரிடம் எனக்கு என்றுமே அச்சம் கிடையாது. நான் என்ன செய்தாலும் அவர் பொறுத்துக் கொள்வார். அப்படியிருக்கும்போது அவரைக் கண்டால் அச்சம் ஏற்படுமா? அன்னையார் என்பால் அளவு கடந்த அன்பு செலுத்தினார். அவரிடம் குறும்பு செய்வேன். தந்தையைவிடத் தாயிடந்தான் நான் நெருங்கிப் பழகினேன். எதையும் தாயிடந்தான் சொல்லுவேன். எடுத்ததற்கெல்லாம் அவரிடந்தான் ஓடுவேன். தாயார் குள்ளமாகவும் மெலிந்து ஒல்லியாகவும் இருப்பார். விரைவில் நானும் அவருடைய உயரத்தளவுக்கு வளர்ந்துவிட்டேன். இதனால் நான் அவருக்குச் சமமாகி விட்டதாக எண்ணினேன். அவருடைய அழகைக் கண்டு லயித்தேன். அவருடைய அழகிய சிறிய கைகளையும் பாதங்களையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேன். அவர் புதிதாக காஷ்மீரத்திலிருந்து வந்து குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர்கள் இரண்டு தலைமுறைக்கு முன்புதான் இந்தியாவுக்கு வந்தனர். ஆகவே, அவர் அவ்வளவு அழகாக இருந்ததில் வியப்பொன்றும் இல்லை.



இளமைப் பருவ நேரு

என் அன்னைக்கு அடுத்தபடியாக என் தந்தையாருடைய கணக்கர் முன்ஷி முபாரக் அலி என்பவரிடம் நான் நெருங்கிப் பழகினேன். அவர் பதானில் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். 1857-ஆம் ஆண்டில் நடந்த இந்தியக் கிளர்ச்சியின்போது அவருடைய குடும்பம் சீரழிந்தது. ஆங்கிலப் படையினர் அக்குடும்பத்தில் பலரைக் கொன்றுவிட்டனர். இத் துன்பத்தில் மூழ்கியெழுந்த அலி, பண்பட்டு எதையும் பொறுத்துக் கொள்ளக்கூடிய பொறுமைசாலியாக விளங்கினார். துன்பம் மனிதரின் மாற்றை உயர்த்தும் புடம் போலும்! எல்லோரிடமும் பொறுமையுடையவராக நடந்து கொள்வார். அதிலும் குழந்தைகளிடம் தனியன்பு காட்டுவார். ஆகவே, எனக்கு மன வருத்தமோ துன்பமோ நேர்ந்த போதெல்லாம் அவர் எனக்குப் புகலிடமாக இருந்தார். தாடி வளர்த்திருந்த அவர் எனக்குப் பழைய காலத்தவராகத் தோன்றினார். தாவிச் சென்று அவரைத் தழுவிக் கொண்டு அவர் கதை சொல்வதைக் கேட்பேன் சலிப்பே தோன்றாது. அவர் அரபிக் கதைகள், பிற கதைகள், 1857-58ல் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் முதலியவைகளைச் சுவையோடு சொல்வார். அவர் சொல்லும் கதைகளை மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருப்பேன். நான்வளர்ந்து பெரியவனான பின்புதான் அவர் காலஞ்சென்றார். அவர் என் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டார். அவருடைய அன்பையும் பண்பையும் நான் என்றுமே மறக்க முடியாது.



தந்தை மோதிலாலுடன்

முபாரக் அலி சொன்ன கதைகளையன்றி என் அன்னையும் பெரிய தாயாரும் சொன்ன புராணக் கதைகளையும், மகாபாரதம், இராமாயணம் ஆகிய காவியக் கதைகளையும் பிற கதைகளையும் நான் கேட்டுள்ளேன். என் பெரிய தாயார் (காலஞ்சென்ற பண்டித நந்தலாலின் மனைவி) பண்டைக் கால நூல்களை நன்கு கற்றறிந்தவர். அவருக்குக் கணக்கற்ற கதைகள் தெரியும். கதைக்களஞ்சியமாகத் திகழ்ந்தார் அவர். அவர் சொன்ன கதைகளைக் கேட்டுக் கேட்டு இந்தியப் புராணங்களையும் நாட்டிலக்கியத்தையும் நான் நன்கு அறிந்து கொண்டேன்.

சமயத்தைப் பற்றி எனக்குத் தெளிவான கருத்துக்கள் உருவாகவில்லை. சமயம் பெண்களுக்கே உரியது என்று எண்ணினேன். தந்தையாரும் அண்ணன்மார்களும் அதில் அவ்வளவாகக் கருத்துச் செலுத்தவில்லை. அதை வேடிக்கையாகவே கருதினர். ஆனால், பெண்கள் காலாகாலங்களில் நோன்பு கொண்டாடினர்; வழிபாடுகளையும் தவறாமல் செய்துவந்தனர். நான் வெளிப்பட பெரியவர்களைப்போல் அவைகளிலெல்லாம் அக்கறை இல்லாதவன்போல் நடந்து கொண்டாலும் உண்மையில் அவைகளைக் கண்டு இன்புற்றேன். சில சமயம் அன்னையுடன் அல்லது பெரியன்னையுடன் கங்கையில் நீராடச்செல்வேன். சில சமயம் அலகாபாத்திலுள்ள கோயில்களுக்கோ, காசியிலுள்ள கோயில்களுக்கோ, அல்லது பிற இடங்களிலுள்ள கோயில்களுக்கோ சென்று வருவோம். அல்லது புனிதர் என்று புகழ்பெற்ற துறவி (சந்நியாசி)யைக் கண்டு வருவோம்.

இவையன்றித் திருவிழா நாட்கள் பல! ஒருவர்மேல் ஒருவர் தண்ணீரை ஊற்றிக் கொண்டு கோலாகலமாக விளையாடி மகிழும் ஹோலிப்பண்டிகை. வீடுகளெங்கும் ஆயிரக்கணக்கான அகல் விளக்குகள் ஒளி வீசும் தீபாவளி என்னும் ஒளி விழா; சிறையில் கிருஷ்ணன் நள்ளிரவில் பிறந்ததைக் கொண்டாடும் ஜென்மாஷ்டமி (ஆனால் அன்று நள்ளிரவு வரையில் விழித்திருப்பது கடினம்); இராமச்சந்திரனின் பழைய கதையையும் அவனுடைய இலங்கை வெற்றியையும் நாடகங்களோடும் ஊர்வலங்களோடும் கொண்டாடும் தசராவும் ராம் லீலையும் குழந்தைகளாகிய நாங்கள் இவ்விழா வேடிக்கைகளைக் கண்டு களித்ததோடு, இஸ்லாமியப் பண்டிகை வேடிக்கைகளையும் கண்டு களித்தோம். மொகரம் பண்டிகை ஊர்வலங்களை வேடிக்கை பார்ப்போம். ஈத் பண்டிகையின்போது முபாரக் அலி நல்ல உடைகளை அணிந்து கொண்டு தொழுகைக்காகப் பெரிய மசூதிக்குச் செல்வார். நான் அவர் வீட்டுக்குச் சென்று இனிப்புத் தின்பண்டங்களை உண்பேன். இவையன்றி, இந்துப் பஞ்சாங்கத்தில் காணும் சிறு நோன்புகள் பல.

காஷ்மீரிகளாகிய எங்களிடையே மற்ற இந்துக்கள் கொண்டாடாத தனிப் பண்டிகைகள் வேறு இருந்தன. அவைகளில் முதன்மையானது சம்வத் பஞ்சாங்கப்படி வரும் புத்தாண்டு நாள் (நௌரோஜ்). புத்தாண்டு நாள் எங்களுக்குச் சிறப்பு நாள். எல்லோரும் புத்தாடை அணிந்து கொள்வோம். சிறுவர்களாகிய எங்களுக்குக் கைச் செலவுக்குக் காசும் கிடைக்கும்!

இவையெல்லாவற்றுக்கும் மேலாக நான் விரும்பும் ஆண்டு விழா ஒன்று உண்டு. அவ்விழாவில் நான்தான் நடுநாயகம். அதுதான் என் பிறந்தநாள் விழா. அது ஆண்டிலே ஒரு நாள்; தனி நாள்; இன்பம் தரும் புனிதநாள். பிறந்த நாள் விழா என்றால் எனக்கு ஒரே குதூகலந்தான். அந்நாளில் விடியற்காலையில் என்னைப் பெரிய துலாக்கோலில் நிறுத்தி, என் எடையளவு கோதுமை முதலிய பொருட்களை வைத்து நிறுத்து, அவைகளை ஏழைகளுக்கு வழங்குவர். பின்பு எனக்குப் புத்தாடைகள் அணிவிப்பர்; ஏராளமான வெகுமதிகள் வந்து குவியும். பிற்பகலில் விருந்து நடைபெறும். இவ்வளவு சிறப்பான பிறந்தநாள் விழா ஆண்டுக்கு ஒருமுறைதான் வரும் என்பது அப்போது எனக்குத் தெரியாது. ஆகவே பிறந்தநாள் விழா அடிக்கடி வரவில்லையே என்று வருந்தினேன். வருந்தியதோடு வாளா இருக்கவில்லை. அவ்விழாவை அடிக்கடி கொண்டாட வேண்டுமென்று வம்பு செய்தேன். பிறந்தநாள்

# சிபாரிசுப்படி அடியுரமிட

# விஜய் 17-17-17






நெல் பயிருக்கு விவசாய இலாகா சிபாரிசுப்படி அடியுரமாக தழை, மணி, சாம்பல் மூன்று சத்துக்களும் ஒரே சீரான அளவில் தேவைப்படுகிறது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரே உரம் விஜய் 17-17-17. இதைத் தெளிவாகக் கீழே காணலாம்.

| ஏக்கருக்கு தேவைப்படும் சத்துக்களின் அளவு (கிலோவில்) | | | | ஏக்கருக்கு விஜய் உரத்தின் அளவு (கிலோவில்) |
|---|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் | |
| அடியுரம் | 15 | 15 | 15 | விஜய் 17-17-17 90 |
| மேலுரம் | 15 | — | — | விஜய் யூரியா 35 |

5 கிலோ யூரியாவுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணக்கு என்ற விகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

சமச்சீர் உரமிட

## விஜய்



மேலும் நெல் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001




விஜய் 17-17-17 100 கிலோவில் 17 கிலோ தழைச் சத்து, 17 கிலோ மணிச் சத்து, மற்றும் 17 கிலோ சாம்பல் சத்து அடங்கியுள்ளன. இந்தப் பயிருணவுச் சத்துக்கள் சரிவிகித அளவில் இருப்பதற்காக 12.5 கிலோ குறு மணல் சேர்க்கபபட்டுள்ளது. குறு மணலானது ரசாயன சேர்க்கை அற்றது. ஆகவே இதனே உரத்துடன் சேர்க்கும் பொழுது உரத்தின் தரம் குறைவதில்லை. மேலும் உரக்கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் குறுமணல் சேர்க்கை அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

HTM-MFL-1182





# இசை மழை பொழியும் சிவபிரசாத்

அனைத்துலகக் கலாச்சாரஇலக்கிய, சமூக மற்றும் கல்வி நிறுவனமான 'வம்சி ஆர்ட் தியேட்டர்' சார்பில் 24-10-83 அன்று சென்னையில்ஆந்திரமாநிலத்தின் புகழ்பெற்ற கலைஞர் திரு கே. சிவபிரசாத் அவர்களின் 'விசில் இசை' நிகழ்ச்சி நடைபெற்றது.

விழா நிகழ்ச்சியைத் தெலுங்கு பட இயக்குநர் திரு தர்சகரத்ன தாசரி நாராயணராவ் குத்து விளக்கு ஏற்றித் தொடங்கி வைத்து, கலைஞர்களுக்குக் கேடயங்கள் வழங்கினார். படத் தயாரிப்பாளர் திரு எம். எஸ். ரெட்டி பாராட்டிப் பேசினார்.

வம்சி - தியேட்டர்ஸ் தலைவர் திரு எல். வி. ராமய்யா அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சிக்குப் புதுவை ஆளுநர் மேதகு கோனா பிரபாகரராவ் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றுகையில்,

"எனது அன்பு நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் எத்தனையோ பணிகளுக்கு இடையில், இதற்காக ஒரு சிறிது நேரம் ஒதுக்கி இக்கலைஞரைப் பாராட்ட வந்திருப்பது மிக்க மகிழ்ச்சிதருகிறது. பாரதப் பிரதமர் இந்தநிகழ்ச்சியை 45 நிமிடம் தொடர்ந்து ரசித்துக் கேட்டார். இலட்சம் ரூபாய் கிடைப்பதைக் காட்டிலும் மக்கள் ரசித்து விரும்புவதையே இக்கலைஞர் விரும்புகிறார். இதுபோன்ற பாராட்டுகள்தான் கலைஞர்களுக்குத் திருப்தி தரும்" என்று குறிப்பிட்டார்.

திரு கே. சிவபிரசாத் விசிலால் பாடிய இசை அடங்கிய 'கேசட்டை' மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் வெளியிட்டுப் பேசுகையில்,

"நானும் எவ்வளவோ பெரிய இசை மேதைகளின் நிகழ்ச்சிகளைக் கேட்டு இருக்கின்றேன். இதுபோல் நான் கேட்டதில்லை. இசைக்கு மொழி தேவையில்லை. ஆந்திரக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் கஷ்டப்பட்டு இந்தக் கலையை வளர்த்துள்ளார். கொஞ்சம் கூட சுருதி பேதம் மாற்றாமல், வார்த்தை பிசகாமல், வரி பிறழாமல்,இசையைப் பாடி,உள்ளத்தை நெகிழ வைத்தது மிகவும் பாராட்டத் தக்கது. உலகத்தைச் சுற்றிவந்தால் வெற்றி பெறுவீர்கள் என்று வாழ்த்துகின்றேன்" என்றார்.

திரு கே. சிவபிரசாத் விசில் இசை மூலம் தன்னுடைய 6 பேர் குழுவினருடன் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இசை நிகழ்ச்சி நடத்தி அவையோரை வியக்க வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் சிவப்பிரசாத்திற்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

"நம்மையெல்லாம் கட்டுண்டவர்களாக, மறந்த உள்ளத்தவர்களாக மாற்றிய சிவபிரசாத் அவர்களே! நான் நினைத்து வந்தது வேறு, நடந்தது வேறு.

"சட்டப்பேரவையில் இலங்கை தமிழர் பிரச்சினையின் மீது 3 நாட்கள் விவாதம் நடக்க உள்ளது. இதை எண்ணி, அதற்கு வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டிய நிலை உள்ளபோது- நான் இவர்களுக்கு வாக்குக் கொடுத்தபடி வரவேண்டும் என்று எண்ணி இங்கு வந்தேன்.





விசில் ஒலி மூலம் இசை மழை பொழியும் கலையில் சிவபிரசாத் நிபுணராக விளங்குகிறார். சிறந்த இசைக் கலைஞர் மரபில் தோன்றியுள்ள இவர், இசை வானத்தில் ஒரு தாரகையாக ஒளி வீசித் திகழ்கிறார்.



## முன்னாள் படைவீரர் குழந்தைகளுக்கு

தென்வட்டாரப் படைப் பிரிவில் பணி புரிந்துள்ள முன்னாள், படைவீரர்களின் ஏழ்மையான 9-வது மற்றும் பத்தாவது வகுப்புகள் பயிலும் குழந்தைகளுக்கு இராணுவ மகளிர் நல சங்கத்திலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள் முந்தைய வகுப்பின் கடைசித் தேர்வில் 60 சதவிகிதம் மதிப்பெண் கள் பெற்றிருக்க வேண்டும்.

தகுதியுள்ள முன்னாள் படைவீரர்கள் புதுக்கோட்டை அம்பாள்புரம் 2ஆம் வீதியில் உள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநரை அணுகி உரிய படிவத்தினைப் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 1-12-83க்குள்

**Honorary Treasurer,**
**Army Wives Welfare Association,**
**C/o. Head Quarters,**
**Southern Command, Pune-1.**



''இந்த நிகழ்ச்சியை நடத்து கின்றவர்களிடம், இருக்கிற நிலை யைச் சொல்லி விட்டு, விரை வாகப் போகலாம் என்றுதான் எண்ணி வந்தேன். ஆனால் இங்கேயே இருக்கச் செய்துவிட் டது. காரணம் நானும் ஒரு கலைஞன். அந்த வகையில் இங்கே கலைஞரைப் பாராட்டக் கடமைப்பட்டவன்.

''குயிலின் இசையைக் கேட் டால் எப்படி இருக்குமோ அது போல் இவரது இசை இருந்தது. எங்காவது வழுக்கல், சிதறல் இல்லாமல், ராகத்தை ஆலா பனை செய்யும்போது தடங்கல் எதுவுமின்றி இந்தச் சிறு வயதி லேயே இவ்வளவு ஞானத்தைப் பெற்றவராக இவர் உள்ளார்.

''சிவபிரசாத் ஆசிரியர் ஒரு புல்லாங்குழல் வித்வான் என் றார்கள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? அந்த ஆசிரி யரை நான் என் மனக்கண் முன்னால் பார்க்கிறேன். கருவி யின் உதவியின்றி நாதத்தைச் சங்கீதமாக வெளியே தரும் சிடனைத் தந்த அந்த ஆசான் நம் கண்களில் உள்ளார். அவர் நீண்டகாலம் வாழட்டும், வள ரட்டும்.

''சிவப்பிரசாத் மிகவும்அடக்க மாக இருப்பதைப் பார்க்கிறோம். நிறைகுடம் தளும்பாது. அப்படி நிறைகுடமாக உள்ள இவர் குன்றிலிட்ட தீபமாகப் புகழ் பெற்றுப் பல்லாண்டுக் காலம் வாழ வேண்டும். இவர் புகழ் ஓங்குக. இவர் தனது சிடர்களை உருவாக்கி, சிறந்த கலைஞர் களாக ஆக்கித் தர வேண்டும்.''

**—அ. மருதவிநாயகம்.**

மொத்தம் 6 பேர் கொண்ட குழு திரு கே. சிவபிரசாத் தலைமையில் இசைநிகழ்ச்சியை நடத்தி யது. திரு கே. சிவபிரசாத், பி.காம். பட்டதாரி; ஆந்திர அரசு செய்தித்துறை அலுவலர்.

வாய்ப்பாட்டு இல்லாமல், தாளங்களுக்கு ஏற்ப விசில் அடித்துக்கொண்டே அம்சத்வனி, இந்துஸ்தானி ராகத்தையும் திரு கே. சிவபிரசாத் காட்டினார். 'சங்கராபரணம்' படத்தில் வரும் ஒரு பாடலையும் அவர் விசில் ஓசையிலேயே இசைத்து எல்லோரின் பாராட்டுதலையும் பெற்றார்.



# பெண் விடுதலைக்குப் போராடிய பெருமகன் ராசாராம் மோகன்ராய்


மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர்
சிலம்புச்செல்வர் டாக்டர்
**ம. பொ. சிவஞானம்**


செப்டம்பர் 17,

இந்தியாவின் புரட்சிகரமான சமய சமூக சீர்திருத்தவாதியான ராசாராம்மோகன்ராய் மறைந்த நாளாகும். அந்த மகானைத் தமிழினத்தாரும் நன்றியோடு நினைவில் கொள்ள நியாய முண்டு.

ராம்மோகனர், 1774ல் வங்கா ளத்திலுள்ள அந்தணர் குடும்பம் ஒன்றிலே பிறந்தார். அந்தப் பெருமகனார், தம்முடைய குலத் தின்-குடும்பத்தின் வைதிக ஆச் சாரங்களை எதிர்த்து சமூக சீர் திருத்த இயக்கத்தைத் தொடங் கினார்.

தமிழகத்தில் இராமலிங்க சுவாமிகள் தோன்றுவதற்குஅரை நூற்றாண்டுக்கு முன்பு வங்கா ளத்திலே ராம்மோகனர் தோன்றி னார் என்பதனை இங்கு நினை வில் கொள்ள வேண்டும்.

ராய் பிறப்பால் வங்காளியா யினும், பாரத சமுதாயம் முழு வதிலுமே சமயசமூக சீர்திருத்தப் புரட்சியைத் தோற்றுவித்தவரா வார்.

ராய் உருவ வழிபாட்டை எதிர்த்துப் போராடினார். அருவ மான பிரமத்தை உயிர்க்குல மனைத்துக்குமான ஒரே தெய்வ மாகக் கருதினார். அவர் கருதிய தோடு மனித சமுதாயம் முழு வதும் அப்படியே கருதவேண்டு மென்றும் பிரச்சாரம் செய்தார். தமக்குள்ள பிறப்புரிமை காரண மாக, ஏக தெய்வ அருவ வழி பாட்டை இந்துக்கள் மத்தியிலே புகுத்த முயன்று வைதிகக் கோட் டையைத் தாக்கினார்.

ராம்மோகனரின் மற்றொரு புரட்சிகரமான கொள்கை, பெண் குலத்தின் விடுதலையாகும். ஆண் களைப் போலவே, பெண்களுக் கும் சம நிலையில் கல்வி கற்பிக்க வேண்டுமென்று போராடினார்.

தம் காலத்தில் வழக்கத்தி லிருந்த 'சதி' என்னும் மூடத் தனத்தை ஒழிக்க சட்டம் செய்யு மாறு பிரிட்டிஷ் ஆட்சியை வற் புறுத்தினார்.

ஆம்; கணவன் இறந்தால் மனைவி 'உடன் கட்டை' ஏறும் வழக்கத்திற்கு வட புலத்தார் 'சதி' என்று பெயர் வைத்துள்ள னர். 'பதி' இறந்தால் அவனுடைய பிணத்தை எரிக்கும் போது 'சதி' எனப்படும் மனைவியும் அந்த எரியிலே விழுந்தாக வேண்டும். அவளாக விரும்பி விழாவிட்டால் அவளைத் தூக்கிப் போட்டு எரித்துவிடும் கொலை வழக்கமும் மத சம்மதமாக இருந்தது. அதை எதிர்த்துப் போராடி சட்டத்தின் மூலம் தடுத்துவிட்டார் ராம் மோகனர்.

ராம்மோகனர் காலத்திலே தமிழகத்திலும் பெண்ணடிமைத் தனம் கொடிகட்டிப் பறந்தது. ஆண்களோடு சமமாகக் கல்வி கற்கப் பெண்களுக்குத் தடை யிருந்தது. அந்தத் தடையிலிருந்து தமிழகத்துப் பெண்களையும் விடு விக்கத்தான் வங்காளியான ராம் மோகனர் புரட்சி செய்தார்.

தந்தையின் சொத்திலே மக னுக்குத்தான் உரிமை உண்டென் றும், பெண்ணாகப் பிறந்து விட்ட பாவத்தால் மகளுக்கு அச்சொத் தில் உரிமை இல்லை என்றும் சாத் திரங்கள் கூறின. அந்தச் சாத்தி ரங்களை எதிர்த்து மகளிர்க்கும் வாரிசுரிமை வழங்க வேண்டு

மென்று ராம்மோகனர் போராடினார்.

கணவனிறந்தால் அவனுடைய உடலோடு, உயிரோடுள்ள மனைவியையும் சேர்த்துக் கட்டாயப் படுத்தி எரித்துவிடும் மடமை தமிழகத்திலுமிருந்தது. சங்க காலந்தொட்டு, புறநானூற்றிலே 'உடன் கட்டை ஏறும்' வழக்கம் பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. 'மணிமேகலை'யிலே கணவனிறந்தால் அவனுடைய உடலைத் தழுவி மனைவியும் எரியில் புகுந்து சாகவேண்டுமென்ற வழக்கமிருந்தது குறிப்பிடப்படுகிறது.

ஆயிரமாயிரம் ஆண்டுக்காலம் தமிழகத்தில் நிலவிவந்த உடன் கட்டை ஏறும் கொடுமையை எதிர்த்து தமிழரிலே எவரும் குரல் எழுப்பவில்லை. இளங்கோ வடிகள், தன்கணவனுடன் உடன் கட்டை ஏறாத கண்ணகியை நமக்கு அறிமுகப்படுத்துகிறார், சிலம்பிலே, கண்ணகி உடன் கட்டை ஏறவில்லை என்றாலும், உடன்கட்டை ஏறும் கொடுமையை எதிர்த்து இளங்கோ கூட எதுவும் சொல்லவில்லை.

வங்கத்தில் தோன்றிய ராம் மோகன்ராய்தான், தமிழகத்துப் பெண்களுக்காகவும் வாதாடி அன்றைய ஆங்கில அரசின் ஆதரவோடு சட்டத்தை உருவாக்கி, குமரி முதல் காஷ்மீரம் வரையுள்ள இந்துப் பெண்குலத்துக்கு உடன்கட்டை ஏறும் கொடுமையிலிருந்து விடுதலை தேடினார். வியப்பென்னவென்றால், ராம்மோகனரின் முயற்சியால் தமிழகத்துப் பெண்களுக்குக் கிடைத்திருக்கும் உயிர்ப் பிச்சையைத் தமிழகத்துச் சீர்திருத்தவாதிகள் வெளிப்படையாகப் பாராட்டி அவரைத் தங்கள் வழிகாட்டியாக கொள்ளாததாகும். பாரதியார் மட்டும் பாராட்டினார்.

ராம்மோகனர் இந்திய தேசிய எழுச்சியின் தந்தையெனப்படுகிறார். அவரை முன்னோடியாகக் கொண்டு, காந்தியடிகள் காலம் வரை பாரதத்தில் தோன்றிய தேசியத் தலைவர்களும் அவர்களுடைய தலைமையைப் பெற்றிருந்த பிரம சமாஜம்-ஆரிய சமாஜம்-இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற தேசிய இயக்கங்களும் பெண் குலத்தின் விடுதலைக்காக ஆற்றிய பணிகள் கொஞ்சமல்ல.

குழந்தைப் பெண்களின் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு, அவர்களுடைய வாழ்வையே கொலை செய்த 'பால்ய விவாகம்' என்னும் கொடுமையைக் தேசிய வாதிகள்தான் ஒழித்தனர்.

திரு அரிவிலாச சாரதா என்பவர், குழந்தைகளுக்கு மணம் செய்விக்கும் கொடுமையை எதிர்த்து இந்திய சட்டசபையிலே ஒரு சட்ட முன்வடிவை முன்மொழிந்து, அதைச் சட்டமாக்கி வைத்தார். அந்தச் சட்டத்திற்கு அவர் பெயரையே தந்து 'சாரதா சட்டம்' என்று அழைத்தது அப்போது இந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆங்கில அரசு. தமிழகத்துச் சீர்திருத்த வாதிகள் இதையும் தங்கள் நினைவில் கொள்ளத் தவறிவிட்டனர்.

ராசாராம் மோகனராய் இந்து மதத்தினரை மூட நம்பிக்கைகளிலிருந்து விடுதலை செய்ய அரும்பாடுபட்டார். ஆங்கிலம், பாரசிகம், பாலி, வங்கம், சமஸ்கிருதம் ஆகிய பல மொழிகளிலே ராம்மோகனர் நிறைபுலமை பெற்றிருந்தார்.

அவருடைய நினைவு நாளிலே, அந்தப் பெருமகனாரின், புரட்சிகரமான சமய சமூக சீர்திருத்தத் தொண்டுகளை நினைவில் கொண்டு, தமிழினத்தின் சார்பில் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

## பாதுகாக்கப்பட்ட தம்பதிகள்

சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குடும்ப நலத் திட்டப் பணிகளுக்காக ரூ. 1,010 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் தொகை இதுவரை குடும்பநலத் திட்டத்திற்காகச் செலவிட்ட தொகையில் 60 சதவீதம் ஆகும். இந்தத் தொகை பாதுகாக்கப்பட்ட தம்பதிகள் சதவீதத்தை 26லிருந்து 36 சதவீதமாக உயர்த்தச் செலவிடப்பட உள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பலனாகப் பாதுகாக்கப்பட்ட தம்பதியரின் எண்ணிக்கை 26 சதவீதமாக உள்ளது.

ஆறாவது திட்ட காலத்தின் இறுதியில் இந்த எண்ணிக்கை 36 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு நாட்டில் உள்ள 60 மாவட்டங்களில் எட்டப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் இறுதியில் பாதுகாக்கப்பட்ட தம்பதிகளின் எண்ணிக்கையை 60 சதவீதமாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## உலகச் சுற்றுலா நாள்

1983-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ஆம் நாள் உலகச் சுற்றுலா நாளாகக் கொண்டாடப்பட்டது.

"விடுமுறையும் சுற்றுலாவும் நமது உரிமை மட்டுமின்றி, கடமையுமாகும்" என்பதே உலகச் சுற்றுலா நாளின் 1983-ஆம் ஆண்டு முழக்கமாகும். இதனையொட்டி, மத்திய-மாநில அரசுகள், இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் ஏர்-இந்தியா ஆகியவை ஒரு வார காலத்திற்கு "நல்லெண்ண வாரம்" கொண்டாடின.

விமான நிலையங்களில் வந்திறங்கும் அந்நியச் சுற்றுலாப் பயணிகள் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர். அனைத்து ஓட்டல்களும் சிறப்பு வரவேற்பு அளித்ததோடு, பரிசுகளையும் வழங்கின.

# ஆதிதிராவிட இளைஞர்களுக்கு விசைத்தறி

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர் அடங்கிய தளவாய்புரம் கிராமம். தளவாய்புரத்திலும் சுற்றுப்புறங்களிலும் விவசாய நிலங்களில் வேலை செய்து இவர்கள் தினக்கூலி பெற்று வந்தனர். நாள்தோறும் ரூ. 4 முதல் ரூ. 8 வரையில் வரும் வருமானத்தைக் கொண்டு இவர்கள் எளிய வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

பருவமழை தவறியதால், விவசாயப்பணிகளை இழந்துவிட்ட ஆதிதிராவிடர்களும், பிற்பட்ட மக்களும், இதர வழிகளின் மூலம் தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள ஆவலாயிருந்தனர். 'டிரைசெம்' திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கத் தயாராக இருந்த வட்டார வளர்ச்சி அதிகாரியை அவர்கள் சந்தித்தனர்.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ15 இலட்சமும், சிறப்புப் பகுதித் திட்டத்தின் கீழ் ரூ. 10 இலட்சமும் கொண்டு உருவாக்கப்பட்ட தளவாய்புரம் விசைத்தறி வளாகம் இந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வேலைக்கு எடுத்துக் கொள்ள முன்வந்துள்ளது.

ஆறு மாத காலப் பயிற்சியின் போது 60 ஆதிதிராவிட மற்றும் 23 பிற்பட்ட இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ. 125 மாத உதவித் தொகையாகவும், ரூ. 50 முகவர் உரிமை விழுக்காடாகவும் வழங்கப்பட்டது. தனிப்பட்ட பதிவேடு ஒன்றில் ஒவ்வொரு இளைஞரின் திறன் குறித்துப் பதிவு செய்யப்பட்டது. வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்த இளைஞர்கள் விசைத்தறி வளாகத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாண்டு மார்ச் முதல் மூன்று இளைஞர் அணிகளுக்கு இவ்வளாகம் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

கடுமையான மின்வெட்டு இருந்த போதிலும், துவக்கப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் 74,000 மீட்டர் துணிகளை இந்த வளாகம் நெய்து, தேசிய ஜவுளி கார்ப்பொரேசன்' (என்டைஸ்) மூலம் விற்பனை செய்துள்ளது. மின்தட்டுப்பாடு நிலையைச் சமாளிப்பதற்காக, இரண்டு 'ஜெனரேட்டர்கள் வாங்கப்பட்டு 96 ஊழியர்களுக்குத் தொய்வின்றி வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 'டிரைசெம்' திட்டத்தின் கீழ் சுமார் 200 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி பெறும் அனைத்து இளைஞர்களுக்கும் இந்த ஆலையிலேயே வேலை வாய்ப்புக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.


எட்டாவது வகுப்பு வரை படித்த சாத்தூரைச் சேர்ந்த சமுத்திரம் இந்த ஆலையில் ஐந்தாவது மாதப் பயிற்சியைப் பெறுகிறார். மனைவி குழந்தை மற்றும் பெற்றோரடங்கிய இவரது குடும்பம், விவசாயப்பணிகளில் ஈடுபட்டு ஈட்டிய ரூ. 6 வருவாயுடன் வறுமையில் உழன்று கொண்டிருந்தது. தற்போது வழங்கப்படும் ரூ. 125 உதவித் தொகை மற்றும் ரூ. 50 முகவர் உரிமை விழுக்காடு இக்குடும்பத்திற்குக் கூடுதல் வருவாயை ஏற்படுத்தித் தந்துள்ளது. விசைத்தறி ஆலையில் வேலை கிடைத்தவுடன் நல்லதொரு வாழ்க்கையை நடத்த முடியும் என்று சமுத்திரம் நம்பிக்கையுடன் உள்ளார். சமுத்திரம் போன்று முன்னாள் விவசாயத் தொழிலாளர்களான குருசாமி, இசக்கி முத்து மற்றும் காளியப்பன் போன்றோரும் திறமைமிக்க நெசவாளர்களாகத் திகழ்கின்றனர்.

தமிழகமெங்கிலும், இத்தகைய ஏழு விசைத்தறி ஆலைகள் உள்ளன. ஆதிதிராவிடத் தொழிலாளர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி வழங்கி, திறமைமிக்க நெசவாளர்களாக உருவாக்குவதில் இந்த ஆலைகள் கவனம் செலுத்துகின்றன. பல குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்து மீண்டு, நல்ல நிலையை அடைய இத்தகைய வேலை வாய்ப்புகள் மூலம் 'டிரைசெம்' திட்டம் உதவிக்கரம் நீட்டி வருகின்றது.

## அண்ணாவின் வடிவம்

வள்ளுவரின் நுண்ணறிவு; புத்தரது
தண்கருணை; மதுவிலக்குக்
கொள்கையிலே காந்திநெறி; குடியரசில்
லெனின் பாதை; கோதில்லாத
உள்ளமதில் பெருந்தன்மை; ஒப்புரவு;
சீர்திருத்தம்; உரிமை வேட்கை
வள்ளன்மை அத்தனையும் வடிவான
அண்ணாவின் மாண்பு வாழ்க!

கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்





# சகலருக்கும் சத்துணவு

ஆன்றோர் உயிரெனக் கருதிய உழவை ஓங்கச் செய்யவும்,உணவு அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும், அரும் பணியாற்றி வருகிறது, உலக உணவு -விவசாய நிறுவனம்.

உலக சமாதானம், உலக மேம்பாடு ஆகியவற்றிற்காக அரும் பணிகள் ஆற்றிவரும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் அங்கம்தான் உலக உணவு-விவசாய நிறுவனமாகும்!

உலக மக்களிடையே சத்துணவுக் குறைபாட்டைப் போக்குவது, உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவில் பற்றாக்குறை ஏற்படாது பாதுகாப்புடன் வாழ உலக நாடுகளுக்கு உதவுவது, காடுகளின் வளம் பெருக்கிச் சுற்றுப்புறச் சூழல் காக்கவும், அதன் வழி மண் அரிப்பு ஏற்படாது தடுக்கவும் உதவுவது போன்ற அரும்பணிகளை ஆற்றி வருகின்றது இந்நிறுவனம்.

உலகத்தில் வாழும் 4,000 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களில், ஏறத்தாழ 800 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே (Absolute Poverty) வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் கோடானு கோடிப்பேர் வாடி வதங்கிச் சருகாகிக் கொண்டிருப்பதாகவும், பசி பட்டினியால் ஆண்டுதோறும் மாண்டுமடிபவர்கள் இத்தனைப்பேர் என அறுதியிட்டுக் கூறவியலாது என்றும் உலக உணவு விவசாய நிறுவனம் தன் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

உலக உணவு-விவசாய நிறுவனத்தின் பொது இயக்குநர் திரு. எட்வர்டு சாவொமா (Edward Saouma) 'உயிர் வாழத் தேவைப்படும் உணவின் அளவில் மிகக் குறைந்த அளவையாவது பெறலாம் என்ற நம்பிக்கையில், கொடிய, மட்டுமீறிய, ஆர்வமற்ற, கடுமையான அடிமை வேலைகளை நீண்ட நெடுங்காலமாக மனித சமுதாயத்தின் பெரும் பகுதி நாள் தோறும் செய்து கொண்டிருக்கிறது' என்கிறார்.

இத்தகைய வாழ்வு நடத்தும் உலக மக்களிடையே நிலவும் பசி, பட்டினியை ஒழிக்க வேண்டும். வளர்ந்துவிட்ட நாடுகளும், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும் உலகிலிருந்து பசி பட்டினியை ஒழிக்க என்னென்ன பணிகளாற்ற வேண்டும் என்பதை உலகறியச் செய்வதற்காகத்தான் உலக உணவு நாள் கொண்டாடப் படுகிறது.


'உலகிலிருந்து பசி பட்டினியைப் போக்கும் அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்கிறது, உலக உணவு-விவசாய நிறுவனம் அமைத்த திரு. பிராண்ட் குழுவின் அறிக்கை; நிதி ஆதாரங்கள் கிட்டினால் உலகத் தேவைக்கு ஏற்ப உணவை உற்பத்தி செய்யமுடியும் என்றும், கி.பி.2000க்குள் உலகத் தேவை நிறைவு செய்யும் அளவுக்கான உணவு உற்பத்தியைப் பெருக்கத் தேவைப்படும் நிதியின் மதிப்பு 10 மில்லியன் டாலர்கள் என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

ஆண்டுதோறும் பாதுகாப்பின் பொருட்டு உலகில் செய்யப்படும் இராணுவச் செலவு 450 மில்லியன் டாலர்கள் என்கிறபோது உலக உணவு உற்பத்திக்காகத் தேவைப்படும் 10 மில்லியன் டாலர்கள் மிகக் குறைந்த அளவு ஆகும்! உலக உணவு- விவசாய நிறுவனத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒருமுறை பேசியபோது, உலகம் முழுவதிலும் செய்யப்பட்டு வரும் மிக அதிகமான இராணுவச் செலவைக் கண்டித்துத் தெரிவித்த கருத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்:

'கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஒரு ஏவுகணைத் தயாரிப்புக்காகச் செலவாகும் பணத்தை மட்டும் வைத்து, 200 மில்லியன் மரங்களை நடலாம்; ஒரு மில்லியன் எக்டேர் அளவு நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்து தரலாம்-வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் சத்துணவுப் பற்றாக் குறையால் வாடும் 50 மில்லியன் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கலாம்-ஒரு மில்லியன் டன் அளவு உரம் வாங்கலாம்-'வாயு' தொடர்பான ஒரு மில்லியன் சிறு தொழிற் சாலைகளை அமைக்கலாம்-65,000 சுகாதார நிலையங்கள் அல்லது 3 லட்சத்து 40 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகள் அமைக்கலாம்' என்று நமது பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் தெரிவித்திருப்பதே, உலக இராணுவச் செலவு எவ்வளவு பெரியதாக இருக்கிறது என்பதை ஊகிக்க உதவும்! எனவே உணவுப் பெருக்கத்திற்காக 10 மில்லியன் டாலர் செலவிட வேண்டும் என்பது பெரியதொரு செலவாகத் தெரியவில்லை.

'உலக உணவு நாள்' எடுக்க வேண்டுமென 1979ஆம் ஆண்டு உலக உணவு விவசாய நிறுவனம் ஏற்பாடு செய்து நடைபெற்ற உலக உணவு-விவசாய மாநாடு தீர்மானித்தது. ஐ.நா. மன்றத்தின் பிறிதொரு கிளையான பொருளாதார சமூகக் கழகமும், ஐ.நா.வின் பொதுச்சபையும் இந்தக் கருத்தை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. 1981ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் முதன் முதலாக உலகம் முழுவதிலும் 'உலக உணவு நாள்' எடுக்கப்பட்டது.

தேவையான ஊட்டச் சத்துக்கள் இல்லாத உணவு, உடல் ஊனம் அடையத்தக்க நோய்களை ஏற்படுத்திவிடும்.







எனவேதான் சத்துணவுக் குறைபாட்டைப் போக்கவும் உலக உணவு விவசாய நிறுவனம் உரியதைச் செய்து வருகிறது.

நர்சரி பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் ஆகியவற்றில் படிக்கும் பிள்ளைகளுக்காகவும், பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்காகவும், கருவுற்றிருக்கும் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியவர்களுக்காகவும் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்ற உலக உணவு விவசாய நிறுவனம் உதவி வருகிறது. 1982ஆம் ஆண்டில், 24 மில்லியன் டாலர் செலவில் வியட்நாம் நாட்டில் இந்நிறுவனம் நிறைவேற்றிய திட்டமே மிகப் பெரியதொரு திட்டமாகும். தாய்-சேய் நலம் காப்பதில் இந்நிறுவனம் அதிக அக்கறை காட்டி வருகிறது என்பதற்கு இதுவே சான்று! கடந்த ஆண்டில் சத்துணவுத் திட்டங்களுக்காக இந்நிறுவனம் 84.1 மில்லியன் டாலர் செலவிட்டுள்ளது.


தமிழகத்தில் நிறைவேற்றப் பட்டு வரும் குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் வாயிலாக உலக உணவு நாளின் நோக்கமும், உலக உணவு விவசாய நிறுவனத்தின் கருத்தும் தமிழகத்தில் செயலாக்கப்பட்டு வருவது கண்கூடு. எனவே, தமிழக அரசின் இந்தச் சீர்மிகு திட்டத்திற்கு உலக உணவு-விவசாய நிறுவனம் ஓடிவந்து உதவி செய்தால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

உலகில் உணவுப் பெருக்கத்தை ஏற்படுத்தவும், சத்துணவுப் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் அதே நேரத்தில், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறுகிறது உலக உணவு விவசாய நிறுவனம்.

1980க்கும் கி.பி. 2,000க்கும் இடைப்பட்ட காலத்தில், வளர்ந்து வரும் நாடுகளின் மக்கள் தொகை சுமார் 50 சதவிகிதம் கூடுதலாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி. 2000க்குள் உலக மக்கள் தொகையில் ஐந்தில் நான்கு பங்கினர் வளர்ச்சியடைந்து வரும் மண்டலங்களில் வாழ்பவர்களாக இருப்பார்கள்.

தொகுப்பு:
**எஸ். முத்துராமலிங்கம்**



# கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

தமிழ்நாடு 920 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. இதில் 850 கி.மீ. வங்காள விரிகுடாவை அடுத்தும், 70 கி.மீ. அரபிக் கடலை அடுத்தும் அமைந்திருக்கிறது.

கடல் அலை தீவிரமாக உள்ள இடங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரையை அடுத்துள்ள கட்டடங்கள், குடிசைகள், விலை மதிப்புள்ள தோட்டங்கள், நிலங்கள் ஆகியவை பாதிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க கற்குவியற் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை கடற்கரையை அடுத்துள்ள மக்களுக்கு, முக்கியமாக மீனவர்களுக்குப் புகலிடம் அளிக்கிறது. மாநகரங்களில் உல்லாசப் பயண இடங்களில் கடற்கரை பலப்படுத்தப்படுகிறது. நிலங்கள், குடிசைகள் ஆகியவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

தற்சமயம் சென்னை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடலரிப்புத் தடுப்புப்பணிகள் 1976-77-ஆம் ஆண்டு முதற்கொண்டே அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. 1976-77ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2.25 கி.மீ. சுவர் கட்டுவதற்கு ரூ. 60.90 இலட்சம் மதிப்புள்ள இரு பணிகள் அங்கீகரிக்கப்பட்டன. இப்பணிகள் அரசின் விதிகளுக்கேற்ப முடிவெடுக்கப்பட்டு உடனடியாகக் கட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 1980-81ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1980-81முதல்1982-83 முடிய 9.33 கி.மீ. நீளமுள்ள சுவர் கட்டுவதற்கு ரூ. 246.37 இலட்சம் மதிப்புள்ள பதினேழு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும், 2.10 கி.மீ. நீளமுள்ள சுவர் கட்ட ரூ. 80.25 இலட்சம் மதிப்புள்ள நான்கு பணிகள் சென்னை மாவட்டத்திலும் கட்டுமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரையிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 129.61 இலட்சம் மதிப்புள்ள ஒன்பது பணிகளும், சென்னை மாவட்டத்தில் ரூ. 10.20 இலட்சம் மதிப்புள்ள இரண்டு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரியில் முடிக்கப்பட்டுள்ள ஒன்பது பணிகளில் 1976-77ல் அங்கீகரிக்கப்பட்ட இரு பணிகளும் அடங்கும். 1980-81-க்கு முன் 0.67 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

இதுவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 5.38 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்கும், சென்னை மாவட்டத்தில் 0.30 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 177.66 இலட்சம் மதிப்புள்ள பத்து பணிகளும், சென்னையில் ரூ. 46.95 இலட்சம் மதிப்புள்ள இரண்டு பணிகளும், நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிக்கப்பட்டால் 8 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

எனவே, 1976-1977 மற்றும் 1980-81 முதல் 1982-83-ல் அங்கீகரிக்கப்பட்ட எல்லாப் பணிகளும், மொத்தம் 13.68 கி.மீ. நீளமுள்ள கடற்கரைக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

கடலரிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் கிடைக்கும் இடத்திற்கேற்ப தேவையான அளவைக்கு 30 முதல் 500 கி.கி. கனமுடைய கற்களைக் கொண்டு கற்குவியற் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன. இக்கட்டுமானத்திலுள்ள இனங்கள் மண்வேலை, 6 மி.மீ. முதல் 150 மி.மீ. கற்களால் அமைக்கப்படும் வடிகட்டும் அடுக்கு, நடுத்தரமுள்ள கற்கள் அடுக்கு, பெருங்கற்கள் அடுக்கு ஆகும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 600 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் மூன்றாண்டுகளில் ரூபாய் 158.07 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளைத் துரிதப்படுத்துவதன் மூலமும் இராயபுரத்தில் பெரிய திட்டமான ஆழ்கடல் அலை தடுப்புச் சுவர் கட்டுவதன் மூலமும் ஐந்தாண்டுத் திட்ட இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

## சேலம் இரும்பாலை உற்பத்தி

சீர்ப்பட்ட இரும்பு காயில்களுக்குச் சுங்கவரியில் சலுகை, மற்றும் மின்சாரம் வழங்குவதால் மேம்பாடு ஆகியவை காரணமாக, சேலம் இரும்பாலையின் உற்பத்தி கணிசமாக அதிகரித்து வருகின்றது.

அந்த நேரத்தில் சந்தைகளில் தன்னுடைய பங்கினை அதிகரிக்கும் உத்தி ஒன்றை வரையும் பணியிலும் ஆலை ஈடுபட்டுள்ளது. விலைகளை மீண்டும் திருத்துதல், ஊக்க நடவடிக்கைகள் போன்றவை ஆலையின் உற்பத்திப் பொருட்களைச் சந்தையில் போட்டியிடக்கூடிய தகுதிக்கு உயர்த்தி உள்ளன.

இந்திய இரும்பு நிர்வாகத்தின் மத்திய மார்க்கெட்டிங் அமைப்பின் எண்ணற்ற விற்பனை நிலையங்களில், சேலம், இரும்பு ஆலை உற்பத்தி பொருட்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன. ஆலையிலிருந்து இரும்பு யார்டுகளுக்கு நிலையான அடிப்படையில் இரும்புப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் வகையில் மார்க்கெட்டிங் விட்டத்திற்கு இணையாக உற்பத்தித் திட்டம் அமைந்துள்ளது.

பல்வேறு ரக இரும்புப் பொருட்களை உற்பத்தி செய்யும் சேலம் இரும்பாலை நாட்டிலுள்ள தொழில்துறையின் தேவைகளைச் சந்திக்கும் திறன் கொண்டதாக மிளிர்கின்றது.



# சென்னைக் கடற்பாதையில் புதிய தொரு கப்பல்

காப்பிதான் வி. ஷாகோவ் என்ற புதியதொரு 'கன்டெய்னர்' கப்பல். 13-10-83 அன்று முதன் முறையாகச் சென்னைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டது.

'கன்டெய்னர்' என்பது பரிவர்த்தனைப் பொருள்கள் அடங்கிய பெரியதொரு பெட்டி ஆகும். பொருள்கள் பழுதுபடாமலிருப்பதற்குக் கையாளப்படும் புதிய முறை இது. சோவியத் பொருள்கள் அடங்கிய 40 பெட்டிகளுடன் வந்துள்ள இக்கப்பலில், உடைகள், தோல், பதனிடப்பட்ட பழங்கள் அடங்கிய இந்தியப் பொருள்களைக் கொண்ட 100 பெட்டிகள் சோவியத் யூனியனுக்கு எடுத்துச் செல்லப்படும்.

இக்கப்பலைப் போன்று உலகில் மிகச் சிலவே உள்ளன. 16,030 டன்கள் எடையுள்ள, இக்கப்பல் 938 பெரிய 'கன்டெய்னர்' களைச் சுமக்க முடியும். இக்கப்பலின் 8 மாடிகளுக்கும் விரைவில் சென்று வர, தரமிக்க 'லிப்டு'கள் உள்ளன. நவநவீனப் போக்குவரத்து எந்திர சாதனங்களைக் கொண்டது இது. இதன் மாலுமிகளின் எண்ணிக்கை 40. 'கன்டெய்னர்' களை இறக்கவும், ஏற்றுமதிக்கான 'கன்டெய்னர்'களைக் கப்பலில் ஏற்றவும், 4 மணி நேரம்தான் பிடிக்கும்.

கப்பல் தலைவரான ஏ. ஐ. திமாஷென்கோ 14-10-83-ந் தேதி பத்திரிகையாளர்களிடையே பேசும்போது, இத்தகைய கப்பல் 20 தினங்களுக்கு ஒருமுறை ஒதெஸாவில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருக்கும் என்று தெரிவித்தார். சோவியத் யூனியன் செல்லும் வழியில், இதர துறைமுகங்களிலிருந்தும், இது பொருள்கள் அடங்கிய 'கன்டெய்னர்' களை ஏற்றிச் செல்லும்.

## மருத்துவ ஊழியர்கள் அதிகம் உள்ள நாடு!

உலகிலுள்ள வளரும் நாடுகளில், இந்தியாவில்தான் அதிக அளவில் மருத்துவ ஊழியர்கள் உள்ளனர். 2,68,712 அல்லோபதிகள், 2,33,824 நாட்டு மருத்துவர்கள், 1,12,638 ஹோமியோபதிகள், 28,737 யுனானி மருத்துவர்களும் மற்றும், 18,357 சித்த மருத்துவர்களும் தற்போது நாட்டில் உள்ளனர்.

1,50,388 செவிலியர்களும், 1,44,830 தாதியர்களும் மற்றும் 8,648 பல் மருத்துவர்களும் நாட்டில் உள்ளனர்.

106 மருத்துவக் கல்லூரிகளும், 286 செவிலியர் பயிற்சி மையங்களும், 21 செவிலியர்களுக்குக் கல்லூரிகளும் மற்றும் செவிலியருக்கான 4 முதுகலைப்பட்டதாரிக் கல்லூரிகளும் தற்போது உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் 12,000 எம்.பி.பி.எஸ். பட்டதாரிகள் தயாராகின்றனர்.

## உடல் ஊனமுற்றோர்க்குப் பயிற்சி

துணி அச்சு, தையல் மற்றும் வர்த்தகரீதியிலான பூ வேலைப் பயிற்சி, புகைப்படக் கருவி, காயில் மற்றும் ஒயிண்டிங் போன்ற பல்வேறு பிரிவுகளில் 16 வயது முதல் 25 வயது வரையிலான உடல் ஊனமுள்ள நபர்களுக்கு, சென்னை கிண்டியில் உள்ள உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு பயிற்சி மையம் பயிற்சியளிக்கிறது. இப்பயிற்சிக்கான காலம் ஓராண்டாகும்.

அரசு விதிமுறைகளின்படி போதிய தகுதியுடன் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்படுவோருக்கு உதவித் தொகையாக மாதம் 120 ரூபாய் வழங்கப்படும். இப்பயிற்சி சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்க வகை செய்யும். மேலும் சுய வேலைவாய்ப்பு முயற்சிகளில் ஈடுபடவும் இது உதவும்.



## வட ஆர்க்காடு மாவட்டத்தில்

# தென்னை வித்துப் பண்ணை

**அ. பன்னீர் செல்வம்**
**மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வேலூர். வடஆர்க்காடு மாவட்டம்.**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் எண்ணெய்வித்துத் துறையின் கீழ் இராணிப்பேட்டையை அடுத்துள்ள நவ்லாக்கில் தென்னை நாற்றங்கால் மூன்றும், உயர் தென்னைவித்துப் பண்ணை ஒன்றும், ஆதாரவித்துப் பண்ணை ஒன்றும் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தென்னை மற்றும் எண்ணெய்வித்துக்கள் வருமாறு:

**தென்னை நாற்றங்கால் 1:**

1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தென்னை நாற்றங்கால் 5 ஏக்கர் பரப்புக் கொண்டது. இந்த நாற்றங்காலில் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் மரங்களிலிருந்து 1,26,000 நெட்டைத் தென்னை நாற்றுக்கள் கொள்முதல் செய்யப்பட்டு, 94,500 தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, இம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு கன்றின் விலை ரு. 4 வீதம் விற்பனை செய்யப்படுகின்றது.

**தென்னை நாற்றங்கால் 2:**

5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த நாற்றங்காலில் ஒவ்வோர் ஆண்டும் 1,07,000 நெட்டைத் தென்னை நெற்றுக்கள் தேர்ந்தெடுத்து, தாய் மரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு 81,000 தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.



**அதிவிரைவு தென்னை நாற்றங்கால்:**

45 ஏக்கர் பரப்பளவுகொண்ட இந்நாற்றங்கால் தேவை அதிகமாக உள்ளதால் இதர மாவட்டங்களுக்குத் தென்னங் கன்றுகள் வழங்குவதற்காக 1980ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 4 இலட்சம் தென்னை நெற்றுக்கள் கொள்முதல் செய்யப்பட்டு, 3 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்றன.

**உயர் தென்னை நெற்றுப் பண்ணை:**

சுமார் 5 ஏக்கர் நிலங்களில் நெட்டை, குட்டை, வீரிய ஒட்டுத் தென்னங் கன்றுகள் தயார் செய்து விநியோகம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 84,000 வீரிய ஒட்டுத் தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இத் தென்னங்கன்றுகள் தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

இந்தத் தென்னந் தோப்பில் ஒரு வரிசை நெட்டை, ஒருவரிசை குட்டை - ரகக் கன்றுகள், வரிசைக்கு வரிசை 6 மீட்டர் இடைவெளி 8 மீட்டர் இடைவெளி விதமும் ,செடிக்குச்செடி 5 மீட்டர் இடைவெளியும் விடப்பட்டுக் கன்றுகள் நடப்படுகின்றன.

**ஆதார வித்துப் பண்ணை:**

இப்பண்ணையில் மணிலா, எள், ஆமணக்கு, சூரியகாந்தி போன்ற எண்ணெய்வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இங்கு கருவித்துக்கள், ஆதாரவித்துக்கள் ஆகியவை பயிர் செய்யப்பட்டு, விதைச் சான்றிதழ்பெற்று, ணெய்வித்துக்கள் பயிர்செய்ய பட்டு வருகின்றன. இப்பண்ணை யிலும் கருவித்துக்கள் மற்று ஆதாரவித்துக்கள் போடப்பட் விதைச் சான்று பெறப்பட்டு தரமான விதைகள் உற்பத் செய்யப்படுகின்றன.

ஆதாரவித்துப் பண்ணையி குறிப்பிட்டுள்ளவாறு மூன்று ப வங்களிலும் எண்ணெய்வித்து கள் சாகுபடி செய்யப்படுகின்றன இவ்விதைகள் மற்ற விவசா களின் நிலங்களில் உற்பத்தி செ யவும், வேறு மாவட்டங்களி உள்ள விதைப் பண்ணைகளி உற்பத்தி செய்யவும் அனுப்ப படுகின்றன. இப்பண்ணையி



மேலாலத்தூர் மற்றும் வேப்பங்குளம் (தஞ்சை மாவட்டம்) அருகிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நெட்டைத் தாய்மரங்களிலிருந்து குட்டை ரக மகரந்தத்தூள் ஒட்டுச் சேர்க்கை செய்யப்பட்டு 1,27,000 வீரிய ஒட்டு நெற்றுக்கள் நவ்லாக் பண்ணைக்குக் கொண்டு வந்து ஒட்டுத் தென்னங்கன்றுகள் தயார் செய்யப்படுகின்றன.

குட்டை, நெட்டை வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் ஓர் ஆண்டிற்கு 4 இலட்சம் உற்பத்தி செய்வதற்காக, 5036 குட்டைத் தென்னையும், 7560 நெட்டைத் தென்னங்கன்றுகளும் 1974 முதல் 1977 வரை நடப்பட்டுள்ளன. 1986ஆம் ஆண்டில் இப்புதிய குட்டை, நெட்டை, வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் தயார் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

**பிராந்திய மூலவித்துப் பண்ணை:**


30 ஏக்கர் கொண்ட உயர் தென்னை வித்துப் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள தென்னந் தோப்பு இடைவெளியில் எண் தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு ,வேளாண்மைக் கிடங்குகளுக்கு விநியோகத்திற்காக அனுப்பப்படுகின்றன.

இப்பண்ணையில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 50 ஏக்கர் மணிலாவும், 10 ஏக்கர் எள்ளும், 5 ஏக்கர் ஆமணக்கும், 20 ஏக்கர் சூரியகாந்தியும் பயிரிடப்பட்டு, 25 டன் மணிலாவும் 1500 டன் எள், ஒரு டன் ஆமணக்கும், இரண்டு டன் சூரியகாந்தியும் சான்றிதழ் பெற்ற விதையாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30 ஏக்கர் மணிலாவும், 20 ஏக்கர் எள்ளும் பயிரிடப்பட்டு, சுமார் 15 டன் மணிலாவும், 8 டன் எள்ளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**சொட்டு நீர்ப்பாசனம்:**

உயர் தென்னை நெற்றுப் பண்ணை, நவ்லாக்கில் ''சொட்டு நீர்ப்பாசனம்'' 17.5 ஏக்கர் நிலத்தில்தொடங்கப்பட்டுள்ளது. ஒரு மரத்திற்கு 7 மணிநேரத்தில் 7½ லிட்டர் நீர்வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் தென்னைகளுக்கு நீர்பாய்ச்சுவது இலாபகரமானதும் சிறந்ததுமாகும்.



# நல்வாழ்வுக்கான நுழைவு வாயில்

**6,000** கிலோ மீட்டர்கள் தூரம் விரிந்து கிடக்கும் இந்தியக் கடற்கரைப் பகுதியில் உள்ள 2,500 கிராமங்களில் 20 இலட்சத்துஓராயிரம் மீனவ மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது.

இந்தியா முழுதும் கிடைக்கும் மொத்த மீன் பிடிப்பில் ஐந்தில் ஒரு பங்கைத் தமிழ்நாட்டு மீனவர்கள் பெற்றுத் தந்துபெருமைக்குரிய ஒரு இடத்தைப் பெற்றுள்ளார்கள். இவற்றில் 75 சதவிகிதத்திற்கு மேல் சிறிய அளவிலான மீன்பிடிப்பு அமைப்புகள் மூலம் கிடைக்கின்றன.

'வங்கக்கடல்' திட்டத்தின் கீழ் சிறிய அளவில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவருக்கான சிறப்பு உதவிகள், வளர்ச்சித் திட்டங்கள் இந்த வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1979-ஆம் ஆண்டு வரை உணவு-விவசாயத்துறைஅமைப்பு பல திட்டங்களைச் செயல்படுத்தி பல்வேறு உதவிகளைச் செய்துள்ளது.

தொழில் நுணுக்க ஒதுக்கீடுகள் மற்றும் நவீனமுறைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கான பயிற்சிகளை மீனவருக்குப் போதித்தல் போன்ற நடவடிக்கைகள் இந்த வளர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

வளர்ச்சி செய்யப்பட்ட புதிய இயந்திரப்படகுகளை 'வங்கக் கடல்' திட்டத்தின் மூலம் உருவாக்கிக் கொடுத்ததன் மூலம் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சென்னை அருகே இப்புதிய மீன்பிடி இயந்திரப் படகுகளை இயக்கிச் சோதித்துப் பார்த்தபோது, அதிக வேகமாகச் செல்லக் கூடியதும், பாதுகாப்பு உள்ளதாகவும், மேலும் அதிக அளவில் மீன்களைப் பிடிக்க வசதி உள்ளதாகவும் தெரியவந்தது.

இதன்படி, கரையோரம் நிறுத்தி வைக்கப்படும் இந்தப் புதிய இயந்திரப் படகுக மீனவருக்கு வழங்கப்பட்டன. ஒரு கிராமத்திற்குப் பொதுவாக ஒரு இயந்திரப் படகும் தனிப்பட்ட ஒருவருக்கு வாடகைக்கு விடுவதற்கான மற்றொரு படகும் ஒதுக்கப்பட்டன. இதில் அதிகப் பணம் தருபவருக்குத் தனிப்பட்ட படகு தரப்பட்டது. சின்னக் கட்டு மரத்தில் மீன் பிடித்துவந்த சென்னையைச் சேர்ந்த நந்தன் என்ற மீனவர், இந்த இயந்திரப் படகை வாடகைக்கு எடுத்தார். இதற்காக தங்கச்சங்கிலி ஒன்றை அடகு வைத்து, துணிச்சலுடன் வாடகைக் காலத்திற்கான பணத்தைக் கட்டி, அதற்கான உரிமையையும் பெற்றார். வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுமரத்தைவிட இது அதிக இலாபம் தரக்கூடியதாக அமைந்திருந்தது தெரியவந்தது.

ஆற்றல் மிகுந்த இந்தப் புதிய இயந்திரப் படகைவிவரம்அறிந்த பல மீனவர் வரவேற்பதை அறிந்த மாநில அரசு, தென் சென்னை ஈஞ்சம்பாக்கம் பகுதியில் 30 புதிய இயந்திரப்படகுகளை அறிமுகப்படுத்தும் செயலில் இறங்கியுள்ளது. வங்கக் கடல் திட்டத்தின் மற்றொரு அம்சமாக, உயர்ந்து அகன்ற வகையைச் சேர்ந்த விசைப்படகுகளை உபயோகிக்கும் திட்டம் பாக் ஜலசந்தி, மண்டபத்தில் உள்ள மன்னார் வளைகுடாபகுதி, தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மீன் பிடிக்கச் செல்வோர், பெரிய அளவில் மீன்களைப் பிடிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 30,000 மீனவப் பகுதிகள் உதவி பெற்று, பயன்பெறும் வாய்ப்புக் கிடைக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள மேலும் பல மீனவர் குடும்பங்கள், கூட்டுறவு அமைப்புகள், வர்த்தக வசதிகள் ஆகிய நன்மைகளைத் தரும் சமூகப் பொருளாதாரத் திட்டங்களில் தங்களை இணைத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளன.

'வங்கக்கடல்' திட்டத்தை அடுத்து மாநில அரசும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் பல்வேறு வழிகளில் மீனவர்களுக்கு உதவி செய்ய முன் வந்துள்ளன. அண்மையில் சென்னையை அடுத்த திருவான்மியூரில் உள்ள 300 மீனவ குடும்பங்கள், மீன்களை வாங்கவும், விற்கவும், அதன் மூலம் துணை வருவாய் கிடைக்கும் வகையில் குறைந்த வட்டிக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு ரூ. 200 வீதம் கடன் வழங்கப்பட்டது. மீன்களை வாங்கி, அதை இலாபத்தில் விற்க இது அவர்களுக்குப் போதிய உதவியாக உள்ளது.

இதைத்தவிர, கைத்தொழில்கள், தையல் தொழில் செய்யவும் நைலான் வலைகள், படகுகள் வாங்குவதற்கும் தனியாகக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இவையெல்லாம் அதிகத் துணை வருவாய் பெற்று மீனவ குடும்பங்களின் அடுத்த தலைமுறை பயன் பெறுவதற்கும்உதவிகரமாக இருக்கும்.

மீன்பிடி தொழில்-மந்தமாக நடைபெறுகிற குறிப்பிட்ட காலங்களில் மீனவரின் இடையூறுகளைக் களையும் வகையில் உரிய நேரத்தில் உதவி செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது.

ஆண்டிற்கு மூன்று மாதங்கள் மீன்பிடி தொழில் மந்தமாக இருக்கும். அக்காலங்களில் மற்ற 9 மாதங்களில் அவர்களுக்குக் கிடைக்கும் அளவிற்கு வசதியும் பாதிக்கப்படாத அளவிற்கு உதவியும் வழங்கப்படுகின்றது. ஒரு மீனவர் விபத்தில் இறந்தால் அவர் குடும்பத்திற்கு ரூ. 5,000 உதவியும், இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் ரூ. 15,000மும் கிடைக்க வழியிருக்கிறது. மீனவர் குடும்பத்தினர் வாழ்வதற்கு வசதியான இலவச வீடுகளைக் கட்டித்தரும் செயலுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். இதுவரை சுமார் 1,000 பேருக்கு வசதியான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

'வங்கக்கடல்' திட்டத்தின் கீழ் மீனவர்களின் சமுதாய அந்தஸ்து பெருமளவில் உயர்ந்துள்ளது. பல்வேறு சமூக, பொருளாதார நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதற்குஉதவிகள் செய்யப்பட்டுள்ளன. மீனவப் பெண்கள் 'குழுக்களாக' வருவாய் பெறுவதற்கும் நுகர் பொருளை வாங்குவதற்கும் பல்வேறு சமூக வசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பாரம்பரிய வழியில் தங்கள் தொழிலை நடத்தி வந்த மீனவர்கள், தற்போது வங்கக் கடல் திட்டத்தின்கீழ் உருவாகியுள்ள நவீன தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டங்களையும் புதிய உத்திகளையும் வரவேற்கிறார்கள். இத்திட்டங்கள் தங்கள் 'நல்வாழ்வு'க்கான 'நுழைவு வாயில்' என்பதையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

# ஊனத்தை ஒழிக்கும் உலக நாடுகள் திட்டம்

“உலகில் வளரும் நாடுகளில் ஊனமுற்றோர் இன்று 80 சதவீதம் வரை அதிகரித்துள்ளனர். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இது 2 மடங்காகிவிடும் என்ற அச்சம் தலைதூக்கியுள்ளது. ஊனமுற்றோர் பிரச்சனைகளைத் தீர்க்க சாத்தியமான எந்த வழியையும் மேற்கொள்ள முடியும். துயரச் சம்பவங்களால் ஏற்படும் வெறுப்பு மற்றும் சில நோயின் விளைவால் உடல் ஊனம் மட்டு'மல்லாமல் மனநோயும் ஏற்படுகிறது.



—மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்

**திரு. ஜெயில் சிங் அவர்கள்**

அதிர்ஷ்டவசமாக உலகிலுள்ள சுகாதாரம் மற்றும் மருத்துவ விஞ்ஞானங்கள் நவீன விஞ்ஞான முறைகளில் குறைந்த செலவில் யுக்தியைப் பயன்படுத்துகின்றன. சரியான திட்டத்தோடு குறித்த நேரத்தில் இந்த யுக்தியைச்செய்து முடிக்கின்றன. காலப்போக்கில் இப்பிரச்சினைகள் களையவும் குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். விரிவான தாய்-சேய் தொற்றுநோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் கருவுற்ற தாய்மார்களுக்குப் பராமரிப்பு முறையும் மற்றும் ஊட்டச்சத்து அளிப்பதன் அவசியம் குறித்தும் விளக்கப்படுகிறது.

இதனால் உடல் ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பைக் கணிசமான அளவிற்குத் தடுக்க முடியும். எல்லா நாடுகளும், குறிப்பாக வளரும் நாடுகள் இந்த விஷயத்தில் மேலும் சில முயற்சிகளைக் கையாள வேண்டியிருக்கிறது. மேலும் இம்முயற்சியில் சர்வதேசக் கழகங்கள் சேர்ந்துள்ளது மிகவும் பொருத்தமே.

சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட உதவியை என்றும் எதிர்நோக்கும் ஏழை மற்றும் நலிந்த பிரிவினைச் சேர்ந்த குறிப்பாக ஊனமுற்றவர்களின் உயர்வுக்காக உதவ அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. குறைந்த செலவில் தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் பல்வேறு வகையான உடல் ஊனத்தைத்தடுக்க முடியும். இத்தொழில் நுட்பத்தைத் நாடு முழுவதும் செயல்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கை அவசியம் தேவைப்படுகிறது.

ஊனத்தை ஒழிக்க முயலும் உலக நாடுகள் திட்டம் மகாத்மா காந்தி பிறந்த நாளில் துவக்கி வைக்கப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஊடல் ஊனமுற்றோர், தொழுநோயாளிகள், விழியிழந்தோர் ஆகியோருக்கு மகாத்மா ஆற்றிய சேவை நாடறிந்தது. பார்வையிழந்தோர், ஊமை மற்றும் காது கேளாதோர் ஆகியோருக்கு வாழ்வளிப்போர்களுக்குக் காந்தியின் இலட்சியமும் வலிமையும் ஊக்கமளிக்கும்.”



—மாண்புமிகு இந்தியப் பிரதமர்


**திருமதி இந்திரா காந்தி அவர்கள்**

“ஊனங்கள் மற்றும் நோய்கள் நிவர்த்திக்கக் கூடியவைகள் ஆகும். சுகாதார விழிப்புக்கு உயர் கல்வித்தரம் மற்றும் பொருளாதாரச் செழிப்பும் பெரும் உதவிகரமாய் உள்ளன. எனவே பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கையுடன் நமது வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது அவசியம். ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கு விரிவான திட்டங்களைத் தீட்ட, காந்திஜி தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்கு ஆற்றிய தியாகம் பெரும் ஊக்கத்தை அளிக்கிறது.

உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்டுவரும் அவரது குடும்பமும் பெரும் வேதனைக்கு ஆளாவது தெரிந்த விஷயம். ஊனமுற்றோருக்குப் போதுமான உதவியும் பயிற்சியும் அளிக்கப்படும்போது அவர்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்த முடியும். தரம் உயர்ந்த செயற்கை உறுப்புகள், கண்ணாடிகள் மற்றும் சிறு காதுகேட்க உதவும் கருவிகள் ஆகியவை குறைந்த தொழில்நுட்பச் செலவில் தயாரிப்பதில் இந்தியாமுன்னோடியாக விளங்குகிறது.

தற்போதுள்ள சுகாதாரக் கட்டமைப்பு வசதிகளுடன் தொழில் நுட்பத்தையும் ஒரே காலத்தில் பயன்படுத்தி ஊனத்தை நிவர்த்திக்க ஒரு புதிய சர்வதேச முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.''

# நடை பாதை விபத்துகள்—



கடந்த சில ஆண்டுகளில் சாலைப் போக்குவரத்து துரித வளர்ச்சி அடைந்ததன் காரணமாக, மோட்டார் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

அகில இந்தியப் புள்ளி விவரப்படி நாளொன்றுக்கு 70 பேர் சாலை விபத்தில் இறக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் சமூகத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்கள். இதுவரை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணத்துக்காகப் பல்வேறு விதிமுறைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினையை ஆராய்ந்த மத்திய அரசு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தை, மோதிவிட்டு பறந்துவிட்ட வாகனங்களால் விபத்துக்குள்ளானவர்களுக்கும், எந்தவிதத் தவறும் இல்லாத நிலையிலே விபத்துக்குள்ளானவர்களுக்கும் நிவாரணம் வழங்குவது தொடர்பாகத் திருத்தியது.

இந்தத் திருத்தங்களின்படி நிவாரண நிதி ஒன்று துவக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜெனரல் இன் இன்ஷ்ரன்ஸ் நிறுவனங்கள், மத்திய மாநில அரசுகள் நிதி உதவி அளிக்கும். இந்த நிதி அலுவலகம் கமிஷனர் ஒருவரின் தலைமையின் கீழ் செயல்படும். மோதிவிட்டு மோட்டார் வாகனம் ஓடி மறைந்த காரணத்தால், பாதிக்கப்பட்டவருக்கோ அவருடைய குடும்பத்தினருக்கோ இந்த நிதியிலிருந்து உதவி கிடைக்கும். விபத்துக்குள்ளானவர் இறந்துவிடும் பட்சத்தில் அவரது குடும்பத்தாருக்கு 5 ஆயிரம் ரூபாயும், கடுங் காயமடைந்தவர்களுக்கு 1,000 ரூபாயும் வழங்கப்படும்.

காயமடைந்தவரோ, இறந்தவரின் குடும்பத்தினரோ படிவம் ''ஏ'' யில் விபத்து பற்றிய விவரங்களைத் தெரிவித்து நிவாரணம் கோரி எந்தப் பகுதியில் விபத்து நடந்ததோ அந்த துணை வட்டத்துக்கான கோரிக்கை விசாரணை அலுவலரிடம் விண்ணப்பிக்கலாம். படிவம் ''ஏ'' அந்த அலுவலரிட்மே கிடைக்கும். கோரிக்கை விசாரணை அலுவலர் விசாரணைகளை நடத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மாவட்ட கோரிக்கை முடித்தலுக்கான ஆணையாளருக்கு அறிக்கை வழங்குவார். அதனைப் பரிசீலித்து ஆணையாளர் திருப்தியடைந்தால் நிவாரணத்துக்கான தொகைக்குக் காசோலையினையோ, கருவூல வவுச்சரையோ சம்பந்தப்பட்ட கோரிக்கை விசாரணை அலுவலருக்கு அனுப்பி வைப்பார். அவர் உரியவரிடம் நிவாரணத் தொகையை வழங்குவார்.

தவறில்லா விபத்து சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான திருத்தம் 1982 அக்டோபர் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது. இதன் நோக்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதாகும். இது தொடர்பான நடைமுறை விதிகளை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு வழங்கி உள்ளது.

விபத்தில் இறந்தவர் குடும்பத்திற்கோ, விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கோ உடனடியாக நிவாரணம் வழங்குவது இதன் நோக்கமாகும். இதன்படி இறந்தவர் குடும்பத்துக்கு 15 ஆயிரம் ரூபாயும், நிரந்தர ஊனமுற்றவர் அல்லது படுகாயமுற்றவர் குடும்பத்துக்கு 7,500 ரூபாய் வழங்கவும் வகை செய்கிறது. இந்த நிவாரணத்தை வழங்க வாகன ஆவணங்கள், அதன் சொந்தக்காரர், 'இன்ஷ்யூரர்' ஆகியோரின் முதல் தகவல் போதுமானதாகும்.

இதன்படி நிவாரண உதவி வழங்குவதைத் துரிதப்படுத்தும்படி ஜெனரல் 'இன்ஷ்ரன்ஸ் கார்ப்பரேஷன்' தன்னுடைய கிளை நிறுவனங்களைக் கோரியுள்ளது. டிரிப்யூனல்களை அணுகாமல் கோரிக்கையாளர்கள் நேரடியாகக் கார்ப்பரேஷனை அணுகும்படி கார்ப்டரேஷன் அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு செயல்படும்படியும் 'ஜெனரல் இன்ஷ்ரன்ஸ் கார்பபரேஷன்' தெரிவித்துள்ளது.

---

## கோவை மாவட்டத்தில்:

கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணியாகக் கிணறுகளை ஆழப்படுத்தும் வேலைக்கு ரூ. 0.263 இலட்சம் செலவில் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 0.23 இலட்சம் செலவில் 12 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 50 ஏக்கருக்கு கீழ் ஆயக்கட்டுள்ள குளங்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 1.350 இலட்சம் செலவில் 7 வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

50 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டு உள்ள குளங்களைப் பழுது பார்க்கும் திட்டத்தில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ. 4.349 இலட்சம் செலவில் 5 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 18,181 உழைப்பு தினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டத்தில் ரூ. 0.032 இலட்சம் செலவிட்டு 3 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு இதுவரை 491.0161 மெ. டன் கோதுமை விநியோகிக்கப்பட்டுள்ளது.

உடுமலைப்பேட்டை நகராட்சியில் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட 55 வேலைகளில் குடிநீர் வழங்கும் பணி 5-ம் சாலைவேலைகள் 25-ம் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் வேலைகள் 11-ம் சிறு பாலங்களுக்குச் சிமிட்டித்தளம் பாலம் வேலைகள் 5-ம் ஆக மொத்தம் 46 வேலைகள் ரூ. 24.88 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.





# மயிலை - திருவல்லிக்கேணி மக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி

சென்னை மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகக்கட்டடம் அடையாறு கிரின்வேஸ் சாலையில் ரூ.21 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கிறது. இது 4 அடுக்கு மாடிக் கட்டடமாக இருக்கும்.

இதற்கான கால்கோள் விழா 6.10.83 அன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த இனிய விழாவுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்:

''தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சியைத் தமிழக அரசு எப்படிச் சமாளித்தது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். தமிழகத்தின் வறட்சிப் பணிக்காக ரூ. 217.36 கோடி ஒதுக்கும்படி தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் கேட்டது. ஆனால் மத்திய அரசு ரூ.45 கோடிதான் தந்துள்ளது. அதிலும் ரூ.31.3 கோடியைக் கடனாகவும், மீதியை மானியமாகவும் தந்துள்ளது. இப்படி இருந்தும் தமிழக அரசு வறட்சி நிவாரணத்திற்கு 100 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

''1978-ஆம் ஆண்டு முதல் இது வரை வருவாய்த்துறை அலுவலகங்களுக்காக ரூ.8 கோடியே 33 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மட்டும் ரூ.2 கோடிக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டத்திற்குக் கோட்ட வருவாய் அலுவலர் இல்லை என்ற குறை இருக்கிறது. அந்தக் குறையும் விரைவில் நீக்கப்படும்.

''தமிழ்நாட்டில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மத்திய அரசிடம் நிதியுதவி கேட்ட போது 20 கோடி ரூபாய் வரை தான் செலவு செய்யலாம் என்று தெரிவித்திருந்தது. சென்னைக்கு மட்டும் மாநில அரசு ரூ.10.36 கோடி செலவு செய்திருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் ரூ.45.75 கோடி செலவு செய்துள்ளது. இப்போது தண்ணீர்ப் பிரச்சினை சமாளிக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுதும் பரவலாக மழை பெய்து வருகிறது. தென் மேற்குப் பருவக்காற்று சரியாக இல்லாதிருந்தும் தண்ணீர்ப் பிரச்னையைத் தமிழக அரசு சமாளித்துள்ளது''.

மாண்புமிகு பால்வளம்-பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில்:

''ஆயிரம் விளக்கு, மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் ஆகிய நான்கு சட்டப் பேரவைத் தொகுதிகளைச் சேர்ந்த 5 இலட்ச மக்கள் இந்த வட்டாட்சி அலுவலகத்தினால் பயன்பெறுவார்கள். இந்த அரசு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஹாஜா ஷெரீப் அவர்கள் பங்கேற்றிருப்பதையொட்டி ஒரு நல்ல உதாரணமாக அமைந்துள்ளது. ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிற கோட்டூர்புரம், நந்தனம் பாலம் விரைவில் திறக்கப்படும். பாலம் திறந்தால் மக்களுக்கு 5 மைல் தொலைவு மிச்சப்படும். கிடப்பில் கிடந்த திட்டங்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நாங்கள் எண்ணிப் பார்த்தாலே நாங்களே பிரமிக்கிற அளவுக்கு இந்த அரசு பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு கே.எஸ்.ஜி.ஹாஜா ஷெரீப் எம்.எல்.ஏ. பேசுகையில்:

''எதிர்க்கட்சி என்பது எதிரிக் கட்சியாக இருக்கக்கூடாது. எதிர்க்கட்சியாக இருக்கிறதே என்பதற்காக எதற்கும் எதிர்த்துக் கொண்டு இருப்பது நல்ல ஜனநாயக மரபு ஆகாது. அரசு செய்யும் 'நல்ல திட்டத்தைப் பாராட்டத் தவறக்கூடாது. ஆதரவு கொடுக்கவும் தவறக்கூடாது. எதிர்க்கட்சிக்கு மாற்று கருத்துச் சொல்ல உரிமையுண்டு. இந்த அடிப்படையில்தான் இதற்கு முன்பும் செயல்பட்டேன். இனியும் செயல்படுவேன். ஏழை எளிய மக்களுக்கு வங்கிகள் மூலம் தொழில் செய்ய உதவி அளிக்க முன்வந்த இந்த அரசைப் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு க.சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. வரவேற்றார். விழாவில் திரு ஜேப்பியார் எம்.எல்.சி., வருவாய்த்துறை நிர்வாக ஆணையர் திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.ப. பாரதவங்கி உதவிப் பொது மேலாளர் திரு ஆர்.வைத்தியநாதன், பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் திரு. எஸ்.சண்முகசுந்தரம் ஆகியோர் பேசினர். விழா இறுதியில் கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

மயிலாப்பூர் வட்டாட்சியர் திரு எம். கோவிந்தராஜுலு நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
**ஜி. ஆனந்தன்**

# தீப்பாய்ந்தாள் கோயில்

முத்து. எத்திராசன்

**போ**ரில் இறந்துபட்ட வீரனுக்கு நினைவாக எடுக்கப்பட்ட கல், நடுகல் எனப்படும். கணவன் இறந்ததும் உடனுயிர் துறக்கும் மனைவியின் நினைவாக எடுக்கப்படும் கல்லைச் சதிக்கல் அல்லது மகாசதிக்கல் என்று அழைப்பர். மேலும் பழந்தமிழகத்தில்போரில் இறந்துபட்ட அரசர்கள், வேளிர்கள் உடல்களையும் தீயிலிட்டு எரித்தனர் என்பதை நாம் அறிகிறோம். அவ்வாறு எரிக்கின்றபோது அவர்தம் மனைவியர் தீயில் பாய்வதும் உண்டு. அவ்வாறு தீயில் பாய்வதைத்தான் தீப்பாய்தல் அல்லது உடன் கட்டை ஏறுதல் என்று அழைத்தனர்.

ஆய் அண்டிரன் உடல் எரிக்கப்பட்டபோது, அவ்வெரியில் பாய்ந்து அவன் உரிமை மகளிர் உடனுயிர் நீத்தனர் என்பதைப் புறநானூறு-240 நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

பூதபாண்டியன் இறந்தபோது அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்த்தனள் என்பதைப் புறநானூறு246,247ஆம் பாடல்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

'ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க்காயினும்'—என்று மணிமேகலை உடன்கட்டை ஏறுகின்ற வழக்கத்தை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

முதலாம் இராசராச சோழன் தந்தை இறந்தவுடன் அவன்தாய் வானவன் மாதேவி உடன்கட்டை ஏறியதைக் கல்வெட்டின் வாயிலாக நாம் காண்கின்றோம்.

முதலாம் இராசேந்திரன் மனைவி, விசயரங்க சொக்கநாதரின் தாய், கன்னடிய அரசன் மகன், தேசிங்குராசன் மனைவி போன்றோர் உடன்கட்டை ஏறியதை வரலாறு நமக்கு அழகாக எடுத்துக் காட்டுகிறது.

பெருங்கோப்பெண்டு தீப்பாய்ந்த இடம், 'காட்டிடத்தே காடுகிழாள் (கொற்றவை) கோயிலுக்கு முன்பாகும்' என்பதை மதுரைப் பேராலவாயர் நமக்கு எடுத்துக் காட்டுகின்றார். இன்றும் அவ்வாறு அமைந்துள்ள இடத்தைச் சான்றாகக் காண்கின்றபோது அவ்வழக்கு உண்மை என அறிய முடிகிறது.

இவ்வாறு உடன்கட்டை ஏறிய மகளிர் பொருட்டு நினைவு மண்டபம் எடுக்கப்பட்டதாகவும், அவை 'தீப்பந்தங்கோயில்' என அழைக்கப்பட்டதாகவும் எட்கார் 'தாஸ்டன்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தீப்பாய்ந்த மகளிர் பொருட்டு எடுக்கப்பட்ட கோயிலாதலால்



அது 'தீப்பாய்ந்தார் கோயில்' என்று அழைக்கப்பட்டது. அதுவே காலப்போக்கில், 'தீப்பந்தங் கோயில்' என மருவியதாகக் கூறுவர் ஆய்வாளர்கள்.

**தீப்பாய்ந்தாள் கோயில் :**

மேலே கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் உண்மை என்று காட்டுகிற விதத்தில் 'தீப்பாய்ந்தாள் கோயில்' ஒன்று தென்னார்க்காடு மாவட்டம், செஞ்சிக்கு வடக்கில் உள்ள மேலச்சேரி என்னும் ஊரின் காட்டகத்தே சுற்றுச் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.


செஞ்சியை ஆண்ட மன்னர்களுள் மிக்க புகழ் பெற்றவன் தேசிங்குராசன் என்பதை நாம் அறிவோம். அத்தகைய தேசிங்கின் சிற்றப்பாவே தரணி சிங்கு என்பவனாவான்.

'சிற்றப்பதுரை தரணிசிங்கு சொலுவுக்கு வந்தாராம்' என்று வருகின்ற தேசிங்குராசன் கதைப் பாடல் நமக்குத் தேசிங்கின் சிற்றப்பன் பெயரை எடுத்துக் கூறுகிறது. மேலும் அப்போது அவனுக்கிருந்த வயது அறுபது என்பதை, 'என்ன பேச்சு பேசினீரையா சிற்றப்பராஜாவே அறுபது வயது சென்றவுமக்கு அறிவு கொஞ்சமில்லை' என்று தேசிங்கு, தரணிசிங்கைப் பார்த்துக் கூறுகின்றன்வாக வரும் வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

தேசிங்கின் சிற்றப்பாவாகிய தரணி சிங்குக்குக் காமக்கிழத்தி (வைப்பாட்டி) ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் சத்திரி மங்காபாய் என்பது. அவள் நாயக்கர் வமிசத்தைச் சார்ந்தவள். தரணி சிங்கோ இரசபுத்திர வமிசத்தைச் சேர்ந்தவன்.

தரணிசிங்கு வாழ்ந்து இறந்தது செஞ்சிக்கு வடக்கில் உள்ள மேலைச்சேரி என்னும் ஊராகும். அவ்வூரில் இன்றும் அம்மன்னன் வாழ்ந்த இடத்தை அரண்மனைத் தெரு என்று அழைக்கின்றனர் அங்குள்ளோர். அவ்விடம் தற்போது இடிந்து மண்மேடாகக் காண்பதுடன் அவ்விடத்தில் சிலர் வீடுகட்டிக் கொண்டும் வாழ்கின்றனர். அவ்விடத்தில் அண்மைக்காலம் வரை அரண்மனைத் துளசிமாடம் அழியாமல் இருந்து வந்ததாகவும் தற்சமயம் என்னவானது என்று அறியமுடியாமலிருப்பதாகவும் கூறுகின்றனர் அங்குள்ளோர். காரணம் கட்டப்பட்ட வீடுகளுடன் இது சேர்ந்து போயிருக்கலாம் என்பது சிலர் கருத்து. இன்னும் அரண்மனையைச் சேர்ந்த துர்க்கைக் கோயில் அழியாமல் இருக்கிறது.

தரணிசிங்கு இறந்தபோது அவனுடைய மனைவி உடன் கட்டை ஏறவில்லை. ஆனால் அவனது காமக்கிழத்தி (வைப்பாட்டி)யாகிய சத்திரி மங்காபாய் மாத்திரம் அவனுடன் உடன் கட்டை ஏறினாள். அவள் தீமூட்டித் தீப்பாய்ந்த இடம் இன்றும் காட்டில் அமைந்துள்ள காளி கோயிலின் முன்புறத்தில் இருக்கிறது.




நீராழி மண்டபம்

சத்திரி மங்காபாயின் தியாகத்தையும் தரணிசிங்கு மீது அவள் கொண்டிருந்த காதலையும் வியந்து பெருமிதம் கொண்ட அக்காலத்து மக்கள் அவள் நினைவாக மண்டபம் ஒன்றைக் கட்டியுள்ளனர். அதன் அருகில் நீராழி மண்டபம் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னர்கூட உடன் கட்டை ஏறுபவர்க்கு நினைவு மண்டபம் கட்டும் வழக்கம் தமிழகத்தில் இருந்திருக்கிறது என்பதற்கு இவ்வூர் காட்டில் காளிகோயிலின் முன் அமைந்துள்ள மண்டபம் ஒரு சான்றாகும். இன்றும் அவ்வூர் மக்கள் இம்மண்டபத்தைத் தீப்பாய்ந்தாள் கோயில் என்றே அழைக்கின்றனர்.

தீப்பாய்ந்தாள் கோயிலின் மேற்குப் புறத்தில் உள்ள காளி கோயிலைத் 'திரௌபதி அம்மன் கோயில்' என்று அவ்வூரிலுள்ளோர் கூறுகின்றனர்.



மண்டபம்

தீப்பாய்ந்தாள் கோயிலுக்கு வடக்கிலும் தெற்கிலுமாக இரு பெரிய மேடைகள் உள்ளன. அம்மேடை மீது தீமூட்டி அதில் மகளிர் இறந்ததற்கு அடையாளமாகக் கற்களினால் அமைக்கப்பட்ட பாதங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

அருகிலுள்ள நீராழி மண்டபம் இடிந்து குளம் தூர்ந்து காணப்படுகிறது.

மண்டபத்தில் தீப்பாய்ந்தாளின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள கற்பலகையில் புடைச்சிற்பமாக அரசன், அரசி உருவங்கள் உள்ளன. அவை முறையே தரணி சிங்கு, சத்திரி மங்காபாய் சிலையாக இருக்க வேண்டும்.

இக்கோயிலைப் பற்றிய கல்வெட்டு கிடைக்குமாயின், உண்மைக்கும் அம்மக்கள் கூறுகின்ற செவிவழிச் செய்திக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நாம் நன்கு அறிய வாய்ப்பாக இருக்கும்.

## குடும்ப நலத் திட்டத்தில் தமிழகச் சாதனை

**நா**ட்டில் குடும்ப நலத் திட்ட நடவடிக்கைகள் விறுவிறுப்பு அடைந்துள்ளன. ஜூன் மாதம் வரை 6,58,000 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டுள்ளன. இது 11.3 சதவீத சாதனை. 1983-84 நிதியாண்டில் முதல் நான்கு மாதங்களில் 34 சதவீத சாதனை புரிந்து தமிழகம் குடும்ப நலத் திட்டத்தில் முன்னணி இடம் பெறுகின்றது.

அடுத்த நூற்றாண்டு துவக்கத்தின்போது, நாட்டின் மக்கள் தொகை நூறு கோடியாக இருக்கும். இத்துணை மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்ய 23 கோடி டன் உணவு தேவை. தற்போதைய உற்பத்தியைப்போல இது இரண்டு மடங்கு.

தற்போது நாட்டின் நீர்த்தேக்கத் திறன் 140 மில்லியன் ஏக்கர் அடி. மொத்த நீர் வளமான 1440 மில்லியன் ஏக்கர் அடியைவிட, இது மிகமிகக் குறைவு. எனவே, அதிகப்பட்ச நீர்த்தேக்கத்திறனை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# பாண்டிய நாட்டில் ஒரு உரோமானியக் குடியிருப்பு

தமிழகத்திற்கும், உரோமானிய நாட்டிற்கும் இருந்த வணிக மற்றும் கலாச்சாரத் தொடர்பினை மேலும் உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ள-மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தினை, தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை தற்போது கண்டுபிடித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் என்னும் ஊருக்கு அருகில் உள்ள மேட்டுப் பகுதியில் மிக அதிக அளவில் உரோமானியப் பானை ஓடுகள் கிடைப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் வைகை கடலொடு கலக்கும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது மிகச் சிறப்பாகும். இராமநாதபுரத்திலிருந்து 28 கி. மீ. தொலைவில் உள்ள இம்மேட்டுப்பகுதி சுமார் 25 ஏக்கர் நிலப் பரப்பினைக் கொண்டு கோட்டைமேடு என்று இன்றும் அழைக்கப்படுகிறது. இப்பகுதியினைத் தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த அகழ்வாய்வாளர்கள், திருவாளர்கள் து. துளசிராமன், சி. முனிசாமி, கே. எஸ். சம்பத் ஆகியோர் ஆய்வுசெய்தபோது மேற்பரப்பிலேயே மிகச் சிறப்பு வாய்ந்த பானை ஓடுகள், மதுக் குடத்தின் பகுதிகள், சங்குகள், சங்குவளைகள் ஆகியன கிடைத்துள்ளன. 2,000 ஆண்டுகட்கு முன்னர், தமிழகத்திற்கும், உரோம நாட்டுக்கும் இடையிலிருந்த வணிக மற்றும் கலாச்சாரத் தொடர்பினை உறுதிப்படுத்தும் மிகச் சிறந்த சான்றுகளைப் பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்க மேட்டைப் போல அள்ளித் தருகிறது அழகன்குளம்.

கிடைத்துள்ள மிகச்சிறந்த தடயங்கள் :

1. ரௌலட்டட் டிசைன் கொண்ட அரிட்டைன் ஓடுகள்.

2. கிராபிட்டி (Graffite) எனப்படும் குறிகளையுடைய ரௌலட்டட் ஓடுகள்.

3. அரிட்டைனுக்கு முந்திய காலத்ததாகக் கருதப்படுவதும் அரிக்கமேட்டில் கிடைத்துள்ளது போன்றதுமான சாம்பல் நிற ஓடுகள்:.

4. ஆம்பொரா எனப்படும் மதுக்குடத்தின் பகுதிகள்.

5. சங்கு வளையல்களும், அறுக்கப்பட்ட சங்குகளும்.

தமிழர்களுக்கும், உரோமானியர்களுக்கும் இருந்த தொடர்பைக் காட்டவல்ல சான்றுகள் தமிழகத்தில் பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேடு, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள சைவ சமுத்திரம் ஆகிய பகுதிகளிலிருந்து அதிக அளவில் கிடைத்திருக்கின்றன. அழகன்குளமும் தற்போது மிகுந்த அளவில் வரலாற்றுச் சான்றுகளைத் தந்துள்ளது. இவை சங்க இலக்கியங்களும், வெளிநாட்டு யாத்ரிகர்களின் குறிப்புகளும் கூறும் கருத்துகளை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன.

அக்கால ஏற்றுமதிப் பொருட்களில் சங்கு வளையல்களுக்குச் சிறந்த இடம் உண்டு. சங்க காலப் பாண்டியரின் துறைமுகமான கொற்கை, சங்கு வளையல்கள் ஏற்றுமதியில் சிறப்பிடம் பெற்று விளங்கியிருக்கிறது. அக்கொற்கையிலிருந்து அதிக தொலைவில் இல்லாத அழகன்குளத்திலும் சங்கு வளையல் செய்யும் தொழிற்கூடம் இருந்திருத்தல் வேண்டுமென்பதை மேற்பரப்பிலேயே அதிக அளவில் கிடைக்கும் வளையல் துண்டுகளும், பாதி அறுக்கப்பட்ட சங்குகளும் உறுதி செய்கின்றன. அழகன்குளத்திலிருந்து பிறபொருட்களோடு சங்கு வளையல் ஏற்றுமதியும் ஒரு சிறப்பான இடத்தினை வகித்திருக்கலாம்.

இத்தகைய அரிய வரலாற்றுச் சிறப்புமிக்க பொருட்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் அழகன்குளத்தில், விரைவில் அகழ்வாய்வினை மேற்கொள்ளத் தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை திட்டமிட்டுள்ளது.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அயல்நாட்டுத் தமிழக் கல்வித் துறை அயல் நாடுகளில் வாழும் தமிழர்களது வரலாறு பற்றியும், குடிப்புறம் சென்றமை பற்றியும் ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளது. [illegible] துறையின் பேராசிரியர் டாக்டர் [illegible]

## தமிழ்நாட்டு நகரங்களுக்கு மத்திய நிதி உதவி

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சில நகரங்களின் வளர்ச்சிக்காக 58 இலட்சம் ரூபாயை, கடன் உதவியாக மத்திய பொதுப் பணி மற்றும் வீட்டு வசதி அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் தாராபுரம் (ரூ. 10 இலட்சம்), ஆர்க்காடு-இராணிப்பேட்டை - வாலாஜாப் பேட்டை (ரூ. 16 இலட்சம்), மற்றும் தேனி-அல்லி நகரம் (ரூ. 15 இலட்சம்) ஆகிய நகரங்களுக்குக் கடனுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தத்துவ அவ்வீட்டுக் கருத்தரங்கம்
## தத்துவ மையம்

பச்சையப்பன் கல்லூரி விடுதி - காஞ்சிபுரம்-3

(தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்)

1983 அக்டோபர் 6 முதல் 8 வரை.



திரு இராம. வீரப்பன் அவர்கள், 6.10.'83 அன்று காஞ்சிபுரத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த தத்துவ ஆராய்ச்சி மையக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ஆய்வு செய்ய வந்திருந்த அறிஞர்களிடம் தொடுத்தார்.

# மொழியும் தத்துவமும் தமிழருக்கு இரு கண்கள்

"தமிழ் நாட்டிலே, தமிழ் மண்ணிலே சமயம் என்பது என்ன? நம்முடைய முன்னோர்கள் ஏன் அதைத் தோற்றுவித்தார்கள்? எந்த அறவழியை, அறநெறியைக் காப்பாற்றுவதற்குத் தோற்றுவித்தார்கள்? இந்தச் சமயக் கொள்கைகளும், சமயத் தத்துவங்களும் விஞ்ஞான உணர்விலே உருவாக்கப்பட்டதா, இல்லையா? மூடநம்பிக்கைக்கு உட்பட்டதுதான் சமயம், மூடநம்பிக்கையின் அடிப்படையிலிருந்துதான் சமயத் தத்துவங்கள், என்று வைக்கப்பட்டுள்ள வாதங்கள் சரியானதா? தவறானதா? அதற்கு உங்கள் பதிலென்ன? அந்த ஆய்வு உங்களுக்குப் பயன்படப்போகிறதா? அப்படியானால் இக்கருத்துகள் தாய் மொழியில் ஆராயப்படவேண்டுமா? வேண்டாமா?''

அறிவார்ந்த இந்தக் கேள்விக் கணைகளை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் வே. ஐ. சுப்பிரமணியன் விழாவிற்குத் தலைமை வகித்தார். ஆய்வுக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசிய அமைச்சர் அவர்கள் கருத்தரங்குகளும், ஆராய்ச்சிகளும் எழுத்தறிவற்ற பாமர மக்களுக்குப் பயன்பட அறிஞர்கள் வழி செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டார்!.

''காஞ்சிபுரம் 2000 ஆண்டு வரலாற்றைப் பெற்றுள்ள நகரம். பல்வேறு சிறப்புகளுக்கும், கருத்துக்களுக்கும் விளை நிலமாக அமைந்தது. எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் சைவ சமயத்திற்கு எத்தனை கோயில்கள் உள்ளனவோ அதற்கீடாக வைணவத்திற்கும் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ள ஓர் அற்புதம் காஞ்சி மண்ணிலேதான் நிகழ்ந்திருக்கிறது. அன்றைக்குத் தொடங்கி, பேரறிஞர் அண்ணா அவர்களைத் தந்தது வரை காஞ்சிபுரம் ஒரு சிறந்த நகரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி மையத்

தொகுப்பு
இரா. வெங்கட சுப்பிரமணியன்,
கணக்கர்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகம்
காஞ்சீபுரம்

## நில உடைமைப் பதிவு

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1.6.79 முதல் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த கிராமம் 757ல் 31.12.82 வரை 53 கிராமங்களும் 1.1.83க்கு பின்பு 84 கிராமங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றுள்

இதுவரை 50 கிராமங்களில் இந்தப் பணி முழு அளவில் செயல்படுத்தப்பட்டு 24,442 பட்டாக்கள் 53,929 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எடுத்துக்கொண்டுள்ள பணி முழு அளவில் முடிக்கப்பட்ட 50 கிராமங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தும் முன் 10,145 பட்டாக்கள் மட்டுமே இருந்தன.

திற்குப் பதினைந்து லட்சம் ருபாய் அறக்கட்டளை உருவாக்குவதற்கு அறநிலையத்துறை முன் வந்திருக்கிறது.

"ஒரு காலத்தில் ஆராய்ச்சி செய்வதே தவறு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்று அந்த நிலைமை மாறிவிட்டது. மாறிவிட்டது என்று சொல்லுவதைவிட காலத்தின் கட்டாயம் அதை மாற்றியிருக்கிறது.

"மிக நீண்டகாலம் கழித்தாவது தமிழ் மொழிக்கு ஒரு பல்கலைக் கழகத்தைக் காண்பதற்குரிய வாய்ப்பைத் தமிழகத்து நாயகன் மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு நாம் உருவாக்கி இருக்கிறோம்.

"ஆகவே இது காலம் நமக்கு இட்டிருக்கிற கட்டளை. அந்தக் கட்டளையைப் புரிந்துகொண்டு தமிழ் மொழியைப் பற்றி-நமது ஆலயங்களைப் பற்றி அவை சொல்லுகிற பல்வேறு தத்துவங்களைப் பற்றி இனிமேலாவது ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியதுதான் இந்தத் தமிழ்ப்பல்கலைக் கழகமும்-அதன் அங்கமான இந்தத் தத்துவ மையமும்.

"அவ்வாறு உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு மிகச் சிறந்த மொழியியல் அறிஞரைத் துணைவேந்தர் பெற்றிருப்பது மிகச் சிறந்த செயல். அவர் மொழியியலை மாத்திரம் இயந்திர உணர்வோடு ஆராய்ச்சி செய்கிறவர் என்று இல்லாமல், மொழிக்கும் சமயத்திற்கும் எப்படிப்பட்ட தொடர்பு இருக்கிறது, என்ற கருத்துக்களை உணர்ந்தவர்.

"தத்துவ மையம் காஞ்சியில் ஏன் வைக்கப்பட்டது? இந்த மண் மிகப் பெரிய அறிஞர்களைத் தோற்றுவித்தது. சமயத்தைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும், மொழியுடன் இணைந்த சமயத்தைப் பற்றியும் ஆய்வு செய்ய இதைவிட வேறு நகரமில்லை. இதையே ஆராய்ச்சிக்கும் விவாதத்திற்கும் எடுத்துக் கொள்ளலாம். இந்தக் காஞ்சியில் எத்தனை படையெடுப்புகள், தத்துவங்கள் விளைக்கப்பட்டன, காப்பாற்றப்பட்டன, அதற்குப் பிறகும் தமிழ் தழைத்து நிற்கிறது என்ற பெருமை காஞ்சியைச் சேர்ந்தது. ஆகவே இங்கு இந்த மையத்தைத் தோற்றுவித்திருக்கிறோம்.

"மேலும் இங்கு நடைபெறும் ஆராய்ச்சிகளின் கருத்துகள் முதலில் தமிழில் இருக்கவேண்டும். பிறகு வேறு மொழியில் கூறலாம். அந்தக் காலத்தில் மரங்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டன? மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற தத்துவம் ஒவ்வொரு ஆலயத்திலும் தல விருட்சமாக உள்ளது. உதாரணமாக விருத்தாச்சலத்தில் உள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள மரம் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இது போன்ற வரலாறுகளைப் பாமர மக்களுக்கு ஆய்வாளர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

"நமது தத்துவங்களை முதலில் நமது மக்களுக்கு நமது தாய் மொழியில் தரவேண்டும். ஆராய்ச்சிகள் தாய் மொழியிலேயே நடைபெற வேண்டும். பாமரமக்களுக்குப் புரிய வேண்டும். ஆங்கிலத்தில் வெளிநாட்டவருக்குப் பரப்புவதைவிட இந்த நாட்டில் இந்திய தேசீய மொழியில் பரப்பவேண்டும்.

"ஒருமைப்பாடு நிலைத்து நிற்க சமயமும் தத்துவங்களும் துணை செய்ய வேண்டும். அதற்கு மொழி இடையூறாக இருக்கக் கூடாது. மொழி இல்லையானால் சமயமும் தத்துவமும் இல்லையென வரலாறு உணர்த்தியுள்ளது. மொழியையும் தத்துவங்களையும் இரண்டு கண்களாக இந்த நாடு பெற்றிருக்கிறது.''

கருத்தரங்கில் டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியன், டாக்டர் பி திருஞான சம்பந்தன், டாக்டர் வி.இராமகிருஷ்ணன், பேராசிரியர் எஸ்.எஸ். இராகவாச்சாரியார், பேராசிரியர் வி.வரதாச்சாரி மற்றும் டாக்டர் ஏ.எஸ். நாராயணபிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இறுதியில் தத்துவ மைய முதல்வர் திரு .தேவசேனாபதி நன்றி கூறினார்.


## உப்புத் தொழில் நுட்பப் பயிற்சி


ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த கைவினைஞர்களுக்காகத் தூத்துக்குடியில் உப்பு உற்பத்தி பற்றிய ஒருமாத காலப் பயிற்சியை உப்புத்துறை வழங்கியது. ஆந்திரப்பிரதேசத்திலுள்ள பல மாவட்டங்களிலிருந்து இப்பயிற்சிக்குக் கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தனர்.

அயோடின் மற்றும் உப்பு சேர்ந்து எவ்வாறு உப்பைத் திடப்படுத்துகின்றன என்பது போன்ற நவீன நுட்பங்களும் இப்பயிற்சித் திட்டத்தில் விளக்கப்பட்டன. சூரியக் கதிர் மூலமாக உப்பு உற்பத்தி செய்யும் முறைகளுக்கும் இப்பயிற்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

கைவினைஞர்கள் தூத்துக்குடியிலுள்ள உப்பு ஆலைகளைப் பார்வையிடுவதன் மூலம் உப்பு உற்பத்தி பற்றி முழு அளவில் அறிய இது வகை செய்கிறது. உப்பு உற்பத்தி பற்றிய பல்வேறு முறைகள், பயிற்சியாளர்களுக்கு விளக்கப்படுகின்றன. பயிற்சியாளர்களும் உப்பு உற்பத்தியின் பல்வேறு முறைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

பயிற்சியாளர்கள், உப்பு உற்பத்தியாளர்களைச் சந்திப்பதன் மூலம், உப்பு உற்பத்திச் செயல் முறை மற்றும் விற்பனைத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளை அறிய முடிகிறது.—பி.ஐ.பி.





## டாக்டர் அம்பேத்கார் நினைவு நீரிழிவு ஆராய்ச்சி மையம்

"சாதி, மத, இன, மொழி பாகுபாடுகளை மறந்து, பிறருக்காகப் பணியாற்றுபவர்கள் மருத்துவர்கள்'' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கருத்துத்தெரிவித்தார்.

சென்னைக் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நீரிழிவு நோய் வார விழாவும், நீரிழிவு நோய் ஆராய்ச்சி மையத்துக்கு 'டாக்டர் அம்பேத்கார் நினைவு நீரிழிவு ஆராய்ச்சி மையம்' என்ற பெயர் சூட்டு விழாவும், ஆர்க்காடு அனுமந்தராவ் கட்டடப் பிரிவுத் திறப்பு விழாவும் 22-10-'83 அன்று மிகச் சிறப்பாக நடந்தது. அப்போது மேற்கண்டவாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவர்களுக்குப் புகழாரம் சூட்டினார்.

இந்த விழாவுக்குத் தலைமை வகித்து, 'ஆர்க்காடு அனுமந்தராவ் பிளாக்'கைத் திறந்து வைத்த மாண்புமிகு மத்திய ராஜாங்க நிதியமைச்சர் திரு எஸ். பி. பி. பட்டாபிராமராவ் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''மத்திய அரசுடன் தமிழக அரசு இணக்கமான உறவுகொண்டுள்ளது. ராஜாஜி, காமராஜ், அண்ணா போல முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இந்தப் பெரிய மாநிலத்தின் நிர்வாகத்தை மிகத் திறமையாக நடத்துகிறார்."

'டாக்டர் அம்பேத்கார் நினைவு நீரிழிவு ஆராய்ச்சி மையம்' என்ற பெயர் பொறித்த கல்வெட்டை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்தக் கட்டடத்துக்கு டாக்டர் அம்பேத்கார் பெயரைச் சூட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதற்குப் பலர், பல பெயர்களைப் பரிந்துரை செய்தனர். ஆனாலும் இந்தத் துறைக்கும், இந்தியத் துணைக் கண்டத்துக்கும் தேவையான 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கைக்கு அடிப்படையிலேயே திட்டம் வகுத்த,வாழ்ந்து காட்டிய அம்பேத்கார் பெயரையே சூட்ட வேண்டும் என்று குறிப்பிட்டேன்.

''இன்னொரு காரணத்தையும் நினைவுபடுத்துவது பொருத்தம் என்று கருதுகிறேன். மருத்துவர் சாதியைப் பார்த்து, மதத்தைப் பார்த்து, தொழிலைப் பார்த்து மருத்துவம் செய்ய முடியாது; செய்யவும் கூடாது. இது இயற்கையாக அவர்களுக்கு விதிக்கப்பட்ட சமுதாய நிபந்தனை. மருத்துவர்களுக்கு உள்ளத்தில் சாதி அபிமானம் இருந்தாலும் அதைச் செயலில் காட்ட முடியாது.

**யாருக்காக ?**

''அறுவைச் சிகிச்சையோ அல்லது வேறு நோய்களுக்குச் சிகிச்சையோ அளிக்கும்போது, ஏழை-பணக்காரன் என்று மருத்துவர்கள் பேதம் பார்க்க முடியாது. மற்றவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவருக்கு, தன் குழந்தைக்கு மட்டும் செய்ய முடியாது. வேறு டாக்டர்தான் செய்யவேண்டும். அது இயற்கை. இதிலிருந்து என்ன தெரிகிறது? மருத்துவர் மற்றவர்களுக்காகத் தொழில் செய்கிறார். தன் குடும்பத்துக்காக அல்ல. சாதியின்றி, மதமின்றி, எல்லைக்கோடின்றி உலக முழுவதிலும் இருந்து வந்தாலும் காப்பாற்றும் பொறுப்பு மருத்துவர்களுக்கு இருக்கிறது.

''மதச் சார்பு இல்லாமல் வாழ்ந்து காட்டியவர் அம்பேத்கார். அவர் புத்த மதத்தைச் சார்ந்து இருந்தாரே என்று கூறலாம். புத்த மதத்தில் சாதி கிடையாது.

''திருச்சியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. இந்து மதத்தில் இருந்து இன்னொரு மதத்திற்குப் போனவர் ஒருவர் இறந்து விட்டார். அவரை, அந்த மதத்தைச் சேர்ந்த எல்லோரையும் அடக்கம் செய்யும் இடத்தில் அடக்கம் செய்ய அனுமதிக்கவில்லை. வலது கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாணசுந்தரம் மத்தியஸ்தம் செய்து வைத்தார். மதமாற்றம் மனமாற்றமாக இருக்க வேண்டுமே தவிர, வெறும் பேச்சால் 'லெட்டர் பேடில்' இருக்கக் கூடாது. மதம் என்பது வாழும் முறையைக் கடைப்பிடிக்க வழி காட்டுவதாக இருக்க வேண்டும்.

**ரூ. 50 ஆயிரம் நன்கொடை!**

''இந்தக் கல்லூரிக் கட்டடங்களை விரிவுபடுத்துவதற்கோ அல்லது வேறு பணிகளுக்கோ எனது சொந்தப் பொறுப்பில் ரூ. 50 ஆயிரத்தை நன்கொடையாகத் தருகிறேன்.

''மத்திய அரசாங்கம் மிகுந்த பொறுப்போடு தனது பணியைச் செய்து கொண்டு இருக்கிறது.

''10 ஆயிரம் டன் அரிசி கூடுதலாகக் கொடுத்து இருக்கிறார்கள். புதிய தொழில் போன்றவைகளுக்கு உதவும் திட்டங்களுக்கு அனுமதிகளை விரைவாக அளித்துக் கொண்டு இருக்கிறார்கள். 'இல்லை' என்று கூறிய நாங்கள், காரியங்கள் நடைபெறும்போது 'இருக்கிறது' என்று சொல்வது எங்கள் கடமையாகும்.

**முத்திரை பதித்தோம்!**

''தமிழ்நாடு பிரச்சினை, இலங்கைப் பிரச்சினையை ஒட்டி இருக்கிறது என்பதையும், இப்போது அது இந்தியப் பிரச்சினையாக மாறி இருக்கிறது என்பதையும் அ.இ.அ.தி.மு.க. அரசில் என் தம்பியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் பண்ருட்டி ராமச்சந்திரன் ஐ. நா. சபையில் பேசி இருக்கிறார். மோசமான, ஆதார

## நீரிழிவு நோயாளிக்கு அன்பான ஆலோசனை !



**நீரிழிவு நோயாளி, தனது பாதங்களைச் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். முரட்டுக் காலணிகளை அணியக் கூடாது. மென்மையான ஆட்டுத் தோலால் ஆன காலணிகளையே அணிய வேண்டும்.**

மற்ற குற்றச்சாட்டுகளை எடுத்துக் காட்டிய இலங்கைப் பிரதிநிதிக்கும், அவர் கூறியது தவறு என்று எடுத்துக்காட்டி மீண்டும் பேசி இருக்கிறார். நாங்கள் எதைச் செய்ய விரும்புகிறோமோ, அதை விளம்பரம் இல்லாமல் செய்ய விரும்புகிறோம். இந்தப் பிரச்சினை ஐ. நா. சபையில் வரவேண்டுமானால், எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்தோம். விளம்பரத்தோடு செய்ய விரும்பவில்லை. பிரதமரின் அனுமதியோடு ஐ. நா. சென்ற குழுவில் பண்ருட்டி ராமச்சந்திரனை அனுப்பி வைத்தோம்.

''இங்கே சத்தம் போட்டுப்பிரயோசனமில்லை. அங்கு முத்திரை பதிக்கப்பட்டு விட்டது. இலங்கை தவறு செய்துவிட்டது என்று முத்திரை பதிக்கப்பட்டு விட்டது. எப்படி நிறைவேற்ற வேண்டுமோ, அந்த வகையில் நிறைவேற்றுகிறோம். விளம்பரம் இருக்கக் கூடாது. ஆடம்பரம் இருக்கக் கூடாது; அடக்கமும் கடமையும் இருக்க வேண்டும் என்ற வகையில் செயலாற்றுகிறோம்.

**குறை இல்லை!**

''சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபோது அதைக் குறை கூறியவர்கள்கூட, இப்போது ஊழல் என்கிறார்களே தவிர அந்தத் திட்டத்தைக்குறைகூறுவதில்லை.

''எனக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டதைக் குறித்து, 40 ஆண்டுக் காலம் சினிமாவில் இருந்து இருக்கிறார், அதற்காகக் கொடுத்து இருக்கிறார்களாம். 'டாக்டர் ஆப் லா' எதற்கு

## மத்திய வறட்சிக் குழு உறுப்பினர் தமிழ்நாட்டுக்கு வருகை

மத்திய வறட்சிக் குழுவைச் சார்ந்த மத்திய அரசின் உயர் அலுவலர் திரு எஸ்.பி. சுக்லா, தமிழ்நாடு போக்குவரத்துத் துறைச் செயலர் திரு. பி. எஸ். பாண்டியன் ஆகியோர் 7-10-83ம் நாள் தஞ்சை மாவட்ட வறட்சி நிவாரணப்பணிகளைப் பார்வையிட வருகை புரிந்தனர்.

அவர்களை மாவட்ட எல்லையான சாஜூரப் பட்டியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. சத்பதி, இ.ஆ.ப., மற்றும் மாவட்ட அலுவலர்கள் வரவேற்றனர். சாஜூரப்பட்டியில் உள்ள அரமுண்டான் ஏரியில் ரூ. 20,000 செலவில் செய்யப்பட்ட வறட்சி நிவாரணப் பணியையும் பிறகு அதே ஊரில் குடிநீர் வாரியத்தால் அமைக்கப்பட்ட குடிநீர்க் குழாய் அமைப்புப் பணியையும் குழுவினர் பார்வையிட்டனர். மேலும் செங்கிப்பட்டியில் குளத்தின் உள்ளே தோண்டப்பட்ட கிணற்றையும் கொல்லங்கரையில் அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டியையும் மருங்குளத்தில் ஏரியைத் தூர் எடுத்துள்ள பணியினையும் பார்வையிட்டார்கள்.

பயணத்தின்போது நிருபர்களுக்குப் பேட்டி அளித்த குழு உறுப்பினர் திரு எஸ்.பி. சுக்லா, ''தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற வறட்சி நிவாரண வேலைகள் நாங்கள் நினைத்ததைவிட மிகவும் திருப்திகரமாக நடைபெற்று உள்ளன. இப்பணிகள் மேற்கொண்ட விதம் மகிழ்ச்சியை அளிக்கிறது. வறட்சி நிவாரணப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்குப் பொதுமக்கள் நல்ல முறையில் ஒத்துழைப்பு தந்துள்ளார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு வறட்சிக்காக அரசு அனுமதித்த தொகை முழுவதையும் நல்லமுறையில் செலவு செய்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். பல ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வறட்சி நிவாரணப் பணி மூலம் வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதுடன் நிரந்தரச் சொத்துக்களாக வறட்சி நிதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது லாபகரமானது என்று பாராட்டினார்.

என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டுள்ளது. நான் கேட்டா கொடுத்தார்கள்? பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழா நடக்கிறது. அவர்கள் வழங்கும் டாக்டர் பட்டத்தை வேண்டாம் என்றால், அந்த அறிஞர் பெருமக்களை அவமானப்படுத்துவது போல் ஆகிவிடுமே என்பதால் தான் ஏற்றுக் கொண்டேன். மற்றபடி என்னை டாக்டர் என்றாலும் சரி, நோயாளி என்றாலும்சரி எனக்குக் கவலையில்லை.

**அண்ணாவின் கொள்கை**

''நான் நினைப்பதை முடிக்க வேண்டும். அதற்கு நீங்கள் உதவ வேண்டும். நான் நினைப்பது அண்ணாவின் கொள்கையை. அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டும். மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதை வரவேற்கிறேன். ஆனால், படித்து முடித்துவிட்டு அங்கேயே குடியேற்றம் செய்வதை விரும்பவில்லை.

''நான் முதல்-அமைச்சராகும் முன்பு வெளிநாடுகளுக்குச் சென்று இருந்தேன். அங்கு ஒருவர் இறால் மீனை இறக்குமதி செய்து பெரிய கோடீசுவரராக இருக்கிறார் என்றார்கள். எங்கு இருந்து இறக்குமதி செய்கிறார் என்று கேட்டேன். அவரது தம்பியிடம் இருந்து என்றார்கள். அவருடைய தம்பி எங்கே இருக்கிறார் என்றேன். கேரளாவில் என்றார்கள். கேரளாவில் எங்கு இருந்து வாங்குகிறார் என்று கேட்டேன். தமிழ்நாட்டில் இருந்து வாங்கி அனுப்புகிறார் என்றார்கள்.

''நான் பதவி ஏற்ற பிறகு சொன்னேன். மீனவர் சங்கங்களே தங்களுக்குள் ஒரு கூட்டுறவு அமைப்பை வைத்து இத்தகைய மீன்களைப் பிடித்து அனுப்ப வேண்டும் என்றேன். நான் முதலமைச்சரான பிறகு வெளிநாடு சென்ற நேரத்தில் ஒரு டாக்டரை அறிமுகப்படுத்தினார்கள். நல்ல டாக்டர், நல்ல 'பிராக்டிஸ்' என்றார்கள். விசாரித்ததில் அவர் தமிழ்நாட்டிலிருந்து வீடு வாங்கிக் கொண்டு போனவர் என்று தெரிந்தது. அவரைத் தமிழ்நாட்டுக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தேன். ஆனால் அவரோ 50 ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு அங்கேயே இருந்துவிட்டார்''

விழாத் துவக்கத்தில் மருத்துவ மனை முதல்வர் டாக்டர் ஜி.வி. சுரையாபேகம் அனைவரையும் வரவேற்றார். டாக்டர் எம். ஜி. முத்துக்குமாரசாமி, சென்னை மருத்துவக்கல்லூரி அ.இ.தி.மு.க. மாணவர் தலைவர் டாக்டர் ஆறுமுகப் பாண்டியன், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மாணவர் தலைவர் டாக்டர் கணேஷ், டாக்டர் சி. செந்தில்நாதன், நீரிழிவு நோய் ஆராய்ச்சிப் பிரிவு வல்லுநர் டாக்டர் பி. கிஷோர் அகமது, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் ஆகியோர் நீரிழிவு நோயைத்தடுப்பதன் அவசியம் குறித்தும், இம்மருத்துவமனை சுற்றுப்புறத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்குச் சிகிச்சை அளிப்பது குறித்தும் பேசினார்கள்.


விழாவில், மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி ஹண்டே அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அமைச்சர்கள் சார்பில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினார். அவர் பேசுகையில், 'கல்விக்கும், மருத்துவத்துக்கும் அரசு அதிகத் தொகையை ஒதுக்கி வருகிறது' என்று குறிப்பிட்டார்.

நோயற்ற வாழ்வு வாழவும், வருமுன் காக்கவும், மக்கள் நல்வாழ்வுடன் திகழவும் அரிய பல கருத்துரைகளை நல்கிய இந்த 'நீரிழிவு வார விழா' நினைவில் நின்றது என்றால் அது மிகையல்ல!

—பி.வி. கிரி.

# மறுவாழ்வு மையம்!

வ. சம்பந்தம்



நீரிழிவு நோய்க்கான ஓர் ஆராய்ச்சி மையம் தமிழ்நாட்டில் வேறு எந்த அரசு மருத்துவ மனையிலும் இல்லை. கீழ்ப் பாக்கம் மருத்துவ மனையில் மட்டும்தான் உள்ளது.

1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தமிழகத்தின் அரசு கட்டி லேறி- அரசோச்ச வந்த அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற 67ஆம் ஆண்டில்தான் இம்மையம் செயல்படத் துவங்கியது. இன்று வரை சுமார் 15 ஆயிரம் நீரிழிவு நோயாளிகள், இம்மையத்தில் பதிவு செய்து கொண்டு சிகிச்சை பெற்றுள்ளனர் பெற்று வரு கின்றனர்

தினந்தோறும் சராசரி 500 பேருக்கு மேல் இங்கு வந்து இன்சுலின் ஊசி போட்டுக் கொள் கிறார்கள். போதிய இடவசதி யின்றி மிகுந்த இடர்ப்பாடு களுக்கிடையே இது நாள்வரை இயங்கி வந்த இம்மையமானது, அதற்கெனக் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தில்-ஏழு மாடிக் கட்டடத்தில் 22-10-'83 முதல் இயங்கத் தொடங்கியது. இதன் தனிச்சிறப்பு என்னவென்றால், இதுநாள் வரை முற்பகல் நேரத் தில் மட்டுமே இயங்கி வந்த இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சேவை, பொதுமக்களுக்கு இனி மேல் பகல் நேரம் பூராவும் கிடைக்கும். அத்துடன் மட்டு மில்லாமல், நீரிழிவு நோய் தொடர்புடைய அத்தனை பணி களும் இங்கே ஒருமுகப்படுத்தப் பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு சகல நவீன மருத்துவ வசதி களும் இனிமேல் ஒரே இடத்தில் இப்புதிய இடத்தில் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளதே யாகும்.

சிறிய வயதில் நீரிழிவு நோய் வந்துவிட்டால் மாத்திரைகள் மூலம் அந்நோயைக் குணப் படுத்திவிட முடியாது. அப்படிப் பட்ட இளவயதினர் தொடர்ந்து தினந்தோறும் இன்சுலின் ஊசி தான் போட்டுக் கொள்ள வேண் டும். வேறு வழி இல்லை. வெளி யூர்களிலிருந்தும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் அப்படிப் பட்ட இளஞ்சிறார்கள் பலர் தங்கள் வீடு வாசல் எல்லாவற் றையும் விட்டுவிட்டு இந்த மருத் துவ மனையிலேயே நிரந்தரமாகத் தங்கி, தினந்தோறும் ஊசி போட்டுக் கொள்கிறார்கள்.

கிராமப்புறங்களில் இன்சுலின் மருந்து கிடைப்பதில்லையாகை யால், இந்த ஏழை எளிய இளஞ் சிறார்கள் இங்கே இப்படி நிரந் தரமாகத் தங்கி ஊசி போட்டுக் கொள்வது தவிர வேறு வழியே அவர்களுக்கு இல்லை. அதனால் அவர்கள் இங்கேயே மருத்துவ மனையிலேயே நிரந்தரமாகத் தங்கிச் சிகிச்சை பெறுகிறார்கள்.

இந்த இளங்குருத்துக்கள் பிற் காலத்தில் எதற்கும் பயன்படா மல் வாடி வதங்கிப் போகாமல் இருக்க - அவர்களது எதிர்கால வாழ்வு இருளடைந்து போய் விடாமல் இருக்க - எதிர்காலத் தில் நாட்டுக்குப் பயனுள்ள மக்க ளாக அவர்களை உருவாக்குவது மட்டுமின்றி - பயனுள்ள ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டு தன் சொந்தக்காலிலேயே நிற் கும் ஓர் உறுதித் தன்மையையும் அவர்கள் உள்ளங்களிலே உரு வாக்கிட வேண்டும் என்ற சீரிய சமுதாய நோக்கின் அடிப்படை யில் உருவாகியுள்ளதுதான், 'நீரிழிவு நோயினால் பாதிக்கப் பட்ட இளஞ்சிறார்களின் மறு வாழ்வு மையமாகும்!''

அவர்கள் வாழ்வு வதங்கிவிடக் கூடாது,அவர்கள் நேரம் வீணாகிப் போய்விடக்கூடாது. ஆக்கரீதி யான முறையில் அவர்களுடைய நேரத்தைப் பயன்படுத்திட சில பல சிறு சிறு தொழில்களை அவர் களுக்கு இங்கேயே கற்றுக் கொடுத்து - இந்த இளஞ்சிறார் களை வாழ வழிகாட்டும் உருப் படியான தொழில் ஒன்றைக் கற்று எதிர்காலத்தில் பயனுள்ள குடிமகன்களாக உருவாக்கிட வேண்டும் என்ற புனிதமான சமுதாயப் பணியைத்தான் அம் மையத்தைத் திறந்து வைப்பது மூலம் ஏழை எளிய மக்களின் காவலர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்.

அந்தச் சிறுவர் ஒவ்வொரு வரின் கல்வித் தகுதி - திறமை - கொண்டுள்ள ஆர்வம் எல்லா வற்றையும் கணக்கில் கொண்டு- அதற்கேற்றாற் போல் அவர் களுக்குப் பல்வேறு சிறு சிறு தொழில்களில் இம்மையத்தில் பயிற்சி அளிக்கப்படும். பல கட் டங்களில் இப்பயிற்சி அளிக்கப் படும். முதல் கட்டப் பணிகளாக, கூடை முடைதல், மரச்சாமான் களுக்குப் பாலிஷ் செய்தல், வண்ணம் பூசுதல் -பிரம்பு நாற் காலி பின்னுதல், கவர் செய்தல் தோட்ட வேலை போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப் படும்.

இரண்டாவது கட்டமாக, தையல் வேலை, தச்சு வேலை, பொம்மை செய்தல், துணி களுக்குப் பூ போடுதல், தேனீ வளர்த்தல் போன்ற பணிகளிலும் மூன்றாவது கட்டமாக, புத்தகம் பைண்டிங் செய்தல், கடிகாரம் பழுதுபார்த்தல், ரொட்டி, பிஸ் கட் தயார் செய்தல், ஸ்கிரீன் பிரிண்டிங், டிரைகிளீனிங் போன்ற தொழில்களும், அதன் பிறகு அச்சுத் தொழில், நிழற் படம் எடுத்தல், கயிறு, பாய் பின்னுதல் போன்ற பணிகளில் பயிற்சி அளிக்கப்படும். இது நாள் வரையில் நிரிழிவு ஆராய்ச்சி மையம் இயங்கி வரும் பழைய கட்டடத்திலேயே, இம்மறு வாழ்வு மையம் செயல்படும். புதிய கட்டடம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டதும், அந்த இடத்திற்கு இந்த மையம் மாற் றப்படும். இந்த மையத்தை அமைத்து, அதை நிர்வகிக்கும் பொறுப்பை இந்திய செஞ் சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஒரு மருத்துவமனை_நோயைக் குணப்படுத்தும் இடம் என்ப துடன் மட்டுமல்லாமல், நோயாளிகளின் எதிர்கால-அன் றாட நல்வாழ்வுக்கு வழிகாட்டி டும் ஓர் அமைப்பாகவும் திகழ் வது என்பது பாராட்டப்பட வேண்டிய, மற்றவர்களும் கடைப் பிடிக்க வேண்டிய புதிய அணுகு முறை அல்லவா? நோய்வாய்ப் பட்ட இளஞ்சிறார்களின் எதிர் காலம் கசங்கிப் போய்விடாமல்- அவர்களுக்குச் சுயவேலை வாய்ப்புகள் அளித்து - அவர்கள் வாழ்விலே ஒரு பிடிப்பினை ஏற் படுத்தி - எதிர்காலத்தில் பய னுள்ள குடிமகன்களாக, அவர்கள் திகழ அடித்தளம் அமைத்துக் கொடுக்கும் இம்மாதிரி மையங்கள் நாட்டிலே பற்பல தோன்றிடல் வேண்டும்.





# வனிதையரைக் கவரும் வண்ணத் துணிகள்

நம்நாட்டில் 'கோ-ஆப்டெக்ஸ் என்பது கைத்தறி ஜவுளியில் ஒரு குடும்பப் பெயர். கோ-ஆப்டெக் ஸின் விற்பனை வெற்றி அதன் நிலையான தொடர்ந்த கூடுதல் விற்பனையின் மூலம் நிருபணமா கிறது. தீபாவளி 1981-ல் ரூ. 32.56 கோடியாக இருந்த விற் பனை, தீபாவளி 1982-ல் ரூ. 38.75கோடியாக உயர்ந்துள்ளது. கடும் வறட்சி நிலையிலும், ஜவுளி விற்பனையில், குறிப்பாகக் கைத் தறி ஜவுளி விற்பனையில் ஏற்பட் டுள்ள மந்த நிலையிலும், கோ-ஆப்டெக்ஸ் தன் ஜவுளி விற் பனையில் ரூ. 6.19 கோடி உற் பத்தி சாதனை புரிந்துள்ளது.

1983 தீபாவளி காலத்தில் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 50 கோடி விற்பனைக்குத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. இவ் வாண்டு கோ-ஆப்டெக்ஸ் மூன்று புதிய இரகங்களை வெளியிடு கிறது. அவை, சிறந்த தோற்ற முடைய ''கிரேட் லுக் சர்டிங்ஸ்'' என்ற பெயரில் பாலியஸ்டர் சட் டைத் துணிகளும், கவர்ச்சிகர மான ''பிரட்டி லுக்'' என்ற பெயரில் பாலியஸ்டர் சேலை களும் மற்றும் ''ஏஞ்சல்'' என்ற பெயரில் பட்டுச் சேலைகளும் ஆகும்.

சிறந்த தோற்றமுடைய பாலி யஸ்டர் சட்டைத்துணிகளும் கவர்ச்சி மிக்க பாலியஸ்டர் சேலைகளும் சிங்கப்பூர், ஜப் பான், ஹாங்காங், தைவான் போன்ற அயல்நாடுகளிலிருந்து பெறப்பட்ட கவர்ச்சி மிக்க வண் ணப் பொருத்தமான வடிவமைப் புகளில் அச்சிடப்படுகின்றன.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டில், கண்ணைக் கவரும் வண்ணங்களில் ''ஏஞ்சல்' பட்டுச் சேலைகள் தயாரிக்கப்படு கின்றன. இவற்றின் அழகினை மேம்படுத்த, அவற்றில் சரிகை வேலைப்பாடுகள் செய்யப்படு கின்றன. பொதுமக்கள் அனை வரின் ,வாங்கும் சக்தியை அடிப் படையாகக் கொண்டே இவை தயாரிக்கப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் தனது 615 விற்பனை நிலையங்களின் மூல மாக விற்பனை செய்து, 35 கோடி மக்களின் கைத்தறியாடை தேவையைப் பூர்த்திச் செய் கிறது. கூட்டுறவுத் துறையில் கோ-ஆப்டெக்ஸ்தான் பெரும் அளவில் சில்லறை விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வசதி செய்யும் பொருட்டு, கோ-ஆப் டெக்ஸ் 200க்கு மேற்பட்ட கைத் தறிக் கண்காட்சிகளைச் சிறப் பான முறையில் நிறுவியுள்ளது.

இது சமீபத்தில் கோ-ஆப்டெக்ஸ் கையாண்ட ஒரு நூதன முறை யாகும். இந்தக் கண்காட்சிகள் அனைத்து மாவட்டத் தலைநக ரங்களிலும் முக்கியமான நகரங் களிலும் நடத்தப்படுகின்றன.

விற்பனைப் பெருக்கத் திட்டத் தில் கடன் விற்பனை முக்கிய இடம் வகிக்கிறது. மாதச் சம் பளம் பெறும் சிப்பந்திகளுக்குப் பண்டிகைக் காலங்களில் தள்ளு படிச் சலுகையோடு கடன் விற் பனையை விரிவுபடுத்துவது குறிப் பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு தமிழக முத லமைச்சர் அவர்கள் அறிவித் துள்ள திட்டத்தின்படி வறட்சி நிவாரணமாக, நிலமற்ற விவசாயி களுக்கு இதுவரை 15 இலட்சம் ஜனதா சேலைகளும் 14 இலட் சம் ஜனதா வேட்டிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழகத்தில் ஏற்பட்ட பெரும் வறட்சிக் காலத்தில் நில மற்ற விவசாயிகள் பயன் பெற்ற தோடு, கைத்தறி நெசவாளர் கள் தொடர்ந்து வேலை வாய்ப் பினைப் பெறவும் ஏதுவாகின்றது.

1983-84ம் ஆண்டிற்கு 340 இலட்சம் சதுர மீட்டர் ஜனதா ஆடைகள் தயார் செய்ய கோ-ஆப்டெக்ஸ் திட்டமிட்டுள்ளது.



# கதர் ஒரு தத்துவம்

**மு. வெங்கடாசலம், இ.ஆ.ப.,**
**தலைமைச் செயல் அலுவலர்**
**கதர் கிராமக் கைத்தொழில் வாரியம்**

கதர் என்பது வெறும் துணி அல்ல. ''கதர் ஒரு தத்துவம், கதர் ஒரு இயக்கம்'' என்று காந்தியடிகள் கூறினார். இராட்டையைப் பொருளாதார மற்றும் அரசியல் விடுதலைச் சின்னமாகக் காந்தியடிகள் கொண்டு வந்து. இராட்டையை— பல்லாயிரக் கணக்கான கிராமப்புறங்களி லுள்ள, பல லட்ச மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஒன்றாக இணைத்தார்கள்.

கதர், கையால் நெய்யப்படும் துணி ஆகும். பருத்தி, பட்டு, கம்பளி வகைகள் இதில் அடங்கும். கையால் நூற்பதும் கையால் நெய்வதும் பழம்பெரும் கைத்தொழிலாகும். இந்தியாவில் பல்வேறு எதிர்ப்புகளுக்கும், போட்டிகளுக்குமிடையே பல நூற்றாண்டுகளாக நிலவி வரும் இந்தியத் துணி வகைகளின் இணையற்ற சின்னமாகும் கதர். கைநூற்புத் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அனைத்து தொழில்களையும் விட பெருமைமிக்க இடத்தை வகிக்கிறது. இது பருத்தி ரகக் கதர்த் துணியின் தனித்தன்மையைக் காட்டுகிறது. பருத்தி வகைத் துணி உற்பத்திகளுக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமான வேலை வாய்ப்பை அளிக்க முடிகிறது.



தொடக்க காலத்தில் நூற்பு பாரம்பரிய ராட்டையில்தான் செய்யப்பட்டது. நூற்பினை ஒரு சுயசார்புடைய தொழிலாக நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, கையால் இயங்கும் 6 கதர் ராட்டைகளும், காலால் இயங்கும் 12 கதர் ராட்டைகளும் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ.8 வரை ஊதியம் கிடைக்கிறது. இந்த ராட்டைகளைக் கொண்ட 479 நூற்புக் கூடங்களைக் கிராமப் புறங்களில் ஏற்படுத்தி, அதன் மூலம் 15,000 மக்களுக்கு வேலை வாய்ப்பினை இவ்வாரியம் ஏற்படுத்தித் தந்துள்ளது. மேற்கொண்டு 3,000 நபர்களுக்கு நூற்பதின் மூலம் நடப்பாண்டில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர உதவியுள்ளது.

உற்பத்தியாகும் நூற்பின் திறனுக்கேற்ப நெசவின் தொழிலை வளர்க்கப் புதுமாதிரி தறி வகைகளை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகைய நெசவுத் தொழிற்கூடம் ஒன்றில் 50 நபர்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரமுடிகிறது. இதன் மூலம் நெசவுத் தொழிலில் முற்றிலும் புதியவர்கள் கூட நெசவுத் தொழிலில் ஈடுபட ஏதுவாகிறது. நடப்பாண்டில் 1,900 நபர்களுக்கு நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தி வேலை வாய்ப்புத்தர வகை செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தர அரசு மானியமாக, ரூ. 1000 வழங்கப்படுகிறது.

பாலிவஸ்திரா நூற்பினையும் நெசவினையும் தமிழகத்தில் புகுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வாரியத்தில் தற்போது உற்பத்தியாகும் பட்டு உற்பத்தி ரூ. 2.75 கோடியை, அடுத்த இரு ஆண்டுகளில் ரூ. 5 கோடியாக உயர்த்திடத் திட்டமிட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பட்டின் வெற்றியினைக் கருத்தில் கொண்டு வாரியம் அதன் உற்பத்தியை வெளிநாடுகளின் தேவைக்கேற்ப திருத்தி அமைத்து வருகிறது.



# மக்கள் தலைவருக்கு மற்றுமொரு மணி மகுடம்

மாண்புமிகு தமிழக முதல்வருக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் ''டாக்டர்'' விருது வழங்கியது பற்றிய பாராட்டு விழா 30.10.83 ஆம் நாளன்று ஏ. வி. எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கலைமாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. வந்திருந்தோரை திரு. ஆ. வெள்ளைச்சாமி, எம்.எல்.ஏ. வரவேற்றார்.

காலை நிகழ்ச்சியை மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வெற்றிக்கு அவரது கடுமையான உழைப்பு, மனோதைரியம், திடமாக முடிவு எடுக்கும் திறமை ஆகியவைதான் காரணம். திரைப்படங்களில் அவர் சாதாரண ஓட்டுநர், ரிக்ஷாக்காரன், விவசாயி முதல் பல்வேறு பாத்திரங்களில் நடித்துள்ளார். அவர் நடித்து வெளிவந்த அத்தனைப் படங்களும் சமூகநலனை அடிப்படையாகக் கொண்ட படங்களாக இருந்தன.

''ஏழை, எளியவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நன்மை செய்யும் பாத்திரங்களில் அவர் நடித்து மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தார். அவர் திரைப்பட நடிகர் மட்டுமல்ல. திரை உலகில் ஒரு பெரிய நிபுணராகத் திகழ்ந்தார். திரைப்படத் தயாரிப்பு முதல் திரைப்படம் இயக்குவது வரை, தான் கற்ற நுணுக்கங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தினார். அதனால்தான் அவரை முதல்வராக மக்கள் தேர்ந்தெடுத்தனர். அவர் கடும் உழைப்பினால் முன்னேறியவர் என்றால் மிகையாகாது.

''ஒருவர் இரண்டு துறைகளில் (திரைப்படம், அரசியல்) புகழுக்கு வருவது இயலாத காரியம். ஆனால் எம்.ஜி.ஆர். அந்தக் காரியத்தைச் சாதித்திருக்கிறார். ஏழு வயதிலேயே கஷ்டப்பட்டு உழைத்து முன்னுக்கு வந்தவர்.

''சத்துணவுத் திட்டம் மூலம் 65 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். இத்திட்டத்தைத் துணிந்து செயல்படுத்தி வருகின்றார். இந்தத் திட்டம் கடந்த ஆண்டு ஜூலை முதல் நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் பயன் இப்போது தெரியாது. வருங்காலத்தில்தான் இப்பெரும் திட்டத்தின் அருமை தெரியும். இந்தத் திட்டம் அவரது இதயத்தில் இருந்து பிறந்த திட்டமாகும்.

''இப்பொழுது தொழிற் கல்வித் திட்டம் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளார். இந்தத் திட்டமும் வெற்றி அடைய வேண்டும். இதே போல குடும்பத்தில் ஒருவருக்கு வேலைத்திட்டமும் கொண்டுவந்துள்ளார். இதன் மூலம் வேலை இல்லாத் திண்டாட்டம் குறைந்து நாடு வளம் பெற வாய்ப்பு ஏற்படும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தையும் சிறப்புடன் நடத்தி வருகிறார். சென்னையில் கடும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டபொழுது சமாளித்தார். தற்பொழுது சென்னை நகர மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை தீர நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்.

''பேரறிஞர் அண்ணா வழியில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதில் உறுதியாகச் செயல்

பட்டு வருகிறார்''.

—தொடர்ந்து மகளிர் கவியரங்கம் ஆரம்பமானது. ''பொன்மனச் செம்மலைப் போற்றுவோம்'' என்ற பொதுத் தலைப்பில் பெண் கவிஞர்கள் கவிதை பாடினார்கள். திருமதி சௌந்தரா கைலாசம் வரவேற்புரை ஆற்றுகையில் ''புரட்சித் தலைவரை மணிக்கணக்கில், நாட்கணக்கில், மாதக்கணக்கில் வாயார வாழ்த்திப் பேசலாம்'' என்றார்.

திருமதி டாக்டர் சிவகாமசுந்தரி தலைமை வகித்துப் பாடுகையில், ''அன்பினால் தமிழக மக்களைத் தன்பால் ஈர்த்தவர். இவர் புகழ் கூறுவதற்கு நீர் ஊற்றுப் போல் கூட்டம் வருகிறது. தமிழகத்தின் முதல் மகனைப் பாராட்ட எங்களுக்குத்தான் உரிமை உண்டு''.

''தமிழ் வளர்த்த தலைவன்'' என்ற தலைப்பில் கவிஞர் அரசு மணிமேகலை கவிதைபாடுகையில் ''வானத்தில் சந்திரன் இல்லை என்றால் இருட்டில் வெளிச்சம் வராது. புரட்சித்தலைவர் அவர்கள் பட்டம் பெற்ற காட்சியினைக் காண அண்ணா இல்லையென்று வருந்துகிறேன்.''

''கொடைவளர்த்த கோமான்'' என்ற தலைப்பில் கவிஞர் ரோகிணி கவிதை பாடுகையில், ''மழைக் கோட்டு தந்த வள்ளலைப் பாராட்ட வார்த்தைகளைத் தேடுகின்றேன். எல்லோரும் படை ஆயுதத்தால் வெற்றி பெறுகின்றனர். ஆனால் இவரோ கொடை ஆயுதத்தால் வெற்றி பெறுகின்றார். நான்கு திராவிட மொழிகளில் கவிதைபாடி உன்னைப் பாராட்டுகின்றேன். சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்குக் காலுக்குச் செருப்பு வழங்க வேண்டும்''.

''கலைவளர்த்த காவலன்'' என்ற தலைப்பில் கவிஞர் தங்க அன்புவல்லி கவிதை பாடுகையில் ''அண்ணா எனச் சொல்வதால் அவருக்கு யானை பலம் வருகிறது. பொன்மனச் செம்மல் படத்திலே புதுப்புதுக் கருத்துகளை விளக்கி நடித்து மக்களிடையே ஆதரவு பெற்றார். கொஞ்சுகிற பிள்ளைகளுக்குச் சோறுபோட்டு வரும் திட்டம் பாராட்டுதற்குரியது. தலைவருடைய தொழிற் படிப்புத் திட்டத்தினால் அவன் அவன் தொழில் செய்து பிழைத்துக் கொள்வான்''.

''புகழ் வளர்த்த புரவலன்'' என்ற தலைப்பில் கவிஞர் பாரதி கண்ணம்மா கவிதை பாடுகையில் '' உன்னை ஏராளமானோர் பாராட்டுகின்றனர். கருணை மறவன் நீ. பசிப்பிணி மருத்துவன் நீ. உழைக்கும் கரங்கள் நீ. சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து தமிழகத்தைச் செழுமை பெற வைத்தவன் நீ. செய்யும் தொழிலே தெய்வம் என்று செயல்படுத்தும் தலைவன் நீ.''

''அறம் வளர்த்த அண்ணல்'' என்ற தலைப்பில் கவிஞர் நிர்மலா சுரேஷ் கவிதை பாடுகையில் பட்டம் இவரை ஆண்டது இல்லை. இவர் மக்கள் பட்டத்தால் ஆண்டவர். இருபதாம் நூற்றாண்டின் கலைச்சிகரம் பொன்மலச் செம்மல் ஆவார். ஏழைகளின் ஒளி விளக்கு''.

கவிஞர் வைகைச் செல்வி பொதுத் தலைப்பில் கவிதை பாடுகையில், ''மரபுக் கவிதையாக இருந்த சென்னைப் பல்கலைக் கழகம் புதுக்கவிதையாக மாறியுள்ளது. விதவைப் பெண்களுக்கு உதவிடும் திட்டம், சத்துணவுத் திட்டம் பாராட்டுதற்குரியது.''

''தானைத் தலைவனும் தமிழகப் பொலிவும்'' என்ற பொதுத் தலைப்பில் 'எண்ணச் சோலை' என்ற மகளிர் கருத்தரங்கு நிகழ்ச்சியில் மகளிர்பலர் பாராட்டுத் தெரிவித்தனர். நிகழ்ச்சிக்கு டாக்டர் லலிதா காமேசுவரன் தலைமை வகித்துப் பேசுகையில், ''முதல்வர் அவர்கள் சிறப்பான பண்பு, அடக்கம், அமைதி, குணமுடையயவர். சொந்த உழைப்பாலே முன்னுக்கு வந்தவர். பாமர மக்களின் தலைவர் என்ற முறையில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 40 ஆண்டுகளாகப் புகழ்தேடி, மக்களின் உள்ளத்திலே இடம் பெற்ற தலைவரைக் காண்கிறோம். சென்னைப் பல்கலைக் கழகம் பட்டம் கொடுத்தது தகுதியான நேரத்தில் கொடுக்கப்பட்ட சிறப்பான செயலாகும்.''

''கலைகளில்'' என்ற தலைப்பில் திருமதி சிவசங்கரி பேசுகையில், ''எனது வீட்டில் உள்ளோருக்குப் பாராட்டுக் கிடைத்தது



## சாதனைச் சரிதம் படைத்த நேரு

ஜவகர்லால் நேரு, இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த பெருமக்களில் ஒருவராகத் திகழ்கிறார். நமது காலத்தின் முக்கியமான பெருமைகளின் உருவகமாக அவர் ஒளி வீசித் திகழ்ந்தார்.

இந்திய நாட்டின் தலைவர் என்ற வகையில் உலக நாடுகளின் நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் அவரது தாய்நாடு தயக்கம் காட்டியதில்லை என்பதையும் விலகிச் சென்றதில்லை என்பதையும் மெய்ப்பித்தார்.



தலைவர் என்ற வகையில் அவரது சாதனைகள்-ஒரு பிரதமரின் சாதனைகளை விடப் பெருமை வாய்ந்தவை என்றுதான் கூற வேண்டும்.

-திருமதி இந்திரா காந்தி
18.1.1972

[பண்டித நேருவின் 'தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்தோவியங்கள்' என்னும் ஆங்கில நூலுக்கு அளித்துள்ள முன்னுரையிலிருந்து]

பொன்றுமகிழ்ச்சியடைகின்றேன், நானும் ஒரு அமெரிக்க நிபுணரும் முதல்வரை முதன் முதலில் சந்தித்தபோது திரு எம்.ஜி.ஆர். மண்தாபமானமுள்ள மன்தராகச் செயல்பட்டதை அமெரிக்க நிபுணர் என்னிடம் பாராட்டினார். முதல்வர் பதவி ஏற்றபோது வறுமையில் வாடுவோருக்கு உதவி புரிந்திடுவேன் என்றார். அதற்காக இன்று பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருவது பாராட்டுதற்குரியது. தலைசிறந்த எழுத்தாளர்களுக்குத் திரு.வி.க.விருது வழங்குவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்?

''மகளிர் மாட்சியில்'' என்ற தலைப்பில் திருமதி. சாந்தி நடேசன் பேசுகையில், ''பாரதியார் பெண்களுக்குச் சொன்ன பத்துக் காரியங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. எத்தனை பேர் தன்னுடைய தாயைக் கவனித்து வருகின்றார்கள் என்று சிந்திக்கவேண்டும். தமிழக முதல்வர் அவர்கள் வயது முதிர்ந்த தாய்மார்களுக்கு உதவி செய்து வருவது மிகவும் பாராட்டுதற்குரியது. பெண்களுக்குத் தனிப் பல்கலைக் கழகம் அமைத்து வருவது பாராட்டுதற்குரியது.''

''எளியோர் வாழ்வில்'' என்ற தலைப்பில் திருமதி.உமையாள் முத்து பேசுகையில், ''தமிழக முதல்வர் பசி எப்படிப்பட்டது என்பதை நன்கு அறிந்தவர். ஆகையால் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். நகர மக்களுக்கு, கிராம மக்களுக்குக் குடிநீர்த் திட்டங்களைக்கொண்டு வந்தார். சென்னைக்கு மட்டும் என்று இருந்த குடிசை மாற்றுத் திட்டத்தை நகரத்திற்கும்விரிவு படுத்தியுள்ளார். அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னும், பின்னும் நகர, கிராம மக்கள் எல்லோரிடத்திலும் முழுஆதரவு பெற்றுள்ளார். வறுமைக் கோட்டில் இருக்கும் மக்களை மேல்நிலைக்குக் கொண்டுவரும் முதல்வரைப் பாராட்டுகின்றேன்''.

''கல்வி வளத்தில்'' என்ற தலைப்பில் திருமதி. சாவித்திரி இராகவேந்திரா பேசுகையில், ''பெண்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்றவர். மக்கள் மனது அறிந்து திரைப்படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். குழந்தைகள் மதிய உணவுக்காகப் பள்ளி செல்லவில்லை. சத்துணவு தருகிறார்கள் ஏன்றும், கல்வி கற்பதற்கு என்றும் குழந்தைகள் வருகின்றனர். முதல்வரின் தொழிற் கல்வித் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது.''

''பொதுநலப் பண்பில்''என்ற தலைப்பில் திருமதி. மங்கையர்க்கரசி பேசுகையில், ''மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உணர்ந்து செயல்பட்டு வருகின்றது அரசு. எந்த மாநிலமும் செய்யாத சாதனைகளைச் செய்து வருகின்றது. காந்திய வழியில்செயல்பட்டுவருகின்றது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று செயல்பட்டு வருகின்றது. மக்களுக்கு நம்பிக்கை ஒளியை ஊட்டிச் செயல்பட்டு வருகின்றது''.

### கவியரங்கம்

மாலையில் நடைபெற்ற கவியரங்க நிகழ்ச்சிக்கு மாண்புமிகு சட்டமன்றக் கொறடா திருப்பூர் மணிமாறன் வரவேற்புரையாற்றுகையில், குறிப்பிட்டதாவது:

''புரட்சித்தலைவர்புகழுக்குப் புகழ்சேர்க்கின்ற வகையில் இந்த விழா நடைபெறுகிறது. டாக்டர் பட்டம் புரட்சித் தலைவரைத் தேடிவந்த பட்டம்,தேடிப்பெற்ற பட்டம் அல்ல. காந்தியடிகள், லெனின்,மாவோ ஆகியோருக்குச் சிறுவயதில் சில எண்ணங்கள் தோன்றின. அதனைத் தம்முடைய வாழ்நாளில்கடைப்பிடித்து வெற்றி பெற்றனர். அதேபோல் இன்று புரட்சித் தலைவர் இளமையில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றார். சமுதாயச் சிந்தனைகளை அதிக அளவில் முதல்வர் கொண்டிருக்கிற காரணத்தால் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

'பாடும் பறவைகள்' நிகழ்ச்சியில் 'எங்கள் தலைவனே எங்கும் நிறைகிறான்' என்ற பொதுத் தலைப்பில் பல்வேறு கவிஞர்கள் கவிதை பாடினார்கள்.

''புயல்'' என்ற தலைப்பில் கவிஞர் இளந்தேவனும், ''மாமலை'' என்ற தலைப்பில் கவிஞர் முத்துலிங்கமும், ''தென்றல்'' என்ற தலைப்பில் கவிஞர் மேத்தாவும், ''வான்மழை'' என்ற தலைப்பில் கவிஞர் காமராசனும் கவிதைகள் பாடினர்.


### வளரும் சிந்தனை வளாகம்

மாலை 6 மணியளவில், 'பண்பின் திலகம்-இவர் ஓர் பல்கலைக் கழகம்' என்னும் பொதுத்தலைப்பில் கருத்தரங்கம்தொடங்கியது.

திரு. வலம்புரிஜான் எம்.எல்.சி தலைமையுரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''டாக்டர் பட்டம் பெற்றிருக்கும் முதல்வர்களில் நமது புரட்சித் தலைவர் ஒருவர்தான் இந்திய வரலாற்றிலே மெள்ள மெள்ள ஏறி உச்சிக்குப் போனவர். ராஜாவாக இருந்து மந்திரியானவர்; சக்ரவர்த்தியாக இருந்து முதலமைச்சரானவர். இவர் தேர்ந்த முதலமைச்சர் என்பதை விட நல்ல மனிதர். அதனால்தான் உலகமே இன்றைக்கு அவரைப் புகழ்கிறது.

''இவர் ஆட்சியிலேதான் பிள்ளைகள் பள்ளிக்கு சிலேட்டோடும் போகிறார்கள்-பிளேட்டோடும் போகிறார்கள். சத்துணவுத் திட்டத்தால் இந்நாட்டுக் குழந்தைகளுக்குச்சோறுகிடைக்கிறதே என்று பார்க்காமல், அதனால் முதல்வருக்குப் பேரு கிடைக்கிறதே என்று சிலர் குமுறுகிறார்கள். வாயார தன்னை வாழ்த்துகிறவர்களுக்கு மட்டுமல்ல; வாய் அறுபட வசைபாடியவர்களுக்கும் தன் வீட்டில் சோறுபோட்டு, ஆற்றுப் படைக்கே புது இலக்கணம் படைத்த முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்தது மிகவும் பொருத்தமுடையதாகும்.''



பேராசிரியா பா.நமசிவாயம் தொடக்கவுரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து - பேராசிரியர் அ. அறிவொளி 'கட்டுப்பாடு' என்ற தலைப்பிலும், டாக்டர் தெ.ஞானசுந்தரம் 'கண்ணியம்' என்ற தலைப்பிலும், பேராசிரியர் தி.இராசகோபாலன் 'இரக்கம்' என்ற தலைப்பிலும், பேராசிரியர் சோ. சத்தியசீலன் 'கடமை' என்ற தலைப்பிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டதைச் சிறப்பித்து உரையாற்றினார்கள்.

**சான்றோர் சால்புரை**

இரவு 7 மணியளவில் 'சான்றோர் சால்புரை' எனுந்தலைப்பில் அறிவரங்கம் தொடங்குமுன் கலைமாமணி, டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் இசைநிகழ்ச்சி நடைபெற்றது. திரு வலம்புரி ஜான் எம்.எல்.சி. முதல்வரைப் பாராட்டி எழுதிய பாடல்களை இசைநயம் பொங்கப் பாடி அவையினரை அவர் அகமகிழச் செய்தார்.

திரு. சா.சகத்ரட்சகன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகையில்-''இப்படியொரு பாராட்டு விழா நடத்த முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மறுத்து விட்டார்கள்; பிறகு, நான் எழுதிய புத்தக வெளியீட்டு விழா நடத்திக்கொள்ள அனுமதி வேண்டும் என்று கேட்டுத்தான் நாங்கள் எங்கள் தலைவரிடம் இதற்கு அனுமதி பெற்றோம்'' என்று குறிப்பிட்டார்.

**தலைமையுரை**

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

"தமிழகத்தில் புதியதோர் வரலாற்றை உருவாக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றிவரும் தளநாயகர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் எண்ணுவதைச் செய்து முடிக்கிற தொண்டன் நான். ஆம், அவராலே நல்லதைத் தவிர வேறெதையும் எண்ணவும் முடியாது; செய்யவும் முடியாது.

''மண்ணுக்குள் புதைந்து கிடந்த காரணத்தாலே தங்கம் வைரமெல்லாம் சந்தேகிக்கப்படுகிற இந்நாளில், இது புடம் போட்ட தங்கம்தான் என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதை உறுதியாக்கும் விதத்தில் தான் சென்னைப் பல்கலைக் கழகம் நமது முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்திருக்கிறது.

''புரட்சித் தலைவரவர்கள் தமிழகத்திற்கு மட்டும் சொந்தமல்ல; மனித இனத்திற்கெல்லாம் சொந்தம்.

''காலத்தின் கட்டாயத்தால் இன்று இதுபோன்ற விழாக்கள் தேவைப்படுகின்றன. அவரோடு நெருங்கியிருக்கும் இந்த முப்பதாண்டுக் காலத்தில், அவர் விரும்பாத விழாவிலே இன்றுதான் நான் கலந்து கொள்கிறேன், ஆம்; புரட்சித் தலைவர் அவர்கள் இப்படியொரு பாராட்டு விழாவை விரும்புபவரல்ல; வேண்டாம் என்று சொன்ன அவருடைய உத்தரவையும் மீறி, புத்தக வெளியீட்டுவிழா என்ற பெயராலே நடத்தப்படுகிற இந்த விழாவில் தலைமை வகிப்பதற்காக அவர் என்னை மன்னிக்க வேண்டும்.

தமிழ்நாடெங்கும் தொடர்ந்து நடைபெறப் போகிற ஒரு நல்ல நிகழ்ச்சிக்கு இது தொடக்கவிழாவாகும்.''

**கேரள ஆளுநர்**

மேதகு கேரள ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு:

''கீதையில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்லுவான் - ''நீ உன் தர்மத்தைச் செய், கர்மத்தைச் செய்; பலனைக் கருதாதே'' என்று. அந்த வகையில் ஆறாண்டுக்காலமாக முதல்வராக இருந்து எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிவரும் பணிகளை எடைபோட்டு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கியிருப்பதாக நினைக்கிறேன்.

''படித்துப் பட்டம் பெறுகிறவர்கள் இருக்கிறார்கள்; விலை போட்டுப் பட்டம் பெறுபவர்கள் இருக்கிறார்கள். அதற்கெல்லாம் பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன. ஆனால் தமிழக முதல்வர் பெற்றிருக்கின்ற பட்டம் அப்படியல்ல. சென்னைப் பல்கலைக் கழகம் பட்டம் அளிக்கிறது என்றால், அது உலகமே பாராட்டுவது போல் ஆகும்.

''எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சரானபோது - புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் என்றெல்லாம் இவர் ஏழைகளிடத்திலே பட்டம் பெற்றவரே தவிர படித்துப் பட்டம் பெற்றவரில்லையே, எப்படி நிர்வாகம் செய்வார் எனச் சந்தேகித்தவர்கள் உண்டு. 1954ல் காமராசர் முதல்வரானபோது இப்படித்தான் பேசிக் கொண்டார்கள். ஆனாலும் அவர் புகழ் பெற்றார்.



## அட்டைப்பட விளக்கம்

மனிதருள் மாணிக்கம் நேரு அவர்களின் பிறந்தநாள் (நவம்பர் 14) குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. மேதைகள் மழலையைப் போற்றி மகிழ்வதை முதலாவது, நான்காவது அட்டைகள் அழகுறச் சித்திரிக்கின்றன.

# ஆதிதிராவிடர் நலனுக்கு அரிய பல திட்டங்கள்



## தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம்

(31.10.83 அன்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து....)

இதுவரை ஆதிதிராவிடர் நலனுக்காகப் பல திட்டங்கள் கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. இனி நகர்ப்புறங்களில் வாழும் ஆதிதிராவிடர்களும் நலன்பெறப் பல்வேறு திட்டங்களை அரசு தீட்டியுள்ளது.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற நகர்ப்புறப்பகுதிகளில் 1500 ஆதிதிராவிடர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். இதற்கு ரூ. 18 இலட்சம் செலவாகும். பயிற்சி பெறுவோருக்கு மாதம் ரூ. 125 உதவிப் பணமாகத் தரப்படுகிறது. சிலவகைத் தொழில்களுக்கு 6 மாதப் பயிற்சியும் சிலவகைத் தொழில்களுக்கு ஓராண்டுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மருத்துவ ஆய்வுக்கூடப் பயிற்சி, செவிலியர் பயிற்சி, தச்சுத் தொழில் பயிற்சி, மோட்டார்த் தொழில் பயிற்சி, தண்ணீர்க் குழாய் பதிக்கும் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு உதவிபெற 3500 ஆதிதிராவிடர்கள் முன்வந்துள்ளனர். இவர்களுக்கு உதவி செய்ய ரூ. 75 இலட்சத்தை அரசு மானியமாக அனுமதித்துள்ளது.

சென்னையில் காலணித் தொழில் செய்வோருக்கு ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள பெட்டிக் கடையும் ரூ. 1500 மதிப்புள்ள தையல் இயந்திரமும் வழங்கப்படுகின்றன. ஏனைய பொருள்கள் வாங்குதவற்காக ரூ. 1000 காதித் துறையால் வழங்கப்படுகிறது. ஒரு நபருக்கு மொத்தம் ரூ. 6700 மானியமாகக் கிடைக்கிறது.

பிஸ்கோத்து, இனிப்புப் பொருள்கள், கையினால் செய்யப்படும் காகிதம் ஆகியவை தயாரிக்க அரசு நிதிஉதவி வழங்குகிறது. இதுவரை கையினால் காகிதம் செய்யும் அலகுகள் 15 உருவாக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய அரசு ரூ. 10 கோடி தமிழகத்திற்குத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 3 கோடியே 48 லட்சம் செலவில், 14 விசைத்தறிகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் 1480 பேர் பயன் பெறுவர். கறவை மாடுகள் வாங்குவதற்கு 4000 ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 1 கோடியே 50 லட்சம் வழங்கப்படுகின்றது. பட்டுத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், ரூ. 43 லட்சம் செலவில் துவக்கப்படுகின்றன. இவற்றின் வாயிலாக 100 பேர் பயன்பெறுவர். பாலியஸ்டர் இழை சுற்றும் அலகுகள் 95, ரூபாய் 55 லட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன. இவற்றின் வாயிலாக 5000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

ஆடு வளர்ப்பதற்கு 1500 மையங்கள், ரூபாய் 60 லட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன. இவற்றின் வாயிலாக 500 ஆதிதிராவிடர்கள் பயன்பெறுகின்றனர். கோழி வளர்ப்புக்காக 200 பேருக்கு ரூ. 8 லட்சம் செலவு செய்யப்படுகிறது.

புதிதாக மாணவர் விடுதிகள் 10 அமைக்கப்பட உள்ளன. மகளிர்க்கு 39 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

''இவர் நடிகராயிற்றே எப்படி நிர்வாகம் பண்ணுவார் எனப் பலரும் பேசியதுண்டு. நிர்வாகம் செய்வதைவிடநடிப்பது கடினம். அவரது அரசு நடவடிக்கைகள் எல்லாம் மக்களுக்கு ஏற்றதாகவே இருக்கின்றன. அவரது நல்ல திட்டங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளுவதோடு பாராட்டுதலையும் வழங்கிவருகிறார்கள். சினிமா உலகில் பெயர் பெற்றதைப் போலவே, சிறந்த நிர்வாகத்தால் அவர் பெயரும் புகழும் பெறுவதை நான் பார்க்கிறேன். பாராட்டுகிறேன்.

''சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டபோது ஏராளமாகப் பணம் செலவிட்டதாகக் கூறப்பட்டதை நான் பார்த்தேன். திட்டமானாலும் சரி; தொழிலானாலும் சரி ஆரம்பத்தில் அப்படிச் செலவாவதைத் தவிர்க்க முடியாதுதான். அப்படியே அத்திட்டத்தில் குறை இருந்தாலும் அதைத்திருத்த - அல்லது நீக்க சிறிது கால அவகாசம் தருவதே புத்திசாலித்தனம் ஆகும். உணவளிப்பது தமிழக அரசாக இருக்கலாம்; ஆனால் இது யார் காலத்திலே வந்தது என்று பார்த்து மக்கள் எம்.ஜி. ஆரைப் பாராட்டுகிறார்கள். வாழ்த்துகிறார்கள். இதில் தவறென்ன?

''தமிழ்நாட்டில் தொழில் துறைகளும் வளர்ந்துள்ளன. அணைகூட கட்டுவார்கள். ஆனால் அதற்கு நதியில்லை - ஆகவே கட்டவில்லை. தமிழகம் பலவகையிலும் இப்போதுதான் வளர்ச்சியடைந்து வருகிறது. தனிப்பட்ட முறையில் தமிழக முதல்வர் அவர்கள் தாராள சிந்தை உடையவர்கள். அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று, இன்னும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.''

விழாவில், 'மனிதருள் மனிதர்' எனுந்தலைப்பில் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் வாழ்த்துப்பா சிறுநூலொன்றைப் படித்து, மக்களுக்கு இலவசமாக வழங்கினார்.

தொழிலதிபர், பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் பேசும்போது ''முதல்வருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த டாக்டர் பட்டம் மேலும் அவர் செய்யவிருக்கிற நற்பணிகளுக்கு அடித்தளமாக அமையும்'' என்றார்.



நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பேசும் போது, ''எம்.ஜி.ஆர்க்கு டாக்டர் பட்டம் அளித்ததன் மூலம் சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கியிருக்கிறது'' என்றார்.

''இலவசச் சட்ட உதவிக்காக இங்கு ஒரு அமைப்பு செயல்படுகிறது. அந்த அமைப்பு ஏழைகளுக்கு உதவவேண்டும் என்பதற்காக பாரபட்சமில்லாமல் இயங்கவேண்டும் என்பதற்காக இந்த அரசு 20 லட்ச ரூபாய் வழங்கியிருக்கிறது. நீதித்துறையைப் பொறுத்து எதிலும் அரசு தலையிடுவதே இல்லை என்பதை நான் ஊருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இலவசச் சட்ட உதவித் திட்டத்தைப் பாராட்டி சுப்ரீம் கோர்ட் நீதிபதி பகவதி அவர்கள் எனக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருப்பதை இங்கே நான் படித்துக்காட்டுகிறேன்'' என்றும் கூறி அவர் அதைப் படித்துக் காட்டினார்.

20 லட்சம் ரூபாய் நிதி வழங்கி தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள இலவசச் சட்ட உதவி அமைப்புமுறை மிகவும் பாராட்டத்தக்கதும், மற்றெல்லா மாநிலங்களும் முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றத்தக்கதும் ஆகும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பழங்கலை இயக்கக இயக்குநர் திரு. திருக்குறள் முனிசாமி பேசுகையில், ''நான் எம்.ஜி.ஆர். அவர்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன்; அவருடைய அரசியல் நுணுக்கம் வேறு யாருக்கும் இல்லை. வள்ளலார் உயிர் பெற்றுவந்தால் அவரை அப்படியே கட்டிப்பிடித்துக் கொள்வார்; அந்த அளவுக்குத் தயாள சிந்தை உள்ளவர் அவர். இந்தப் பட்டமே அதற்காகத்தான். அவர் கொண்டுவந்த சத்துணவுத்திட்டத்தை அரசியல் காரணங்களுக்காகக் கேலி செய்யாதீர்கள்'' என்றார்.

அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி பேசுகையில் ''சமுதாயத்திலே உயர்ந்தவர்களுக்குப் பல்கலைக் கழகம் சூட்டும் மகுடம்தான் கௌரவ டாக்டர் பட்டம். 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்று வள்ளுவர் கூறியபடி வாழ்ந்து வளர்ந்து வரும் முதல்வர் அவர்களைப் பாராட்டத் தமிழ்ச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க.இராசாராம் பேசுகையில் -'' சத்துணவுத் திட்டத்தாலே மட்டுமல்ல; தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்தி மூன்றாண்டுக்காலத்திலே கிராமப் புறங்களை முன்னேற வைத்தவர் நமது முதல்வர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழியிலே நடைபோடும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளித்தது மிகவும் பொருத்தம்'' என்று கூறினார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.பேசியதாவது:

''எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்தே தமிழகத்தில் பட்டமாகிவிட்டது. இனி ஆராய்ச்சிப் படிப்புப் படிக்கிறவர்களுக்கு எம்.ஜி.ஆர். என்றே பட்டமளித்துவிடலாம் என்கிற நிலை உருவாகியிருக்கிறது. சரித்திரம் படித்தவர்களுக்கே இதுவரை பட்டமளித்த பல்கலைக் கழகம், சரித்திரம் படைத்தவருக்கு இப்போது பட்டமளித்திருக்கிறது. அவருக்குப் பட்டமளித்ததன் மூலம் பல்கலைக் கழகம் பாமரர்களின் ஸ்தாபனம் ஆகிவிட்டது. இப்படியொரு முதல்வர் முன்னும் இருந்ததில்லை; பின்னும் பிறக்கப் போவதில்லை''.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது ''டாக்டர்பட்டம் பெற்றது முதல்வருக்கு மகிழ்வளிப்பதில்லை; அதனால்தான் அவர் இங்கு வரவில்லை. நாம் மகிழ்ச்சியடைகிறோம்; அதனால்தான் விழா நடத்துகிறோம்'' என்று குறிப்பிட்டார்.

திரு. சகத்ரட்சகன் எம்.எல்.ஏ எழுதிய ''ஒரு சாதலைப் பூவின் சரித்திர வசந்தம்'' என்ற நூலை அறிமுகப்படுத்தி, தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் திரு சிலம்பொலி சு. செல்லப்பன் உரையாற்றியபின்னர், அந்நூலை வெளியிட்ட திருமுருக கிருபானந்தவாரியார் இந்தப் பாராட்டு விழாவைச் சிறப்புற நடத்திய மைக்காகத் திரு ஆ.வெள்ளைச்சாமி எம்.எல்.ஏ., திரு வலம்புரி ஜான் எம்.எல்.சி., திரு சகத்ரட்சகன் எம்.எல்.ஏ. மூவருக்கும் பொன்னாடை போர்த்தினார்.

விழா நிறைவுப் பொழிவில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பேசியதாவது:

''மரம் அறுப்போர் ஒரு நூலில் சாக்பீசைத் தடவி முதலில் கோடு அடித்துக்கொண்டு பிறகு அறுப்பார்கள். அந்த நூல் கோணலை நேராக்கும். இங்கே வெளியிடப்பட்ட இந்த நூல் மனக் கோணலை நேராக்கும்.

''தமிழக முதல்வர் எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிறார். இத்தனைக்கும் அவர் பெரிய படிப்பு படித்தவரில்லை. படிப்பாலே மட்டும் ஒரு மனிதன் உயர்ந்துவிடமுடியாது. அதனால்தான் பாண்டி நாட்டின் முதலமைச்சராக இருந்த மாணிக்கவாசகர் 'கற்றாரை யான் வேண்டேன்' என்றார். உள்ளத்தால் தான் ஒருவன் உயரமுடியும்; இதைத்தான் 'வெள்ளத்தனைய மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்றார் திருவள்ளுவர். அந்த உள்ளம் எல்லோருக்கும் இருக்கலாம். பகைவனுக்கும் அருளும் நல்ல உள்ளம் சிலருக்கே வாய்க்கும். அந்த உள்ளத்தால்தான் இன்று இவருக்கு டாக்டர் பட்டம்.

''பெற்ற தாய்க்கே பலர் சோறுபோடாத இந்தக் காலத்தில் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் சோறு போடுவதை நல்ல உள்ளத்தாரெல்லாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர் வாழ்வு செம்மையுற வாழ்த்துகிறேன்.''

விழாமுடிவில், சட்ட மேலவைக் கொறடா திரு.ஜேப்பியார் எம்.எல்.சி. நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**அ. மருதவிநாயகம்**

**இல. இராசேந்திரன்**




# இதன் வயது-80

நாட்டுப் பற்றும், சுதேசிநோக்கமும் கொண்ட முன்னணியினர் சிலரால் 1903இல் 'தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்' என்று ஆரம்பிக்கப்பட்டு, இன்று 'பாங்க் ஆப் தமிழ்நாடு' என்ற பெயரில் விளங்கும் வங்கியின் 80வது ஆண்டுவிழா சென்னையில் 26.10.83 அன்று சிறப்புற நடைபெற்றது.

பணத்தைச் சேமித்து வைக்கவும்,தேவைப்படும்போது எடுக்கவும் மட்டுமே பயன்பட்டு வந்த நிலையிலிருந்து மாறி, சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் பாடுபட்டு வருகிறது பாங்க் ஆப் தமிழ்நாடு.

தமிழ்நாடு வங்கித் தலைவர் திரு வி.எஸ்.வி. மணி விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்று வளர்ச்சி பற்றி உரையாற்றுகையில், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பங்கு மூலதனத்தில் பி.கே. ராமய்யரை தலைவராகக் கொண்டு ஜனவரி இருபத்தேழு 1903இல் தொடங்கப்பட்ட வங்கி தற்போது ஏறத்தாழ 56 கோடி ரூபாய் வைப்புத் தொகையைக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

தலைமை ஏற்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியதாவது:

''இவ்வங்கி 80 ஆண்டுகளுக்கு முன் எப்படிப் பட்ட நிலையில் ஆரம்பிக்கப்பட்டது என்பதை வரவேற்புரையில் தெரிவித்தீர்கள். பல ஆண்டுகளுக்கு முன் கொடுக்கல் வாங்கல் கிராமங்களில் இருந்தது. நமது நாட்டில் வங்கிகளின் வளர்ச்சி இன்னமும் போதாது. முன்பு எல்லாம் ஒரு கிராமத்தில் நான்கு அல்லது ஐந்து பேர்கள்தான் வங்கியின் மூலம் பயன் அடைந்து வந்தார்கள். ஆனால் இன்று அப்படிப் பட்ட நிலையில்லாமல் 20 ஆயிரம் பேர்கள் வாழும் பகுதிகளுக்கு ஒரு வங்கியின கிளை உள்ளது என்றால் கூட அது எப்படிப் போதுமானது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''தமிழகத்தைப் பொறுத்த வரை கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்; 65 இலட்சம் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு கொடுக்கப்படுகின்றது. இரண்டு வயதில்இருந்து 5 வயதுவரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைத் தவிர்த்துவிட்டு,' 6 வயதிலிருந்து 10 வயதுவரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் 30 இலட்சத்திலிருந்து 35 இலட்சம் வரை இருக்கும். 15 வயது வரை உள்ளவர்களுக்குக் கூட சத்துணவு கொடுக்க ஆசைப் படுகின்றேன். அப்படிவரும்போது மேலும் பத்தாண்டுக்கு உணவு, கல்வி கொடுக்கிறோம்.

''மாணவ மாணவியர்கள் படித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு இப்போதுள்ள பிரச்சினையைக் காட்டிலும் அதிக அளவில் பிரச்சினை இருக்கும். அதனால் அவர்களுக்கு இப்போதே கல்வி கற்றுக் கொடுப்பதோடு தொழில் கல்வியையும் சேர்த்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

''10 வயதுக்குப் பிறகு மாணவ மாணவியர்கட்கு 4 நாட்கள் படிப்பு, 2 நாட்கள் தொழிற் பயிற்சி, 1 நாள் ஓய்வு கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த நான் விரும்புகின்றேன். எந்தக் குழந்தை எந்தத் தொழில் செய்ய விரும்புகின்றதோ அந்தத் தொழிலில் கல்வி சொல்லிக் கொடுக்கப் படும். பயிற்சி பெறுகிற இடத்திலேயே வேலை வாய்ப்பும் பெற வேண்டும். இதுபற்றி ஒரு தொழில் அதிபரிடம் பேசினேன். அவர் இப்போதே கோவையில் அப்படியொரு தொழிற்கூடத்தைத் தொடங்கிவிட்டார்.

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியாரின் உயிர்த்தோழர் தேச பக்தர் பரலி சு. நெல்லையப்பர் போன்ற சான்றோர்கள் அக்காலத்தில் தமிழ்நாடு வங்கியில் கணக்கு வைத்திருந்தனரென்பது பெருமைப்படத்தக்க செய்தியாகும்.


எஸ். சந்திரசேகர்

# தமிழர் பெற்ற நோபல் பரிசு!

தமிழ் விஞ்ஞானி டாக்டர் சந்திரசேகருக்கு 1983ஆம் ஆண்டுக்கான அறிவியல் துறை நோபல் பரிசு கிடைத்திருக்கிறது.

நோபல் பரிசு பெற்ற முதல் தமிழரான டாக்டர் சி.வி.ராமனின் அண்ணன் மகன் டாக்டர் சந்திரசேகர்.

டாக்டர் சந்திரசேகரின் 73-வது பிறந்த நாள் விழா அன்று உலகப் புகழ் பெற்ற இந்தப் பரிசு பற்றிய அறிவிப்பு வெளியானது.

நட்சத்திரங்களின் தோற்றம் அவற்றின் அமைப்பு பற்றி ஆராய்ச்சி நடத்தி அவர் வெளியிட்ட கண்டுபிடிப்புக்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டு இருக்கிறது.

டாக்டர் சந்திரசேகர் 1910ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் தேதி தற்போது பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் பிறந்தார். தந்தை பெயர் சுப்பிரமணியம், அவர் கர்நாடக இசையில் வல்லுநர்.

டாக்டர் சந்திரசேகர் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள இந்து உயர்நிலைப் பள்ளியிலும் பிறகு சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்தார். பின்னர் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். பிறகு அவர் அமெரிக்கா சென்று சிகாக்கோ பல்கலைக் கழகப் பேராசிரியரானார். 1953ம் ஆண்டில் அமெரிக்கக் குடியுரிமை பெற்று அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டார்.

அறிவியலுக்கான இந்த ஆண்டு நோபல் பரிசை பேராசிரியர் வில்லியம் புவுலர் என்ற அமெரிக்க விஞ்ஞானியும் டாக்டர் சந்திரசேகருடன் பகிர்ந்து கொள்கிறார். இந்த ஆண்டு நோபல் பரிசின் மதிப்பு 12 லட்சம் டாலர் (20 லட்சம் ரூபாய்) ஆகும்.

**நோபல் பரிசு பெறும் 5-வது இந்தியர்**

நோபல் பரிசு பெறும் 5-வது இந்தியர் டாக்டர் சந்திரசேகர். இவருக்கு முன்னதாக நோபல் பரிசு பெற்ற மற்ற இந்தியர்கள்:

1. கவிச்சக்கரவர்த்தி ரவீந்திரநாத் தாகூர், 1913ஆம் ஆண்டில் இலக்கியத்திற்காக இந்தப் பரிசு பெற்றார்.

2. சர்.சி.வி.ராமன், 1930ல் அறிவியலுக்காகப் பெற்றார்.

3. திரு ஹர்கோவிந்த் குரானா (1968-மருத்துவம்)

4. அன்னை தெரசா (1979-சமாதானம்)

இவர்களில் ஹர்கோவிந்த் குரானாவும் டாக்டர் சந்திரசேகரைப் போலவே அமெரிக்காவில் குடியேறியவர்.

டாக்டர் சந்திரசேகருக்கு குழந்தைகள் இல்லை. மனைவியின் பெயர் திருமதி லலிதா. அவரும் அறிவியல் பேராசிரியை. டாக்டர் சந்திரசேகர் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்தபோது அவருடன் படித்தவர்.

---

''குழந்தைகள் படித்துப் பட்டம் பெற்று வெளியே வரும்போது இந்தத் தொழில் கற்றுக் கொண்டேன் என்ற உரிமையில் வெளியே வரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தத்தான் திட்டங்கள் தீட்டியுள்ளோம். இதற்கு வங்கிகள் உதவிசெய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

“ஏனழகளின் வாழ்வு முன்னேற வங்கிகளின் கிளைகள் மிக அதிக அளவில் கிராமப்புறங்களில் உருவாக வேண்டும். இப்படி வங்கிகள் அதிகமாக வளருவது நாட்டுக்கு நல்லது. படித்தவர்கள் கூட வேலை இல்லாத காரணத்தால் நக்சலைட் மனப்பான்மையுடன் செயல்படத் தொடங்கி விடுகிறார்கள். அவர்களுக்கு வேலை இருந்தால் அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபட மாட்டார்கள். அப்போதுதான் அண்ணாவின் தத்துவமும், நேருவின் தத்துவமும் வெற்றி பெற்று இருபது அம்சத் திட்டம் முழுமை பெறும்.

''வங்கி நிர்வாகிகள், பணக்காரர்களுக்கு உதவி என்று கருதாமல் ஏழை எளிய மக்களுக்கும் அதிக அளவில் கடனுதவி செய்து தரக் கேட்டுக் கொள்கின்றேன்."

மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு.பிரணாப் குமார் முகர்ஜி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், கூறியதாவது:

''வங்கிகளின் எண்ணிக்கை உயர்ந்த அளவிற்கு அவற்றின் சேவை உயரவில்லை என்று கூறப்படுவது தவறு. வங்கி தேசியமயமாக்கப்பட்ட 1969ல் நாடெங்கும் 3,262 வங்கி கிளைகள் இருந்தன. 1982இல் அவை 40,828 கிளைகளாக உயர்ந்துள்ளன. அவற்றில் 21 ஆயிரம் கிளைகள் கிராமப்புறங்களில் உள்ளன. மொத்தத்தில் 50 விழுக்காடு கடன்கள் சாதாரண மக்களுக்குக் கிடைக்கின்றன.

**முன்பு 69 ஆயிரம் பேருக்கு ஒரு கிளை என்று இருந்ததுமாறி இன்று 17 ஆயிரம் பேருக்கு ஒரு கிளை என்ற நிலை உருவாகியுள்ளது. தமிழ்நாட்டில் 15 ஆயிரம் பேருக்கு ஒரு கிளை சேவை புரிகிறது.**


மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. அதற்கு வங்கிகள் உதவி புரிந்திட முன்வர வேண்டும். கடனை வசூலிப்பது ஒரு பிரச்சனையாக உள்ளது. கடன்வசூல் அவசியமானது என்ற போதிலும் அதைச் சுமுகமான முறையில் வசூலிக்க வேண்டும்.

உண்மையாக உதவி தேவைப்படுகிறவர்கள் யார் என்று கருதி அவர்களுக்கு வங்கிகள் உதவி புரிந்திட வேண்டும்.'

விழா இறுதியில், பாங்க் ஆப் தமிழ்நாடு வங்கியின் பொதுநிர்வாக மேலாளர் திரு.ஜி.பரமசிவம் நன்றி கூறினார்.

**அ. மருது**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தமிழரசு
1-12-1983 75 காசு




புதுடில்லியில் 2.11.83 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டார். பக்கத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும் உள்ளனர்.



மூதறிஞர் இராஜாஜியின் மகளும், காந்தியடிகளின் மகன் திரு. தேவதாஸ் காந்தியின் துணைவியாருமான திருமதி லட்சுமி தேவதாஸ், 9.11.83 அன்று சென்னையில் இயற்கை எய்தினார். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், அடையாற்றில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று அவரது திருவுடல்மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



இலங்கையிலுள்ள வெளிக் கடைச் சிறைச் சாலையில் கொலையுண்ட இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்ட வீரர் திரு குட்டிமணி அவர்கள் குடும்பத்தினர் சென்னையில் வசிப்பதற்கு அரசு செலவில் ஒரு வீடு அளித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன் பேரில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கடிப்பிசைப் புல்வர் கே. ஆர். இராமசாமி காலனியில், உயர் வருவாய் வீடு ஒன்று திரு.குட்டிமணியின் குடும்பத்தாரிடம் 7.11.83 அன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் [illegible]

# கொடி நாள்

## மேதகு ஆளுநர் செய்தி





1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள் நாம் முப்படையின் கொடிநாள் தினத்தினைக் கொண்டாடவுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் இந் நன்னாளில் பொதுமக்கள் முன்னாள் படைவீரர் நலன் கருதி, பெருந்தன்மையுடன் பெருந்தொகையினை வழங்கி வருகின்றனர். இதற்கென விற்கப்படும் கொடிகள் நமது கண்முன் இல்லாது சேவை புரியும் படைவீரர்கள் நமது நாட்டிற்கு ஆற்றிய தீரமிக்க சேவையினை மறக்காமல் நினைவு கூர்தற்கு வழி செய்கிறது. இத்தகைய அவர்களது தன்னலமற்ற நாட்டுப் பணியினை நன்றியுடன் ஏற்பது, நமது நாட்டுக் குடிமக்கள் அனைவரும் அவர்களது முன்னேற்றத்திற்கென வகுக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் ஈடேற்றும் முயற்சியில் பங்கெடுத்தலே ஆகும். இத்தகைய திட்டங்கள் அனைத்திற்கும் பொதுமக்கள் அனைவரது தொடர்ந்த பேராதரவு தேவைப்படுகிறது.

எனவே, இந்த வல்லமை மிக்க பணிக்கு உதவும் வகையில், இந்நாளில் பெருவாரியாக நன்கொடை வாரி வழங்குமாறு நான் தமிழ் நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## மாண்புமிகு முதல்வர் செய்தி

ஆண்டுதோறும் டிசம்பர் 7ஆம் தேதியன்று கொண்டாடப்படும் 'கொடி நாள்' நமது தேசீய வாழ்வின் பெருமிதமிக்க நாளாகும்.

நாட்டு மக்கள் அனைவரும் அச்சமின்றி, பாதுகாப்புடன் வாழ்ந்திடத் தங்களது சுக வாழ்வையும், வசதிகளையும் உதறி எறிந்து, கடலிலும் வானிலும், பனி மூடிய மலை முகடுகளிலும், கண் துஞ்சாது கடமையாற்றி, நாட்டைப் பாதுகாக்கும் முப்படை வீரர்களைப் போற்றிப் பாராட்டவும், அவர்களது செயற்கரிய பெருஞ்செயல்களை நினைவுகூர்ந்து நன்றி கூறவும் 'கொடி நாள்' நமக்கெல்லாம் நல்லதொரு வாய்ப்பாகும்.

போர்க்காலங்களிலும், அமைதிக் காலங்களிலும் நாட்டுப் பணிக்குத் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட முன்னாள் இராணுவ வீரர்களின் குடும்பங்களைக் காத்திடவும், வீர மரணம் எய்திய போர் வீரர்களின் குடும்பங்களைக் காத்திடவும், வீர மரணம் எய்திய போர் வீரர்களின் குடும்பங்களுக்கு இயன்ற உதவிகளை அளிக்கவும், 'கொடி நாள்' அன்று நாம் மனமுவந்து அளிக்கும் நன்கொடைகள் பயன்படுகின்றன.

பெருமை மிக்க பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்களான நமது முப்படை வீரர்களின் தன்னலமற்ற தியாகத் தொண்டினைப் பாராட்டுகின்ற வகையில், படைவீரர் சேம நல நிதிக்கு நன்றி உணர்வோடும் உற்சாகத்துடனும், நன்கொடை அளித்திட வேண்டும் என, மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — கார்த்திகை 15
மலர் : 14 இதழ் : 11
1-12-1983



# நாட்டின் கொடிகாக்கும் கொடிநாள்

**மாண்புமிகு நிதியமைச்சர்**
**டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

'கொடிநாள்' மிகச் சிறந்ததொரு பொன்னாள். வீறு கொண்ட நெஞ்சமும், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், தினவெடுத்த தோளும் கொண்ட நம் இந்திய வீரர்கள் அன்னியராட்சி அணுவளவேனும் அணுகவிடோம் என்று அறை கூவி, போர் முரசு கொட்டிப் பகைவனை ஓட ஓட விரட்டிய புகழுடைய நம் வீரர்கள், குறிப்பாகத் தமிழக வீர இளைஞர்கள், அத்தன்னலமற்ற பணியில் தமது அரிய உயிரையும் இழந்தனர்; பலர் ஊனமடைந்தனர். சிலர் விழுப்புண் பெற்று வீடு திரும்பினர்.

பகைமையொழித்து அமைதி காத்த வீரர்களுள் ஆவி துறந்தோர்க்கு அஞ்சலி செலுத்தவும், ஆதரவற்ற அவர்தம் குடும்பத்திற்கு உதவி செய்யவும், ஊனமடைந்து மற்றும் விழுப்புண் பெற்று வீடு திரும்பிய வீரர்களை நினைவு கூர்ந்து அவர்தம் வாழ்வை சீரிய முறையில் அமைத்துக்கொள்ள உதவி புரியவும், ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 7 ஆம் நாளைக் கொடிநாளாகக் கொண்டாடி, பொது மக்களிடையே நன்கொடை பெறப்படுகின்றது.

நம் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினரின் நலனைப் பேணிக் காக்கும்பொருட்டு நல்ல பல திட்டங்கள் தீட்டி முன்னாள் படைவீரர் நலத்துறை என்ற தனித்துறை ஒன்றைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி அத்திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றது. இக்கொடி நாளன்று பொது மக்களிடமிருந்து திரட்டப்படும் நன்கொடைத் தொகை முன்னாள் படைவீரர் நலநிதியில் செலுத்தப்பட்டு, பல்வேறு வழிகளில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும்செலவிடப்பட்டு வருகின்றது. அவற்றுள், தகுதியுடைய இராணுவத்தினருக்கும், அவர்தம் விதவைகளுக்கும் மாதாந்திர மானியம் வழங்குதல்; சிறு தொழில் செய்ய மொத்த நிதியுதவி வழங்குதல்; நெருக்கடியான நிலையில் உடனடி நிதியுதவி வழங்குதல்; 60 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் இராணுவத்தினர் மற்றும் விதவைகட்கு ஓய்வூதியம் வழங்குதல்; தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படைவீரர்கட்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல், காசநோய் மற்றும் தொழுநோய் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் முன்னாள் இராணுவத்தினருக்குக் கைப்பணம், முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகட்குத் திருமண மானியம் மற்றும் கல்வி உதவித் தொகை வழங்குதல்; இறந்துபோன-ஓய்வூதியம் பெற்று வந்த முன்னாள் இராணுவத்தினரின் விதவையர்க்குக் குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பாகும் வரையில் இடைக்கால நிவாரண நிதியுதவி வழங்குதல்; முதலியன குறிப்பிடத்தக்கவை.

இவைகள் தவிர, முன்னாள்படைவீரர்களின் குழந்தைகட்குத் தையற்கலை, தட்டச்சு, மற்றும் சுருக்கெழுத்துப் புத்தகம் கட்டுதல் மற்றும் அச்சுக்கூடம் முதலியவற்றில் பயிற்சியளிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. இதுவரையில் இக்கலைகளில் 4320 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

வயது முதிர்ந்த-ஆதரவற்ற-ஓய்வூதியம் பெற்று வரும் முன்னாள் படைவீரர்களுக்கென வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் முன்னாள் இராணுவத்தினர் விடுதி இயங்கி வருகிறது. (மேலும், வயது முதிர்ந்த-வியாதியினால் அவதியுறும் முன்னாள் படைவீரர்கள் சிறப்பு மருத்துவ உதவி பெற சென்னையில் தங்கி மாநிலத்தலைநகரில் உள்ள உயர்மட்டச் சிறப்பு வசதிகளைப் பெற ஒரு ''மருத்துவமனை'' அமைப்பதற்கான திட்டம் பரிசிலனையில் உள்ளது.)

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவையர்களின் மறு வாழ்விற்காக அவர்களுக்கு இத்துறையின் மூலம் கடைகள் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த உதவும் முன்னாள் படைவீரர் நலநிதியின் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் வேலூர், சேலம், திருச்சி கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூரிலும் ''ஜவான்ஸ் பவன்'' என்ற பெயரில் கடைகள் மையம் கட்டப்பட்டு அதன்மூலம் சட்டப்படும் வருவாய் இந்நிதியில் சேர்க்கப்பட்டுவருகின்றது. இதே போன்ற இரு ஜவான்ஸ் பவன்கள் மதுரையிலும், சிவகாசியிலும் முறையே ரூ.15 லட்சம் மற்றும் ரூ.7,60,000 - செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

பல்வேறு பணிகள் தொடர்பாகச் சென்னைக்கு வரும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் விடுப்பிலோ அல்லது இராணுவத்திலிருந்து விடுபட்டு சொந்த ஊர் திரும்பும் படைவீரர்கள் குறைந்த வாடகையில் தங்கும் பொருட்டு மாவட்டத் தலைநகர்களில் இருப்பது போன்ற ''முன்னாள் படைவீரர் நிலையம்'' ஒன்று சென்னை மாநகரின் மையப் பகுதியில் 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இதேபோன்று சுற்றுலா செல்லும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்கு வசதியாகக் கொடைக்கானலில் 1.75லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஓய்வு விடுதியும் கட்டப்பட்டு வருகிறது.

பயிற்சி முகாம்கள் மூலம் இராணுவத்தில் சேர்வதற்கு முன்னாள் படைவீரர்களின் ஆண் மகவிற்கு முன்னுரிமை அடிப்படையில் பயிற்சியளிக்கப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் பல்வேறு வேலைவாய்ப்புத் தேர்வுகளைச் சுலபமான முறையில் எழுதி வெற்றி பெறப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இராணுவச் சேவையிலிருந்து விடுபெறும் நிலையில் படைவீரர்களுக்குத் தொழில் பயிற்சியளிக்கப்படுகிறது.

நாட்டுப் பணியே நற்பணி என்ற நல்ல குறிக்கோளோடு சாதி, மத இன பேதமின்றி மக்கள் நலனையே கருத்திற் கொண்டு நாட்டைக் காக்க நற்பணியாற்றிடும் நம் வீரர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெறும்போது மறுவாழ்வு அளிப்பது உன்னதமான தேசியத் திட்டமாகும். சென்ற ஆண்டு மட்டும் நமது மாநிலத்தில் சுமார் 18 லட்சம் ரூபாய் முன்னாள் படைவீரர்களின் நலனுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.


மேலும் வரும் ஆண்டுகளில் அவர்களின் மறுவாழ்விற்காகச் சீரிய பல திட்டங்கள் செயல்படவிருக்கின்றன. அதைக் கருத்திற்கொண்டும், பெருகிவரும் உதவித்தொகை மற்றும் பயன்பெறுவோரின் அதிக எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டும், நமது மேதகு ஆளுநர் அவர்கள் இவ்வாண்டு கொடிநாளின் இலக்கை ரூ.22 லட்சமாக அதிகரித்துள்ளார்.

இக்கொடி நாளின் சிறப்பினை நன்கு உணர்வதோடு முப்படை வீரர்களின் நல்வாழ்வுத் திட்டங்களை மேலும் வளர்ப்பதற்கு ஆர்வத்தோடு அரசு, தனியார் துறை மற்றும் தமிழக மக்கள் பங்கு கொண்டு ஆவன செய்வார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.



## சத்துணவுத் திட்ட நிதிக்கு நன்கொடை

சென்னை குரோம்பேட்டையிலுள்ள ஸ்ரீ வித்யா ஆசிரமத்தில் 6.11.83 அன்று ஸ்ரீவித்யா லலிதா பரமேசுவரி ஆலயம் அமைப்பதற்கான பூமிபூஜை ரிஷிகேசம் ஸ்ரீவித்யா ஆசிரம பீடாதிபதி தவத்திரு இராமகிருஷ்ணானந்த சரஸ்வதி சுவாமிகளால் நடத்தப்பட்டது. மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆலயத் திருப்பணியைத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் சத்துணவுத் திட்ட நிதிக்கு ஆசிரமத்தின் சார்பில் ரூ. 1001 அளிக்கப்பட்டது. மேலும் ஏழைக் குழந்தைகளுக்கு ஆசிரமத்தின் சார்பில் சத்துணவுக் கூடம் ஒன்றும் [illegible] ஸ்ரீவித்யா மந்திர் பீடாதிபதி தவத்திரு இராமகிருஷ்ணானந்தா அறிவித்தார்.



# தமிழ் நாட்டின் விழிப்பு!

**— மகாகவி பாரதியார் —**

ஜீவ ஹிம்ஸை கூடாது. மது மாம்ஸங்களால் பெரும்பான்மையோருக்குத் தீங்கு உண்டாகிறது. மது மாம்ஸங்கள் இல்லாதிருத்தல் பிராமணருக்குப் பெரிய கீர்த்தி. அது பெரிய தவம். அது கிருதயுகத்துக்கு, வேராகக் கருதக் கூடிய அநுஷ்டானம்.

ஆனாலும் தாம் ஒரு காரியத்தைச் செய்யாமலிருக்கும் இடத்து, அதைப் பிறர் செய்யும் போது அஸூயை கொள்வது தவறு.

ஊண், உடை, பெண் கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமாகக் கட்டுப்பாடுகளும் விதிகளும், தடைகளும் கட்டுவதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது.

மேலும் உலகத்து மனிதர்களெல்லாரும் ஒரே ஜாதி. 'இந்தச் சண்டையில் இத்தனை ஐரோப்பியர் அநியாயமாக மடிகிறார்களே' யென்பதை நினைத்து நான் கண்ணீர் சிந்தியதுண்டு. இத்தனைக்கும் சுதேசியத்திலே கொஞ்சம் அழுத்தமானவன். அப்படியிருந்தும் ஐரோப்பியர் மடிவதில் எனக்குச் சம்மதம் கிடையாது. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு.

சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஒருயிர். இப்படியிருக்க, நாம் ஒரு வீட்டுக்குள்ளே மூடத்தனமான ஆசாரச் சுவர்கள் கட்டி, ''நான் வேறு ஜாதி, என் மைத்துனன் வேறு ஜாதி. இருவருக்குள் பந்தி போஜனம் கிடையாது. அவனை ஜாதிப்பிரஷ்டம் பண்ண வேண்டும்'' என்பது சுத்த மடைமை என்பதைக் காட்டும் பொருட்டாக இத்தனை தூரம் எழுதினேனே தவிர வேறில்லை.

தமிழ்நாட்டில் ஜாதி சம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சடசடவென்று நொறுங்கி விழுகின்றன.

அடுத்த விஷயம் பெண் விடுதலை. தமிழ்நாட்டில் பெண் விடுதலைக் கட்சிக்குத் தலைவியாக ஸ்ரீமான் நீதிபதி சதாசிவய்யரின் பத்தினி மங்களாம்பிகை விளங்குகிறார். ஸ்ரீ அனிபெசண்ட் இந்த விஷயத்தில் அவருக்குப் பெரிய திருஷ்டாந்தமாகவும் தூண்டுதலாகவும் நிற்கிறார்.

இவ்விருவராலும் இப்போது பாரததேசத்தில் உண்மையான பெண் விடுதலை உண்டாக ஹேது ஏற்பட்டது. இவ்விருவருக்கும் தமிழுலகம் கடமைப்பட்டது. இவர்களுடைய கட்சி என்னவென்றால், ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்ரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர்; சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புறவுறுப்புக்களில் மாறுதல்; ஆத்மா ஒரே மாதிரி.

இதனை மறந்து அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை.

ஸத்ரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்துகொள்ளலாம். விவாகம் செய்த கொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை; உயிர்த்துணை ;வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போல, விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே; விஷ்ணுவும் சிவனும் பரஸ்பரம் உதைத்துக்கொண்டதாகக் கதை சொல்லும். பொய்ப் புராணங்களிலே லக்ஷ்மியை அடித்தாரென்றாவது, சிவன் பார்வதியை விலங்கு போட்டு வைத்திருந்தாரென்றாவது கதைகள் கிடையா. சிவன் ஸ்த்ரீயை உடம்பிலே பாதியாகத் தரித்துக் கொண்டார். விஷ்ணு மார்பின் மேலே இருத்தினார். பிரம்மா நாக்குள்ளேயே மனைவியைத் தாங்கி நின்றார். ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங் கடவுள் ஆண், பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரணமான சமானம். பெண்ணே அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்.

எனவே, இன்று தமிழ்நாட்டில் மாத்திரமேயல்லாது பூமண்டல முழுதிலும், பெண் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம். அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

இந்த விஷயம் தமிழ்நாட்டில் பல் புத்திமான்களின் மனதிலே பட்டு பெண் விடுதலைக் கட்சி தமிழ்நாட்டின் கண்ணே பலமடைந்து வருவதை நோக்குமிடத்தே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகிறது. இந்த விஷயத்திலும் தமிழ்நாடு பூமண்டலத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

அடுத்த விஷயம், மதபேதங்களைக் குறித்தது. இதில் பாரத தேசம் முக்கியமாகத் தமிழ்நாடு- இன்று புதிதாக அன்று. நெடுங்காலமாக, தலைமையொளி வீசி வருதல் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ராமானுஜர் தமிழ்நாட்டில் பிறந்தவர் அன்றோ? ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதாரம் புரிந்தது தமிழ்நாட்டிலன்றோ! பறையனைக் கடவுளுக்கு நிகரான நாயனாராக்கிக் கோயிலில் வைத்தது தமிழ்நாட்டிலன்றோ? சிதம்பரம் கோயிலுக்குள்ளே நடராஜாவுக்கு ஒரு சந்நிதி பெருமாளுக்கொரு சந்நிதி ஸ்ரீரங்கத்திலே பெருமாளுக்கு ஒரு துருக்கப் பெண்ணைத் தேவியாக்கித் துலுக்க நாச்சியார் என்று பெயர் கூறி வணங்குகிறார்கள். ''எம்மதமும் சம்மதம்' என்றார் ராமலிங்க ஸ்வாமி.

உலகத்திலுள்ள மதபேதங்களையெல்லாம் வேருடன் களைந்து ஸர்வ ஸமய ஸமரஸக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்குத்தமிழ் நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படி செய்யவல்ல மஹான்கள் இப்போது தமிழ்நாட்டில் தோன்றியிருக்கிறார்கள். 'அதுபற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தைத் தொடங்குமென்கிறோம்.

மேலே சொன்னபடி, 'பரிபூரண ஸமத்துவம் இல்லாத இடத்தில் நாம் ஆண் மக்களுடன் வாழமாட்டோம்' என்றுசொல்லுவதனால் நமக்கு நம்முடைய புருஷனராலும் புருஷ சமூகத்தாராலும் நேரத்தக்க கொடுமைகள் எத்தனையாயினும் எத்தன்மையுடையனவாயினும் நாம் அஞ்சக்கூடாது. சகோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு; தர்மத்துக்காக இறப்போரும் இறக்கத்தான் செய்கிறார்கள். பிறரும் இறக்கத்தான் செய்கிறார்கள். ஆதலால் சகோதரிகளே! பெண் விடுதலையின் பொருட்டாக தர்ம யுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம்! நமக்குப் பராசக்தி துணை புரிவாள். வந்தே மாதரம்!



30 வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 14-11-'83ல் துவக்கிவைத்த மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், அவ்விழாவில், முன்னாள் இராணுவத்தினரின் விதவை மனைவியருக்குத் தையல் இயந்திரங்களை வழங்கினார். மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. உடன் உள்ளார்.

தமிழக அரசு தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. தெலுங்கு கங்கைத் திட்டத்தின் தலைவர் திரு கிருஷ்ணசாமி ஆகியோரும் தமிழக - ஆந்திர அரசு அலுவலர்களும் கொண்ட கிருஷ்ணா - சென்னை குடிநீர்த் திட்டத் தொடர்புக் குழு 14-11-'83ல் சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துத் திட்டத்தை விரைவுபடுத்துவது சம்பந்தமாக விவாதித்தது.





மாண்புமிகு செய்தி சுற்றுலா அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 2.11.1983 அன்று மாமல்லபுரம் சென்றிருந்தபொழுது ஆஸ்திரேலியாவிலிருந்து சுற்றுலா விருந்தினர்களாக வந்திருந்த தம்பதிகள் திரு. ஜார்ஜ் கென்னி (Mr. George cenny) மற்றும் திருமதி ஜார்ஜ் கென்னி இருவரும் அங்குள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இளைஞர் விடுதியில் அமைச்சர் அவர்களைச் சந்தித்து உரையாடினார்கள். அவர்களுக்குத் தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புக்களைப் பற்றியும், சுற்றுலா இடங்களைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மாமல்லபுரத்துச் சிற்பங்களின் சிறப்பை ஆஸ்திரேலிய விருந்தினர்கள் வெகுவாகப் புகழ்ந்தனர். அந்த உரையாடலின்பொழுது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர், சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் ஆகியோரும் உடனிருந்தனர்.

## படமும் செய்தியும்

பெருந்தகை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 76-வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது சமாதியில், தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் (30-10-83-ல்) . மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.





சென்னை மாநகராட்சியின் சார்பில், வில்லிவாக்கம் எம்.டி.எச். சாலை சந்திப்பிலிருந்து கீழ்ப்பாக்கம் குடிநீரேற்றும் நிலையம் வரை உள்ள புதிய ஆவடிச் சாலையில் 109 சோடியம் ஆவி விளக்குகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் இயக்கி வைத்தார்.



சென்னை மணலியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வளாகத்தில் (7-11-83-ல்) நடைபெற்ற எம்.ஆர்.எல். தொழில் கூட்டுறவுச் சேவைச் சங்கத் தொடக்க விழாவில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு ஆர். அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிராமப்புறங்களில்...

# வரலாறு காணா வளர்ச்சி

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்

**திரு இராம. வீரப்பன்**

தமிழக அரசின் செய்தித்துறை பொறுப் பேற்றுக் கொண்டு, பத்தாண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திலே முதன்முறையாகப் புதுக் கோட்டை மாவட்டத்தில் ''பல்துறைப் பணி விளக்க இயக்கத்தின் கண்காட்சி'' ஒரு வார விழாவைத் தொடங்கி நடத்திக் கொண் டிருப்பது ஒரு அரசின் அரசியல் இலாபத்திற் காக அல்ல; அரசை நடத்துகின்ற ஒரு கட்சியி னுடைய விளம்பரத்திற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு ஏன் 'இயக்கம்' என்ற பெயர் குறிப்பிட்டு இருக்கி றார்கள் என்பதையும், அந்த 'இயக்கம்' என் கிற சொல்லுக்குரிய சரியான பொருளையும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

இன்றைக்கு மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். உத்தமர் காந்தியடிகள் இந்நாட்டிற்கு விடுதலை மாத்திரம் கிடைக்க வேண்டும் என்று விரும்ப வில்லை. வெள்ளைக்காரன் போய் விட்டால் இந்த நாடு 'சுபிட்சம்' அடைந்துவிடும் என் கிற அந்தக் கனவிலே அவர்கள் இருக்கவில்லை. வெள்ளைக்காரன் அரசிலே ஆட்சி செலுத்து கின்றான். அவன் போனபின்பு இந்த நாட் டிலே எத்தகைய பொருளாதாரச் சமூதாய அமைப்பு உருவாக வேண்டும் என்பதற்கும் காந்தியடிகள் சில இலட்சியங்களை நமக்குத் தந்து விட்டுச் சென்றிருக்கின்றார். அந்த இலட்சி யத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார். காங் கிரஸ் இயக்கம், இந்தியத் துணைக் கண்டத்தில் தொடர்ந்து ஆண்டு கொண்டிருக்கின்றது. இடையிலே சில ஆண்டுகள் இல்லையென்றால் கூட அவர்களும் உத்தமர் காந்தியடிகளின் சீடராக ஒரு காலத்தில் இருந்தவர்கள்தான். ஆனால் இதற்கு இடையிலே மாநில அரசு களிலே வேறு பல கட்சிகள் வேறு பல மாநிலங் களில் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகின்றது.

மத்திய அரசின் எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும், தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பதை மத்திய அரசு அரசியல் காரணங்களுக்காகப் பாராட்டவேண் டிய நிலைமையிலேயே இல்லை. மத்தியில் இருந்து வருகின்ற அதிகாரிகள் நேரில் நிலை மைகளைத் தெரிந்து பாராட்டிவிட்டுச் செல் கின்றார்கள். அப்படியும் தமிழகம் எப்படிச் செய்கின்றது என்றால் அதற்கு அடிப்படைக்



காரணம்தான், இங்கே ''நீங்கள் பார்க்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற இளைஞர்களை மாவட்ட ஆட்சித்தலைவர்களாகப் புரட்சித்தலைவர் அவர்கள் நியமனம் செய்கின்றார்கள். பெண்களையும் நியமித்து இருக்கின்றார்கள். பெரும்பாலானமாவட்ட ஆட்சித் தலைவர்கள் - தேர்ந்தெடுத்த இளைஞர்கள் தமிழகத்தில் நன்றாக வேலை செய்கின்றவர்கள் - இரவு பகலாகப் பொறுப்பேற்றுக்கொண்டவர்கள் அந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு என்பது ஒருமனிதனுக்கு மூளை எப்படி முக்கியமோ அவ்வளவு முக்கியமானது. இங்கே சொன்னார்கள், மத்திய அரசு போடுகின்ற திட்டமானாலும் மாநில அரசுதானே நிறைவேற்றுகிறது. அது மத்திய அரசு போட்டாலும் சரி, மாநில அரசு போட்டாலும் சரி ஒருங்கிணைந்த திட்டமானாலும் சரி, எந்தத் திட்டமானாலும் சரி, அதை நிறைவேற்றுவது மாவட்ட ஆட்சித்தலைவர்கள்தான். இல்லையெனில் இங்கு வந்து சேராது. அது வழியிலே போய்விடும்.

ரஷ்ய நாட்டிலே ஒரு கதை உண்டு. ராஜாவுக்கு இவ்வளவு திட்டம் போடுகின்றோமே ஒன்றும் இந்த மக்களுக்குப் போய்ச் சேரவில்லையே என்ற கவலை. அந்தக் கவலையோடு மந்திரியைக் கேட்டாராம். மந்திரிக்கு அதை எப்படி விளக்குவது என்று புரியவில்லை. உடனே ஒரு பெரிய ஐஸ் கட்டியை ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வரச் சொன்னாராம். கொண்டு வந்ததற்குப் பிறகு ஐஸ் கட்டியைக் காட்டினாராம். ராஜா விடத்திலே இந்த ஐஸ் கட்டியைப் பாருங்கள்! இதுதான் நாம் போடுகின்ற திட்டம். நாம் இங்குத் திட்டம் போடுகின்றபோது ஐஸ்கட்டி போல்தான் இருக்கின்றது. ஐஸ் கட்டியை ஒருமுறை சுற்றி வரச்சொன்னாராம். ஐஸ் கட்டி தண்ணீராகப் போய் விட்டது. ஐஸ் கட்டி இருந்த இடமே தெரியவில்லை. உடனே ராஜா மந்திரியிடம் கேட்கிறார், ஐஸ்கட்டியைப் பார்த்தீர்களா? ஆமாம் ஐஸ்கட்டியை யாரிடமாவது கொடுத்தீர்களா? கொடுக்காமலே அது கரைந்துவிட்டது. அதுதான் நாம் போடுகின்ற திட்டம். நாம் ஐஸ் கட்டியைப் போல் திட்டம் போடுகின்றோம். அது கடைசியில் சேரவேண்டியவர்களிடத்தில் ஏதோ ஐஸ் கட்டி இருந்த இடத்தில் கொஞ்சம் தண்ணீர் போய்ச் சேருகிறதே அதேபோல்தான் மாநில அரசானாலும், மத்திய அரசானாலும் திட்டங்களைப் போடுகின்றோம். இந்தியாவிலேயே முதன்முதலில் கிராமப்புற மக்களுக்காக மூன்றாண்டுகளில் 250 கோடி ரூபாய்க்கான திட்டங்களைப் போட்ட அரசு புரட்சித் தலைவர் அரசுதான். கடந்த மூன்றாண்டில் புதுக்கோட்டை மாநிலத்தில் உள்ள பதின்மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு $6\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவழித்து இருக்கின்றோம். ஓர் ஒன்றியத்திற்குச் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கின்றோம். இதன் ஆயுள் காலம் முழுவதும் எத்தனை ஆண்டுகளானாலும், கிராமப் பஞ்சாயத்துகள் 50 இலட்ச ரூபாயைப் பார்த்ததுண்டா? அவர்களால் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா? 25 கோடி ரூபாய் திட்டங்களைக் கிராமப்புற மக்களுக்காக மத்திய அரசு உதவியுடன் நிறைவேற்றுகிற திட்டத்தைக் கூறவில்லை.

மாநில அரசால் மாத்திரம் நிறைவேற்றப்படுகின்ற திட்டம். இது மூன்றாண்டுகளில் முடிக்கப்பட்டாக வேண்டும் என்று ஆணைகள் பிறப்பித்தார்கள், புரட்சித்தலைவர் அவர்கள். இப்படிப்பட்ட திட்டங்களைக் கிராமப்புறத் திட்டங்களை நினைத்துக்கூடப் பார்க்க முடியுமா? சில பஞ்சாயத்துகளைக் கேட்டேன். நாங்கள் வசூலிக்கும் வரி, சம்பளம் கொடுக்கக் கூடப் போதவில்லை என்கின்றார்கள். சம்பளம் கொடுக்க முடியாத ஊராட்சிகளுக்கு 50 இலட்ச ரூபாயை ஒதுக்கியிருக்கின்றோம். திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இது விளம்பரத்திற்காக நடத்தப்படுகின்ற இயக்கம் அல்ல. இந்தக் கிராமப்புறத்து மக்களுக்குச் சாதனைகளைச் செய்து திட்டங்களை நிறைவேற்றி அவைகளை நாட்டு மக்கள் புரிந்து கொள்வதற்காக நடத்தப்படுகின்றதுதான் இந்த இயக்கம். அதற்கு எடுத்துக்காட்டு ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அடிப்படையில் 13 ஒன்றியங்களிலும் திட்டங்களைப் பற்றிய கல்வெட்டுகள் இங்கே திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கல்வெட்டு (பெயர்ப் பலகைகள்) இந்திய அரசுடன் ஒத்துழைப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றதே அதற்குச் சான்றுதான் இந்த விழா. நகர மக்களுக்கும் தெரிய வேண்டும் என்பதுதான் இந்த விழாவின் நோக்கம் .

**சத்துணவுத் திட்டத்தைப் பற்றிக் கண்காட்சியில் ஒரு படம் இருக்கின்றது. இளம்பிள்ளை வாதமான ஒரு பையன் நடக்கமுடியாத அவன் ஓராண்டு சத்துணவுக் கூடத்தில் முறையாகச் சத்துணவு சாப்பிட்டதால் அந்த மாணவன் எழுந்து நடக்கின்றான். இது**



கிராமத்தில் இருப்பவர்களுக்குத் தெரிகிறது. 135 கோடி ரூபாய் திட்டத்தில் 65 இலட்சம் பேர் ஒரு வேளை உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சாப்பாட்டைக் கண்ணால் பார்க்காதவர்கள், அரிசிச் சோறு என்றால் என்னவென்று கூடத் தெரியாதவர்கள், பசி என்று குழந்தை அழுதபோது கிழங்கைப் பூமியிலிருந்து தோண்டி எடுத்துக்கொடுத்திருக்கின்றாள் ஒரு தாய். பூந்தமல்லியில் இந்த நிகழ்ச்சி நடந்திருக்கின்றது. அந்தத்தாய் பெற்ற குழந்தைக்கு இன்றைக்குச் சத்துணவு தருகின்றோம். புதுக்கோட்டை நகரத்தில் எவ்வளவு பேருக்குத் தெரியும்? உணர்ந்துள்ளார்கள். இளம்பிள்ளை வாதத்தினால் நடக்க முடியாமல் சவலைக் குழந்தையாக இருந்த பையன் எழுந்து நடக்கிறான். இதை விளக்கத்தான் இந்த விழா. வெறும் பிரச்சாரத்திற்காக அல்ல. காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு நாளில் ஓர் உத்தரவுபோடுகிறார். பத்துக் கோடி ரூபாய் அந்தத் திட்டம். பத்துக்கோடி ரூபாய் என்றதும் ஒரு கல்லிலே இரண்டு மாங்காய் என்றுதான் எல்லோருக்கும் சொல்லத் தெரிந்தது. ஆனால் ஒரே ஒரு உத்தரவில் இரண்டு சமுதாயத்தைக் காப்பாற்றகின்ற உத்தரவைப் போட்டார் புரட்சித்தலைவர்.

வறட்சியினால் தமிழகத்தின் வேளாண்மைத் தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள்-துயரப்படுகிறார்கள். இந்த வேளாண்மைத் தொழிலாளர்களைப் போல் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள் என்ற காரணத்தினால், வறட்சி வந்ததனாலேயே நெசவுத் தொழிலாளர்கள் துன்பப்படுகின்றார்கள். நெசவுத் தொழிலை நடத்திய 30 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. பல இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள், வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு எப்படி உதவுவது என்பதைச் சிந்தித்துத்தான் அந்தப் பத்துக் கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை வாங்குங்கள். கஷ்டப்படும் வேளாண்மைவிவசாயிகளுக்குக் கொடுங்கள் என்றார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 43 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் எட்டே முக்கால் இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது.

கேட்பார்கள். என்ன! வளர்ச்சித் திட்டங்களைப் போட வேண்டாமா? என்பார்கள். முதலில் மனிதன் உயிர் வாழ அல்லவா வளர்ச்சித் திட்டங்கள்? மனிதன் செத்தபிறகு, பிணத்திற்கு வளர்ச்சி எதற்கு? தண்ணீரை ஊற்றிக் காப்பாற்றுவோம். நமது நாட்டில் பத்துக்கு 4 குழந்தைகளுக்குச் சாவுகள் வருகின்றன. அண்ணா வந்தபிறகு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுங்கள் என்றார். அது எப்படிப் போடமுடியும் என்றார்கள் அதிகாரிகள். ஏன் போட முடியாது? இப்படிப்போட்டால் 8 கோடி ரூபாய் வேண்டுமென்றார்கள். எப்படியாவது இந்த அரிசி போடவேண்டும் இல்லாவிட்டால் பதவியிலிருந்து இறங்கி' விடுவேன் என்றார். அதற்குப்பிறகு கொஞ்சம் சமாதானமாகச் சொன்னார்கள். நகர்ப்புறப் பகுதியான சென்னை, கோவை, மதுரை போன்ற பகுதிகளுக்கு வேண்டுமானால் போடலாம் என்றனர். சரி முதலில் ஆரம்பியுங்கள் என்று கூறினார் அண்ணா. அந்தத் திட்டத்தை மறைந்த மதியழகன் தொடங்கினார். பின்னாலே வந்தவர்கள் அதற்குச் சமாதி கட்டினார்கள். அண்ணாவுக்கு மட்டும் சமாதி கட்டவில்லை. அவருடைய திட்டத்துக்கும் சமாதி கட்டினார்கள்.

இன்றைக்கு 65 இலட்சம் குழந்தைகள் சத்துணவுத்திட்டத்தில் பயன் அடைந்து அனுபவித்து வருகிறார்கள். இதற்கு 135 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நினைத்தாலே பலருக்கு நெஞ்சு வெடித்து விடும். எப்படி நடத்தமுடியும் ? பட்ஜெட்டில் ஒதுக்கவில்லையே என்றார்கள்?

இருந்து பார். நடக்கின்றதா இல்லையா? என்பதைச் செய்கையில் காட்டினார் புரட்சித் தலைவர் அவர்கள். 65 இலட்சம் குழந்தைகளைக் கவனிக்கும் பொறுப்பிலுள்ள 1 இலட்சம் தாய்மார்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுத்திருக்கிறோம். வாழ்க்கையினையும் கொடுக்கிறோம். உயிரையும் பிழைக்கவைக்கின்றோம். அதன் பிறகல்லவா வளர்ச்சித் திட்டம்!

இந்திரா காந்தி ஆட்சி செய்கின்ற மாநிலமானாலும் சரி. இருபது அம்சத்திட்டத்தை நிறைவேற்றுவதில் முதலிடம் வகிக்கின்ற மாநிலம் புரட்சித்தலைவர் ஆட்சி செய்யும் இம்மாநிலம்தான். ஆகவேதான் போடுகின்ற திட்டங்கள், உருவாக்குகின்ற வேலை வாய்ப்பு

## ஜப்பானில் ஆன்மீகக் கல்வி போதனை

ஜப்பானில் ஆரம்பப் பள்ளிகளிலும் ஜூனியர் பள்ளிகளிலும் ஆன்மிகக் கல்வியைப் போதிக்க ஜப்பானிய கல்வி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

இதன் முதல்படியாக முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள் இவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படவிருக்கின்றன. இதற்கான பாடப் புத்தகங்களும் எழுதப்படவிருக்கின்றன.

ஆரம்பப் பள்ளிகளில் 70 சதவிகிதமும், ஜூனியர் பள்ளிகளில் 62 சதவிகிதமும் இப்போது ஆன்மிகப் போதனைகள் நடத்தப்படுகிறது. இப்போதனையின் விளைவாக மாணவர்களிடையே வன்முறை, ஒழுங்கீனம் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று கருதப்படுகிறது.


ஒரு ஆண்டுக்கு 35 மணி நேரம் ஆன்மிகக் கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று தனியார் பள்ளிகளை நடத்தும் நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கள் கிராமப்புற மக்களுக்குச் சேரவேண்டும். அவர்களைக் கைதூக்கி விட்டாக வேண்டும். அதை நிறைவேற்றிய பிறகுதான் நாம் அடுத்த திட்டத்திற்குப் போக வேண்டும். இதற்கிடையில் கல்வியை உருவாக்கவேண்டும். உருவாக்குகின்ற கல்வி, தொழில் அடிப்படையில் இணைந்த கல்வியாக உருவாக வேண்டும் என்று புரட்சித் தலைவர் உருவாக்கியுள்ளார். இதில் புரட்சித்தலைவர் தீவிரமாக இருந்து வருகின்றார்.

வருகின்ற ஆண்டு முதல் நான்கு நாள் படிப்பும் இரண்டு நாள் வேலையும் சொல்லிக் கொடுக்கும் திட்டம் வருகிறது. கிராமப்புறத்து இளைஞர்களைப் படித்தவர்களாக மாற்றினால் மட்டும் போதாது. அவர்களை இந்தச் சமுதாயத்திலே பயனுள்ளவர்களாக மாற்ற வேண்டும். இந்தத் திட்டத்தை இங்கே உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். அவற்றில் பலவற்றை இங்கே காணுகின்றோம். **தொழில் கல்விக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்பதனால் கல்வித்திட்டத்தை மாற்றியாக வேண்டும் என்று புரட்சித்தலைவர் தீவிரமாக இருக்கின்றார்.** இந்திய நாடு செழுமையுள்ள நாடுதான். ஆனால் மக்கள் வறுமையுள்ளவர்கள் தான். இந்திய நாட்டிலே எல்லா வளமும் இருக்கின்றன. கிராமப்புறத்து மக்களுக்காக அரசு அதிகாரிகள் ஒரு சமுதாயப்பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்கிறோம் என்று தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். மத்திய அரசும மாநில அரசும் இணைந்து நடத்துகின்ற இந்தவிழா பத்தாண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திற்கு வந்திருக்கின்றது.

மாநில அரசும் மத்திய அரசும் கட்சிகள் இணையவில்லை. அரசு இணையாமல் சமுதாயத்திற்கு வாழ்வு இல்லை. வளர்ச்சி இல்லை. எதற்கெடுத்தாலும் மத்திய அரசுடன் மோதிக்கொண்டே இருந்தால் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. மோதினால் மண்டைதான் உடையும். மோத ஆரம்பித்தாலே பிரச்சினைகள் வளர்கின்றன; பகை மூளுகின்றது. மத்திய அரசு சத்துணவுத் திட்டத்திற்கு நிதிஉதவி செய்ய ஒப்புக்கொள்ள மறுத்தது. பிறகு சத்துணவுத்திட்டத்தை நடத்திக் காட்டுகின்றேன் என்றார் புரட்சித் தலைவர். நடத்திக் காட்டுகின்றார். தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும்; அதற்காகத்தான் இந்த இயக்கம். அதற்காகத்தான் இந்தக் கண்காட்சி. இந்த அற்புத வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது செய்தித்துறை. இதற்கு மத்தியரசு அதிகாரிகள் உதவிகரமாக இருக்கின்றார்கள். அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

**(21-10-83 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற 'பல்துறைப் பணி விளக்க இயக்கம் மற்றும் கண்காட்சி'யைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து.)**



## நச்சுப் பாம்புகள்

(சிறப்புக் கண்காட்சி)

சென்னை, அரசினர் அருங்காட்சியகத்தில் நச்சுப் பாம்புகள் சிறப்புக் கண்காட்சி 1983 அக்டோபர் திங்களில் நடந்தது.

இந்தச் சிறப்புக் கண்காட்சியில், ஈர நிலையில் பதப்படுத்தப்பட்ட சில நச்சுப் பாம்புகளும், நல்ல பாம்பின் எலும்புக் கூடு மற்றும் ஒரு நச்சுப் பாம்பின் தலையின் உட்புற அமைப்பைக் காட்டும் மாதிரியும் வைக்கப்பட்டிருந்தன.


நச்சுப் பாம்புகளின் தலையிலுள்ள நச்சுப் பை, நச்சுக் குழாய் மற்றும் நச்சுப் பற்கள் ஆகியவை இந்த மாதிரித் தலையில் காட்டப்பட்டுள்ளன.

நம் நாட்டின் நச்சுப் பாம்புகளாக நல்ல பாம்பு, ராஜ நாகம், கட்டு விரியன், கண்ணாடி விரியன், கடல் பாம்பு, பவளப் பாம்பு ஆகியவை இக்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் புதிய சாதனம்

புற்றுநோய் ஏற்படும் 'செல்'களைப் பரிசோதிக்கும் ஒரு நூதன சாதனத்தைத் தயாரிக்கப் போவதாக ஒரு ஜப்பானியக் கம்பெனி அறிவித்துள்ளது. இத்தகைய சாதனம் ஏற்படுவது உலகிலேயே இது முதலாவதாகும்.

செல்கள் எடுக்கப்பட்டு உப்பு நீரில் போடப்படுகின்றன. பின், பல்ஸ் லேஸர் கிரணங்கள் பாய்ச்சப்பட்டு ஆராயப்படுகின்றன. இந்தச் சாதனத்தைக் கொண்டு ஒரு நாளைக்கு 500 முதல் 1000 பேர்களுக்குப் புற்று நோய் உள்ளதா என்று சோதித்துவிடலாம்.



# மனிதாபிமான உணர்வுக்கும் மக்கள் தொண்டுக்கும் புகழாரம்

தமிழகத்தின் மகத்தான வரலாற்றில் காலத்தால் அழியாத ஒரு சிறப்பிடத்தைப் பெற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பெரும் புகழ்மிக்க சென்னைப் பல்கலைக் கழகத்தினால் டாக்டர் பட்டம் Doctor of Laws ( Honoris Causa ) வழங்கப்பட்டதைப் பாராட்டு முகத்தான், தமிழ்நாடுசட்டமன்றஉறுப்பினர்களின் சார்பில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களும், சென்னை அண்ணாசாலையிலுள்ள 'இராஜாஜி மண்டபத்தில்' நவம்பர் திங்கள் 10ஆம் நாள் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் பாராட்டு விருந்து நடத்தினார்கள்.

விருந்துக்குப் பின்னர் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் முதல்வரைப் பாராட்டி உரையாற்றினார்:

''முதல்வர் புரட்சித்தலைவருக்கு அமெரிக்காவில் உள்ள பல்கலைக் கழகங்கள், இலண்டனில் உள்ள பல்கலைக்கழகங்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் அளிக்க முன்வந்தன. புரட்சித்தலைவர் மறுத்துவிட்டார். சென்னைப் பல்கலைக்கழகம் தனது 125-வது ஆண்டுவிழாவையொட்டி முதல்வருக்கு டாக்டர் பட்டம் வழங்க முன்வந்தது. குடியரசுத் தலைவர் வந்து சிறப்புச் செய்வதால், இந்த டாக்டர் பட்டத்தை மறுத்தால் நன்றாக இருக்காது என்பதனால், இப்பட்டத்தைப் பெறுவதற்குப் புரட்சித் தலைவர் ஒத்துக்கொண்டார். மனிதாபிமானத்திற்காகவும், மக்களுக்குப் பாடுபடுவதற்காகவும் இந்தப் பட்டத்தை முதலமைச்சர் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது.

''முதலமைச்சர் பதவிக்கு வருவதற்குமுன்பே புரட்சித்தலைவர் மனிதாபிமானம் கொண்டவர். 15 ஆண்டுகளுக்கு முன்பு சேலத்தில் சுற்றுப்பயணம் செய்த முதல்வர், சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இரவு 12 மணிக்குமேல் விடுதிக்கு வந்தார். அந்நேரத்தில் உடல் ஊனமுற்ற ஒரு மூதாட்டி முதல்வரைக் கண்டு வணக்கம் செலுத்தி, தான் தொழில் செய்து வாழ உதவி செய்யுமாறு கோரினார். விடியும் முன்பே அம்மூதாட்டிக்குத் தன் சொந்தப்பணத்தில், கையினால் தைக்கும் தையல் இயந்திரம் வாங்கி உதவினார். அந்த அளவுக்கு இரக்கம் கொண்டவராகத் திகழ்ந்திருக்கிறார்.

''அடித்தளத்து மக்கள், கிராமப்புறத்து மக்கள் முன்னேற சிறிய அளவில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம் இன்று, மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அனைத்து இடங்களுக்கும் விரிவாக்கப்பட்டு, கிராமங்களில் மறுமலர்ச்சிஏற்படுத்திவருஞ்சாதனை பாராட்டுக்குரியதாகும்.

அடுத்த இதழில்
டாக்டர் பட்டம் பெற்ற முதல்வருக்கு கலையுலகம் நடத்திய பாராட்டு விழா நிகழ்ச்சிக் கட்டுரை

''தான் சிறு வயதில் சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டதை மனத்தில் எண்ணி, நாட்டில் உள்ள 65 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கினார். ஆண்டுக்கு ஏறக்குறைய 130 கோடி ரூபாய் செலவு செய்து இத்திட்டத்தை அமல்படுத்துகிறார். மற்ற மாநிலங்கள் இத்திட்டத்தை நிறைவேற்ற இயலாது பெருமூச்சுவிடும் நிலையில்தான் இருக்கின்றன.

“பாராட்டு விழாவிற்கு அவரை வற்புறுத்தி ஒப்புக்கொள்ள வைத்தோம். அவர் மேலும் பல சிறப்புகள் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.''

அடுத்து, மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பாராட்டிப் பேசியதாவது;

''சென்னைப் பல்கலைக்கழகம் முதல்வருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது, பத்தோடு பதினொன்று என்றமுறையில் அல்ல. தனித்தன்மை வாய்ந்ததாகும். இவருக்கு டாக்டர் பட்டம் அளித்ததன் மூலம் சென்னைப் பல்கலைக் கழகம் தனித்தன்மை பெறுகிறது.

“யார் யாருக்கோ பட்டம் கிடைத்த போதெல்லாம் மக்கள் அதுபற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் இவர் டாக்டர் பட்டம் பெற்றதன் மூலம் மக்கள் அதைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். மக்களுக்கு அதைப் பற்றி அறிய முடிகிறது. செயற்கரிய காரியங்களைச் செய்ததால், திறமறிந்து சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் ஆஃப் லா Doctor of Laws (Honoris Causa) வழங்கியது மிகச் சிறப்பாகும்.

“முதல்வர் டாக்டர் பட்டம் வாங்குவதைக காணாத கண்ணும் ஒரு கண்ணோ என்று எண்ணி அவர் டாக்டர் பட்டம் பெறுவதைக் கண்ணாரக் கண்டேன். நடிகரும் நாடாள முடியுமா என்றிருந்த நிலையில், நடிகர்களாலும் நாடாள முடியும் என்பதைச் செயலில் காட்டிய முதல்வர்களில் முதல்வர் புரட்சித் தலைவர். அவருக்கு நோபல் பரிசு கிடைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. அதுவரை நான் உயிரோடு இருந்து அதை என் கண்ணால் காண வேண்டுமென்பதே என் ஆசை.''

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு ஹாஜா ஷெரீப், முதல்வரைப் பாராட்டிப் பேசியதாவது:

''இந்த விருந்தில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்-மிக மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி - கட்சிகளுக்குள் கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். அதுவேறு - சென்னைப் பல்கலைக் கழகம் மிகப் பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகம். அப்பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்குவது அரிது. அவர் டாக்டர் பட்டம் பெற்றது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி- அவர் நீண்ட நாள் வாழ்ந்து அரிய சேவைகள் செய்ய ஆண்டவன் அவருக்குத் துணை புரிய வேண்டும்.''

மேலவை உறுப்பினர் தாரா செரியன் : 'தமிழக முதல்வருக்கு டாக்டர் பட்டம் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். அடித்தள மக்கள் பலரை மேல்நிலைக்குத் தூக்கி விட்டவர் முதலமைச்சர்'' என்றார்.

அகில இந்திய பார்வர்டு பிளாக் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு ஆண்டித்தேவர் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''நான் புரட்சித்தலைவர் அவர்களை 15 ஆண்டுகளாக நன்கு அறிவேன். அவர் அடித்தளத்து மக்களுக்காக ஆற்றும் தொண்டை அறிவேன். பதவிக்கு வரும் முன்பே மக்களுக்குத் தொண்டாற்றியவர் புரட்சித் தலைவர். கொடுத்துச் சிவந்த கரம் என மக்கள் அவரைப் பாராட்டுவார்கள். தானே உழைத்துச் சம்பாதித்த பணத்தை ஏழை எளியவர்களுக்கு வழங்கியவர்.

''மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவர முதல்வர் முற்பட்டபோது சட்டம் அனுமதிக்குமா எனச் சிலர் சந்தேகப்பட்டனர். சட்டம் மக்களுக்காகத் தானே தவிர, சட்டத்துக்காக மக்கள் அல்ல எனக்கூறி அத்திட்டத்தை அமல்படுத்தினார்.

'' 65 இலட்சம் குழந்தைகள் மதிய உணவு சாப்பிடும் வண்ணம் சட்டமியற்றிய புரட்சித் தலைவருக்கு 'டாக்டர் ஆப் லா' என்ற பட்டத்தைச் சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கி இருப்பது பாராட்டுக்குரியதாகும். புரட்சித் தலைவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டதால் டாக்டர் பட்டத்திற்கே பெரும் சிறப்பு ஏற்பட்டது''.

**அட்டை சொல்லும் கட்டுரை !**

மேலவை உறுப்பினர் திரு வசந்தபாய் பேசும்போது, ''மனிதாபிமான உள்ளமும், ஏழைகளுக்காகப் பாடுபடும் எண்ணமும் கொண்டவர் தமிழக முதலமைச்சர். மக்களின் உள்ளக் கிடக்கையை அறிந்தவர். மக்களுடன் தொடர்புகொண்டு கண்ணியத்துடன் செயல்படும் முதலமைச்சருக்கு டாக்டர் பட்டம் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது'' என்று குறிப்பிட்டார்.

மேலவை உறுப்பினர் திரு ஏ. ஆர். தாமோதரன் பேசுகையில்,''பல ஆண்டுகளாகத் திரைப் படங்களின் வாயிலாக நல்ல பல கொள்கைகளைச் சொல்லி வந்ததன் மூலம் திரைப்படங்களை அரசியல் சிந்தனைக் கருவியாக மாற்றிக்கொண்டார். குறுகிய காலத்தில் தனியாக நின்று ஓர் இயக்கத்தைத்தோற்றுவித்து ஆட்சியையும் பிடித்து முதல்வரும் ஆனார். அத்தகையவர் டாக்டர் பட்டம் பெற்றது பாராட்டுக்குரியதாகும்'' எனக் குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்:

''தமிழகத்தின் 5 கோடிமக்களின் பிரதிநிதிகளாக நாம் இங்கே கூடியிருந்து மகிழ்கிறோம் என்றால் தமிழகமே மகிழ்கிறது என்று பொருள். இவ்விழாவுக்கு ஏற்பாடு செய்திருப்பதன் நோக்கம், புரட்சித் தலைவர் மகிழ அன்று, நாம் மகிழத்தான்.

''நல்லவர், வல்லவர், நம்மவரைத்தேர்ந்தெடுத்து, சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் ஆஃப் லா பட்டம் வழங்கியுள்ளது. மதிக்க வேண்டியவரை மதித்துப் போற்ற வேண்டும் என்பதால் Doctor of Laws (Honoris Causa) பட்டம் வழங்கியுள்ளார்கள். மனிதப்பண்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, கலைத் தொண்டில் சிறந்து விளங்கியதற்காகவும், சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் மனிதாபிமானத்திற்கும் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியதாகும்.

''விளம்பரமின்றி டாக்டர் பட்டத்தை ஏற்றுக்கொண்டது அவரின் அடக்க உணர்வைக் காட்டுவதாகும்.

“அண்ணா அவர்களிடம் கண்ட அடக்க உணர்வைப் பல சமயங்களில் முதலமைச்சரிடம் என்னால் காண முடிகிறது.''

பின்னர், முதலமைச்சர் டாக்டர் பட்டம் பெறுவது - பல்கலைக் கழகக் கட்டடம் - இரண்டு குழந்தைகளுக்கிடையில் முதலமைச்சர் அமர்ந்து சத்துணவு சாப்பிடுவது இவற்றைச் சித்திரிக்கும் நினைவுப் பரிசை மேலவைத் தலைவரும், பேரவைத் தலைவரும் இணைந்து வாழ்த்தொலிகளுக்கிடையில் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.

மேலவைக் கொறடா திரு. ஜேப்பியார், பேரவைக் கொறடா திரு. மணிமாறன் ஆகியோர் முதலமைச்சர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்.

சுவைமிக்க விருந்துக்கு ஏற்பாடு செய்த திரு ஜேப்பியார் அவர்களுக்கும், திரு. மணிமாறன் அவர்களுக்கும் பேரவைத் தலைவர் நன்றி கூறினார்.

இறுதியில் பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்புரை வழங்கினார்:

''பேச்சு வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் பேசமுடியாத அளவுக்குச் சாப்பாட்டைப் போட்டு என்னைப் பேசச் சொல்கிறார்கள். ஹாஜாஷெரீப் பாராட்டியபோது நான் உண்மையில் பூரிப்படைந்தேன். அவர் ஒரு முஸ்லீம், இன்னொரு கட்சிக்குத் தலைவர், நம்மோடு தோழமையில்லாதவர், அப்படியிருந்தும் அவர் பாராட்டியிருக்கிறார் என்றால் நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

''ஒரு தாய், குழந்தையைப் பெற்றெடுத்தபோது அதைப் பார்க்க வருகிறவர்களிடமெல்லாம் இது யாரைப்போல் இருக்கிறது, அப்பாவைப்போல் இருக்கிறதா, தாத்தாவைப்போல் இருக்கிறதா, என அபிப்பிராயம் கேட்டுப் பூரிப்படைவாள். குழந்தையைக் காண வந்தவர்களைக் காட்டிலும், பெற்ற தாயே பெரு மகிழ்வு கொள்வாள். அதைப் போல நீங்கள் என்னைப் பாராட்டி மகிழ்கிறீர்கள்.

''பட்டம் கொடுக்கும்போது என் பெயரைச் சொல்லி என்னை அழைத்தார்கள். என் பெயரைக் கூப்பிட்டதுகூட என் காதுக்குக் கேட்கவில்லை. தாமதமாக எழுந்தே பட்டம் வாங்கினேன்.

''நான் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில் இதுபோன்ற பட்டங்களை வாங்கக்கூடாதென்று எச்சரிக்கையாக இருந்தேன். முன் அனுபவம்தான் இதற்குக் காரணம்.

''பாராட்டுகள் மகிழ்ச்சியைத் தந்தாலும், அச்சத்தை அதிகப் படுத்துகின்றன. நல்லவர்கள் பாராட்டும்போது, தூற்றும் நிலைக்கு வந்துவிடக்கூடாதே என்பதுதான் அதற்குக் காரணம்.

''எனது ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகள் என்னைப் பார்த்து, 'இன்னும் நீ நடித்தால் உன்னை யாராலும் மிஞ்ச முடியாது; நீ நடித்த படம் வசூலில் சாதனை ஏற்படுத்தும்' என்று கூறுகிறார்கள். அந்தப் புகழுடன் நான் 'அந்தத்' துறையில் இருந்து வெளிவந்து விட்டேன். அதுபோல் மக்கள் ''நீ முதல்-அமைச்சராக இருந்த நாடு எப்படியெல்லாம் திகழ்ந்தது என்று பாராட்ட வேண்டும். அந்த அளவுக்கு நீங்கள் கடமையைச் செய்ய வேண்டும். கடமையைச் செய்யும்போது மிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

''எனக்கு நினைவுப் பரிசு அளித்தார்கள். அது எதை உணர்த்துகிறது? உணவின்றி கஷ்டப்பட்ட ஒருவன், உணவின்றிக் கஷ்டப்படும் மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் இந்நிலைக்கு ஆளாகலாம் என்பதை உணர்த்துகிறது.

''நான் இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன் என்றால் அதற்கு அண்ணாதான் காரணம். பல்கலைக் கழகம் ஒன்றில் அண்ணாவின் கருத்துக்களை ஆராய்ச்சி செய்யத் தனிப்பிரிவு ஏற்படுத்த விரும்பினேன். இதற்கு என்னைத் தூண்டியவர் இராம. வீரப்பன்தான். பெருமையும் புகழும் எனக்கு மட்டும் ஏற்பட வேண்டும் என்பதல்ல. இதற்கு யார் உறுதுணையாக இருந்தார் என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகக் கூறினேன்.

''என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய அண்ணா அவர்கள் இன்று உயிரோடிருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன். எனக்கு நோபல் பரிசு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவ்வாறு கிடைக்க எண்ணும் உள்ளங்கள் உள்ளன என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

''கடந்த காலத்தை மறக்காமல் நாம் எப்படியிருந்தோம், எப்படி வாழ்ந்தோம் என்பதை நினைவில் கொண்டு ஒவ்வொருவரும் செயல்படவேண்டும். தமிழ் நாட்டில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் மிகப் பெரியது; அவற்றை நினைத்து நாம் அனைவரும் பாடுபட வேண்டும். அதற்காக உங்களுக்கு என்றென்றும் உறுதுணையாக இருப்பேன் என்று கூறி, இங்கு எனக்கு விருந்தளித்ததற்கும் பாராட்டிப் பேசியதற்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.''

நிகழ்ச்சித் தொகுப்பு:

**நீ. கணபதி சுப்பிரமணியன்**

9.10.83 அன்று ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கரூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர் விடுதியைத் தான்தோன்றி மலையில், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் திறந்து வைத்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினரும், குழாய்க் கிணறு வாரியத் தலைவருமாகிய திரு ம. சின்னச்சாமி, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு பி. என். கந்தசாமி ஆகியோர் உடன் உள்ளார்கள்.



# குழந்தைகள் காட்டிய குதூகலம்



தமிழ்நாடு சமூகநல வாரியம் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினவிழாவைக் கொண்டாடுவதுபோல் இந்த ஆண்டும் கொண்டாடியது. அதன் தொடர்பாக இராஜாஜி மண்டபத்தில் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக ஓவியப் போட்டி, மாறுவேடப் போட்டி, பாட்டுப் போட்டி முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன. ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் பற்றிய திரைப்படம் காட்டப்பட்டது.

போட்டிகளில் பங்குபெற்ற குழந்தைகளுக்கு இரு பலூன்களுடன் இனிப்புப் பொட்டலமும், ஒரு குவளை பாலும், ரொட்டித் துண்டுகளும் வழங்கப்பட்டன. இவை தமிழ்நாடு பால்வளத் துறையிலிருந்தும், மாடர்ன் ரொட்டி நிறுவனத்திடமிருந்தும் பெறப்பட்டன. ஓவியப் போட்டியிற் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு இவற்றுடன் வண்ணக் குச்சிகள் அடங்கிய பெட்டியும் வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு நவம்பர் 7, 8 ஆகிய தேதிகளில் குழந்தைகளின் நன்மைக்காக ஒரு கண்காட்சி நடத்தப்பெற்றது. இக்கண்காட்சியில் சென்னைத் துறைமுகம், என்.சி.சி. விமானப் பிரிவு, பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை, பல்லவன் போக்குவரத்துக் கழகம், ஆவடி டாங்க் தொழிற்சாலை, வனத்துறை, அரும்பொருட் காட்சியகம், தேசிய வங்கிகள் ஆகிய நிறுவனங்களும் மற்றும் தொண்டு நிறுவனங்களும் பங்குபெற்றன. சமூகநலத்துறையினரால்ஏற்பாடு செய்யப்பட்ட முதலமைச்சர் சத்துணவுத் திட்ட விளக்கக் காட்சி இதில் சிறப்பான அங்கம்.

இந்த ஆண்டு குழந்தைகளுக்கென தேசிய வங்கிகளில் 5000 சிறு சேமிப்புக் கணக்குகளைத் துவக்கத் தமிழ்நாடு சமூகநல வாரியம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

போட்டிகளில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசளிப்பு விழா இராஜாஜி மண்டபத்தில் நவம்பர் 8-ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு சமூகநலவாரியத் தலைவர் திருமதி தாரா செரியன் வரவேற்றுப் பேசினார். தலைமை வகித்துப் பேசிய மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் பேசியதாவது:

''ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 14-ஆம் தேதி குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இது, முதல் இந்தியப் பிரதமர் திரு. நேருவின் பிறந்தநாள் ஆகும். அவர் தமது பிறந்தநாள் விழாவைக் குழந்தைகள் தினமாகவே கொண்டாட வேண்டும் என்று அறிவித்தார். இதனால், அவர் எந்த அளவிற்குக் குழந்தைகள் மீது அன்பு கொண்டிருந்தார் என்றும் அவர் எந்த அளவிற்கு உயர்ந்த மனம் படைத்தவர் என்றும் புலனாகிறது. அவர் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார். குழந்தை உள்ளத்தோடு குழந்தைகளுடன் பழகினார்.

''குழந்தைகள் தங்கள் சிறு வயதில் எந்தத்துறையில் ஆர்வம் காட்டுகிறார்களோ அதே துறையில்தான் அக்குழந்தைகள் பெரியவர்களானாலும் நிபுணர்களாக விளங்குகிறார்கள். அத்தகைய குழந்தைகளின் உடல், மனம், அறிவு ஆகியவை நன்கு வளர்ச்சி அடைய வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

''மேலும், பெண்கள் எல்லாச் செயல்களிலும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவர்கள் ஒன்றுபட்டு ஒத்துழைப்பைத் தந்தால்தான் எல்லாவற்றிலும் வெற்றிபெற முடியும். பெற்றோர்கள் குழந்தைகளுக்கென சிறுசேமிப்பைத் தொடங்க வேண்டும். குழந்தைகளின் இளம்வயதிலேயே அவர்களுக்கு அப்படியொரு நல்ல பழக்கத்தைக் கற்பிக்க வேண்டும்.''

சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. நன்றியுரையுடன் விழா இனிது முடிந்தது.

—தே. மணி



# மனநிறைவு தரும் மறுவாழ்வுப் பணிகள்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளின் இன்னல்களைப் போக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் 21-10-83 அன்று, சென்னை இந்தியத் தொழில்நுட்ப கழகத்தில் செய்தியாளர்களிடம் மேற்கண்ட தகவலைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது :

**கூட்டுக் குடியிருப்பு அமைத்திட**

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், வேலைவாய்ப்புகளுக்கான தொழிற்கூடங்கள், அடிப்படை வசதிகள் அடங்கிய கூட்டுக் குடியிருப்பு அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த தாழம்பூர் மற்றும் நாராயணபுரம் பகுதிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய ஐந்நூறு குடும்பங்கள் மறுவாழ்வு பெற வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னைக்கு அருகிலுள்ள நாராயணபுரம் என்ற சிற்றூரில் சுமார் 100 ஏக்கர் சதுப்பு நிலத்தில், இந்தியத் தொழில் நுட்பக் கழகம் ஒரு கிராமத் தொழில் மையத்தை அமைத்துள்ளது. அங்கு, சங்கிலித் தொடர் போல் பல தொழிற்கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பக்கத்துக் கிராமங்களிலுள்ள சுமார் 400 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது.

இந்த அடிப்படையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளித்திட, தமிழக அரசு - இந்தியத் தொழில்நுட்பக் கழகக் கூட்டு நடவடிக்கைத் திட்டம் அமைக்கப்பட்டது. இதற்கு ஆங்கிலத்தில் 'ரிச்சஸ்' (RICHES) என்று பெயர். அதாவது 'முழுவேலைக்கான தொழிலகங்களும் அடிப்படை வசதிகளும் அடங்கிய கூட்டுக் குடியிருப்பு' (Rural Industries Community Housing and Essential Service)

**'ரிச்சஸ்' என்றால் என்ன?**

**'ரிச்சஸ்' என்னும் தொழிலகங்கள், அடிப்படை வசதிகள் அடங்கிய கூட்டுக் குடியிருப்பு பற்றிய திட்டங்களை விளக்கி, இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் இயக்குநர் திரு பி. வி. இந்திரேசன் செய்தியாளர்களிடம் கூறினார்.**

**தரமான வாழ்க்கை :**

தமிழக அரசு மேற்குறிப்பிட்ட தொழில் மைய அடிப்படையில், இலங்கையிலிருந்து தாயகம்திரும்புவோருக்கு மறுவாழ்வளிக்க ஒரு திட்டம் தீட்டும்படி கேட்டுக் கொண்டதன் விளைவுதான் 'ரிச்சஸ்'. முதலில் வழங்கப்பட்ட திட்டத்தின்படி, சென்னை நகர்ப்புறத்தில் அமைந்துள்ள 200 ஏக்கர் நிலத்தில், ஏறத்தாழ 500 குடும்பங்களுக்கு மறுவாழ்வளிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த 200 ஏக்கர் நிலத்தைத் தமிழக அரசு தந்துள்ளது. பெயருக்கேற்ப, 'ரிச்சஸ்' திட்டத்தில் சாதாரண மறுவாழ்வுத் திட்டங்களிலிருந்து வேறுபட்ட பல அம்சங்கள் உள்ளன.

போதிய வீட்டு வசதி மட்டுமின்றி, வேலைவாய்ப்பளிக்கவென அமைக்கப்பட்ட பயிற்சி நிலையங்களும், தொழில்களும், அதோடு அடிப்படை ஏற்பாடுகளும், வாழ்வு வசதிகளும்திட்டமிடப்பட்டுள்ளன.

வழக்கமான மறுவாழ்வுத் திட்டங்களில் ஏற்படும் பல சிக்கல்கள் இந்த ஒருங்கமைந்த அணுகுமுறை மூலம் தவிர்க்கப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், இந்தத்திட்டம் ஒரு திட்டமிட்ட குடியிருப்பை அமைக்க வழி வகுக்கிறது. அங்கு முழு வேலைக்கான ஏற்பாடுகளோடு ஆற்றல், போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்ற அமைப்புகளையும் வணிக, சமூக மற்றும் குடிநீர், கழிவு நீரகற்றல் போன்ற நகர சேவைகளையும் ஏற்படுத்த வழிகோலுகின்றது.

**வேலை வாய்ப்புகள் :**

பெருத்த அளவில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த ஒரு வழியாக மேற்குறிப்பிட்ட வாழ்வு வசதிகளுக்கான (பள்ளி, மருந்தகம், பாலர் இல்லம், அங்காடிகள் போன்ற வசதிகள்) திட்டம் உதவும். இவற்றையெல்லாம், அமல்படுத்துவதற்கான பொருள் திரட்டும் உபாயமாக ஒரு 'கூட்டு முறை' ( Community Approach) செயல்படுத்தப்படும். இதன்படி தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பளிக்கவெனத் தனித்தனிக் குடும்பங்களுக்குக் கிடைக்கும் கடன் தொகைகளையும், மானியங்களையும், வசதிகளையும் ஒன்று சேர்த்து நல்ல இலாபம்

கிடைக்க வாய்ப்புள்ள பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப் படும். தொழிற்சாலை தவிர வணிகத் துறையையும் ஏற் படுத்தி ஓரளவு வருமானத்தைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள் ளது.

தொடக்க நிலையிலேயே- தொழிலகங்கள் ஏற்படுமுன்பே- அனைவருக்கும் வேலைதேடிட வேண்டிய நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில், முன்பே திட்டமிட்டுக் கொஞ்சம், கொஞ்ச மாகக் குடும்பங்கள் வரவழைக் கப்படும். அதோடு அவர்களைப் பயன்படுத்தியே வீடுகட்டுதல், தொழிற்சாலை அமைத்தல் போன்ற வேலைகளும் செய்யப் படும்.

பெருவாரியான குடும்பங் கள் போதிய பயிற்சியளிக் கப்பட்டு, தொழிலகங்களுக்குத் தகுதியுள்ளவையாக ஆக்கப்படும். தொழிற்கூடங்கள் ஒன்றை யொன்று சார்ந்ததாக இருப்ப தோடு, இந்தக் குடியிருப்பு கூடிய வரையிலும் தன்னிறைவு பெற்ற தாக அமைக்கப்படும்.

இத்தகைய திட்டத்தைச் செயற்படுத்துவதில் பலவிதமான தொழில்நுணுக்கச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். எடுத்துக் காட்டாக, மாற்று ஆற்றல் வளம் நீர்வள அமைப்புகள், நீரை மீண்டும் பயன்படுத்தும் நுணுக் கம், குறைந்த விலையில் வீட மைத்தல், கழிவகற்றல் போன்ற துறைகளில் நூதனமான தொழில் நுணுக்கங்கள் பயன்படும். ஐ. ஐ. டி. யின் விஞ்ஞானிகள் சிலர் மேற் குறிப்பிட்ட துறைகள் தவிர புதிதாக அமைக்கப்படும் நகரின் அமைப்பிலும் பிற மேலாண்மையிலும் பரிந்துரை நல்குவார்கள்.

இந்தத் திட்டமானது ஐ.ஐ.டி., தமிழக அரசின் மறுவாழ்வுத் துறை, இந்திய அரசு என்று மூன்று சார்பிலும் நடத்தப்பட் டாலும் இறுதியில் முழுப்பொறுப் பும் அதில் வாழ்வோர் கையிலே விடப்பட வேண்டுமென விரும் பப்படுகிறது.

**மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி கோமதி சீனி வாசன் அவர்கள், தாயகம் திரும்பு வோருக்குத் தக்க உதவிகள் வழங் குவது குறித்து மேலும் கூறிய தாவது:**

உடனே தொடங்கவிருக்கும் 'ரிச்சஸின்' முதல் திட்டம் சென்னை நகருக்கருகிலேயே ஏற் படவிருக்கிறது. மொத்த முத லீடான சுமார் ரூ. 130 இலட்சத் தில் பெரும் பகுதி அரசால் கடனாகத் தரப்படுகிறது. இது தவிர, தாயகம் திரும்புவோர் பெயரில் கிடைக்கும் பிற வசதி களும் சலுகைகளும் கூட்டு முறை யில் திரட்டிப் பயன்படுத்தப் படும். இத்திட்டத்தின்கீழ், ஒவ் வொருவருக்கும், ஆரம்பகால ஊதியமாக முந்நூறு ரூபாய் கொடுக்கப்படும்.

சுமார் 6 தவணையாக ஏற்றுக் கொள்வதாக இருக்கும் இந்தத் தொழிலாளர் குடும்பங்கள் சுமார் 2 ஆண்டுக்குள் முழுதுமாக வந்து சேருவர். இவர்கள் கடின உழைப்பை மதிப்போர்களாக வும், தொழிற்சாலை வேலை களைக் கற்றுக்கொள்ளும் திறமை யுடையோராகவும், கூட்டு முறை யில் சமுதாயம் அமைத்து ஒரு வருக்கொருவர் உறுதுணையாக இருந்து வாழும் மனப்பான்மை யுடையவராகவும் இருந்தால் தான் இந்தத் திட்டம் வெற்றி பெறும்.

தேர்ந்தெடுக்கப்படும் குடும் பங்களுக்குத் தச்சுவேலை, பற்ற வைப்பு, நெசவு, நவீன அரிசி ஆலை, அச்சுத்தொழில் போன்ற துறைகளில் முதல் கட்டமாகப் பயிற்சி வழங்கப்படும். இதன் மூலம் நல்ல அணுகுமுறை, தர மான வாழ்க்கை, நிலையான பொருளாதாரச் சூழ்நிலை ஏற் படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

'ரிச்சஸ்' திட்டத்தில் வகுக்கப் படும் தொழில் மற்றும் வணிக அமைப்புகள் மூலம் சுற்றுப்புறங் களில் உள்ள கிராமங்களுக்கு வேலைவாய்ப்பு மட்டுமின்றி கல்வி, மருத்துவம், பயிற்சி, வாணிகம் போன்ற வசதிகள் ஏற்படும்.

இந்தத் திட்ட அடிப்படை யில், தமிழகத்தில் இன்னும் பல இடங்களில் மறுவாழ்வுக் குடி யிருப்புகள் ஏற்படவிருக்கின்றன. முதற்கட்டமாக செங்கல்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் திட்ட முயற்சி கள் நடந்து வருகின்றன.

தாயகம் திரும்புவோருக்குக் கூட்டுறவு முறையில், நிரந்தரப் பொருளாதார நிலை ஏற்படுத்த வேண்டும். இதற்காக 62 பய னுள்ள தொழில்களை ஏற்படுத்தி னோம். இந்தத் திட்டத் தொகுப் பில் 9 திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம் 5,000 குடும்பங்கள் பயனடையும்.

* பால் பண்ணைத் திட்டம்- மாத்தூர், சிங்காரப்பாளையம் (தஞ்சை மாவட்டம்) இவற்றில் முறையே 25, 75 குடும்பங்கள் பயன் பெறும்.

*பால் பண்ணை மற்றும், தீப் பெட்டித் தொழில் - சாத்தூர், குன்றக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்) இவ்விரண்டு ஊர் களிலும் முறையே 100, 50 குடும்பங்கள் பயன்பெறும்.

*பால்பண்ணைத் தொழில்— கைலாசம்பாளையம், திருச்செங் கோடு (சேலம் மாவட்டம்) இவ் விரண்டிலும் 100 குடும்பங்கள் பயனடையும். பால்பண்ணைத் தொழிலில் தம்மநாயக்கன்பட்டி யில் 100 குடும்பங்கள் பயன டையும்; பால்பண்ணை, - தீப் பெட்டித் தொழிலில் இதே மாவட்டம் வளையமாதேவி, ஆத்தூர் ஆகிய இடங்களில் 100 குடும்பங்கள் பயன் பெறும்.

*தீப்பெட்டித் தொழிலில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்-கோயில்பட்டி (திருநெல் வேலி மாவட்டம்). இதன் மூலம் 100 குடும்பங்கள் பயன்பெறும்.

*விசை சைக்கிள் ரிக்ஷாத் திட் டத்தின் மூலம்-சென்னை நகரில் 100 குடும்பங்கள் பயன்பெறும்.

ஆகமொத்தம் 750 குடும் பங்கள் இந்தத் திட்டங்களால் பயன்பெறும்.


தமிழ்நாட்டில் மண்டபம் மற்றும் திருச்சி அகதிகள் முகாம் களில் 1092 குடும்பங்களைச் சேர்ந்த 3804 பேர் உள்ளனர். இவர்களுக்கு ஐந்துபேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தர உதவியாக 115 ரூபாய் அளிக்கப் பட்டு வந்தது. இப்போது 357 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல பாத்திரங்கள், ஆடைகள் வாங்க 379 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இப்போது 579 ரூபாயாக உயர்த்தப்பட் டுள்ளது.

இவ்வாறு, இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரின் இன்னல் களைப் போக்கவும் அவர்கள் நிலையான பொருளாதாரத்தின் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், அரசு பல்வேறு சிறப்புத்திட்டங்களைத் தீட்டிச் செம்மையாகச் செய லாற்றி வருவதை மனநிறை வோடு குறிப்பிட வேண்டும்.

**—பி. வி. கிரி**

**நாராயணபுரத்திலுள்ள தொழிற்கூடங்கள்**







## தேன் மலர்

**ஆசிரியர் : கவிஞர் மு. இளங்கண்ணன்.**
**வெளியீடு : சுரதா பதிப்பகம்,**
**56-அ, டாக்டர் லட்சுமணசாமி**
**சாலை, கே. கே. நகர்**
**சென்னை-600 078.**

**விலை : ரூ. 4.00** **பக்கங்கள் : 64**

வள்ளுவரின் பித்தன் எனச் சொல்லிக்
கொள்ளும்
இளங்கண்ணன் யாத்த வளமிகு பாக்கள்!
தெள்ளுதமிழ் மணம் பரப்ப நெஞ்சையள்ள
உள்ளுதொறும் உணர்வூட்டக் கலைவளர்க்க
உருவான முயற்சி இது; பாராட்ட வேண்டும்!
திறமான புலமை, தரமான கவிதைப் பூக்கள்!
தந்தைக்கு இவர் தந்த இரங்கற்பா
முந்தைக்கும் இன்றைக்கும் என்றைக்கும்
வாழும்
மகன் - தந்தை உறவும்பொறுப்பும் வளர்ப்பும்
மிக நன்றாய் விளக்கியுள்ளார் இளங்கண்ணன்
படிப்பதற்கு ரசிப்பதற்கு பைந்தமிழை
ருசிப்பதற்கு
துடிப்புடன் தந்த நூல் இது; தமிழுலகம்
வரவேற்கும்!

—மு. மு. கா.



## கடலோரம் ஒரு குயிலோசை

**ஆசிரியர் : மணிமொழி,**

**வெளியீடு : மகரந்தம்,**
**17/9, பீட்டர்சு காலனி,**
**சென்னை - 600 014.**

**விலை ரூ. 5** **பக்கங்கள் 100**

பேரறிஞர் அண்ணாவைக் குறித்து மரபுக் கவிதை மலர்களாலும் புதுக்கவிதைப் பூக்களாலும் சந்தப் பாக்களாலும் உருவாக் கப்பட்ட நூல் இது.

இனிய, எளிய கவிதை வரிகளால் அண்ணாவின் பெரும் புகழையும் பெருமையை யும் எடுத்துச் சொல்லியிருக்கிறார் நூலாசிரி யர். ஒவ்வொரு கவிதையும் வார்த்தைக் கோலமாக-வண்ண ஓவியமாகத் திகழ்கிறது.

அண்ணா மறையவில்லை இன்னும் வாழ் கிறார் என்ற கருத்தை,

மறைந்தானா எனதண்ணன்
கவிஞர் பாடும்
மணிக்கவிதைக் குள்ளிருந்து
மணக்கின் றானே.

என்ற வரிகளின் வாயிலாக நிறுவுகிறார்.

அண்ணாவிடம் பக்திகொண்ட ஒரு தம்பியின் இதய முழக்கத்தை நூல் முழுதும் காண முடிகிறது.

## பள்ளியில் மலர்ந்த பூக்கள்

**ஆசிரியர் : என். ஆர். தாசன்**

**வெளியீடு : மயிலவன் பதிப்பகம்,**
**7, எம். கே. அம்மன்கோயில் தெரு,**
**மயிலாப்பூர், சென்னை-600 004.**

**விலை ரூ. 5** **பக்கங்கள் 76**

புதுக் கவிதைத் துணுக்குகள் 56 கொண்ட தொகுப்பு.

ஒவ்வொரு கவிதையிலும் நூலாசிரி யரின் சொற்செட்டு பளிச்சென மின்னு கிறது. நகைச்சுவைச் செய்திகளையும் தத் துவக் கருத்துகளையும் நறுக்குத் தெறித் தாற்போல் புதுக் கவிதையில் சொல்ல முடியும் என்பதை ஆசிரியர் நிறுவியிருக்கிறார். வெற்றியும் பெற்றிருக்கிறார்.

'ஏனோ' என்னும் கவிதையில் - ஒரு விளக்கின் புலம்பல் நன்கு விவரிக்கப்பட்டிருக் கிறது. 'ஆகாயப் பயணம் என்று நிற்கும்' எனக் கழுதையைப் பார்த்துக் கேட்கும் கேள்வியில் ஒரு நாகரிகமான இதயம் எழுப் பும் வினா வெளிப்படுகிறது.

ஒவ்வொரு துணுக்குக் கவிதையும் ஒரு சித்திரத்துடன் வெளியிடப்பட்டிருப்பது படிப்பவர்களைக் கவர்கிறது; கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே மகிழ்ச்சியை ஏற்படுத்து கிறது.

**— தமிழ்ப்பித்தன்**





# குவலயம் போற்றும் குழந்தை நலத்திட்டங்கள்

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் உடல் நலமும் உள்ள வளமும் பெற்று விளங்குவதற்கு, ஊட்டமுள்ள உணவு அவர்களுக்குத் தேவை. இதனை உணர்ந்த, மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப் பட்டது, 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்!'

ஒருவேளைச் சோற்றுக்கு ஒண்டிக் கிடந்த பிஞ்சுக் குழந்தைகள் எல்லாம் இன்று நெஞ்சம் மகிழும் வண்ணம் வயிறார உண்ணுகின்ற அந்த இனிய காட்சியில் இறைவனையே நாம் காண்கின்றோம்!

1982ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதலாம் நாள் தொடங்கப்பெற்ற இத்திட்டம், புதுமைத் திட்டமாக மட்டுமல்ல, மாபெரும் புரட்சித் திட்டமாகவும் விளங்கி வருவதை நாடும் ஏடும் புகழ்ந்து போற்றியுள்ளன. முதலில் இத்திட்டம், ஊரகப் பகுதிகள் அனைத்திலும் தொடங்கப் பெற்று, பின்னர் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில் நகர்ப்புறங்களிலும் தொடங்கப்பெற்றது.

ஏழை எளியவர் மனம் குளிர, எல்லாத் திறத்தாரும் வாழ்த்தி வரவேற்க இத்திட்டமானது தமிழகமெங்கும் பரவி விரவி பசிப்பிணி போக்கி வருகின்றது.



இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கப் பெற்ற முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை, மற்ற மாநிலங்கள் மட்டுமின்றி, இன்று அகிலமே உன்னிப்பாகக் கவனிக்கின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தின் மூலம் 2 முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகள் இலவச மதியச் சத்துணவைப் பெற்று வருகின்றனர். ரூபாய் 133 கோடி செலவாகும் இந்தச் சிறப்புமிகு திட்டத்தின் மூலம், 65 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 5 முதல் 10 வயது வரையிலான சிறுவர்களோடு, 2 முதல் 5 வயதுவரை உள்ள குழந்தைகளும் இத்திட்டத்தின்கீழ் சத்துணவு பெறுகின்றனர்.

ஆண்டில் 365 நாட்களும் இந்த இலவசச் சத்துணவு வழங்கப்படுகிறது.





முதலமைச்சர் குழந்தைகள் இலவசச் சத்துணவுத் திட்டத்தின் மூலம், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள ஏழை எளிய தாய்மார்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். 1,58,381 பெண்களுக்கும் குறிப்பாக விதவைகளுக்கும், கைவிடப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை தரப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.




பாலர் பள்ளிகளில் குழந்தைகள் நல அமைப்பாளர், குழந்தைகள் நல உதவியாளர் பணிகளுக்காக 78,490 பெண்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் பணிபுரியும் பெண்களில் 10,507 விதவைகளும், 3,416 கைவிடப்பட்ட பெண்களும் உள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் பள்ளிகளிலும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் சமையல் பணிகளுக்கும், எடுபிடி பணிகளுக்கும் முறையே 34,298 பேர்களும், 33,828 பேர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சீர்மிகு திட்டம் 15.9.82 முதல் 2—4 வயதுக் குழந்தைகளுக்காக நகர்ப்புறங்களுக்கும், பள்ளிக் குழந்தைகளுக்காக சென்னை, கோவை, மதுரை மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலவசச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளின் உயரம், எடை முதலியவை கூடியுள்ளன. குறிப்பாக இரண்டு வயதுக்குமேற்பட்ட குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்துக்குப் பின் மிகப் பெரிய அளவில் பயனடைந்துள்ளனர்-என்று மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் கூறியுள்ளது.





## பயனுள்ள பற்பொடித் திட்டம்

குழந்தைகள் நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு, பல்வேறு நலத் திட்டங்களைச் செம்மையாகச் செயலாற்றி வருகின்றது. அவற்றுள் ஒன்றுதான் 'கிராமக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டம்'.

இத்திட்டம் 1982ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டது.

கிராமப்புற மக்கள், குறிப்பாக கிராமப்புற இளைஞர்கள் நோயின்றி வாழவேண்டும் என்ற நோக்கோடு தொடங்கப்பட்ட இத்திட்டம், ஓராண்டிற்குள்ளாகவே நல்ல பலனை எய்தியுள்ளது.

உடல் நலத்திற்குப் பற்கள் மிக மிக அவசியம். பற்களை நல்ல முறையில் பாதுகாத்தால்தான், ஆயுள் முழுவதும் பல்நோயின்றி உடல் நலமுடன் விளங்கிட முடியும். இதனைக் கிராமப்புறத்திலுள்ள ஏழை எளிய மக்கள் உணர்ந்திட வழிகோலும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

குழந்தைகள் பல்துலக்குவதற்குச் செங்கல்தூள், சவுக்குக்குச்சி போன்றவற்றைப் பயன்படுத்தி, பல் நோய்களை வரவழைத்துக் கொள்வதைத் தடுக்கவும், குழந்தைகள் நல்லமுறையில் பல் துலக்கப் பழக்கமேற்படவும், இத்திட்டம் கிராமப்புறங்களில் நல்ல பலனை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக, தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டு மட்டும் சுமார் 2½ கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது.

பற்பொடி தயாரிப்பதற்காகச் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் சுமார் 40 சிறுதொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 800 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி, அறிவியல் முறையில் தயாரிக்கப்படுகிறது இந்தப் பற்பொடி.

முதல் கட்டமாக, முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தில் பங்கு பெறும் குழந்தைகளுக்கு இந்தப் பற்பொடி இலவசமாக வழங்கப்படுகிறது. ஒருமுறை, ஒவ்வொரு குழந்தைக்கும் 30 கிராம் அளவில் பற்பொடி வழங்கப்படுகிறது.

### குழந்தைகள் நலனில் அக்கறை உள்ள அரசு

தமிழ்நாடு அரசு சமூகநலத் துறை மூலமும் குழந்தைகளுக்கான பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது.

பண்டித ஜவகர்லால் நேரு பிறந்த நாளை முன்னிட்டு, ஆண்டுதோறும் சமூகநல வாரியமும், சமூகநலத்துறையும் இணைந்து குழந்தைகளுக்காகக் கலைநிகழ்ச்சிகள், ஓவியப்போட்டி மாறுவேடப்போட்டி முதலானவற்றை நடத்தி, குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்தியும், அவர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தியும் வருகின்றன.

அதன்படி 31.10.83, 1.11.83 ஆகிய இருநாட்கள் சென்னை இராஜாஜி மண்டபத்தில் மேற்கண்ட நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடந்தன.

சென்னை நகரிலுள்ள சுமார் 300 பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டன. 2½ வயது முதல் 5 வயது வரையுள்ள சுமார் 1500 குழந்தைகள் கலந்து கொண்டன. கொட்டும் மழையிலும் இந்தக் குழந்தைகள் குதூகலத்துடன் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதேபோல, தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, ஊனமுற்ற ஏழை எளிய குழந்தைகளுக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் சிறுசிறு போட்டிகள் நடத்தி, பரிசும் இனிப்பும் வழங்கப்படுகின்றன.

சத்துணவு மையங்களிலும், தீபாவளியை முன்னிட்டு குழந்தைகளுக்கு சத்துணவோடு இனிப்புகளும் வழங்கப்பெற்றன.

குழந்தைகள் உடல் நலம் பெற மட்டுமல்ல, அறிவு வளம்பெறவும் அரசு அவர்களுக்கென 'குழந்தைகள் நூலகம்' ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள, கலைவாணர் அரங்கக் கட்டடத்தில் இந்த நூலகம் இயங்கி வருகின்றது. இதில் குழந்தைகளுக்கான ஏராளமான நூல்கள் உள்ளன. விடுமுறை நாட்கள் தவிர, மற்ற நாட்களில் படக்காட்சியும் காட்டப்படுகிறது.

இவ்வாறு நாளைய தலைமுறைகளின் நல்வாழ்வில் நாட்டங்கொண்டு தமிழக அரசு பல நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது.

— பி. வி. ஜி.

# வல்லாரை என்னும் மதிவல்லி

பி. பாலசுப்ரமணியன்
பி.ஐ.எம்.,

காய கற்ப மூலிகைகளில் வல்லாரையும் சிறப்பு வாய்ந்த அரிய மூலிகை ஆகும். வல்லாரை சாதாரணமாகக் கிடைக்கக் கூடியதாகையால், நம்மவர்கள் இதனை அலட்சியமாக எண்ணி வந்தார்கள். ஆனால் நூல் ஆசிரியர்களும் சான்றோர்களும் இந்த அரிய பச்சிலைகளைத் தாங்கள் இளமையில் சாப்பிட்டு வந்தபடியால் தாங்கள் கற்ற நூல்களையெல்லாம் மறந்து போகாமல் இருந்து, அநேக நுட்ப நூல்களையெல்லாம் எழுதும் சக்தியை அடைந்தோம் எனப் பலமுறை இந்த மூலிகையைப் பற்றிச் சொல்லி வந்துள்ளனர்.

தேவ மருத்துவராகிய தன்வந்திரி சித்தர், தம் சீடர்களின் நினைவாற்றலும் அறிவுக்கூர்மையும் பெருகும் பொருட்டு இந்த வல்லாரை தொடர்பான மருந்துகளைச் செய்து கொடுத்ததாக நூல்கள் கூறுகின்றன.

இவ்வளவு உயர்வு பொருந்திய வல்லாரை மூலிகையானது இந்தியாவில் அநேக பகுதிகளில் எளிதாகக் கிடைக்கக் கூடியதாக இருந்து வருகின்றது. இந்த வல்லாரை மூலிகை பெரும்பான்மை ஈரமுள்ள இடங்களில் ஆறு, நதி முதலிய நீர்க்கரையோரங்களில் பயிராகிறது. தென்னாட்டில் சிறப்பாகத் தஞ்சைமாவட்டம், சேலம் மாவட்டம், கோவை மாவட்டம், நெல்லை முதலிய பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

### வல்லாரையின் சுவை:

வல்லாரைத் தண்டின் சுவையானது மஞ்சள் முள்ளங்கி இலையின் சுவையைப் போன்றிருக்கும். உலர்ந்த இலையின் சுவையானது சிறு துவர்ப்புச் சுவையைப்போன்றிருக்கும். இதனை ஒரு தடவை சுவைத்துவிட்டால் எப்பொழுதும் அதன் சுவை மறந்து போகாமல் இருக்கும். வேறுசிலர் இதனைக் கசப்புச் சுவை இனம் என்று சொல்கிறார்கள்.

### பொதுக் குணங்கள்:

வல்லாரை இரத்தத்தைத் தூய்மை செய்யும். தலை, மூளையைப் பலப்படுத்தும். மறதியைக் கண்டித்து நினைவாற்றலை அதிகப்படுத்தும். வாய் நோய்கள் நீங்கும். தாதுபுஷ்டி தரும். இழந்த தாதுக்களைத் திரும்ப வலிமை பெறச் செய்யும். கடிவிஷங்கள், நோல் சம்பந்தப்பட்ட பிணிகள் நீங்கும். காக்கை வலிப்பு குணமாகும். வீக்கங்களைக் கரைக்கும். நரம்புகளுக்கும் வலிமையைத்தரும்.

### தீமைகள்:


இதனை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால் உடலில் வறட்சி உண்டாகும். சொறி, நமைச்சல் உண்டு பண்ணும். அளவுடன் குறிப்பறிந்து சாப்பிடவேண்டும். சித்த வைத்தியமுறைப்படி அளவுடன் சாப்பிட, பலநோய்கள், மதுமோகம், தோல்பிணிகள் நீங்கும்.

வல்லாரைக்குத் தமிழில் வேறு பெயர்களும் உண்டு. அவை மதிவல்லி, வயல்வல்லி, சரசுவதி, விவேகவல்லி, குளத்துக்குறத்தி என்றும், சிலர் இதனை பிரம்மி என்றும், சிலர். மண்டூகபரணி என்றும் கூறுவார்கள். ஆங்கிலத்தில் இண்டின் பென்னி வொர்ட் என்றும், இலத்தினில் ஹைடிரோகேடில் ஏசியாடிக் என்றும் தெலுங்கில் சாபகர்னி என்றும் கூறுவர்.

### அளவு:

ஒவ்வொரு சரக்கு, ஒவ்வொரு மூலிகைக்கும அதன் தகுந்த அளவு உண்டு. அந்த அளவுப்படி பயன்படுத்தினால் ஒரு குணமும் அதற்கு அதிகமாகப் பயன்படுத்தினால் வேறு குணமும் அனுபவத்தில் தெரியும். கூட்டுச் சரக்குச் சேர்த்து அளவுடன் சாப்பிட வேண்டும்.

# விண்வெளிக் கலங்கள்



குறைந்த செலவில் கோள்களை ஆராயும் ஒரு திட்டம் அமெரிக்க விண்வெளி நிலையத்திடம் உள்ளது. இந்த நூற்றாண்டு முடிவதற்குள் சூரிய மண்டலக் கோள்களை ஆராய்வதற்குரிய திட்டம் இது.

பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள கோள்களுக்கு ஒரு வகைக் கலங்களும் பூமிக்கு அப்பால் உள்ள வெளிக்கோள்களுக்கு மற்றொரு வகைக் கலங்களும் பயன்படும். முதல் வகைக் கலங்கள் பூமியை வலம் வரும் வாணிப முறைக் கலங்களின் வரிசையில் உருவானவையாக இருக்கும். அடுத்த வகைக் கலங்கள் வெளிக்கோள்களை மட்டுமன்றி வால் நட்சத்திரங்களையும் மற்றும் செவ்வாய், வியாழன் கோள்களுக்கிடையே சூரியனைச் சுற்றிவரும் நுண்கோள்களையும் ஆராயும்.

# மாணவ மாணவியர் விடுதித் திறப்பு

புதுக்கோட்டை, இலுப்பூர் அன்னவாசல் அரசு மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டடத் திறப்பு விழா 8.10.83 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் புதுக்கோட்டை அரசினர் மாணவியர் விடுதியையும், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம்., விஜயசாரதி அவர்கள் அன்னவாசல், இலுப்பூர், மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

புதுக்கோட்டையில் சுமார் 100 மாணவ மாணவிகள் தங்கி கல்வி கற்க ரூ.8.9 இலட்சம் செலவில் மாணவியர் விடுதியும், அன்னவாசலில் 30 மாணவியர் தங்கி கல்வி கற்க ரூ.2.2 இலட்சம் செலவில் ஒரு மாணவியர் விடுதியும், இலுப்பூரில் 30 மாணவர் தங்கி கல்வி கற்க ரூ.4.5 இலட்சம் செலவில் ஒரு மாணவர் விடுதியும் இன்று திறக்கப்பட்டுள்ளன. இது போன்ற அரசு மாணவ மாணவியர் விடுதிகள் தொடர்ந்து திறக்கப்பட்டுள்ளன. 1.10.83 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்காகப் புதிய திட்டம் ஒன்றினை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றோம். இதன்மூலம் வங்கிப் பிரதிநிதிகள் கிராமங்களுக்குச் சென்று மக்களை அணுகி தகுதிவாய்ந்தோர்க்குக் கடன் வசதிகளை வழங்கி, அவர்களை வறுமைக் கோட்டிற்குமேல் உயர்த்துவதே இதன் நோக்கமாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதற்கு முக்கிய காரணம், மக்கள் நல்ல ஒத்துழைப்பை நல்குவதேயாகும்.

அன்னவாசல், இலுப்பூர், மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்களைத் திறந்துவைத்து மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் குறிப்பிட்டதாவது:

"தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் நல்ல பயனையும், நல்ல வசதிகளையும் பெற்றுத் திகழ வேண்டுமென்ற அக்கறை கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்காகச் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டிலிலுள்ள சுமார் ஒரு கோடி ஆதிதிராவிடக் குடியினர் பெரும்பாலானவர்கள் வறுமையிலேயே வாடிவருகின்றனர். இவர்களுக்குப்பொருளாதார ரீதியாக வாழ்க்கையை மேம்படுத்த தமிழக அரசு பல திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. 1981-82ஆம்நிதியாண்டில்ஆதிதிராவிட நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.22.7 கோடி. நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.44.6 கோடியாகும். ஒதுக்கப்படுகின்றநிதியில்மூன்றில் ஒருபங்குகல்வி மேம்பாட்டிற்காகவும், பள்ளி மாணவர், மாணவியர் மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடச் சமுதாயம் முன்னேறுவதற்கான பல திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவியர் விடுதியைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் எடுக்கப்படும்."

மாண்புமிகுதொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் புதுக்கோட்டை அரசினர் மாணவியர் விடுதியைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

"மனிதாபிமானத்தை மனத்தில் கொண்டும், கிராமத்தை அடிப்படையாகக் கொண்டும் தமிழக அரசு கிராம மக்களுக்காக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களுக்குப் பாராட்டு தலைத் தெரிவித்துள்ளார்கள். தமிழகத்திலேயே வறட்சி நிவாரணப்பணிகள் சிறப்பாகச் செய்து 23.9.83 அன்று வறட்சி நிவாரணப் பணிகள் அனைத்தையும் முடித்து, புதுக்கோட்டை மாவட்டம் முதல் மாவட்டமாகத் திகழ்கிறது. இச்செயலுக்குப் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்களுக்கு எனது பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் சிறிய மாவட்டமாக இருந்த போதிலும் அரசு திட்டங்கள் அனைத்தும் பொதுமக்கள் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் ஒருகுழு உணர்வுடன் இயங்கி வருகிறார்கள். தமிழகத்தில் மட்டும்தான் சத்துணவு போன்ற சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சத்துணவுத் திட்டம் ஒரு பல நோக்குத் திட்டமாகும். வயிற்றுக்குச் சாப்பாடு மட்டுமல்ல, அறிவும் புகட்டப்படுகிறது. ஆரோக்கியம் கற்றுத்தரப்படுகிறது. உடல்நலம் பேணப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்கின்ற எந்தத் திட்டமானாலும் பல நோக்குத் திட்டமாகவே இருந்து வருகிறது. சாதாரண மக்கள் நேரடியாகப் பயனடையும் வகையிலேயே அமைந்துள்ளது.

விழாவில் திரு சங்கர்ராவ், திரு ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ராஜ்குமார் ஆர்.விஜயரகுநாத தொண்டைமான், திரு த.மாரிமுத்து ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். முன்னதாக [illegible] அலுவலர் திரு ச.T. [illegible] வேற்புரை [illegible] மாவட்ட [illegible] அலுவலர் [illegible] நன்றி தெரிவித்தார்.



## இலவச வீட்டுமனை, நிலப்பட்டாக்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற ஆண்டு மட்டும் 5661 நபர்களுக்கு 113.67 ஏக்கர் நிலம் வீட்டு மனைக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. பயனடைந்தோரில் ஆதிதிராவிடர்கள் 2124, இதர வகுப்பினர் 3537.

சென்ற ஆண்டு மட்டும் 2000 நபர்களுக்கு 1664.44 ஏக்கர் நிலம் விவசாயத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் பயனடைந்த ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 221, முன்னாள் இராணுவத்தினர் 26, இதர வகுப்பினர் 1753.

ஆதிதிராவிட குடும்பங்களின் நல்வாழ்விற்காக சென்ற மூன்றாண்டுகளில் ரூ.9.30 லட்சம் மதிப்புள்ள நிலங்கள் கையகம் செய்யப்பட்டு, 6116 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 1983-84ல் 60 ஏக்கர் நிலம் கையகம் செய்யவும், குறைந்தது 1000 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கவும், இது தொடர்பாக ரூ. 5 இலட்சம் செலவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## புதுக்கோட்டை மாவட்டத்தில் சத்துணவுத் திட்டம்

மாண்புமிகு முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2283 மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் குழந்தைகள் நல மையம் 1118, பள்ளி சத்துணவு மையம் 1165. குழந்தைகள் நல மையத்தில் நாள்தோறும் 92,206 குழந்தைகளும், பள்ளிச் சத்துணவு மையத்தில் 96,503 மாணவ மாணவிகளும், இவைதவிர குழந்தைகள் நல மையத்தில் 4790 முதியோர் உதவித்தொகை பெறுபவர்களும் உணவு பெற்று வருகின்றனர்.

இந்தச் சத்துணவு மையங்களைக் கண்காணிக்க 2283 அமைப்பாளர்களும், 3456 உதவியாளர்களும் ஆக மொத்தம் 5739 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று பணியாற்றி வருகிறார்கள். பணியாற்றி வருபவர்களில் மகளிர் (1380+2140) 3520. ஆடவர் (903+1316)2219. இந்தமாவட்டத்தைப்பொறுத்தவரையில் மாதாந்திர சராசரி செலவு ரூ. 19,64,630 அதாவது சுமார் 20 இலட்சமாகும்.

## உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுப் பணிகள்



புதுக்கோட்டை மாவட்டத்தில் உடல் ஊனமுற்றார்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் 5ம், காதொலி கருவிகள் 10 ம் சென்ற ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன. வரும் மாதங்களில் 50 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படும்.



85345

## மாணவர் பக்கம்


தயாரிப்பு: 'கிரிஜா'

**கி**ராமப்புற மாணவர்களுக்கான தேசிய உதவித் தொகை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெறுகின்ற எட்டாம் வகுப்புப் போட்டித் தேர்வில், ஆண்டு தோறும் நான்கு பரிசுகளை அரசு வழங்கி வருகிறது. அதாவது ஆண்டுக்கு ரூ. 1000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு 9,10,11,12 வகுப்புகள் முடிய ரூ 4000 வழங்கப்படுகிறது.

சென்ற கல்வியாண்டில் (1982-83) நான்குனேரி ஊராட்சி ஒன்றிய அளவில் நடைபெற்ற எட்டாம் வகுப்புப் போட்டித் தேர்வில், நெல்லை மாவட்டம் இந்து அருள்நெறி நடுநிலைப் பள்ளி மொத்தத்திலுள்ள நான்கு பரிசுகளில் முதல் மூன்று பரிசுகளைப் பெற்றுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இப் பள்ளியே முதலிடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த கல்வியாண்டில் (82-83) வெற்றி பெற்ற மாணவர்களே இவர்கள்.



சு. பெரியசாமி



த. கலைச்செல்வன்



பெ. பாஸ்கர்

## விண்வெளி ஆராய்ச்சி

**சோ**வியத் யூனியனில் ஒவ்வொரு மாதமும் சராசரியாகப் பல்வேறு வகைப்பட்ட 8-9 விண்கலங்கள் செலுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 1982-ல் 98 செயற்கைக் கோள்களும், 7 விண்கலங்களும், ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி நிலையமும் செலுத்தப்பட்டன.

தேசியப் பொருளாதாரத்திற்காகப் பணியாற்றும் 700 சோவியத் நிறுவனங்கள், விண்வெளி ஆராய்ச்சியின் விளைவுகளைப் பயன்படுத்துகின்றன. விண்கலன்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் மற்ற நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

பூமிக்கு அருகே விண்கலன்கள் சுற்றும்போது, எடையற்ற நிலையில் மிகவும் மதிப்பு வாய்ந்த செமி-கண்டக்டர் மற்றும் உலோகப் பொருள்களை உற்பத்தி செய்ய முடிகிறது. "விண்வெளி மருந்தியல்" சாதனைகளையும் பெற முடிகிறது; இவை மிகவும் ஆதாய முள்ளவை.

"மோல்னியா — ஆர்பிட்டா" என்னும் சோவியத் விண்வெளித் தகவல் போக்குவரத்துச் சாதனத்தின் பயனாக, சோவியத் நாடு முழுவதும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை ஒளி பரப்பமுடிகிறது.



## சின்ன தம்பி தங்கையரே !

சின்ன தம்பி தங்கையரே
சேர்ந்து ஒன்றாய் வாருங்கள்!
அன்பாய் நானும் சொல்லுவதை
அமைதியாய் உற்றுக் கேளுங்கள்!

உருவைக் கண்டு நகையாதீர்;
உண்மையைச் சொல்ல மறவாதீர்!
உரமுடன் வாழக் கற்பீரே;
ஒழுக்க நெறியில் நிற்பீரே!

காலம் வீணே போக்காதீர்;
கபடும் சூதும் கொள்ளாதீர்!
ஞாலம் நகைக்க நடக்காதீர்;
ஞானிகள் உரையைத் தள்ளாதீர்!

துட்டர் உறவை நாடாதீர்;
துன்பம் கண்டு மயங்காதீர்!
திட்டம் இன்றி வாழாதீர்;
திருட என்றும் முனையாதீர்!

எண்ணும் எழுத்தும் போற்றிடுவீர்;
ஏழையின் துயரை ஆற்றிடுவீர்!
பண்புடை யோனாய் வாழ்ந்திடுவீர்:
பாரில் உயர்ந்து சிறந்திடுவீர்!

—செட்டிக்குறிச்சி தமிழன்பன்

## அரிசியா? பொன்னா?

மு. முத்துக்காளத்தி

**மு**ன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் இரண்டு நண்பர்கள் இணை பிரியாது வாழ்ந்தார்கள். தூர தேசம் போய் நிறையப் பொருள் சேர்த்து வரப் புறப் பட்டார்கள்.

வழியில் ஒரு நகரத்தில் பூகம்பம் ஏற்பட்டது. மக்கள் இடிபாடுகளுக்கு இடையே எல்லா வற்றையும் அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அதைப் பார்த்தார்கள் இந்த நண்பர்கள். அவர்களில் ஒருவன் புத்திசாலி, அடுத்தவன் முட்டாள்.

இருவரும் முதலில் அரிசியைக் கண்டார்கள். சாப்பாட்டுக்கு மிகவும் தேவை அரிசியென்று ஆளுக்கு ஒரு மூட்டை கட்டிக் கொண்டு முதுகில் சுமந்தபடி புறப்பட்டார்கள். பசியெடுத்தால் சமைத்துச் சாப்பிடலாம் என்று சொல்லிக் கொண்டார்கள்.

கொஞ்சதூரம் போனதும் புத்திசாலி வெள்ளிக் கட்டிகளைக் கண்டான். உடனே அரிசி மூட்டையை அவிழ்த்துக் கொட்டி விட்டு, சுமக்க முடிந்த அளவுக்கு வெள்ளிக் கட்டிகளைச் சேர்த்துக் கொண்டான்.

முட்டாள் அப்படிச் செய்ய வில்லை. பசி யெடுத்தால் அரிசி சமைக்க உதவும் என்று சொல்லிக் கொண்டான்.

இன்னும் சற்றுத்தூரம் சென்றதும் பொன் கட்டிகள் சிதறிக் கிடக்கக் கண்டார்கள். உடனே புத்திசாலி, வெள்ளிக் கட்டிகளைக் கீழே கொட்டிவிட்டுக் கோணியில் பொன் கட்டிகளைப் போட்டு நிரப்பிக் கொண்டான்.

முட்டாள் அப்படிச் செய்ய வில்லை. பசியெடுத்தால் அரிசி சமைக்க உதவும் என்று சொல்லிக் கொண்டான்.



இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள். பசியெடுத்தது. முட்டாள் கொஞ்சம் சுள்ளியைப் பொறுக்கி அடுப்பு மூட்டி, கொஞ்சம் அரிசியெடுத்துச் சமைக்க ஆரம்பித்தான்.

அறிவாளியிடத்தில் அரிசி யில்லை. 'நான் ஒரு பொற்காசு தருகிறேன். நீ எனக்குக் கொஞ்சம் அரிசி கொடு. நானும் சமைத்துச் சாப்பிடுகிறேன்' என்று முட்டாளைப் பார்த்துக் கேட்டான் புத்திசாலி.

முட்டாளுக்குக் கோபம் வந்து விட்டது. "ஒரு தங்கக் காசு இரு தங்கக் காசுக்கு அரிசி தர முடியாது. உன்னிடம் உள்ள ஒரு மூட்டை தங்கக் காசுகளும் கொடுத்தால் நான் அரை மூட்டை அரிசி தருகிறேன். வேண்டாம் என்றால் நான் வற்புறுத்த வில்லை" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

அறிவாளி அதிர்ந்து போனான். பசி வயிற்றைக் கிள்ளியது. பொறுத்துப் பார்த்தான், முடிய வில்லை.

பக்கத்தில் எங்கும் உணவுப் பொருள் எதுவும் இருக்கவில்லை. இதற்குள் முட்டாள் சோறு சமைத்து அவன் எதிரிலேயே சாப்பிடத் தொடங்கிவிட்டான். அதைப் பார்த்த புத்திசாலியால் அதற்குமேல் பொறுக்க முடிய வில்லை.

'என்னால் பசி தாங்க முடிய வில்லை. இந்தா! இந்தப் பொற்காசு மூட்டையை எடுத்துக் கொண்டு, அரிசி கொடுபோதும்' என்று வாங்கிக் கொண்டான்.



## புதுக்கோட்டையில் மான்கள் சரணாலயம்

100 ஏக்கர் பரப்பளவுள்ள புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் புதிதாக மான்கள் சரணாலயம் அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இதனையொட்டி, புதுக் கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் 21.10.83 அன்று நடந்த விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் மான்களை விட்டார். மற்றொரு பகுதியில் அமைச்சர் மரத்தை நட்டார்.



# கம்ப்யூட்டர் ஒரு பாட நூல்

கல்லூரி திறந்ததும் பெரும்பாலான மாணவர்கள், முதல் சில நாட்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்குவதிலே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். ஆனால் அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் பிட்ஸ்பர்க் நகரிலுள்ள கார்னகி-மெலன் பல்கலைக் கழகத்தில் 1985-ஆம் ஆண்டு இறுதியில் சேரும் மாணவர்கள் பாடப் புத்தகங்களோடு சொந்தக் கம்ப்யூட்டர்களும் வாங்கியாக வேண்டும!

ஆம், எல்லா மாணவர்களுக்கும் கம்ப்யூட்டர் கட்டாயம் தேவை என்ற ஏற்பாட்டைச் செய்யும் பல்கலைக் கழகம் உலகத்திலேயே இதுதான் முதலாவதாகும்!

1985 இறுதியில் இப்பல்கலைக் கழகத்தில் மொத்தம் 7,500 கம்ப்யூட்டர் கருவிகள் இயங்கத் தொடங்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். மாணவர் பட்டம் பெற்றுப் போகும் போதும் இந்தப் பல்கலைக் கழகத்துக் கம்ப்யூட்டர் இணைப்போடு தமது தொடர்பைத் துண்டித்து விட மாட்டார்; நாட்டில் எங்கு இருந்தாலும் தங்கள் பல்கலைக் கழகத்துக் கம்ப்யூட்டர் இணைப்போடு தொடர்பு கொண்டு வேண்டிய தகவல்களை விரைவில் பெற முடியும்.

கார்னகி - மெலன் பல்கலைக் கழகம் மாணவருக்கு விதிக்கின்ற சொந்தக் கம்ப்யூட்டர் வகை இன்றைக்கே நாட்டில் கிடைப்பதுதான். ஆனால் உற்பத்தி முறை முன்னேற்றத்தின் பயனாக 1985-க்குள் அதன் விலை இன்றைய விலையில் பத்தில் ஒரு பங்காகக் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஏற்கெனவே இப்பல்கலைக் கழகத்தில் கம்ப்யூட்டர் பழக்கம் வேரூன்றி விட்டது. பொறியியல் விஞ்ஞான வகுப்பு மாணவர்கள் தங்கள் கணக்குகளைத் தீர்க்கக் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகிறார்கள். ஆங்கில இலக்கியம் பயில்வோர் தங்கள் எழுத்துப் படைப்புகளைச் செப்பனிடப் பயன்படுத்துகிறார்கள்.

வரலாற்று வகுப்பு மாணவர்கள் இன்று ஃபிரெஞ்சுப் புரட்சிக்குரிய தகவல்களைக் கம்ப்யூட்டரில் திரட்டி வருகிறார்கள். நாடக இயல் மாணவர்கள் தங்கள் நாடக வசனங்களைத் திருத்தித் திருத்தி எழுதக் கம்ப்யூட்டர் கருவி கை கொடுக்கக் காண்கின்றனர். ஓவியக் கலை மாணவர்கள் கம்ப்யூட்டரின் துணைகொண்டு வண்ண ஓவியங்களைப் படைக்கும் நுட்பத்தைப் பயின்று வருகிறார்கள்.

## எழுதுங்கள் !

**மாணவ மணிகளே!**

**இது உங்கள் பக்கம். இந்தப் பக்கத்தில் நீங்கள் கதை, கட்டுரை-கவிதை - துணுக்குகள் எழுதி அனுப்பலாம். ஆனால் அவையெல்லாம் உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும்.**

**உங்களில் யாரேனும் ஏதாவது ஒரு துறையில் (கதை, கட்டுரை, விளையாட்டு, ஓவியம், நடனம்) சிறந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் தங்கள் புகைப்படத்துடன், தங்களைப் பற்றிய குறிப்பையும் எழுதி, ஆசிரியர் அல்லது தலைமையாசிரியர் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கலாம்.**

—ஆசிரியர்



## உள்ளத்தில் இல்லை ஊனம் !

தஞ்சாவூர் மாவட்டம், பூண்டி அமரர் ஆ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியில் இரண்டாமாண்டு (பி.ஏ) வரலாற்றியல் துறையில் படிப்பவர் சி. சொக்கலிங்கம். இவர் பள்ளியிலும், கல்லூரியிலும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஆங்கிலப் பேச்சுப் போட்டி, வினாடி - வினா நிகழ்ச்சி ஆகியவற்றில் பங்கு கொண்டு பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

இவர் பிறவியிலேயே ஊனம் உடையவர். தஞ்சை மாவட்டத்திலிருந்து வெளிவரும் ''நாடக மேடை'' என்ற இதழின் உதவி ஆசிரியராகவும் இவர் பணியாற்றி வருகிறார்.




# சத்துணவுத் திட்ட ஆய்வு மாநாடு


ப. சாமிநாதன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை மாவட்டம்


வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் சமுதாயப்புரட்சித் திட்டமான சத்துணவுத்திட்டம், தமிழகத்தில் கடந்த ஓர் ஆண்டுக்காலமாக அனைவரும் போற்றும் வகையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டம் மேலும் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்திற்காக ஓர் அமைச்சரை 9-9-83 அன்று நியமித்தார்கள். மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் திரு ஆர். சௌந்திரராஜன் அவர்கள் பொறுப்பேற்றவுடன் முதலமைச்சர் சத்துணவுத்திட்டம் பற்றி ஆய்வு நடத்த மாநில அளவிலான மாநாடு முதல் முறையாக மதுரையில் 6.10.83 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூடத்தில் மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சத்துணவுத் திட்டத்தினால் தற்போது பயன் அடைந்துவரும் 65 லட்சம் குழந்தைகளின் நல்வாழ்வு கருதியும் மற்றும் இத்திட்டத்தில் தொடர்ந்து எந்த விதக் குறைகளும், தவறுகளும் இல்லாமல் சீரியமுறையில் செயல்படுத்த வழிவகை செய்யும் வகையிலும் இம்மாநாடு அமைந்தது.

இம்மாநாட்டில் சத்துணவுத் திட்டத் தனி அலுவலர் திரு.கி. லட்சுமிகாந்தன்பாரதி, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வி.சந்திலேகா, இராமநாத



# நேரு வடித்த ஆனந்தக் கண்ணீர்

**1962**—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பத்மஸ்ரீ விருது பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ராஷ்டிரபதி பவனில் நடந்த விழாவில் அப்போது பிரதமராயிருந்த நேருவும் கலந்து கொண்டார். குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் விருதுகள் வழங்கினார். அன்று விருது பெற்றவர்களில் அன்னை தெரெசாவும் ஒருவர்.

விழா முடிந்ததும் நேரு தமது தங்கை விஜயலட்சுமி பண்டிட்டுடன் வீடு திரும்பினார். அப்பொழுது விஜயலட்சுமி பண்டிட் தம் அண்ணனை நோக்கி'' அன்னை தெரெசா அடக்கமாக விருதுபெற்ற அந்தக் காட்சி நம் மனத்தையே உருக்குவதாக இருந்ததில்லையா?'' என்று கேட்டார்.

அதற்கு நேரு, ''அப்போது நீ எத்தகைய உணர்ச்சியைப் பெற்றாயோ இல்லையோ எனக்குத் தெரியாது; ஆனால் என் கண்ணீர்த் துளிகளைக் கட்டுப்படுத்துவது எனக்கு மிக மிக அரிதாக இருந்தது; அப்படியே உருகிப் போனேன்!'' என்று தழுதழுத்த குரலில் கூறினார்.

**— அரக்கோணம் சங்கர பாண்டியன்**

---


புரம மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம்.எஸ்.சீனிவாசன், ஆரம்பச் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் எஸ்.அண்ணாமலை, மற்றும் மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு மா.இராமு, தமிழகத்தின் அனைத்து நகராட்சிகளின் ஆணையாளர்கள், அனைத்து மாவட்டச் சமூகநல அலுவலர்கள், சத்துணவுத்திட்ட நேர்முக உதவியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் சத்துணவுத் திட்டம் பற்றிய நிறைவுகளையும் மேலும் திறம்படச் செயலாற்றப்பட வேண்டிய முறைகள் பற்றியும் அலுவலர்கள் கருத்துகள் தெரிவித்தனர்

**மாநாட்டில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை எந்தவிதத் தவறும் ஏற்படாமல் தீவிரப்படுத்துவது பற்றியும் கடந்த ஒரு வருடத்தில் சத்துணவுத் திட்டத்தில் என்ன நடந்தது என்பது பற்றியும் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.**

சத்துணவுத் திட்டத்தைத் தொடர்ந்து நல்ல முறையில் செயல்படுத்துவதற்குச் சில முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1. மாவட்டத்திலுள்ள சத்துணவுத்திட்ட அலுவலர்கள் ஓர் அலுவலர் ஒரு மாதத்தில் 10 பள்ளிக்கூடங்களைச் சோதனை செய்வது. 2. சத்துணவு மையங்களுக்குக் கூட்டுறவுக் கடைகளில் இருந்து வரும் உணவுப் பொருட்களின் எடையில் தவறுகள் இல்லாமல் இருப்பதற்காக மையங்களில் எடைபோட்டுக் கொடுப்பது. 3. குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்கும் போது அவர்களின் நல்வாழ்வைக் கவனிக்க ஆரம்பச் சுகாதார நிலையத்திலுள்ள டாக்டர் ஒவ்வொரு குழந்தையையும் 6 மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனை செய்வது, மற்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுக்கப்பட்டுள்ள அட்டையில் அந்தக் குழந்தையின் உடல் நிலை பற்றிய குறிப்பைப் பரிசோதனை செய்த டாக்டர் எழுதும்படிச் செய்வது. 4. சத்துணவு மையங்களில் வேலை பார்க்கும் அமைப்பாளர்கள்-ஆயாக்களைக்குடும்ப நலத்திட்ட வேலைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. 5. சில மாவட்டங்களில் ஊராட்சி ஊழியர்கள் மூலம் சத்துணவு மையங்களுக்குக் காய்கறி சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதேபோல் தமிழகம் முழுவதிலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுறவுக் காய்கறிக் கடைகள் தொடங்கப்பட்டு, காய்கறிகளைச் சத்துணவு மையங்களுக்கு வழங்குவது. 6. ஒவ்வொரு வொரு மாவட்டத்திலும் நல்ல முறையில் செயல்படும் 3 சத்துணவு அமைப்பாளர்களும் 6 ஆயாக்களும் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, அண்ணா பிறந்தநாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் அவர்கள் பேசுகையில் தற்பொழுது தமிழ்நாடு முழுவதிலும் 2 முதல் 10 வயதுள்ள குழந்தைகளுக்கு 61 ஆயிரத்து 675 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 65 லட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். இத்திட்டம் மேலும் வளர்ச்சி அடைய வசதி படைத்தவர்கள் இலவசமாகச் சத்துணவு கூடங்கள் கட்டித்தர முன் வர வேண்டும். 40 ஆயிரம் செலவு செய்து கட்டித்தர முடியாதவர்கள் சிறிய அளவில் பாதுகாப்பு அறையும், சமையல் கூடம் மட்டும் கூட கட்டித்தரலாம். அறச் சிந்தனை படைத்தவர்கள் இதற்கு உதவி செய்ய முன்வரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

---



# கசிவு நீர்க் குட்டைகள்

**பண்டைக் கால முதல் இன்று வரை சமுதாய நலத் திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளுள் குளங்கள் வெட்டுதல், நீர் நிலைகள் கட்டுதல் போன்றவை முக்கியமானவைகளாகும். நிலத்தின் மேற்பரப்பில் ஓடிவரும் நீரைத் தடுத்துத் தேக்கி வைக்க வேண்டுமென்ற எண்ணம் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது என்றாலும் அதன் அவசியம் இன்று மிகவும் அதிகமாகியுள்ளது. முன்பெல்லாம் நேரடி நீர்ப்பாசனத்திற்காக நீர்த்தேக்கங்களும், ஏரிகளும் கட்டப்பட்டன. ஆனால் இன்று ஆற்று நீரும் நிலத்தடி நீரும் முழுதும் பயன்படுத்தப்படுவதால் நிலத்தடி நீரை அபிவிருத்தியடையச் செய்ய ஆங்காங்கே நீரைத் தேக்கி வைக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.**

நிலத்தின் மேற்பரப்பில் ஓடும் ஆறுகளின் நீரில் 90%க்கு மேல் தற்போது பயன்படுத்தப்படுகிறது. நிலத்தடி நீரும் பெருமளவில் பயன் படுத்தப்படுகிறது. நமது மாநிலம் வற்றாத ஜீவநதிகளைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே நிலத்தடி நீரைப் பெருமளவில் உபயோகிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக நிலத்தடி நீர் வேகமாகக் குறைந்துவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்க நிலத்தடி நீர் அபிவிருத்திக்காகப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். கசிவு நீர்க் குட்டைகள் நிலத்தடி நீர் அபிவிருத்திக்குப் பெரிதும் உதவுகின்றன.

கசிவு நீர்க் குட்டைகள் என்பவை இயற்கையான நீர்வழிகள், ஓடைகள் மற்றும் நீர் வடி பகுதிகளின் வடிமுனைகளில் வரும் நீரைத் தடுத்துச் சேமிக்கக் கட்டப்படும் குட்டைகளாகும். இவற்றின் முக்கிய நோக்கம் நிலத்தின் மேற்பரப்பில் ஓடிச்சென்றுவிடும் நீரைத் தேக்கி அது நீண்ட நாட்களுக்கு நிலத்தின் மேற்பரப்பில் தங்குவதன் மூலமாக நிலத்தின் அடிப்பரப்பில் பரவலாகவும் செங்குத்தாகவும் நீர் ஊடுருவிச் சென்று நிலத்தடி நீர் அபிவிருத்தியடையவேண்டும் என்பதாகும். ஆகவேதான் இதற்குக் கசிவுநீர்க் குட்டையென்று பெயரிடப்பட்டுள்ளது. கசிவுநீர்க் குட்டைகள் நிலத்தடி நீரை அபிவிருத்தி செய்வதுடன் திடீர் வெள்ளத்தைத் தடுக்கவும், ஓடிவரும் நீரிலுள்ள வண்டலைச் சேகரிக்கவும் பயன்படுகின்றன. ஓடும் நீரிலுள்ள வண்டல் தடுக்கப்படாமல் விடப்படுமாயின், பெரும் பொருட்செலவில் கட்டப்பட்டுள்ள பெரிய நீர்த்தேக்கங்கள், நீர் மின் நிலையங்கள் ஆகியவை பாதிக்கப்படும். ஆகவே கசிவுநீர்க் குட்டைகள் நிலத்தடி நீர் அபிவிருத்திக்கும் மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பிற்கும் பயன்படுகின்றன.

பொதுவாக, கசிவுநீர்க் குட்டைகள் அரசு புறம்போக்கு நிலங்களில் கட்டப்படுகின்றன. மேலும் நீர் உறிஞ்சும் தன்மையுடைய மண்ணுள்ள இடங்களில் இக்குட்டைகள் அமையும்படி கவனித்துக் கொள்ளப்படுகிறது. கசிவு நீரினால் பயனடையும் பகுதியில் கிணறுகள் அதிகமாக உள்ள இடங்கள், இக்குட்டைகள் கட்டுவதற்குச் சிறப்பானவைகளாகக் கருதப்படுகின்றன. இக்குட்டைகளில் நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாவதை முடிந்தவரை குறைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இவற்றின் பரப்பு அளவுகள் குறைவாக நிர்ணயிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நீர்ப்பாசன ஆதாரங்கள் பெரும்பாலும் பருவ மழையையே நம்பியுள்ளன. பருவ மழையின் வேறுபாடுகள் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருமளவு பாதித்திருக்கின்றன. தமிழ்நாட்டின் பெரும் பகுதிக்கு வடகிழக்குப் பருவ மழையே அதிக அளவு தண்ணீரைக் கொடுக்க வல்லது. ஆனால் இம்மழை குறுகிய காலத்தில் அதிக வேகமாகப் பெய்து முடிவடைகிறது. ஆகவே மழைநீர் நிலத்தில் உறிஞ்சப்படும் வாய்ப்பில்லாமல் பலவிடங்களில் வெள்ளமாகப் பாய்ந்து வீணாகிவிடுகிறது. அவ்வாறு வீணாகும் நீரைக் கசிவு நீர்க் குட்டைகள் கட்டித் தேக்கிவைப்பதால், திடீர் வெள்ளத்தைத் தடுக்கலாம். நீண்ட நாட்களுக்கு அவ்வப்பகுதிகளில் நீர் தேங்கி நிற்கச் செய்யலாம். அதன் பயனாக நிலத்தடி நீர் பெருகி, கிணற்று நீர்ப் பாசனம் உறுதியடையச் செய்யலாம். பறவைகளுக்கும், கால்நடைகளுக்கும் இக் குட்டைகள் பயனுடையதாக இருப்பதுடன் சுற்றுப்புறச் சூழ்நிலை எழிலாக இருக்கவும் உதவுகின்றன. மேலும் வறட்சிக் காலங்களில் வறட்சியின் தீவிரம் குறையவும் உதவிபுரியும்.

வேளாண்மைப் பொறியியல் துறையினர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டி வருகின்றனர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து, 1983 மார்ச் மாதம் வரை 1464 கசிவுநீர்க் குட்டைகள், ரூபாய் 251.28 இலட்சம் செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் 1037 கசிவு நீர்க் குட்டைகள் வறட்சிக்கு ஆட்படும் மாவட்

**அ. வேங்கடராமன், இ.ஆ.ப.**
**வேளாண்மைத்துறைச் செயலர்**

டங்களாகிய தர்மபுரி, இராமநாதபுரம் வறட்சிக்குட்படும் பகுதித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டப்பட்டுள்ளன.

வறட்சி மீட்புப் பணியாகவும் கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்படுகின்றன. ஏனெனில் இக்குட்டைகள் கட்டுவதற்குச் சாதாரண கூலியாட்களே அதிகம் தேவை. ஆகவே இவை அவர்களுக்குத் துயர்துடைக்கும் பணியாக விளங்குகின்றன.

*1981-82*ஆம் ஆண்டில் வறட்சிக் காலத்தில் *8* மாவட்டங்களில் மொத்தமாக *126* கசிவு நீர்க் குட்டைகள் ரூ. *46.89* இலட்சத்தில் கட்டப்பட்டன. தற்போது *1983-84*ஆம் ஆண்டு வறட்சிக் காலத்தில் *13* மாவட்டங்களில் ரூ. *147.16* இலட்சம் செலவில் *284* கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டன.

கசிவு நீர்க் குட்டைகளினால் ஏற்படும் பயனை அறிய வேளாண்மைப் பொறியியல் துறையினரால் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அதன் மூலமாக கசிவு நீர்க் குட்டை கட்டிய பகுதியில் கிணறுகளின் எண்ணிக்கை 18% அதிகரித்தது என்றும் கிணற்றுப் பாசனம் பெறும் நிலப்பரப்பு 58% அதிகரித்தது என்றும் அறியப்பட்டது.

கசிவுநீர்க் குட்டைகளினால் ஏற்படும் பயன்கள்:

மண்ணரிப்பு கட்டுப்படுத்தப்படுகிறது.

நிலத்தடி நீர் அபிவிருத்தியடைகிறது. அதனால் நீர்ப்பாசனம் நிலைப்படுத்தப்படுகிறது.

வெள்ளக் கொடுமை கட்டுப்படுத்தப்படுகிறது.

திடீர் வெள்ளம் முழுவதுமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது.

பெரும் பொருட்செலவில் கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கங்களில் வண்டல் படிவது குறைவடைகிறது.

கால் நடைகளுக்கும், வீட்டு உபயோகத்திற்கும் குட்டைநீர் பயன்படுகிறது.

மேலும் கசிவுநீர்க் குட்டைகள் அரசிற்கு ஒரு நிரந்தரச் சொத்தாக அமைகின்றன. இக்குட்டைகள் இயற்கை ஆதாரங்களை மேம்படுத்துவதுடன் இயற்கையின் சமநிலையைச் சீராக்கும் பணியில் முக்கிய பங்கேற்கிறது.

கசிவுநீர்க் குட்டைகள் கட்டுவதால் அவற்றைச் சுற்றியுள்ள பகுதியில் வேளாண்மை சிறக்கவும் அதனால் அப்பகுதியிலுள்ள மக்களின் பொருளாதாரம் மேம்படவும் ஏதுவாகிறது.

நிலத்தடி நீரைப் பெருமளவிற்கு வெளியேற்றிப் பயன்படுத்துவதால் அதனுடைய அளவு வேகமாகக் குறைந்து வருகிறது. இந்நிலை மேலும் தொடருமானால் தமிழகத்தில் பல பகுதிகளில் நாளடைவில் பாலைவனங்களாக மாறக்கூடிய அபாயம் ஏற்படக்கூடும். ஆகவே நிலத்தடி நீர் அபிவிருத்தியடைய கசிவுநீர்க் குட்டைகளைப் பெரும் எண்ணிக்கையில் தமிழகம் முழுவதும் கட்டவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. இக்குட்டைகளைக் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆகவே கசிவுநீர்க் குட்டைகளைப் பெரும் எண்ணிக்கையில் தமிழக முழுவதும் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீரை அபிவிருத்தியடையச் செய்யலாம். அத்துடன் பெரும் பொருட் செலவில் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களிலும் நீர் மின் நிலையங்களிலும் வண்டல் படிந்து அவற்றின் கொள்ளளவும், பயனும் பாதிக்கப்படுவதையும் குறைக்கலாம்.

## உலகப் பெருந் தலைவர் நேரு



உலகப் பெருந்தலைவர்கள் வரிசையில் சிறப்புமிக்க இடம் பெற்று இந்தியத் துணைக் கண்டத்துக்குத் தனிப்புகழிடம் தேடிக்கொடுத்து, பூசல்கள், பிளவுகளால் நாடு கேடு அடையாமல் பாதுகாத்து, பொருளாதாரச் சீர் குலைவு ஏற்படாமல் தடுத்து வந்த மாபெரும் காவலர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்.

நேரு பெருமகனாருக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதை உணர்வைச் சொல்லாலும் செயலாலும் நேர்மையாலும் நன்னெறியாலும் அனைவரும் எடுத்துக் காட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

–பேரறிஞர் அண்ணா

.மே 1964

[நேரு அவர்களின் மறைவின் போது. சென்னை மத்தியச் சிறையிலிருந்து விடுத்த இரங்கற் செய்தி]



## அறியாத குழந்தை

## மூதறிஞர் ராஜாஜி

**மூதறிஞர் ராஜாஜி பிறந்தநாளை (டிசம்பர் 10) ஒட்டி இந்தச் சிறுகதை வெளியிடப்படுகிறது.**

''அம்மா! நான் கிட்டப்போனால் வெள்ளை மாடு முட்ட வருகிறது. கருப்பன் போனால் ஒன்றும் செய்யாமல் சும்மா நிற்கிறதே, அது ஏன் இப்படி?''

''அவன் அதனண்டை போய்ப் போய்ப் பழக்கம், அதனாலே இது சும்மா இருக்கிறது. உனக்குப் பழக்கமில்லை. அதனாலே முட்டுகிறது.''

''நானும் பழக்கம் பண்ணிக் கொள்ளுகிறேனே, அம்மா!''

''வேண்டாம், வேண்டாம், உனக்கு ஏன் அந்த வேலை? நீ விளையாடிக் கொண்டிரு. அவன் பறைப்பையன். மாடு மேய்க்க வேண்டும். இந்தா, போளி சாப்பிடு''

சுப்பனுக்கு நாலு வயது. எதிர் பாராதபடி வயதுக்கு மேலும் பேசும் குழந்தை. தாய் தகப்பனுக்கு ரொம்பச் செல்லம். இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பின் பிறந்த முதல் ஆண் குழந்தை.

''அம்மா, போளி எதனால் செய்கிறது?''

''வெல்லம், பருப்பு, தேங்காய் எல்லாம் போட்டுச் செய்கிறது. சாப்பிட்டுப் பார்த்துச் சொல், நன்றாயிருக்கிறதா?''

''அம்மா, பறையன் என்றால் என்ன? கருப்பன் ஏன் நம்ம வீட்டுக்குள்ளே வருவதில்லை? எல்லோரும் வருகிறார்களே?''

''அப்படித்தான் குழந்தாய், அவன் பறையன்.''

''சொல்லம்மா! பறையன் என்றால் என்ன?''

''அதெல்லாம் உனக்குத் தெரியமாட்டாது. நீ போளி சாப்பிடு.''

''நான் சாப்பிடமாட்டேன். ஏன் கருப்பன் உள்ளே வரக் கூடாது?''

''தொந்தரவு செய்யாதே போ, அவன் எவ்வளவு அழுக்குடன் இருக்கிறான் பார். அவன் உள்ளே வந்தால் தீட்டாய்ப் போய்விடும்.''

''தீட்டு என்றால் என்ன? மாட்டுச் சாணியா?''

''மாட்டுச்சாணி தீட்டல்ல, அவனுடம்பில் மண்ணும் சேறும் பார். அவன் குளிக்கிறதே கிடையாது. அவன் பறையன்.''

''அம்மா, நம்ம வீட்டிலே கருப்பனைக் குளிக்கச் சொல்லட்டுமா?''

''இதென்ன விபரீதம்? சுப்பு போடா; நீ அவனோடு விளையாடாதே!''

''அவனோடுதான் விளையாடுவேன். அவனுக்கும் ஒரு போளி தா.''

''முடியாது. பறைப் பையனுக்குப் போளி தரவாவது? தந்தால் செய்த போளியெல்லாம் கெட்டுப் போகும். ஓடிப்போ. வாசலில் மாமா வந்திருக்கிறார். உன்னைக் கூப்பிடுகிறாராம், பார்''.

''இல்லை, இல்லை. இன்னொரு போளி தா. பாவம் அவனும் சாப்பிடட்டும்.''

''முடியாது போ, இங்கேயே சாப்பிட்டுவிட்டுப்போ. அவனிடம் போகாதே''

''அப்படியானால் எனக்கும் வேண்டாம்'' என்று சொல்லிப் போளியைக் கீழே போட்டுவிட்டு புழக்கடைக்கு ஓடினான்.

''கருப்பா! நீ பறையனா?''

''ஆமாம்.''

''நான் பறையனல்லவா?''

''சீ! நீ பாப்பான். நான்தான் பறையன்.''

''உனக்கு அம்மா இருக்கிறாளா?''

''ஓ! இருக்கிறாள்.''

''எங்க அம்மா மாதிரி இருக்காளா?''

''ஆமாம்!''

''உனக்குப் போளி பண்ணித் தருகிறாளா?''

''போளியா! இல்லை, எங்க வீட்டில் போளி கிடையாது''



என்று சிரித்துக் கொண்டே சொன்னான் கருப்பன்.

''இன்று தீபாவளி. நாங்கள் எல்லாம் எண்ணெய் தேய்த்துக் குளித்தோம். நீ குளித்தாயா?''

''எங்க கிணற்றில் தண்ணீர் வற்றிப் போய்விட்டது.

எண்ணெய்க்கு அப்பனிடத்தில் காசு எங்கே?''

''நம்ம வீட்டில் குளியேன்!''

''ஐயோ! விடுவாங்களா உள்ளே?''

''நீ வா, கருப்பா! குளித்து விட்டு வந்தாயானால் வீட்டில் விடுவார்கள்.''

''ஐயையோ! உதைத்துப் போடுவார்கள்.''

''சீ, சீ! எங்கம்மா உதைக்கவே மாட்டாள்.''

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போது மாமா கிருஷ்ணய்யர், ''அப்பா, சுப்பு. இந்தா பட்டாசு'' என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

உடனே சுப்பு ஒரு குதி குதித்து மாமாவிடம் போய், அவர் தோள் மேல் ஏறி உட்கார்ந்தான். அவரும் அவனைக் கட்டியணைத்துப் பிறகு அவன் கையில் பட்டாசுக்கட்டைச் கொடுத்து, ''சுடத்தெரியுமா?'' என்று கேட்டார்

''ஓ தெரியும்'' என்று மசால் விக்கொண்டு பட்டாசுக் கட்டைத் திறந்து சரங்களைப் பிரித்து, ''மாமா! இதில் பாதி கருப்பனுக்கு அறுத்துக் கொடு'' என்றான்.

''பறைப் பையனுக்கு என்னத்திற்குப் பட்டாசு? அவனைத் தீண்டாதே! வா, உள்ளே போவோம் '' என்று சொல்லி விட்டு, ''பறைப் பயலே, உனக்கு என்ன இவ்வளவு கர்வம்? குழந்தைக்கு இவ்வளவு பக்கம் வருகிறாய், ஓடிப்போ தூர!'' என்று ஓர் அதட்டு அதட்டினார் மாமா.

கருப்பன் ஓடி ஒதுங்கி நின்று கொண்டான். ஆனால் அவன் கண்,பட்டாசுக் கட்டின் மேலேயே இருந்தது. சுப்புவுக்கு உலகம் விளங்கவேயில்லை, அப்போது சுப்புவின் தாயாரும் வந்தாள்.

''உன் குழந்தையைப் பார், சாவித்திரி! பறைப்பையனுக்கும் பட்டாசு கொடு என்று தொந்தரவு செய்கிறான்'' என்று சுப்புவை எடுத்து முத்தமிட்டார்.

''இந்தக் குழந்தை உண்டோ இல்லையோ, விபரீதம்! அதை என்னென்று சொல்லுவேன்'' என்று வெகு பெருமையோடு அவளும் சுப்புவை எடுத்து அணைத்து முத்தமிட ஆரம்பித்தாள். சுப்புவுக்கு உலகம் இன்னும் விளங்கவில்லை. கருப்பன் மாட்டைப் பிடித்துக்கொண்டு வயலுக்குப் போய்விட்டான்.

அப்போது சுப்புவின் சின்ன அக்காள் பார்வதி, ''பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை'' என்ற பாரதியாரின் பாட்டைப் பாடிக்கொண்டே வந்தாள்.

''அம்மா, பேப்பர் பார்த்தாயா? கோயில்களை எல்லாம் பறையருக்குத் திறந்து விடுகிறார்களாமே?'' என்று கேட்டாள்.

''இது என்ன அவதியோ, தெரியவில்லையே'' என்றாள் சாவித்திரி.

''உனக்குத் தெரியாதா, சாவித்திரி? உலகமே தலைகீழாகப் போகிறது'' என்றார் கிருஷ்ணய்யர்.



# கட்டட மயமாகும் குடிசைப்பகுதிகள்

இந்தியத் துணைக்கண்டம் உட்பட அனைத்து ஏழை நாடுகள், வளரும் நாடுகளில் எல்லாம் கிராமப்புற மக்கள் பெருமளவில் பிழைப்புத் தேடி, நகர்ப்புறங்களை நோக்கிப் படை எடுத்திடும் 'நகர மயமாக்கிடும் நிலை' நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

1971ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, நகர்ப்புறங்களை நோக்கி கிராமப்புற மக்கள் குடிபெயர்ந்த எண்ணிக்கை 19.9 என்ற அளவில் இருந்தது; ஆனால் இதுவே 10 ஆண்டுகளில் (1981ல்) 23.73 என்ற அளவுக்குப் பெருகிவிட்டது.

தமிழகத்தைப் பொறுத்த வரை, மராட்டியத்திற்கு அடுத்து இந்தப் பிரச்னையில் நமது மாநிலம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. நமது மாநிலத்து மக்கள் தொகையில் 32.98 பேர் நகர்ப்புறங்களிலேயே வசிக்கின்றனர். நாடு முழுவதுமாக உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் நமது மாநிலத்திலேயே அதிகம். 464 பகுதிகளுக்கு மேல் இங்கே எண்ணிக்கையில் பெருகியுள்ளன.

1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, மொத்தமுள்ள 48.3 மில்லியன் மக்களில், 15.9 மில்லியன் மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் நகர்ப்புற மக்கள் தொகையில் 3.4 மில்லியன் அளவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு, நகர்ப்புறங்களில் குடியேறுவோரது பெருக்கமும் ஒரு காரணமாகும். கட்டுப்படுத்த முடியாத இத்தகைய மக்கள் தொகைப் பெருக்கம் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி இன்னல்களை அதிகரித்து வருகிறது.

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரம் மாநிலத்திலேயே மிகப்பெரிய நகரமாகும்; 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, சென்னை மாநகரத்தின் மக்கள் தொகை 32.7 லட்சமாக இருந்தது; இதுவே, மாநிலத்து நகர்ப்புறங்களது மக்கள் தொகையில் 5ல் ஒரு பங்கு ஆகும்.


**திருமதி ஈ. வே. கி. சுலோசனா சம்பத்**

**தலைவர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**


நம் மாநிலத்தில் 'முதல்தர நகரங்களாக' மதிக்கப்பட்டுள்ள 20 நகரங்களில் - சராசரியாக ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழுகிறார்கள்.

குறைந்த வருவாயுள்ளோர் நகர்ப்புறங்களை நோக்கிப் படையெடுத்திடும் வேகம், மற்ற நாடுகளைப் போன்றே இந்தியாவிலும் உள்ளது.

கிராமப்புறங்களில் பல்வேறு இழிவுகளாலும், பாதுகாப்பற்ற நிலையாலும் ஒதுக்கப்படுகிற மக்கள், மறுவாழ்வு தேடி நகர்ப்புறங்களிலுள்ள தொழில் வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு, நவீனமய வாழ்க்கை முறைகள் ஆகியன அவர்களை மிகவும் ஈர்க்கின்றன.

நகர்ப்புறங்களில் ஏற்படுகிற இந்த மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப, அவர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில், சமூகப் பொருளாதார அடிப்படையில் பல்வேறு திட்டங்களை நிர்வாக ரீதியாக மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. இந்தக் கடமையிலேயிருந்து நாம் விலகி நிற்க முடியாது. ஆகவே தான், நாம் இதிலே ஒன்றிப் போகிறோம்.

நாளுக்கு நாள் பெருகிடும் குடிசைப்பகுதிகளால் நகரில் அமைதியின்மையும், பல்வேறு இடர்ப்பாடுகளும் ஏற்படுகிறது. இது நகர மக்களுக்குப் புதிய தொல்லைகளை ஏற்படுத்திவிடுகிறது.

இதனால் தான், 1940ஆம் ஆண்டில், சென்னை மாநகராட்சி குடிசை அபிவிருத்தித் திட்டம் கொணர்ந்தது. அதனையடுத்து, 1950ஆம் ஆண்டுக்குப் பிறகு, நகர்ப்புற வளர்ச்சித்திட்டம்-கொணரப்பட்டது. 1960ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் தான் 1970ஆம்ஆண்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

1971ல் இவ்வாரியம் சமூகப் பொருளாதார அடிப்படையில் ஆய்வு நடத்தி, 1202 குடிசைப் பகுதிகளைக் கணக்கிட்டது.

[illegible] குடும்பங்கள் 87 ஆயிரத்து 210 குடிசைகளில் ஆரோக்கியக் கேடுகளுக்கு நடுவே அவதியுற்று வந்தது கணக்கெடுக்கப்பட்டது.

நகரில், மூன்றில் ஒருவர் குடிசையிலேயே வசித்தனர். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இவ்வாண்டில் மேற்கண்ட முறையில் ஒரு விரிவான ஆய்வை நடத்த எண்ணியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடிசைப்பகுதிகளைப் பாதுகாப்பான, ஆரோக்ய சூழ்நிலையிலான அடுக்கு மாடிக் கட்டடங்களாக மாற்றுதல்.

புதிய குடிசைப்பகுதி ஆக்ரமிப்புகளைத் தடுப்பது.

தனியார் நிலங்களிலுள்ள குடிசைப்பகுதி மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளைத் தடுத்து, அவர்களுக்குரிய பாதுகாப்பு அளிப்பது.

ஆரோக்ய வசதிகளான-குடிநீர் வசதி, தெரு விளக்கு, சாலை வசதி, கழிவு நீரகற்றும் வசதி, போன்ற அடிப்படை வசதிகளைக் குடிசைப்பகுதிகளில் ஏற்படுத்தித் தருதல்-ஆகிய குறிக்கோள்களுடன் செயல்படும் குடிசைமாற்று வாரியம் குடிசைகளை அகற்றி அடுக்குமாடிக் கட்டடங்களை அமைத்தல். குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல் என்ற முறையிலே செயல்பட்டு வருகிறது.

முதல் முறையின் கீழ், குடிசைப் பகுதிகளிலுள்ள ஓலை மற்றும் கோணிப்பை, தகரம் ஆகியவற்றால் ஏற்படுத்திய குடிசைகளை அகற்றி, அதே இடத்தில் வசதிகள் கொண்ட மாடிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

1983ஆம் ஆண்டு முடிய 38.79 கோடி ரூபாய் செலவில் 42 ஆயிரத்து 970 மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

[illegible] ஆண்டில் மாடிக் கட்டடங்கள் ஆயிரமும், அடுத்த ஆண்டில் 1,700 மாடிக்கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன. கடந்த 12 ஆண்டுகளில் கட்டப்பட்ட மாடிக் குடியிருப்பு ஒன்றின் விலை 8 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

மாடிக்கட்டடங்கள் கட்டும் பணிகள் தற்போது குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுமே கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்படும் இடங்கள்; விரைவு ரயில் போக்குவரத்து அமைக்கப்படவிருக்கும் இடங்கள்; ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள பகுதிகள்; சாலை ஓரங்களில் அமைந்துள்ள பகுதிகள்; பொதுப்பணிக்கான இடங்கள் ஆகிய பகுதிகளிலுள்ள குடிசைகளுக்கு மட்டுமே மாடிக் கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

இத்திட்டங்களுக்கு ஆகிற செலவுத் தொகை முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. மேலும், புதுடில்லியிலுள்ள 'ஹட்கோ (Hudco) நிறுவனத்தின் மூலம் இத்திட்டங்களுக்குக் கடன் தொகை பெறப்பட்டு அத்தொகையும் தமிழ்நாடு அரசால் மானியமாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அளிக்கப்படுகிறது. இந்தக் குடியிருப்புகளுக்குச் சலுகை முறை அனுமதித் தொகையாக மாதம் ரூ. 20ம் குடிநீர் வசதியுடன் உள்ள கட்டடங்களுக்கு மாதம் ரூ. 22ம் மின்சார வசதி உள்ள கட்டடங்களுக்கு மாதம் ரூ.25 ஆகவும் வசூலிக்கப்படுகிறது.

குடியிருப்புகளில் வசிப்போர் விரும்பினால், அவர்களுக்கு அக்குடியிருப்புக்கள் தவணை முறை திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதற்கான தவணைத்தொகை மாதம் ரூ. 30ல் இருந்து ரூ. 45 வரை அவர்கள் குடியிருக்கும் மாடிகளைப் பொறுத்து தொகை நிர்ணயிக்கப்படுகிறது.


இதுவரை 2,923 குடியிருப்புகள் தவணை முறைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மாத வருமானம் ரூ. 350 லிருந்து ரூ. 600 வரையுள்ள குடிசைப் பகுதிகளில் வாழுகின்ற குறைந்த வருமானக்காரர்களுக்கும் மற்றும் குறைந்த வருமானப்பிரிவிலிருந்து குடியிருப்புக்கள் கட்டி, அந்தக் குடிசை வாசிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதற்கு அவர்கள் 4,000 ரூபாய் முன்பணமாகக் கட்டவேண்டும். மாதத் தவணையாக ரூ. 85 வீதம் 25 ஆண்டுகளுக்கு செலுத்திவந்தால், அந்த குடியிருப்பு அவர்களுக்குச் சொந்தமாகிவிடுகிறது. இந்த வகையில் 2,208 குடியிருப்புகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன.

மக்கள் நெரிசலாக வாழுகிற குடிசைப்பகுதிகளில் கோடை காலத்தில் அடிக்கடி ஏற்படுகிற தீ விபத்துக்களைத் தவிர்க்க, ஓலைகளை மாற்றி, குடிசைகளை ஒழுங்கு முறைப்படுத்தி, தீப்பிடிக்காத வீடுகள் அமைத்துத்தரப்படுகின்றன. இத்திட்டம் குடிசைப்பகுதி மக்களால் வெகுவாக வரவேற்கப்படுகிறது.

கடந்த ஓராண்டுக் காலத்தில் 1,153 குடியிருப்புக்கள் மேற்கண்ட முறையில், ரூ. 15.57 லட்சம் செலவில் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

குடிசைப்பகுதிகளை மாற்றி, அடுக்குமாடிக் கட்டடங்களை அமைப்பது மிகுந்த செலவான திட்டம் என்று உணரப்பட்டது. அதன் காரணமாக, குடிசைப் பகுதிகளை, அவர்கள் இருக்கும் நிலைமையிலேயே அடிப்படை வசதிகளைச் செய்து, சீர்திருத்தம் செய்வதால், அதிகப்படியான குடும்பங்கள் பலனடைகின்றன. இத்திட்டத்தின் கீழ் குடிநீர்வசதி, பொதுக்கழிவறை, தெருவிளக்குகள், கழிவுநீர் வடிகால்வாய், சாலை வசதி முதலியன செய்யப்பட்டு வருகின்றன. அப்பகுதிகளிலுள்ள மக்களுக்கு வசதியாக குழந்தைகள் காப்பகம் கட்டித் தரப்படுகின்றன. அதுமட்டுமின்றி, குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேலும் மூன்று திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.





**1. சுற்றுப்புறச் சுகாதார அபிவிருத்தித் திட்டம்**

**2. குடிசைப் பகுதிகள் அபிவிருத்தித் திட்டம்**

**3. உலக வங்கித் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற அபிவிருத்தித் திட்டம்.**

1972ஆம் ஆண்டு முதல் 77வரை 41 ஆயிரத்து 300 குடும்பங்கள், சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 3.47 கோடி செலவில் பெருமளவு பயனடைந்துள்ளன.

1977 முதல் 83 வரை 46,000 குடும்பங்கள் குடிசை மேம்பாட்டு அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் 3.2 கோடி ரூபாய் செலவில் மிகவும் பயனடைந்துள்ளனர். மேலும் நடப்பு ஆண்டில் 2,750 குடும்பங்கள் இத் திட்டத்தின்கீழ் பயனடைவர். 1977 முதல் 1981 வரை உலக வங்கித்திட்டத்தின் கீழ் ரூபாய் 6.30 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிசை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 25 ஆயிரம் குடும்பங்கள் பயனடைவர். அதற்குப் பெயர் 'சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1'.

1981ல் இரண்டாவது கட்டமாக சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2 ரூபாய் 27.80 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, 50 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும்.

இதன் முக்கியச் சிறப்பம்சம் என்னவெனில், குடியிருக்கும் இடம் அவர்களுக்கே சொந்தமாக்கப்படுகிறது. அதனால் அவர்கள் வசிக்கும் குடிசைகளை மாற்றிக் கட்டடமாக அமைத்துக்கொள்ள அவர்களுக்குக் கடன் உதவியும் தரப்படுகிறது.

சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் கால்வாய்கள் கட்டப்பட்டு, வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சென்னை நகர வளர்ச்சித் திட்டம் 2ன் கீழ் 22,000 குடும்பங்கள், 1982-83ல் பயன் பெற்றுள்ளன. 13,000 குடும்பங்கள் இந்த ஆண்டு பயன் பெறும். மேலும் உள்ள 15,000 குடும்பத்தார் 1984-85ல் பயன்பெறுவார்கள்.

மாத வருமானம் ரூ. 600க்கு மேற்படாத குடும்பங்களுக்கு ரூ. 4,800 வீடு அபிவிருத்திக் கடனாக வழங்கப்பட்டு, அவர்கள் மாத வருவாய் ரூ. 200க்கும் குறைவானவர்களுக்கு ரூ. 800-கடனாக அளிக்கப்படுகிறது.

குடிசைப் பகுதிகளிலுள்ள இளைஞர்களின் திறமைகளை வளர்க்க அவர்களுக்கு மின் அணுத்துறை, வானொலி, தொலைக்காட்சி பழுதுபார்த்தல், மோட்டார் வாகனங்கள் ஓட்டுதல், ஒயரிங், செவிலித்தாய்ப்பணி ஆகியவற்றுக்கு வாரியம் பயிற்சி அளித்துவருகிறது.

குழந்தைகள் பாதுகாப்பு, குடும்பநலத்திட்டம், சுற்றுப்புறச் சுகாதாரம் ஆகியவற்றில் மக்களின் பொறுப்பை உணர்த்தவும், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் அரசாங்கத்தின் ஆறு ஆண்டு காலச் சாதனைகளை விளக்கவும்-தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் மூலம் குடிசைப்பகுதி மக்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள ஊக்கமளிக்கப்படுகிறது.

குடிசைப் பகுதி மாற்று வாரியம்- சமூக நல அமைப்புக்களோடு இணைந்து, குடிசைப் பகுதி மக்களுக்கு முதியோர் கல்வி, மருத்துவ வசதி, தாய் சேய் நலம் ஆகிய சேவைகளையும ஆற்றுகிறது.

அந்தந்தப் பகுதி மக்களே பள்ளிகளை நடத்த சமூக நலத் தொண்டர்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ், குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 'யூனிசெப்' நிறுவனத்தோடு இணைந்து, குடிசைப்பகுதி மக்கள் தங்களுக்கான வளர்ச்சிப் பணிகளில் ஈடுபாடு கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, சுற்றுப்புறச் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், குப்பைகளை அகற்றவும், மற்றும் கல்வி வளர்க்கவும், அம் மக்கள் மத்தியிலேயே குழுக்களை அமைத்துச் செயற்படவும் வசதி வாய்ப்புக்கள் உருவாக்கித் தரப்படுகின்றன.

இப்பகுதி மக்களுக்கு அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை செய்யவும் வழி செய்யப்பட்டுள்ளது.

பொதுக் கழிப்பிடங்களுக்குப் பதிலாக-குறைந்த செலவிலான தனிக்கழிப்பறைகளைக் கட்டிக் கொள்ளவும் அவர்களுக்கு உதவப்படுகிறது.

குடிசைப்பகுதியில் வாழுகிற இளைஞர்களைச் சமூகப் பொறுப்புள்ளவர்களாக வளர்த்து, சமுதாயத்திற்கு உதவக்கூடிய வகையில் உயர்த்திடவும், இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

குடிசைப் பகுதி மக்களது சுய உழைப்பைக் கொண்டே சமூகக் கூடங்களை அமைக்க உதவிகள் செய்யப்படுகின்றன.

ஏழைகளுக்கு உதவி செய்யக் கட்டப்பட்ட மருத்துவ நிலையங்கள் நன்கு இயங்கவும், நல்ல முறையில் செயல்படவும், அந்த மக்களின் பொறுப்பும், உதவியும் அவசியமென உணர்த்தப்படுகிறது.

அடக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களது உயர்வுக்காகவே பாடுபட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், புரட்சித்தலைவர் அவர்கள் தமிழக அரசின் வாயிலாக குடிசைப்பகுதி மக்களை உயர்த்த, அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பது உண்மை-வெறும் புகழ்ச்சியில்லை!



# வளரும் வன வளம்: முண்டந்துறை

மனித குல நன்மைக்கு மட்டுமல்ல; மேன்மைக்கும்கூட இயற்கைச் சூழ்நிலைகளும் வனவிலங்குகளும் பெரிதும் உதவி புரிகின்றன. பிற உயிரினங்களைப் போலவே மனிதனும் தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழ்நிலையையும் அதன் வளத்தையும் சார்ந்தே வாழ்ந்து வருகிறான்.

மரங்களைப் பாதுகாத்தால்தான் வனங்கள் பாதுகாக்கப்படும்; மரங்களும்வனங்களும்பாதுகாக்கப்பட்டால்தான் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் பாதுகாக்கப்படும்; சுற்றுப்புறச் சூழ்நிலைகள் பாதுகாக்கப்பட்டால்தான் மனிதனின் நல்வாழ்வு பாதுகாக்கப்படும்.

தமிழ்நாட்டில் 350 வகைப் பாலூட்டிகளும், 1200 வகைப் பறவையினங்களும், 225 வகை ஊர்வனவும் 15 ஆயிரம் வகை மரம் செடி கொடிகளும் 20 ஆயிரம் வகைப் பூச்சியினங்களும் இருக்கின்றன. வேத காலம் முதலே மிருகங்களும் பறவைகளும் பலவித மதக் கோட்பாடுகளாலே பாதுகாக்கப் பட்டு வந்துள்ளன.

ஆனால் காலப் போக்கிலே வனத்தின் மீதும், வனவிலங்குகளின் மீதும் மனித இனத்துக்கிருந்த பற்றும் பாசமும் சற்றே குறையத் தொடங்கிவிட்டது. மனிதனின் வரைமுறையற்ற செய்கையால் பல உயிரினங்கள், பல வனவளங்கள் வீழ்ந்துபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டிலே மட்டும் 80 வகை உயிரினங்கள் அழிந்து விட்டிருக்கின்றன. முழுப்பரிணாமவளர்ச்சி பெற்று அமைந்திட ஏறத்தாழ இருபது மில்லியன் ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும் தனித் தன்மை வாய்ந்த உயிரினம் ஒன்றை ஒரே நூற்றாண்டில் இழந்துவிட்ட இழிநிலை இது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்திலே இருக்கின்ற முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயத்திற்குச் செல்லுவோமேயானால் - அந்த நிலையின் அடையாளத்தை நம்மால் காணமுடிகிறது.

### அன்றும்-இன்றும்

வற்றாத ஜீவநதியான தாமிரபரணியும் சேர்வலார் ஆறும்



இணையும் இந்தப் பகுதி, இயற்கை வளத்தில் இந்தியாவிலேயே சிறந்ததெனக் கருதப்படுகிறது. இங்கே - வேங்கைப்புலி, சிறுத்தைப்புலி, கரடி, செந்நாய், கடமான், புள்ளிமான் போன்ற மானினங்கள், காட்டுப் பன்றி, முயல், சிங்கவால் குரங்கு, கருமந்தி வரையிலான குரங்கினங்கள், யானை, காட்டெருமை.

**இல. ராஜேந்திரன்**

வகைவகையான வண்ணப் பறவைகள், பாம்பினங்கள் எல்லாம் உயிர் வாழ்ந்தன.

ஆனால் இப்போது.?

'கொல்லான் புலாலை வெறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்ற குறளை அலட்சியம் செய்வோரால் வேட்டையாடப்பட்டு அவற்றில் பல உயிரினங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. புலி, சிறுத்தைகளின்எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவிட்டது.

காடுகள் அழிக்கப்படத் தொடங்கியதாலும், வேட்டை விரும்பிகள் வீரத்தனத்தாலும், பாலிடால் போன்ற விஷத்தைப் பரப்பி மிருகங்களை அழிக்க முற்பட்டதாலும் இங்கிருந்த விலங்கினங்களின் எண்ணிக்கை குறைந்தது மட்டுமல்ல, இருப்பவைகளின் நடமாட்டங்களும் மட்டுப்படத் தொடங்கிவிட்டன.

1962-ல் தோற்றுவிக்கப்பட்ட முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம், 1977-ல் இன்னும் விரிவாக்கப்பட்டது.

முன்பிருந்ததுபோல அதிக அளவில் வனவிலங்குகளின் எண்ணிக்கையைக் கூட்ட முடியாவிட்டாலும், ஓரளவுக்காவது அதிகரிக்கச் செய்யலாம் என்ற கருத்திலேயே இந்த வனத்தின் அளவு விரிவாக்கப்பட்டது தமிழக அரசால். இந்தச் சரணாலயத்தின் பரப்பளவு 567 சதுர கிலோ மீட்டராகும்.

''இப்போது இந்தக் காட்டில் நான்கு புலிகளும், நூறு யானைகளும், நூறு சிங்கவால் குரங்குகளும், கடமான் (மிளா), புள்ளிமான், செந்நாய், முயல், கரடி, ஆகியவை அதிக அளவிலும் இருக்கின்றன'' என்று நமக்குத் தெரிவித்தார் வனத்துறை அலுவலர் திரு சி. எஸ். ரங்கசாமி.

### ஆராய்ச்சி

பம்பாயில் உள்ள இயற்கை வனப் பாதுகாப்பு ஆராய்ச்சி சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஜான்சிங் இந்த முண்டந்துறை வனத்தில் தம்முடைய ஆராய்ச்சியைத் தொடங்கியிருக்கிறார். யானைகள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு, டாக்டர் பட்டம் பெற்றவரான இவர், இங்குள்ள மிருகங்களின் நடவடிக்கைகள், உணவு முறைகள், வாழ்முறை ஆகியவை பற்றி ஆராய்ந்து வருகிறார்.

இந்த வகையில் - கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த திரு. அஜய்தேசாய், மயிலாடு துறையைச் சேர்ந்த திரு.சிவகணேசன் இருவரும் அவருக்கு உதவியாக இருக்கின்றனர்.

''எப்போதும் தண்ணீர் கிடைக்கக் கூடிய வசதி, எக்காலத்திலும் நீங்காத வனப் பசுமை எல்லாம் இருந்தும்இங்கே மான்களும் குரங்குகளும் தவிர வேறெந்த வனவிலங்குகளையும் காணமுடியவில்லையே - ஏன்?'' என்றோம் அவரிடம்.

''மிருகங்களைப் பொறுத்த வரையில் வாழ்க்கைக்கான வசதிகள் இருந்தால் மட்டும் போதாது. இங்கே - பக்கத்தில் சேர்வலாற்றில் பிரம்மாண்டமான அணை கட்டும் பணி இரவு பகலாக நடைபெற்று வருகிறது. அங்குள்ள மிஷின்களின் சப்தம், அங்கு சிமெண்ட்-கப்பி போன்றவைகளை ஏற்றிச் செல்லும் லாரி-ஜீப்களின் ஓசை, மூவாயிரத்துக்கும் மேலாக அங்கு பணியாற்றுவோரின் போக்குவரத்து ஆகியவைகளால் தான். வன விலங்குகளின் நடமாட்டம் குறைந்துவிட்டது''— என்றார் திரு. ஜான்சிங்.

''கொடிய விலங்குகள் எல்லாம் இங்கிருந்தால் உங்களிடம் துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் இருக்குமே - ஏன் காணோம்?'' என்றார் ஒருவர்.


''விலங்குகள் எல்லாமே கொடியவை என்று கூறிவிட முடியாது. அவைகளிடம் நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ நம்மிடம் அவைகளும் அதுபோலவே நடந்துகொள்ளும். அவற்றை நாம் துன்புறுத்தாத வரை அவை தம்மைத் துன்புறுத்த முன்வருவதில்லை. வனவிலங்குகளைப் பாதுகாப்பதே குறிக்கோளாக கொண்ட எங்களுக்கு அவைகளுக்கேற்ப நடந்து கொள்ள முடிவதால் எப்போதும் ஆயுதம் தரித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை'' என்று சிரித்தவாறே கூறினார் திரு சி. எஸ். ரங்கசாமி.

மரங்களினடியில் ஆங்காங்கே உப்புக்கற்கள் பொருத்தப்பட்டுள்ளன; வனவிலங்குகள் அவ்வப்போது இதை நக்கிக்கொள்ளுமாம்.

ண்டந்துறை வனவிலங்குச் சரணாலயத்தில் மருத்துவத் துறையிலும் வேறு பல வகையிலும் வனவிலங்குகள் எப்படி மனிதர்களுக்கு உதவுகின்றன என்பதை ஆராய்ச்சி செய்யத் தனியொரு நிலையம் அமைக்கப் படவிருக்கிறது. வனவிலங்குகள் பற்றிய நூல் நிலையம், பொருட்காட்சி, சுற்றுலா வரும் பயணிகளுக்கு ஓய்வு விடுதி, உணவு விடுதி ஆகியவைகளும் இங்கே அமையவிருக்கின்றன.


தமிழரசு
அடுத்த இதழ் (16-12-83)
சேலம் மாவட்டச் சிறப்பிதழ்


முண்டந்துறையை ஒட்டியுள்ள தனியார் நிலம் சுமார் மூவாயிரம் ஏக்கர் இருப்பதை



வனவிரிவாக்கத்திற்காக எடுத்துக் கொள்வது பற்றியும் பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

புலிகளுக்கான தனிச் சரணாலயமாக இது உருவாக்கப்பட்டிருப்பது, இந்திய வனவிலங்குப் பாதுகாப்பு வரலாற்றில் முதன்மையான செயல்களில் ஒன்றாகும்.



இந்தச் சரணாலய எல்லைக்குள் வேட்டையாடுதல் மட்டுமல்ல; ஆண்டுக்காண்டு வெட்டுக் கூப்புகள் ஏலமிட்டு மரம்வெட்டுவதும் முழுமையாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. வனப் பாதுகாப்புச் சட்டங்கள், வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டங்கள் திருத்தப்பட்டு குற்றம் புரிபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கிடவும் வழி செய்யப்பட்டுள்ளது.

அகத்திய முனிவர் வாழ்ந்ததாகக் கூறப்படும் பொதிகை மலை இந்த வனப்பகுதியிலே தான் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் சுயவேலைவாய்ப்புக்கு உதவி

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தமது சுதந்தர நாள் உரையில் அறிவித்த திட்டமான படித்த வேலையில்லாத இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புக்கு உதவும் திட்டம், தமிழகத்தில் உள்ள 14 மாவட்டத் தொழில் மையங்களிலும் அமலாக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ. 25,000 வரை வங்கிகளிலிருந்து கடன் வசதி பெற மாவட்டத் தொழில் மையம் உதவி செய்யும். இதற்கு வைப்புத் தொகையோ அல்லது பங்குத் தொகையோ செலுத்த வேண்டியது இல்லை. தொழிலார்வம் மட்டும் இருந்தால் போதும். படித்து வேலையில்லாமல் இருக்கும் 18-35 வயதுள்ள ஆண்-பெண் யாரும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் விவரங்கள் வேண்டுவோர் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளரை அணுகவும்.

## பணியும் படிப்புமே வாழ்க்கை !

சோவியத் மக்கள் தொகையில் 1981-1990ஆம் ஆண்டுகளில் திடகாத்திரமானவர்களின் அளவு இதற்கு முந்தின பத்து ஆண்டுகளைவிடக் கால் பங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டு ஒன்றுக்குப் பத்து இலட்சம் பேர் வீதம் அதிகரித்து வரும் பென்ஷன்தாரர்களின் தொகையும் மேலும் வேகமாக அதிகரிக்கும். 1920 ஆம் ஆண்டுகளிலும் 1930 ஆம் ஆண்டுகளிலும் பிறந்தவர்கள் 1981-90 காலகட்டத்தில் பென்ஷனுடன் ஓய்வு பெறுவார்கள்.

வழக்கமாகப் பெண்கள் செய்துவரும் சுலபமான தொழில்கள், மற்றும் உணவுத் தொழில் போன்றவற்றில் மட்டுமின்றி மற்றத் தொழில் துறைகளிலும் இப்பொழுது பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். 1950-80 ஆம் ஆண்டுகளுக்கிடையே விஞ்ஞானத் துறையிலும், அதற்கு உதவியான துறைகளிலும் பணிபுரியும் பெண்கள் தொகை பத்து மடங்கு அதிகரித்தது. 1979ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, 1959ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, குடும்ப வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களின் தொகை 20ல் ஒரு பங்காகக் குறைந்து விட்டது.

இப்பொழுது திடகாத்திரமான சோவியத் மக்கள் அனைவரும் வேலை அல்லது படிப்பில் ஈடுபட்டுள்ளனர். இப்பொழுது பணிபுரிவோர் மற்றும் மாணவர்களின் தொகை திடகாத்திரமான சோவியத் மக்கள் தொகையில் 92 சதவிகிதமாகும். 1959-ல் இது 82 சதவிகிதமாகவே இருந்தது.

## விற்பனை வரி ஆலோசனைக் குழுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில விற்பனை வரி ஆலோசனைக்குழு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களின் பிரதிநிதிகளான 60 பேரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது:—

1. வர்த்தக சபைகள் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் ... 30
2. தனிப்பட்ட பேரவை உறுப்பினர்கள் 18
3. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள். 6
4. சட்டமன்ற மேலவை உறுப்பினர். 1
5. அரசு தரப்பு உறுப்பினர்கள் ... 5

... 60

மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் நான்காவது கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் 11-10-83-ஆம் நாளன்று நடைபெற்றது. இக்குழுவின் பதவி வழி உறுப்பினராயுள்ள மாண்புமிகு ஊரகத்தொழில்கள் அமைச்சர் திரு. ஆர். அருணாசலம் அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர், வணிகவரி ஆணையர், வணிக வரித்துறையின் துணை ஆணையர்கள், மற்றும் இதர அரசுச் சார்பு அலுவலர்கள் ஆகியோர் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட பொருட்கள் விவாதிக்கப்பட்டன. விவாதிக்கப்பட்ட பொருட்களுள், விற்பனை வரியின் மீதான கூடுதல் விற்பனைவரி மற்றும் மேல் வரியினை நீக்க வேண்டுமெனப் பெரும்பாலான உறுப்பினர்கள் வற்புறுத்தினர். ஒருமுனை வரி விதிப்பின் கீழ் இன்னும் அநேக பொருட்களைக் கொண்டு வரவேண்டியதன் தேவையை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

மேற்கண்ட வேண்டுகோள்கள் யாவும் அரசினால் பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் தமது முடிவுரையில் தெரிவித்தார். வரி விதிப்புச் சட்டங்களை அமல்படுத்துவதிலும், வணிக வரிகளை வசூலிப்பதிலும், முழுமையான ஒத்துழைப்பினை நல்குமாறு வர்த்தகர்களையும் அலுவலர்களையும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.





## நலிந்தோருக்கு நல்வாழ்வு

தமிழக அரசு, நிதிநிறுவனங்கள் துறை என்னும் புதிய துறை ஒன்றை அண்மையில் உருவாக்கியுள்ளது. அதன் சார்பில், சமுதாயத்தில் நலிந்தோர்க்குக் கடன் உதவி வழங்கும் விழா 26-10-'83 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், தலைமையில் சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காமராஜர் திடலில் நடைபெற்றது.

வருகை புரிந்தோரை வரவேற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''அவதியுறும் மக்களின் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்பதற்காகவும் வசதி வாய்ப்புப் பெற வேண்டும் என்பதற்காகவும் மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றன.

''பண உதவிகள் மக்களுக்குச் சேர்க்கப்படுவதற்குத் தனி நிறுவனம் இருந்தால்தான் கடன்களை எளிதில் வழங்க முடியும் என்பதற்காக நிதிநிறுவனங்கள் துறை 16-7-83ல் தொடங்கப்பட்டது.

''அதன் பெருமுயற்சியின் காரணமாகப் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. பல்வேறு அரசுத் துறைகள்-வங்கிகள் ஆகியவற்றிற்கும் மக்களுக்கும் இடையே ஒருங்கிணைந்த அமைப்பாக இது பணியாற்றுகிறது.

''1-9-83 முதல் 30-9-83முடிய ஒரு மாதத்துக்குள், 48 தேசிய மய வங்கிகளின் மூலமும் பிற வங்கிகள் மூலமும், 37 கோடியே 76 லட்சம் ரூபாய், 16 மாவட்டங்களிலும் உள்ள நலிந்தோர் நல்வாழ்வுக்குக் கடன் உதவிகளாக வழங்கப்பட்டுள்ளன''.

அடுத்து, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவரும், தமிழ்நாடு முன்னோடி வங்கித் திட்டத்தின் அமைப்பாளருமாகிய திரு. பி.பி. சீனிவாசன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இந்த நாட்களில், அரசுக்கும் வங்கிகளுக்கும் நல்ல வகையான தொடர்பு இருந்து வருகிறது. இன்றைய தினம் ஏறக்குறைய 15 ஆயிரம் பேருக்குக் கடன் உதவி வழங்கப்படுகிறது. இங்குத் திரண்டிருக்கும் இந்த மாபெரும் கூட்டமே, தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிந்தோருக்குத் தக்க உதவிகளைச் செய்து தருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.''




அடுத்து, இந்தியன் வங்கியின் தலைவர் திரு எம். ஜி. கே. நாயர் குறிப்பிட்டார்:

''எங்கள் வங்கியின் மூலமாக ஆசிரியப்பெருமக்களுக்கு நாங்கள் உதவி செய்து வருகிறோம். மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் நாங்கள் உதவி செய்கிறோம்''



அடுத்து, பாரத ஸ்டேட் வங்கி பொது மேலாளர் திரு கே. டி. நய்யார் குறிப்பிட்டார்:

''கடந்த 2 மாதங்களில் மட்டும் சென்னை நகரில் வசதி குறைந்தவர்கள் 2000 பேருக்கு நாங்கள்



# புதுக்கோட்டையில் பல்துறைப் பணி விளக்க விழா

மத்திய மாநில அரசுகளின் சார்பில் மக்களின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு நலத் திட்டங்கள் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் பயன்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் திட்டங்களால் பயன்பட்ட மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கான முனைப்பு இயக்கங்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு முன் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டன. பத்தாண்டுகளாக நிறுத்தப்பட்ட அந்தப் பல்துறைப்பணி விளக்க இயக்கம் மக்கள் நன்மையைக் கருத்தில்கொண்டு, மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது.

காலத்தால் தொன்மையும், கலைவளத்தால், பொலிவும், பெற்றுள்ள புதுக்கோட்டை நகரில் கடந்த 21.10.'83 அன்று மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து நடத்திய பல்துறைப் பணி விளக்க இயக்கத்தின் தொடக்க விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. புதுகை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. விழாவுக்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கலந்து கொண்டார்கள். மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம.வீரப்பன் அவர்கள், இந்த இயக்கம் மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்தும், ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் உரையாற்றினார்.

நாதசுவர இசையுடன் விழா தொடங்கியது. புதுக்கோட்டை மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் திரு எல்.ரெங்கபாஷ்யம், துவந்திருந்த அனைவரையும் வரவேற்றார். விழாவில் பங்குபெற்ற செய்திமக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.சி.என். கிருஷ்ண பாரதி, இ.ஆ.ப தனது உரையில் குறிப்பிட்டதாவது:-


''புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு வார காலமாக மத்திய அரசு மாநில அரசுகளின் சார்பில் பல்துறைப் பணி விளக்க இயக்க விழா நடைபெறுகிறது. நமது நாட்டில் எத்தனையோ திட்டங்கள்-அரசின் எத்தனையோ சாதனைகள் மக்களுக்கு நல்வாழ்வு அளித்து வருகின்றன. இவைகளையெல்லாம் மக்கள் மத்தியில் சிறந்த முறையில் எடுத்துச்சொன்னால்தான் அவர்கள் அந்தத் திட்டங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு நமக்கு ஒத்துழைப்பு தருவார்கள். இத்துடன் அவர்கள் தரும் அந்தத் திட்டத்தின் பயன்களை நன்கு அனுபவிக்க முடியுமென்ற கருத்தின் அடிப்படையில், இதுபோன்ற பிற்பட்ட மாவட்டத்தில்-இதுபோன்ற அரசின்பணிகள் பல நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்வேறு துறையினர் தங்களது பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றை எல்லாம் ஓரளவிற்குப் படித்தவர்கள், ஓரளவிற்கு விவரம் தெரிந்தவர்கள், பத்திரிகை மூலமாகவும் மற்ற செய்தியறிவிப்புச் சாதனங்கள் வாயிலாகவும் அவர்கள் தெரிந்து கொண்டால் கூட பாமரமக்கள் கிராமத்தில் உள்ள படிப்பு அறிவு இல்லாத மக்கள், விவசாயிகள். தொழிலாளர்கள் இவர்கள் எல்லோரும் கூட அரசுசெய்கின்றஒப் பற்ற பணிகளைப்பற்றித்தெரிந்து கொள்கின்ற நிலை இன்றைக்கு வந்திருக்கின்றது. ஏனெனில் இன்றைக்கு நாம் புதிய உலகத்தில் புரட்சி சகாப்தத்தில் புகுந்திருக்கின்றோம் என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. கடைநிலையில் இருப்பவர்களுக்குக்கூட அரசின் எல்லா உதவிகளும் கிடைக்க வேண்டும் என்கின்ற திட்டத்தை இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசு செய்து கொண்டு வருகின்றது என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கின்றோம்.


கடந்த மூன்று ஆண்டுகளாகக் கிராமப் பகுதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வரும் 'தன்னிறைவுத் திட்டங்கள்' மிகவும் புரட்சிகரமான திட்டங்கள் தன்னிறைவுத் திட்டங்களின்கீழ் மக்களுக்குத் தேவையான-அத்தியாவசியமான வசதிகள் அனைத்தும்செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. அரசு ரூபாய் 300 கோடி வரை செலவு செய்திருக்கின்றது. இதுபோன்ற பல திட்டங்களைப் பொருளாதாரத்தில் குறைந்த, வறுமைக்கோட்டில் இருக்கும் மக்களுக்காகச் செய்து வருகின்றோம். மிகவும் நலிந்த நிலையிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம்.

இதற்கெல்லாம் மேலாக, நம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், சத்துணவுத் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இப்போது சத்துணவுத் திட்டம் சிறப்பாக நடைபெற்றுவருவதை நாம் காணலாம். 65 இலட்சம் குழந்தைகள் இதனால் பயன்பட்டு வருகின்றார்கள். இந்த அரசு உணவு கொடுப்பதோடல்













கடன் உதவி செய்திருக்கிறோம்''.

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''உழைக்கும் தன்மையும் அறிவாற்றலும் நேர்மைப் போக்கும் உள்ள இளைஞர்கள் தொழில் நடத்த முன் வந்து, நிதி நிறுவனங்களிடமிருந்து பணம் கடனாகப் பெற முயன்றபோது, உங்களுக்கு எவ்வளவு சொத்து உள்ளது, எந்த அடிப்படையிலே நீங்கள் பணத்தைத் திருப்பிச் செலுத்துவீர்கள் என்று கேட்கப்பட்டார்கள். 10 ஆயிர ரூபாய் கடன் கேட்பவர்களிடம் 15 ஆயிர ரூபாய் மதிப்புள்ள சொத்து உங்களுக்கு இருக்கிறதா, அப்படி இருந்தால்தான் கடன் கொடுக்க முடியும் என்று சொல்லப்பட்டது. நான் முதல்வராகப் பொறுப்பேற்ற சமயத்தில் இப்படிப்பட்ட நிலையைக் கண்டு வியப்படைந்தேன். தொழில் நடத்த விரும்புபவர்களிடத்தில் நம்பிக்கை இல்லை என்ற சூழ்நிலை - இத்தகைய அவநம்பிக்கை ஏன் ஏற்பட்டது என்று சிந்தித்தேன். துணிந்து ஒரு காரியத்தில் ஈடுபட்டேன். நல்ல எண்ணமும், உழைப்பும், தன்னம்பிக்கையும், திருப்பித் தர வேண்டும் என்ற நல்லுணர்வும் உள்ளவர்களுக்கு, சொத்து இருக்க வேண்டும் என்ற நிலை தேவையில்லை; கடன் கொடுக்கலாம் என்று சட்டம் போட்டேன்.

''47 வங்கிகள் ஒருங்கிணைந்து கடன் உதவியும் நிதி உதவியும் செய்ய முன் வந்திருக்கின்றன. இந்நிதி அளிப்பு விழாவில் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''நிதி உதவியைப் பெற்றவர்கள் உரிய காலத்தில் திருப்பிக் கொடுத்தால்தான் அந்த நிதியை தேவைப்படும் மற்றவர்களுக்கு வழங்க முடியும் . கடனை வாங்கியவர்களுக்கு - திருப்பித் தரும் பொறுப்பும் இருக்கிறது.

''இந்த நாட்டுக் குழந்தைச் செல்வங்களின் நலனைச் சிந்தித்துப் பார்த்து, அவர்களின் எதிர்காலத்தைச் சிந்தித்துப் பார்த்து - அவர்களின் மகிழ்ச்சியை எதிர்நோக்க வேண்டும். இந்த மகிழ்ச்சி நூற்றாண்டுகளுக்கு ஏற்படும்படிச் செய்ய வேண்டும்.''

விழாவைத் தொடங்கிவைத்த மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு பிரணாப் குமார் முகர்ஜி தமது உரையில் தெரிவித்தார் :

''இன்றைக்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் முக்கியமான 14 வங்கிகள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் - நாட்டுடைமையாக்கப்பட்டன. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உதவி செய்யப்பட வேண்டும் என்பதுதான் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்குரிய அடிப்படை நோக்கம் ஆகும்.

''சாதாரண மனிதர்களின் தேவைகளை வங்கிகள் பூர்த்தி செய்யும் என்ற நோக்கத்தில்தான் பிரதமர் அவற்றை நாட்டுடைமையாக்கினார்.

''ஒருவருக்குத் திறமை இருந்தால் - அனுபவம் இருந்தால்—அவை மதிக்கப்பட்டு இன்று அந்த நபருக்கு வங்கிகளின் மூலம்கடன் உதவி அளிக்கப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பு - இப்படிப்பட்ட நிலையை எவரும் கற்பனை செய்துகூடப் பார்த்திருக்க முடியாது.

''தமிழகத்தில் நிதி நிறுவனங்கள் துறை என்னும் புதிய நிறுவனம் தொடங்கப்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இதைத் தொடங்குவதற்கு வழிவகுத்த தமிழக முதல்வர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

''கடன் உதவி பெறுவதற்கு ஏற்படும் தாமதங்களைத் தடுக்க-இன்னல்களை இல்லாமல் செய்ய தமிழக முதல்வர் உருவாக்கியுள்ள இந்தத் துறை மிகவும் பயன்படும் என நம்புகிறேன்.''

நிதி நிறுவனங்கள் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு வி. சுந்தரம் இ.ஆ.ப. நன்றி கூறினார்.

இந்த விழாவின்போது, இட்லி வியாபாரம் செய்வோர், கூடை பின்னுவோர், மீன் வியாபாரம் செய்வோர், பெட்டிக்கடை நடத்துவோர் என மொத்தம் 15 ஆயிரத்து 630 பேர்களுக்கு வங்கிகளின் மூலம் 200 ரூபாய் முதல் 3 ஆயிரம் ரூபாய் வரை மொத்தம் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டது.

நலிந்தோர் அகமும் முகமும் மலர்ந்து - ஆனந்தக் கூத்தாடிய காட்சி எவரையும் மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**

**தமிழ்ப்பித்தன்**

லாமல் அவர்களை எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக உருவாக்கும் சிறந்த திட்டங்களைக் கொண்டுள்ளது. அந்தத் திட்டத்தின் வாயிலாகக் கல்வியோடு தொழிற்கல்வியையும் இணைத்து படித்துப் பயன்பெற வேண்டும் என்ற திட்டத்தையும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். கிராம மக்களுக்கிடையே புதிய நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதற்காக, குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை நல்கிடும் அற்புதமான திட்டத்தினைக் கொண்டுவந்துள்ளோம்.



அதை இன்றைக்கு எல்லோருக்கும் அதிகமாகத் தெரியப்படுத்த வேண்டும். இதனை மத்திய அரசும் மாநில அரசும் இரண்டும் இணைந்து செய்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தைத் தேர்ந்து எடுத்து 13 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் ஒரு வார காலமாகச் செயல்படுத்தப்படும். ஒரு நாளைக்கு 36 படக்காட்சியை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றோம். 36 கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வளர்ந்துவரும் சாதனைகள் பற்றி மக்கள் அறிகின்ற வகையில் செயலாற்ற இருக்கின்றோம். மத்திய அரசின் நடமாடும் பொருட்காட்சி ஒன்று இடம்பெறுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தின் மக்களிடையே ஒருவித விழிப்புணர்ச்சியையும், ஏற்படுத்த வேண்டும். நமக்காக உருவாகியுள்ள பல்வேறு புதிய திட்டங்களையெல்லாம் நாம் தெரிந்து கொண்டால்தான் நாம் பயன்பெற முடியும் என்பதோடு, நாம் அவைகளுக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு தரவேண்டும்.

ஒருவார காலத்திலே மக்களிடத்திலே ஒரு புதிய உத்வேகம் ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் பல்துறை இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஒருவார காலத்தில் இதன் சிறப்புத் தெரிந்து கொள்ள முடியும். இதனை தொடர்ந்து பின்பற்றுகின்ற வகையில் எல்லா ஊர்களிலும், சிறிய சிறிய ஊர்களிலும் கூட நம்முடைய திட்டங்களைப்பற்றி தெரிந்து கொள்வதற்காக சிறிய கையேடுகள், சிறு சிறு புத்தகங்கள் -சுவரொட்டிகள்-வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். இது ஒரு மக்கள் தொடர்புத் திட்டம்'' என்று எடுத்து விளக்கினார்.

திருமயம் சட்டப் பேரவை உறுப்பினர் திரு.என்.சுந்தரராஜ் பேசுகையில், ''மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து எங்களது மாவட்டத்தில் 'மல்டி மீடியா' இயக்கம் துவக்கப்பட்டுள்ளதைப் பாராட்டுகின்றேன். நாம் போடுகின்ற திட்டங்கள் சாதாரண மக்களுக்குப் போய் சேர வேண்டும். அந்த வகையில் நாம் போடுகின்ற திட்டங்கள் அமைய வேண்டும். இந்தியப்பிரதமரின் 20 அம்சத் திட்டம் மாநில அரசுமூலம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இனி துவக்கப்படும் தொழில்களில் இந்தப் பின்தங்கிய மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முதலிடம் அளிக்க வகை செய்ய வேண்டும்.'' என்று கேட்டுக்கொண்டார்.

குளத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு.த.மாரிமுத்து பேசுகையில், ''மத்திய, மாநில அரசு இணைந்து செயல்படுத்தி வரும் பல்துறைப் பணிவிளக்க இயக்கம் மீண்டும் செயல்படுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றோம், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கொண்டுவந்துள்ள சத்துணவுத் திட்டத்தின்மூலம், சாதி மத பேதம் ஒழிக்கப்பட்டு அனைவரும் ஒரு குடும்பத்தில் பிறந்தவர்களாகக் கருதி வருகின்றோம். காந்திய லட்சியங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பவர் புரட்சித்தலைவர் அவர்கள். அரசு தீட்டும் திட்டங்கள் சாதாரண மக்கள் ஏற்றுக் கொள்கின்ற நிலைக்கு வரவேண்டும். கிராம மக்கள் முன்னேற்றம் அடைய இந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அரசு தீட்டும் திட்டங்களுக்கு அரசு ஊழியர்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

ஆலங்குடி சட்டப்பேரவை உறுப்பினர் திரு பெ. திருமாறன் பேசுகையில், ''இந்த அரசு ஏழை எளிய மக்கள் நல்வாழ்வுக்காக, தண்ணிறைவுத் திட்டம், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் போன்ற அற்புதமான திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துகிறது. புரட்சித்தலைவரின் தலைமையிலான அரசை இதற்காக நான் பாராட்டுகிறேன். பின் தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை பொலிவுடன் சிறந்து விளங்கிவருகின்றது என்பதை நாம் காண்கின்றோம்'' என்று குறிப்பிட்டார்.



புதுக் கோட்டை சட்டப் பேரவை உறுப்பினர் திரு.ராஜ்குமார் ஆர். விஜயரகுநாத தொண்டைமான் பேசுகையில், ''புதுக்கோட்டை மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருந்து வந்தது. இன்றைக்குப் புதுக்கோட்டையின் சரித்திரத்திலே - வளர்ச்சியிலே பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாளாகும். மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்பட்டு, திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன என்பதை எடுத்துக்காட்டவே இந்த இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை வளர்ச்சியில் உண்மையாகவே உளப்பூர்வமாக அக்கறை எடுத்து வருகின்றது இந்த அரசாங்கம் இந்த மக்களுக்கு என்ன செய்திருக்கின்றது. என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறி, அரசு செய்கின்ற நல்ல திட்டங்களிலே மக்களும் பங்கு பெற்றுஅதனை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த இயக்கத்தின் இலட்சியமாகும்.

மத்திய அரசு கொண்டுவரும் எந்தத் திட்டமானாலும், அதனைச் சிறப்புற நிறைவேற்றுவதில், முதல் இடம் வகிப்பது 'தமிழக அரசு' தான். மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுப்பது தமிழக அரசுதான். இங்குதொடங்கப்பட்டுள்ள திட்டங்கள் கிராமத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அப்படிப் போய்ச் சேர்ந்தால்தான் அவர்களது வாழ்க்கை வளரும். இத்திட்டம் நிறைவேற்ற அவர்களுக்கும் பங்கு இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

"நமது மாண்புமிகு முதல்வர் இது புதுகோட்டைக் காங்கிரஸ் எம்.எல்.ஏ. தொகுதி, இது சுயேச்சை எம்.எல்.ஏ.தொகுதி, என்று பாராமல் தம்முடைய வளர்ச்சித் திட்டம் எங்கெல்லாம் செய்யவேண்டுமோ அங்கல்லாம்லாம் பாரபட்சம் எதுவுமில்லாமல் செய்துவருகிறார். அதனை நான் பாராட்டுகின்றேன். தமிழக அரசு மக்கள் நன்மைக்காக உண்மையிலேயே செயல்படுகின்றது. நல்ல திட்டங்களைச் செயல்படுத்திய காரணத்தினால்தான் புதுக்கோட்டை பல வழிகளில் வளர்ச்சி அடைந்துள்ளது'' என்று குறிப்பிட்டார்.

மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறைத் துணைத் தலைமைச் செய்தி அலுவலர் திரு.டி. ஜி. நல்லமுத்து பேசுகையில், ''இந்த நல்ல இயக்கத்திற்கு மக்கள் அனைவரும் ஒருமனதுடன் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் இயக்கம் வெற்றி பெறும். மத்திய, மாநில அரசின் கூட்டு முயற்சியுடன் நடக்கின்ற இந்த இயக்கம் இந்த மாவட்டத்திற்கு மட்டுமல்ல, மாநிலத்திற்கும் இந்தியாவிற்கும் சிறந்த முன்னோடியாக அமையும் என்பதில் ஐயமில்லை'' என்று குறிப்பிட்டார்.

மத்திய அரசின் களவிளம்பர இயக்குநர்அகமண்டல அலுவலர் திரு எம்.பி.ராஜா பேசுகையில், ''இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக அனைத்துத் தரப்பினர்களுக்கும், போய்சேருகின்ற அளவுக்கு இதன் பணி அமைய வேண்டும்; அமையும் என்ற நோக்கத்துடன்தான் இதனை மீண்டும் கொண்டுவந்துள்ளோம். இதற்கு மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆர்.கற்பூரசுந்தரபாண்டியன். இ.ஆ.ப. உரையாற்றுகையில், ''மத்திய அரசும் மாநில அரசும் பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வந்தாலும் அந்தத் திட்டங்கள் உண்மையாக மக்களுக்குப் போய்ச் சேருகின்றதா, அந்தத் திட்டத்தின் நோக்கங்கள் அனைத்தும் எய்தப்படுகின்றதா, என்பதை அறிவதற்கு இதுபோன்ற இயக்கம் உதவிகரமாக இருக்கின்றது. இங்குத் தொடங்கப்பட்டுள்ள பல்துறைப் பணி விளக்க இயக்கம் 1972ல் நிறுத்தப்பட்டு இப்போது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

மத்திய மாநில அரசுகளின் அனைத்து விளம்பர இயக்கங்களும் பல்துறைப் பணி விளக்கத்தில் கலந்து கொண்டு சிறப்பாகப் பணி ஆற்றுகின்றார்கள். அகில இந்திய வானொலி, சென்னை தொலைக்காட்சி, இந்திய அரசு திரைப்படப் பிரிவு, தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை போன்ற பல்வேறு விளம்

பரப் பிரிவுகள இநத இயக்க வாரத்தில் பங்குபெற்றுள்ளன.

மாவட்டத்தில் வளர்ந்துவரும் சாதனைகளைப் பற்றி மக்கள் அறிகின்ற வகையில் இவை அனைத்தும் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இந்தியப் பிரதமரின் 20 அம்சத்திட்டமும், முதல்வரின் சத்துணவுத்திட்டமும், தன்னிறைவுத்திட்டமும் அமலாக்கப்பட்டு வருகின்றன. இது நமது மாநிலத்தில் பல்வேறு கிராமங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் எப்படிக் கிராம மக்களுக்குப் போய்ச் சேருகின்றது, எவ்வாறு மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள் என்பதை அறிய ஓர் அளவுகோலாக இந்த இயக்கம் அமைந்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 450 கிராமங்களிலும் 13 ஊராட்சி ஒன்றியங்களிலும், கிராமங்களிலும், பல்வேறு ஊர்களிலுமாக இந்த இயக்கம் நடத்தப்படுகின்றது. நிலவுடைமைமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப்பட்டாக்களும், நலிந்த பிரிவினர்களுக்கு வங்கிக்கடன் உதவிகளும், ஏழை விவசாயிகளுக்கு இலவச வேட்டி சேலைகளும், தொழில் தொடங்குவதற்குக் கடன் உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் திட்டமானாலும் சரி, மாநில அரசின் திட்டமானாலும் சரி எதுவாக இருந்தாலும், மக்களின் பங்கு, ஒத்துழைப்பு, ஆதரவைப் பொறுத்துதான் அந்தத் திட்டம் வெற்றி பெற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள 600 குடும்பங்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு வேளாண்மை, கால்நடை, சிறு பாசனம், சிறுதொழில்கள் சம்பந்தமான உதவிகள் வழங்கப்படுகின்றன. உதவிகள் மட்டுமல்லாமல், அரசு மானியமும், வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று 6,500 பேருக்கு 127 இலட்ச ரூபாய் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்கள் இதன் பலனைப் பெற்றார்கள். நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 60,906 பேருக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய மாநில அரசின் சார்பில் பல்துறையினரும் பங்கு பெற்றுள்ளனர். விழாவிற்கு சிறப்பாக ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை மாவட்ட மக்கள் தொடர்புத்துறை அலுவலர் திரு. டி.பி.எஸ். சுந்தரநாதன் நன்றி கூறினார்.

பல்துறைப்பணி விளக்க இயக்கத்தின் விழாமூலம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்துத் தரப்பட்ட மக்களிடையே புதிய பொலிவும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**
**ஜி. ஆனந்தன்**

## மதுரையில் ஆதிதிராவிடர்களுக்குக் கூட்டுறவு விநியோகக் கடைகள்.

மதுரையில் 'மதுரை நகர ஆதிதிராவிடர் கூட்டுறவுச் சங்கம், 25 ஆயிரம் ஆதிதிராவிட வகுப்பினருக்காக 3 நியாய விலைக்கடைகளை நடத்துகிறது. கறுப்புச் சந்தைகள் இனி மேல் ஆதிதிராவிட வகுப்பினரைச் சுரண்ட முடியாது.

இந்தக் கூட்டுறவுச் சங்கம் 1948ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மதுரை மாநகராட்சி எல்லைக்குள் 5942 ஆதிதிராவிடர் குடும்பங்கள் உள்ளன. இந்தச் சங்கத்தின் மொத்த உறுப்பினர் தொகை 2442; சங்கத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் 2,47,000 ரூபாய்.

துவக்கத்தில் இந்தச் சங்கம் ஆதிதிராவிட வகுப்பினருக்குக் கடனுதவி செய்து வந்தது.

மதுரை, சாத்தமங்கலத்தில் இந்தச் சங்கம் 13 செண்ட் நிலம் வாங்கி இருக்கிறது. இங்கு மூன்று மாடிக் கட்டடம் ஒன்று கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்டடத்திற்கு மொத்தம் 6.5 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையைக் கடனாகக் தரத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் முன் வந்துள்ளது.

ஆதிதிராவிட வகுப்பினருக்கு உறுதிப் பத்திரத்தின் பேரில் கடன் வழங்குவதன் மூலம் கடன் வழங்குவோர் பிடியிலிருந்து அவர்களை மீட்க இந்தச் சங்கம் உதவுகிறது. இந்தச் சங்கம் பிரபலமாகி வருவதை, அதன் உறுப்பினர்களும், சொத்துக்களும் வளர்ந்து வருவதிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

### நிலக்கரித் தொழில் வளர...

எண்ணெய்க்குக் கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில், நிலக்கரித் தொழிலைத் தீவிரமாக வளரச் செய்வது இந்திய அரசின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

நிலக்கரி உற்பத்தியை, 1980-81-ஆம் ஆண்டில் இருந்த 11.4 கோடி டன்னில் இருந்து, 1984-85-ஆம் ஆண்டில் 16.5 கோடி டன்னாக உயர்த்த இந்தியாவின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. புதிய நிலக்கரிப் படிவங்களைக் கண்டுபிடிக்கவும் தீவிர முயற்சி செய்யப்படுகிறது.

# உடல் நலம் காக்கும் சத்துணவுத்திட்டம்



டாக்டர் விருது பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தமிழ்த் திரைப்பட உலகின் சார்பில் சென்னையிலுள்ள நேரு விளையாட்டரங்கில் (20-11-83) பிரம்மாண்டமான அளவில் பாராட்டு விழா நடைபெற்றது.

திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா. தலைமையில் நடைபெற்ற விழாவில் நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன் எம்.பி. அவர்களும் மற்றும் கலையுலகப் பிரமுகர்களும் பாராட்டுரை வழங்கினார்கள். விழா முடிவில், தமிழக முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காகத் திரைப்பட உலகின் சார்பில் முதல் தவணையாகப் பத்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

விழாமேடையிலிருந்தோரையும், லட்சோபலட்சம் பார்வையாளர்களையும் வியப்பினாலே மெய்சிலிர்க்கச் செய்யும் நிகழ்ச்சியொன்று மேடையிலே நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, சிறப்புறச் செயல்படுத்திவரும் சத்துணவுத் திட்டத்தால் படிக்கவரும் குழந்தைகளின் எண்ணிக்கை பெருகியிருப்பது நாடறிந்ததாகும். ஆனால்சத்துணவுத் திட்டத்தாலே, ஊனமுற்ற குழந்தைகள் சிலர் உடல் நலிவு நீங்கினர் என்பது மிகச் சிலருக்கே தெரியும்.

பெற்றோரால் கொண்டுவரப்பட்ட அத்தகைய குழந்தைகள் அனைவரும் அந்த விழா மேடையிலே ஏற்றப்பட்டு எல்லோருக்கும் காட்டப்பட்டனர். அவ்வக் குழந்தைகளின் பெற்றோர்களே, சத்துணவு உண்ணுமுன் அந்தக் குழந்தை எப்படி ஊனமுற்றிருந்தது, உண்டபின் எப்படி நலம் பெற்றிருக்கிறது என்பதை ஒலி பெருக்கியிலே தாங்களே அறிவித்தார்கள்.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட குழந்தைகள் பற்றிய விவரம் இங்கே தொகுத்தளிக்கப்படுகிறது.

**புதுக்கோட்டை மாவட்டம்**

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மரவப்பட்டி - அகரப்பட்டியைச் சேர்ந்த திரு காத்தலிங்கம் என்பாரின் நான்கு வயதுக் குழந்தை கா.வீரய்யா, இளம் பிள்ளை வாத நோயினாலே துன்பப்பட்டுவந்தான். 1.7.82ல் சத்துணவு மையத்தின் மூலம் உணவுண்ணத் தொடங்கிய அவன், அதன் மூலம் பெற்ற ஊட்டச் சத்தாலும், சத்துணவு மைய அமைப்பாளராலும் இப்போது ஊனம் நீங்கி நல்லபடியாக நடக்கத் தொடங்கியிருக்கிறான்.

அதேபோல அந்நோயால் பாதிக்கப்பட்டிருந்த வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு மாணிக்கம் என்பாரின் நான்கு வயதுச் சிறுமி மா.பத்மாவும் சத்துணவு மையத்தின் தனிக் கவனிப்பால் இப்போது நலம்பெற்று நடக்கிறாள்.

**திருச்சி மாவட்டம்**

திருச்சி மாவட்டத்திலே மட்டும் - உறையூரைச் சேர்ந்த திரு. அமாவாசையின் மூன்று வயது மகள் சித்ரா, திரு. தவுலத்தின் மகன் ஹக்கிம், தென்னூரைச் சேர்ந்த திரு. மணியின் மகன் ரஜினி, திருச்சி திரு. பலராமன் மகள் அனுசூயா, திரு. பாலகிருஷ்ணனின் நான்கு வயது மகன் செல்வம் ஆகிய ஐந்து குழந்தைகளும் இளம்பிள்ளை வாதத்தாலே இன்னலுற்று வந்தனர். இவர்கள் சத்துணவு மையங்களிலே சேர்க்கப்பட்டு சரிவரக் கவனிக்கப்பட்ட பின்னாலே வாதநோய் நீங்கி வகையுற நடக்கிறார்கள்!

மகள் புவனேஸ்வரி, திரு. ரங்கராசுவின் மகள் இராணி, திரு. இராசுவின் மகள் சாந்தி, திரு. சாமிநாதன் மகள் செல்வி ஆகியோர் சத்துக் குறைவினாலே எலும்பும் தோலுமாக இருந்தார்கள். சத்துணவு மையங்களின் மூலம் சாப்பிட்ட பிறகோ அவர்களெல்லாம் ஊட்டம் பெற்று உற்சாகத்தோடு காணப்படுகிறார்கள்.

திருச்சியைச் சேர்ந்த திரு. பஞ்சநாதன் என்பாரின் இரண்டு வயது மகன் சந்திரனோ பிறந்தது முதலே வாய் பேசாமலிருந்தவன், தொடர்ந்து சத்துணவு சாப்பிட்டதனாலும் அமைப்பாளரின் தனிக்கவனத்தாலும் இப்போது பேசும் சக்தி பெற்றிருக்கிறான்.

பெற்று இப்போது பரிபூரணமாக நலம் பெற்றிருக்கிறான்.

**மதுரை மாவட்டம்**

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருநகரிலுள்ள திரு. ராஜராம் மகள் விஜயகுமாரி, செல்லூர் திரு. பாண்டியின் மகன் சுப்பிரமணியன், பெரியகுளத்தைச் சேர்ந்த திரு. காதர்பேக் மகன் முபாரக் ஆகிய மூவருக்குமிருந்த இளம்பிள்ளை வாதம் சத்துணவு மைய உணவாலும், அமைப்பாளர்களின் கவனிப்பாலும் தடம் தெரியாமல் மறைந்து அவர்களனைவரும் நலமாக இருக்கின்றனர்.

செல்லூர் திரு. அமர்சிங்கின் நான்கு



**தெ. ஆ. மாவட்டம்**

தென்னார்க்காடு மாவட்டம் கிழக்கு ராமபுரத்தைச் சேர்ந்த திரு. வீரப்பனின் மகள் வீரம்மாளுக்கும், கடலூரைச் சேர்ந்த திரு. மணியின் மகள் அருள் ஜோதிக்கும் இருந்த இளம்பிள்ளை வாதநோய் அவர்கள் சத்துணவு மையத்தில் சேர்ந்து சாப்பிட ஆரம்பித்த பின்னாலே குணமாகியிருக்கிறது.

கெங்கப்ப நாயக்கன் குப்பத்தைச் சேர்ந்த திரு. கலியன் மகன் வீரக்குமார் இரத்தச் சோகையினாலே அவதிப்பட்டுவந்தான். சத்துணவு உண்டதனாலே நாளடைவில் குணம்

வயது மகன் இராமு, கால் நடக்க இயலாமலும் வாய் பேசமுடியாமலும் இருந்தான். 15.9.'82ல் சத்துணவு மையத்திலே சேர்க்கப்பட்ட பிறகு இப்போது தெம்போடு நடப்பது மட்டுமல்ல; தெளிவோடு பேசவும் செய்கிறான்.

இந்தக் குழந்தைகளெல்லாம் அந்த அலங்கார மேடை மேலே கொண்டுவந்து காட்டப்பட்டபோது அவர்களைப் பார்த்த எவர் கண்ணிலும் சயாடவில்லை. ''சத்துணவுத் திட்டம் உள்ளபடியே புத்துணர்வுத் திட்டம் தான்'' என்று ஏழை எளிய மக்களெல்லாம் இதய பூர்வமாகப் பாராட்டினார்கள்.

## குழந்தைகள் திரைப்பட விழா

குழந்தைகள் தின விழாவையொட்டி, தமிழக அரசின் சார்பில் 14.11.'83 அன்று குழந்தைகள் திரைப்படத் துவக்க விழா சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. சுமார் இருநூறு திரைப்படங்களைச் சென்னைத் திரைப்பட நிறுவனத்தார் தருவித்துள்ளனர். இப்படங்கள் சென்னையிலும் தமிழ்நாடு முழுவதிலும் திரையிடப்பட்டன.

இந்த விழாவை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் துவக்கி வைத்தார். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. தலைமை வகித்தார். சென்னைத் திரைப்படக் கழகத் துணைத் தலைவர் திரு. கோவிந்தராஜ் வரவேற்க, செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.







தமிழரசு
சேலம்



ஸ்வீடன் நாட்டுத் தூதுவர் டாக்டர் ஆக்சில் டெல்ஸ்டிரம் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்தார் (5.12.83)

16-வது தேசிய நூலக வார விழாவையொட்டி சென்னை இராஜாஜி மண்டப[த்]தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் சிறந்த முறையில் அரங்கு அமைத்திரு[ந்த] பதிப்பாளர்களுக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் பரிசு[கள்] வழங்கினார். (20-11-83)

சென்னையில் நடைபெற்ற தேசிய ஒருமை[ப்பாட்டு] வார விழாவில் (3.12.83) மாண்புமிகு பா[...] துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ண[...] மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அ[மைச்சர்] திரு எச். வி. ஹண்டே இருவரும் கலந்து [கொண்]டனர்.

சென்னை மணலியில் (2.12.83) நடைபெற்ற புதிய ஜெனரே[...] துவக்க விழாவில் மாண்புமிகு மத்திய அரசு ரசாய[ன] [...]தொழில்துறை ராஜாங்க அமைச்சர் திரு [...]





# இரண்டாம் ஆண்டில் இலவசப் பல்பொடி திட்டம்

24 ... 1983

சமுதாயப் புரட்சித் திட்டமாம் ஏழை எளிய மக்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து —சென்ற ஆண்டில் தமிழக அரசால் நேரு பிறந்த நாளன்று அனைவரும் போற்றும்படி அறிவிக்கப்பட்ட திட்டமே இலவசப் பல்பொடி வழங்கும் திட்டம்.

ஆண்டொன்றுக்கு இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ 60 இலட்சம் கிராமக் குழந்தைகளுக்கு இந்தப் பல்பொடி இலவசமாக அரசால் வழங்கப்படுகிறது. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பங்கு பெறும் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ஒன்றுக்கு 30 கிராம் வீதம் தரப்படுகிற இந்தப் பல்பொடி, நோய்களைத் தடுத்துப் பற்களை நன்கு பாதுகாக்கும் வகையிலே அறிவியல் முறைப்படி தயாரிக்கப்படுவதாகும்.

சென்னைப் பல் மருத்துவக் கல்லூரி முதல்வராகிய டாக்டர் பி.பி.ராஜன் அவர்கள் இத்திட்டத்தின் பொறுப்பு அதிகாரியாக இருந்து, தயாரிக்கப்படும் பல்பொடியின் தரக் கட்டுப்பாட்டைக் கவனித்து வருகிறார். இந்தப் பல்பொடி 'சிட்கோ' நிறுவனத்தின் மூலமும் சின்கோனா துறையின் மூலமும் தயாரித்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.


இலவசப் பல்பொடி திட்டம் செயல்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவானதையொட்டி - கடந்த 26-11-83 அன்று, இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவதை நேரில் காண்பதற்காகச் செய்தியாளர் சுற்றுலா ஒன்று சென்னைப் பல்மருத்துவக் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் டாக்டர் பி. பி. ராஜன் உடன்வர, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சில கிராமப்புறங்களுக்குச் செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.



பெரம்பூரிலுள்ள இலவசப் பல்பொடி தயாரிக்கும் சோதனைச் சாலையைப் பார்வையிட்டுவிட்டு— கொட்டிவாக்கம், ஈஞ்சம்பாக்கம், பனையூர் குப்பம், நெம்மேலி, முதலான பல கிராமங்களுக்கும் சென்ற செய்தியாளர்களோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எச்.வி. ஹண்டே அவர்களும் உடன்வந்தார்.

சென்றவிடமெல்லாம் — மாண்புமிகு தமிழக முதல்வரின் சீர்சால் திட்டமான இலவசப் பல்பொடி திட்டத்தைக் கிராமப்புற மக்கள் வாயாரப் புகழ்ந்து நெஞ்சார வாழ்த்தினர்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — மார்கழி 1
மலர் : 14 இதழ் : 12
16-12-1983






# புகழ் பெற்று வரும் சேலம்

**இரா. வரதராஜுலு, இ.ஆ.ப.,**
**சேலம் மாவட்ட ஆட்சியாளர்**

சேலம் மாவட்டம் கனி வளமும் கனிம வளமும் நிறைந்த மாவட்டமாகும். மலை வளம் மிகுந்த குறிஞ்சி நாடாகவும் இது திகழ்கிறது. இயற்கை அன்னை எழில் நடம் புரியும் ஏர்க்காடு, கொல்லிமலை போன்ற பகுதிகள் இங்கே உண்டு.

சேலம் மாவட்டம் மிகவும் பழமையான நிலப்பகுதியைக் கொண்டது. அதன் விளைவாகத் தான் பல வகையான கனி மங்கள் இங்கே கிடைக்கின்றன.

இம்மாவட்டம் மலைப் பகுதிகள் நிறைந்தது என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாகும். சேலம் மாவட்டத்தின் பரப்பளவில் மூன்றில் ஒரு பாகம் மலைப் பகுதி.

சேர்வராயன் மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, பச்சை மலை, அரநூத்து மலை என்றெல்லாம் இங்கு மலைப்பகுதிகள் உள்ளன. இவற்றில் உள்ள மலைவாழ் இன மக்களுக்குத் தமிழக அரசு பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டுவருகின்றது. தமிழ்நாட்டிலேயே, மலைவாழ் மக்களுக்கு அதிகத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்துவது சேலம் மாவட்டம் தான். இந்த வகையில் சேலம் முதலிடம் வகிக்கிறது என்று கூறலாம்.

ஏர்க்காடு நகரியப் பகுதியில் கொட்டச்சேடு பகுதியிலிருந்து கொம்புத் தூக்கி வரை 8 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச்சாலை முழுக்க முழுக்க தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. மலையாளிகள் என்று வழங்கப்படும் மலைவாழ் மக்களுக்கு இந்தச் சாலை பயன்படுகிறது. இதை அமைப்பதற்கு ரூ. 14 இலட்சம் செலவாகியுள்ளது. இந்தச் சாலை உருவாவதற்கு, சேலம் மாவட்டத்தின் முன்னாள் ஆட்சியாளர் திரு எஸ். ஆர். கருப்பண்ணன் அவர்களின் முயற்சி ஒரு காரணம் என்பதை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.



கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டுவந்த வெள்ளாளபட்டியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் நிவாரண நிதி கேட்டு, சேலம் மாவட்ட ஆட்சியாளரிடம் மனுவைக் கொடுக்கிறார்கள்.

கல்ராயன் மலையில் தோட்டக் கலைச் சங்கத்தின் உதவியுடன் 500 ஏக்கரில் காபி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது 50 ஏக்கரில் பயிரிடப் பட்டிருக்கிறது.

பெரும் பழத்தோட்டம் (Giant orchard) ஒன்று தோட்டக்கலைத் துறையால் அமைக்கப்பட்டு பல்வேறு பழமரங்கள் வளர்க்கப் படுகின்றன.

கொல்லிமலையைப் பொறுத்த அளவில் - மலைவாழ் மக்களின் நல்வாழ்வுக்காக எண்ணற்ற திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல் படுத்தப்படுகின்றன.

கல்ராயன் மலையில் பழங்குடியினர், தொழிற் கல்வி கற்பதற்காகத் தொழிற் கூடம் ஒன்று கட்டப்பட உள்ளது. 5 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்டு, ரூ. 3.85 இலட்சம் கட்டப்படும் இந்தத் தொழிற் கூடத்தில் விடுதி வசதிகளும் உண்டு. இதன் மூலம் கொல்லிமலை, ஏர்க்காடு மலை, பச்சைமலை, அரநூத்து மலை ஆகியவற்றில் வாழும் மலைவாழ் இனத்தவர் தொழிற் கல்வி பெற முடியும். 8-ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் மின்சார சம்பந்தமான தொழிலையும், 5-ஆம்

**இலங்கைத் தமிழர் உரிமையைக் காப்போம்**

**இந்த இதழுடன் இலவச இணைப்பு**



வகுப்பு வரை படித்தவர்கள் பல்வேறு தொழிற்கல்வியும் கற்றுப் பயனடைய வாய்ப்பு உள்ளது. இந்தத் தொழிற்கூடம் அடுத்த கல்வியாண்டிற்குள் உருவாகி விடும்.

வளர்ச்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்த அளவில் ரூ. 2 கோடியே 50 இலட்சம் செலவில் வேலைகள் இம் மாவட்டத்தில் நடைபெற்றிருக்கின்றன. வறட்சியைச் சமாளிப்பதற்காகக் கசிவு நீர்க் குட்டைகள், இம்மாவட்டத்தில் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்க செய்தி ஆகும். இவற்றின் மூலம் பாசனத்திற்கு 3 இலட்சம் கன மீட்டர் தண்ணீர் கிடைத்தது.

சேலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மாமாங்கம் என்னும் பகுதியில் ஒரு நீரூற்று உள்ளது. வறட்சிக் காலத்தில் அந்த நீரூற்றும் வற்றிவிட்டது. அந்த நீரூற்றை ஆய்வு செய்து— திட்டம் வகுத்துச் செயல்பட்டதில் நீர் பெருக்கெடுத்து வருகிறது. ஏறக்குறைய 35 இலட்சம் மக்களுக்கு அது குடிநீரை வழங்குகிறது. தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் உதவியால் ரூபாய் 16.5 இலட்சத்திற்கு மேல் செலவிடப்பட்டு, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்தப் பணி செய்து முடிக்கப்பட்டது.

இம் மாவட்ட மக்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 4,500 கைப் பம்புகள் உள்ளன. இவற்றில் 1,200, விசைப்பம்புகள் ஆகும். வறட்சிக் காலத்தில் மட்டும் 2,288 பம்புகள் போடப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட குழந்தைகள் சத்துணவுத் திட்டம் சேலம் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் 2 வயது முதல் 4 வயது வரை உள்ள 1,48,788 பிள்ளைகளும் - 5 வயதுக்கு மேல் 9 வயது வரை உள்ள 2,59,145 பிள்ளைகளும் இத் திட்டத்தால் பயன் பெறுகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் பெருந்தொழில்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. சேஷசாயி காகித ஆலை, மால்கோ, மேட்டூர் கெமிகல் ஒர்க்ஸ், மேட்டூர் ரேயான், காஸ்டிக் சோடா திட்டம், கெம்ப்ளாஸ்ட், அரசு கால்வனைசிங் தொழிற்கூடம், இந்தியா சிமெண்ட் போன்ற பற்பல தொழிற்கூடங்கள் இம் மாவட்டத்திற்கு நல்ல வருவாயையும் பெருமையையும் தேடித் தருகின்றன.

தொழில்களைப் பொறுத்த வரையில் சேலம் மாவட்டத்தின் பெருந்தொழில்கள் மேட்டூரில் உள்ளன, என்றாலும் மாவட்டம் முழுதும் கைத்தறித் தொழில் சிறப்புப் பெற்று விளங்குகிறது. ஏறக்குறைய ஒரு இலட்சத்து 51 ஆயிரம் கைத்தறிகளும், அங்கீகாரம் பெற்ற 5,000 விசைத்தறிகளும் இயங்குகின்றன. சேலத்தில் தயாராகும் துணிகள் அமெரிக்கா போன்ற வெளிநாட்டுச் சந்தைகளுக்குச் செல்லும் பெருமை பெற்றிருக்கின்றன.

தளவாய்ப் பட்டியில் நாள்தோறும் 10 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் பால்பவுடர் ஆலை ஒன்று கட்டப்பட்டுள்ளது. விரைவில் இதன் திறப்பு விழா நடைபெறவிருக்கிறது. 5 கோடி ரூபாய் செலவில் உருவாகிய இந்த ஆலை தினமும் ஒரு இலட்சம் லிட்டர் பாலைப் பதனப்படுத்துகிறது.

சேலம் மாவட்டத்தில் 6,000 கதிர்கள், 8,000 கதிர்கள் கொண்ட நூற்பு ஆலைகள் உள்ளன. சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை— மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகளிலேயே மிகச் சிறந்ததாக விளங்குகிறது.

ஆண்டுக்கு 23 கோடி ரூபாய் வருவாயைத் தேடிக் கொள்ளும் ஜவ்வரிசித் தொழிலும் சேலத்திற்குப் பெருமையைச் சேர்க்கிறது.

சுரங்கத் தொழிலும் இங்குச் சிறந்து விளங்குகின்றது. தமிழ்நாடு மேக்னசைட், டால்மியா மேக்னைசட் ஆகிய சுரங்கப் பகுதிகளில் ஏராளமான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

கோழி வளர்ப்பிலும் சேலம் மாவட்டம் புகழ் எய்தியுள்ளது. நாளொன்றிற்கு 35 இலட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

லாரிக்குரிய கட்டட அமைப்புக்கு நாமக்கல் புகழ் பெற்று விளங்குகிறது. இங்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து கட்டட அமைப்பு நிலையம் ஒன்று உள்ளது. மாதம் ஒன்றிற்கு 6 பேருந்துகள் இந்நிலையத்தில் கட்டி முடிக்கப்படுகின்றன.


நீர்ப்பாசனத்தைப் பொறுத்த அளவில் 124 அடி உயரமும் 5,300 அடி நீளமும் கொண்ட மேட்டூர் நீர்த்தேக்கம் பயன்பட்டு வருகிறது. இது பெரும்பாலும் தஞ்சை மாவட்டத்திற்கே உதவுகிறது.


இதன் உதவியால் சேலம் மாவட்டத்தில் 17 ஆயிரம் ஏக்கர்தான் பயன் பெறுகின்றன. பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நீர்த் தேக்கங்களின் மூலம் 28,511 ஏக்கர் நிலங்கள் விளைச்சல் பெறுகின்றன.

நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக நிலப் பதிவுமுறைகள்-உரிமைமுறைகள்- சரிவர வைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் புதிய நீர்த்தேக்கங்கள் கரியகோவில் பகுதியிலும் ஆனை மடு என்னும் பகுதியிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**அடுத்த இதழிலும் சேலம் மாவட்டம் குறித்த கட்டுரைகள் இடம் பெறும்.**





**நாமக்கல் மலை மீது வரதராஜ சுவாமி கோயில் இருக்கிறது. சுற்றிலும் கோட்டையும் இருக்கிறது. குடவரைக்கோயிலும் இங்கு உள்ளது. மாபலியிடம் தாரைவாங்கும் வாமனர்- இரணியனை வதம் செய்யும் நரசிம்மர் ஆகியோரின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இவை மாமல்லபுரத்துச் சிற்பக் கலையை நினைவூட்டுகின்றன. 18 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயரின் சிலை–தொழுத கையுடனும் சினமுற்ற முகத்துடனும் - பற்கள் தெரியக் காட்சி தருகிறது. பார்வையாளர்களை இது வியப்படையச் செய்கிறது.**

## மலிவு விலையில் காய்கறி கிடைத்திட...

தலைமைச் செயலாளர்
**திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப.**

"மக்களுக்கு மலிவு விலையில் காய்கறிகள் கிடைக்கச் செய்வதற்காகவும், வீடுவீடாகச் சென்று காய்கறி விற்பனை செய்வதற்கும் ஒரு ஏற்பாட்டைத் தமிழ்நாடு அரசு செய்துள்ளது.

"சென்னை மாநகரிலும், பிற நகரங்களில் கூடுமான வரையில் இரண்டு அல்லது மூன்று தெருக்களுக்கு ஒரு கூட்டுறவுக் காய்கறி அங்காடி ஏற்படுத்தப்படும். அந்தப் பகுதியில் வாழும் இளைஞர்கள் மூலம் வீடுவீடாகச் சென்று காய்கறி விற்க ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

"பால் விநியோகக் கூட்டுறவு அமைப்புகள் எப்படிச் செயல்படுகின்றனவோ, அதேபோல காய்கறிக் கூட்டுறவு அமைப்புகளும் செயல்படும். கிராமங்களில் விவசாயிகள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பயன் பெற வகை செய்யப்படும்.

தமிழ்நாடு முழுவதற்கும் வெளி மாவட்டங்களிலிருந்து, எப்படி பால் கொள்முதல் செய்து கொண்டு வரப்படுகிறதோ, அதேபோல ஒவ்வொரு மாவட்டத்தில் சாகுபடியாகும் காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு லாரிகள் மூலம் கொண்டு வந்து விநியோகிக்கப்படும்.

"இதன்மூலம் இடைத்தரகர்கள் ஒழிக்கப்பட்டு காய்கறி உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலை கிடைத்து, காய்கறிகளை வாங்கிச் சாப்பிடுவோருக்கும் நியாய விலை கிடைக்க ஒரு ஏற்பாடாகவும் இது அமையும்.

"காய்கறிகளின் விலைகளைக் குறைப்பதற்கு மற்றொரு திட்டமாக, வேளாண்மைத் துறை மூலம் சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் காய்கறி உற்பத்தியைப் பெருக்க ஒரு பெரிய திட்டத்தை அரசு மேற்கொள்ளும்".

இம்மாவட்டத்தில் 1,30,940 சிறு விவசாயிகளும், 1,58,258 குறு விவசாயிகளும், நிலமற்ற வேளாண் தொழிலாளர் 3,87,693 பேர்களும் உள்ளனர்.

கிராமப்புற மக்களின் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல நிலைமையை மேம்பாடடையச் செய்வதற்காக டேனிஷ் அரசின் உதவியுடன் நடத்தப்பெறும் டேனிடா திட்டத்தின் மூலம் 7 கோடி ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையங்கள் சேலம் மாவட்டத்தில் 238 கட்டப்பட்டு வருகின்றன. பல கட்டடங்கள் திறக்கப்பட்டுவிட்டன. நவம்பர் இறுதிக்குள் 135 கட்டடங்கள் உருவாகிவிடும். 1983-84க்குள் அனைத்துக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

சிற்பக்கலையிலும் இம் மாவட்டம் சிறந்து விளங்குவதை தாரமங்கலம் கைலாயநாதர் ஆலயத்துச் சிற்பங்களின் வாயிலாக அறியலாம். தம்மம்பட்டியில் தற்போது செய்யப்பட்டுவரும் மரச்சிற்பங்கள், சேலம் மாவட்டத்துக்குப் பெரும் புகழை ஏற்படுத்தித் தருகின்றன.

கல் உடைக்கும் தொழில், கிணறு உறை இறக்கும் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சேலம் மாவட்டத் தொழிலாளர் பலர், ஆந்திர மாநிலம் போன்ற வெளி மாநிலங்களில் கொத்தடிமைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் விடுவித்துக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். கொத்தடிமை மீட்புப் பணியில் சேலம் மாவட்டத்திற்குப் பெரும் பங்கு உண்டு.

சேலம் நகரம் - பல்வேறு சுற்றுலாத் தலங்களைக் கொண்டிருப்பதாலும் மற்ற மாவட்டங்களுக்கு அருகில் இருப்ப... இங்கு வருகை புரியும் ...கள் தொகை நித்தமும் ... கொண்டே வருகிறது. ... நாட்டிலும் சேலம் என்ற ... ருடன் ஓர் ஊர் இருப்பதா... இதன் பெருமை வெளிநாடு... லும் எட்டியிருக்கிறது. அத... காரணமாகவும் இங்குள்ள எழில் மிகு ஏர்க்காட்டின் ஈர்ப்பினாலும், வெளிநாட்டினரும் அவ்வப்போது சேலத்துக்கு வருகை புரிகிறார்கள்.

மொத்தத்தில் சேலம் நகரமும் -சேலம் மாவட்டமும் தமிழகத்தின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும்-வரலாற்றுக்கும் வாயில் அமைத்துத் தருவதுடன் ஆக்கப்பூர்வமான பணிகளை நிறைவேற்றி அதிபுகழைப் பெறுகின்றன என்று சொன்னால், அது மிகையல்ல!

# மாண்புமிகு முதல்வருக்கு திரையுலகின் பாராட்டு



டாக்டர் விருது பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் தமிழ்த் திரைப்பட உலகின் சார்பில், சென்னையிலுள்ள நேரு விளையாட்டரங்கில் (20-11-83) பாராட்டு விழா நடத்தப்பட்டது.

திரு. ஏ. வி. எம். சரவணன், திரு. பழனியப்பன் ராமசாமி, திரு. கே. பாக்யராஜ், திரு. பஞ்சு அருணாசலம், திரு. டி. ராமானுஜம், திரு. ஜேப்பியார் எம். எல். சி., திரு. சித்ரா லட்சுமணன் ஆகியோர் செயலாளர்களாகவும் 21பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் இருந்து சிறப்புற ஏற்பாடு செய்த இவ்விழாவுக்குத் திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா தலைமை தாங்கினார்.

நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன், எம். பி. அவர்கள் சிறப்புரை ஆற்றிய இவ்விழாவில் திரையுலகக் கலைஞர்களும் தொழில் நுணுக்க வல்லுநர்களும் தயாரிப்பாளர்களும் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்தப் பாராட்டு விழாவை முன்னிட்டு நகரெங்கும் அலங்கார வளைவுகள் போடப்பட்டிருந்தன; வாழ்த்துப் பதாதைகள் கட்டப்பட்டிருந்தன; வண்ணச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

குறிப்பிட்ட நாளன்று, விழா தொடங்கு முன்பாக மாலை 4 மணியளவில் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலிருந்து பிரம்மாண்டமான ஊர்வலமொன்று புறப்பட்டது. இலட்சோப லட்சம் மக்கள் கலந்து கொண்ட அந்த ஊர்வலத்தின் முன்பாக வந்த சில அலங்கார வண்டிகளில் திரைப்பட உலகின் முன்னணி நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள் காட்சி தந்தனர். மோட்டார் சைகிள்கள், சைகிள்கள், ஸ்டண்ட் நடிகர்களைச் சுமந்த குதிரைகள் எல்லாம் வந்த இந்த ஊர்வலத்தைக் கண்டானந்திக்க வீதியின் இருமருங்கும் பல்லாயிரவர் கூடியிருந்தார்கள்.

அண்ணா சாலையில் உள்ள காயிதே மில்லத் கல்லூரி அருகிலே அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நட்சத்திர அணி வகுப்பு மகிழ்ச்சி மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

ஊர்வலம் 7 மணியளவில் விழாத் திடலை வந்தடைந்தது.

**இசை நிகழ்ச்சி:**

பெரியவர்கள் கையைப் பிடித்துக் கொண்டு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் நிற்கும் குழந்தைகள் போல 'டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்குட் பாராட்டு விழா' எனப் பூவால் சித்திரிக்கப்பட்டிருந்த முக்கிய மேடைக்கு வலமும் இடமுமாக இரண்டு சிறிய மேடைகள் சிங்காரமாக அமைக்கப்பட்டிருந்தன.

இசையமைப்பாளர் இளையராஜா தமிழ்த்தாய் வாழ்த்தோடு விழா நிகழ்ச்சிகள் துவங்கின.

முதலாவதாக இடப்புறச் சிறு மேடையில் இசையமைப்பாளர் கங்கை அமரன் இசை நிகழ்ச்சி. அதில் திருமதி எஸ். ஜானகி, திருமதி பி. சுசீலா, திரு. மலேசியா வாசுதேவன் ஆகியோர் பங்கேற்றுப் பாடினர்.

அதைத் தொடர்ந்து—வலப்புறச் சிறுமேடையில் இசையமைப்பாளர்கள் சங்கர்கணேஷ் இசை நிகழ்ச்சி. அதில் திரு. டி. ராஜேந்தர், திரு. பி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இன்னிசை நிகழ்த்தினர்.

பின்னர் அதே மேடையில் இசையமைப்பாளர் திரு. கே. வி. மகாதேவன் இசை நிகழ்ச்சி. அதில் திருமதி வாணிஜெயராம் பங்கேற்று இசை மழை பொழிந்தார்.

இதையடுத்து இடப்புறச் சிறு மேடையில் புதுநடிகைரேவதியின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.


**பாராட்டுரை :**

இதற்கெல்லாம் பின்னர், பெரிய அளவில் நீண்டிருந்த முக்கிய மேடையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்குப் பாராட்டு விழா தொடங்கியது.

திரைப்பட இயக்குநர் திரு பஞ்சு அருணாசலம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நடிகர் திரு. எம். என். நம்பியார் முன்மொழிய, நடிகர் திரு. வி. கே. ராமசாமி வழிமொழிய இயக்குநர் திரு பாரதிராஜா விழாத் தலைமையேற்றார்

விழாக்குழு சார்பில் -விழாவின் தலைவர் பாரதிராஜா,நடிகர் திரு கமலஹாசன், நடிகர் திரு ரஜனிகாந்த், இயக்குநர் திரு பாக்யராஜ் ஆகியோர் மிகப் பெரிய அளவில் தயாரிக்கப்பட்டிருந்த ரோஜா மாலையொன்றை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அணிவித்தனர்.



பின்னர் - நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் எம். பி., நடிகர் திரு. பிரபு இருவரும் ஆளுயர ரோஜா மாலையொன்றை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அணிவித்தார்கள்.

இயக்குநர் திரு. கே. பாலசந்தர், இயக்குநர் திரு. தாசரி நாராயணராவ், நடிகர் திரு. ஜெமினிகணேசன், நடிகை திருமதி விஜயகுமாரி, நடிகர் திரு. ஜெய்சங்கர், நடிகைதிருமதி மனோரமா, நடிகை திருமதி ராஜசுலோசனா, இயக்குநர் திரு கே. எஸ். கோபாலகிருஷ்ணன், நடிகர் திரு. தியாகராஜன், நகைச்சுவை நடிகர், திரு கே. ஏ. தங்கவேலு, நடிகை செல்வி நளினி, நடிகர் திரு விஜயகுமார், நகைச்சுவை நடிகர் திரு நாகேஷ், நடிகர் திரு. சிவகுமார், நடிகர் திரு. வினு சக்ரவர்த்தி, நடிகை செல்வி ரேவதி, இயக்குநர் திரு. எஸ். பி. முத்துராமன், நடிகர் - திரு. விஜய்காந்த், நடிகை செல்வி ராதா, படத்தயாரிப்பாளர் திரு. ஏ. வி. எம். சரவணன், நடிகர் திரு. மோகன், நடிகர் திரு பிரபு, இயக்குநர் திரு. முக்தா சீனிவாசன், இயக்குநர்-இசையமைப்பாளர் திரு. டி. ராஜேந்தர், திரு. டி. ராமானுஜம், நடிகை செல்வி ஸ்ரீதேவி, நடிகர் திரு. ரஜனிகாந்த், நடிகை திருமதி கே. ஆர். விஜயா இயக்குநர்-கதை வசனகர்த்தா-நடிகர் திரு. பாக்யராஜ் ஆகியோர்சென்னைப் பல்கலைக்கழகம் மூலம் டாக்டர் பட்டம் பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

சிறுசேமிப்புத்திட்டத்துணைத் தலைவரும், தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவருமான இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்., நடிகர் கமலஹாசன் இருவரும் விழா நாயகருக்கு வாழ்த்துப்பா படித்தளித்தார்கள்.

**தலைமையுரை:**

இயக்குநர் திரு. பாரதிராஜா தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :

''கலைக்குடும்பம், குடும்பத் தலைமகனுக்கு எடுக்கின்ற விழா இது. இதற்கு யாராவது சாயம் பூசுவார்களானால் நாங்கள் அது பற்றிக் கவலைப்படப் போவதில்லை.

''புரட்சித் தலைவர் அவர்கள் திரைப்பட உலகை விட்டுப் போனதால் எங்களுக்கு இழப்பு; ஆனால் அவர் முதலமைச்சர் ஆனதால் இந்த நாட்டுக்கே மதிப்பு. இங்கே இலட்சோப இலட்சம்பேர் கூடியிருக்கிறீர்கள். இந்தக் கூட்டம் எங்களுக்காக வந்த கூட்டமல்ல; புரட்சித் தலைவருக்காக-தனியொருமனிதனுக்காக வந்த கூட்டம். ஆனால் இந்தக் கூட்டம் அவர் புதிதாகப் பார்க்கிற கூட்டம் அல்ல; முப்பதாண்டுக் காலமாகப் பார்க்கிற கூட்டம்.''

—இவ்வாறு உரையாற்றிய அவர் மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு சௌந்தரராஜன் உதவியோடு, அத்திட்டத்தால் உடல் ஊனம் நீங்கி நலமுற்ற மதுரை, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டக் குழந்தைகள் சிலரை மேடையில் ஏற்றி மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

**சிறப்புரை:**

விழாவில் சிறப்புரையாற்றுகையில் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் எம். பி. குறிப்பிட்டதாவது:

''இந்த மாநிலத்தை ஆளும் தமிழ்த் தலைவனுக்கு எடுக்கப்படும் இந்த விழாவில், வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம் நிரம்பியிருக்கக் காண்கிறேன். அண்ணனுக்கு நடக்கும் விழாவைக் கண்டு தம்பி

விருந்து மிகவும் மகிழ்ச்சிகொள்கிறேன்.

''நாங்கள் சகோதரர்களாக இருப்பவர்கள். ஒரே இடத்தில் வாழ்ந்தவர்கள்; ஒரே இடத்தில் படுத்து, ஒரே இலையில்-ஒரே அன்னையின் கையால் உணவு உண்டவர்கள். காலத்தால்பிரிக்க முடியாத எங்களை அரசியல் அரக்கன் அல்லவா பிரித்து விட்டான்!

''திரையுலகில் அவர் விட்டுச் சென்ற இடம் இன்னமும் காலியாகத்தான் இருக்கிறது. இப்போது, கலையுலகில், அண்ணனுக்குப் பிறகு மூத்தவன் என்ற நிலையில் நான் என் உடன் பிறப்பைப் பாராட்ட வந்திருக்கிறேன். தானாடா விட்டாலும் தன் தசையாடும் அல்லவா!

''எத்தனையோ பேர் டாக்டர் பட்டம் பெற்றார்கள். ஆனால் இவருக்கு மனிதாபிமானம் கருதி டாக்டர் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி, நேரு, பெருந் தலைவர் காமராசர் அவர் கனவை நிறைவேற்றப் பாடுபடும் அன்னை இந்திரா ஆகியோரைப் போல் ஏழைஎளிய வீட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் சத்துணவு போட்டு அவர்களை அரவணைத்த இந்த மனிதாபிமானம்கொண்டவரைப்பாராட்ட இந்த விழாவை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

''இந்த சத்துணவுத் திட்டம் வெற்றி பெறவும் - மாண்புமிகு முதல்வர் அவர்களே உங்கள் எண்ணம், பெருமை, நிதானம் கொள்கைப் பிடிப்பு, நாட்டு மக்களை அழைத்துச் செல்லும் இலட்சியப் பயணம் எல்லாம் நீடித்து ஆல்போல் தழைத்தோங்கவும்-நீங்கள் பல்லாண்டு வாழவும் இதயபூர்வமாகவாழ்த்தி என் அன்னையை வேண்டிக் கொள்கிறேன்.''

**நன்றியுரை:**

தமக்களிக்கப்பட்ட வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''எனக்கு அளிக்கப்பட்ட டாக்டர் பட்டத்தை நான் கலையுலகிற்குக் கிடைத்ததாகவே



கலைஞர்கள் எங்கேயோ ஒதுக்கப்பட்டிருந்தார்கள்; அதைமாற்றிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களையே சேரும்.

''மனிதாபிமானம் என்பது உணர்வின் அடிப்படையிலே இருக்க வேண்டும்; அப்போது தான் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும்.

''சத்துணவுத் திட்டமென்பது பிரதமர் இந்திராவின் 20 அம்சத் திட்டத்திலே இல்லாத ஒன்றாகும். மதிய உணவு திட்டத்தைக் காமராசர் கொண்டு வந்தார். அதற்கு முன் தியாகராயர் கொண்டு வந்தார். அது தொடர்ந்து நடக்கவில்லை.

''பதினைந்து வயது வரை நான் பட்ட கஷ்டத்தை மனதில் வைத்துக் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் சத்துணவுத் திட்டமே தவிர வேறல்ல. விரைவிலேயே இது பதினைந்து வயது வரை உள்ளவர்களுக்கும் விரிவாக்கப்படும். தன்னிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், விவசாயிகளுக்கு ஓய்வூதியத் திட்டம் ஆகியவை தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளனவே தவிர வேறெந்த நாட்டிலும் இல்லை.

''மாணவ மாணவிகளுக்கு வெறும் ஏட்டுக் கல்வி மட்டும் போதாது என்று கருதி தொழிற் கல்வியும் தொடங்கவிருக்கிறோம். சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளின் உடல் ஊனம் நீங்கியதாக இங்கே கூறினார்கள்; அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

''நாடகத்தில் சேர்ந்து நான் பட்ட துன்பம், திரையுலகில் ஏற்பட்ட இன்னல்கள், வீடு வீடாக ஏறி வேலை கேட்டுத் திரிந்த பரிதாபநிலை ஆகியவைகள் தான் என்னை இன்று மனிதாபிமானத்தால் உயர்த்தியிருக்கிறது.

''நானும் சிவாஜியும் எந்த அளவுக்கு சகோதர பாசத்தோடு இருந்தோம் என்பதை அவர் சொன்னார். நான் அதை இன்னும் மறக்கவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை என் உடன் பிறந்த தம்பியாக அதே இடத்தில் அவர் இன்றும் இருக்கிறார். நடிப்புத்துறையில் எனக்கும் சிவாஜிக்கும் எந்தப் பிரச்சினையும் இருந்ததில்லை. அவர் கருத்

மாறுபட்டிருக்கலாம். ஆனால் எப்போதாவது நாங்கள் ஒன்று சேருவோம்.

''இனி வளரும் நட்சத்திரங்கள் தங்களுக்கும் மக்களுக்கும் பயன் படத்தக்க கருத்தைச் சொல்லி மக்களைச் சொந்தக்காரர்களாக மாற்றியாக வேண்டும். அப்போதுதான் மக்கள் இதயத்தில் இடம் பிடிக்க முடியும். நீங்களெல்லாம் ஒன்று பட்டு ஒரு அமைப்பை உருவாக்கி உங்கள் குறை நீங்க - நீங்கள் அரசை அணுகலாம். அரசு நிச்சயம் உதவும்.

''வீடு இழந்து தவிக்கும் கலைஞர்களுக்கு நடிகர் சங்கம் மூலம் கடனுதவி அளித்து அவர்களையும் முன்னேற்ற அரசு பாடுபடும்.

''இப்போது வரும் சில திரைப் படங்கள் எனக்கு மனவருத்தமளிக்கின்றன. அதில் மக்கள் ஒருமைப்பாடு, ஜாதி மத பேதத்தால் வரும் தீங்கு, உழைப்பால் வரும் உயர்வு, படிப்பால் உண்டாகும் பயன் ஆகியவைகளைப் பற்றிய கருத்துக்கள் எதுவுமே இல்லை. இந்த நிலை மாறியாக வேண்டும். நீங்கள் எடுக்கும் படத்தை - ஏற்கும் பாத்திரத்தை பார்த்துத்தான் தமிழ்நாட்டு மக்கள் உங்களை ஏற்பார்கள். இதைத் தயவுசெய்து மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.''

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் உரை நிகழ்த்தினார்.

**நிதியளிப்பு:**

மாண்புமிகு முதல்வரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காகத் தமிழ்த்திரையுலகின் சார்பில் முதல் தவணையாகப் பத்து இலட்சம் ரூபாய் இயக்குநர் திரு பாரதிராஜா மூலம் அளிக்கப்பட்டது.

ஜெமினி ஸ்டூடியோ நிர்வாக இயக்குநர் திரு பழனியப்பன் ராமசாமி ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், நடிகை திருமதி விஜயகுமாரி 50 ஆயிரம் ரூபாயும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினர்.

விழாக்குழு சார்பில், பட அதிபர் திரு. ஏவி. எம். சரவணன் வெள்ளிக் கோப்பை யொன்றை மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆருக்கு அளித்தார்.

விழா முடிவில் திரு சித்ரா லட்சுமணன் நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—இந்திரன்.**

# களஞ்சியப் பணியில் தமிழ்ப் பல்கலைக் கழகம்




மாமன்னன் ராஜராஜனும் மற்றைய சோழ மன்னர்களும் ஆட்சி செலுத்திய பழம்பதியான தஞ்சை - தமிழ்க் கலைகளுக்கு இருப்பிடமாகவும் -ஆய்வுகளுக்கு உறைவிடமாகவும் திகழ்ந்ததனால் - தமிழ்ப்பல்கலைக் கழகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் - தஞ்சையில் அமைத்தார்கள். அந்தப் பல்கலைக் கழகத்திடம் தமிழில் களஞ்சியம் உருவாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

1983 சனவரித் திங்களில் பணியை மேற்கொண்ட பல்கலைக்கழகம், அதற்குரிய பதிப்பாசிரியர்களையும் செய்தி திரட்டுவோரையும் நியமிக்கத் தொடங்கியுள்ளது. வாழ்வியல் குறித்து 14 தொகுதிகளும், அறிவியல் குறித்து 20 தொகுதிகளும், இலக்கிய இயல் குறித்து 10 தொகுதிகளும் என மொத்தம் 44 தொகுதிகள் வெளியிடப்பட உள்ளன. 1987 ஜனவரிக்குள் அனைத்துத் தொகுதிகளையும் வெளியிட்டுவிட வேண்டுமெனும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது தமிழ்ப்பல்கலைக் கழகம்.

சென்னை, தியாகராய நகரில் உள்ள இராமன்தெருவில்-தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் களஞ்சிய மையக் கிளை ஒன்று இயங்கி வருகிறது. 28.11.83 அன்று களஞ்சியம் குறித்து ஒரு கருத்தரங்கத்தை இந்த மையம் ஏற்பாடு செய்திருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

கருத்தரங்கில் பங்கேற்ற குழுவினரையும், வெளிமாநிலப் பிரதிநிதிகளையும் வரவேற்றுப் பேசிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. வி. அய். சுப்ரமணியம்—

''களஞ்சியம் உருவாக்குவது சம்பந்தமாகப் பல அறிஞர்களின் அனுபவங்களை அறிந்து செயல்படுகிறோம். களஞ்சியம் பொது மக்கள் இயக்கமாக மாறவேண்டும்'' என்று குறிப்பிட்டுவிட்டு, அடுத்து ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் முன் வைத்தார். கோரிக்கையும் அது சம்பந்தமான விளக்கமும் வருமாறு:

''சென்னையில் நூலகங்கள் அதிகம் உள்ளன. களஞ்சியப் பணிக்கு, இவை உதவும் என்ற நம்பிக்கையின் காரணமாக-களஞ்சிய மையத்தின் கிளை ஒன்றை இங்கே துவக்கியுள்ளோம். அறிவியல், வாழ்வியல் பிரிவுகள் குறித்த களஞ்சியச் செய்திகள் இங்கு தொகுக்கப்படுகின்றன. இந்தக் கட்டடம் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. மாதத்திற்கு 6,000 ரூபாய் வாடகை தருகிறோம். இந்தக் கிளைஅகம்

சொந்தக் கட்டடத்தில் இயங்கினால் நலம் பயக்கும். தரமணியில் ஓர் இடத்தைப் பார்த்து வந்திருக்கிறோம். சுமார் 30 ஏக்கர் உள்ளது அந்த இடம். அதிலே மையத்திற்கு ஒரு கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைத்துத்தர வேண்டும்.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட இலங்கைத் தொழிலாளர் நல அமைச்சர் திரு தொண்டைமான், ''இலங்கையில் களஞ்சிய அகராதி, தொடர்ந்து செய்யப்பட்டுக்கொண்டேஇருக்கிறது. இங்கு 4 ஆண்டுகளில் பணி முடிவடையும் என்று சொல்லிய செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தப் பணிக்கு எங்களால் இயன்ற ஆதரவை நாங்கள் தருவதற்குச் சித்தமாயிருக்கிறோம்.

''தமிழக முதல்வர் தமிழ் எழுத்தில் சீர்திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். மலேசியாவில் பயன்படுத்தப்படும் தமிழ் எழுத்திலும் இந்தச் சீர்திருத்த முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சீன மொழியில் ஓர் எழுத்தை மாற்றினால், உலகில் எங்கெங்கு சீன மொழி பேசப்படுகிறதோ அங்கெல்லாம் எழுத்து மாற்றப்படுகிறது. அதுபோலவே தமிழ் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் சீர்திருத்த எழுத்துப் பயன்படுத்தப்பட வேண்டும்.''

கருத்தரங்கில்கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டதாவது;

இங்கு நிருவாகம் பற்றி அதிகமாகப் பேசவில்லை. நிருவாக முறைபற்றிப் பேசியிருக்கிறார்கள். ஓரிருவர் நல்ல யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். புதிய சொற்கள் எல்லாம் களஞ்சியத்தில் இடம்பெறவேண்டும்.

"தமிழ்ப் பல்கலைக் கழகம், ஆராய்ச்சியை விரிவடையச்செய்யும் தலைமையிடமாகத் தஞ்சையில் இருக்க வேண்டும் என்று தான் தஞ்சையில் நாம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை விழாவெல்லாம் நடத்தித் தொடங்கினோம். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அங்குதோற்றுவிப்பதற்கு எது ஆதாரமான எண்ணமாக இருந்ததோ-அது இப்போது மாற்றப்பட்டுவிட்டது-என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அடிப்படையான நோக்கமும் தகர்ந்து விட்டது என்று சொல்லத் தோன்றுகிறது.

"சென்னையில் இது இயங்கினால் அரசுத்துறையைச் சேர்ந்த ஒரு அலுவலகம் போலத்தான் இது காட்சிதரும். தமிழ்ப்பல்கலைக் கழகம் என்ற பொலிவு மிகு தோற்றத்தைத் தராது.

"தஞ்சையில் நாம் ஏன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கினோம்? அங்குள்ள சரசுவதிமகால் நூலகத்தில் ஏராளமான நூல்கள் இருக்கின்றன. பாலி மொழியில் கூட அங்கு நூல் உள்ளது. ஏடுகள் உள்ளன. அவற்றை மொழி பெயர்த்துத் தமிழ் மக்களுக்குத் தரவேண்டும், உண்மைகள் அங்கே பொதிந்து கிடக்கின்றன என்றெல்லாம் சொல்லப்பட்ட போது அது கேட்டுமகிழ்ந்தோம்.

"இப்போது சென்னைக்கு வந்து ஒரு இடத்தைத் தேடிப்பிடித்துக் கொண்டு, இந்த இடத்திற்கு வாடகை அதிகம், வேறு இடம் போகவேண்டும் என்றும், அங்கு கட்டடம் கட்டித் தாருங்கள் என்றும் கேட்டால், நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?

"நான் முதல்வர் என்ற முறையில் இதைக் கூறவில்லை. சாதாரணக் குடிமகன் என்ன பேசுவானோ, என்ன எண்ணுவானோ அதையே நான் கூறுகிறேன்.

"எங்கே உள்ள அறிஞர்களும் இங்கே வருவார்கள்-நாம் அவர்களது பேச்சைக் கேட்கலாம் என்று அங்குள்ள சாதாரண மக்கள் விரும்பி எதிர்பார்த்திருப்பார்களே-அது என்ன ஆவது?

"இங்கே உள்ள மாணவர்களை-அறிஞர்களைத் தஞ்சைக்குவாருங்கள் என்றால் அவர்கள் வரமாட்டேன் என்றா சொல்வார்கள்? எங்கே வேண்டுமென்றாலும் நாம் அவர்களை அனுப்பலாம்-சேவை செய்வதற்காக.

"திராவிட மொழி வரலாறு மட்டுமல்ல; திராவிட இன வரலாற்றையும் நீங்கள் செய்யவேண்டும். தஞ்சையில் இந்தப் பணி நடந்தால்- கரந்தையில் உள்ள மாணவர்கள் பல்கலைக் கழகப் பேராசிரியர்களை அணுகி, தங்களுக்கேற்படும் ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைய முடியும்.

"இங்குள்ள மாணவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு அதனை நிவர்த்தி செய்துகொள்ளநினைக்கும்போது, தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்குச் சென்றால் அங்கே பெரியவர்களைச் சந்திக்கலாம். எல்லா அறிஞர்களையும் பார்க்கலாம். அவர்களிடம் விளக்கம் பெறலாம் என்று கருதுவார்கள்.

"ஆகவே, தஞ்சையில்தான் இந்த களஞ்சிய ஆராய்ச்சி நடைபெற வேண்டும். அங்கு வருமாறு நீங்கள் என்னை அழைத்தால்-மாதத்திற்கு ஒரு முறை அல்ல, வாரந்தற்கு ஒருமுறை அழைத்தாலும் வருகிறேன். ஆகவே இங்கு அலுவலகம் இருப்பது குறித்து நீங்கள் மறுபரிசீலனை செய்யத்தான் வேண்டும்.

"திராவிட மொழிகளின் வளர்ச்சிக்கு எல்லா வகை உதவிகளையும் என்றும் தருவதற்கு நாங்கள் தயார்.

"அதிகம் படிக்காத-எழுத மட்டுமே தெரிந்த மக்களும் புரிந்துகொள்ளும் வகையில்-சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் அகராதி இருக்கவேண்டும்.

"இப்படி எல்லாம் செய்தால் அகராதி பெரிதாக இருக்குமே என்று கூறலாம். ஆனாலும் பரவாயில்லை! பகுதி பகுதியாக வெளியிடலாம். இங்கே ஒரிஸாவைச் சேர்ந்த அறிஞர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, 5 ஆண்டுக்கு ஒருமுறை புதிய சொற்களை இணைத்து, புதிய பதிப்பு அல்லது திருத்திய பதிப்பு என்று வெளியிடலாம். உங்களால் இதனைத் தரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

"நண்பர் வி.பி.ராமன் அவர்களின் தந்தையார் ஏ.வி. ராமன் ஒரு அகராதி எழுதினார். அதற்காக 10 ஆண்டுக்காலம் அவர் பட்டபாட்டை நானே பார்த்தேன். அந்த அகராதிப் பணி முடிந்ததா என்பதுநினைவில்லை. வேண்டுமென்றால் அதையும் பெற்றுத்தரத் தயாராக இருக்கிறேன். எப்படிச் சேர்ப்பது-எப்படிப் பிரிப்பது என்பதை எல்லாம் உங்கள் அறிவைக் கொண்டு முடிவெடுக்க வேண்டுகிறேன்.

"இந்த வெளியீடுகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று சொன்னார்கள். உங்கள் உழைப்பு பலகோடி ரூபாய் பெறும். தமிழ் என்று பார்க்கும்போது பணத்தைப் பற்றிக் கவலை இல்லை. யார் அரசில் இருந்தாலும் தமிழுக்குப் பணம் தந்தே ஆக வேண்டும். அந்தவகையில் ஒரு கோடிரூபாய் அல்ல எத்தனை கோடி ரூபாய் என்றாலும் தருவதற்குத் தயார்."
—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் உரை நிகழ்த்தினார்.

**தொகுப்பு: —தமிழ்ப்பித்தன்**



**சேலம் மாவட்டம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர் வசம் ஆகியது. முதல் ஆங்கிலேய மாவட்ட ஆட்சியாளர் கிண்டர்ஸ்லி (KINDERSLEY) 30.11.1790-ல் பதவி ஏற்றிருக்கிறார். தற்போது மாவட்ட ஆட்சியாளராக இருக்கும் திரு இரா. வரதராசலு இ.ஆ.ப., 148-வது மாவட்ட ஆட்சியாளர் ஆவார்.**

**கிணற்றுக்கு உறை இறக்கும் தொழிலாளர்கள்சேலம்மாவட்டத்தில் அதிகமான அளவில் இருக்கிறார்கள். குஜராத், பம்பாய், போன்ற மற்ற மாநிலங்களுக்கும் இவர்கள் சென்று கிணறு உறை இறக்கும் பணியில் ஈடுபடுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் இந்திய நாடு முழுதும் காணப்படும் கிணறு உறை இறக்கும் தொழிலாளர்களில் 85 சதவிகிதத்தினர்-சேலம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.**

# சிந்தை குளிர்விக்கும

# சந்தன மரக் காடுகள்

**வ**னவிலங்குகளைப் பாதுகாப்பது மட்டுமல்ல, வனங்களைப் பாதுகாப்பதும் வனத்துறையின் தலையாய பணியாகும்.

180816.8 எக்டேர் பரப்பளவில் இயற்கைத்தாய் தனது வனவளத்தைப் பரப்பியிருக்கும் சேலம் மாவட்டத்தை பொருத்த மட்டில் - சிங்கம், புலி போன்ற துட்ட மிருகங்கள் இல்லை; புள்ளி மான், கொம்புமான், முயல், கரடி, பறக்கும் அணில், காட்டெருமை போன்ற மிகச் சாதாரண மிருகங்கள் உண்டு.

சேலம் வனக்கோட்ட முதல் பிரிவு காப்புக்காடு 146100.2 எக்டேர், மூன்றாம் பிரிவு காப்புக் காடு 151418.2 எக்டேர், காப்பு நிலக்காடு 19568.4 எக்டேர் என்ற வகையிலும் பகுக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்ட வனக் கோட்டத்திலே ஐந்து நிரந்தர வனச்சரகங்களும், சிறப்புப் பணிகளைக் கொண்ட வனச்சரகங்கள் இரண்டும், இதுதவிர மலைத்தலப் பாதுகாப்புக்கென கொல்லிமலையில் ஒன்றும், ஏர்க்காட்டில் ஒன்றுமாக இரண்டு வனச்சரகங்களும் இயங்குகின்றன இப்போது.

சேலம் மாவட்டத்திலுள்ள காடுகள் வனவிலங்குச் சரணாலயம் என்ற அளவிலே பிரசித்தி பெற்றிடவில்லை; இயற்கைத் தாயின் அரவணைப்பில் எழுந்து நிற்கும் சந்தன மரங்களாலே புகழ்மணம் பரப்பி பூரிப்படைந்துள்ளன. புளி, மூங்கில், கடுக்காய், தைல மரங்களெல்லாம் இந்த வனக்கோட்டத்தில் உண்டென்றாலும் சந்தன மரங்களுக்குப் பிறகே அவையெல்லாம் என்ற நிலை இருக்கிறது.

வனத்துறையைப் பொறுத்த மட்டில் - அதிக பட்ச வருவாய் ஈட்டித்தரும் மரமல்லவா சந்தன மரம்!

இந்தியா முழுமையும் கணக்கிட்டோமென்றால், சந்தனமர உற்பத்தியில் அதைச் சார்ந்த தொழில்களின் உயர்வில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் சேலம் அந்த வகையில் முதலிடம் வகிக்கிறது. இக்கோட்டத்தில் 23 சந்தனமரத் தொடர் வரிசைகள் - 138891.20 எக்டேரில் இருக்கின்றன.

சந்தன மரத்தைப் பொறுத்த வரை நாமாகப் பயிரிடுவதைவிட தாமாக முளைப்பவைகளே தழைத்தோங்கி வளர்கின்றன. ஆனாலும், அம்மரங்களைச் செயற்கை முறையில் வளர்க்க விஞ்ஞான அடிப்படையிலே தக்க நிலப்பரப்புகள் கண்டறியப்பட்டு மிக வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கருவை மரம் போன்ற உடலும் கிளுவையில் உள்ளது போன்ற இலைகளுமாக வளரும் இந்த மரங்கள் நெடு நெடுவென்று அதிகம் உயரம் வளர்வதில்லை ஆலைப் போலவோ அரசைப் போலவோ பருப்பதும் இல்லை. ஓரளவுக்கு வளர்கின்றன.

ஒருவகையில் இது கரும்பைப் போன்றது. ஆம், நம் பார்வையில் படும் மரப்பகுதிகளைவிட மண்ணுக்குள் புதைந்திருக்கும் வேர்ப்பகுதியே தரம் மிகுந்ததாகக் கருதப்படுகிறது. வேர்ப் பகுதியிலே இருந்துதான் அதிக சந்தன தைலம் (Sandal wocd oil)

**இல. இராசேந்திரன்**

************************



# சேலம் வீட்டு வசதி



மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே தமிழ்நாடு அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மற்றும் பொருளாதாரத்தில்பின் தங்கிய மக்களுக்கு இருக்க இடவசதி செய்து தருவதே தலையாய குறிக்கோளாக்வும் கொண்டுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தனக்குச் சொந்தமாக வீடுவேண்டும்என்று ஆசைப்பட்டாலும் அதற்குத் தேவையான அளவு பணம் சம்பாதிப்பதோ, முதலீடு செய்வதோ தன் வாழ்நாளில் முடியாத நிலையாகும்.

ஆகையால் இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே 'தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்' உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு சாதாரண குடிமகனுக்கும் அவரவர் பொருளாதார வசதிக்கு ஏற்ப வீட்டுவசதிகளைச் செய்து வருகின்றது. மேற்கூறிய அடிப்படையில் 'தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்' குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கும் பொருளாதாரத்தில் நலிந்தோர்க்கும் மற்றும் குடிசைவாழ் மக்களுக்கும் வீட்டு வசதி அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு கிராமப்புற மற்றும் பஞ்சாயத்துப் பகுதிகளிலும்கூட இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

குடிசைவாழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகளை நாம் பார்ப்போமேயானால் மனித இனம் இந்நிலையிலே சாக்கடைக்கு அருகிலும், மழை பெய்தால் தண்ணீர் தேங்கக்கூடிய பள்ளமான இடங்களிலும், சுகாதார வசதி ஏதுவுமின்றி, மழையிலும், குளிரிலும், வெயிலிலும்இருந்து தங்களைக் காத்துக் கொள்ள இயலாதவர்களாகவாழும் காட்சி அனைவரின் மனதையும் கலங்க வைக்கும். இந்த அவல நிலையைப் போக்க குடிசை மாற்றுத் திட்டத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு வீடுகளைத்தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கட்டி வருகின்றது. இத்திட்டத்தினை கிராமப்புறம் மற்றும்பஞ்சாயத்து பகுதிகளில்செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளதற்கு இணங்க முதற்கட்டமாக சேலம் மாவட்டம் பள்ளிப் பாளையம் அருகில் உள்ள கோரக்காட்டு வலசு என்ற இடத்தில் 1248 வீடுகளை சுமார் ரூ. 183.60 இலட்சம் செலவில்கட்டி முடிக்க திட்டமிடப்பட்டு இந்தப் பணி முடிவடையும் தறுவாயிலுள்ளது. இந்தத் திட்டம் இப்பகுதிக் குடிசைவாழ் மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

இத்திட்டத்தில்பரந்த சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர்ப்போக்கு வசதி ஆகியவை சுகாதாரமான முறையில் செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை குறுகியகாலத்தில் முடித்து, குடிசைவாழ் மக்களைக் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சிறப்பம்சமாக குடிசைவாழ் மக்கள் மாதத் தவணைத் தொகையில் ஒரு பகுதியான ரூ. 35லிருந்து ரூ.45வரை 25 ஆண்டுகளுக்குள் செலுத்தி வீடுகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். மீதியுள்ள மாதத் தவணைத் தொகையைத் தமிழ்நாடு அரசு மானியமாகக் கொடுத்து உதவுகிறது.

**குடிசைவாழ் மக்களுக்கும் தவணை முறையில் உரிமை பெறும் திட்டம் வேண்டுமென்று தமிழ்நாட்டிலேயே கிராமப் புறத்தில் முதலாவதாக அரசின் குறிக்கோளின்படி நிறைவேற்றப்படுவது இந்தத் திட்டமாகும்.**

இது நாள் வரையில் சேலம் நகரில் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு வசதி வாரியம் 2188 குடியிருப்புகளைக் கட்டி, வீட்டு வசதி வாடகைத் திட்டத்தின் கீழ் குறைந்த வாடகைக்குக் கொடுத்துள்ளது. இந்த வாரியத்தின் சேலம் வீட்டு வசதிப் பிரிவு தாதம்பட்டியில் நெசவாளர்களுக்காக ஒரு திட்டம் தீட்டி 208 குடியிருப்புகளை ரூ. 25.52 இலட்சம் செலவில் கட்டி, நெசவாளர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இக் குடியிருப்புக்கு 'வள்ளுவர் குடியிருப்பு' என்று பெயரிடப்பட்டுள்ளது.



சேலம் தாதகாப்பட்டியில் 148 குடியிருப்புகள் ரூ. 111.80 இலட்சம் செலவில் கட்டப்பட்டு உயர் வருவாயினருக்கும் மற்றும் நடுத்தர வருவாயினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புக்கு 'பெரியார் குடியிருப்பு' என்று பெயரிடப்பட்டுள்ளது.

திருச்செங்கோட்டில் புறநகர்ப் பகுதி I திட்டத்திற்கு 48.12 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அதில், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக 263 குடியிருப்புகளும், குறைந்த வருவாயினருக்காக 374 குடியிருப்புகளும், கட்டப்பட்டுள்ளன. நடுத்தர வருவாயினருக்காக 169 மனைகளும், உயர்தர வருவாயினருக்காக 28 மனைகளும் ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் ரூ. 107 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டது. இந்தப்பகுதியில் இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நில நீர்த் தேக்கத் தொட்டியும், இரண்டு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டி, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புறநகர்ப் பகுதி II திட்டத்திற்காக 32.47 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அதில் ரூ. 81 இலட்சம் மதிப்பிற்கு நடுத்தர வருவாயினருக்கு 82 வீடுகளும், குறைந்த வருவாயினருக்கு 88 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. குறைந்த வருவாயினருக்கு 126 மனைகளும், நடுத்தர வருவாயினருக்கு 60 மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இப்புறநகர்த் திட்டத்திற்கு 'அண்ணா நகர்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் குறைந்த வருவாயினருக்காக 1.71 ஏக்கர் நிலப் பரப்பில் 51 குடியிருப்புகள் ரூ. 10.08 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, கட்டடப்பணி முடிவடையும் தறுவாயிலுள்ளது. மேட்டூரில் தொழிலாளர்களுக்காக நடுத்தர வருவாயினர் பிரிவின் கீழ் ரூ. 29.90 இலட்சம் மதிப்பீட்டில் 99 வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணியும் முடிவடையும் தறுவாயிலுள்ளது.

சேலம் வட்டத்தில் ஏறக்குறைய 3,614 குடியிருப்பு ரூபாய் 598.85 இலட்சம் செலவிலும், நாமக்கல் வட்டத்தில் 192 குடியிருப்புகள் ரூ. 19.76 இலட்சம் செலவிலும், சங்ககிரியில் 62 குடியிருப்புகள் ரூ. 17.90 இலட்சம் செலவிலும், குமாரபாளயத்தில் 63 குடியிருப்புகள் ரூ. 5.35 இலட்சம் செலவிலும் திருச்செங்கோட்டில் பகுதி Iஇல் 806 குடியிருப்புகள் ரூ. 76.49 இலட்சம் செலவிலும், பகுதி IIல் 170 குடியிருப்புகள் ரூ. 81.27 இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகை அருகில் அரசு அலுவலர்களுக்காக 96 வீடுகளை ரூ. 72.24 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி, கூடிய விரைவில் துவங்கப்படவிருக்கிறது.

சேலம் நகரின் மையப் பகுதியான வெள்ளக் குட்டை ஏரி என்ற பகுதியில் 7.70 ஏக்கர் பரப்பளவில் 630 குடியிருப்புகளை ரூ. 169.93 இலட்சங்கள் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஏர்க்காட்டை நோக்கி...

**அரிய தாவர வகைகளைச் சேகரிப்பதற்காக, கர்நாடகம், மராட்டியம், கேரளம் ஆகிய மாநிலங்களிலிருந்து தாவர இயல் மாணவர்கள் ஏர்க்காட்டை நோக்கி வருகிறார்கள்.**



எடுக்கப்படுகிறது.

இதற்காக உயிரோடு நிற்கும் மரங்களை வேரோடு வெட்டும் வழக்கம் இந்த வனப்பகுதியிலே இல்லை. பட்டுப்போன மரங்களே வேரோடு பக்குவமாகப் பெயர்த்தெடுக்கப்படுகின்றன. ''ஸ்பைக்' ( Spike ) என்கிற ஒருவகை நோய் பீடிப்பால் இந்த மரங்களில் பெரும்பாலானவை அல்பாயுளில் மடிந்துவிடுகின்றன. சுமார் 100 சந்தன மரங்களைப் பெயர்த்தெடுக்க ஆயிரம் ரூபாய் செலவாகிறது.

இந்த நோயிலிருந்து சந்தன மரங்களைப் பாதுகாப்பது எப்படி? அது எப்படி- எந்த தட்பவெப்ப நிலையில் மரங்களை மக்கிவிடச் செய்கிறது என்பதைப் பற்றியெல்லாம் ஆராய மதுரை மாநகரினைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு வனத்துறையைச் சேர்ந்த ஆராய்ச்சிப் பிரிவு இயங்கி வருகிறது.

அந்த வகையிலே களையப்பட்ட சந்தன மரங்கள் 1980-81ல் 71783 மரங்களாகும்; அதில் தேறிய 468 டன் மூலம் வருவாய் ரூ.98,08,034. 1981-82ல் 68693 மரங்கள் களையப்பட்டு 782 டன் விற்பனையானதன் மூலம் வந்த பெருந்தொகை 2 கோடியே 17 லட்சத்து 69 ஆயிரத்து 322 ரூபாய் ஆகும். 1982-83ல் 306236 சந்தன மரங்கள் களையப்பட்டதில் 837 டன் உருப்படியாக்கப்பட்டதன் மூலம் கிடைத்த தொகை 2 கோடியே 88 லட்சத்து 40 ஆயிரத்து 145 ரூபாயாகும். 1983-84ல், 61326 மரங்கள் கிடைத்து 398 டன் தேறியதன் மூலம் வந்த வருவாய் ஒரு கோடியே 60 லட்சத்து 53 ஆயிரத்து 783. மாவட்ட வன அலுவலர் திரு எஸ்.வி.நாச்சிமுத்து மூலம் நமக்கு இந்த விவரம் கிடைக்கிறது. மற்றவகை மரங்களாலும் இந்த வனக்கோட்டத்திற்கு வருவாய் உண்டென்றாலும், அவை இந்த அளவிலே ஏற்றம் பெற்றிருக்கவில்லை.

சந்தனத்தைலம் வேண்டுமானால் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படலாம், சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வது கூடாதென இந்திய அரசு சட்டம் பிறப்பித்த பின்னாலேதான் இந்திய மாநிலங்களேகூட இங்கு வந்து சந்தன மரங்களை வாங் பிறப்பித்த பின்னாலேதான் மராட்டியம், கேரளம், உத்திரப் பிரதேசம் போன்ற மற்ற இந்திய மாநிலங்களேகூட இங்கு வந்து சந்தன மரங்களை வாங்கிச் சென்றிடும் நிலை அதிகரித்துவிட்டது. அதில், குறிப்பாகக் கர்னாடக மாநிலம்தான் தமிழகத்திலே உள்ள சந்தனமரங்களை வாங்குவதில் போட்டி போட்டுக் கொண்டு முன்வருவதாக இருக்கிறது. இவ் வனக்கோட்டத்தில் 6.12.78 முதல்தான் சந்தனக் கட்டை ஏலம் நடைபெற்றுவருகிறது.

ஜூலை, டிசம்பர் மாதங்களிலே ஆண்டுக்கு இருமுறை டெண்டர் கோரப்பட்டு சந்தன மரங்கள் ஏலம் விடப்படுகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு (1983) ஜூலையில், சேலத்தில், சந்தன மரங்கள் 396 டன் ஏலம் விடப்பட்டதன் மூலம் மொத்தத்தில் ரூ.1,56,01,708 கிடைத்ததென்றால் அதில் 79 டன்களை 33 லட்சத்து 90 ஆயிரத்து 540 ரூபாய்க்குக் கர்னாடக மாநிலம் தான் இங்கே ஏலம் எடுத்திருக்கிறதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

சந்தன மரங்களின் வளர்ச்சிக்கு ஏற்ற இடம் மலைப்பிராந்தியமே ஆகும். சேலத்தைப்போல் அல்லாமல், தனியார் சிலரும் தங்கள் நிலப்பகுதியிலே சந்தனமரங்கள் பயிரிட்டிருப்பதை நாம் காண்கிறோம். இதுபற்றிக் கேட்டபோது மண்டல வனப்பாதுகாவலர் திரு எம். அரிகிருஷ்ணன், இ.வ.ப. அவர்கள் இப்படிச் சொன்னார்.

''1924 ஆம் ஆண்டுக்கு முன்னால் பட்டா செய்யப்பட்டநிலத்திலே வளர்க்கப்படும்சந்தனமரங்கள் அந்த நிலத்தின் உரிமையாளருக்கே சொந்தமாகிவிடும்; அதற்குப் பின்னால் பட்டா செய்யப்பட்ட நிலத்தில் இருப்பவை அரசுக்கே சொந்தம். குறிப்பிட்ட உதவித்தொகை கொடுத்துவிட்டு அதை வனத்துறை எடுத்துக் கொள்ளும். இம்மரம் தொடர்பான வேலைகள் ஆண்டு முழுதும் இருப்பதில்லை. எனவே தொழிலாளர்களை நிரந்தர அடிப்படையில் வேலைக்கமர்த்துவதில்லை.''



மற்ற மலைப்பகுதிகளில் இந்த மரங்கள் ஏன் வளர்ந்திடவில்லை? அதற்கும் காரணமிருக்கத்தான் செய்கிறது.

சந்தனமரம் வளரக்கூடிய மலைவெளி ஆயிரம் அடிக்குக் கீழே இல்லாததாக - நாலாயிரம் அடிக்கு மேலே இல்லாததாக இருக்க வேண்டும்; ஆடு-மாடு மேய்ச்சலற்றதாகவும் மழைப் பொழிவு 30 முதல் 40 அங்குலம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்திலுள்ள மலைப்பகுதிகள் இந்த இலக்கணத்திற்குக் கட்டுப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. ஆகவேதான் இந்த வனக்கோட்டத்தில் சந்தனமரங்கள் செழித்தோங்கி வளர்கின்றன.

இந்த மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான வனப்பகுதிகள் ஒதுக்கி வருகிறது. 1982-83ஆம் ஆண்டில் மட்டும் இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் வகையிலே அரசு மூலம் செலவிடப்பட்ட தொகை ரூ. 17,65,133 ஆகும். இந்த 1983-84ல் இது வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 27,06,450.

சேலம் நகரில் உள்ள அஸ்தம்பட்டி என்ற பகுதியில் தமிழ்நாடு அரசு வனத்துறை சந்தனமரக் கிடங்கு ஒன்று இருக்கிறது. அரசினர் விருந்தினர் மாளிகை அருகே 1.13 எக்டேர் பரப்பளவில் உள்ள அங்கேதான் சந்தன மரங்கள் பட்டை நீக்கி பக்குவப் படுத்தப்படுகின்றன. முதலில் மரத்தை எடைபோட்ட பிறகே அதைத் தோலுரிக்கும் பணி தொடங்குகிறது. சுமார் அரையங்குல கனமிருக்கின்ற மேல் பட்டையை நீக்கிய பிறகுதான் உரம்பாய்ந்த சந்தன வாசப்பகுதியையே காணமுடிகிறது. அப்படி உரிக்கப்பட்ட வெள்ளைச் சிராய்களே (Sap Wood) மலை போல் குவிந்துள்ளன அங்கே. இதை மட்டும் அடிக்கடி ஏலம் விட்டுவிடுகிறார்கள்.

''இது எதற்காவது பயன்படுவதுண்டா?'' எனக் கேட்கிறோம். ''பெரிய ஆலயங்களில் சந்தனாபிஷேகம் போன்றவற்றிற்கு இந்த மாவட்டச் சந்தன மரம் பயன்படுகிறதென்றால்-ஊதுவத்தி போன்ற தொழில்களில் இது பயன்படுத்தப்படுகிறது'' என்கிறார் உதவி வனப்பாதுகாவலர் திரு என். வைத்தியநாதன். காடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட சந்தன மரங்கள், அஸ்தம்பட்டியில் மட்டுமின்றி வனப்பாதுகாவலர் குடியிருப்பு வளாகத்திலும், மாவட்ட வன அலுவலர் குடியிருப்பு வளாகத்திலும் இடப்பற்றாக்குறை காரணமாக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அதற்கும் இதற்குமாக 19 காவலாளிகள் வனத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றடி நீளமுடையவைகளாக அளவோடு துண்டாடப்படும் சந்தனக் கட்டைகள்-ஒவ்வொன்றும் எடை போடப்பட்டு, 7 கிலோ கிராமுக்குக் குறையாதவை முதல் தரம் 2 கிலோவுக்குக் குறையாத மற்றவை இரண்டாம் தரம் என்று தரம் பிரிக்கிறார்கள்.

சேலம் வனக்கோட்டத்தில் - இயற்கை வனப்பாதுகாப்பு, மைனர் மகசூல், கிராமநலக்காடுகள், தேக்குமர உற்பத்தி, விறகு மரக்காடுகள், சந்தன மர உற்பத்தி, மரக்கூழ் தோட்டங்கள், வளர்ச்சி குன்றிய காடுகளில் வளம் தேக்கிடல், கட்டடங்கள், தொழிலாளர் மற்றும் பணியாளர் வசதிகள், வன ஒருங்கிணைப்பு, தீவிர செடி நடும் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் முன்னேற்றம், வறட்சி நிவாரணப் பணிகள் போன்ற பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஆண்டு தோறும் தமிழக அரசு பெருமளவில் நிதி



சேலம் மண்டலத்தில் முதல் வனப்பாதுகாவலராக லெப்டினன்ட் கர்னல் கேம்பெல் வாக்கர் (Campbele Walker) 1852-ல் பொறுப்பேற்றிருக்கிறார். தற்போது பொறுப்பில் இருக்கும் திரு எம். அரிகிருஷ்ணன் சேலம் மண்டலத்தின் 60-வது வனப்பாதுகாவலர் ஆவார். இவர் புகழ்பெற்ற வனவிலங்குப் புகைப்பட நிபுணர் எம். கிருஷ்ணன் அவர்களின் மகனாவார்

மனித சஞ்சாரமற்ற, தண்ணீர் வசதி கொண்ட தொடர்ச்சியான அடர்ந்த காடுகளே வனவிலங்குகளின் புகலிடமாக, வகையான சரணாலயமாக விளங்கமுடியும். அவ்வகைக் காடுகள் சேலம் மாவட்டத்திலே மிகவும் குறைவு. தொடர்ச்சியான மலைப்பகுதி இல்லாமல் - விட்டுவிட்டுக் குன்றுகளாக நிறைந்துள்ள இம்மாவட்டத்தில் வனப்பகுதியும். அது போலவே துண்டு துண்டாகக் காணப்படுகிறது. இந்தக் காரணத்தாலேயே இப்பகுதி வனவிலங்குகள் வாழத்தக்கதாக அமைந்திடவில்லை.

ஆனாலும் - சேலத்திலிருந்து ஏர்க்காடு செல்லும் வழியில், ஏழாவது கிலோமீட்டரில் உள்ள குறும்பப் பட்டியில் மனமகிழ் வனம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள் வனத்துறையினர்.


மாவட்டங்களின் தலைநகர் தோறும் மிருகக் காட்சி சாலை அமைப்பது என்ற அரசின் திட்டத்திற்கு முன்மாதிரியாக முதன் முதல் அமைக்கப்பட்ட அங்கே 600 எக்டேர் இயற்கை வனம் இதற்கெனக் கையகப்படுத்தப் பட்டுள்ளது அரசால்.

அந்த மனமகிழ் வனத்தில் - மலைப்பாம்புகள், மானினங்கள், மயில்கள், முயல்கள், குரங்கு வகைகளெல்லாம் இயற்கையான வனச்சூழ்நிலையிலே வைத்து வளர்க்கப்படுகின்றன. ஏர்க்காடு சென்று வருகிறவர்கள் இந்த மனமகிழ் வனத்தைக் கண்டு மகிழ ஆர்வத்தோடு வந்துபோகிறார்கள் மழலை அரும்புகளோடு.

சென்னையிலுள்ள தேசிய சிறுவர் பூங்கா போலுள்ள இந்த மனமகிழ் வனம் நம் சிந்தையில் நிற்கிறது. சிறப்பாக விளங்குகிறது.

''சேலம் மாவட்ட வனத்துறை பற்றி வேறு ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?' என்று கேட்கிறோம். சேர்வராய மலையின் தென்சரக வன அலுவலர் திரு. டி.எம்.பசுவராஜ், அண்மையில் இம்மாவட்டத்தில் நடந்த வனத்துறை தொடர்பான இரண்டு துக்க நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டார். நாமக்கல் பகுதியில் திருட்டுத்தனமாக மரம் வெட்டிய சிலரைத் தடுத்த வன அதிகாரி ஒருவரை அந்தக் கும்பல் மூர்க்கத்தனமாகத் தாக்கி கொலை செய்திருக்கிறது. காரிப்பட்டி பிரிவிலிருக்கும் வன அலுவலர் ஒருவரின் மனைவி சேலத்தில் தனது வீட்டில் பகல் வேளையிலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

நாத் தழுதழுக்க அவர் அந் நிகழ்ச்சிகளைச் சொன்னபோது நமக்கே சிலிர்த்துப் போகிறது. வனங்களில் பணிபுரியும்அலுவலர்களுக்கு மிருகங்களால் மட்டுமல்ல;சில மனித மிருகங்களாலும் ஆபத்துக் காத்திருக்கிறதே என்பதை எண்ணி நாம் மனம் கலங்குகிறோம்.





19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அருணாசல ஆசாரி என்பவர், சேலத்தில் கிடைத்த இரும்பைப் பயன்படுத்தி, வேட்டை வாள்களையும்-பன்றியைக் கொல்லும் கருவிகளையும் செய்து, இந்தியா முழுமைக்கும் விற்றிருக்கிறார். அந்தக் கருவிகளுக்கு நாடு முழுதும் நல்ல வரவேற்பு இருந்திருக்கிறது.

1853ல் கிழக்கிந்தியா இரும்புக் கம்பெனி என்னும் நிறுவனம் உருவாக்கப்பட்டு கஞ்சமலையில் கிடைக்கும் இரும்புத் தாதுக்களைக் கொண்டு இரும்பு தயாரித்திருக்கிறது. இந்த இரும்பு மிக உயர்ந்த தரமுடையதாகவும் தொங்கு பாலங்கள், இரும்புக் குழாய்கள் தயாரிப்பதற்குத் தகுதி படைத்ததாகவும் இருந்தது. மாவீரன் அலெக்சாண்டருக்கு புருஷோத்தமன் என்னும் மன்னன் 30 பவுண்டு எடையுள்ள இரும்பை அன்பளிப்பாகத் தந்தான் என்றும், அது, சேலத்தில் கிடைத்த இரும்புதான் என்றும் சொல்லப்படுகிறது.



ஏர்க்காடு தமிழ்நாடு ஓட்டலில் உள்ள பூங்காவில் மகிழ்ந்து விளையாடும் குழந்தைகள்





தோட்டக்கலைத் துறையைச் சேர்ந்த நாற்றங்கால் பண்ணை.

பார்வையைச் செலுத்தினால் - சேலம் நகரம் மேக்னசைட் தொழிற் கூடம்-மேட்டூர் நீர்த் தேக்கப்பகுதி-பாக்ஸைட் சுரங்கம் ஆகியவற்றை எளிதில் பார்க்க முடிகிறது. 50 காசு கொடுத்து ஒரு டோக்கனைப் பெற்று, அதனை இந்தக் கருவியினுள் செலுத்தினால்தான் - இது இயங்கும். அப்புறம்தான் காட்சியைக் காண முடியும். ரூ. 1.80 இலட்சம் செலவில் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 40 ஆயிரம் செலவில் தொலைநோக்குக்கருவி அமெரிக்காவிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தினால் 1972-ல் உருவாக்கப்பட்ட ஓட்டல் ஒன்று இங்கு உள்ளது. இதில் தங்கும் அறைகளும் உள்ளன. 1981 ஆகஸ்டு மாதத்தில் 30 படுக்கைகளும் 3 கூடங்களும் கொண்ட இளைஞர் விடுதி உருவாக்கப்பட்டுள்ளது. **தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் மூலம் உருவாக்கப்பட்ட முதல் இளைஞர் விடுதி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.**

கடந்த மூன்றாண்டுகளாகச் சுற்றுலாப் பயணிகள் இங்கு அதிக அளவில் வருகை புரிகிறார்கள். சாலை வசதியும்— தங்குமிட வசதியும், உணவு வசதியும் தக்க வகையில் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

சூரிய வெப்பத்தின் உதவியால் வெந்நீர் தயாரிக்கும் திட்டம் இந்த ஓட்டலில் இயங்குவதற்கு வழி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் தங்கும் அறைகளில் 400 லிட்டர் கொள்ளளவு கொண்ட வெந்நீர் டாங்க் விரைவில் இயங்கப்பட உள்ளது.

''இந்த இடத்தில் சுற்றுப்புறச் சூழ்நிலை தூய்மையாக உள்ளது. உடல்நலத்திற்கேற்ற மலைவாழ்விடமாக இது திகழ்கிறது; அமைதி இங்கே கொலுவிருக்கிறது; அதனால்தான் இங்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். ஏப்ரல் மாதத்திலிருந்து அக்டோபர் வரை சுற்றுலாப் பயணிகள் நிறையப் பேர் வருகின்றனர்'' என்று குறிப்பிடுகிறார், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக ஓட்டலின் மேலாளர் திரு. டி. ஆர் விசுவநாதன்.

ஏர்க்காட்டில் அரசுத் தோட்டப்பண்ணை ஒன்று உள்ளது. வண்ண வண்ண மலர்களும் வகை வகையான பழ மரங்களும் கொண்ட இந்தப் பண்ணை 25 ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஏர்க்காட்டுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் 'லேடீஸ் சீட்' என்னும் பகுதியைச் சென்று பார்க்கும்போது, அதன் அருகில் உள்ள இந்தப் பண்ணையையும் பார்த்து மகிழ்கிறார்கள். பலர், பூச்செடிகளின் அருகில் நின்று புகைப்படம் பிடித்துக் கொள்கிறார்கள். கொடை ஆரஞ்சு, எலுமிச்சை, மாதுளை, கொய்யா, ப்ளம்ஸ், பலா மற்றும் ஏலம், பேரி ஆகியவை இங்குப் பயிரிடப்படுகின்றன. நாற்றங்கால் பண்ணை ஒன்றும் உள்ளது. பொது மக்களுக்கு நாற்றங்கால் செடிகள் விலைக்குக் கொடுக்கப்படுகின்றன.

ரோஜாத் தோட்டம் ஒன்று, ஒரு ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. பலவகை ரோஜாக்கள் - ஒட்டுரோஜாக்கள் மற்றும் அழகுச் செடிகள் எல்லாம் இங்குக் காட்சி தந்து,

சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கின்றன. வண்ண மலர்களின் விதைகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

''இங்கு ஆப்பிள் பயிரிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில் அது சரியாக வளரவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்ணைக்கு ஆண்டு ஒன்றிற்கு 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது. 2 இலட்ச ரூபாய் வருமானம் கிடைக்கிறது. நாற்றங்கால் பண்ணையை இன்னும் அபிவிருத்தி செய்தால் வருமானமும் கூடுதலாகக் கிடைக்கும்'' என்று கூறுகிறார் தோட்டக்கலை அலுவலர் திரு டி. சபேசன்.

தோட்டக்கலைத் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏர்க்காட்டில் உள்ளது. 14-2-1978ல் இந்த ஆராய்ச்சி நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

விவசாயம், அதனைச் சார்ந்த சிறுபிரிவுகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி அளித்தல், விவசாய முன்னேற்றத்திற்கு ஆராய்ச்சி செய்தல், ஆராய்ச்சி முடிவுகளை விவசாயப் பெருமக்களுக்கு எடுத்துரைத்தல் ஆகியவை இந்த ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கங்களாகும்.

தேனீ வளர்ப்பை அதிகரிப்பது எப்படி, கறவை மாடுகள் வளர்ச்சிக்கு உதவுவது எப்படி, கம்பளித் தயாரிப்பை ஏற்படுத்துவது எப்படி என்ற வகையில் ஆய்வு நடைபெறுகிறது.

பல்வேறு வகை ஏலக்காய்கள் சேகரிக்கப்பட்டு, அவற்றின் பருமன், வண்ணம், எண்ணெய்ச்சத்து ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன.




இளைஞர் விடுதி



ஏர்க்காடு நகரிய திரை அரங்கு

தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் இதுதான்.



# சேலம் பற்றி ராஜாஜி



கவிஞர் இராமலிங்கம்பிள்ளையவர்கள் என் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதிலே எனக்குப் பெருமை. எங்களுடைய மாவட்டத்திற்கு வேறுபல சிறப்புகளும் இருக்கின்றன.

எல்லோருக்குமே சேலம் என்றால் குண்டஞ்சு வேஷ்டியும், குண்டு மாம்பழமும்தான் ஞாபகம் வரும். ஆனால் எனக்கோ வேறு பல விஷயங்களும் நினைவுக்கு வருகின்றன.

எங்கள் சேலம் மாநகரில் ஒரு ஆறு இருக்கிறது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் கூட அதில் மிகவும் சுத்தமான நீர் ஓடிக்கொண்டிருந்தது. இன்றும் கூட ஸ்நான கட்டங்கள் - படித்துறைகள் அதிலிருப்பதைப் பார்க்கலாம். ஆனால் இப்போது? தெளிந்த தண்ணீர் இல்லை. ஆறு திசை மாறி சேலத்தின் பிரதான சாக்கடை ஆகிவிட்டது. ஆனாலும் அதன் பெயர் திரு-மணிமுத்து - ஆறுதான் இன்றைக்கும்!

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கொள்ளைக்காரர்களைப் பற்றித் தெரியுமா உங்களுக்கு?

அவர்கள்தான் கூளங்காளன், சின்னக்கந்தன், பெரியகந்தன் என்பவர்கள். அவர்களெல்லாம் மறைந்துபலவருஷங்களானாலும் கூட இன்றும் பெரியவர்கள் அந்தப் பெயர்களைக் கேட்டால் பயப்படுவார்கள். தாய்மார்களோ குழந்தைகளைப் பயமுறுத்த அந்தப் பெயர்களை உபயோகிப்பார்கள்.

''பட்டப்பகலில் உன் தலையை வெட்டி நாச்சந்தியில்வைப்பேன்; வக்கீல் விஜயராகவாச்சாரியார் இருக்கிறாரடா என்னை விடுவிக்க'' என்று சொல்லி, அதையும் செய்து விடுதலை வாங்குவான்! அவ்வளவு திறமையான வக்கீல் எங்கள் சேலத்தைச் சேர்ந்தவரே!

சேலம் கோதாவரியம்மாள் சங்கீதத்தில் பிரபலமானவர். அவருடைய தெய்வ கைங்கர்யமாக எங்களுடையசேலம்கோயில்களுக்கான இரண்டுரதங்களுக்கும் சீமையிலிருந்து இரும்பு அச்சுக்கள் தருவிக்கப்பட்டு இன்றும் உபயோகத்திலிருக்கின்றன.

பல்லவி நரசிம்மய்யங்கார் என்ற கீர்த்தி பெற்ற சங்கீத வித்வான் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவரேயாவார்!

தஞ்சாவூர்க்காரர்கள் சேலம் வந்தால் மலைகளைப் பார்த்துப் பிரமிப்பார்கள். எங்கும் குண்டும் கற்களும், குன்றுகளும் மலைகளும்தான் காட்சியளிக்கும். மழையோ மிகவும் குறைவு. 'கல்லில் நார் உரிப்பதுபோல்' பாடுபடும் எங்கள் குடியானவர்கள் போல் கடின உழைப்பாளிகளை வேறு எங்கும் காண முடியாது.

சிப்பியில் நல்ல முத்து விளைகிறது. சேற்றிலேதான் செங்கழுநீர் பூ பூக்கிறது. அதுபோல், பலவகையான மூர்க்கத்தனமும் குணவேறுபாடுகளும் கொண்ட எங்கள் மாவட்டத்தில்தான் - நாமக்கல்லில், காந்தீயக் கவிஞர் தோன்றியிருக்கிறார்.

**[1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில், சென்னை கோகலே மண்டபத்தில் நாமக்கல் கவிஞருக்கு கர்மவீரர் காமராசர் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் பொன் முடிப்பு வழங்கிய விழாவில் மூதறிஞர் ராஜாஜி ஆற்றிய உரையில் ஒரு பகுதி]**


## நினைவுச் சின்னங்கள்

**சேலம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் ஆட்சியாளரின் அறைக்குக் கீழே - வலப்புறம் ஒன்றும் இடப்புறம் ஒன்றுமாக இரண்டு சலவைக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.**

**''22.12.1937ல் அலுவலின் போதே மறைவெய்திய முதல்-மதுவிலக்குச் சிறப்பதிகாரி டி. எல். ஆர். சந்திரன் ஐ.சி.எஸ் அவர்களின் நினைவாக இது கட்டப்பட்டது'' என்ற தகவல் உள்ள ஆங்கில எழுத்துக்கள் ஒரு கல்வெட்டில் காணப்படுகின்றன!**

**மற்றொரு கல்வெட்டு-பழங்கால மன்னர்களின் ஆட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைச் சொல்லும் மெய்க் கீர்த்திக் கல்வெட்டுப் போல-சேலம் மாவட்ட நிகழ்ச்சி ஒன்றை எடுத்துச் சொல்கிறது.**

**"1914-1919ல் நடைபெற்ற முதலாம் உலகப் பெரும் போருக்கு, இந்த நகரத்திலிருந்து 196 பேர் சென்றனர்; அவர்களில் 18 பேர் வீரமரணம் எய்தினர்" என்ற தகவல் (ஆங்கிலத்தில்) பொறிக்கப்பட்டுள்ளது.**




# இதயம் கவரும் ஏர்க்காடு



மலைகள் நிறைந்த சேலம் மாவட்டத்தில், ஏர்க்காடு என்னும் எழில்மிகு மலைவாழ்விடம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. ஏரியும் காடும் அமைந்திருப்பதால் இது ஏரிக்காடு என்று பெயர் பெற்று, நாளடைவில் ஏர்க்காடு என்று வழங்கப்படுகிறது.

*1820* முதல் *1829*வரை, சேலம் மாவட்ட ஆட்சியாளராக இருந்த எம். டி. காக்பர்ன் என்பவர் பல இடர்களுக்கு இடையே பயணம் செய்து, சேர்வராயன் மலைத்தொடரில் உள்ள இந்த மலைவாழ்விடத்தைக் கண்டறிந்தார். இங்கு ஒதுங்கி வாழ்ந்த மலைவாழ் மக்களின் வாழ்வு வளம்பெற - காடாகக் கிடந்த பகுதிகள் சீர்பெற - பல திட்டங்களை அவர் தீட்டினார். பல நாடுகளிலிருந்து பலவகைப் பயிர்களை வரவழைத்து இங்குப் பயிரிட்டார். அரேபியாவிலிருந்து காபிச் செடியையும், நன்னம்பிக்கை முனையிலிருந்தும் மற்றும் பல நாடுகளில் இருந்தும், ஆப்பிள், பேரி போன்ற பயிர்களையும் வரவழைத்து இங்குப் பயிரிட்டார்.

ஏர்க்காட்டில் முதன் முதல் தோன்றிய கட்டடம்-காக்பர்ன் அவர்களின் கட்டடம்தான். அந்நாளில் இப்பகுதியில் புலி, கரடி, காட்டுப் பன்றி, காட்டெருமை போன்ற கொடிய விலங்குகள் பல நிறைந்திருந்தன. அவற்றிடமிருந்து காத்துக் கொள்வதற்காகப் பல்வேறு பாதுகாப்புகளை அவர் செய்தார். அவரது அரும் பணிகளின் காரணமாகத்தான் இன்று அழகு கொழிக்கும் அற்புதமான மலைவாழ்விடம் ஒன்றைச் சேலம் மாவட்டத்து மக்களும்-ஏனைய மாவட்டத்தைச்சேர்ந்தவர்களும் - வெளிமாநிலம்-வெளிநாடு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் கண்டு களிக்க முடிகிறது.

சேலம் நகரிலிருந்து *30* கிலோ மீட்டர் தொலைவில் கடல் மட்டத்திற்கு *1365* மீட்டர் (*4436* அடி) உயரத்தில் உள்ள ஏர்க்காடு *22.8* சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும்.

மத்தியானம் 2 மணி வெயிலில் கூட-இந்தப் பகுதியில் குளுமை ஆட்சி செய்கிறது. ஜில்லென்ற காற்று நமது தேகத்தைத் தொட்டு. மகிழ்வூட்டுகிறது. சுருங்கச் சொன்னால் ஓர் ஊரே 'ஏர்கண்டிசன்' செய்யப்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதைகள் - இருபுறங்களிலும் காட்சி தரும் காபிச்செடிகள் பலா மரங்கள், எலுமிச்சை மரங்கள் ஆகியவை கண்ணுக்கு விருந்தாகத் திகழ்கின்றன. உயரத்தில் போகும்போது - கீழே தெரியும் பள்ளத்தாக்குகள் - பச்சைக் கம்பிளியினால் போர்த்தப்பட்டிருப்பதுபோல் தெரிகின்றன. மலை அடிவாரத்தில் உள்ள மாக்னசைட் தொழிற்கூடப்பகுதியும் நமது கண்களுக்கு நன்றாகத் தெரிகிறது. இளம் பழுப்பு நிறத்தில் திட்டுப்போல் காணப்படும் அந்தப் பகுதி-ஏர்க்காட்டில் எவ்வளவு உயரத்திற்குச் சென்றாலும் கண்பார்வையை விட்டு மறைவதே இல்லை.

**தமிழ்ப்பித்தன்**

சுற்றுலாப் பயணிகளின் இதயத்தைக் கவரும் பேராற்றல் ஏர்க்காட்டுக்கு உண்டு. தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் இங்கு வருகை புரிகிறார்கள். ஏரியில் படகுச்சவாரி செய்து பரவசம் அடைகின்றனர். சீசன் நேரத்தில் 5 ரூபாயும் - ஏனைய நேரங்களில் *3* ரூபாயும் படகுச் சவாரிக்குரிய கட்டணமாகும்.

முன்பு இந்தப் படகுப் போக்குவரத்து - மீனளத்துறையின் பொறுப்பில் நடைபெற்று வந்தது. 1980-ஆம் ஆண்டு முதல் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்புக்கு வந்துவிட்டது. படகுக் குழாம் ஒன்றினைச் சுற்றுலா வாரியம் உருவாக்கியுள்ளது. 5-5-80 முதல் செயல்பட்டு வரும் இந்தப் படகுத் துறையில் சிற்றுண்டி விடுதியும் உள்ளது.

படகு சென்றுவரும் பாதையில் தற்போது ஒரு தீவு போன்ற பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டு நற்பணித் திட்ட மாணவர்கள்-மற்றும் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத்திட்ட ஊழியர்கள் ஆகியோரின் உழைப்பால் கால்வாய் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. படகுச் சவாரியின் பரப்பளவு விரிவாக்கப்பட்டிருக்கிறது.

ஏர்க்காட்டிலிருந்து தொலை தூரத்தில் உள்ளவற்றைக் காண்பதற்காகத் தொலை நோக்குக் கருவி இல்லம் ஒன்றைச் சுற்றுலாத்துறை உருவாக்கியுள்ளது. 28-11-1982 முதல் செயல்பட்டு வரும் இந்தக் கருவியின் மூலம்



ஏர்க்காட்டில் காபிச்செடிகள் நன்கு வளரும் என்பது உலகம் அறிந்த உண்மை. தேயிலைச் செடிவளருமா என்று இந்நிலையத்தில் ஆய்வு செய்யப்பட்டது. நன்கு வளரும் என்று நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளது. என்றாலும் எவரும் தேயிலை பயிரிட முன் வரவில்லை.

வாசனைத் திரவியங்கள் தயாரிப்பிலும் இந்நிலையம் ஆய்வு செய்து வருகிறது. வணிகச் சந்தையில் அதிக விலை உள்ள பச்சோலி, ஜெரானியம், மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், வெனிலா போன்ற இனங்களில் - மண்ணுக்கேற்ற தகுதியானவற்றை உருவாக்கித் தருவதில் இந்நிலையம் முனைந்துள்ளது.

வகைவகையான - வண்ண வண்ண ரோஜா மலர்களைஆய்வு செய்து உருவாக்கியுள்ளது. மஞ்சள் நிற ரோஜா - வயலட் வண்ண ரோஜா - ஆகியவற்றை

உருவாக்குவதுடன், பெரிய அளவில் உள்ள ரோஜாக்களையும் உருவாக்கியுள்ளது. ஒரே செடியில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வண்ணத்தில் அமையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன- ஆராய்ச்சியின் பயனாக!

பங்களாக்களில் உள்ள லான் பகுதிகளைத் தக்க வகையில் அமைப்பதற்கு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

தோட்டக்கலை மாணவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை இந்நிலையத்துக்கு வந்து, 15 நாட்கள் பயிற்சி பெறுகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஏர்க்காடு நகரியம் - ஏர்க்காட்டின் வளர்ச்சிக்கு ஏராளமான பணிகளைச் செய்திருக்கிறது.

67 வருவாய்க் கிராமங்களைக் கொண்டது ஏர்க்காடு நகரியம். ஏறக்குறைய 31 ஆயிரம் மக்கள் நிறைந்த இந்த நகரியத்தில், மலை வாழ் மக்கள் 16,823 பேரும், ஆதிதிராவிடர்கள் 5244 பேரும் வாழ்கின்றனர்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், ரூ. 51.20 இலட்சம் செலவில் 22 கிலோ மீட்டர் சாலைகளும் ரூ. 9.80 இலட்சம் செலவில் 66 பாலங்களும் ரூ. 1.46 இலட்சம் செலவில் 7 பள்ளிக் கட்டடங்களும் ரூ. 84 ஆயிரம் செலவில், மகப்பேறு நிலையங்கள் 3ம் உருவாக்கப் பட்டுள்ளன. இந்தப் பணிகளால் 9,000 மக்கள் பயனடைகிறார்கள்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் சமுதாயக்கூடங்கள் 6 கட்டப் பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ரூ. 50 ஆயிரம் செலவில் உருவாக்கப் பட்டுள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக 56 மையங்கள் கட்டப்பட்டுள்ளன. 3110 குழந்தைகள் இவற்றால் பயன் பெறுகின்றனர்.



சூரிய வெப்பத்தின் உதவியால் வெந்நீர் தயாரிக்க உதவும் சாதனம்

நகரியம் - திரையரங்கு ஒன்றினை உருவாக்கியுள்ளது. தமிழ் நாடு அரசின் தியேட்டர் கார்ப்பரேசன் ரூபாய் 2.80 இலட்சம் அளித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர் மாவட்ட நல நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார். இந்த அரங்கத்தில் 782 பேர் அமரலாம்.

1960-ஆம் ஆண்டுக்குப் பின்னர், தற்போதுதான் திரை அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

**2-வது படகுக் குழாம்**

**சுற்றுலாத்துறையின் மூலம் முதன் முதலில் படகுக் குழாம் [illegible] உருவாக்கப்பட்டது. அடுத்து, இரண்டாவதாக உருவாக்கப் பட்டுள்ள படகுக் குழாம்-சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏர்க் காட்டில்தான் இருக்கிறது!**

மற்றொரு பெருமையும் ஏர்க் காட்டு மக்களுக்குக் கிடைக்க இருக்கிறது. சேலம், தருமபுரி மாவட்ட மக்கள் சென்னை நகரத்து மக்களைப் போலவே தொலைக்காட்சி (டெலிவிஷன்)யைக் காண்பதற்காக ஒளிபரப்பு நிலையம் ஒன்று - ஏர்க்காட்டில் 'லேடீஸ் சீட்' என்னும் பகுதிக் கருகில் அமைக்கப்பட உள்ளது. தொலைக்காட்சி நிலைய அலுவலர்கள், தமிழக அரசின் செய்தித்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரதராஜுலு இ.ஆ.ப. ஆகியோர் ஏர்க்காட்டுக்கு வருகை புரிந்து, இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த ஒளி பரப்பு நிலையம் விரைவில் அமைந்துவிடும் எனத் தெரிகிறது. இது செயல்படத் தொடங்கினால் - ஏர்க்காட்டின் பெருமைமிகு வரலாற்றில் மற்றொரு பொன்னேடும் இணைந்து கொள்கிறது என்று சொல்லலாம்

# சிறப்பாகப் பணியாற்றும் சேலம் காவல் துறை




சேலம் மாவட்டக் காவல் துறை எல்லா வகையிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தனது நலம் கருதாமல், சேலம் மாவட்ட நலன் கருதிச் செயல்படும் சிறப்பினை நம்மால் இந்தப் பகுதி காவல் துறையினரிடம் காண முடிந்தது.

காவல் துறை எப்படியெல்லாம் செயல்பட வேண்டுமென அரசு கருதுகிறதோ அப்படியெல்லாம் கடமைபுரியும் நேர்த்தி உடையவர்களாக இருக்கிறார்கள் இங்குள்ள காவல்துறை அதிகாரிகளும் காவலர்களும்.

சேலம் நகரம், நாமக்கல், மேட்டூர் ஆகிய பகுதிகளில் பெண் காவலர் ஆற்றிவரும் பணி பெரிதும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர் பத்துக்காவலர்கள் என்ற அளவில் அந்த மூன்று பிரிவிலும் பெண் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். 15-7-81-ல் தான் சேலத்தில் பெண் காவலர் நிலையத்திற்கான அனுமதி பெறப் பட்ட தென்றாலும் 30-1-82-ல் முதலாவதாக சேலம் நகரில் பெண் காவல் நிலையக் கட்டடமொன்று 44 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுத்



திறந்து வைக்கப்பட்டது.



கண்காணிப்பாளர் ஒருவர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஒருவர், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் எழுவர், ஆய்வாளர்கள் நாற்பத்திரண்டு பேர் என்றுள்ளது சேலம் மாவட்டக் காவல் துறை.

இவர்கள் தவிர, மற்றுமுள்ள காவல் துறையினர் விவரம் வருமாறு:

உதவி ஆய்வாளர்கள் 148, ஆயுதப் படை ஆய்வாளர்கள் 3, ஆயுதப்படை உதவி ஆய்வாளர்கள் 13, ஆயுதப்படை இளநிலை உதவி ஆய்வாளர்கள் 7, தலைமைக் காவலர்கள் 210, முதுநிலைக் காவலர்கள் 241, காவலர்கள் 1414.

ஆக மொத்தத்தில் - சேலம் மாவட்டத்திலுள்ள காவல்துறையினரின் எண்ணிக்கை 2087 ஆகும்.

இவர்களில் 1982-ல், 7 தலைமைக் காவலர்களும், 29 காவலர்களும்-1983-ல் 7தலைமை காவலர்கள் 7 முதுநிலைக் காவலர்கள், 25 காவலர்கள் ஆகியோரும் நற்பணி ஆற்றியமைக்காக நமது முதலமைச்சர் விருது வழங்கப் பெற்றிருக்கிறார்களென்றால்-இதுவே போதும் இங்குள்ள காவல் துறையின் கடமை உணர்ச்சியை எடுத்துக் காட்ட!

கலைத்துறையிலும் விளையாட்டுத் துறையிலும், தமது பணியோடு ஒட்டிய பிற வகைகளிலும் மேம்பட்டே விளங்குகிறார்கள் இவர்கள்.

இந்த ஆண்டு சேலத்தில் நடந்த அரசுப் பொருட்காட்சியில் கண்ணுக்கும் கருத்துக்கும் அமைக்கப்பட்டிருந்த விருந்தாக காவல்துறை அரங்கமே முதல் பரிசு பெற்றது. கைப்பந்தாட்டத்தில் தமக்கு நிகரான காவலர்கள் வேறெங்கும் இல்லையென்கிறார்கள் இவர்கள்.

சேலம் ஆயுதப்படையிலே துணைக் கண்காணிப்பாளராக உள்ள திரு. பத்மநாபன் துப்பாக்கி சுடும் போட்டியில் நிகரின்றி விளங்குகிறார்- அதுவும் அனைத்திந்திய ரீதியில். அதே பிரிவிலுள்ள மற்றொரு உதவி ஆய்வாளரான, திரு கமலேசன் சிறந்த நாடகாசிரியராகத் திகழ்கிறார். இவர் எழுதி அரங்கேற்றிய 'வல்வில் ஓரி' நாடகம் அத்துறை அறிஞர்களின் போற்றுதலையும் பாராட்டுதலையும் இவருக்குத் தேடித் தந்திருக்கிறது.

1982-83-ல், 10 இளநிலை ஆய்வாளர்கள் பதவி, ஆய்வா

ளர்கள் பதவி உயர்வு, 45 இள நிலை உதவி ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்களுக்கான பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மாவட்டத்தின் காவல் துறையினை இன்னும் விரிவுபடுத்திடத் தக்க முயற்சிகள் மேலதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் இவர்களுக்கு இவர்களே இணை என்ற நிலை இங்கிருக்கிறது.

பரமத்தியில் உள்ள காவலர் குடியிருப்பு 92 ஆயிரத்து 222 ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அன்னதானப்பட்டி காவலர் குடியிருப்பு காவல்துறையினர் 256 பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 96.84 இலட்சம் ரூபாயில் இது உருவாகியுள்ளது.

மேலும் 28 ஆயுதப் படைக் காவலர் குடியிருப்புகளும், ஆய்வாளர் உதவி ஆய்வாளர்களுக்காக 18 குடியிருப்புகளும் இவை தவிர காவலர்களுக்கான நூறு குடியிருப்புகளும் அரசு அனுமதி பெற்றுக் கட்டப்பட்டு வருகின்றன இங்கே. நாட்டு நலம் காப்பவர்களின் வீட்டு நலம் காப்பது அரசின் கடமையல்லவா!

கொண்டலாம்பட்டி முதல் மல்லசமுத்திரம் வரை பதினோரு இடங்களில் காவல் நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன ரூபாய் 3,28,000 செலவில்.



**சிவா இருந்த சிறைச்சாலை**

**சேலம், அஸ்தம்பட்டியில் உள்ள மத்திய சிறைச்சாலையில்தான் விடுதலைப் போர்த் தியாகி திரு சுப்பிரமணிய சிவா சிறை வைக்கப்பட்டிருந்திருக்கிறார்.**

சேலம் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு, விஜய் குமாரைச் சந்தித்து இந்த விவரங்களையெல்லாம் அறிந்து கொண்ட நாம் கேட்டோம்— ''சேலம் நகரத்தில் விபச்சாரம் போன்ற தவறுகள் மலிந்திருப்பதாகக் கூறப்படுகிறதே?''

சற்றே கடுமையான குரலில் அவர் அதற்கு இப்படிப் பதில் சொன்னார்:

''எப்போதோ இருந்திருக்கலாம், இப்போது இல்லை. எந்தத் தவறும் நேராதபடி காவலர்களைக் கடுமையாக முடுக்கி விட்டு, தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். சேலம், பல்வேறு பெரிய நகரங்களைச் சுற்றிலுமாகக் கொண்டிருக்கும் தொழில் நகரமாகும். இந்த நகரில் மட்டும் 50 திரைப்பட அரங்குகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் படம் பார்ப்போர் எண்ணிக்கையே 75 ஆயிரமாக இருக்கிறது. இந்நகருக்கு அன்றாடம் வந்து போவோர் எண்ணிக்கையே ஏறத்தாழ ஒரு இலட்சம் என்ற அளவில் இருப்பதால் அங்கொன்று இங்கொன்றாய் அப்படிப்பட்ட தவறுகள் நேரலாம். ஆனால் எங்களுடைய தீவிரக் கண்காணிப்பு இப்போது சேலத்தின் சிறப்பைப் பாதுகாப்பதாக இருக்கிறது. இதை நீங்கள் சேலம் நகரிலுள்ள மக்களைக் கேட்டாலேசொல்லுவார்களே?''

—'ராஜு'

● ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதியுள்ள முதல் சொல்லுக்குச் சேலம் மாவட்டத்தில் சிலரோ பலரோ பொருள் புரியாமல் குழம்பினால் ஆச்சரியமில்லை; ஏனென்றால் 'ஆரியம்' என்று இந்த மாவட்டத்தில் கேழ்வரகைச் சொல்லுகிறார்கள்!


● அறுமுகக் கடவுளின் முகங்களை இனம் பிரித்துக்காட்டும் 'ஏறுமயில் ஏறிவிளையாடும் முகம் ஒன்றே...' திருப்புகழ்ப் பாடல் தெரியுமல்லவா? அந்த ஆறுமுகங்களில் இரண்டு முகங்களுடைய முருகக்கடவுள் இந்த மாவட்டத்திலேதான் காட்சி தருகிறான். 'குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக' முருகனைத் திருச்செங்கோட்டிலும், 'வள்ளியை மணம்புணர வந்த வேடன் வருவ முருகனைப் பேளூ குறிச்சியிலும் காணலாம்.

● 1766ல், கிழக்கிந்தியக் கம்பெனி முக்கியப் புள்ளிகளில் ஒருவனான 'மக்டொனால்ட்' கட்டிய சத்திரம் 'மக்டொனால்ட் சவுல்ட்ரி'. அது இப்போது எங்கே இருக்கிறது என்கிறீர்களா? சேலம், ஈரோடு வழியில் இருக்கிறதே 'மகுடஞ்சாவடி' அதுதான் இது!

● சைலம்' என்ற சொல்லுக்கு மலை என்று பொருள். மலைகள் நிறைந்த மாவட்டம் என்பதால் அந்தச் சொல்லே நாளாவட்டத்தில் 'சேலம்' ஆகிவிட்டது என்கிறார்கள்! சேரநாடு 'சேரலம்' எனப்பட்டது; அதுவே 'சேலம்' ஆயிற்று என்றும் கூறப்படுகிறது!

● திருமணி முத்தாற்றுப்பாலம் 'காந்தி பாலம்' எனப்படுகிறது. ஆனால் இந்தப் பெயர் தலைவர்கள் யாரும் சூட்டியதல்ல; கஸ்தூரிபா காந்தி திறந்து வைத்த பாலம் என்பதால் மக்களே இட்டபெயர் அது! இப்போது சீர்கேடு அடைந்துள்ள இந்த ஆறு ஒரு காலத்தில் முத்துவிளையும் அளவுக்கு உயிரோட்டமுள்ளதாக இருந்திருக்கிறது. சுகவனேசுவரர் கோயிலில் உள்ள சொர்ணாம்பிகை அம்மன் அணிகலன்களில் உள்ள முத்துக்கள் அப்படிக் கிடைத்தவைகளாம் - சொல்லுகிறார்கள்!

● ரத்தக்கறை, வெங்காயபாளையம், மோரூர், புதன் சந்தை, ரெட்டைப் புளிய மரம் என்றெல்லாம் சில வேடிக்கையான பெயர்களில் ஊர்கள் இருக்கின்றன சேலம் மாவட்டத்தில்!



# குத்துச்சண்டைக்கு ஒரு சக்திவேல்

தமிழ்நாடு மாநில சீனியர் குத்துச்சண்டைப் போட்டிகளில் தருமபுரி வீரர் திரு டி. ஆர். சக்திவேல் அவர்களுக்கு இரு தங்கப் பதக்கங்களும், ஒரு வெள்ளிப் பதக்கமும் கிடைத்துள்ளன.

1983 ஆகஸ்ட் மாதம் 7 முதல் 15ஆம் தேதி வரை நடைபெற்ற மாநில சீனியர் குத்துச்சண்டைப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

செப்டம்பர் 12 முதல் 17 வரை நடைபெற்ற தமிழ்நாடு ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டிகளில் சக்திவேலுக்கு தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் தங்கப் பதக்கம் வழங்கினார்.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரரான திரு டி. ஆர். சக்திவேலைப் பாராட்டும் வகையில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ்.பி. இளங்கோவன், இ.ஆ.ப. தருமபுரி மாவட்ட விளையாட்டுக் கழக நிதியிலிருந்து ரூ. 500 வழங்கினார்.

30-9-83 அன்று தருமபுரியில் 5 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட தருமபுரி மாவட்ட விளையாட்டரங்கத்தைத்திறந்து வைத்த மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் வெள்ளிக்கோப்பை வழங்கி, திரு சக்திவேலைப் பாராட்டினார்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா குத்துச்சண்டைப் போட்டியில் வெற்றி பெற்றதற்காகத் தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் திரு சக்திவேலுக்குத் தங்கப்பதக்கம் வழங்கினார். கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலக் குத்துச் சண்டைப் போட்டிகளில் 5 தங்கப்பதக்கங்களும், 6 வெள்ளிப் பதக்கங்களும் பெற்றுள்ளார். அகில இந்திய குத்துச்சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கமும், மூன்று முறை சென்னைப் பல்கலைக் கழகம் குத்துச்சண்டைப்போட்டியில் முதலிடமும் பெற்றுள்ளார்.

**இரா. பா. கார்மேகம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி மாவட்டம்.**



சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டுவிழா போட்டியில் முதலாவதாக வெற்றி பெற்ற திரு. சக்திவேலுவுக்கு மாண்புமிகு முதல்வர் 21.9.83ல் தங்கப்பதக்கம் வழங்கினார்.

*For most economic transport of goods,*

CONTACT:

**SRI SIVAKAMI TRANSPORT**
38, Murugan Nagar,
Mettur Dam-636403

Phone: 322

*Branch:*

*Linghi Chetty Street,*
*Madras.*

Transporters for M/S Chemicals & Plastics India Ltd.,
Mettur Dam-3.

'BEN'

**With best compliments from:**

M.K.S. & Brothers
Transport Company
**METTUR DAM-636 402.**

'BEN'





"டாக்டர்" விருது பெற்ற
மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்களுக்கு
தமிழ்த் திரைப்பட உலகம்
சார்பில் (20-11-83)
சென்னையில் நடைபெற்ற
பாராட்டு விழாக் காட்சிகள்












# சேலம் மாவட்டத்தில் பால் வளம்

குஜராத் மாநிலம், கைரா மாவட்டத்தில் 1946-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு வளர்ந்து வந்த 'பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்' சிறப்பாகச் செயல்பட்டு வந்தன. இதே போன்ற முறையை இந்தியநாடு முழுதும் பரப்ப, தேசிய பால் வள வாரியம் மற்றும் இந்திய பால் பொருட்கழகம்-என்ற அமைப்புக்கள் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டன.

இந்த நோக்கத்தோடுதான் தமிழகத்தில் தமிழ்நாடு பால் வள நிறுவனம் என்ற மாநில அமைப்பு 1-7-1972-ல் தொடங்கப்பட்டது.

'தரமான பாலுக்குத் தகுந்த விலை! வளமான கால்நடை வளர்ப்பதற்கு ஓர் புதிய முறை'- என்ற அடிப்படையில் தமிழகத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1974-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு பால் சேகரிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவ்வாறு தமிழகத்தில் அமைக்கப்பட்ட நான்கு பால் சேகரிப்புக் குழுக்களில் ஒன்று, சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லில் 1974-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏற்படுத்தப்பட்டது.

பால் வளம் நிறைந்த கிராமங்கள் தோறும் ஆய்வு நடத்தி அடுத்த மாதமே 13 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி, முதல்நாள் 450 லிட்டர் பாலைக் கொள் முதல் செய்தது. அந்தப் பணி இன்று இந்தியாவே வியக்கும் வகையில் வளர்ந்து வருகிறது.

'கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட அளவில் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம், மாநில அளவில் இணையம் என்ற பால் பெருக்குத் திட்டக் கொள்கையின் அடிப்படையில் சேலம் மாவட்டத்தில் 447 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்90,000 உறுப்பினர்களைக் கொண்டு, நாளொன்றுக்கு தற்போது சராசரியாக 80,000 லிட்டர் பாலைக் கொள் முதல் செய்து வருகின்றன. இச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு அளித்து வரும் பயன்கள் பலப்பல; கொண்டுள்ள ஈடுபாடு மிகப்பல.

## பால் உற்பத்தியாளர்கள் பெற்று வரும் பயன்கள்

தரமான பாலுக்குத் தகுந்த விலை என்ற அடிப்படையில் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கொண்டுவரும் பாலும், தனித் தனியாக மாதிரி எடுக்கப்பட்டு அதற்கேற்றாற்போல் விலை நிர்ணயம் கொழுப்புச் சத்து அடிப்படையில் செய்யப்படுகிறது.

உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு வரும் ஊற்றும் பாலுக்கான பணம்,வாரம் ஒருமுறை பெரும் பாலும் சந்தை நாள் காலையில் பட்டுவாடா செய்யப்படுகிறது.

சங்க உற்பத்தியாளர்களின் கால்நடைகளைக் கவனித்துச் சிகிச்சையளிக்க கால்நடை மருத்துவர் ஒவ்வொரு சங்கத்திற்கும் வாரத்தில் குறிப்பிட்ட நாளன்று சென்று இலவசமாகச் சிகிச்சையும் மருந்துகளும் வழங்குகிறார்.

சங்க உறுப்பினர்களின் கால்

களில் இரவு, பகல் எந்நேரமும் சிகிச்சை அளிப்பதற்கென்று, அவசரகால மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளது.

பலவிதப் பொருட்களைப் பக்குவப்படுத்திச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட கால்நடைத் தீவனம் சங்க அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மூலமாக ஆவினக் கலப்பினக் கிடாரிக் கன்றுகளைப் பராமரிக்க மானிய சலுகையில் கலப்புத் தீவனம் அளிக்கப்படுகிறது.

என். பி. 21., குதிரைமசால், சோளம், கூபாபுல் போன்ற தீவனப்புல் பயிர்கள் பயிரிட விதைகளும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 மானியமும் வழங்கப்படுகிறது.

சங்கம் ஆரம்பிக்கப்படும் கிராமத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கு, சங்கச் செயலாளர், பால் பரிசோதனையாளர், அளவையாளர் போன்ற பணிகள் சங்கத்தில் அளிக்கப்படுகின்றன.

அங்கத்தினர்கள் ஆண்டு முழுவதும் ஊற்றிய பாலின் விலைக்கேற்றாற்போல், அவர்களுக்கு சங்கம் பெறும் லாபத்தின் பங்கு பகிர்ந்து அளிக்கப்படுகின்றது.

**வேற்றுமையில் ஒற்றுமை**

பலசாதி மக்கள், பல்வகைப் பழக்கம் கொண்டோர் கூடும் டம் சங்கமாகையால், பழக்க வழக்கங்கள் பரிவர்த்தனையாகி, எல்லோரும் ஓர் நிறை என்ற நிலை உருவாகிறது.

**சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

சங்கங்களை அரவணைத்து, பால் உற்பத்திப் பெருக்கத்திற்கும், சங்கங்களின் வளர்ச்சிக்காகவும், புதிய சங்கங்களைத் துவக்குவதற்குமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் துவக்கப்பட்டது. இவ்வொன்றியம் துவக்கப்பட்டது முதல் தொடர்ந்து சிறப்பான பல பணிகளைச் செய்து வருகின்றது.

தேசிய பால் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இவ்வொன்றியம் முதன்மை பெற்று விளங்குகின்றது. ரூ. 11.84 இலட்சம் மதிப்பீட்டில் முதல் பால் பெருக்குத் திட்டத்தை வெற்றியுடன் செயல்படுத்தியதுடன் இரண்டாம் பால் பெருக்குத் திட்டத்தை ரூபாய் 730.80 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகின்றது.

**பால் வளக் கூட்டமைப்புத் தொழிற்கூடம்**

ரூ. 328 இலட்ச மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது நமது ஒன்றிய பால்பவுடர் தொழிற்சாலை.

**பால்பதன ஆலையின் பணிகள்**

பால் குளிரூட்டும் திறன் நாள் ஒன்றுக்கு—1 இலட்சம் லிட்டர்.

பால் பவுடர் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 10 மெட்ரிக் டன்.

பால் சேமிப்புக் கொள்ளளவு 90,000 லிட்டர்.

பால் பதப்படுத்தும் திறன் ஒரு மணிக்கு—12,000 லிட்டர்.


பாலின் துணைப் பொருட்களான வெண்ணெய், நெய் முதலியன தயாரிக்கவும் அவற்றைச் சிறிய டின்களில் இட்டு நிரப்பும் வசதியும் திறனும் இப்பால்பண்ணை பெற்றுள்ளது.

**பால் குளிருட்டு நிலையம் (ஆத்தூர்)**

ஆத்தூரில் அமைக்கப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையம் தனது திறப்பு விழாவை எதிர்நோக்கி நிற்கிறது. ரூபாய் 27.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலைக் குளிரூட்டும் திறன் கொண்டது. மேலும் ரூ. 14.86 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு, 50,000 லிட்டர் திறன் கொண்டதாக இது உயர்த்தப்படவுள்ளது.

**பால் விற்பனைப் பணி**

தரமுள்ள பாலை உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று, பால் உற்பத்தியை அதிகரிக்கும்


இயந்திரங்களின் மூலம் பாலிலிருந்து வெண்ணெய் எடுக்கப் படுதல்

## பால் பவுடர் ஆலையின் சிறப்பு

**பாலில் இருந்து வெண்ணெய் எடுக்கும் மையங்கள் சேலம், தருமபுரி, ஈரோடு ஆகிய இடங்களில் உள்ளன. என்றாலும் சேலத்தில்தான் இந்த மையம் செயல் முறையில் உள்ளது. ஒரு மணி நேரத்திற்கு 800 கிலோ கிராம் வெண்ணெய்யை எடுக்கும் ஆற்றல் படைத்த இயந்திரம் சேலம் தளவாய்ப் பட்டி பால்பவுடர் ஆலையில் உள்ளது.**

ஆக்கப்பணியினைச் செய்துவரும் அதே சமயம், மாவட்ட மக்களுக்குத் தேவையான தரமான பால் கிடைக்க ஏற்பாடு செய்வதும் சங்கத்தின் தார்மீகக்கடமையாகும்.

இரண்டாம் பால் பெருக்குத் திட்டமும் இதை வலியுறுத்துகிறது.

சேலம் நகர மக்களுக்கு வழங்கத் தேவையான பாலை, சேலம் நகர கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்திற்கு வழங்கி வருவதுடன், தனது முயற்சியின் காரணமாக மேட்டூர் நகரில் ஒன்றியமே 1983 பிப்ரவரி மாதம் முதல், பால் விற்பனைப் பணியினைச் செய்து வருகிறது. மேட்டூர் நகரிலும் நிலைப்படுத்திய பால் விற்பனையை நாள் ஒன்றுக்கு 2,500 லிட்டர் அளவில் ஒன்றியமே நடத்தி வருகின்றது.


தென் தமிழ்நாட்டில் அமைந்துள்ள மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் திரவ நைட்ரஜன் தொழிற்கூடத்தைத் தன் பொறுப்பில் அமைத்து வருகிறது. இதற்குத் தேவையான நிலத்தை நமது ஒன்றியம் வழங்கியுள்ளதுடன் அவ்வப்போது தேவையான உதவிகளையும் செய்து வருகின்றது. கட்டுமானப் பணிகளின் விரைவான முன்னேற்றத்தினால் இத் தொழிற்கூடம் இவ்வாண்டிற்குள் நிறைவு பெறும் நிலையில் உள்ளது.

**தீவனப்புல் வளர்ப்பு**

தீவனப்புல் வளர்ப்பின் தேவை இவ்வாண்டு பெரிதும் உணரப் பட்டதற்கான காரணம், தொடர்ந்து நிலவும் கடும் வறட்சியாகும். ஆங்காங்கு தேவையைக் கொண்டோரின் தேவையைப் பூர்த்தி செய்ய மட்டும் குதிரை மசால், கூபா புல், காராமணி கலந்த சோளம், என். பி. 21 ஆகிய விதைகள் வழங்கப்பட்டன. தட்டுப்பாடு அகற்றி, தடையின்றி தீவனப்புல் கிடைக்கும் தொலைநோக்குத் திட்டங்களில் இவ்வாண்டு அதிக கவனம் செலுத்தப்பட்டது.

ஆத்தூருக்கு அருகில் உள்ள முள்ளுவாடிப் பண்ணையில் அரசிடமிருந்து 110 ஏக்கர் நிலம் பெற்று அதில் புல் வளர்ப்புப் பண்ணையை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் கோவை விவசாயக் கல்லூரியின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. கல்ராயன் மலையடிவாரத்தில் உள்ள தும்பல் இடையபட்டிப் பகுதியில் சுமார் 1,000 ஏக்கர் நிலத்தில் புல் வளர்ப்புப்பண்ணை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

உற்பத்தியாளர்களின் உடனடி புல் விதைத்தேவையை நிறைவேற்றுவதற்காக ஆத்தூரில் உள்ள நமது குளிரூட்டும் நிலையத்தில் உள்ள 11.5 ஏக்கர் நிலத்தில் என். பி. 21 புல் வளர்க்கப்பட்டு வருகின்றது.



**கால்நடை சுகாதார துணை மையமும், மற்றும் டாக்டர்களுக்குக் குடியிருப்புத் திட்டமும்**

இந்திய பால் பொருட்கழகம் இம்மாவட்டத்தில் பரமத்தி வேலூர், ஆத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒரு கால்நடை சுகாதார துணை மையமும், இரண்டு டாக்டர்களுக்குக் குடியிருப்புகள், ஒன்றியத்திற்காக கட்டிக்கொள்ளவும் மொத்தம் ரூ. 4 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது. தற்போது இவற்றுக்கான கட்டுமானப் பணி தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது.

**பயிற்சிக்கூடம்**

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு

## உழைப்புக்கு ஒரு ராசிபுரம்


**ராசிபுரத்து மக்கள் கடின உழைப்புக்குப் பெயர்பெற்றவர்கள். ஒருமுறை (1970ல்) ராசிபுரத்துக்கு வருகை புரிந்த உலக உணவு நிறுவனக்குழு, இங்குப் பணியாற்றும் வேளாண் பெருமக்களின் திறமையைக் கண்டு, "ராசிபுரத்து உழவர்களைப் போன்று தஞ்சையிலுள்ள உழவர்களும் அரும்பாடு படுவார்களானால் இந்திய நாடு உணவுக்காக அயல் நாட்டை எதிர்பார்க்க வேண்டிய அவசியமே ஏற்படாது" என்று பாராட்டியிருக்கிறது.**

சங்கப் பணியாளர்களுக்காசப் பயிற்சிக்கூடம், ஒன்று ரூ. 14 இலட்சம் முதலீட்டில் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இதற்கான தொகையும் பாரத பால் பொருட் கழகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் மானியமாகும்.

**பாராட்டுரைகள்**

''சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஒரு வெற்றிக் கதை'' என்ற கட்டுரையை தேசிய கூட்டுறவு பால்பண்ணை அபிவிருத்தி இணைய அகில இந்திய ஏட்டில் தேசிய பால் சம்மேளனத்தின் அறிஞர் திரு மேத்யூ எழுதியுள்ளார்.

இந்தியாவிலேயே முதன்முறையாக பால் கொள்முதல் பில்களை கம்ப்யூட்டர் முறையில் கணக்கிட்டுப் பிரதம சங்கங்களுக்குப்பால் பட்டுவாடா செய்யும் முறையை மேற்கொண்டுள்ளது சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.




# கண்ணான அண்ணா போக்குவரத்துக் கழகம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது, பேருந்துத் தடங்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று சட்டம் இயற்றினார். அதன்படி அரசுத் துறையின் சார்பில் புதிய போக்குவரத்துக் கழகங்கள் தோன்றின. தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம் ஆகியவற்றில் சேவை செய்வதற்காக 1972-ல் சேலம் மாவட்டத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டது. பின்னர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டதால்— அண்ணா போக்குவரத்தின் பணிகள் சேலம் - தருமபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு மட்டுமே பயனளிக்கத் தொடங்கின.

1972-ல் இந்நிறுவனம் துவக்கம் செய்யப்பட்டாலும்கூட 15-2-'73-ல் தான் 45 பேருந்துகளுடன் பணி தொடக்கம் ஆகியது. சேலம் எக்ஸ்சர்விஸ்மென் கூட்டுறவு மோட்டார் சங்கத்தின் 18 பேருந்துகள் 1-3-1973ல் அண்ணா போக்குவரத்துக் கழகத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. அரசின் கொள்கைப்படி, வேலூரில் இருந்த வட ஆர்க்காடு மாவட்ட எக்ஸ்சர்விஸ்மென் கூட்டுறவு மோட்டார் சங்கம், சேலம் மாவட்ட அரிசன மோட்டார் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், தருமபுரி மாவட்ட அரிசன மோட்டார் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் உந்துகளும் அண்ணா போக்குவரத்துக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

சேலம் நகரைத் தலைமையகமாகக்கொண்டு, 17 கிளைகளைச் செயல்படுத்திவரும் அண்ணா போக்குவரத்துக் கழகம், சேலம் மாவட்டத்தில் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளைத் தக்க வகையில் பூர்த்தி செய்து வருகின்றது. நாள்தோறும் ஏறக்குறைய 6 இலட்சம் மக்கள் இந்தப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். நாளொன்றிற்கு ரூ. 6 இலட்சம் வருமானம் கிடைக்கிறது.

**எஸ். எஸ். சுந்தரம்**

இக்கழகத்தின் பேருந்துகள் மற்ற மாவட்டத் தலைமையிடங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, ஈரோடு, வேலூர் (வ.ஆ) ஆகிய ஊர்களுக்கும், கருநாடக மாநிலத் தலைநகராகிய பெங்களூருக்கும், புதுவை மாநிலத்தின் தலைநகராகிய பாண்டிச்சேரிக்கும் சென்று வருகின்றன. மைசூர், குப்பம், சித்தூர் ஆகிய வெளி மாநிலப் பகுதிகளுக்கும் செல்கின்றன.

அண்ணா பேருந்துக் கழகத்தில் மொத்தம் 640 பேருந்துகள் உள்ளன. 440 பேருந்துகள் சேலத்திலும், 200 பேருந்துகள் தருமபுரியிலும் உள்ளன. நகர்ப்புறத்தில் 269 தடங்களில் 299 பேருந்துகளும், புறநகர்ப்பகுதியில் 182 தடங்களில் 280 பேருந்துகளும் இயங்குகின்றன. குக்கிராமங்களுக்குச் சிறிய பேருந்துகள் 5 சென்று வருகின்றன. 1984-ஆம் ஆண்டில் புதிய தடங்கள் 20-ல்பேருந்துகள் விடப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 50க்கு மேற்பட்ட பேருந்துகள் மாற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் விடப்படுகின்றன. ஓட்டுநர், நடத்துநர், தொழில் நுணுக்க ஊழியர், நிருவாக ஊழியர் என மொத்தம் 4500க்கு மேற்பட்டோர் இக்கழகத்தில் பணிபுரிகிறார்கள்.

டயர் புதுப்பிக்கும் மையம், அண்ணா பொறியியற் கழகம், பேருந்துக் கூடு அமைப்பு நிலையம் ஆகியவையும் இந்தப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ளன.

டயர் புதுப்பிக்கும் மையம் இக்கழகத்தைச் சேர்ந்த பேருந்துகளுக்கு மட்டுமின்றி வருவாய்த் துறை, காவல்துறை, பொதுப் பணித் துறை ஆகியனவற்றிற்கும் டயர்களைப் புதுப்பித்துத் தருகின்றது.

பேருந்துகளுக்குத் தேவைப்படும் பல்வேறு விதமான இயந்திரப் பணிகளும் இங்குள்ள பொறியியல் பகுதியின் மூலமாகவே சரிசெய்து கொள்ளப்படுகின்றன. வெளியார் பணிமனைகளுக்கு அனுப்ப வேண்டிய தேவை கிடையாது. பேருந்துகளின் இயந்திர பாகங்கள் பழுதுபட்டால், இயன்றவரை பழுது சரி செய்யப்பட்டு, அவை பொருத்தப்படுகின்றன. புதிய உதிரிபாகங்கள் வாங்குவது பெரும்பாலும் தவிர்க்கப்படுகிறது.

தொழிலாளர்கள் நலனில் இந்தப் போக்குவரத்துக் கழகம் பெரும் அக்கறை கொண்டுள்ளது. 25 பேருந்துகளுக்கு மேலுள்ள பணிமனைகளில் சிற்றுண்டிச் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உணவு 75 காசுகளுக்கும், தேநீர் 10 காசுகளுக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

### அர்த்தநாரிகள் அதிகம்

மதுரை மாவட்டத்தில் சொக்கலிங்கம், சோமசுந்தரம் என்னும் பெயருடையவர்களும்- நெல்லை மாவட்டத்தில் நெல்லையப்பன் என்ற பெயருடையவர்களும் அதிகம் இருப்பது போல, சேலம் மாவட்டத்தில் அர்த்தநாரி என்னும் பெயர் படைத்தவர்கள் அதிகமாக உள்ளனர். திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் ஆலயம் இருப்பதால் இந்தப்பெயர் அதிகமான அளவில் சூட்டப்படுகிறது.

தொழிலாளர் நல அறக்கட்டளை ஒன்றை இந்தக் கழகம் 1978 சனவரித் திங்களில்அமைத்துள்ளது. நல்வாழ்வு இல்லங்களையும், மனமகிழ் மன்றங்களையும் தொழிலாளர்களுக்காக அமைப்பது, அரசுத்துறைகளின் மூலம் எந்தவிதப் படிப்புதவியும் கிடைக்காத தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கும், ஆராய்ச்சிக் கல்வியைத் தொடர்வதற்கும் படிப்புதவிப் பணம், கடன் உதவித்தொகை, ஆகியவற்றை அளிப்பது ஆகியவையே இந்த நிதி அறக்கட்டளையின் நோக்கங்கள். ஊழியர்களின் எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த உதவி வழங்கப்படுவதில்லை. இரண்டு குழந்தைகள் வரைதான் இந்த உதவி வழங்கப்படுகிறது. இதற்காக இந்தப் போக்குவரத்து கழகம் ரூ. 10,50,101-ஐ, இட்டு வைப்பில் செலுத்தியுள்ளது.

விபத்தின்றி உந்துகள் ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. அனுபவம் வாய்ந்த ஓட்டுநர்களுக்கும் சில நேரங்களில் பயிற்சி தரப்படுகிறது. எதற்காகத் தெரியுமா? எரிபொருளை எந்த அளவு குறைவாகப் பயன்படுத்தி நிறைந்த பலனைப் பெறலாம் என்பதை அறிவுறுத்துவதற்காக! பல்வேறு கருத்தரங்குகளில் பங்கு பெற்று





மென்மேலும் அறிவை வளர்த்துக் கொள்வதற்குத் தொழிலாளர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

ஆண்டொன்றிற்கு 2,750 கிலோமீட்டர் வரை தமிழகத்தின் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் எந்தப் பேருந்திலும் இலவசமாகப் பயணம் செய்யும் சலுகை நிரந்தரப் பணியிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் தங்கள் வீட்டிலிருந்து அலுவல் செய்யும் இடம் வரை 16 கிலோ மீட்டருக்கு மேற்படாத தொலைவுக்கு நகரப் பேருந்துகளில் சென்றுவர இலவச பாஸ் வழங்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் குழந்தைகள் பள்ளிசென்று வருவதற்கும் இலவசப்பயண பாஸ் அளிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கு உதவும் வகையில் கூட்டுறவு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறது. அது கடன் உதவியையும் வழங்குகிறது. கூட்டுறவு வீட்டு அமைப்புச் சங்கம் ஒன்றும் செயலாற்றி வருகிறது. தொழிலாளர்க்கு மருத்துவ மனை ஒன்று உருவாக்கும் யோசனை உள்ளது.

சேலம் மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் பேருந்துப் பாதைகளில் 300 நிழற்கொடைகளை இப்போக்குவரத்துக் கழகம் தனது சொந்தச் செலவில் அமைத்துள்ளது.

எடப்பாடி, ஓமலூர், சங்ககிரி, திருச்செங்கோடு, தருமபுரி, மேச்சேரி ஆகிய ஊர்களில் வாரச் சந்தை நடைபெறும்போது, சந்தைச் சிறப்புப் பேருந்துகள் விடப்படுகின்றன. இந்த வகையில் 5 பேருந்துகள் பயன்பட்டு வருகின்றன.

தற்போது சேலத்திலிருந்து பெங்களூருக்கு 25 பேருந்துகள் விடப்படுகின்றன. குளிர்சாதன உந்து விடுவதற்கும் திட்டமிடப்பட்டு வருகிறது. இந்தப்பேருந்துகளில் பயணிகளுக்கு மகிழ்வூட்டுவதற்காக, கேஸட்டுகள் இயக்கப்பட்டு, இன்னிசை விருந்து வழங்கப்படுகிறது. பாடல் பதிவுசெய்த கேஸட்டுகள் இக்கழகத்தில் 200க்கும் மேல் இருக்கின்றன. வேறு எந்தப் போக்குவரத்து நிறுவனத்திலும் இந்த அளவுக்கு இருக்க முடியாது.

வளர்ந்து வரும் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனைகள் பல பகுதிகளிலும் தேவைப்படுகின்றன. அவற்றை உருவாக்கும் முயற்சியில் இக்கழகம் ஈடுபட்டுள்ளது. சங்ககிரி, வாழப்பாடி, அரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, பாலக்கோடு, தேன்கனிக் கோட்டை ஆகிய இடங்களில் பணிமனைகள் அமைப்பதற்குரிய மனைகள் விலைக்கு வாங்கப்பட்டு விட்டன. கொல்லிமலையில் ரூ. 5 இலட்சம் செலவில் டார்மெட்ரியுடன் பணிமனை அமைப்பதற்குக் கருத்துரை கூறப்பட்டுள்ளது. ஏர்க்காடு, உதகமண்டலம் ஆகிய பகுதிகளில் அமைப்பதற்குரிய இடங்கள் ஆய்வு நிலையில் உள்ளன.

அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் - கைதேர்ந்த இசைக் குழு ஒன்று இருக்கிறது. தமிழகம் எங்கும் சென்று இன்னிசையைப் பொழிந்து ஈடில்லாத புகழைப் பெற்றுவரும் அந்தக் குழு — அண்ணா போக்குவரத்துக் கழக விழாக்களிலும் அரசு விழாக்களிலும் பங்கு பெறுவதுடன் தனியார் நடத்தும் விழாக்களிலும் கலந்து கொள்கிறது.

அண்ணா போக்குவரத்துக் கழக அலுவலகத்தின் நிருவாகப் பிரிவில் 'செய்தக்கவல்ல செயக் கெடும்; செய்தக்க செய்யாமையாலும் கெடும்'' என்ற திருக்குறள் செய்யுள்-பலகையில் எழுதி வைக்கப்பட்டிருப்பது - இந்தக் கழகத்தின் கடமை உணர்வை எடுத்துக் காட்ட உதவுகிறது.

அண்ணா போக்குவரத்துக் கழகம் இலாபகரமான முறையில் நடைபெறுகிறதா என்று அதன் நிருவாக இயக்குநர் திரு டி. பாலகிருஷ்ணன் அவர்களைக் கேட்டபோது, ''ஆமாம், இலாபகரமான முறையில்தான் நடைபெறுகிறது. எங்கள் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த ஊழியர்களின் ஒத்துழைப்பின் காரணமாகவும், பொதுமக்கள் அளித்துவரும் ஆதரவின் விளைவாகவும் நாங்கள் வெற்றிப் பாதையில் நடைபோடுகிறோம்'' என்று தெரிவித்தார்.

''சேலத்தில் - சுற்றுலாத்துறையின் சார்பில் நடத்தப்பட்டுவரும் கண்காட்சியில்-அரசுத்துறையைச் சேர்ந்த அரங்குகளில் - முதற் பரிசுக்குரிய அரங்காக எங்கள் அரங்கு, கடந்த இரண்டாண்டுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே எங்களது தொண்டு வெற்றி பெறுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது'' என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பொது மேலாளர் திரு எஸ். ரங்கநாதன்.

சேலம் மாவட்டத்திற்கு அண்ணா போக்குவரத்துக் கழகம் கண்ணாக விளங்குகிறது என்று குறிப்பிடுவது பொருத்தமானதாகும்!



## வளம் தரும் ஜவ்வரிசித் தொழில்

**ஜவ்வரிசித் தொழில் சேலம் மாவட்டத்தில் வளர்ச்சியுற்றிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கிவரும் ஜவ்வரிசி உற்பத்தி நிலையம் ஓர் ஆண்டுக்கு 23 கோடி ரூபாய் அளவுக்குத் தனது விற்பனையை நடத்தி வருகிறது.**



### சேலம் மாவட்டத்தில்....

# துணைச் சுகாதார நிலையங்கள் திறப்பு விழா!

டென்மார்க் அரசின் நிதி உதவியில், தமிழ்நாட்டில் தென் னார்க்காடு-சேலம் ஆகிய இரு மாவட்டங்களில் 'டேனிடா திட்டம்' வேகமாக நிறைவேற்றப் பட்டு வருகின்றது.

அண்மையில் (6-11-83)சேலம் மாவட்டத்தில், டேனிடா திட்டத்தின்கீழ் 14 துணைச் சுகாதார நிலையங்கள் கிராமப்புறங்களில் திறக்கப்பட்டன.

சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கல்குறிச்சி, தாண்டாக் கவுண்டனூர், மலைவேப்பங்குட்டை, சின்னப்குப்பநாயக்கனூர், பள்ளம் பாறை, பச்சுடையாம் பட்டி, பச்சுடையாம்பட்டிபுதூர், ஆகிய கிராமங்களில் துணை சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டடங்கள் 6-11-83 அன்று முற்பகலில் திறந்து வைக்கப்பட்டன.

பிற்பகலில் - எடப்பாடி தொகுதி கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சமுத்திரம், எஸ். புதுப் பாளையம், சாணார்பட்டி, பெரிய நாச்சியூர், கச்சுப்பள்ளி, வடுகப் பட்டி ஆகிய கிராமங்களில் அக் கட்டடங்கள் திறந்து வைக்கப் பட்டன.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி இருவரும் பங்கேற்றுச் சிறப்பித்த இந்த நிகழ்ச்சிகளில் - அவ்விரு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களான திரு எஸ். சிவப் பிரகாசம், திரு ஐ. கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டென்மார்க் அரசின் இந்தியத் தூதர் திரு லைப் பர்கால்ட், சேலம் மாவட்டஆட்சித்தலைவர் திரு இரா. வரதராசுலு இ.ஆ.ப. தமிழக டேனிடா திட்ட இயக்குநர் திரு ப. சுப்பிரமணியம், மாவட்டச் சுகாதார அலுவலர் டாக்டர் ஏ.எம். ஜலீல், கட்டடப்பொறியாளர் திரு விசுவநாதன் ஆகியோரும் - மற்றும் மருத்துவத்துத்துறை, சுகாதாரத் துறை, டேனிடா அலுவலர் பலரும் இவ்விழாக்களில் கலந்து கொண்டார்கள்.

சென்ற கிராமங்களிலெல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களுக்குப் பூரண கும்பத்தோடும், ஆரத்தி எடுத்தும் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. வழிநெடுகிலும் வாழ்த்தும் வகையிலான பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. நிகழ்ச்சி தோறும் அவ்வப்பகுதி கிராம மக்கள் பெருமகிழ்வோடு திரண்டிருந்தனர். தாய்மார்கள் பெருமளவில் காணப்பட்டனர்.

டேனிடா திட்ட இயக்குநர் திரு ப. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'' டென்மார்க் - இந்திய நல்லுறவில் மலர்ந்திருக்கும் டேனிடா திட்டத்தால் சேலம்-தென்னார்க்காடு மாவட்டத்தின் கிராமப்புற மக்கள் பெரிதும் பயனடைவார்கள். இத் திட்டத்தை, நலிந்த மக்களின் நலன் கருதி நிறைவேற்ற டென்மார்க் அரசு 16 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

''இந்தத் திட்டத்தால் மொத்தத்தில் 587 பலநோக்குப் பெண் சுகாதாரப் பணியாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். 645 பலநோக்கு ஆண் சுகாதாரப் பணியாளர்கள் வேலைவாய்ப்பு அடைவார்கள். 72 ஆண் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் 147 பெண் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் இதன் மூலம் வேலை கிடைக்கும். 3079 தாதியர்க்குப் பயிற்சியளிக்கப்படும்.

''தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்தின்கீழ் துணைச் சுகாதார நிலையங்களுக்காக மொத்தம் 523 கட்டடங்கள் கட்டப்படும். 285 பெண் சுகாதாரப் பணியாளர் குடியிருப்புகளும், பொதுப்பகுதிக் கட்டடங்கள் 18ம், மருத்துவ அலுவலர் குடியிருப்பு 36ம் கட்டித் தரப்படும். பிரசவம் பார்ப்பதோடு குடும்ப நலன், குழந்தைகளுக்கு மருத்துவம், அறுவைச் சிகிச்சைபோன்றவைகளும் இந்நிலையங்கள் மூலம் நடத்தப்படும்.

[illegible] றரையாண்டுக் காலமே ஆகிறது. இதன் வெற்றிக்குக் கிராமப்புற மக்கள் அளித்துவரும் ஊக்கம் மகத்தானது. சில இடங்களில் இதற்கான கட்டடங்களைக் கட்ட அந்தந்த இடத்திற்குச் சொந்தமானவர்களே நிலத்தை இலவசமாகக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

''இந்த இரு மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பின் இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்''.

**அமைச்சர்கள்**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''தமிழகக் கிராமப்புற மக்களுக்கு அம்மை குத்தப்பட்டது, தடுப்பு ஊசிபோடப்பட்டது, வேறு ஏதாவது நோய் கண்டது பற்றிய ஜாதகம் போன்றதுஅது. இத்தகைய புரட்சி ஜாதகம் நமது புரட்சித்தலைவர்ஆட்சியில் உங்கள் ஒவ்வொருவருக்காகவும் இங்கே வைக்கப்பட்டிருக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆகவே நோய் கண்டால் இங்கே வந்து சிகிச்சை பெற நீங்கள் தயங்கக்கூடாது.

''இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 12 சதவீத ஒரு வயதிற்கும் குறைவான குழந்தைகள் சரியான கவனிப்பில்லாமல் இறந்து போவதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். டென்மார்க் நாட்டிலோ 0.7 சதவிகிதக் குழந்தைகளே இறக்கின்றன. தமிழநாட்டில் அந்தச் சதவிகிதம் 8 ஆக உள்ளது. இந்த சேலம் மாவட்டத்திலோ அந்த விகிதாச்சாரம் நூற்றுக்கு 8.5 என்றிருக்கிறது. ஆதரவு தர வேண்டும். சிறந்த சிகிச்சை இலவசமாகக் கிடைப்பதால் நமது கிராமப்புற மக்கள் நல்ல முறையில் இதைப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''மருத்துவத்துறையில் சிறந்த அனுபவம் வாய்ந்தவர்கள் இந்த மையங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கிராமாந்திர மக்கள் சிறந்த சிகிச்சைக்காக நகரங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதற்காகவே நம் புரட்சித் தலைவர் அவர்கள் பெருமுயற்சியால் இத்திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது''.

டில்லியிலுள்ள டேனிஷ் தூதரான திரு லைபி பர்கால் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பல இடங்களில் நாங்கள் டேனிடா திட்டத்தை அறிமுகப் படுத்தினாலும், இந்தியாவில் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் எங்கள் திட்டம் நாங்கள் எதிர்பார்த்தபடி ஏழை



டேனிடா திட்டத்தின் – டேனிஷ் நாட்டு அலுவலர்களுடன்
மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் சந்திப்பு

களின் முன்னேற்றத்திற்காக டென்மார்க் அரசு பெருநிதி உதவ முன் வந்திருக்கிறதென்றால் அது நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை நம்பித்தான்.

''இந்தச் சுகாதார நிலையங்களில் நல்ல அனுபவம் பெற்ற ஆண்களும் பெண்களும் நியமிக்கப்பட்டிருப்பதால் கிராம மக்கள் இதைச் சரியானபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிரசவம் பார்க்கிறார்கள் என்பதற்காக அதிக அளவில் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளாமல் அளவோடு குழந்தை பெற்று அவர்களை நல்லபடி வளர்ப்பதற்கான ஆலோசனைகளும் இங்கே வழங்கப்படும்.

''அந்தந்தக் கிராமத்திலுள்ள மக்களைப் பற்றிய - ஒவ்வொரு வீட்டு முழு விவரக்குறிப்புப் பற்றிய அட்டைகள் இங்கே இருக்கும். வீட்டில் உள்ளவர்கள் யார் சேலம் மாவட்டத்தில் இது 5 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

''இதையெல்லாம்உத்தேசித்துத்தான் நமது முதல்வர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்; பல்பொடித் திட்டத்தை அமல்படுத்தினார்; இப்போது இந்தச் சுகாதார நிலையங்கள் உருவாக உதவுகிறார்''.

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி பேசியதாவது:

''நாளொரு மேனி பொழுதொருவண்ணமாக உழைத்துக் கொண்டேயிருக்கும் கிராமப்புற மக்கள் ஏற்றம் பெற வேண்டும் என்பதே நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களின் தலையாய நோக்கமாகும். நீங்களெல்லாம் இந்த டேனிடா திட்டத்திற்கு நல்ல எளிய மக்களின் நலன் காப்பதற்காக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்காக நான் மிகவும் மகிழ்கிறேன். நாங்கள் எந்த நோக்கத்தோடு தமிழ்நாட்டுக்கு நிதியுதவி அளித்தோமோ அந்த நோக்கம், தமிழ்நாட்டு மாவட்டங்களில்-கிராமப்புறங்களில் சரியானபடி செயல்படுத்தப்பட்டு வருவதற்காக நான் தமிழ்நாட்டு முதல்வர் அவர்களுக்கு எங்கள் டென்மார்க் அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்''.

சேலம் மாவட்டத்தில் 6-11-83 ஞாயிறு பத்து மணியளவில் தொடங்கிய டேனிடா திட்டத்தின் துணைச் சுகாதார நிலையக் கட்டடங்களின் திறப்பு விழா கிராமம் கிராமமாகத் தொடர்ந்து கொண்டே போய், இரவு பதினொரு மணியளவில் தான் நிறைவுற்றது.

**தொகுப்பு :**
**பி.எல்.ஆர்.**

தமிழ்நாட்டில் மொத்தம் 36 பழங்குடி இனங்கள் இந்திய அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் எண்ணிக்கை 1981ஆம் ஆண்டு மக்கட் கணக்கெடுப்பின்படி 5.20 இலட்சமாகும். இவர்கள் மாநிலம்முழுவதும் பரவலாகச்சிதறி வாழுகின்றனர். சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் அதிகம் உள்ளனர். இம்மாவட்டங்களுள் சேலம் மாவட்டத்தில் அதிகம் உள்ளனர்.

தமிழகப் பழங்குடியினரை மூன்று பெரும் வகையினராகப் பிரிக்கலாம்:

15ஆம் அல்லது 16ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் வடக்குப் பகுதிகளினின்றும், குறிப்பாக காஞ்சிபுரத்தில் இருந்து மலைப் பகுதிகளுக்குச் சென்று அங்கே வாழ்ந்த பண்டைய குடிமக்களுடன் கலந்து அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்ட பழங்குடியினர்.

தமிழகத்தில் சமவெளிப் பகுதிகளில் சிதறி வாழும் பழங்குடியினர்.

மிகப் பண்டைய பழங்குடியினர்.

இவர்களுள் முதல் வகையினர் வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் வாழுகின்றனர். இவர்கள் மலையாளிகள் எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றனர்.

இரண்டாம் வகையினரைச் சார்ந்தவர்கள் மிக அதிக எண்ணிக்கையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் வாழுகின்றனர்.

மூன்றாம் வகையினரைச் சார்ந்தவர்கள் மிகப் பண்டைய காலத்தில், எளிதில் அண்ட முடியாத மலைப்பகுதிகளுக்குச் சென்று அங்கேயே நீண்ட நெடுங்காலமாக ஏனைய மக்களினின்றும் தனித்து வாழ்ந்து வருபவர்கள் ஆவர். இத்தகைய பழங்குடியினர் நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ளனர்.

பழங்குடியினர் நலனுக்கென ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டம் 1976-77ஆம் ஆண்டில் இருந்து சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட மலைப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

- ஏர்க்காடு
- கொல்லிமலை
- கல்ராயன்மலை
- பச்சமலை
- அரநூத்துமலை

1981 கணக்கெடுப்புப்படி இம்மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களின்எண்ணிக்கை வருமாறு:

ஏர்க்காடு— 21676, கொல்லிமலை— 30665, கல்ராயன்மலை- 20665, பச்சமலை— 6583, அரநூத்துமலை— 6604.

பழங்குடியினர் மேம்பாட்டுக்கு கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்



படுததப்பட்டு வருகின்றன.

கல்வி வசதி, சுகாதார வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, கால்நடை வசதி, விவசாயம், மண்வளப் பாதுகாப்பு, வன வளர்ச்சி, சமூகநலம், சிறுதொழில்கள், பட்டு வளர்ப்பு, சிறுபாசனத் திட்டங்கள், சமுதாய நலத்திட்டங்கள்.

1976-77ல் 10,29,582 ரூபாய், 1977-78ல் 39,02,293 ரூபாய், 1978-79ல் 37,77,198 ரூபாய், 1979-80ல் 43,80,000 ரூபாய், 1980-81ல் 56,29,612 ரூபாய், 1981-82ல் 78,80,507 ரூபாய், 1982-83ல் 136,45,616 ரூபாய் மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தச் செலவாகியுள்ளது.

1983-84ஆம் ஆண்டுக்கு அக்டோபர் '83 முடிய ரூ.130,50,000 பெறப்பட்டுள்ளது.



1980-81ல் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்:

விவசாயத் திட்டத்தைச்செயல்படுத்த ரூ. 5.60 இலட்சம் செலவிடப்பட்டது. 2000 ஏக்கர் நிலத்திற்கு விதை, உரம், பூச்சிமருந்து ஆகியவை விநியோகம் செய்யப்பட்டன. 500 குடும்பங்களுக்கு விவசாயக் கருவிகள் விநியோகம் செய்யப்பட்டன. 100 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு 333 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 99 விவசாயிகள் விவசாயச் சுற்றுலாவில் கலந்து கொண்டனர்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டம் 47.240 ஏக்கரில் ரூ. 285 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 129 விவசாயக் குடும்பங்கள் பயன் பெற்றனர்.

கால்நடைத் திட்டத்தின் கீழ் 205கறவை மாடுகள், 245 யூனிட் ஆடுகள் (1 யூனிட் 9.1). 310 உழவு மாடுகள், 65 யூனிட் கோழிகள், 65 பன்றிகள் ஆகியவற்றிற்காக ரூ. 6.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ரூ. 2.39 இலட்சத்தில் இரண்டு சிறுபாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கல்ராயன்மலை மற்றும் கொல்லிமலையில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு வளர்ப்புத் திட்டம் ரூ 2.27 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 140 குடும்பங்கள் பயன் அடைந்தன.

பாலர் பள்ளிகள் 20 திறக்கப்பட்டன.

குடிநீர்க் குழாய்க் கிணறுகள் 20, ரூ. 4.93 இலட்சத்தில் உருவாக்கப்பட்டன.

ரூ.5 இலட்சம் செலவில் 7 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

ரூ. 2,53,80,000 மதிப்பீட்டில் 80 கி.மீ.தூரம் புதிய தார்ச்சாலை அமைக்கும் திட்டம் ஏர்க்காடு, கொல்லிமலை, பச்சமலை ஆகிய பகுதிகளில்மேற்கொள்ளப்பட்டது.

20 குடும்பங்களுக்கு ரூ. 700 செலவில் தேனீ வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஏர்க்காடு மற்றும் கல்ராயன் மலையில் இரண்டு உண்டு உறைவிடப்பள்ளிகள் தொடங்கப்பட்டன.

அரநூத்துமலையில் அரசு மருத்துவமனை புதிதாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அரசு ரூ. 2.79 இலட்சம் வழங்கியுள்ளது.

கல்ராயன்மலையில் ரூ, 1.70 இலட்சம்செலவில்வன வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## 1981-82

விவசாயத் திட்டத்தின் கீழ் ரூ. 6.32 இலட்சம் செலவிடப்பட்டது. 1500 ஏக்கர் நிலத்துக்கு விதைகள், பழக்கன்றுகள், உரம் முதலியவை வழங்கப்பட்டன. 700 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 350 விவசாயிகள் சுற்றுலாவில் கலந்து கொண்டனர். தனியார் பழத்தோட்டங்கள் 150 ஏற்படுத்தப்பட்டன.

கல்ராயன் மலையில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் பழத்தோட்டப்பண்ணை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, ரூ. 3.65 இலட்சம் செலவிடப்பட்டது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கல்ராயன்மலையில் ரூ.40,000 செலவில் ஒரு நீர்த்தேக்கக்குளம் அமைக்கப்பட்டது.

கால்நடைத் திட்டத்தின் கீழ் 136 கறவை மாடுகள், 278 ஆடுகள், 305 உழவு மாடுகள் ஆகியவை ரு.7.63இலட்சம் செலவில் விநியோகம் செய்யப்பட்டன.

கொல்லிமலை மற்றும் கல்ராயன்மலையில் 120 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 120 குடும்பங்கள் பலன் அடைந்தன.

சிறு தொழில் திட்டத்தின்கீழ் 1000 தேன் பெட்டிகள் மற்றும் துணைக் கருவிகள் விநியோகம் செய்ய, ரூ.60,000 செலவிடப்பட்டது. இதனால் 100 குடும்பங்கள் பலன் அடைந்தன.

ரூ. 2.08 இலட்சம் செலவில் குடிநீர்க் குழாய்க் கிணறுகள் 7 அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ரூ. 3 இலட்சம் செலவில், கொல்லிமலையில் 4 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கல்ராயன்மலையில் ரூ. 5.52 இலட்சம் செலவில் வன வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஏர்க்காடு, பச்சமலை, கல்ராயன்மலை ஆகிய இடங்களில் உண்டு உறைவிடப் பள்ளிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூகநலத் திட்டத்தின் கீழ் ஏர்க்காடு, கொல்லிமலை, அரநூத்துமலை ஆகிய இடங்களில் பாலர் பள்ளிகள் 10 திறக்கப்பட்டன.

ரூ. 8 இலட்சம் செலவில் சிறுபாசனத் திட்டங்கள் 8 மேற்கொள்ளப்பட்டன.

## 1982—83

விவசாயத் திட்டத்தின் கீழ் ரூ.6.475இலட்சம்செலவில்விதைகள், உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை விநியோகம் செய்யப்பட்டன. 698விவசாயிகள் பயிற்சி பெற்றனர். 348 விவசாயிகள் விவசாயச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தனியார் பழத்தோட்டங்கள் 350 அமைக்கப்பட்டன. 3000 குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பலன் அடைந்தனர்.

கல்ராயன்மலையில் பெரும் பழத்தோட்டப்பண்ணை ரூ. ரூ.20.288 இலட்சத்தில் விரிவுபடுத்தப்பட்டது.

கால்நடைத்திட்டத்தின் கீழ் 65 கறவை மாடுகள், 151 கோழி யூனிட், 156 உழவு மாடுகள், 65 ஆடுகள் ஆகியவை ரூ.6.70இலட்சத்தில் விநியோகம் செய்யப்பட்டன. 448 குடும்பங்கள் இதனால் பலன் அடைந்தனர். ஏர்க்காடு, கொல்லிமலை, அரநூத்துமலையில் ரூ. 3 இலட்ச செலவில் நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்பட்டன.

கல்ராயன்மலையில் ரூ. 7.65 இலட்ச செலவில் வன வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ரூ.6.97இலட்சத்தில் கொல்லிமலையிலும், கல்ராயன்மலையிலும் நீர்த்தேக்கத் திட்டங்கள் 14 மேற்கொள்ளப்பட்டன.

ரூ. 5.81 இலட்சம் செலவில் 5 மலைகளிலும் குடிநீர்க் குழாய் போடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அரநூத்துமலையிலும், பச்சமலையிலும் ரூ. 5.45 இலட்சம் செலவில் 6 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கொல்லிமலையில் ரூ. 2.35 இலட்ச செலவில் அரசு மருத்துவமனை புதிதாக உருவாக்கப்பட்டது.

உண்டு உறைவிடப் பள்ளிகள் 5 திறக்கப்பட்டன.

பாலர் பள்ளிகள் 10 திறக்கப்பட்டன.

ரூ.1.06 இலட்சம்செலவில் 125 குடும்பங்களுக்கு 1250 தேன் பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டன.

ரூ. 1,96,25,000 மதிப்பீட்டில் 34 கி.மீ. தூரம் அரநூத்து மலை மற்றும் கொல்லிமலையில் தார்ச்சாலை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பச்சமலையில் 10 கி.மீ. தூரம் தார்ச்சாலை ரூ. 22 இலட்சத்தில் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது.



ரூ. 3.72 இலட்சத்தில் கல்ராயன் மலையிலும் கொல்லிமலையிலும் 113 ஏக்கரில், பட்டு வளர்ச்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ரூ.1 இலட்சம் செலவில்கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டது.

15 கூட்டுறவு அங்காடி கட்ட ரூ. 2.25 இலட்சம் மதிப்பீட்டில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1983-84ல் செயல்படும் திடடங்கள்:

கொல்லிமலையில் புதிய கால்நடை மருத்துவமனையும், அலுவலர்கள் குடியிருப்பு இல்லங்களும் ரூ. 3.43 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டன.

பச்சமலையில் புதிய அரசு மருத்துவமனையும்,அலுவலர்கள் குடியிருப்பு இல்லங்கள் ரூ. 8.39 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டது.


ஏர்க்காட்டில் 4.60 கி.மீ. தூரம் புதிய தார்ச்சாலை ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் போட்டு முடிக்கப்பட்டது.

கொல்லிமலையில் ரூ. 24.80 இலட்சம் மதிப்பீட்டில் 7 கி.மீ. தூரம் தார்ச்சாலை போடப்பட்டது.

ரூ.8.05 இலட்சம்செலவில்கால்நடை வளர்ச்சி, ரூ. 10.35 இலட்சம் செலவில் பெரும் பழப் பண்ணை வளர்ச்சி, ரூ.15 இலட்சம் செலவில் மின்வசதி, ரூ1.60 இலட்சம் செலவில் மருத்துவ வசதி, ரூ. 7.48 இலட்சம் செலவில் குடிநீர் வசதி, ரூ. 1 இலட்சத்தில் கல்வி வசதி, ரூ. 1.99 இலட்சம் செலவில் பட்டு வளர்ப்பு, ரூ. 3.67 இலட்சம் செலவில் சிறுதொழில் வளர்ச்சி, ரூ.6.81 இலட்சம் செலவில் வன வளர்ச்சி, ரூ.5.82 இலட்சம் செலவில் மண் வளப்பாதுகாப்பு, ரூ. 56 இலட்சம் செலவில் சாலை வசதி ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மலைவாழ் மக்களுக்கு, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிக அளவு திட்டங்கள் தீட்டி நன்மை புரிகின்றது. தமிழ்நாட்டிலும் சேலம் மாவட்டம்தான் மலைவாழ் மக்களுக்கு 80 சத விகித அளவுக்கு நலம் பயக்கும் திட்டங்களை உருவாக்கி வருகிறது என்பது சுட்டிக் காட்டப்படவேண்டிய செய்தி ஆகும்.

# கோழிப் பண்ணை குவித்திடும் செல்வம்



சேலம் மாவட்டத்தில்குறிப்பாக நாமக்கல் மற்றும் ராசீபுரம் பகுதியில் கோழிப்பண்ணைகள் அதிக அளவில் உள்ளன. இந்தியாவின் கோழி வரைபடத்தில் (Poultry Map of India) நாமக்கல் முக்கியமான இடத்தை வகிக்கிறது. தற்பொழுது 40 இலட்சம் கோழிகள் இங்கு உள்ளன. நாள் தோறும் 20 இலட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தப் பகுதியில் கோழிப்பண்ணைகள் அதிக அளவில் உள்ளதற்கான காரணங்களாவன:

அதிக நீர்ப்பாசன வசதியில்லாத இடமாகையால் வேளாண் மக்கள் மிகுந்த கடும் உழைப்புடன் பாடுபடுகிறார்கள்.

கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கான எல்லா வசதிகளும் இங்குக்கிடைக்கின்றன.

உற்பத்தி செய்யப்படுகின்ற முட்டைகள், கழிவுக் கோழிகள் யாவும் மிகவும் சிறந்த முறையில் விற்பதற்கான அமைப்புகள் Marketing Arrangements உள்ளன.

எல்லா வங்கிகளும் சிறந்த முறையில் கோழிப்பண்ணைகள் அமைக்கக் கடனுதவி அளிக்கிறார்கள். கடன் பெற்ற கோழிப் பண்ணையாளர்கள் மிகவும் திருப்திகரமான முறையில் கடனைத் திருப்பிச்செலுத்தி விடுகின்றனர். இதனால் மேன்மேலும் வங்கிகள் கோழிப் பண்ணைகளுக்குக் கடனுதவி அளிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன.

நாமக்கல்லில் சதர்ன் குஞ்சு பொரிக்கும் நிலையமும், ஜெயதேவி குஞ்சு பொரிக்கும் நிலையமும் முறையே பாப்காக் குஞ்சுகளையும், டிகால்ப் குஞ்சுகளையும் விநியோகிக்கின்றன. தொட்டியம் அருகேயுள்ள செல்வம் குஞ்சு பொரிக்கும் நிலையம் ஹைகக்ஸ் கோழிக் குஞ்சுகளை விநியோகம் செய்துவருகிறது.

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் கீழ் உள்ள அரசூர்; மற்றும் கப்பலூர் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் பாப்காக் குஞ்சுகள், டி கால்ப் குஞ்சுகள், காப் பிராய்லர் குஞ்சுகள், சாம்ராட் பிராய்லர் குஞ்சுகள் ஆகியவற்றை விநியோகம் செய்கின்றன.

மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் கோழிப் பண்ணைத் தொழிலானது தமிழ்நாட்டில் குடியானப் பெருங்குடி மக்களிடமே உள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும்.

இப்பகுதியில் 200க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தீவனம் விற்பதிலும், முட்டையை மாவட்டங்களுக்கும் மாநிலங்களுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் தினம் உற்பத்தியாகின்ற 20 இலட்சம் முட்டைகளில் 14 முதல் 15 இலட்சம் முட்டைகள் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. 5 அல்லது 6 இலட்சம் முட்டைகள் கேரள மாநிலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

முட்டையின் விலை, தேசிய ஒருங்கிணைந்த அமைப்பின் (NECC) மூலம், வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களில் நிர்ணயிக்கப்பட்டு, அந்த விலையானது கோழிப்பண்ணையாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள பெரும்பாலான கோழிப் பண்ணைகள் சொந்தமாகவே கலப்புத் தீனியைக் கலந்து பண்ணைகளைப் பராமரிக்கின்றன.

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் கீழ் நாமக்கல்லிலிருந்து முட்டைகள் சேகரிக்கப்பட்டு மற்ற மாவட்டங்களில் உள்ள கிளை விற்பனை அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. டாப்கோ, தனது தரமான தீவனத்தைக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கீழ் சிறிய விவசாயிகள், மிகச்சிறிய விவசாயிகள்-மற்றும் நிலமில்லா விவசாயிகளுக்கு வங்கிக்கடன், 100 கோழிகள் கொண்ட பண்ணை அமைப்பதற்குச் சிறப்புக் கல்வி ஏற்பாடு ஆகியவை செய்யப்படுகின்றன. 1978 முதல் 879 கோழிப் பண்ணைகளுக்குக் கடனுதவி அளிக்கப்பட்டது. அவற்றிற்கு ரூ.1145 முதல் 1526 வரை மானியமும் அளிக்கப்பட்டது. தரமான குஞ்சுகளையும், தீவனத்தையும் அளித்ததுடன் அவற்றைப் பராமரிக்கும் விதத்தையும் அவர்களுக்குத் தெரிவித்துள்ளது. அவர்களிடமிருந்துமுட்டைகளைப் பெற்றுக் கொண்டு, தீவனத்தைக் குறைந்த விலையில் ( Subsidised Feed ) அளித்து அவர்களுக்கு ஒன்றிலிருந்து மூன்று முறை (3 Cycles) கோழி வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

விவசாயிகள் பலர், தற்பொழுது 500 முதல் 1000 கோழிகள் வரை வளர்த்து தங்களுடைய பண்ணைகளைப் பெருக்கியிருப்பது மிகவும் சிறப்பு அம்சமாகும்.

நடப்பு ஆண்டில், சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, டாப்கோவுடன் தொடர்புகொண்டு நாமக்கல், ராசிபுரம் வட்டங்களில் 1000 கோழிகள் கொண்ட பண்ணை அமைப்பதற்குக் கடனுதவி அளித்து வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ், நாமக்கல் கோழி இன ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை அறிவது (Investigate), கோழிப்பண்ணையாளர்களுக்கு தங்கள் பண்ணைகளை நோயினின்று காப்பாற்ற வழிவகை சொல்வது.

கோழிப் பண்ணைகளுக்குக் குறைந்த விலையில் தீவனம் தயாரிக்கும் விதத்தைத் தெரிவிப்பது.

தீவனங்களைப் பாகுபாடு செய்து அவற்றின் தரத்தைத் தெரிவிப்பது,

கோழிகளின் தற்கால விஞ்ஞான முன்னேற்றத்தையும், கோழிப்பண்ணையாளர்களுக்குத் தெரிவிப்பது.

நடப்பில் கிராமங்களில் உள்ள நோய் மற்றும் பிரச்சினைகளை ஆராய்ச்சிக்கு (On duty Research Field Orients Problems) எடுத்து, உதவுதலையும் செய்து ஆகிய பணிகளை இந்நிறுவனம் ஆற்றி வருகிறது.

இக்கோழிப்பண்ணைத் தொழிலானது கோழிப்பண்ணையாளர்கள் தவிர. கோழிப்பண்ணை அமைக்கும் கட்டடத் தொழிலாளர்கள், தச்சர்கள், தீவனச்சட்டி செய்பவர்கள், பண்ணையில் தரைகளுக்குப் பயன்படுத்தும் கடலைத் தோல் அளிப்பவர்கள், குஞ்சு பொரிக்கும் நிறுவனங்கள், கோழிப்பண்ணைகளைப் பாதுகாக்கும் கால்நடை உதவி மருத்துவர்கள், தீவனத்திற்கு வேண்டிய பொருட்களை விற்பவர்கள், தீவனம் அரைப்பது மற்றும் கலப்பவர்கள் மருந்து விற்பனையாளர்கள், கலப்புத் தீவன விற்பனையாளர்கள், முட்டை கொள்முதல் செய்யும் வியாபாரிகள், கழிவுக் கோழிகளை எடுத்துச் செல்லும் வியாபாரிகள், கோழி உரத்தை எடுத்துச் செல்லும் வியாபாரிகள் ஆகியோர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

ஏறக்குறைய 8 கோடி மதிப்புள்ள கோழி இனங்கள், நாள் தோறும் ரூ. 8 இலட்சம் மதிப்புள்ள முட்டைகளைத் தருகின்றன.

# சித்தர் மலை



● கடல் மட்டத்திலிருந்து 4300 அடி உயரத்தில் 86 சதுர மைல் பரப்பளவுள்ள மலைப் பகுதிதான் கொல்லிமலை. கடையெழு வள்ளல்களில் ஒருவனான வல்வில்ஓரி ஆட்சி செலுத்திய இம்மலையில், சுமார் 30 அடி உயரத்திலிருந்து விழும் ஆகாச தீர்த்தம் எனப்படும் அருவியொன்று உண்டு. அதனருகே இருப்பதுபிள்ளையார் தீர்த்தம். அந்தக் கோயிலுக்குச் சென்று, இந்தச் சுனையிலுள்ள மீனைப் பிடித்து மூக்குக் குத்திவிட்டால் பிள்ளைப்பேறு கிடைக்கும் என்கிறார்கள்.

பதினெண் சித்தர்கள் இங்குள்ள கொல்லிமலையிலும், கஞ்சமலை அருகே உள்ள சித்தர் மலையிலும்தான் வாழ்ந்தார்களாம். அவர்களுக்குத் தலைமை வகித்தவரான அகஸ்திய முனிவருக்கு சித்தர் மலையில் ஒரு கோயிலே இருக்கிறது.

● நாமக்கல் கோட்டை ஒரே பாறை மீது அமைந்துள்ளதாகும். இரண்டாவது நரசிம்மவர்மன் காலத்திய கோயிலொன்று அங்குள்ளது. பல்லவர் காலத்தியதான அந்தக் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள கோட்டையானது கிருஷ்ணதேவராயரின் பாளையக்காரர் இராமசந்திர நாயக்கரால் கட்டப்பட்டதும் திப்பு சுல்தானால் கைப்பற்றபட்டதும் ஆகும். வரதுங்கபாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்கள் இங்குண்டு.

# மக்கள் ஈடுபடும் மர வளர்ப்பு



செங்கல்பட்டு மாவட்டத்தின் பூண்டி நீர்த்தேக்கப் பகுதியிலுள்ள சென்ராயன்பாளையம் என்ற சின்னஞ்சிறு கிராமம் வளமானதொரு வருங்காலத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. ஒழுங்கான பராமரிப்பும் பாதுகாப்பும் இருந்தால் அப்பகுதியிலுள்ள பெரிய அளவிலான புறம்போக்கு நிலத்திலுள்ள பல்வேறு வகைப் பயன் கொண்ட மரக்கன்றுகள் மக்களுக்குப் பொருளாதார வளத்தைத் தருவதாய் அமையும்.

50 எக்டேரில் புளி, வேப்பமரம், புங்கைமரம், வாகை, சந்தனமரம், உசிலை மரம், பாலை, கொடுக்காய்ப்புளி போன்ற கலப்புப் பயிரின வகையில் நடப்பட்ட மரங்கள் நல்ல முறையில் வளர்ந்து அப்பகுதி மக்களுக்கு உணவு, தீவனம் மற்றும் எரிபொருளைத் தந்து வருவதாய் உள்ளன. இக்காடுகளிலிருந்து தழை எரு மற்றும் மரச்சுள்ளிகள் கிடைப்பதோடு, இந்த இடைவெளியில் கொளுக்கட்டாகி புல் வளர்த்தால் அவர்களது கால்நடைகளுக்குத் தீவனமாயும் அமையும்.

சுவீடனின் அனைத்து நாட்டு வளர்ச்சிக் குழுமத்தின் ஒரு பகுதி உதவியாக மாநில வனத்துறை செயலாக்கியுள்ள கலப்புப் பயிரிடல் முறை கிராம மக்களின் வருவாயைப் பெருக்குவதோடு அப்பகுதி வாழ் மக்களின் நல்லதொரு வாழ்க்கைக்கும் வழி வகுக்கிறது என்கிறார் திருவள்ளூர் சமூக வனப் பிரிவின் கோட்ட வன அலுவலர் திரு பி. பிரகாசம். கிராம வனக் குழுவின் ஆலோசனையுடன் இப்பகுதியில் வன வளர்ப்பினை மேற்கொண்டவர் இவர்.

இதுபோன்ற கலப்புப் பயிரிடுதல் முறை உள்ளூர் மக்களின் உடனடித் தேவைகளைத் தீர்ப்பதன் நோக்கத்தோடு உள்ளதால் மாநில முழுதும் இம்முறை கையாளப்பட்டு வருகிறது என்கிறார் வனத்துறை அலுவலர் ஒருவர். கொடிய வறட்சிச் சூழ்நிலைகளில்கூட இவை நன்கு வளர்ந்துள்ளன. நிலைத்திருக்கக் கூடிய தன்மையின் விகிதமும் அதிகமாகியுள்ளது என்று கூறுகிறார். வடார்க்காடு மாவட்டத்தில் செய்யாறு அருகிலுள்ள ஜாடரி கிராமத்தின் 20 ஏக்கர் நிலத்தில் கலப்புப் பயிரிடுதல் முறையில் நடப்பட்ட 92 சதவீத பகுதியில் மரங்கள் இந்த வறட்சிச் சூழலிலும் நன்றாக வளர்வதுடன், நல்ல வளர்ச்சிச் சாதனையையும் பெற்றுள்ளன. சுற்றுப்புறத்திலுள்ள இடங்களில் இலுப்பை, வேம்பு, புளி போன்ற மரங்கள் நன்றாக வளர்ந்துள்ளன. இவற்றைப் பாதுகாத்து வரும் 23 வயதான திரு சேகர் எனப்படும் சமூக வன ஊழியர், இதே போன்ற பலத்துடன் முழு வளர்ச்சி பெற்று இவை வளரும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.

அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் வன வளர்ப்பிற்காக இவர் பாடுபடுகிறார். இதன் மூலம் மாதம் ரூ. 250 இவருக்கு வருமானம் கிடைக்கிறது. இந்தக் கிராம அளவிலான ஊழியர் plus 2 வகுப்பு வரை பயின்றவர். புறம்போக்கிலுள்ள மரக் கன்றுகளை இவர் கண்காணிப்பதுடன் யூகலிப்டஸ், பப்பாளி, முருங்கை, தேக்கு, கருவேப்பிலைக் கன்றுகளை, மரம் வளர்க்கும் தீவிர இயக்கத்தின் கீழ் கிராம மக்களுக்கு விற்பனை செய்து வருகிறார். ''பெரும்பாலும் பப்பாளி, தேக்கு இவற்றை எனது கிராம மக்கள் அதிகமாக விரும்பி வாங்குகிறார்கள். அதிக அளவிலான நிலமுள்ளோர் மட்டுமே யூகலிப்டஸ் மரக்கன்றுகளை வாங்குகின்றனர்'' என்கிறார்.

1981—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ 108 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டசமூகக்காடு வளர்ப்புத் திட்டம் அனைத்து வகையான புறம்போக்கு நிலங்களிலும், நீர் நிலைக் கரைகளிலும் விவசாயத்திற்கு உதவாத தனியாருக்குச் சொந்தமான நிலங்களிலும் மரங்களை வளர்க்க வழி செய்துள்ளது. அருகிலுள்ள நிலங்களில் மரக்கன்றுகளை வளர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்திற்கு ஓர் உயர்வைத் தரும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இத்திட்டம் கிராம மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

எந்த வகையான மரக்கன்றுகளை நடலாம், நட்ட கன்றுகளை ஆடு மற்றும் கால்நடைகளிடமிருந்து பாதுகாக்க எந்த விதமான முறைகளைக் கையாளலாம் என்பதைத் தீர்மானிக்கக் குழு ஒன்றை கிராம மக்கள் அமைக்கின்றனர். வேலூருக்கு 10 கி. மீ. தூரத்திலுள்ள விசார் கிராமத்தில் அமைக்கப்பட்ட கிராமக் குழுவின் தலைவரான திரு டி. கன்னையன், ''எங்களது உடனடித் தேவை விறகு போன்ற எரிபொருளாயிருப்பதால் கருவேல மரக்கன்றுகளை நிறைய அளவில் நடத் தீர்மானித்து செயல்பட்டு வருகின்றோம்'' என்கிறார்.

நீர்நிலைக் கரைகளில் கருவேல மரக்கன்றுகளை வளர்க்கும் பணி இரண்டு மாவட்டங்களில் பெருத்த வெற்றியைத் தந்துள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூருக்குத் தென்மேற்கே 25 கி. மீட்டர் தூரத்தில் உள்ள நரசிங்கபுரம் கிராமத்தில் 84 எக்டேர் பரப்பில் உள்ள கூவம் தோட்டம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வனவளர்ப்புத் திட்டம் ஏற்படுத்தியுள்ள ஊக்கம், பாலிதீன் பைகளில் மரநாற்றுக்களை வளர்க்கும் பணியில் சிறு விவசாயிகளையும், பள்ளி மாணவர்களையும் ஈடுபடுத்தியுள்ளது. இந்த திட்டத்தில் ஏராளமான பள்ளிகள் தீவிர பங்கு கொண்டு பள்ளி வளாகத்தில் இளநாற்றுக்களை நடும் வகையில் மாணவர்களுக்கு ஆர்வம் ஊட்டி வருகின்றன. பயிலும்போதே மாணவர்கள் வருவாயைத் தேடிக் கொள்ள இத்திட்டம் வகை செய்கிறது என்று பள்ளி ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

(26-8-1983 'இந்து'வில் வெளியான கட்டுரையிலிருந்து).

# பழங்குடி மக்களுக்கு மரம் செடி வளர்ப்புப் பயிற்சி



நிரந்தரமாக ஒரு இடத்தில் குடியேறி வாழ்க்கை வசதிக்காக மரஞ்செடிகளை நரிக்குறவர் குடும்பங்கள் வளர்ப்பதென்பது கேள்விப்பட்டிராதஒன்று. ஆனால் சென்னைக்கு வடக்கே 25 கி.மீ. தூரத்தில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள நெற்குன்றம் கிராமத்தில் 27 நரிக்குறவர் குடும்பங்கள் வழக்கத்திற்கு மாறாகக் குடியமர்ந்து தம் வாழ்க்கை வசதிக்கான வழிமுறைகளை நல்ல முறையில் உருவாக்கி வருகின்றன.

இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களது இருப்பிடத்தைச் சுற்றிலும் புளிய மரம், வேப்பமரம், பருத்தி மற்றும் பலவிதமான மரங்களை நன்கு வளர்த்து, பலன்களைப் பெற்று வருவதைப் பார்க்கும்போது அவர்களது மரம் வளர்ப்பு ஆர்வம் புலனாகிறது.

''இம்மரங்கள் எங்களுக்குப் பழங்களைத் தருகின்றன. விறகுக்காகப் பயன்படுகின்றன. நிழல் கொடுக்கின்றன. எங்கள் உணவுக்காக நாங்கள் வேட்டையாடும் பறவைகள் தங்கும் இருப்பிடமாகவும் உள்ளன'' என்கிறார் நரிக்குறவ மூதாட்டி ஒருவர்.

சுவிடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் நிறைவேற்றப்படும். சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், நமது வனத்துறையினர் இந்த நரிக்குறவர்கள் தங்கள் உடனடித் தேவைகளைப் பெற்றுக் கொள்ள அவர்களை மரம் நடும் பணிகளில் ஈடுபடுத்தி வருகின்றனர். அவர்களும் தங்கள் பகுதியில் முறையானதொரு வன வளர்ச்சிக்காக ஊக்கத்துடன் பாடுபட்டு வருகின்றனர். பயன் தரும் மரங்களுக்கான கலப்பு பயிரினச் செடிகளை இப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் நடுகின்றனர் என்கிறார் வனத்துறை அலுவலர் ஒருவர்.

இந்தப் பகுதிவாழ் குடும்பம் ஒன்றுக்கு 2 ஏக்கர் அளவிலான நிலத்தைப்பயிரிடுவதற்காக அரசு இவர்களுக்கு வழங்கியுள்ளது. இவர்களில் சிலர் யூகலிப்டஸ் மரத்தை வளர்க்க முனைந்துள்ளனர். சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தை இந்த நாடோடி மக்களின் மனத்தில் நிலைநிறுத்துவதற்காக, இவர்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணைத் தேர்ந்தெடுத்து அவர் மூலம் மர வளர்ப்புமுறை பற்றியும், செடிகளை ஆடு மாடுகளிடமிருந்து பாதுகாக்கும் முறை பற்றியும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியில் அவரும் சிறப்பாக ஈடுபட்டு வருகிறார் என்கிறார் அலுவலர் ஒருவர்.

மரம் வளர்க்கும் தீவிர திட்டத்தினை நன்கு அறிந்துணர்ந்த, பி. இந்திராகாந்தி என்கிற இளம் பெண், கிராம வனத்துறை ஊழியராகப் பணியாற்றி மாதம் ரூ. 250 சம்பாதிக்கிறார். 19 வயதான இப்பெண் பிளஸ் 2 வகுப்பு தேறியவர். தனது புதிய சைக்கிளில் அக்கம் பக்கத்துக்கு கிராமங்களுக்கு இவர் சென்று திட்டத்தை அவர்களுக்குச் சிறந்த முறையில் தெளிவுறுத்தியும், செடி வளர்ப்பினைப் பார்வையிட்டும் வருகிறார். கிராம மக்களிடையே 2 இலட்சம் மரக்கன்றுகளை விநியோகம் செய்ய இலக்கு வைத்துள்ளார். மேலும் யூகலிப்டஸ் செடி பயிரிடுதலையும் அவர் மேற்பார்வையிட்டுப் பாதுகாத்து வருகிறார். இவை எல்லாவற்றையும்விட தனக்கான இரண்டு ஏக்கர் நிலத்தில் இவர் பயிரிட்டுள்ள யூகலிப்டஸ் மர வளர்ச்சிப் பணிகளையும் இவர் கவனித்துக் கொள்கிறார்.

மரப்பயிர் வளர்ப்பதென்பது 35 வயதுடைய திரு என். இருநீவதனுக்கு ஒரு புது அனுபவம். தனது வீட்டிற்கு அருகிலுள்ள நிலத்தில் இவர் பல்வேறு வகையான மரங்களை வளர்த்து அவற்றை மிகக் கண்ணும் கருத்துமாகக் காத்து வருகிறார். அவ்விடத்திற்குச் சற்றுத் தொலைவில் 1.5 ஏக்கா நிலத்தில் இவா யூகலிப்டஸ் மரங்களையும் வளர்த்துள்ளார். புதுப்புது மரப் பயிர்கள் பயிரிடுதலில் இவர் ஆர்வம் காட்டுகிறார்.

1962-ல் வனத்துறை அறிமுகப்படுத்திய அதிக அளவிலான கலப்பு மரம் பயிரிடுதல் முறை இவருக்கு இந்த அளவுக்குச் செயல்பட எழுச்சியை ஊட்டியதாம். தனது உணர்வுக்காக புள்ளினங்களையும், சிறு மிருகங்களையும் அவர் வேட்டையாட அந்தப் பகுதிக்குத் தொடர்ந்து சென்று வருகிறார். ''இந்தச் செடிகளெல்லாம் நன்கு வளர்ந்து பெரிய மரங்களாகி விட்டால், எனது தாய் அடுப்பெரிக்க விறகுக்காக வெகுதூரம் சென்று தேட வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

மரச்செடிகள் நடுதலிலும், பேணி வளர்ப்பதிலும் இந்த நாடோடி மக்கள் கொண்டுள்ள ஈடுபாடு மிகச் சிறப்பானதாகும். தங்கள் வீடுகளின் முன்புறத்திலும் பின்புறத்திலும் பழம் மற்றும் நிழல் தரும் மரங்களை வளர்த்து ஆடு மற்றும் கால்நடைகளிடமிருந்து காக்க முள்வேலிகளையும் அமைத்தும் உள்ளனர்.

[2-9-83 'இந்துவில் வெளியான கட்டுரையிலிருந்து]

# மாமன்னன் இராசராச சோழன் சதய விழா

**கா**ற்குன்றே காணாத-காவிரி கொழிக்கும் தஞ்சை மாநகரில் விண்முட்டும் அளவில் கல்லோவியமான விமானத்துடன் பெருவுடையாருக்குத் திருக்கோயில் அமைத்து, அந்நியரும் அதிசயிக்கும் இணையற்ற வண்ண ஓவியங்கள் தீட்டி, சைவ தோத்திரங்களைத் திருமுறைகளாக வகுத்து நாடொறும் அக்கோயிலில் 49 ஓதுவார்கள் இன்னிசைக் கருவிகளுடன் திருமுறை ஓதவும், ஆலய வழிபாட்டிற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து, சைவ சமயத்தவனாயினும் சமயக் கொள்கைகளில் சமநோக்கு வேண்டுமென அறிவுறுத்த மைசூர் மாநிலத்திலுள்ள மணலூரில் வைணவ ஆலயம் அமைத்து, நாகையில் பௌத்த பள்ளிக்கு நன்கொடை வழங்கி கி.பி.1014 இல் அமரனாகி குறுகிய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டின் அரசியலுக்கும் சமயத்திற்கும் பொற்காலம் வடித்தவன் முதலாம் இராசராச சோழன்.

நாட்டிற்ம், மொழிக்கும், இனத்திற்கும் அவன் செய்த கீர்த்தி மிக்க செயலை நினைவு படுத்தவும் அவன் புகழ் யாண்டும் என்றென்றும் நீடுழி வாழவும் அவன் அரிய செயல்களைப் போற்றிப் பின்பற்றவும் அவன் பிறந்த நாளான ஐப்பசித் திங்கள் சதய நாளன்று 'முதலாம் இராசராச சோழன் சதய விழா' அவனமைத்த தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலில் 998-வது ஆண்டு விழா 14.11.83, 15.11.83 ஆகிய இரு நாட்களிலும் சிறப்பாக நடைபெற்றது.

தெருக்கள் தோறும் வண்ண விளக்குகளாலும், அலங்கார வளைவுகளாலும் அலங்கரிக்கப் பட்டு இருந்தன. கோயிலின் உட்புறத்தில் தமிழக அரசின் சாதனைகளை விளக்கிப் பல்வேறு துறைகளின் சார்பில் ஒரு சிறிய பொருட்காட்சியை அமைத்து இருந்தனர்.

மங்கள இசையுடன் அதிகாலை 6 மணி அளவில் 14.11.83 அன்று, முதல் நாள் விழா ஆரம்பமாயிற்று. மாமன்னன் இராசராச சோழன் சிலைக்கு இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் மாலை அணிவித்தார். திருவேற்காடு தவத்திரு அய்யப்ப சுவாமிகள் மாலை அணிவித்தார். சுவாமிகள் ரூ.30,000 செலவில் அன்னதானம் வழங்கியும், ஓதுவார்கள், குருக்கள் ஆகியோருக்கும் வேட்டிகள் வழங்கினார்.

மாலையில் நாதஸ்வர இசைச் செல்வன் தஞ்சை டி.எம். கோதண்டபாணி குழுவினரின் நாதஸ்வர இசையுடன் விழா ஆரம்பமாயிற்று. தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான பரம்

**அ. மருதவிநாயகம்**

பரை, அறங்காவலர் ராஜஸ்ரீ ராசாராம் ராசா சாகேப் வரவேற்புரையாற்றினார். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு கு. ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப. துவக்க உரையாற்றினார். தஞ்சைமாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். சத்பதி, இ.ஆ.ப., தவத்திரு காத்தையா சுவாமிகள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்குத் தலைமை ஏற்று மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுகையில், ''ராசராச சோழன் பிறந்த தினம் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரம் என்றுதான் தெரிகிறது. ஆனால் அவர் எந்த ஆண்டு பிறந்தார் என்ற சான்று இன்னமும் கிடைக்கவில்லை. அவர் பொறுப்பேற்ற ஆண்டை வைத்து அடுத்த ஆண்டு ஆயிரமாவது ஆண்டு சதய விழாவாகத் தமிழக அரசு சிறப்பாகக் கொண்டாட இருக்கிறது. விழாவைக் கொண்டாட மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த விழாவிற்கு உலகச் சான்றோர்களை அழைக்க இருக்கிறோம்.


''மைய அரசினர் வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கு தாஜ்மகாலை மட்டும் காட்டுகிறார்கள். உண்மைச் சின்னமாக இருக்கும் தஞ்சைப் பெரிய கோவிலைக் காட்டுவதில்லை. பெரிய கோவிலை உலகத்தில் உள்ளவர்களுக்குத் தெரிவிக்கும் முறையில் மைய அரசு மேற்கொள்ள வேண்டும்.


''வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பல கோவில்களைக் கட்டித் தமிழ்ப் பண்பாட்டையும், மொழியையும் பாதுகாத்து வருகின்றார்கள்.

''தஞ்சை மாவட்டத்தில் 4,417 கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்கு கடந்த ஆண்டுவரை வரவேண்டிய பாக்கி ரூ.12 கோடியே 63 லட்சத்து 41 ஆயிரத்து 190 ஆகும். குத்தகை 25 சதவிகிதம் கொடுக்க வேண்டியிருந்தாலும் அதைக் குத்தகைதாரர்கள் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. கோவில் நிலங்களை வைத்திருப்பவர்கள் குட்டி மிராசுதாரர்களாக விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசு எல்லாப் பாதுகாப்பும் தரும்'' என்றார்.

'இராசராசன் கண்ட திருமுறைகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பல அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

சதய விழாவின் தொடர்ச்சியாக இரண்டாம் நாள் 15.11.83 அன்று கவியரங்கம், சொற்பொழிவு ஆகியவை நடைபெற்றன.





## சேலம் மாவட்ட திருக்கோயில்கள்!

—பி.எல்.ஆர்

**மு**ல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனப் பழந் தமிழர் வகுத்து வைத்திருந்த நிலப்பாகுபாட்டில் மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும்.

'ஏறுமயில் ஏறி விளையாடும் ஆறுமுகக் கடவுளுக்கு' அறு படை வீடுகள் அமைந்திருப்பதெல்லாம் மலைகளிலேதான். குன்றம் எறிந்த குமரனல்லவா? ஆனால் என்ன காரணத்தாலோ மலைவளம் மலிந்த சேலம் மாவட்டத்திலே அவனுக்கொரு படை வீடு அமைந்தபாடில்லை.

பொதுவாகவே சேலம் மாவட்டத்தில், சுற்றுலாப் பயணிகள் விரும்பி வருமளவில் - பக்த கோடிகள் வந்து வணங்கிப் பரவசப்படுமளவில் எந்த ஒரு கோயிலும் பெரிய அளவில் இல்லை. உழைப்பே தெய்வமென - முழு மூச்சாக இயங்கும் இந்த மாவட்ட மக்களுக்குக் கோயில் எழுப்ப நேரமில்லை. பெரும்பாலான காலம் முஸ்லீம் மன்னர்களின் ஆட்சியில் இருந்ததால் இங்கே இந்துக் கோயில்கள் எழ அந்நாளில் அறவே வழியில்லை என்றெல்லாம் இதற்குப் பலவாறாகக் காரணம் கூறப்படுகிறது.

இவ்வளவு பெரிய மாவட்டத்தில் சேலம் நகரில் உள்ள அருள்மிகு சுகவனேசுவரர் திருக் கோயில், கோட்டை அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக் கோயில், ஆத்தூர் வட்டத்திலுள்ள வடசென்னிமலை அருள் மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செங்கோட்டில் இருக்கும் அருள்மிகு அர்த்த நாரீசுவரர் திருக்கோயில், அதே வட்டத்தில் உள்ள காளிப்பட்டி அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் ஆகிய ஐந்து கோயில்கள் மட்டுமே ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவைகளாக இருக்கின்றன.

### கோட்டை மாரியம்மன்

அருள்மிகு கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் திருப் புணி வேலைகள் 1981 — ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இந்து சமய அறநிலையத் துறை அதற்கான ஆரம்ப வேலைகளுக்காக ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கியுள்ளது. 17 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் மிக வேகமாக நடை பெற்று வருகின்றன.

எங்கு நோக்கினாலும் சாலையோரங்களில் ஐயனார் கோயில்களும், மாரியம்மன் கோயில்களும் பெருமாள்கோயில்களும் சிறு அளவினதாக அதிக அளவில் காணப்படுகின்றன இம்மாவட்டத்தில்.

நாமக்கல் கோயிலில் உள்ள அனுமன் திருவுரு 18 அடி உயரமுள்ளதாகப் பிரமாண்டமான அளவில் உள்ளது குறிப்பிடத் தக்கது.


''திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயிலுக்கு வண்டிவாகனங்கள்சென்று வரத்தக்கதாக மலைவழிப்பாதையொன்றுக்கான ஆரம்பவேலைகள் நடந்துவருகின்றன. 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் இந்தப் பெரும்பணிக்குப் பொதுமக்களே 6 லட்சம் ரூபாய்க்குமேல் நிதி வழங்கியுள்ளனர்'' என்றார் மாவட்ட அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. வி.வாசகப்பெருமாள்.

1980-83 நிதியாண்டுகளில் சேலம் மாவட்டத்திலே இந்து சமய அற நிலையத்துறையின் பெருமுயற்சியால் ஆனங்கூர் அருள்மிகு கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயில் முதல் கொமரபாளையம் அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் வரை 19 கோயில்களுக்குக் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.


### ஏர்க்காடு

**சேலம் மாவட்டத்து மக்கள் அனைவரும் ஏர்க்காடு என்னும் மலைவாழ்விடத்தை 'ஏர்க்காடு' என்றே கூறுகிறார்கள்.**

இம்மாவட்டத்தில் அறக்கட்டளைகள் 18ம், வேதாந்த சித்தாந்த மடம் ஒன்றும், உள்ளன.



மரக்கதவில் 56 மரச்சிற்பங்கள்



கொடுங்கைகளில் குரங்குகள் கொட்டம்

தஞ்சை மாவட்டத்திற்குப் பெருவிடையார் கோயில் எப்படியோ - சேலம் மாவட்டத்திற்கு அருள்மிகு கைலாயநாத சுவாமிகள் திருக்கோயில்அப்படி!

சேலத்திற்கு மேற்கே 24-வது கிலோ மீட்டரில், ஓமலூர் வட்டத்தைச் சேர்ந்த தாரமங்கலத்தில் இருக்கும் இக்கோயில் கி.பி. பத்தாம் நூற்றாண்டுப் பழமைக் கோர் எடுத்துக்காட்டாகும்.

மும்முடிகட்டி முதலி என்பவரால் துவக்கப்பட்ட இந்தக் கோயில் கட்டும் பணி, சீயாள கட்டி முதலியால் முடிவுற்றிருக்கிறது.

5 மாடங்களும், 7 செப்புக் கலசமும் கொண்ட ராஜகோபுரம் 105 அடி உயரத்தில் நிமிர்ந்து நிற்கிறது. கிழக்கு மேற்கில் 306 அடியும், தெற்கு வடக்கில் 164 அடியும் கொண்டிருக்கின்றன மதில் சுவர்கள். கோபுரத்தின் அடி மாடத்தில் சேர, சோழ பாண்டியர்களின் புலி, வில், கயல் சின்னம் மேல் விதானத்தில் பொறிக்கப்பட்டுள்ளது; மதில் சுவரிலோ மீன், ஆமை, முதலை போன்ற நீர்வாழ் உயிரினங்களின் விசித்திர வேலைப்பாடுகள் உள்ளன. ராஜகோபுரத்தை உட்புறமாக, இரண்டு கல் யானைகள் சக்கரம் போட்டு இழுப்பதுபோல் அமைத்திருக்கிறார்கள். கோயில் பிரகாரத்தின் கொடுங்கைகளில் குரங்குகள் கொட்டம் சித்திரிக்கப்பட்டுள்ளது

தெப்பக்குளம், தீர்த்த குளம், வன்னிமரம் என்கிற ஸ்தல விருட்சம் எல்லாம்-எல்லாக் கோயிலுக்கும் உள்ளதுபோல இங்கும் உண்டென்றாலும் சில வகைகளில் இந்த அருள்மிகு கைலாயநாத சுவாமிகள் திருக்கோயில் மற்ற கோயில்களிலிருந்து மாறுபடுகிறது.

கோயில் வாசல் மேற்குப்புறம் அமைந்திருக்கிறது. கைலாயநாதர் மேற்கே பார்த்து அமர்ந்திருக்கிறார். எல்லாக் கோயில்களிலும் யாகசாலையும் மடப்பள்ளியும் கோயிலுக்கு முன்னால் இருக்குமென்றால், இங்கே அவை கோயிலுக்குப் பின்னால் இருக்கின்றன. மூலவர் கோயிலுக்குப் பின்னால் இருக்க வேண்டிய விக்னேசுவரம், சுப்பிரமணியம், பஞ்சலிங்க மண்டபம் எல்லாம் இங்கே முன்னாலிருக்கின்றன— இவையும் பார்வதி கோயிலும் மட்டுமே உள்ளே கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கின்றன.

எதனால் இந்த முரண்பாடுகளோ நமக்குத் தெரியவில்லை. கோபுரக் கதவுகளில் உள்ள 120 உலோகக் கொண்டிகளும் பார்ப்பதற்கு ஒன்றுபோல்இருந்தாலும் ஒன்றுக்கொன்று மாறுபட உருவாக்கப்பட்டிருக்கிறது. சந்நிதானத்தின் முன்னாலுள்ள வேங்கை மரக்கதவில் 56 அரிய மரச்சிற்பங்கள் அணி செய்கின்றன. பிரகாரத்தின் தூணுக்குத் தூண் காணப்படும் ரிஷி பத்தினி, ஜுரஹேஸ்வரர், விநாயகர், முருகக் கடவுள் முதலான பல உருவமைப்புகள் சிற்பச் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

இங்குள்ள இராமர்-வாலி சிலையில் நமக்கொரு நூதனம் தெரிகிறது. இராமர் சிலையருகே நின்றால் நம் கண்ணுக்கு வாலி தெரிகிறான்; வாலி சிலையருகே நின்று பார்த்தால் இராமனைத் தெரியவில்லை! இதேபோல் ரதி-மன்மதன் சிலையிலும் ஒரு நுணுக்கம் உள்ளது. ரதி அருகே நின்று பார்த்தால் மன்மதன் தெரிவான்; அவனருகே நின்று பார்த்தால் அவள் தெரியமாட்டாள்!

மாசி மாதம் 9, 10, 11 ஆகிய தேதிகளில் மட்டும், மாலை வேளையில் இக்கோயிலின் மூலவர் மீது சூரிய ஒளி விழுவதாகச் சொல்லுகிறார்கள்.

ராஜகோபுரத்தின் கீழே நடைபாதையில் பதிக்கப்பட்டுள்ள நீண்ட இரு பவழக்கல் பாறைகள் 'ஐஸ்' கட்டிபோல எப்போதும் சில்லென்றிருக்கின்றன.



**சேலம் மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் பெரிய வடிவ ஐயனார் சிலை காணப்படுகிறது. பெரும்பாலும் இரண்டு சிலைகளாகவே உள்ளன. சில பகுதிகளில் நான்குக்கு மேற்பட்ட சிலைகளும் காணப்படுகின்றன. சில இடங்களில் குடும்பம் குடும்பமாகக் காணப்படுகின்றன.**



கல் யானை


**ராசிபுரத்தில் எங்கே பார்த்தாலும் நிதி உதவி நிறுவனங்கள் (பைனான்சியர்ஸ்) காட்சி தருகின்றன. ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட நிதி உதவி நிறுவனங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.**

இக்கோயிலின்முன், அநநாளில ஆயிரக்கால் மண்டபம் ஒன்று கட்டும் பணி துவக்கப்பட்டு, 500 சிற்பச் சிறப்பமைந்த கல்தூண்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 1667-ல், மைசூரை ஆண்ட கொட்டதேவராஜா படையெடுத்து ஓமலூரைக் கைப்பற்றவே, அந்த மண்டபப் பணி நின்று போயிற்று.

அந்தப் பணியை நிறைவேற்ற இப்போதுள்ள தமிழ் நாடு அரசு முன்வந்திருக்கிறது. மண்ணினுள் புதைந்த அந்தக் கற்றூண்களெல்லாம் தோண்டியெடுக்கப்படுகின்றன. 25 பேர் கொண்ட திருப்பணிக்குழு ஒன்று இந்தப் பணிக்காக அமைக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டிய (18-11-83) இந்த மண்டபத் திருப்பணிக்கு அரசு இரண்டு இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது. 66.5 அடி நீளமும், 36 அடி அகலமும் 16 கால் உடையதாக இந்த மண்டபத்தை எழிலோடு உருவாக்கும் பணிக்கு இராமேசுவரம் தேவஸ்தானத்தைச்சேர்ந்த கே. எம். சேதுஸ்தபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.


இக்கோயிலுக்கு இருந்தபழமையான தேர் சிதைந்து போய்விட்டது. அதைப் புதுப்பிக்கும் பணிமிக வேகமாக நடைபெற்று வருகிறது. இதற்காகப் பொது மக்களே ஒன்றரை இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளனர்.




தூணுக்குத் தூண் சிற்பச் சிறப்பு

''பழைய தேரின் அச்சு, மரத்தினாலேயே செய்யப்பட்டிருந்தது. அது ஒதோஷ்ண நிலையின் காரணமாகப் பழுதடைந்து விட்டது. அதனால் தற்போது இரும்பினாலேயே அச்சைச் செய்யலாம் என்ற முடிவுடன் திருச்சியில் உள்ள இந்திய இரும்பு (SAIL) நிறுவனத்திடமிருந்து இரும்பை வாங்கி, சேலம் உருக்காலையினரிடம் கொடுத்தோம். அவர்கள் 1.25 டன் எடையும், 15 அடி நீளமுள்ள 2 பெரிய அச்சுகளையும், 400 கிலோகிராம்

அறப்பளீசுவரர் திருக்கோயில்



# இறவை நிலக்கடலைக்கு சிறந்த அடியுரம் விஜய் 14-28-14




இறவை நிலக்கடலைப் பயிருக்கு விவசாய இலாகா சிபாரிசுப்படி மணிச் சத்தானது தழைச் சத்தைவிட இரண்டு மடங்கு அதிகம் தேவைப் படுகிறது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய சிறந்த அடியுரம் விஜய் 14-28-14. இதைத் தெளிவாக இங்கு காணலாம்.

| ஏக்கருக்கு | தேவைப்படும் சத்துக்களின் அளவு (கிலோவில்) | | | விஜய் உரத்தின் அளவு |
|---|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் | |
| அடியுரம் | 7 | 14 | 21 | விஜய் 14-28-14 50 கிலோ + பொட்டாஷ் 25 கிலோ |

சமச்சீர் உரமிட



விஜய்

மேலும் இறவை நிலக்கடலைப் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.


வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

விஜய் 14-28-14 100 கிலோவில் 14 கிலோ தழைச்சத்து, 28 கிலோ மணிச்சத்து மற்றும் 14 கிலோ சாம்பல் சத்து அடங்கியுள்ளன. இந்தப் பயிருணவுச் சத்துக்கள் சரிவிகித அளவில் இருப்பதற்காக 11.5 கிலோ குறுமணல் சேர்க்கப் பட்டுள்ளது. குறுமணலானது ரசாயன சேர்க்கை அற்றது. ஆகவே இதனை உரத்துடன் சேர்க்கும்பொழுது உரத்தின் தரம் குறைவதில்லை. மேலும் உரக கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் குறுமணல் சேர்க்கை அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

HTM-MFL-1222R


எடையும் 8 அடி நீளமுமுள்ள இரும்பு அச்சையும் செய்து தந்தனர். இந்தப் பணியை உருக்காலையினர் இந்தக் கோயிலுக்கு இலவசமாகவே செய்து தந்துள்ளனர். 8 ஏக்கர் விளைச்சல்நிலமும் ஏறத்தாழ 75 ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானமும் இந்தக் கோயிலுக்குத் தற்போது இருக்கிறது'' என்று குறிப்பிட்டார் கோயில் நிருவாக அலுவலர் திரு பி. மோகன்.



தாரமங்கலம் கோயில் தேர்

**கொல்லி மலை:**

சேலம் மாவட்டத்தில் நாமக்கல் ஆத்தூர் வட்டங்களில் 17 மைல் நீளத்திற்குப் பரந்து கிடக்கும் கொல்லிமலையில் உள்ள அருள்மிகு அறப்பளீசுவரர் திருக்கோயில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

'சதுரகிரி' என்றும் கூறப்படும் கொல்லிமலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட - சங்க காலத்திலேயே புலவர் பெருமக்களால் புகழ்ந்து பாடப்பட்டதாகும். புராணங்கள் கூறும் 'கொல்லிப்பாவை' மிகப் பழங் காலத்தில் இங்கே அமைக்கப்பட்டிருந்ததாம். பழந்தமிழ் இலக்கியங்களும் இது பற்றிக் குறிப்பிடுகின்றன.

சங்ககாலக் கடையெழு வள்ளல்களில் ஒருவனான வல்வில் ஓரியின் ஆளுகைக்குட்பட்டிருந்த கொல்லிமலையின் ஒரு பகுதி அன்று அறப்பளி எனப்பட்டது. அப்பகுதியில் உள்ள ஈசுவரன் கோயிலே அறப்பளீசுவரர் கோயில். இதுபற்றிவிளக்குவது 'அறப்பளீசுவரர் சதகம்' இது அம்பலவாணக் கவிராயரால் பாடப்பட்டது' என்று கூறப்படுகிறது.

1,300 ஆண்டுகளுக்கு முன்பு கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமது தேவாரப் பாடல்களிலே இந்தத் தலத்தைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள்.

'ஆதன் ஓரி' என்றும் கூறப்படும் இணையற்ற வீரனான ஓரிமன்னன் அரசு செலுத்தி வந்த கொல்லிமலையில் 14 நாடுகள் உண்டு; அதில் வளப்பூர்நாடு என்ற பகுதியில் அமைந்துள்ள அறப்பளீசுவரர் கோயில் மூர்த்திச் சிறப்பு, தலச் சிறப்பு, தீர்த்தச் சிறப்பு என்ற மூவகைச் சிறப்புகளும் பெற்று, இயற்கைச் சூழலின் எழிலார்ந்த அரவணைப்பில் அமைந்துள்ளது. இக்கோயில் சுமார் 1,400 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டிருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

ராஜராஜசோழனின் பெரிய பாட்டியார் - சிவஞானகண்டராதித்த சோழதேவரின் மனைவியார்-செம்பியன் மாதேவி இக் கோயிலுக்கு வந்து இறைவழிபாடு நடத்தி பொன்னும்மணியும் காணிக்கை செலுத்திச் சென்றார் என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இக்கோயிலின் வடபுறத்தில் ஓடும் ஐயாறு ஆண்டுமுழுதும் வற்றாமல் நீர் ஓடக்கூடியதாகும் இந்த ஆறு, கோயிலின் வடகிழக்குப் புறமாகச் சென்று இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் நீர்வீழ்ச்சியாக விழுகிறது. ஏறக்குறைய இருநூறு அடி உயரத்திலிருந்து கீழே விழும் 'ஆகாசகங்கை' எனப்படும் அந்த நீர்வீழ்ச்சி துறையூர், முசிறி வழியாகச் சென்று காவிரியில் கலக்கிறது. சேலம் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு வி. வாசகப் பெருமாள் இந்த விவரங்களைச் சரளமாக நமக்குத் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் இங்கே தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றதற்கு அடையாளமாகச் சிதைவுற்ற தேரும் கொடி மரமும் காணப்படுகின்றன.

'செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி' என அகநானூறு புகழ்ந்து பாராட்டும் இங்கே இருக்கிற அருள்மிகு அறப்பளீசுவரர் கோயிலைப் புதுப்பிக்கும் பணியில் தமிழக அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இதற்குரிய திருப்பணிக்காக உறையூரைச் சேர்ந்த பசிப்பிணி மருத்துவர் மு.ஆ. அருணாசல முதலியார் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவில் 23 பேர் உள்ளனர். இரவு பகலாக நடைபெற்றுவரும் இந்தச் சீரமைப்புப் பணிகள் விரைவிலேயே முடிவுறும். வருகிற ஏப்ரல் திங்களில் அருள்மிகு அறப்பளீசுவரர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்துவக்கப்பட்டுள்ளஇந்தத் திருப்பணி வேலைகளுக்காக இந்து சமய அறநிலையத் துறை மூலம் முதற்கட்டமாக 2 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் அளித்த நிதி இரண்டரை இலட்சம் ரூபாய். வாரியார் கலை நிகழ்ச்சி மூலமும், தனிப்பட்டோர் அளித்திட்ட பெருநிதி மூலமும் வந்த வருமானம் ஆறு இலட்சம் ரூபாய் ஆகும்.

''இந்தக் கோயிலுக்குச்சொந்தமாக 172.13 ஏக்கர் புன்செய் நிலமும், 31.12 ஏக்கர் நன்செய் நிலமும் இருக்கின்றன. புன்செய் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.'' என்றார் அங்கே திருப்பணி வேலைகளை மேற்பார்வையிடும் திரு. டி. எம். பெரியசாமி.

# சேலம் மாவட்டத்தில் நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத்திட்ட சாதனைகள்...

நிலஅளவைப்பதிவேடுகள்துறை தமிழகத்தின் துறைகளில் மிகப் பழமையானது. இத்துறை ஏறத்தாழ நூற்றிப்பதினைந்து ஆண்டுகளாக, சிறிய விவசாயிகளுக்கும் பெரிய விவசாயிகளுக்கும் தொண்டாற்றி வருகிறது. அதன் பயன் விவசாயப்பெருக்கத்திற்கும், வருவாய்த் துறை முதல் மற்ற வளர்ச்சித் திட்டங்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைந்ததுடன் மிக அமைதியாகச் செயல்பட்டு வருகிறது. அரசு அவ்வப்போது தீட்டிச் செயல்பட்டு வருகிற பல புதிய திட்டங்கள் மூலம், விவசாயிகள் கடனுதவி மற்ற உதவிகள் மூலம் தொடர்ந்து பயனடைந்து வருகிறார்கள். எல்லா விவசாயிகளும் எளிதில் அரசுக்கடனுதவி பெற்று, விவசாயிகளின் நிலங்களை அனுபோக எல்லைகளுக்கேற்பத் தனித்தனியாக விளக்கப்பட்டிருப்பதால், உரிமைகளின்படி தனிப்பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் உள்ள 9 வட்டங்களில் வருவாய் வட்ட ஆட்சியாளர்கள் கண்காணிப்பில் இயங்கி வரும் பராமரிப்புப் பிரிவு நிலஅளவைப் பணியாளர்கள் 1.4.80 முதல் 31.10.83 வரை கூட்டுப்பட்டாக்களைத்தனிப்பட்டாக்களாக்கிய வகையில் 2,540 உட்பிரிவுகளை அளவு செய்தும், காணாமற்போன 4572 கற்களைப் புதுப்பித்தும் விவசாயிகளின் மனுவின் பேரில் 2,254 எல்லைகளை மீள அளந்து காட்டியும் பணியாற்றியிருக்கிறார்கள்.

**திட்டம்:**


இவ்வகையில், நிலம் வைத்திருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்தின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதிலும், அதனால் தனிப்பட்டாவைக்கொண்டு பெறுகின்ற நன்மைகளை முறைப்படிப் பெறுவதிலும், தனிப்பட்டா பெறுவதில் மக்கள் அவதிக்குள்ளாவதைத் தவிர்த்து எளிதில், விரைவில் அரசுக் திட்டத்தின் பலனை அடையும் வகையில் ''நிலஉடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டம்'' என்ற புதிய புரட்சிகரமான திட்டத்தை தமிழக அரசு 1979ல் வகுத்தது. தமிழக முழுதும் இத்திட்டத்தை 5 ஆண்டுகளில் முடிக்க 1.6.79ல் முதல் கட்டமாக 28 வட்டங்களில் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில், முதல்கட்டமாக 16.5.79ன்படி சேலம் மாவட்டத்தில் நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு வட்டங்களில் ''நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்'' செயலாக்கப்பட்டது.

**தீவிரத் திட்டம்:**

முதல் கட்டமாக முடிக்கப்பட்ட ''நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்'' அரசுக்கும் மக்கட்கும் பயனுள்ளதாகக் கருதப்பட்டுள்ளதால், தமிழக முழுவதும் தீவிர திட்டமாக எடுத்துக் கொண்டு நிலம் வைத்திருக்கிற எல்லா விவசாயிகளுக்கும், அனுபோகத்தின்படி, நிபந்தனையின்றி எவ்வித மனுவின்றி, எல்லைகளுக்கேற்ப உட்பிரிவுகள் செய்து தனிப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

**வேலைவாய்ப்பு:**

இத் தீவிரத்திட்டம் இரண்டு ஆண்டுகளில், கூட்டுப்பட்டாவினையும் பிரித்துத் தனிப்பட்டா வழங்க வேண்டுமென்ற வகையில் சேலம் மாவட்டத்தில் படித்த வேலையின்றியிருந்த பட்டதாரிகளையும் சேர்த்து... 406 நபர்களுக்கு உபகாரத் தொகையுடன் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் அலுவலகப்பிரிவுகளிலும்சேர்த்து மொத்தம் 540 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.



**ஒரு ரூபாய்க்கு மூன்று திரைப்படம்**

சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் மாதத்திற்கு 3 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. காங்க்ரீட்டினால் கட்டப்பட்டு, வெள்ளை வண்ணம் பூசப்பட்ட நிரந்தர வெள்ளித் திரை ஒன்று இங்கு கன கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது. 35 m.m படத்தைக்கூட இதில் திரையிடலாம். இந்தத் திரைக் காட்சிக்கு வீடு ஒன்றிற்கு ஒரு ரூபாய் வீதம் வசூலிக்கப்படுகிறது


**திட்டத்தின் சாதனை:**

சேலம் மாவட்டத்தில், நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு வட்டத்தினைத் தவிர, சேலம் மேட்டூர், சங்ககிரி, ஓமலூர், ஆத்தூர், ஏர்க்காடு, ராசீபுரம் வட்டங்களில் உள்ளடங்கிய பல கிராமங்களிலும் 1.12.82 முதல் செயலாக்கப்பட்டுள்ளது. நிலஅளவை அலுவலர்கள், தனிவட்டாட்சியாளர்களுடன் நிலச்சுவான்தார்களை நேரில் சந்தித்து, குறைவின்றி அளவிட்டுப் பட்டாக்கள் வழங்கும் விழாவும் நடத்தி பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இதுவரையில் 9 வட்டங்களில் 10 நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட அலகிலும் 308 கிராமங்களில் 1530.21 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நில அளவைப்பணி முடிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 208 கிராமங்களிலும் சேர்த்து 74,231 நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 31.10.83 முடிய 1,59,392 நில உரிமையாளர்கள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசின் முக்கிய துறைகளில் வருவாய்த்துறை உறுப்புகளின் கண் என்ற அளவிற்கு முக்கியமான பங்கு வகிக்கும் நில அளவுத் துறை, பலவகையான நிலப்படங்களைத் தயாரித்து அச்சிட்டு மக்கள் பயன்பெறும் வகையில் மிகக் குறைந்த விலையில் வழங்கி வருகிறது. செலத்தில் அண்மையில் நடந்து முடிந்த கண்காட்சியில் இத்துறை பல வகையிலான நிலப்படங்களையும் அளவைக் கருவிகளையும் சிறப்பாக வைத்து, இத்துறையின் செயல், சேவை பற்றி மக்களுக்கு விளக்கப்பட்டது. 1054 பணியாளர்களைக் கொண்டு சேலம் மாவட்டத்தில் பல வட்டங்களில் பணி செய்து வரும் இத்துறை மேலும் மேலும் விவசாயிகளுக்கும், அரசுக்கும் ஏனைய அரசுத் துறைகளுக்கும்தொண்டுசெய்யத் தயாராக இருக்கிறது.

# மேட்டூரில் அனல் மின் திட்டம்



சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அருகே சின்னக்காவூரில் ஏறக்குறைய 450 ஏக்கர் நிலப்பரப்பில் 840 மெகாவாட் அனல்மின் நிலையம் தமிழக அரசால்அமைக்கப்பட்டு வருகிறது. மொத்தம் ஆயிரம் ஏக்கர் நிலம் இதற்குத் தேவைப்படுகிறது.

அனல்மின் நிலைய வேலைகள் இரவு பகலாக நடந்து வருகின்றன. இதற்கு நிலங்கள் வழங்கியவர்களுக்கு மாற்று நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெரிய மலையைப் பெரும் பெரும் இயந்திரங்களின் மூலம் துளைபோட்டு-வெடிக்க வைத்து-தகர்க்கும் வேலைகள் நடைபெற்று மலையையும் மடுவையும் சமப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

500 கோடி ரூபாய்த் திட்டம் கொண்ட இந்தப் பணிக்கு நிலக்கரி மிகவும் தேவைப்படுகிறது. நாள்தோறும் 6 சரக்கு ரயில்கள் மூலம்-ஆந்திர மாநிலத்தில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந் வரவழைக்கப்படுகிறது.

தற்போது 2000 ஆட்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். திட்டம் நிறைவேறி முடியும்போது நிரந்தரமாக 1000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

மின்சக்தி நிலையத்திற்குரிய காங்கிரீட் புகைபோக்கி, கொதிகலன்கள், மின் உற்பத்தி நிலையம் ஆகியவை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது மின் உற்பத்தி நிலையத்திற்கும் கொதிகலனுக்கும் உரிய இயந்திரங்கள் நிறுவும் பணி 1984 ஜனவரியில் முழுமை பெறும்.

இந்த அனல் மின்திட்டம், ஜப்பான் நாட்டுக் கூட்டுறவுடன் நடைபெறுகிறது. இயந்திர தளவாடச் சாமான்கள் எல்லாம் வந்துவிட்டன.

இந்த அனல்மின் திட்டம் செயலுக்கு வரும்போது திருச்சி-தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களுக்கு 24 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும்.

210 மெகாவாட் கொண்ட 4 யூனிட்டுகள் உருவாக்கப்படுகின்றன. முதல் யூனிட் 1986 டிசம்பரில் முழுமை பெறும். அதன் பின்னர் 6 மாதங்களுக்கு ஒரு யூனிட் என ஏனைய மூன்றும் முழுமை பெறும் எனத் தெரிகிறது.

மேட்டூரில் 1937ல் மின்சக்தி உற்பத்தி நிலையம் பிரிட்டிஷ்காரர்களால் உருவாக்கப்பட்டது. பின்னர் 1965ல் 2வது உற்பத்தி நிலையம் (புதிய மின் உற்பத்தி நிலையம்) ரஷ்ய நாட்டின் கூட்டுறவுடன் உருவாக்கப்பட்டது. தற்போது இந்த அனல் மின்நிலையம் ஜப்பான் நாட்டுக் கூட்டுறவுடன் உருவாக்கப்படுகிறது.

கீழ் மேட்டூர்ப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த அனல் மின் நிலையம் பூர்த்தி பெற்று-பணியைத் தொடங்கும் போது-தமிழகத்தின் தொழில் வளம் பெருகும் என்பது உறுதி.

# செஞ்சிலுவைச் சங்க முகாமின் சிறந்த மாணவன்

செஞ்சிலுவைச்சங்கம் ஹென்றி டுனன்ட் என்னும் சுவிட்ஸர்லாந்து வியாபாரி ஒருவரால் 1864ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

அரசியல், அரசு, மதம், இனம் நாடு ஆகியவற்றிற்கெல்லாம் அப்பாற் சென்று செஞ்சிலுவைச் சங்கம் பணியாற்றுகிறது. உலக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்காக உருவாக்கப்பட்ட அனைத்துலக நிறுவனம் அது. உலகில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் இந்த நிறுவனத்தில் இணைந்துள்ளன.

போர்க்காலங்களில் படையினருக்கு உதவிய இச்சங்கம் போர் முடிந்த பின்னர், சமுதாயத்துக்கு உதவும் சங்கமாக மாறியது. உடல் நலம் பேணுதல், பிறருக்கு உதவுதல், நட்புணருத்தல் ஆகியவை இச்சங்கத்தின் குறிக்கோள்களாகும்.

மகப்பேறுற்ற தாய்மார்களுக்கு உதவுதல், குழந்தைகளைப் பராமரித்தல், வெள்ளம் - புயல்- தீ போன்ற இயற்கைக் கொடுமைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணமளித்தல், மருத்துவமனைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தல், பள்ளிகளில் ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தொடங்கப் பயிற்சி அளித்தல் காச நோயைத் தடுத்தல் ஆகிய அரும்பணிகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் செய்து வருகிறது.

பள்ளி மாணவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குப் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுவதுடன் முகாம்கள் நடத்தப்பட்டு அவர்களது திறன்கள் சோதனைகளின் மூலமாக வளர்க்கப்படுகின்றன.



முகாம்களில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் செஞ்சிலுவைச் சங்க மாணவர்கள் பங்கு பெறுகிறார்கள்.

கடந்த அக்டோபர் 7 ஆம் நாள் முதல் 14ஆம் நாள் வரை கோவையில் நடைபெற்ற ஜூனியர் செஞ்சிலுவைச் சங்க முகாமில் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், டெல்லி ஆகிய மாநிலங்களிலிருந்து 150 மாணவர்கள் பங்கேற்றனர். சேலம் சிறு மலர் மேல் நிலைப் பள்ளியில் 11 ஆம் வகுப்பில் பயிலும் சு. க. பாலசுப்பிரமணியன் என்னும் மாணவர் இந்த முகாமில் எல்லா வகையான நடவடிக்கைகளிலும் முதலாமவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இது சேலத்துக்கே பெருமை தரும் சேதியாகும். முகாமின் நிறைவு நாளன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் இந்த மாணவருக்குச் சான்றிதழ் வழங்கினார்.

# ராயகோபுரம் பத்தாம் நிலை திருப்பணி



இந்தியாவில் உள்ள 108 வைணவத் திருத்தலங்களில் அரங்கநாதர் திருக்கோயில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

வைணவ சமயத்தைச் சார்ந்த ஆழ்வார்கள்இத்திருக்கோயிலைப் பற்றி மிகவும் உயர்வாகப் பாடி இருக்கிறார்கள். பிரசித்திபெற்ற இத்திருக்கோயிலின் தெற்கு முகப்பில் உள்ள கோபுரம் அரசர் அச்சுத தேவராயரால் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டு முடிவு பெறாமல் நின்று போய்விட்டது. அதுவே பின்னர் ராயகோபுரம் என வழங்கலாயிற்று

## நான்காவது அட்டை சொல்லும் செய்தி

தற்போது ஸ்ரீ அகோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர் ஜீயர் சுவாமிகள் தன் சொந்தப் பொறுப்பிலும் செலவிலும் மேற்படி முற்றுப் பெறாத கோபுரத்தைக் கட்ட முன்வந்து 1979-ஆம் ஆண்டு மே மாதம் முதல் துவக்கி நடத்தி வருகிறார்கள். இக்கோபுரம் 13 நிலைகள் கொண்டதாயும் தரை மட்டத்தில் இருந்து 226 அடி உயரமுள்ளதாகவும் அமையும். இக்கோபுரத்தைக் கட்டுவதற்காக ரூ. 109 இலட்சத்திற்கு மதிப்பீடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு கல்கார வேலை மற்றும் ஒன்பது நிலைகள் முடிவு பெற்றுள்ளன.

இதுவரை தரை மட்டத்தில் இருந்து 177 அடி உயரம் கட்டப்பட்டுள்ளது.

இதுவரை செய்யப்பட்டுள்ள வேலையின் மதிப்பு ரூ.87லட்சம்.

ஸ்ரீமத் அகோபில மடம் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளால் கட்டப்பட்டு வரும் ராயகோபுரத்தின் பத்தாம் நிலை துவக்க விழா 14.11.83 அன்று ஆலய [illegible]விலாச மண்டபத்தில் நடைபெற்றது. விழா நடைபெறுவதற்கு முன்னர் கோபுரத்தின் 10வது நிலையின் அடிக்கல் நாட்டு விழா கோபுரத்தின் உச்சியில் நடைபெற்றது.

அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலின் தக்கார் டாக்டர் கே. எஸ்.கோபிநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருச்சி அறநிலையத்துறைதுணை ஆணையர் திரு கே.சிதம்பரம், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உயர்மட்டக்குழு உறுப்பினர் அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.நடேசன்,இ.ஆ.ப. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு கு.ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. ஆந்திர அரசு மாண்புமிகு முதலமைச்சரின் ஆலோசகர் டாக்டர் என். தேவநாதன் அவர்கள், ஸ்ரீமத் அகோபில மடம் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகள், உரையாற்றினார்கள்.

மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், "எவ்வளவோ பெரியவர்கள் ராய கோபுரத்தைப் பார்த்து இருப்பார்கள். ஆனால் இன்று ஜீயர் சுவாமிகள் இதயத்தில் உதித்தது போன்று எவரிடமும் உதித்தது இல்லை. ஜீயர் சுவாமிகள் பணி மிகவும் பாராட்டத்தக்கது. இந்தப் பணிக்கு ஏறத்தாழ ரூ. 1 கோடி செலவாகும். இந்தப் பணிக்குரிய பணம் சிமெண்ட் ஆலை, செங்கல் ஆலை முதலியவற்றிற்குப் போகிறது. அதனால் பல தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள்!" என்றார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுகையில்:

**—அ. ம. விநாயகம்**

''கடந்த இருபது ஆண்டுக்கு முன்பு சங்கராச்சாரியார் ஸ்ரீரங்கம் வந்தபோது ஸ்ரீரங்கம்கோயில் மொட்டைக் கோபுரத்தைப் பார்த்துவிட்டு, இதை முழு கோபுரமாக, யாராவது கட்ட மாட்டார்களா என்று கேட்டிருக்கிறார். இத்தனை ஆண்டுகளாக இந்த கோபுரம் கட்டப்படாமல் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் கட்டப்படுவது மிகப்பெருமைப் படத்தக்கதாகும்.

''ஸ்ரீ ரங்கம் வருகிற வெள்நாட்டுக்காரர்களை இந்த 220 அடி உயரக்கோபுர உச்சிக்குக் கொண்டுபோய்இயற்கைக் காட்சிகளைக் காட்டி, அவர்களைப் பரவசமடையச் செய்வோம். அதன் மூலம் இந்த கோபுரத்தின் பெருமை வெளிநாட்டவர்களின் கவனத்தை ஈர்க்கும். இந்தக் கோபுரம் வரலாற்றிலேயே-உலகத்திலேயே மிகச் சிறந்ததாகத் திகழும்.

''கோபுரம் இல்லாத ஆலயங்களில் கோபுரம் அமைக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். அதைச் செயல்படுத்தி வருபவர்கள் ஒருவர்தான் ஜீயர்.

''500 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழலும் சக்கரத்தின் சுழற்சிக்கு ஏற்ப மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் ஆலயங்கள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட எழுச்சியின் சின்னம்தான் இந்த ஆலயப் பணியாகும். ''மனிதனை மனிதனாக வாழ வைக்கும் கருவி ஆன்மிகம்''

பத்தாம் நிலைக்கு அடிக்கல் நாட்டிய மேதகு கேரள ஆளுநர் திரு பா.ராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில்:


''உலகெங்கும் இந்தியர்வாழும் இடமெல்லாம் இந்தக் கோபுரத்தின் பெருமை ஓங்கி நிற்கும்.

''தமிழகம் பக்தி மார்க்கத்தில் தலை சிறந்து விளங்குகிறது. இன்று நேற்றல்ல. வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. ஜீயர் சுவாமிகள் எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் ராயகோபுரப் பணியை ஆற்றி வருவது பாராட்டத்தக்கது''

அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு வி.கே. வேலுச்சாமி நன்றி கூறினார்.

85345

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





# சித்திரப் பூக்கள்



அது ஒரு வசந்த காலத்தின் பௌணர்மி இரவு! பூமித்தாய் வெண்பட்டு உடுத்திக் கொண்டாள்'

காதல் நெஞ்சங்களுக்குப் பிரிவின் ஏக்கத்தை உணர்த்திடும் முழுநிலவு சிந்திய ஒளிக்கற்றை தங்கம்மாளின் இதயத்தில் அனல் மூட்டியது! சந்தைக்குச் சென்றுள்ள அவளின் கணவன் செல்லக்கண்ணு இன்னும் வீடு திரும்பவில்லை.

தனிமை தங்கம்மாளை வாட்டியது. தெருமுனையில் மாடுகளின் சலங்கைச் சத்தம் செல்லக்கண்ணுவின் வருகையை அவளுக்கு அறிவித்தது.

சித்தோடு சந்தைக்குச் சென்றுவிட்டு அவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். தங்கம்மாள், செல்லக்கண்ணுவை வரவேற்கத் தயாரானாள்.

வீடு வந்து சேர்ந்ததும், வண்டியை நிறுத்தி, மாடுகளைத் தொழுவத்தில் கட்டிவிட்டு, வைக்கோல் அள்ளிப்போட்டான் செல்லக்கண்ணு. இதற்குள் அடுப்பில் தயாராக இருந்த வெந்நரை எடுத்து வந்து சரியான அளவில் தண்ணீர் கலந்து வைத்தாள் தங்கம்மாள்!

செல்லக்கண்ணு குளித்து முடித்தான். தங்கம்மாளின் தளிர்க்கரங்கள் அவனுக்கு உணவளித்தன! வாழ்க்கையில் எவருக்கும் கிட்டாத பெரும் செல்வமாக கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நினைத்து வாழ்ந்து வந்தனர்.

அந்த வாழ்வு அவர்களுக்குத் தந்த பரிசு இரண்டு பிள்ளைக் கனியமுதுகள்!



செல்லக்கண்ணு சீமான் வீட்டு வாரிசு அல்ல என்றாலும், பவானி பாசனத்தில் ஒரு ஏக்கர் சொந்த நிலம் வைத்து விவசாயம் செய்து வந்தான். விவசாய வேலை இல்லாத காலத்தில் வாடகைக்கு வண்டி ஓட்டுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் அவர்களின் வாழ்வில் வறுமை படராமல் பார்த்துக் கொண்டது.

இனிய நாட்கள் நகர்ந்து சென்றன.

எங்கிருந்தோ வந்த மஞ்சள் காமாலை நோய் செல்லக்கண்ணுவை - செல்லரித்த மரமாக்கி விட்டுச் சென்றது.

**தங்கம்மாள் தனி மரமானாள். எட்டு வயதில் ஒரு மகன்! நான்கு வயதில் ஒரு மகள்!**

இவர்களை நான் எப்படிக் காப்பாற்றுவேன்?

இருந்த நிலத்தையும் கணவனின் காமாலை நோய் விழுங்கி விட்டது. வண்டியும், மாடுகளும் கூட வறுமையை விரட்ட விலை பேசப்பட்டுவிட்டன!

வாழ்ந்த நாட்களை எண்ணியும், வருங்காலத்தை நினைத்தும் தங்கம்மாள் தவித்துப் போனாள்!



தான் பெற்றெடுத்த சித்திரப் பூக்களின் எதிர்காலம் பற்றிய நினைவு அவளைச் சோகத்தில் ஆழ்த்த, அவள் உறங்கிப் போனாள்.

அது ஒரு மாரிக் காலத்தின் முன்னிரவு!

தங்கம்மாள் தன் இரு பிள்ளைச் செல்வங்களையும் அழைத்துக் கொண்டு வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றாள். தற்கொலை ஒன்றுதான் அவளுடைய வாழ்க்கையில் நிம்மதியைத் தரக்கூடிய ஒரே வழி! அவள் துணிந்து விட்டாள்.

நவீன காலத்து நல்லதங்காளாக அவள் மாறிவிட்டாள். தன் இரு பிள்ளைகளையும் பாழுங்கிணற்றில் தூக்கிப் போட்டு விட்டுத் தானும் குதித்துவிட்டாள்!

ஓ....அந்த மூன்று ஜீவன்களின் மூச்சும் நின்று விட்டது!



திடுக்கிட்டெழுந்த தங்கம்மாள் கண்களைக் கசக்கி விழித்துப் பார்த்தாள். ஒரு நிமிடம் அவளுக்கு ஒன்றும்விளங்கவில்லை. தன் அருகில் படுத்திருக்கும் இரு குழந்தைகளையும் பார்த்த பிறகு தான் அவளுக்கு உணர்வு திரும்பியது. தான் கவலையோடு உறங்கிவிட்டதும், தன் துயர நினைவுகள் தனக்கொரு மோசமான கனவைத் தந்து விட்டதையும் உணர்ந்து கொண்டாள். மீண்டும் எதிர்காலம் பற்றிய நினைவுகளில் மூழ்கிப் போனாள்!

அப்பொழுது தங்கம்மா..... தங்கம்மா....என்ற அழைப்புக் கேட்டு வெளியில் வந்தாள். வாசலில் செல்லக்கண்ணுவின் நண்பன் குணசேகரனும், ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சமூகநல ஊழியரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை உள்ளே வந்து அமரச் சொன்னாள் தங்கம்மாள்.

''சகோதரி-நீ உன்னைப் பற்றியும், உன் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்''...என்றான் குணசேகரன்.

ஒன்றும் புரியாமல் வியப்பு மேலிடப் புருவங்களை உயர்த்தினாள் தங்கம்மாள்.

ஆமாம் அம்மா! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 'சத்துணவுத்திட்டம்' என்ற ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். அத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

நம் ஊரிலும் ஒரு சத்துணவு மையம் திறக்க அரசு உத்திரவிட்டுள்ளது. அதில் உன் குழந்தைகளைச் சேர்த்து விடலாம்.. ''சத்துணவு மையத்தில் ஆயா வேலைக்கு ஆள் தேவைப்படுகிறது. நான் உன் நிலைமையை விளக்கி உனக்கு நமது ஊரிலேயே ஆயா வேலை கிடைக்கவும் ஏற்பாடு செய்கிறேன். உன் கவலையை விடு'' என்றார் குணசேகரனுடன் வந்த சமூக நல ஊழியர்.


தங்கம்மாள் தன் காதுகளை நம்ப முடியாமல் போனாள். எனினும் தன்னுடைய கணவனின் அருமை நண்பரும், அரசு ஊழியரும் சொன்ன செய்திகள் அவளுக்கு நம்பிக்கையூட்டின.

அய்யா, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு சித்தோட்டிற்கு வருகை தந்திருக்கும்பொழுது நான் பார்த்திருக்கின்றேன். என் கணவர்தான் என்னை விழாவிற்கு அழைத்துப் போனார். அவர் ஏழைகளைக் காத்திட வந்த புனிதர்! அவர் நீடூழி வாழ வேண்டும்! தங்கம்மாள் உணர்ச்சி வசப்பட்டு வாழ்த்தி நின்றாள்!

''அது மட்டுமல்ல சகோதரி, உன் மகள் பெரிய பெண்ணாக வளர்ந்ததும், அவளுடைய திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் மானியமாக அரசு வழங்குகின்றது''-என்றான் குணசேகரன்!

தங்கம்மாளின் புருவங்கள் மீண்டும் கேள்விக் குறியிட்டன.

**''ஆம்! விதவைத் தாய்மார்களின் பெண் மக்களின் திருமணத்திற்கு அரசு ஆயிரம் ரூபாய் இனாமாகத் தருகின்றது. அதையும் உன் பெண் திருமணத்தின் போது பெற்றுக் கொள்ளலாம்'' என்று கூறி முடித்தார் சமூக நல ஊழியர்.**



தங்கம்மாள் தன் எதிர்காலக் கவலையெல்லாம் மறந்து, தானும் தன் பிள்ளைகளும் தற்கொலை செய்து கொள்ளும் நிலையிலிருந்து விடுபட்டு, புதுவாழ்வு பெற அரசின் திட்டங்கள் உறுதுணையாய் இருப்பதை எண்ணி மகிழ்ந்தாள்.

''தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் உதவியுடன் விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், கறவை மாடுகள் வழங்குதல் - இன்னும் இப்படி எத்தனையோ சமூக நலத்திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகின்றது. எனவே, உன் எதிர்காலமும் உன் பிள்ளைகளின் வருங்காலமும் ஒளிமயமாக அமைந்திட இத்திட்டங்கள் நிச்சயம் உதவி புரியும். நாங்கள் போய் வருகின்றோம். - என்று கூறி குணசேகரனும், சமூகநல ஊழியரும் விடைபெற்றனர்.

தான் பெற்ற செல்வங்கள் செழுமையுள்ள சித்திரப் பூக்களாகத் தெரிந்திட, தங்கம்மாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமையம் நோக்கி நடை போட்டாள்.


**கே. எம். இராஜு**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
பெரியார் மாவட்டம்

பதிவு எண். M. 8676

